Vol. XX. 1942—1943.

செந்தமிழ்ச்செல்வி

திங்கள் வெளியீடு

- இருபதாம் சிலம்பு -

இதழாசிரியர் கூட்டத் தலைவர் :
திரு. நாவலர் பண்டித ந. மு.
வேங்கடசாமி நாட்டாரவர்கள்

திருநெல்வேலி, தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்,
லிமிடெட்.

சுபானு

The South India Saiva Siddhanta Works
Publishing Society, Tinnevelly, Ltd.
Tirunelveli and Madras.

 [*Price Rs. 3-8*

'செந்தமிழ்ச் செல்வி' இதழாசிரியர் கூட்டத்து உறுப்பினர்கள்

தலைவர் :

பண்டித நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள்,
தஞ்சை.

2. „ பி. சிதம்பரம் பிள்ளையவர்கள், பி. ஏ., பி. எல்.
வழக்குரைஞர், நாகர்கோயில்.

3. „ கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள், எம். ஏ., எம்.எல்.
தமிழ்ப்பேராசிரியர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

4. „ துடிசைகிழார் அ. சிதம்பரனாரவர்கள்,
பென்ஷன் போலீஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டர், கோவை.

5. „ மகாமகோபாத்தியாய பண்டிதமணி
மு. கதிரேசச் செட்டியாரவர்கள்,
தமிழாராய்ச்சித்துறை மதியுரைஞர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

6. „ டி. எஸ். கந்தசாமி முதலியாரவர்கள், பி. ஏ.,
வழக்குரைஞர், சாத்தூர்.

7. „ காழி சிவ. கண்ணுசாமிப் பிள்ளையவர்கள், பி. ஏ.,
தருமபுரவாதீன வித்துவான், சென்னை.

8. „ வித்துவான் மா. இராசமாணிக்கம் அவர்கள், பி. ஓ. எல்.
தமிழாசிரியர், முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப்பள்ளி.
சென்னை.

9. „ வித்துவான் மு. இராசாக்கண்ணனார், பி. ஓ. எல்.

10. „ இளவழகனாரவர்கள், கழகத் தமிழ்ப் புலவர்.

THE PROGRESSIVE PRINTERS, G. T. MADRAS.

உள்ளுறை

படங்கள்

பால்

க. மறையிசை மன்னர் சா. சுந்தரமூர்த்தி ஓதுவார்.

உ. தேவாரமணி இசையரசு மு. மு. தண்டபாணி தேசிகர்.

ங. வித்துவான் பாரிப்பாக்கம் கண்ணப்ப முதலியார்.

ச. வித்துவான் மு. இராசாக்கண்ணனுர், B. O. L.

ரு. தேவாரம் திருப்புகழ் இசைப்புலவர் திரு. T.M. அப்பாத்துரை ஆச்சாரியார்.

சு. சர். R. K. சண்முகஞ் செட்டியார், K. C. I. E.

எ. செந்தமிழ்ப் பாவலர் பாரதிதாசனுர்.

அ. அறத்திருவாளர் ராம. அழகப்பச் செட்டியார் அவர்கள், பார்-அட்-லா.

கூ. வித்துவான் திரு. கோ. சுப்பிரமணிய பிள்ளை, M.A., B.L.

கo. சிவஞானபோத விரிவுரை நிறைவு விழாப் பேரவை.



மறை இசை மன்னர்
சா. சுந்தர ஓதுவாமூர்த்தியவர்கள்
திருநெல்வேலி.

ஓம்
செந்தமிழ்ச் செல்வி
திங்கள் வெளியீடு

சிலம்பு-உ0] சித்திரபானு—கார்த்திகை [பரல்-க

'செல்வி'யின் இருபதாம் சிலம்பு

தமிழ் நாடு தமிழ்ச் செல்விக் குரியது; இன்ன காலம் என்று குறித்துக் கூற இயலாத பழமையிலிருந்து தமிழ் நங்கை பற்பல வடிவுகளில் உருக்கொண்டு விளங்கி, நந் தமிழ்நாட்டில் ஆடல்புரிந்து வருகின்றனள். இன்றைக்கு இருபது ஆண்டுகட்குமுன் நஞ் 'செந்தமிழ்ச் செல்வி'யாய்ப் புத்துருக் கொடு போந்து, இதுகாறுங் கண்ணுங் கருத்துங் களிக்கத் திருவிளையாடல் புரிந்து, இன்று நம்முன் மணங்கமழ் தெய்வத் திளநலங் காட்டி இருபதாஞ் சிலம்பினை எய்தி நிற்கின்றனள்.

கார்த்திகைத் திங்கள் வீறு மிக்கது. தமிழகமெங்கும் ஒளிவிழா நிகழும் அருள்விளக்கம் வாய்ந்தது. இப் பேரொளி விளக்கத்திற் 'செல்வி' புதுச்சிலம்பு பெற்றுத் தமிழரங்கினிடத்துத் திரை நீக்கிப் போதுகின்றனள். இடையிட்ட சில காலமாக ஆர்வத்துடன் எதிர்நோக்கியிருந்த கலையன்பர்கட்கு, இனி விருந்துண்டு.

தமிழ் மொழியின் இளநலத்தையும் எழிற்கொழுந்தையும் இளஞ்சிறாரும் இனிதறிந்து மகிழ்வதற்காக இவ்வாண்டிற் 'குழந்தைப் பக்கங்கள்' சிலவும் 'செல்வி'யில் இணைக்கப்பெறுகின்றன.

'செந்தமிழ்ச் செல்வி', தமிழ்ப் புலனெறி வழக்குக்கு மாறுறாது அதன் செவ்வியோம்பி நடைபெற்று வருவதென்பது அனைவர்க்குந் தெரிந்தது! இது மணங்கமழ் தெய்வத் திளநலங் காட்டும் இருபதாம் ஆண்டாக

லின், அச் செல்வி பின்னுஞ் சிறந்தோங்குதற்கேற்ற இயைபுண்டு. கட்டுரை, சிறுகதை, வாழ்க்கை வரலாறு, பாட்டு, உரை, ஆராய்ச்சி முதலிய இலக்கியக்கூறுகள் உரிய அமைவுடன் வெளிவர வேண்டுதலே அச் செவ்வி யாம். தமிழ்ச் செல்வியை இந் நறுநலத்தில் அழகொழு கக் காண்டற்குப் பேராசிரியன்மார் பலர் அங்கங்கும் முயன்று வருகின்றனர். தமிழ்க்கு வரவர நல்ல காலமே யென்பது நிகழ்ச்சியில் விளங்கி வருகின்றதன்றோ !

இனி, நஞ் 'செந்தமிழ்ச் செல்வி'க்குத் தமிழ் ஒரு கண்ணும், சமயம் மற்றொரு கண்ணுமென்பதும் அன்பர் கள் அறிவர். சமயத்தைப்பற்றிய தனித்தொண்டும் இதன் செம்பாதி யழகாய் மிளிர்வதற்குரியது. சமயக் கருத்துக்களின் புதிய நுட்பங்கள், ஆராய்ச்சிகள், எளிய விளக்கங்கள், தொண்டுகள் முதலியனவும் செல்வியின் கட்டிளமைச் செவ்வியால் வலியுறுவது இயல்பேயாம்.

ஒல்லும் வகையெல்லாம் 'செல்வி' தனது புதுச் சிலம்பின் நலனை இனிதியக்கி இசைக்கவே முயன்று வருகின்றனள். இறைவன் றிருவருளும் ஆசிரியன்மார் தண்ணளியும் நேயர்கள் ஊக்கமும் செல்விக்குப் புத் தொளியும் அழகும் ஆக்கமும் மேன்மேலும் பெருக்கி வருக !

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்

* * *

மகாமகோபாத்தியாயர், பண்டிதமணி
மு. கதிரேசச் செட்டியாரவர்கட்குப் பாராட்டு

பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியாரவர்கள் *நந் தமிழ்க்கு வான்மணி யனையர்; தமிழகத்துக்கு இறைவன் அருட்கொடை; இருமொழித் திறவோர்; சிறந்த சொல்லே ருழவர்; நுண்மாண் நுழைபுலத்தர்; காப்பியப் பூம்பொழில்; முதுதமிழ்ப் புலவர்; உலகியற் பெரியார்; திருவும் உருவு முடையார்.*

எண்ணிறந்த இனித்த விரிவுரைகளாலும், வடமொழி தென் மொழித் தீஞ்சுவைகளை இழைத்தெழுதுந் தனித்த எழுத்துக்க ளாலும், பல்கலைக் கழகங்கள் பலவற்றிலுந் திங்களொத்தமர்ந்து ஒண்புலமை நடாத்தும் பேராசிரியப் பண்புகளாலும், ஆதரவுக் குரிய பல கழகங்களையும் அன்பர்களையுந் தாமே சார்ந்து வள

முற எடுக்கும் அருளிச்செயல்களாலும், பிறவற்ருலும் தமிழகத்தின் உள்ளத்தை முற்றுங் கவர்ந்த பெருங்கொள்ளேயர்.

இன்ன பெரியாரைத் தமிழகம் பற்பல நலங்களானும் போற்றிப் போற்றி மகிழ விழைந்து வருகின்றது. ஆனல், விழைய விழைய ஆராமையே மேலுமேலும் பெருகி வருகின்ற தன்றி, விழைவு முற்றிய வழியாயில்லே. பல பட்டங்கள் எழுந்தன; புகழ்ப்பூந் துணர்கள் எழுந்தன; நினைவு மலர்கள் எழுந்தன. இப்போது 'மகாமகோபாத்தியாய' ரென்னும் **பெரும் பேராசிரியப்** பட்டமும் எழுந்து மிளிர்கின்றது. இன்னும் எழும்.

திரு. மகாமகோபாத்தியாய பண்டிதமணி என்னும்போது தமிழன்பருள்ளம் ஒவ்வொன்றுந் தனிக் களிப்பிற் றுளும்பிச் சிலிர்ப்பெய்துகின்றது. வாய் வாழ்த்த விரைகின்றது; மிக விரைகின்றது. அடிக்கடி வாழ்த்த விரும்புகின்றது.

ஆனல், 'மகாமகோபாத்தியாய' ரென்று விரைவாக எளிதில் இசைத்து மகிழவிரும்பும் பேரார்வமுடைய மெய்யன்பர்கட்கு நாவோ உடன் ஒத்துவராது தயங்கித் தயங்கி நெளிந்து பின்வாங்குகின்றது. எழுத்தால் மகிழ்தலன்றி இசைத்து மகிழ இனிதின் இயலவில்லே.

ஆயினுஞ், சிறந்த தமிழ்த்திருவுடையாரை அது சேர்ந்திருத்தலின், அதற்கு இனி ஒரு வகையான் உய்தி பிறத்தல் கூடும். பண்டிதமணி போன்ற பெரியோரை அடைந்துதானே பட்டங்கள் வாழ்தலும் வயங்குதலுங் கூடும்! 'பெரும்பேராசிரியப் பண்டிதமணி' என எளிதின் இனிதின் இசைத்து மகிழும் பேறு தமிழன்பர்கட்கு விரைவில் வாய்த்தல் ஒல்லுமாக!

திரு. பெரும்பேராசிரியப் பண்டிதமணி யவர்கள் வாழ்க! தமிழ் வாழ்க!

* * *

மகாமகோபாத்தியாய

டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் பிரிவு

செந்தமிழ்த் தாயின் றிருவடி மலர்களே நாளும் இடையருது வழிபட்டு விளங்கிய முதுதவப் பேராசிரியர் திரு. ஐயரவர்கள் திருவுருவம் சின்னுட்களின்முன்னர் நம்மைவிட்டு

மறைந்துவிட்டது. ஆனால், அவர்கள் தமிழ்த்தொண்டின் திருவுருவமோ, தமிழ் வழங்கும் நாடெங்கணும் பிறநாடுகளினும் பேருருவெய்திப் பரவி நிலைபெற்று விளங்கி வருகின்றது. பொய்க்கும் உலகில் உலவியிருந்து, இப் பொய்யா விளக்கத்தைத் தேடிக்கொண்ட பேராண்மை பெரிதும் வியக்கத்தக்கது!

திட்பமான கடைப்பிடியுடன் ஓர் ஒழுங்காக ஆர அமரத் தமிழ்க்குப் பெரும் பணி செய்து விளங்கிய அவர்களுடைய செம்போக்கான போற்றல் இணையற்ற தொன்றாகும். பின்னுள்ளோரால் பெரிதும் பின்பற்றத் தக்கதுமாகும்.

தமிழ்மொழியின் வளர்ச்சிக்கும் இயக்கத்துக்கும் ஒப்பற்ற ஒரு மூலவுணர்வாய், ஓரிடத்திலிருந்து, ஒரு வாழ்நாள் முழுமையும் எண்ணி எண்ணி உந்திவந்த ஒரு பேருயிர் இன்று எங்கோ பறந்ததென்று நினையுங்கால் உள்ளம் பெரிதுந் துணுக்குறுகின்றது. உலகில் எல்லாம் பெறலாம்; இத்தகைய பெரு நினைவாளர்களைப் பெறுதல் அரிதினும் அரிது. "உள்ளப்பிரிதல் அனைத்தே புலவர் தொழில்" என்னும் மெய்ம்மொழி, இத்தகைய பெரும் பிரிவு நிலைக்கும் ஒக்கும்போலும்!

பழந்தமிழ் நூல்களை இறவாதவாறு தொகுத்து, வியக்கத் தக்க வகையில் தமிழ்க்குப் பதிப்பிட்டுத் தந்த பெருமை என்றும் மறக்க முடியாது! இன்னார் இன்ன நூல்களைத் தொகுக்க உதவினர் என்றுங் குறிப்புப் பழைய தொகை நூல்களால் அறியப்படுதல்போலத் திரு. ஐயரவர்கள் நன்றியும் தமிழுள்ளளவுந் தானே அறியப்படுமாயினும், தமிழ்மக்கள் அங்ஙனம் என்றும் அறியப்படுமாறு தம் அழியாக் கலையோவியங்களாலும் அவர்கள் பெயரை நிலைபெறச் செய்துவைத்தல் பெருங் கடமையாகும். வளங்கொழிக்கும் பேராறுபோல ஒழுகிய அவர்கள் தமிழ்ப் பெருவாழ்வுக்கு இறைவன் எவ்வுலகினும் என்றென்றும் அவர்கட்குத் தண்ணருள் வழங்கி வருகவெனவும் வேண்டுவமாக!

* * *

தமிழிசைவாணர்

சிவத்திரு. நெல்லைச் சுந்தர ஓதுவாமூர்த்திகள் நினைவு

தமிழகமெங்கணும் இசைக்கொண்டலென நிலவிச், சிறந்த திருப்பதிகள்தோறும் திருமுறை யின்னிசை பொழிந்து எண்ணிறந்த மெய்யன்பர்களுக்கு நல்லிசை விருந்து அளித்துவந்த சிவத்திரு சா. சுந்தர ஓதுவா மூர்த்தியவர்கள் இன்று நம்மிடை எதிர் இருத்தற்கில்லாது மறைந்தனர். நந் தமிழ் நாட்டின்கண் எழுந்த எத்தனையோ பேராசிரியர்களையுங் கலையன்பர்களையும் நன்மக்களையும் நாளுங் கொள்ளைகொண்டு வந்த கூற்றுவன் நம் ஓதுவா மூர்த்தியவர்களையும் இரக்கஞ் சிறிதுமின்றிக் கைக்கொண்டொழிந்தனன். அறத்தின்முன் எதிர்த்து நிற்கவல்லது யாதுள்ளது? எனினும், அவர்கள் இன்னிசை யமிழ்தானியன்ற எண்ணிறந்த தமிழ்ச் செவிகளும், அவர்கள் திருவுருவப் பொலிவானியன்ற எண்ணிறந்த தமிழ்க் கண்களும், அவர்கள் பழகு மனக் குழைவா னியன்ற எண்ணிறந்த தமிழுள்ளங்களும், இன்று அவர்கள் இசைக்கொழுந்தும் உருத்தோற்றமும் மனக் குழைவுங் கிட்டாமலும் ஈடுபெறுமலும் இடையருது ஏங்குதலை ஆற்றவல்லார் யாவர்?

ஆடாதும் அசையாதும், சீர்பிரித்துப் பொருள் விளங்க, இறைவன் அருட்கொடையேயெனத் தமக்கென்றே தனித்துக் கிடைத்த பெருவெள்ளக் குரல் நிரவலில் உருக்கமும் உயர்கலையும் ஒருங்கெழுந்து குமுறிஆல, யாண்டும் இசைப்பெருக்கு தேக்கிய அருமையை எங்ஙனம் மறந்து அமைதிகொள்ள முடிகின்றது? ஒவ்வொரு திருப்பதியிலும் விழாக் காலங்களில் அதிலும் நள்ளிரவு நேரத்தில் நகரின் தெருவூடே அவர்கள் இன்னிசையொலி எங்கும் உருவிப் பரவத், தெருவின் இருமருங்குமுள்ள மாடங்களின் மேல் கீழ் இடமெங்கும் மகளிரும் மைந்தரும் மகவுகளும் மூத்தோருமாகப் பலருந் தம்மை மறந்த உணர்வினராய் முன்வந்து நின்று கேட்டு ஆராமைகொள்ளுங் காட்சியும் மாட்சியும் மறக்கென்றாலும் மறக்க முடியவில்லையே!

ஒரு முறை அவர்கள் தேவார இன்னிசை கேட்பினும் புன்புலால் யாக்கை புரைபுரை கனியும்; அவ்வாருயின், தம் வாணுளெல்லாந் தொடர்பாகத் திருமுறை ஓதிய அவர்கள் இசை

யுள்ளம் சிவனடிப் பேரன்பில் எத்துணைக் கனிவு கொண்டிருக்கும்! விழா நாட்கள் முழுமையும் பாராயணம் முடிந்து அதன் பின் கடைசி நாளில் ‘அர்த்த சாமம்’ என்னுங் கடைசி வழி பாட்டு நேரத்தில் திரு. ஓதுவா மூர்த்திகள் தாம் மட்டுந் தனிமையாய்த் திருக்கோயிலுக்குச் சென்று மறைமுகமாகத் தம் உள்ளக் கள்வனுன உணர்விறந்த இறைவனை ஆராக் காதலுடன் உள்ளுருகி வழிபட்டு, ‘எஞ்ஞான்றும் இறக்குஞான்றும் இத் திருமுறை ஓதுதற்குத் திருவருள் நல்குக’ என வேண்டி வருவது அவர்கள்பால் ஒரு கடைப்பிடியான வழக்கமாயிருந்து வந்தது. உண்மை நெகிழ்ச்சியாகிய அவ் வேண்டுதலால், அங்ஙனமே ஓதுதல் இடையருது நடைபெற்று, இறுதியில் உயிர் பிரியு ஞான்றும் “புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா உன்னடி என் மனத்தே வழுவாதிருக்க வரந்தரல் வேண்டும்” என நெகிழ்ந்து பாடியபடியே அவர்கள் நல்லுயிர் அருள் நினைவோடு பிரிந்து நீங்கியது ஒரு பெரும் புதுமையாகும்.

இன்ன மெய்யன்பும் மெய்க்கலையும் வாய்ந்த இசைமணி, அழகுரு, தொண்டுள்ளம், சிவப்பேறு, தமிழ்த்திரு யாண்டோ பறந்து மறைந்துவிட்டது. ஆயினும், தமிழகம் அவர்கட்கு நிரம்பக் கடமைப்பட்டுள்ளதென்பதை யாரே மறக்கவியலும்? அவர்கள் இசையோவியம் ஈண்டு எங்குந் துளங்கி இலங்கிக் கொண்டிருக்கின்றது. இசைக் கல்லூரியோ, கல்லூரி மாளிகையோ, மாளிகையிற் றிருவுருவோ, அத் திருவுருவால் ஒரு பரிசோ, பரிசேந்திய நினைவு மலரோ, அனைத்துமோ இத் தமிழ் நிலத்தில் அவர்கள் பெயரால் நிலையாக அமையவேண்டிய இன்றியமையாமையுள்ளது. தமிழகம் தன் கடமையை மறவாது செய்து நலந் தேடிக்கொள்ளுமாக!

தொண்டைமான் இளந்திரையன்

நாவலர் பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டார்

தொண்டைமான் இளந்திரையன் என்பவன் தொண்டை நாட்டின் தலைநகராகிய கச்சிப்பதியிலிருந்து அரசுபுரிந்த ஓர் சிற்றரசன்; சங்க காலத்துப் பாட்டுடைத் தலைவர்களில் ஒருவன்; கடியலூர் உருத்திரங்கண்ணனார் என்னும் சான்றோர் பாடிய பெரும்பாணாற்றுப்படை கொண்டவன்; சங்கச் செய்யுட்களியற்றிய நல்லிசைப்புலவர் வரிசையிற் சேர்ந்த தொல்லிசையுடையவன்.

இவன் பெயர் ஒரோவிடங்களில் தொண்டைமான் எனவும், இளந்திரையன் எனவும், திரையன் எனவும் வழங்கும். தொண்டைமான் என்னும் பெயர் தொண்டையர் குடியிலே தோன்றிய அரசன் என்னும் பொருளதாகும். தொண்டையர் தொண்டை நாட்டில் வாழ்ந்த குறுமுடிக் குடியினர். இளந் திரையன் என்பது அம் மன்னன் பெயர். பண்டைநாளிலே அரசர் முதலாயினர் பெயர்க்கு அடையாக வருவனவற்றுள் இளமைப் பண்பும் ஒன்றென்பது இளஞ்சேட்சென்னி, இளம் பெருவழுதி, இளஞ்சேர லிரும்பொறை, இளவெளிமான், இளங்கீரன் முதலிய பெயர்களான் அறியப்படும்.

பெரும்பாணாற்றுப் படையிலே,

“இருநிலங் கடந்த திருமறு மார்பின்
முந்நீர் வண்ணன் பிறங்கடை யந்நீர்த்
திரைதரு மரபி னுரவோ னும்பல்
மலர்தலை யுலகத்து மன்னுயிர் காக்கும்
முரசுமுழங்கு தானை மூவ ருள்ளும்
இலங்குநீர்ப் பரப்பின் வளைமீக் கூறும்
வலம்புரி யன்ன வசைநீங்கு சிறப்பின்
அல்லது கடிந்த அறம்புரி செங்கோற்
பல்வேற் றிரையன்” [29 - 37]

என்னும் பகுதி திரையனது குடிப்பிறப்பையும், பெயர் வரலாற்றையும் உணர்த்துகின்றது. இப் பாட்டிற்கு உரைகண்ட

நச்சினார்க்கினியர் இதிலுள்ள சொற்களைக் கொண்டுகூட்டி 'மூவேந்தருள்ளும் தலைமைவாய்ந்தோனும், திருமாலின் பின் வந்தோனுமாகிய சோழன்குடியிற் பிறந்தோன், கடலின் திரை கொண்டு வந்தமையால் திரையன் என்னும் பெயரையுடைய வன்' என்று பொருள் கூறி, 'என்றதனால், நாகபட்டினத்துச் சோழன் பிலத்துவாரத்தால் நாகலோகத்தே சென்று நாக கன்னியைப் புணர்ந்த காலத்து, அவள், 'யான்பெற்ற புதல்வனை என்செய்வேன்' என்றபொழுது, 'தொண்டையை அடையாள மாகக் கட்டிக் கடலிலேவிட, அவன் வந்து கரையேறின் அவற்கு யான் அரசவுரிமையை எய்துவித்து நாடாட்சி கொடுப்பல்' என்று அவன் கூற, அவளும் புதல்வனை அங்ஙனம் வரவிடத், திரை தருதலின் திரையனென்று பெயர் பெற்ற கதை கூறினார்' என ஓர் வரலாறும் குறித்துள்ளார். அவர், 'தொண்டையை அடையாளமாகக் கட்டிவிட' என்றமையின், தொண்டைமான் என்ற பெயரின் காரணமும் அதுவென் நினைந்தாராகல் வேண் டும். மணிமேகலையின் 24-வது காதையில், நெடுமுடிக்கிள்ளி யென்னும் சோழமன்னன் இன்னிள வேனிற் பொழுதிற் புன்னையங்கானலில் எதிர்ப்பட்ட எழில்மிக்க இளையாளொருத்தி யைக் களவிற் கூடி, சின்னாளின் பின் அன்னவளைக் காணாது தேடுங்கால், சாரணன் ஒருவன் தோன்றி, "நாகநாடாளும் வளைவணன் என்னும் அரசன் மனைவியாகிய வாசமயிலை வயிற் றுதித்த பீலிவளை என்பாள் பிறந்தபொழுது, 'இவள் பரிதிகுலத் தொருவனை மருவிக் கருவுடன் வருவள்' எனக் கணிவன் கூறியதனைக் கேட்டுளேன்; அவளே நின்னை மணந்து தணந்தவ ளாவள்; இனி, அவள் பெறும் புதல்வன் வருவானன்றி, அவள் வாராள்" எனக் கூறினனென ஓர் வரலாறு காணப்படு கின்றது. இதிற் குறிக்கப்பட்ட பீலிவளையும், அவள் புதல் வனுமே நாககன்னியும் இளந்திரையனுமாவ ரெனச் சிலர் கருதுவர். (பத்துப்பாட்டு, பாடப்பட்டோர் வரலாறு காண்க.)

ஆயின், முற்காட்டிய பெரும்பாணாற்றின் பகுதிக்கு நச்சினார்க்கினியர் உரைத்தவுரை பொருத்தமுடைத் தெனத் தோன்றவில்லை. 'முந்நீர் வண்ணன் பிறங்கடை அந்நீர்த் திரைதரு மரபின் உரவோன் உம்பல்' என்பதற்கு, 'கடல்

வண்ணனாகிய திருமாலின் பின் வந்தோனும், கடல் நீர்த்திரையால் தரப்பட்ட மரபினையுடைய உரவோனுமாகிய சோழனது வழித்தோன்றல்' என்பதே நேரிய பொருளாகும். திரையன் என்பது சோழனுக்குரியதோர் பெயரெனக் கொள்ளல் வேண்டும். 'ஆயிரத்தெண்ணூறுண்டுகட்கு முந்திய தமிழர்' என்னும் நூலியற்றிய கனகசபைப் பிள்ளையவர்களும் திரையர் என்னும் பெயரைச் சோழர்க்கே உரியதாக்குகின்றனர். தொண்டைமான் என்னும் பெயரும் தொண்டைக்கொடியை அடையாளமாகக் கட்டிவிட்டமையின் இளந்திரையனுக்கு வந்ததென்பது பொருந்தாது. குறுந்தொகையில், "அண்ணல் யானை, வண்டேர்த் தொண்டையர்" (260) எனவும், அகநானூற்றில், "வினைநவில் யானை விறற்போர்த் தொண்டையர்" (213) எனவும் தொண்டையர் என்பது ஓர் குடிப்பெயராக வந்துள்ளமை காண்க. பெரும்பாணாற்றிலேயே இளந்திரையன் "தொண்டையோர் மருகன்" என்று கூறப்படுகின்றான்; இஃதொன்றுமே இளந்திரையனுக்கு முன்பே தொண்டையர் என்னும் வழக்குண்மை நிறுத்தப் போதியதாகும். இவ்வாற்றால் தொண்டையர் என்னும் பெயர் காஞ்சி, திருவேங்கடம் முதலியவற்றைத் தன்னகத்தேயுடைய நாட்டிலே தொன்றுதொட்டு ஆட்சி புரிந்த ஓர் குடியினரைக் குறிப்பதாமென்றும், இளந்திரையனென்பான் சோழனொருவன் தொண்டையர் மகளை மணந்து பெற்ற மைந்தனாவான் என்றும், அவனே தொண்டைநாட்டுக்கு அரசனாகித் தாய்வழியில் தொண்டைமான் என்னும் பெயரும், தந்தை வழியில் திரையன் என்னும் பெயரும் எய்தினான் என்றும் கருதுதல் சாலும். இனி, திரையர் என்னும் பெயர் சோழர்க்குரித்தன்றாய்த் தொண்டையர்க்குரியதொன்றாயினும், 'திரைதரு மரபின் உரவோன் உம்பல்' என்பதற்குத் திரையாலே தரப்பட்ட முறைமையினையுடையோனது வழித்தோன்றல் என்பதே பொருளாகலின், சோழன் மகனாதல்பற்றி முந்நீர் வண்ணன் பிறங்கடை என்றும், திரையர் குடிக்குரியனாதல்பற்றித் திரையன் என்றும் இவன் கூறப்பட்டானெனக் கோடல் வேண்டும்.

இனி, மணிமேகலை 29-வது காதையில், நெடுமுடிக் கிள்ளிக்குப் பீலிவளை பெற்ற புனிற்றிளங் குழவியை நாகநாட்டரசன் தனி மரக் கலத்திற் போந்த கம்பளச்செட்டியின் கையிற்கொடுக்க,

அவன் அக்குழவியை ஏற்று மரக்கலத்திற் கொண்டு மீண்டு வரும் பொழுது புகார் நகரின் கடற்கரைக்கு அணித்தாகக் கப்பல் முழுகியதென்றும், அதனைக் கேள்வியுற்ற கிள்ளி மகனைத் தேடுதலால் இந்திரவிழாச் செய்தலை மறந்து விட்டனனென்றும், இந்திரன் கட்டளையால் மணிமேகலா தெய்வம் கம்பளச் செட்டியைப் பாதுகாத்த தென்றும், இந்திரவிழாச் செய்யப் படாமையால் காவிரிப்பூம்பட்டினம் கடலாற் கொள்ளப்பட்ட தென்றும் கூறப்பட்டுள்ளது. பீலிவளை மகனுக்குத் தொண்டைக்கொடியை அடையாளமாகக் கட்டிவிட்ட செய்தியோ, அவன் கரையேறினன் என்ற செய்தியோ அதிற் கூறப்பட வில்லை. அவன் கரையேறி வளர்ந்து அரசுக்குரியவனாயினும் அவனது காலம் இளந்திரையன் காலத்திற்கு ஒரு நூற்றாண்டு பிந்தியதாகல் வேண்டும். சோழன் கரிகாற் பெருவளவனைப் பட்டினப்பாலையாற் பாடிய உருத்திரங்கண்ணனாரே ஆற்றுப் படையால் இளந்திரையனைப் பாடியிருத்தலின், இளந்திரையன் காலம் கி. பி. முதல் நூற்றாண்டின் இறுதியாகல் வேண்டும். மணிமேகலை காஞ்சியை அடைந்தபொழுது அங்கிருந்தவர்கள் தொடுகழற்கிள்ளி, துணையிளங்கிள்ளி என்னும் சோழர்களென்பது தெரிதலின், பீலிவளையின் மகன் வந்து அரசாண்டான் என்னின் அன்னோர் காலத்தின் பின்னர்க் கி. பி. இரண்டாம் நூற்றாண்டின் இறுதியிலோ மூன்றாம் நூற்றாண்டின் முதலிலோ ஆதல் வேண்டும். எனவே, எவ்வாற்றானும் தொண்டைமான் இளந்திரையன் பீலிவளையின் மகனல்லன் என்பது பெற்றாம். இனி, தொண்டைநாட்டிலிருந்து ஆட்சிபுரிந்த பல்லவ மன்னர்களும் தொண்டையரும் ஓரினத்தவரே யெனப் பல ஏதுக்கள் காட்டிக் கள்ளர் சரித்திரத்தில் யான் எழுதியுள்ளேன். தொண்டைமான் இளந்திரையன் சோழன் மகனும், முடியுடை வேந்தரோடு சேர்த்தெண்ணத்தகும் பெருமையுடையனுமாகவும் பண்டைச் சான்றோர்கள் அவனைக் குறுநில மன்னனாகவே கருதியிருந்தனரென்பது "வில்லும் வேலும்" என்னும் மரபியற் சூத்திரவுரையில், 'மன்பெறு மரபின் ஏனோர்' எனப்படுவார், அரசுபெறு மரபிற் குறுநிலமன்னர் எனக் கொள்க; அவை, பெரும்பாணாற்றுள்ளும் பிறவற்றுள்ளும் காணப்படும்' எனப் பேராசிரியர் உரைத்தமையாற் பெறப்படும். பண்டையோர்

அங்ஙனம் கொண்டமைக்குக் காரணம் அவன் தொண்டையர் குடிக்குரியனுய்த் தொண்டைநாடாட்சி பெற்றமையே யாகும். பிற்றைநாளிலே பல்லவர்கள் தமிழகத்தின் பெரும் பகுதியை அடிப்படுத்து ஆட்சி செய்தவழியும் அன்னவர் குறுநிலமன்னர் வகுப்பிலேயே சேர்த்தெண்ணப் பெற்றனரென்பது பெரிய புராணத்திற் கூறப்பட்ட திருத்தொண்டர்களில் பல்லவர் குலத்துதித்து நாடாண்ட கழற்சிங்கர் முதலாயினர் அங்ஙனம் கொள்ளப்பெற்றமையாற் போதரும். இனி, பெரும்பாண் முதலியவற்ருல் அறியப்படும் இளந்திரையன் பண்புகளை உளங் கொள்வோமாக.

(தொடரும்)

பசும் புல்

"மகிழ்னன்"

கண்ணைக் கவரும் வனப்பு மிக்க வடிவமும் நிறமுமுடைய தேனொழுகும் தீஞ்சுவையுண்டிகள், "உண்ணவாரும் உலகீரே" என்று களிவுடன் அழைப்பவைபோல், அடுக்கடுக்காய் உயர்ந்து கண்ணாடிச் சிற்றறைகளில் அணிபெறவமர்ந்து மிளிரும் நேர்த்தியான பலகாரக்கடையைக் கண்ணுறு மொருவர், "இவை புல்லினின்று மெழுந்தவை" என்றெண்ணுவாரா? காதில் வந்து மோதும் இன்னா ஒலிகள் நிறைந்த நகரங்களில், மாளிகைகளென விளங்குஞ் சிற்றுண்டிச் சாலைகளில், மின்சார விசிறியின் கீழ் நாற்காலிகள் மீதிருந்து உப்புமா, தோசை, வடை யருந்துகின்றவர், "நீனிற வானின்கீழ் வளிவழங்கும் பரந்த வயல்களில், செஞ்சுடர்ச் செல்வனின் ஒண்கதிர் பட நின்று, குளிர வரும் பருவமழையிற் குளித்து வளர்ந்த, இயற்கையன்னையின் முதன் மகவாகிய புல்லினம் தந்த நன்கொடை இவை" என நெஞ்சிற் கொள்வாரா? நீண்டு நன்ககன்ற வாழைக் குருத்தில் வெண்சோற்றுடன், வேவித்துக் கடைந்த மனி இனிய பொன்னிறப் பருப்பையும், மணம்வீசும் புது நெய்யையும் பிசைந்துண்ணும்போதும்; தீம்புளிப்புடைய மோரை அல்லது கட்டித்தயிரைச் சோற்றோடு அளாவி அயிலும்போதும்; கற்கண்டு சேர்த்துக் காய்ச்சிய ஆவின்பாலை யருந்தும்போதும்; இளநீர் பருகும்போதும்; பாக்கு, வெற்றிலை போடும்போதும், "இவை புல்லிற் பிறந்தவை" என்று நினைப்பவர் யார்? நினைத்தாலென், நினையாவிட்டாலென்? உண்மையதுவன்றோ? எளிய புல்லென்றும் நிலைத்திணையுயிர் இயற்றுந் தொண்டை ஆற்ற வல்லது வேறொன்றில்லை. புல்லைப் போற்றுதும்.

உருவிற் சிறந்த உடம்பது பெற்ற மக்கள், தம்முடம்பு உணவின் திரளன்றி வேறன்று என்பதை யறிதல்வேண்டுமென்று கூறவந்த பண்டைப் புலவர்,

"நீரின் றமையா யாக்கைக் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே
உண்டி முதற்றே உணவின் பிண்டம்" (புறநானூறு, 18)

என்றனர். உணவின் பிண்டமெனப்படும் உடலுக்குக் காரண மாவது உண்டி. வீயாவுடம்பொடு நின்ற உயிரில்லை என்றனர் முன்னோர். அதுபோன்றே, உண்டியின்றி வளர்ந்ததோர் உடலு மில்லை யென்பதுறுதி. உடம்பிற்கு உண்டி முதலாகுமாயின், உண்டிக்குப் புல் முதலென வுணர்தல்வேண்டும். இது காட்டு வான் செல்கின்றநிக் கட்டுரை.

உயிர் வளர்ச்சி புல்லிலிருந்து புறப்படுவதை மேனாட்டுப் புலவர் பலவகையி னாராய்ந்து வெளியிட்டனர். புல் முதலிய எளிய உயிரிலிருந்தே மேம்பட்ட உயிர்வகைகள் தோன்றின வென்பதைப் புல்லின்றி விலங்குகள் வாழவியலா தென்பதி லிருந்து தெரிந்துகொள்ளலாம். பலப்பல உயிர் வகைகள் தோன்றியபின், அவற்றிடையே பிழைப்பின் பொருட்டு நிகழ்ந்த போரில், வெற்றி பெறற்குரிய வடிவங்களும், உறுப்புக்களும், தன்மைகளும் வாய்ந்தவை எஞ்சி நிற்கப் பிற மாண்டொழியுங் காரணத்தால், படிப்படியாய் வேறு வேறு வகையினவாகிய, ஒன்றனைவிட ஒன்றுயர்ந்த உயிரினங்கள் தோன்றினவென்பது மேனாட்டு ஆராய்ச்சியாற் பிறந்த கொள்கை. இது கருதற்குரியது. இந்நாட்டுப் புலவர் இவ்வாறு கருதாது, உயிரினங்களின் வடிவ வேறுபாடு, அவை பெறும் அறிவின் விரிவிற்கேற்ப அமைவ தாகுமென்றெண்ணினர். இக்கொள்கை,

"ஒன்றறி வதுவே யுற்றறி வதுவே
யிரண்டறி வதுவே யதனொடு நாவே
மூன்றறி வதுவே யவற்றொடு மூக்கே
நான்கறி வதுவே யவற்றொடு கண்ணே
யைந்தறி வதுவே யவற்றொடு செவியே
யாறறி வதுவே யவற்றொடு மனனே
நேரிதி னுணர்ந்தோர் நெறிப்படுத் தினரே."

(தொல்காப்பியம், மரபியல் - 582)

என்று தொடங்குந் தொல்காப்பியப் பாவில் நன்கு காட்டப் படுகின்றது. இதுபற்றிப் பெருகக் கூறுதல் எடுத்ததைவிட்டு மற்றொன்றில் நுழைவதாகு மாதலின், கிளைவழிபோக விழையு மென் நெஞ்சையடக்கிப் பசும்புல்லின் மேற் செல்வேன்.

"ஒன்றறி வதுவே யுற்றறி வதுவே" என்று பொதுவாகக் கூறியதைத் தெளிவுபடுத்த,

"புல்லு மரனு மோரறி வினவே
பிறவு முளவே யக்கிளைப் பிறப்பே"

என்றிசைத்தனர் தொல்காப்பியர். புல்லும் மரமும் ஓரறிவுயிர் வகை என்பது இதனாற் கூறப்பட்டது. ஓரறிவுடைய இரு வகையுயிர் மொழிந்தமையின், அவற்றின் வேற்றுமை யாதோ வென வினவுவார்க்கு,

"புறக்கா ழனவே புல்லென மொழிப
வகக்கா ழனவே மரமென மொழிப."

என்று பகர்கின்றது தொல்காப்பியம். இதனுரையிற் பேராசிரியர், "புறக்காழனவெனவே அல்வழி வெளிறென்பதறியப் படும். அவை பனையுந் தெங்குங் கமுகும் முதலாயின புல்லெனப் படும்; இருப்பையும் புளியும் ஆச்சாவும் முதலாயின மரமெனப் படும்" என வரைந்தனர். இதனாற் போந்தது, உள்ளே வயிரமின்றி வெறுஞ்சோறுடையவை புல்லாமென்பது. பனை, தெங்கு, கமுகு, இவ்வகையின. இவையன்றி, வெளியே இறுகி, உள்ளே துளையுடைய வெல்லாம் புல்லினமே. மூங்கில் இத் தகையது. கோதுமை, கேழ்வரகு முதலியவும் தென்னாட்டின் பேருணவாகிய நெல்லும் புல்லின்பாலன வென்பது மேற்காட்டிய தொல்காப்பியப் பாவிலிருந்து பெறப்படும். கரும்பு, சோளம், கம்பும் புல்லினமே. புல்லினம் இவ்வாறு விரிந்து பெருகுதலின்,

"விசும்பிற் றுளிவீழி னல்லான்மற் றாங்கே
பசும்புற் றலைகாண் பரிது."

என வருங் குறளின் பொருள் அகல்தல் காண்க.

ஆடு, மாடு, குதிரை, மான், ஒட்டகம், யானை யாகிய இவை நேரே புல்லுண்டு வளர்வன. யானையை நீக்கிப் பிற வற்றை நோக்குவோமாயின், புல் மேய்வதற்குதவும் நீண்ட கழுத்துக்க ளிவைகளுக்குள வென்பது வெளிப்படும். யானையின் பெரிய தலையைத் தாங்க நீண்ட கழுத்து இசைவதன்று. இதனால், புல்லைப் பற்றி வாயில் நுழைக்குங் கையை யமைத்துக்

கழுத்தை யானைக்குக் குறுகச் செய்தனள் இயற்கை யன்னை. இது வியத்தற்குரித்து. ஒட்டைச்சிவிங்கி என்ற விலங்கிற்கு மேல் நோக்கி வளர்ந்த மிக நீண்ட கழுத்திருக்கிறது. உயர்ந்த மரங்களிலுள்ள இலைகளை யுண்ண இவ்வமைப்பு அவ் விலங்கிற்கு வேண்டியதாகின்றது. இதை மேலும் பெருக்குதல் வேண்டா. பசும்புற் றலை காண்பரிதாயின், யானை, குதிரை, ஒட்டகம், ஆடு, மாடு, மான் இவற்றின் தலைகளைக் காணமாட்டோம். பசும்புற் றலையே பிற தலைகளுக்குக் காரணமாவது. பசும்புற் றலையே, ஆடு, மாடு, மான் முதலியவற்றின் கழுத்தை நீட்டிற்று. இடம்விட்டுப் பெயராப் பசும் புல்லின் பெருமை பகர்தற்கரிது.

ஆடு, மாடு, மான் முதலியவை புல்லுண்டு வளர்வன வாதலின், இவற்றினுடம்பு புல்லின் திரளே. "உண்டி முதற்றே யுணவின் பிண்டம்" இவற்றைக் கொன்று வாழும் சிங்கம், புலி, சிறுத்தை முதலியன நேராகப் புல்லுண்ணாது புல்லாலாகிய புலாலைத் தின்று வளர்கின்றன. பொருந்தப் பார்க்கின், புலி பசித்தாற் புல்லுண்ணுமெனல் பொருளுடையதே. புலியின் பேழ்வாய் புல்லறியாதெனினும், அதன் அழல் விழியுங் கொடுவரி யும் பெருவலியும் புல்லிற் பிறந்தனவே; புல்லில் மறைந்தது புலி; புலியில் மறைந்தது புல். வேறுபடுத்திக் கூறல்வேண்டின், புல் திரிந்து புலியாயிற் றென்க.

நம்மைத்தான் விட்டதா புல்? இல்லையே. வெண்சோறு, கோதுமையாலாய பண்டங்கள், பால், நெய், கற்கண்டு, வெல்லம், தோசை, பிட்டு, கூழ் முதலிய பல்லுணவும் புல்லே என்பது இதுகாறும் பகர்ந்தவற்றால் விளக்கப்பட்டது. குடி யோம்பி முறைசெய்யும் மன்னரும், செஞ்சொலாற் சிறந்தது செப்பும் புலவரும், ஓயா வீகையின் நல்லிசை நிறுத்திய வள்ளல் களும், விழுப்பந்தரு மொழுக்கத்தி னோங்கிய சான்றோரும், ஐந்தடக்கி வீடு நோக்கும் நீத்தாரும் புல்லிலிருந்து பெற்ற ஆற்றல் கொண்டே தத்தம் நெறியில் நின்றனரெனின், அஃதள வறிந்து மொழிவதாமேயன்றி மிகைபடக் கூறலாகாதே. எண்ணிறந்த விண்மீன் எழில்பெற வகுத்த எம்பிரான், புல்லொடு பொருத்தி எமை இங்கு வைத்தான். புல்லன் யானென வறிந்து அன்னவன் பொன்னடி தொழுகின்றேன்.

வாழ்கின்றார்!

வித்துவான் மு. இராசாக்கண்ணு, B. O. L.

உலகம் என்று தோன்றியது? அன்று தொடங்கி இன்று வரை இவ்வுலகத்துப் பிறந்தோர் எத்துணைக் கோடி மக்கள்! எண்ணில் அடங்குமோ அவர்தம் தொகை! 'விண்மீனும் நுண்மணலும் எண்ணிக்கொள்ளப்படும்; மறைந்தோரின் தொகை எண்ணிக்கையுட் படாது' என்று மூதறிஞர் மொழிந்தனர். அவர்களுள் சிலரன்றி மற்றையோர் பெயரளவிலும் நில்லாராய்க் காலம் எனும் கடுஞ்சூழலில் கரந்து மறைந்தனர். அவருள் எத்துணை மக்கள் நம் நினைவுக்கு வருகின்றனர்; நம் நன்றாகும் அன்றாட வாழ்க்கையில் நம் நாவில் இலங்குகின்றனர்? அவர் பின்னர் வாழ்ந்த மக்கள் தொகுதி, அவர்களுள் எவரை நினைவில் வைத்துக்கொண்டிருக்கின்றது?

'அரசர்க் கமைந்தன ஆயிரம் கோட்டம்' என்றனர் சாத்தனார். மன்னரும் வீழ்கின்றனர்; மந்திரிகள் மறைகின்றனர்; புலவரும் போகின்றனர்; அரிய ஞானியரும் இறையடி நீழல் எய்துகின்றனர்; தமக்கென வாழாது மக்களுக்கென்றே—தம் முயிரனைய தாய்மொழிக்கென்றே — இரவும் பகலும் இடையீடின்றி உழைக்கும் பெற்றி சிறந்த பெரியோரும் மண்ணக மடந்தையை மணக்கின்றனர். என்னே உலக வாழ்வு!

கரிய மேகம் மின்னுகின்றது; சில விநாடிகள் ஒரே ஒளி; மின்னல் மறைகின்றது. அங்ஙனமே மக்கள் தோன்றுகின்றனர்; சில்லாண்டுகள் வாழ்கின்றனர்; மறைகின்றனர். 'வாழ்வாவது மாயம்'; 'பிறந்தன மாயும்' என்பன உண்மை மொழிகள்.

மாய்கின்றது உடல்; வீகின்றன வாழ்நாட்கள்; ஆயின் வாழ்வோர் எவர் என்பது எண்ணுதற்குரியதே. தொல்காப்பியர் வாழ்கின்றார்; திருவள்ளுவர் திகழ்கின்றார்; நக்கீரர் நலத்துடன் விளங்குகின்றார்; கபில பரணர் வாழ்கின்றனர்; சங்கப் புலவர் என்றென்றும் இருக்கின்றனர்; நாயன்மார்கள்,

ஆழ்வார்கள் வாழ்கின்ருர்கள் ; கம்பர் கருதப்படுகின்ருர் ; ஒட்டக்கூத்தர் ஒளிர்கின்ருர் ; புகழேந்தி பொலிகின்ருர் ; கச்சியப்பர் காணப்படுகின்ருர் ; சிவஞான முனிவர் சிறக்கின்ருர் ; கரந்தை உமாமகேச்வரர், ஞானியாரடிகளார், சாமிநாதய்யர் நம்மிடை வாழ்கின்ருர்கள் !

இவர்கள் வாழ்வதெவ்வாறு? தம் வாழ்நாள் தமக்கே என்றிவர்கள் கருதினர்களா ? தம்முடல், தம் மனை, தம் மக்கள், தம் பொருள் ஆகிய ' உயர்ந்தன, உயிரனைய ' என்றே கருதி அவற்ருேடே தம் வாழ்நாளைக் கழித்தவர்கள் அல்லர். என்ன செய்தனர்? தம்முயிர் என்று தம் தாய்மொழியைக் கருதினர் ; தாம் வணங்கும் கடவுளாகத் தம் கன்னித் தமிழன்னையை வணங்கினர்கள் ; அவள் திருமுன் நின்ருர்கள் ; தம் வாழ்நாளை அவள் திருவடிக்கென்றே தந்தார்கள். தமக்குப் பெருமை, உலகில் உயர்வு ஆம் பிறவற்றைக் கருதியோ நின்றனர் ! இல்லையே ! தம் நலத்தை மறந்து தமிழன்னை முன் நின்று அவள் இட்ட கட்டளை அல்லவோ கைக்கொண்டனர். பிறருக்குக் கட்டளைக் கல்லாக நின்றனர்.

நன்செய் நிலம் ; பசும்பயிர் ; நாள் ஆகின்றது ; கதிர் வெளிவந்து பால் நிறைந்து காய்த்துப் பழுத்துத் தலைசாய்கின்றது. அறுவடை நாள் ; நிலமுடையான் அறுவடை செய்கின்ருன் ; நெல் குவிக்கப்படுகின்றது ; காற்றில் பதர் பறக்கின்றது ; நன்மணிகளாகிய நென்மணிகள் வீட்டிற்குக் கொண்டுபோகப்படுகின்றன ; அந் நெற்பொலியில் ஒரு சிறு பகுதி மறு விரைப்புக்கென்று ஒதுக்கி வைக்கப்படுகின்றது.

அவ்வாறே, உலகம் ; இளங் குழந்தைகள் ; ஆண்டுகள் மாண்டொழிகின்றன ; இளமை மாறுகின்றது ; முதுமை முதிர்கின்றது ; தசைநார் தளர்கின்றது ; கறுத்தன வெளுக்கின்றன ; பாலுண் கடைவாய் படுகின்றது ; காலன் கடுகி வருகின்ருன் ; நால்வர் சுமக்க நம்பிகள் நடக்கின்றனர். மறைந்த அன்றே ஊரவரால் உற்ருரால் மறக்கப்படுவோர் எண்ணிலார். சிலர் மேலும் சில்லாண்டு மக்கள் உள்ளத்திடை உறைந்து ஓடி மாய்கின்றனர். விரைப்புக் கொதுக்கிய நெல்போன்று மிகுதியும் குறைந்த சிலர் என்றென்றும், ஆயிரக்கணக்காக ஆண்டுகள் கடந்தும்—மக்கள் நினைக்க வாழ்கின்றனர்.

தமிழறிஞர்களே! தமிழ் அன்னைக்கு உண்மைத் தொண்டு ஆற்றியோரே தமிழ் மக்களின் உள்ளக் கோயிலில் உறைகின்றனர்; வணங்கும் கடவுளராய்த் திகழ்கின்றனர். போலி நடிப்பினர் பொலிவு சில காலமே நிற்கும். போலி நிறம் போயொழியும். பொய்யர் வாழார்.

வாழக் கருதும் வண்மையாளரே! வருக. நம் தமிழன்னை செம்பணி விரும்புகின்றாள்; செம்மையுள்ளத்தைக் கொள்வோம்; செந்நெறியில் நிற்போம்; செந்தமிழ்த் தொண்டு ஆற்றுவோம்; செந்தமிழ்ப் புலவர்களையும் புரவலர்களையும் போற்றுவோம்; 'வாழிய செந்தமிழ், வாழ்க நற்றமிழர்' என்று விண்ணதிரக் கூவுவோம்; களித்துக் கூத்தாடுவோம்; அதுவன்றோ நாம் வாழ்தற்குரிய நெறி.

'செந்தமிழ்ச் செல்வி' வாழ்த்து

(கும்மி)

எங்கும் பரந்திடும் புகழால் நிறைந்தவள்
மங்கையாஞ் செந்தமிழ்ச் செல்வி—அவள்
சங்கையி லாண்டுக ளிருபது பெற்றனள்
நங்கையை வாழ்த்தி நலமுறுவோம்.

சந்தத மும்மவள் நந்தம தில்லத்துள்
மைந்தரு மகளிரும் போற்றும் வண்ணம்
செந்தமிழ்ப் பெரியீர்காள் சேர்ந்துநீ ரெல்லீரும்
பைந்தமிழ்க் கட்டுரை யணிகள் தந்தும்,

அங்கத்தின ராக யாவருஞ் சேர்ந்தே
பங்கமறு தழற் றங்கமென—என்றும்
மங்கையவள் வாழ மாபொருள் தந்தும்
கங்கைக்கரை தாண்டி வாழச்செய் வோம்.

இந்த வகைகளால் அவளைநாம் போற்றிடின்
என்றென்றும் பண்டுபோ லேற்றமுற—அவள்
நந்தமிழ் நாட்டினில் நாம்நல் வழிச்செல்லப்
பந்தம் பிடித்திடும் பாவை யாவாள்.

—வித்துவான் மு. நமச்சிவாயன்.

சங்ககாலத்துச் செந்தமிழ்ச்செல்வி

ஆசிரியர் ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை
S. V. S. College, Tirupati

I

தமிழ் இலக்கிய வரலாறு காண்பவர், இவ் வரலாற்றை வரலாற்று நெறிபற்றியும், இலக்கிய நெறிபற்றியும் ஆராய்வதுண்டு. இவற்றுள் வரலாற்று நெறிக்குரிய கருவிகள் பலவும் செவ்வையாகக் கிடைக்காமையால், வரலாறும் இலக்கியமும் ஒருசேரக் கொண்டு காண்பர். அம்முறையே நோக்கின், தமிழ் இலக்கிய வரலாறு, சங்ககாலம், இலக்கியகாலம், புராணகாலம், பிரபந்த காலம் எனப் பகுத்துக் கொள்ளப்படும். சங்ககாலத்துக்குக் கருவியாகச் சங்க இலக்கியங்களைக்கொள்வர். இலக்கிய காலத்துக்குச் சிலப்பதிகாரம், மணிமேகலை, சிந்தாமணி, சூளாமணி, நீலகேசி, பெருங்கதை, இராமாயணம், மகாபாரதம் முதலியவற்றைக் கொள்வர். புராணம் என்றது திருவிளையாடற் புராணம், கந்தபுராணம், பாகவதபுராணம் முதலாகத் தலபுராணங்கள் ஈறுகப் பலவகைப் புராணங்களையுமாகும். பிரபந்தங்கள், குமரகுருபரர், சிவப்பிரகாசர் முதலிய சான்றோர் பாடிய சிறுநூல்களும் வேறுபலர் எழுதியுள்ள அந்தாதி, மாலை, உலா, கோவை முதலியனவுமாகும். தேவார திருவாசகங்களும், திருமுறைகளும், நாலாயிரத் திவ்ய பிரபந்தம், தேசிகர் பிரபந்தம் முதலியனவும் ஏற்றபெற்றி மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு பலவகையாகத் தமிழ் இலக்கிய வரலாறு ஆராயப்படுமாயினும், காலத்தாலும் வரலாற்று நெறியாலும் பிறவகையாலும் காண்பார்க்குச் சங்ககாலமே மிகத் தொன்மை வாய்ந்ததென்பது ஒருதலை. இம் முடிபின்கண் கருத்து வேறுபாடு இருப்பதாகத் தோன்றவில்லை. எவ்வகை ஆராய்ச்சியாளரும் சங்ககாலத்து இலக்கியங்களை மேற்கொள்வதில் மிக்க ஆர்வமே அடைகின்றனர். இக்காலமும் ஏறக்குறைய இரண்டாயிரமாண்டுகட்கு முன்னதென்பது எத்திறத்தார்க்கும் ஒப்பமுடிந்த உண்மையாகும்.

இனி, இவ்விலக்கிய நெறியில் ஆராய்வார்க்கு இக்கால ஆராய்ச்சியாளர் சிலர் சில தடைகளை நிகழ்த்துகின்றனர். இவர் ஆராய்ச்சி யுண்மைகளை விஞ்ஞானநெறியுண்மை (Scientific truth) தத்துவநெறியுண்மை (Philosophic truth), வரலாற்றுண்மை (Historic truth), புலவர் வாயுண்மை (Poetic truth) என நான்காக வகுத்து இவற்றிற்கு மதிப்பும் இக் கூறிய முறையே தந்தொழுகுவர். எல்லாவற்றிற்கும் இறுதியாகப் புலவர் வாயுண்மைகளை நிறுத்தியிருப்பது குறிக்கத்தக்கதாகும். இதற்கு அவர்கள் சிறந்த காரணமாக ஒன்று கூறுவர். "புலவர்கள் தாம் காணும் பொருளை உள்ளவாறு கூருது சிறிது உயர்த்தியே கூறுவர்; அக்கூற்றில் சிறிது உண்மையல்லாதது கலந்தே இருக்கும்; அதனுல், அதனை உள்ளதன் உண்மை கூறியதாகவே கோடற்கில்லை" என்பர்.

இவர்கள் தம் முடிபு முழுதும் வடவர் மேலைநாட்டவர் வழக்காறுபற்றிய இலக்கியங்களையே அடிப்படையாகக் கொண்டு செய்திருக்கின்றனர். அவற்றுள் இல்லது புனைந்து கூறும் வழக்கும் அதுபற்றிய அணிவகையும் பிறவும் மலிந்திருக்கின்றன. மற்று, சங்க இலக்கியங்களை இவர்கள் நன்கு ஆராய்ந்து கண்டவர் அல்லர். இவை முழுதும் உள்ளதன் உண்மையை உள்ளவாறு காட்டும் சொல்லோவியங்கள் என்பதனை அறிந்தாரில்லை. பொய்யும் வழுவும் புனைந்து ஓதுபவரைப் புலவர் எனக் கொள்வது தமிழ்மரபன்று என்பது இவர்கட்குத் தெரியாது. தம் பொறி புலன்கட்குப் புலனுகும் பொருளை ஐயந் திரிபற ஆராய்ந்துணர்தலும், உணர்ந்ததனை உள்ளவாறு உணர்த்தலும் உடையவரே புலவர் எனப்படுவர். புலவர் என்னும் சொற்பொருளையும் இவர்கள் நன்கு உணர்ந்திருப்பதாக இவர்கள் உரைக்கும் உரைகள் காட்டவில்லை. ஆகவே, இவர்கள் கூற்று நம் சங்க இலக்கியத்திற்கு ஏற்பன அல்ல என்பது இனிது விளங்குகின்றது.

புலவர் வாயுண்மை யுரைகளில் சில பொய்யும் விரவியிருக்குமெனத் தாம் கொண்ட முடிபுகளை வற்புறுத்தற்கு இவ் வாராய்ச்சியாளர் சிந்தாமணி, இராமாயணம் முதலிய இலக்கியங்களிலிருந்து சில புனைவுரைகளைக் காட்டுகின்றனர். " நும்மோரன்

ஞோர் யாட்டும், இன்ன பொய்யொடு மிடைந்தவை தோன்றின் மெய்யாண் டுளதோ இவ்வுலகத்தானே" (அகம். 286) என்றும், "செய்யா கூறிக் கிளத்தல், எய்யாதாகின்று எம் சிறு செந் நாவே" (புறம். 148) என்றும், "மாங்குடி மருதன் தலைவனாக உலகமொடு நிலைஇய பலர் புகழ் சிறப்பின், புலவர் பாடாது வரைக என் நிலவரை" (புறம். 72) யென்றும், "புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின் வலவனேவா வானவூர்தி யெய்துப என்ப தம் செய்வினை முடித்து" என்றும், "தொல்லிசை நுணங்கு நுண் பனுவற் புலவன் பாடிய, இனமழை தவழும் ஏழிற்குன்றம்" (அகம். 345) "உலகுடன் திரிதரும் பலர் புகழ் நல்லிசை, வாய்மொழிக் கபிலன்" (அகம். 78) என்றும் வருவனவும், பிறவும் பண்டைப் புலவரது வாய்மையும், அதுபற்றி அவர்பால் மக்கள் கொண்டிருந்த நன்மதிப்பும் தெற்றென விளக்கும். இவற்றை அவர்கள் உண்மையறிவோடு காண்பரேல், இப் புலவர்வாய் வருவனவற்றைப் பொய்யொடு மிடைந்தவை எனக் கருத்தில் நினைத்தற்கும் கூசித் தம்மையே அருவருத்துக்கொள்வர்.

இதனாற் போந்ததென்னையெனின், பிறநாட்டு வரலாறு, அந்நாட்டுத் தொன்மை, மக்களின் வாழ்க்கைப்பண்பு முதலியவற்றை ஆராய்தற்கு வேண்டுமாயின், இவ்வாராய்ச்சியாளர் கொள்ளுங்கருத்து, பொருந்திற் பொருந்துமேயன்றிப், பண்டைத் தமிழ்மக்கட்குரிய சங்க இலக்கியப் புலவர் வாய்மொழி ஆராய்ச்சிக்குச் சிறிதும் பொருந்தாது என்பது வற்புறுத்தியவாறும். இப் புலவர்கள் வழங்கியுள்ளவற்றின் மெய்ம்மைத் தன்மைக்குச் சான்று காட்டலுறின் இக் கட்டுரை விரியுமென்றஞ்சி மேற் செல்லுகின்றும். சங்க இலக்கிய இன்கவித் திரட்டு, கபிலர், பரணர், நக்கீரர் முதலிய நூல்களையும்,* சங்க இலக்கியங்களையும் அறிஞர் நேரே தாமே கண்டு தெளிந்து கொள்வது சிறப்பாகும்.

சங்ககாலத்துச் செந்தமிழ்ச் செல்வி என்று எடுத்துக் கொண்டோமாயினும், சங்ககாலம் சங்கநூற் புலவர் இருந்த

* இளவழகனர், வேங்கடராயலு ரெட்டியார், வேங்கடசாமி நாட்டார், மறைமலையடிகளார் முதலியோர் எழுதியவை.

காலத்தையும் அவர்கட்கு முன்பிருந்த தொல்காப்பியர் காலத்தையும் உளப்படுத்தி நிற்கும். சங்க இலக்கியத்துள் தொகுக்கப்பெற்றுள்ள பாட்டுக்களிற் சில தொல்காப்பியத்துக்கு மூத்தனவாகவும் இருக்கலாம் என்றும், சில சங்ககாலத்துக்குப் பிற்பட்டனவாகவும் இருக்கலாம் என்றும் கூறும் அறிஞர் உண்டு. அவர் கருத்தும் அகப்பட, தொல்காப்பியர் காலத்தையும் ஈண்டு அடக்கிக்கொள்ளலாம். மேலும், தொல்காப்பியர் தம் காலத்தும் தமக்கு முன்னோர் காலத்தும் வழங்கிய வழக்க ஒழுக்கங்களைத் தம் நூலகத்தே வடித்துக் காட்டியுள்ளார். அவை பலவும் சங்க இலக்கியங்களால் வற்புறுத்தப்படுகின்றன.

சங்ககாலத்தே நம் தமிழகம் நிலத் தகுதிபற்றிக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனப் பகுக்கப்பெற்றிருந்தது. தொல்காப்பியத்துள் பாலைக்கு நிலம் கூறப்படவில்லை. எனினும், அதற்குப் பின் வந்த சிலப்பதிகாரம் பாலைக்கு நிலம் காட்டுகின்றது. இதை நோக்கின், தொல்காப்பியர் காலத்துக்குப் பின்னும், சிலப்பதிகாரத்துக்கு முன்னும் பாலைக்கு நிலமுண்டாயிற்றென்று அறிகின்றோம். சங்க இலக்கியம் பாலைக்கும் ஓராற்றால் நிலம் குறிக்கின்றது. ஆகவே, சங்ககாலத்தே தமிழகத்தே ஐவகைப்பாகுபாடும் உண்டென்று துணியலாம்.

இந் நிலப் பாகுபாடேபற்றி மக்கட்சமூகமும் பாகுபாடு பெற்றிருந்தது. குறிஞ்சி நிலத்தவர் குறவர் என்றும், முல்லையோர் ஆயர் என்றும், பாலையோர் மறவர் என்றும், மருதத்தோர் உழுவர் என்றும், நெய்தலார் பரதவர் என்றும் கூறப்பட்டனர்.

தமிழும் தனிச் செல்வியும்

பண்டிதை S. கிருஷ்ணவேணி யம்மையார்

இச்சொற்றொடரைக் கூறப் புகுங்கால், தமிழ், தனிச்செல்வி, தமிழும் தனிச்செல்வியும் என மூன்று வகைப்படுத்தி இயம்பு வது இன்றியமையாததாகும்.

முதலில் தமிழைப்பற்றி ஆராய்வோம் :—உலகில் மக்கள் இயல்பினாலும், செயலினாலும், பண்பினாலும் பல திறப்பட் டிருத்தலைக் காண்கின்றோம். இத்தகையோரை ஒருங்கு கூட்டு வது மொழியேயாகும். வெவ்வேறு நாட்டினரேனும், பல திறப்பட்ட கொள்கைகளை உடையரேனும் அவர்களுக்கு மொழி ஒன்றாயின் அவர்கள் ஒருவரோடொருவர் அளவளாவுதற்கு இடமேற்படுமன்றோ! இதனால் மக்களின் கூட்டுறவிற்குத் தலை சிறந்த காரணம் மொழியே என உணர்ந்தாம். இத்துணை மொழி கள் ஆயிரக்கணக்கானவை நம் நாட்டில் வழங்கிவரக் காண்கி றோம். அவற்றுள் ஒன்று நம் தமிழ் மொழியாகும். இது, சில மொழிகளைப் போன்று பிறமொழிகளின் உதவியைக் கொண்டே ஒலிக்கும் இயல்புடையதன்று; சில்லெழுத்து களைப் பெற்றிருப்பினும் சொற்பரப்புடையதாய்த் தானே தனி நின்று பொருள்களைக் குறிக்கும் தன்மையுடையது. உண்மைகள் பலவற்றைத் தனித்தமிழில் எழுதி யிருக்கும் நூல்களை இன்றுங் காணலாம். தனித்தமிழில் எழுதித் தனித்தமிழில் பேசும் சான் றோர் இன்றும் உண்டு. பிறமொழிகளின் கலப்பின்றி எழுதுத லும், உரையாடலும் இயலுமோ என்பதற்கு இவை தக்க சான் றாகும். தமிழ்மொழி, வடமொழி இரண்டையும் நன்கு கற்ற புலவரும், மொழி ஆராய்ச்சியில் வல்லுனருமாகிய மேல்நாட்டு அறிஞரும் தமிழ் தனிமொழியே என நிலைநாட்டியுள்ளனர்.

தமிழின் இனிமை :—இனிமை என்பது, தமிழ் மொழிக்கு இயற்கையாக அமைந்த ஓர் ஒப்பற்ற அமைப்பாகும். தமிழில் வல்லினம், மெல்லினம், இடையினம் என மூன்று இனங்கள் உள்ளனவல்லவா? இம்மொழியில் வல்லோசை உடைய எழுத் துக்கள்தான் மற்ற மொழிகளில் மெல்லோசை யுடையனவாக

உள்ளன. தமிழின் ஒலி இயற்கை ஒலி, தமிழில் மார்பிற்குக் கீழ் ஓசையை அழுத்தி ஒலிக்கின்ற எழுத்துக்கள் கிடையா. சில மொழிகளிலோ நாபியிலிருந்து உச்சரிக்கப்படும் எழுத்துக்களும் உண்டு. ஒலி ஆழச் செல்லச் செல்ல இனிமை குறையுமன்றோ!

கையணி வளைந்திருப்பதால், எங்ஙனம் வளை எனப் பெயர் பெற்றதோ அங்ஙனமே இம் மொழி இனிமையுடைமையின் தமிழ் எனப் பெயர்பெற்றது. தமிழ் என்னும் சொல்லிற்குப் பொருள் 'இனிமை' என்பது பலரும் அறிந்ததே! தமிழ் எனப் பகரும்போது உண்டாகும் ஓசையே இனிமை யுடையதாகும். இம் மூன்று எழுத்துக்களும் மூன்று இனங்களிலிருந்து எடுக்கப் பட்டன. இவற்றுள் ழகரமென்பது எம்மொழியினும் இல்லாத ஓர் இனிய எழுத்தாகும். இந்த ழகரம் கலந்து வரும் சொற்கள் பெரும்பான்மையும் இன்பம் பயப்பனவாகவே இருக்கக் காணலாம். இவ்வினிமையையும், இன்பத்தையும் வெளிப்படுத்த நம் பெரியோருள் ஒருவர் ஒரு பாவிலேயே பல ழகரங்களைப் புணர்த்திக் காட்டியுள்ளனர்.

"குழலினிது யாழினிது என்பதம் மக்கள்
மழலைச்சொற் கேளா தவர்." —திருக்குறள்.

இதனாற்றான் இத் தமிழை நம்மனோர் பைந்தமிழ், செந்தமிழ், தண்டமிழ், கன்னித்தமிழ், முதுதமிழ், தீந்தமிழ் என வழங்குகின்றனர்.

தமிழின் சிறப்பு :—தமிழ் சுருங்கிய எழுத்துக்களை உடையது. இஃது எழுத்துக்களின் எண்ணிக்கையில் குறைந்திருப்பினும், உலகிலுள்ள ஒவ்வொரு பொருளையும் குறிக்கும் சொற்களில் சுருங்கியதன்று; சொற்பரப்பு மிக வாய்ந்தது. பல கலைகளையும் கற்ற அறிவுடையோர், கடின பொருளையும், சுருங்கச் சொல்லி நன்கு விளங்க வைத்தல் போன்று, சுருங்கிய எழுத்துகளை வாய்க்கப்பெற்ற நம் தமிழும், எக் கடின பொருளையும் எளிதில் விளக்கக்கூடிய சொற்பரப்பு வாய்ந்து மக்களை மகிழச் செய்கின்றது.

"சுருங்கச் சொல்லல் விளங்க வைத்தல்" நன்னூல். இது யாவரும் விரைவில் கற்பதற்கேற்ற எளிமை வாய்ந்தது; சில

மொழிகளைப்போன்று எழுத்துகள் ஒருவித ஓசையும், சொற்கள் ஒருவித ஓசையும் உடையதன்று. ஆதலின், இத் தமிழைக் கற்கப் புகுவோர், மற்ற மொழிகளைப் பயிலும்போது கொள்ளும் சிரமத்தைக் கொள்ளவேண்டியதில்லை. சிறு மக்களும் எழுத்துகளைக் கற்றவுடன் யாதொரு துன்பமுமின்றி அவற்றைக் கூட்டிச் சொற்களைப் படிக்கத் தொடங்குகின்றார்கள். இது பேராண்மையும், பெட்பும், பொருட்செறிவும், சொற்பரப்பும் வாய்ந்தது.

இன்னும் வேறெந்த மொழியிலு மில்லாத அகத்திணை நூல் ஒன்று தமிழில் அமைந்துள்ளது. இது தமிழிற்கே உரிய நூலாகும். இஃதொரு மனோதத்துவ நூல். இதைச் சிற்றின்ப நூல் எனச் சிலர் கூறுவர். அங்ஙனமன்று; இது படிப்படியாய் உயரும் மனிதனின் மனோநிலையை அளந்து காட்டும் ஓர் அளவு கோலாகும். இம் மனோ உயர்வுதான் மனிதனைப் பேரின்பத் துறையில் கொண்டு சேர்க்கிறது. தமிழரின் வழக்க ஒழுக்கங்களையும், மணமுறைகளையும் தெள்ளிதின் விளக்கிக் காட்டுவதற்கு இஃதொரு திறவு கோலாகும். இதைப் போன்ற சிறப்புகள் பல இருப்பினும் அவை யாவற்றையும் எடுத்தியம்ப வேண்டுவது இங்கு அவசியமின்மையின் இத்துடன் நிறுத்திக்கொண்டாம்.

இனித் தனிச்செல்வி என்பதை ஆராய்வாம் :—செல்வன் என்னும் ஆண்பாற் பெயர், பெண்பாலில் செல்வி என ஆயிற்று. செல்வமுடையவர் எவரோ அவரையே செல்வர் எனப் பகருகின்றோம். இவ்வுலகச் செல்வங்கள் பலப்பல. அவற்றைப் பொருட் செல்வம், கல்விச் செல்வம் என்னும் இருபகுதியுள் அடக்கலாம்.

பொருட்செல்வம் :—இவ்வுலக இன்பங்களைத் துய்த்தற்குப் பொருள் இன்றியமையாததாகும். இஃதில்லாதபோது மக்கள் அடையும் துன்பங்கள் அளவிறந்தன. அறம், பொருள், இன்பங்களுள் நடுவணுறும் பொருள் பொருந்தில் முன்னுள்ள அறத்தையும், பின்னுள்ள இன்பத்தையும் எய்தத் தடையிலது.

"பொருளில்லார்க் கிவ்வுலக மில்லை"
"பணமற்றவன் பிணம்"

"பணம் பத்து வகையும் செய்யும்"

"இல்லானை இல்லாளும் வேண்டாள்
ஈன்றெடுத்த தாய் வேண்டாள்"

இவைகள் பொருளைப்பற்றி எழுந்த வாக்கியங்கள்.

இத்தகைய பொருளைப் பலரும் விரும்பக் காண்கின்றோம். ஆயினும் உண்மைப் பொருளுணர்ந்த சான்றோர் இச் செல்வப் பொருளைச் சிறந்ததென மதித்தலில்லை. என்? இது நிலையற்றது; இன்றிருந்து நாளை அழியும் இயல்புடையது; ஈட்டல், காத்தல்களில் மிக்க துன்பத்தை விளைக்கக்கூடியது என்பது அவர்கள் தீர்மானம். 'சிறியரே மதிக்குமிந்த செல்வம்' என்றார் குசேலரும். இது செல்வம் என்னும் பெயரைப் பெற்றிருத்தல் குறிக்கத் தக்கதாகும். செல்வத்தின் இயல்பையும், செல்வ முற்றோர் ஓரிமைப்போதில் அதை இழக்கும் நிலையையும் நம் ஆழ்வார்,

"ஒரு நாயகமாய் ஓட வுலகுட னாண்டவர்
கருநாய் கவர்ந்த காலர் சிதைகிய பானையர்
பெருநாடு காண இம்மையிலே பிச்சைதாம் கொள்வர்
திரு நாரணன்தாள் காலம்பெறச் சிந்தித் துய்ம்மினோ." 4-1-1

என்னும் பாசுரத்தில் தெள்ளிதின் விளக்கியுள்ளார்.

இன்னும்,

"குன்றத் தனை இரு நிதியைப் படைத்தோர்
அன்றைப் பகலே அழியினு மழிவர்."

"குடைநிழ லிருந்து குஞ்சர மூர்ந்தோர்
நடைமெலிந் தோரூர் நண்ணினும் நண்ணுவர்."

இச் சொற்றொடர்களையும் நோக்குக.

இனி எஞ்சி நிற்பது கல்விச் செல்வமே யாகும். இக் கல்வியின் சிறப்பைப்பற்றி அறியாதார் ஒருவருமிலர். பாதுகாத்தற்கு எளிது; அழிவற்றது; கொடுக்கக் குறையாது; என்றும் இன்பத்தை யூட்டுவது; துன்பத்தை ஒழிப்பது; உற்றார் உறவினர், நட்பினர் போன்று என்றும் உதவிபுரிவது; மேன்மேலும் அறிவைத் துலக்குவது; சான்றோர் கூட்டுறவை அளிப்பது;

அறிவுடையோர் அவையின்கண் முதன்மைப்பெறச் செய்வது; சிற்றுயிர்க்குற்ற துணையாவது; எழுபிறவிகளிலும் தொடர்ந்து நன்மை யளிப்பது; இறைவன் அன்பைச் பெருகச்செய்வது இக் கல்வியேயாகும். இக் கல்வியைக் காட்டிலும் உயர்பொருள் இவ்வுலகில் வேறு இல்லையெனக் கூறல் மிகையாகாது.

"ஒருமைக்கண் தான்கற்ற கல்வி யொருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து."
—திருக்குறள்

இங்ஙனம் இக் கல்வி மக்களுக்குப் பல நன்மைகளையும் தரக் கூடியதாயிருப்பினும், இஃது எப்போது சிறந்த நலனை யளிக்கிறது, எதுவரையும் சென்றால் இதன் முழுப்பயனையும் பெற லாம் என்பதைச் சிறிது நோக்குவாம். எப்போது இறைவனது கழல்களுக்குத் தொண்டு பூண்டொழுகும் ஞானத்தைப் பெறுகின்றோமோ அப்போதுதான் இக் கல்வியின் பயன் கைவரப் பெறுகிறது. இன்றேல் பயனற்றதாகும்.

"கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின்."
—திருக்குறள்.

கல்விச் செல்வத்தின் முடிவு எது? ஈசன் திருவடிகளுக்குத் தொண்டு பூண்டொழுகுவதே! இத் தொண்டைத்தான் சேஷத்வம், சேஷத்வம் எனக் கூறுகின்றோம். இதனால் கல்விச்செல்வமே சிறந்தது என்றும், அக் கல்விச் செல்வத்தின் முடிவு சேஷத்வம் என்றும் வரையறுக்கின்றமையின், சேஷத்வச்செல்வமே செல்வங்கள் யாவற்றிலும் முதன்மையுற்றதும் தலை சிறந்ததும் என அறிந்தாம். இவ்வுண்மைச் செல்வத்தை வாய்ந்தவரே உயர் செல்வராவர்.

இனி, இத்தகைய செல்வியார் யார்? யாரை இச் சீரிய செல்வத்திற்கு இலக்கானவர் எனக் கூறலாம்? எனில், திருப்பாவையைத் திருவாய்மலர்ந்தருளிய நம் கோதையாரே செல்வி என்னும் திருநாமத்திற்கு இலக்காவார் என்பது ஊன்றிக் காண்பார்க்குப் புலனாகாநிற்கும். சான்றோர் இவருக்குத் "திருப்பாவைச் செல்வி" என இட்ட திருநாமத்தையும் நோக்குக. இவர் சேஷத்வச் செல்வத்தை உடைத்தாயிருந்தார் என்பதற்கு இவரியற்றிய திருப்பாவை என்னும் நூலே சான்று பகரும்.

இத் திருப்பாவை, திரு+பாவை எனப் பிரிவுறும். இவ்விரண்டு சொற்களுக்கும் பல பொருள்கள் உண்டு.

திரு=இலக்குமி, அழகு, தெய்வீகம், செல்வம்
பாவை=பெண், சித்திரம், கண், பதுமை

இவ்விரு மொழிகளுக்கும் இறுதியில் இயம்பப்பெற்ற இரண்டு பொருள்களை எடுத்துக்கொள்ளலாம். செல்வம் என்பது சேஷத்வச் செல்வத்தைக் குறிக்கும் என முன்னரே கூறியுள்ளோம்.

பதுமையின் இயல்பு, இதற்கு உரியவன், இதைத் தன் தலையில் வைத்து மகிழினும், தன் கையிற் றூங்கிக் குதிப்பினும், தன் காலிலிட்டு மிதிக்கினும் அவன் விருப்பத்திற்கேற்ப அடங்கியிருப்பதன்றோ! அங்ஙனமே ஜீவாத்மாவாகிய சேதனனும், பரமாத்மாவின் ப்ரியத்திற்கேற்ப ஒழுகிக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளான். அவனிட்ட வழக்காய் நிற்பதே இவன் ஸ்வரூபமாகும். இக் குணந்தான் வைஷ்ணவ சம்பிரதாயத்தில் பாரதந்த்ர்யம் எனப் பகரப்படுகிறது. இம்முறையில் திருப்பாவை சேஷத்வ, பாரதந்த்ர்யங்களைத் தன்னுள் அடக்கிக்கொண்டுள்ள ஒரு சிறந்த நூல் எனத் தெள்ளிதின் புலப்படவில்லையா? இதற்கு அகச்சான்றும் உள்ளது.

"எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்றன்னோடு
உற்றோமே யாவோம் உனக்கே நாம் ஆட்செய்வோம்
மற்றைநம் காமங்கள் மாற்று"

என்னும் நம் கோதையாரின் பொன்மொழிகளைக் காண்க. இதனால் நம் கோதையார் சேஷத்வச் செல்வி என உணர்ந்தாம்.

நிறமாலைச் சிறப்பு

டி. பி. நவநீதகிருஷ்ணன் எம். ஏ.
[பௌதிக நூல் விரிவுரையாளர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்]

"பார் ! சுடர்ப் பரிதியைச் சூழவே படர்முகில்
எத்தனை தீப்பட் டெரிவன ! ஓகோ !
என்னடி யிந்த வன்னத் தியல்புகள் !"

என்றார் பாரதிக்கவி. நாள்முழுதும் வெண்கதிர்களைப் பரப்பிய பரிதி மேலை போம்போது வன்னக் களஞ்சியமாய் மறைவதைக் கண்டு, இயற்கையினழகி லீடுபடும் கவி வியப்புறுதல் இயல்பேயாம். இயற்கையின் மறைகளை அறிவதி லீடுபடும் விஞ்ஞானியும் 'இந்த வன்னத்தியல்புகளை' ஆராயவிரும்புவதில் வியப்பொன்று மில்லை. விஞ்ஞானப் பேரறிஞரான நியூடன் (Newton), முதன் முதலாக இவ் வாராய்ச்சியி லீடுபட்டனர். அவர், தாமியற்றிய சோதனையைக் குறித்துப் பின்வருமாறு விவரித்துள்ளார்.

"இருட்டறையொன்றினுள் சன்னற்கதவுகளொன்றில் வெட்டப்பட்ட சிறுதுளையொன்றின் வழியே, ஞாயிற்றின் கதிர்கள் பாயுமாறு செய்தேன். அவற்றின் பாதையில் முப்பட்டைக் கண்ணாடி (Prism) யொன்றை வைத்தேன். இதனால் ஒளிக்கதிர்கள் விரிக்கப்பட்டு, எதிர்ச்சுவரின் மீது, பல நிறங்களுடன் விழ்ந்தன." இவ்வாறு, தான் கண்ட பல வர்ண ஒளிப்பரப்பிற்கு, அவர் 'நிறமாலை' (Spectrum) என்று பெயரிட்டார். இதன் பின், நியூடன் பல சோதனைகளைச் செய்தார். அவற்றின் விளைவாய், அவர், ஞாயிற்றின் ஒளி, சிவப்பு-செம்பீதம்-மஞ்சள்-பச்சை-நீலம்-அவுரி நீலம்-ஊதா இன்னோரன்ன பல நிறங்களாலானது எனக் காட்டினார். இதைப் பின்பற்றி, நியூடனின் சோதனையை நாம் முற்றும் விளக்கலாம். முப்பட்டைக் கண்ணாடியினூடே ஒளி செல்லும்போது, அதில் விலக்கம் (Refraction) ஏற்படுகின்றது. ஆனால், அவ்விலக்கம் நிறத்திற்கேற்றவாறு மாறுபடும். இதனால் வெண்ணொளித் திரளிலுள்ள பல நிறக் கதிர்கள் ஒன்றினின்றொன்று விலகிச் செல்கின்றன. இதனால் ஒளி பல நிறங்களாய்ப் பிரிந்து வெளிப்படுகின்றது.

பலநிற ஒளிகள் ஒன்று சேர்வதினாலேயே வெண்ணொளி உண்டாகின்றதென்பதை மற்றொரு சோதனை மூலமும், நாம்

விளக்கலாம். ஓர் அட்டை, வட்டவடிவமாக வெட்டப்படுகின்றது. அதன் பரப்பு பல பகுதிகளாகக் கோடுகளால் பிரிக்கப்படுகின்றது. ஒவ்வொரு பகுதியிலும், சிவப்பு முதல் ஊதா வரையிலுள்ள நிறங்கள் முறையே பூசப்படுகின்றன. பின், அவ் வட்டையின் நடுவில் ஓர் அச்சு செருகப்பட்டு, அது, வேகமாகச் சுழற்றப்படுகின்றது. அப்போது அவ் வட்டை வெண்ணிறமாய்க் காணப்படுகின்றது. இதனின்று பல நிறங்கள் சேர்ந்ததே வெண்ணிறம் எனும் உண்மை நிலைநாட்டப்படுகின்றது.

இதுகாறும், வெண்ணொளி பல நிறங்களாலாயது எனக் காட்டினேமேயன்றி, மேற்றிசையில் மறையும் பரிதியின் தோற்றம் பொன்மயமாய் இருப்பதேன்? எனும் வினவிற்கு விடை பகரவில்லை. அதைப்பற்றி இனி நாம் விளக்குவோம். நடுப்பகலில், ஞாயிறு உச்சத்திலிருக்கும்போது அதன் கதிர்கள் செங்குத்தாய் நம் உலகில் விழுகின்றன; காலையிலும் மாலையிலும் அவை மட்டமாய் வருகின்றன; இடைக் காலங்களில் சாய்வாய்ப் படுகின்றன. இன்னும், நம் உலகைச் சுற்றிலும் காற்று மண்டலமாகிய பவனம் (atmosphere) உள்ளது. ஆதலின் ஒளிக்கதிர்கள் பவனத்தின் வழியே செங்குத்தாய் விழும்போதும் சாய்ந்து படும்போதும், மட்டமாய் வரும்போதும் வெவ்வேறான தூரங்கள் செல்கின்றன. செங்குத்தாய்ச் செல்லும் தூரம் யாவற்றிலும் குறைந்ததாயிருக்கும்; சாய்ந்து செல்லும்போது சாய்வு அதிகரிக்க அதிகரிக்க தூரமும் மிகைபடும்; மட்டமாய்ச் செல்லும்போது யாவற்றிலும் அதிகமான தூரம் செல்லவேண்டும். இன்னும், ஒளி பவனத்தினூடே செல்லும்போது, பவனத்திலுள்ள நுண்ணிய துகள்களால் (Particles) அது சிதறடிக் (Scattering) கப்படும். இச் சிதறல் ஒளி செல்லும் தூரத்தைப் பொருத்ததாயிருக்கும். ஆதலின், நடுப்பகலில் சிதறல் சிறிதளவானதாயும், காலைமாலைகளில் மிகுதியானதாயும் இருக்கும். மேலும் சிவப்பு ஒளியில் ஏற்படும் சிதறல் குறைவானதாகவும், ஊதா ஒளியில் ஏற்படும் சிதறல் அதைவிடப் பன்மடங்கு மிகுதியானதாகவும், ஏனைய ஒளிகளில் ஏற்படும் சிதறல் இவையிரண்டிற்கும் இடையான அளவினதாயும் இருக்கும் என்று ரேலே பிரபு (Lord Rayleigh) கண்டுபிடித்துள்ளனர். இதனால்,

சிவப்பு ஒளியின் சிதறலுக்கும் ஊதா ஒளியின் சிதறலுக்குமுள்ள வேற்றுமை நடுப்பகலில் குறைவாகவும், காலைமாலைகளில் அதைவிடப் பன்மடங்கு அதிகமாகவும் இருக்கும். ஆதலின், நடுப்பகலில் எல்லா நிற ஒளிகளும் தரமாக இருப்பதால், நாம் பெறும் ஒளி வெண்ணிறமாகவே யிருக்கும். காலை, மாலையிலோ சிவப்பு ஒளியில் சிறிதளவும் ஊதா ஒளியில் பேரளவும் சிதறடிக்கப்பட்டு விடுவதால், இவ் வேளைகளில், சிவப்பு-செம்பீதம்-மஞ்சள்-பச்சை ஒளிகளின் கலவையால் ஏற்படும் நிறத்ததாகிய ஒளியைப் பெறுகிறோம். இதனாலேயே, ஞாயிறு தோன்றும்போதும் மறையும்போதும் பொன்னிறமாய் மிளிர்கின்றது.

தொடக்கத்திலுள்ள வரிகளுடன் நில்லாது, பாரதிக்கவி,

"..........................முன்னே
சமையுமொரு பச்சைநிற வட்டங் காண்பாய்
தரணியிலிங் கிதுபோலோர் பசுமை யுண்டோ."

என, மேலும் பாடுகிறார். கவி குறிப்பிடும் தோற்றத்தை, ஞாயிறு மறையுங்கால், நாம், சில விநாடிகளுக்குக் காணலாம். சில சமயங்களில் பரிதியின் வட்டத்தினேரம் முழுமையும் பச்சையாயிருக்கும்; சில போழ்து வட்டத்தின் பகுதிமட்டுமே பச்சையாய்க் காணப்படும். அரிதாக, ஞாயிறு மறைந்த அக்கணமே, பசுமையான சுடர்மிளிரும் காட்சி தென்படும். இத் தோற்றங்களுக்குக் காரணம், பவனத்தில் திரண்டுள்ள நீராவியேயாகும். நீராவி, சிவப்பு-மஞ்சள்-பொன்னிற ஒளிகளைக் கிரகித்துக்கொள்ளும் தன்மையைப் பெற்றுள்ளது. ஆதலின், அது பரிதியினொளியினின்று இந் நிறங்களைக் கிரகித்துவிடும். நாம் முன்னரே காட்டியபடி, ஞாயிறு மறையுங்காலத்தில் நாம் பெறும் ஒளி, ஊதா நீல மற்று, சிவப்பு-மஞ்சள்-செம்பீத-பச்சை நிறங்களின் கலவை பெற்றதாயிருக்கும். இதனின்று இப்பொழுது, சிவப்பு-செம்பீதம்-மஞ்சள் மறைந்துவிடவே, எஞ்சியுள்ளது பச்சையே. இதனாலே இப் பச்சை நிற வட்டத்தைக் காண்கிறோம். பாட்டிலே, பார்த்தன் பரிதியெழிலைப் பாஞ்சாலிக்கு விளக்குங்கால் இக்காட்சியை வர்ணிப்பதாக நாம் காண்கிறோம். 'பச்சைக்கதிரைக் கண்டவர், உணர்ச்சியின் பாற்பட்ட எவற்றினும் பிழையார்' என்று ஸ்காட்லண்டு

(Scotland) நாட்டு மக்களிடை ஒரு பழமொழி வழங்கி வருதலை யும், மனிதத் தீவினுள்ளவர் (Isle of Man) இப் பச்சையொளிக்கு 'உயிரொளி' (Living Light) எனப் பெயரிட்டுள்ளனர் என்ப தையும் இங்குக் குறிப்பிடலாம்.

நம்மிடை தோன்றிய தமிழ்க்கவி, இன்னும் கூறுவதாவது :

"எத்தனை செம்மை! பசுமையும் கருமையும்
எத்தனை! கரிய பெரும்பூதம்!
நீலப் பொய்கையின் மிதந்திடுந் தங்கத்
தோணிகள்; சுடரொளிப் பொற்கரை யிட்ட
கருஞ்சிக ரங்கள்! காணடி. யாங்குத்
தங்கத் திமிங்கலம்! தாம் பல மிதக்கும்
இருட்கடல்."

இத் தோற்றங்கள், மறையுங் கதிரவனொளி முகில்கள்மீது படுவ தால் உண்டாகும் ஒளிச்சிதறல்களால் உண்டாவதாகும். முகில் கள் வதியும் இடங்களும் அவற்றின் உருவங்களும் அடிக்கடிமாறிக் கொண்டிருக்கும் தன்மையுடைய வாதலின், இத் தோற்றங்களும் மாறிக்கொண்டிருக்கும் காட்சிகளை யளிக்கும். இவற்றிற்கு 'முத்துச்சிப்பி முகில்கள்' (Mother of Pearl clouds) என்று பெயர். ஏனெனில் முத்துச்சிப்பிகளின் மீது ஒளிபடும்போது, அவ்வொளிபடும் திசையை யொட்டிப் பல்வேறு நிறங்களாலான பல தோற்றங்களை (முகில் தோற்றங்கள் போன்றவை), நாம் காண்கிறோம்.

இன்னும், நம் கவி பாடுவதாவது,

"இமைகுவிய மின்வட்டி யின்வயிரக் கால்கள்
எண்ணில்லா திடையிடையே யெழுதல் காண்பாய்."

இக் கால்களுக்குக் காரணம் யாது என்பதை விஞ்ஞானம் இன் னும் ஐயமற்ற முறையில் விளக்கவில்லை. ஆயினும், இவை, வானில் பல்வேறிடங்களில் திரிதரும் உறைபனிப் படலங்களில் ஒளிபட்டுப் பன்முறையும் பிரதிபலிப்பதால் தோன்றுகின்றன எனப் பொதுப்படக் கூறலாம். நம் கோளின் வளைவும் அத் தோற் றத்திற்குக் காரணமானவற்றில் ஒன்றாயிருக்கலாம் எனச் சில விஞ்ஞானிகள் என்னுகின்றனர்.

இனி, இத் தோற்றங்கள் யாவற்றிற்கும் பின்னெழினியான வான் நீலநிறமாயிருப்பதேன்? எனும் வினவிற்கு விஞ்ஞான மளிக்கும் விடையைக் கூறுவோம். கதிரவனது வெண்ணொளி பாயும்போது ஊதாநிறக் கதிர்களே மிகவும் சிதறுண்டு மறைகின்றன என இதற்கு முன்னே விளக்கியுள்ளோம். அவ்வாறு சிதறுண்ட கதிர்களே மேல்நோக்கிச் சென்று வானை, நீலவானுக்குகின்றன. இதனுலே நீலவானைப் பகற்பொழுதில் மட்டுமே காண்கிறோம். இரவில் கருவானையே காண்கிறோம். இன்னும் வானின் நீலநிற ஒளி சிதறுண்டு பிரதிபலித்தலாலேயே நீலத்திரைக் கடலைக் காண்கிறோம்.

இன்னும், ஒரோர் போழ்து வானத்தில் அழகுற அமையும் வானவில் அளிக்கும் காட்சியால் கவரப்படாதவரு முளரோ! இவ் வானவில் தோன்றுதற்கு, விஞ்ஞானம் கூறும் காரணம் யாது? என வினவலாம். இதற்கான விடையையும் நியூடனே கண்டுபிடித்தார். "வானில் அங்கு மிங்கும் நீர்த்துளிகள் மிதந்து கொண்டிருக்கின்றன. சில சமயங்களில் அவை ஒழுங்காக ஒன்றின் பக்கத் தொன்ருகச் சேரும். அப்பொழுது பரிதியினொளி அவற்றின்மீது படும்போது, அத் துளிகள் ஒவ்வொன்றினின்றும் பன்முறையும் பிரதிபலிக்கும் ஒளி பல நிறங்களாய்ச் சிதறி வெளிப்படும். துளிகள் ஒழுங்காக அமைந்திருப்பதால் பலநிற ஒளிகளும் ஒழுங்கு முறையுடன் அமைகின்றன. இவ்வாறமைதலால் வானவில் வானில் திகழ்கின்றது. அத் துளிகளின் அமைப்புக்கேற்றவாறும் பிரதிபலித்தலின் எண்ணிக்கைக்குத் தக்கவாறும், இரண்டு-மூன்று-பல வானவிற்கள் ஒரே சமயத்தில் ஒரோர்போழ்து காணப்படும். ஒளி பிரதிபலிப்பதால் வானவில் தோன்றுவதால், கதிரவனுள்ள இடத்திற்கு எதிர்முகமாய்ப் பார்க்கும்போதுதான் அதைக் காணலாம்.

வானில் காணப்படும் விந்தைகள் இன்னும் பலவுள்ளன. ஆயினும் நாம் அவற்றைப்பற்றியெல்லாம் கூறப்புகின், இக் கட்டுரை மிகவும் விரியுமாதலின் மேற்கூறியவற்றுடன் முடித்துக் கொள்கிறோம். இச் சிறு கட்டுரையின் இறுதியில் நாம் கூற முன்வந்துள்ளது ஒன்றேயாம். இயற்கையன்னையே கலையையும், விஞ்ஞானத்தையும் ஊட்டுகின்ருள். இயற்கைக் காட்சிகளைக் கட்புலனுல் கண்டு மகிழ்கின்றோம்; அவற்றைப்பற்றிக் கவிதைகளில் படித்து உணர்ச்சி மேலிடுகிறோம்; அவற்றினை ஆராய்ந்து அறிவு மலர்ச்சியடைகிறோம். ஆதலின், இம் மும்முறையும் சேர்ந்ததனுலேயே முழுமையான மக்களாய்த் திகழ்கின்றோம்.

"பெரும்பெயர்க் கடவுள்"*

[இளவழகனார்]

வாழ்க்கையின் விளக்கத்துக்கு இன்றியமையாததாய் உள்ளது எது? என்பதும், அவ்வின்றியமையாததை அறிந்து அடைந்து விளக்கங்கொள்வது எவ்வாறு? என்பதும் தெரிந்து வாழ்க்கை நடத்துவோர் உலகில் மிகச் சிலராவர். அவர் உலகிற் பலராதல்வேண்டும். அங்ஙனம் ஆதற்கு, ஒல்லும் அளவு முயல்வதே 'தொண்டு' எனப்படுகின்றது.

'கல்வி' என்பதும் 'தொண்டு' என்பதும் பொருணுட்பத்தில் ஒன்றேயாம். தோண்டப்படுவது தொண்டு; கல்லப்படுவது கல்வி. கல்லல் என்பதற்குத் தோண்டல் என்பது பொருள். ஒரு பொருளில் வரும் இவ்விரு சொற்களையும் திருவள்ளுவர், "மாந்தர்க்குத் தோட்டனைத்து ஊறும் மணற்கேணி; கற்றனைத்து ஊறும் அறிவு" என நன்கு வழங்கியிருக்கின்றனர். இரண்டின் கருத்தையும் வேறொரு மொழியினாற் கூற விரும்பினால், 'ஆழ்ந்து நோக்குதல்' என்று தெரித்துக்கூறலாம். தாமும் ஆழ்ந்துநின்று பிறரும் ஆழ்ந்துநிற்றற்கு ஏற்ற நன்முயற்சியே, இவ்வாற்றால், 'தொண்டு' எனப்படுமென்பது நன்கு விளங்குகின்றது. ஆழ்ந்து கருதுதலால் தோன்றும் ஒலி நுட்பமே கல்வியில் தோன்றும் வாக்கொலியாகும். இதனால், வாக்குக்குந் தொண்டுக்கும் உள்ள இயைபும் இனிது பெறப்படும்.

இனித், தாமும் பிறரும் ஆழ்ந்துநிற்ற லென்னுந் தொண்டுதான் யாதென்று அறிந்துகொள்ளல்வேண்டும்.

பொதுவாக மக்கள், உலகத்தைப், புலனறிவு கண்ணாக ஆராய்ந்து அறிகின்றனர். நினைவாழமுடைய சிலர், புலனறிவின் நீங்கிச் சிற்சில நேரம் மனனறிவினாலேயே நினைந்து அறிகின்றனர். அங்ஙனம் அறியும்போது, புலனறிவு மனனறிவோடு ஒன்றுபட்டு நிற்கின்றது.

இனி, அவரினும் ஆழ்ந்த அறிவுடைய சிலர் புலனும் மனனும் நீங்கி அறிவு நிலையிலேயே எதனையுங் கருநிச்செய்கின்றனர். இந் நிலையில் முன் அறிவுகள் இரண்டும் இவ்வறிவினோடு பிரிவற இயைந்து நிற்கின்றன. புலனறிவைத் தன்னோடு ஒன்றுபடுத்திக்கொண்டு மனனறிவு இப்போது உயிரறிவு நிலையில்

ஒன்றுபட்டு நிற்கின்றது. இம் மூவகை நிலையும் பொதுவாக 'அறிவுநிலை' எனப்படும்.

இந் நிலை வரையில் உயிரின் முனைப்புண்டு; 'யான்' 'எனது' என்னும் எண்ணமும் உண்டு.

இவ் வறிவுநிலை முதிர்ந்த நிலைக்கு வருங்கால் உணர்வு நிலையாக மாறி விளங்கும். இந் நான்காம் நிலைமுதல் அருள்விளங்கும் நிலையாம். எனது யான் என்னும் அறிவுநிலை மாறிப் போனமையால், இந் நிலை அகன்ற மன்றமாயிற்று; அருள்விளங்குந் திருச்சிற்றம்பலமாயிற்று.

உயிரின் முனைப்புள்ள வரையில் ஆழ்ந்து செல்லுஞ் செயல் உயிர்க்கு உண்டு. மணற்கேணியைத் தோண்டிச் சென்றால், வாழ்க்கைக்கு இன்றியமையாததான தேவைப் பொருள் அங்கு ஊறிவரும் என்று திருவள்ளுவர் தெரிவித்தார். ஆழ்ந்து செல்லுதற்குரிய உயிரறிவு நிலை வரையில் உயிர் சென்றபின் ஆங்கு நேர்ந்த உணர்வு நிலையில், உலக விளக்கத்துக்கு அடிப்படையாக உள்ள இறையருள் ஊறி வருகின்றது.

உணர்வு நிலையாகிய மன்றத்துக்கு இடம், 'இதயம்' அல்லது நெஞ்சு எனப்படும். இதனை 'மலர்' என்றுஞ் சொல்வதுண்டு. 'நெஞ்சத் தாமரை' என்று வழங்குவதனாலும் அவ்வுண்மை தேறப்படும். உணர்வு நிலையாகிய ஆழ்ந்த நிலைக்குச் சென்றால், ஆண்டு இறையருள் ஊறியசைதலின், அதனைத் திருவள்ளுவரும் "மலர்மிசை ஏகினான்" என்பதனால் தெளிவுறுத்துவாராயினர். "உறவுகோல் நட்டு உணர்வு கயிற்றினால் முறுக வாங்கிக் கடைய முன் நிற்குமே" என்று அப்பரடிகளும் இதனை அருளிச் செய்தனர்.

இங்ஙனம் இதய மலராகிய உணர்வு நிலையில் நடைபெறுகின்ற திருச்சிற்றம்பலத் திருநடனத்தில், மிகு நுட்பமான திருச்சிலம்பொலியும் நிகழும். நுண்ணொலியாகிய இது பருநிலையாகிய அறிவுநிலையில், வான் ஓசையை இடனாகக்கொண்டு எழுத்தோசைகள் செவிப் புலனாதற்கும் ஏதுவாம்.

உணர்வுநிலையில் இறைவன் ஊற்றெடுத்து விளங்குகின்றனன் என்பது, இந் நுண்ணொலி நிகழ்ச்சியினாலும் வெளியே நன்குணரப்படும். இறைவன் விளக்கத்தால் நிகழும் இந் நுண்ணொலிப் பொருளே, 'வாக்கு' 'அருள் வாக்கு' 'மகா வாக்கியம்' 'அஞ்செழுத்து' 'மந்திரம்' 'ஓங்காரம்' 'இறைவன் பெயர்' 'ஒரு மொழி' 'குருமொழி' 'வேதம்' 'ஆகமம்' முதலிய பெரும்பெயர்களாய்க் கேட்கப்படுகின்றது.

உலகத்தின் விரிவுக்கெல்லாம் அடிப்படையாக உள்ள ஏதுக்கள் ஒலியும் ஒளியுமாகும். உணர்வுநிலையில் இறைவன் விளங்கிவருவானெனின், இங்ஙனம் மிகு நுட்பமான ஒளி விளக்கமே வடிவமாக, ஒலிப்பொருளே பெயராக இயங்கி வருவானென்பது தெரிகின்றது. ஒளியுருவிலும் ஒலிப்பெயரிலும் இங்ஙனம் எல்லாவற்றையுங் கடவிவருகின்ற கடந்த பொருளாகிய ஒரு முழுமுதலை அக் கருத்துக்களெல்லாம் ஒருங்கு விளங்கும்படி 'பெரும்பெயர்க் கடவுள்' என்று கூறுவது மிகவும் பொருந்தும்.

'கடவுள்' என்னும் பெயரில் ஒளிநுட்பம் உண்டு. எல்லாவற்றையுந் தான் விளக்கித் தன்னை விளக்குவது ஒன்றின்றி நிற்பது ஒளி.

'பெரும்பெயர்' என்பதை 'மகாவாக்கியம்' என்ப. 'ஒரு மொழி' என்பது அதன் கருத்து. "எண்ணியுருகுங் குருநாதன் என்பால் உரைத்த ஓர் மொழியே" என்று பட்டினத்தடிகள் இப் பெரும் பெயரை நினைந்தனர். அது, ஐந்தெழுத்துத் திருமந்திரம்.

இங்ஙனம் ஒலி ஒளிகள் வாயிலாக இறைவன் உணர்வு நிலைக்கண் ஊறி முன்னிற்கின்றனன் என்பது, 'பெரும்பெயர்க் கடவுள்' என்னுந் தொடரினால் நன்கு விளங்குகின்றது.

உலகத்தில் ஒளியினும் ஓசை நுட்பமானது. ஒளி, தீயின்கண் தோன்றுவது; ஓசை, வானின்கண் தோன்றுவது. தீயினும் வான் நுண்ணிய பொருள். மேலும், ஒளி, கண்ணுக்குப் புலனாவது. ஓசை, செவிக்குப் புலனாவது. கண்ணறிவினுஞ் செவியறிவே உயர்ந்தது. இவ்வாற்றால், ஒளியினும் ஓசை நுட்பமானதென்பது தெளியப்படும்.


இனி, ஓசை பொருளில்லாதது; ஒலி பொருளுள்ளது. ஆதலின் வானோசையை இடனாகக்கொண்டு நிகழும் வாக்கொலி மிகு நுட்பமானது. இதனால், எல்லாவற்றினும் மிகுநுட்பமானது ஒலியே என்பதும், எனவே மிகுநுண்ணிய இறைவன், மிகுநுண்ணிய உணர்வுநிலையில், மிகுநுண்ணிய ஒலிவாயிலாகவே முதற்கண் முனையும் இயல்பினன் என்பதும் 'பெரும்பெயர்க் கடவுள்' என்னுந் தொடரில் முடிபொருளாக விளங்காநிற்கும்.

சிவஞானபோதத்தின் சிறப்புப் பாயிரத்தில் இத் தொடர் வருகின்றது. வாழ்க்கைக்கு விளக்கந் தரும் அடிப்படைப் பொருளாகிய அதனைத் தெரிந்து, அதன் வாயிலாக எல்லாங் கண்டுங் கருதியும் வாழ்தல் நலந்தருவதாகும்.

பிறந்தநாட் பரிசு

[காழி சிவ. கண்ணுசாமிப் பிள்ளை, பி.ஏ.]

பொழுது விடிந்தது,
பொற்கோழி கூவிற்று ;
பொன்னம்மை குழந்தைகள்
மங்கைக்கும் மணிக்கும்
பிறந்தநாள் வந்தது ;
பிள்ளைகள் எழுந்தனர்.





வண்டி ஒன்று
வாயிலில் நின்றது ;
வாயிற் காவலன்
கதவைத் திறந்தான் ;
மாமா இறங்கி
உள்ளே வந்தார்.

வண்டிக் காரன்
பின்னே வந்தான் ;
பெட்டி படுக்கையை
உள்ளே வைத்தான் ;
கூலி பெற்றுக்
கும்பிட்டுப் போனான்.



மாமா குனிந்து
பெட்டியைத் திறந்தார் ;
துண்டிற் கட்டிய
மூட்டையை எடுத்தார் :
மணியை அழைத்துக்
கையிற் கொடுத்தார்.

ஓலைக் கூடை
ஒன்றை எடுத்தார் ;
மங்கையின் கையில்
மகிழ்ந்து கொடுத்தார் ;
தலைக்கொரு ரூபாத்
தாளுந் தந்தார்.

மூட்டையை முதலில்
மணிப்பயல் பிரித்தான் ;
மாலுமி ஆடையும்
பாவாடை சட்டையும்
பளபள என்று
கண்ணைப் பறித்தன.

செப்பை எடுத்துக்
கூடையில் போட்டனர் ;
உள்ளே வைத்து
ஓடினர் வெளியே ;
கையைக் கோத்துக்
கடைக்குச் சென்றனர்.

ஆடையை உடுத்திக்
கூடையைத் திறந்தனர் ;
விளையாட்டுச் செப்புகள்
கண்டு களித்தனர் ;
பம்பரம் கயிறு
மணிப்பயல் எடுத்தான்.



சுற்றிச் சுழற்றிப்
பம்பரம் விட்டான் ;
நிலையில் நின்று
பம்பரம் சுழன்றது ;
மங்கை பார்த்து
மலைத்து மகிழ்ந்தனள்.

பின்னர் இருவரும்
திண்ணைக்கு ஓடினர் ;
கூடைச் செப்பைக்
கொட்டிப் பரப்பினர் ;
உணவு சமைத்தனர் ;
உண்டு களித்தனர் ;

பொம்மைப் பூனை
கடையில் இருந்தது ;
கழுத்தில் சலங்கையும்
மணியும் மின்னின ;
மங்கையின் கண்ணில்
பூனையே நின்றது.



எட்டணாக் காசு
கொடுத்தான் பையன் ;
சட்டெனப் பூனையை
மங்கை எடுத்தாள் ;
குதித்துச் சுற்றி
மார்பில் அணைத்தாள்.

குழலின் ஓசை
அருகில் எழுந்தது :
பாம்புப் பிடாரன்
பக்கத்தில் இருந்தான் ;
பிள்ளைகள் இருவரும்
பார்க்க ஓடினர்.

பிடாரன் ஆடிக்
    குழலை ஊதினன் ;
பாம்பு சீறிப்
    படத்தை எடுத்தது ;
இருவரும் பார்த்து
    அஞ்சி நின்றனர்.



பிடாரன் பின்னல்
    குட்டி நாய் ஒன்று,
"வள், வள்" என்று
    குலைந்துக் குதித்தது ;
மெள்ள வந்து
    பூனையைப் பார்த்தது.

'பூனைக் கேற்ற
    பொன்னன சின்னநாய்'
என்றான் மணியும்,
    இசைந்தாள் மங்கையும்,
விலைக்குக் கேட்டனர் ;
    விரும்பி நின்றனர்.

" இன்று வயிற்றுக்கு
    வழிவேறு இல்லை ;
நாலணக் கொடுங்கள்
    நாயைத் தருவேன் "
என்று பிடாரன்
    மணியிடம் சொன்னன் .



நாலணக் கொடுத்தான் ;
    நாயும் பெற்றான் ;
தூக்கித் துள்ளிச்
    சிறுவன் ஓடினன் ;
பூனையை இடுக்கிச்
    சிறுமியும் சென்றாள்.

தாயார் மகிழ்ந்து
    தட்டிக் கொடுத்தாள் ;
நாய்க்குப் பசும்பால்
    வைக்கச் சொன்னள் ;
நாயுங் குடித்துப்
    பூனையைப் பார்த்தது.

" நீ ஏன் ஒன்றும்
உண்ண வில்லை;
வா வா, இப்படி "
என்று இழுத்தது;
கிண்ணங் கவிழ்ந்தது;
பாலுஞ் சிந்திற்று.

நாயும் பூனையும்
நல்ல தோழர்கள்,
விருப்பம் போல
விளையாடுந் தோழர்கள்,
என்று சிறுவர்
அன்றெலாம் ஆடினர்.

ஒய்ச்சல் இல்லை,
ஒழிச்சல் இல்லை;
பொழுது சாயும்
வரையில் ஆடினர்;
ஓடினர் பாடினர்
சலிக்க ஆடினர்.

பொழுது மறைந்தது,
இருள் கவிந்தது;
பூனை நாயுடன்
புகுந்தனர் உள்ளே;
உணவு கொண்டனர்,
ஒய்ந்து படுத்தனர்.



மங்கையின் அருகில்
பூனை கிடந்தது;
மணியின் அருகில்
நாய் படுத்தது;
நால்வரும் அயர்ந்து
நன்றாய்த் தூங்கினர்.

மதிப்புரை

சைவமத வினாவிடை :

ஆசிரியர்: வித்துவான் மறை. திருநாவுக்கரசு; சென்னை இந்துசமய அறநிலைப் பாதுகாப்புக் கழகத்தின் சைவச் சொற்பொழிவாளர் விலை எட்டணா;

இந்நூலில், அழகிய தூய எளிய செந்தமிழில், செவ்வையான வினா விடை முறையில், 35-சிறந்த தலைப்புக்களில், சைவ மதத்தைப்பற்றிப் பெரும்பாலும் அறிய வேண்டுவனவெல்லாம் நன்றாகத் தெளித்துக்கொடுக்கப்பட்டிருக்கின்றன. எல்லாரும் படிக்கத் தக்கபடி சைவமத வினாவிடை இதுவரையில் இதைப்போல வெளிவந்ததில்லை. திருநாவுக்கரசனார் இதன் வாயிலாக நல்ல தொண்டு செய்திருக்கின்றார். சைவ இல்லம் ஒவ்வொன்றிலும் இந்நூல் கட்டாயம் இருக்கவேண்டும். கண்ணுக்குங் கருத்துக்கும் இனியதான இந்நூல், சைவ உலகத்துக்கே ஒரு பெரும் புரட்சி தந்து மிக்க பயன் விளைக்குமென்று நம்புகின்றோம்.





தேவாரமணி இசையரசு

மு. மு. தண்டபாணி தேசிகர்

ஓம்

செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு-உ௦] சித்திரபானு—மார்கழி (42-43) [பரல்-உ

தமிழ்க் கல்விக்கு நூறாயிர ரூபா நன்கொடை

திருப்பனந்தாள் திருமடத்தின் தலைவர்
உயர்திரு. காசிவாசி சாமிநாத தம்பிரான் அடிகள்
களிகூர்ந்து வழங்கியருளியது !

தமிழ்நாடு செய்த பெருந்தவத்தின் பயனாகத் திருப்பனந்தாள் திருமடத்தின் தலைவரவர்கள் விளங்கி வருகின்றார்கள். தமிழ்மொழி தமிழிசை முதலிய தமிழ்க் கலைகளின் தற்கால நிலையும், அது மேலுமேலும் சிறப்பாக விளங்கித் திகழவேண்டிய முதன்மையும், அதன்முகமாகவே தமிழ்நாடும் தமிழ் நாகரிகமும் மேலோங்கவேண்டி யிருக்கும். இவையும் அவர்கள் திருவுள்ளத்தில் இடையறாது நிழலாடி வருகின்றன.

> " இமையாது உயிராது இருந்தாய் போற்றி "
>
> " உண்ணாது உறங்காது இருந்தாய் போற்றி "

என்னும் அருண்மொழிகளுக்கேற்ப, அடிகள் இவ்வகையில் மிகக் கண்ணுங் கருத்துமாய் இருந்து ஆவன செய்துவருதல் திருவருட் செயலென்றே கூறுதல் வேண்டும்.

சென்னைப் பல்கலைக் கழகத்தில் வித்துவான் தனித் தமிழ்த் தேர்வில் முதல்வராகத் தேறியோர்க்கு ஆண்டுதோறும் 'ஆயிர ரூபா' பரிசு வழங்கும் நிதியமொன்றும், முன்னர் அடிகள் அமைத்துள்ளார்கள். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் வாயிலாகவும் தமிழிசைக்கென அங்ஙனமொரு நிதியம் நிறுவியுள்ளார்கள். நம் கழக அறநிலையங்களுள் ஒன்றான தென்னிந்திய சைவ சித்தாந்த சங்கத்தின் வாயிலாகவும் 'மெய்கண்ட நூற் பரிசு' என ஒன்றிற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இங்ஙனம் இவர்கள் நிலையான

ஏற்பாடுகளாகச் செய்து வருகின்ற தமிழ் வளர்ச்சித் தொண்டுகள் பலப் பலவாயிருக்கின்றன.

இனி, நாட்டுப் புறங்களிலெல்லாம் தமிழ் தழைய வேண்டுமென்று அடிகள் அருட்கனிவோடு திருவுள்ளம் பற்றியருளிய மேன்மை, நினை தோறும் உண்ணெகிழ்த்தி இன்புறுத்துவதாயிருக்கின்றது. அதற்காக அவர்கள் சென்ற ஆண்டில் நூறுயிர ரூபா (1,00,000) அரசினரிடம் போர்நிதிய உதவியாக ஒப்புவித்திருக்கின்றார்கள். அதன் வருவாயிலிருந்து, கிராமங்களில் துவக்கப்பள்ளி ஆசிரியர்களும், கிராமக் கணக்குப் பிள்ளை களும், இந்திய மருத்துவப்பட்டம் பெற்று நாட்டுப்புறங்களில் அலுவல் பார்ப்பவர்களும், சென்னைப் பல்கலைக் கழகத்திலாயினும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலாயினும் வித்துவான் தனித் தமிழ்த் தேர்வில் பட்டம் பெற்றால், அவர்களுக்குப் பரிசு வழங்க ஏற்பாடு செய்திருக்கிறது. நாட்டுப் புறங்களில் மிகு விரைவில் தமிழ் பாவுவதற்கு இது மிகச் சிறந்த வாயிலாகு மன்றோ ! கிராம மக்கள் தமிழ்மொழிச் சுவையை நன்கு நுகர நேருமாயின், தமிழ்க்கு அஃது அசையாத தழைவாய் நிலைபெற்றோங்கும்.

அடிகள் தமது இயற்கை மதிநுட்பத்தால் வாயில்கள் பல நுணுகிக் கண்டு தமிழ்க்கு அறஞ் செய்துவருந் திறம் சாலவும் வியத்தற்குரியதாயிருக் கின்றது. அவர்கள் நல்வாழ்வு தமிழின் நல்வாழ்வா யிருக்கின்றது.

உயர்திரு தம்பிரானடிகளின் இனைய பெரும்புகழ்த் திறம்,

வடாஅது பனிபடு நெடுவரை வடக்கும்,
தெனாஅது உருகெழு குமரியின் தெற்கும்,
குணாஅது கரைபொரு தொடுகடற் குணக்கும்,
குடாஅது தொன்றுமுதிர் பௌவத்தின் குடக்கும்,
கீழது, முப்புணர் அடுக்கிய முறைமுதற் கட்டின்
நீர்நிலை நிவப்பின் கீழும், மேலது
ஆனிலை யுலகத் தானும்

ஆனுது உருவும் புகழுமாகி விரிகின்ற சீருடையதாகும்! வாழ்க அடிகள் !

* *

புதிய பட்டங்கள்

அரசினர் புத்தாண்டுப் பிறப்பின் நினைவாக நாட்டின் பெருமக்களுக் குப் புதிய பட்டங்கள் வழங்கி வருகின்ற நன் மரபுபடி, 1943-ம் ஆண்டாகிய இவ் வாண்டுப் பிறப்பிலும் தக்கோர்க்குப் பட்டங்கள் வழங்கி யிருக்கின்ற னர்.

குண்டூர் நாட்டாண்மைக் கழகத்தின் தலைமை அதிகாரியாகிய (Special Officer, Dt. Board, Guntur) திருவாளர் K. அரங்கசாமி முதலியார் அவர்கட்கு 'ராவ்பகதூர்' என்னும் பட்டமும், வெளி நாட்டினின்று வருவாரின் பாதுகாவலராய்ச் சென்னை அரசியலில் விளங்கும் (Protector of Emigrants) திருவாளர் K. கோதண்டபாணி பிள்ளை B.A. அவர்கட்கு 'ராவ்சாகிப்' என்னும் பட்டமும், செங்கற்பட்டுப் போர்த் துறை அமைப்பாளராகிய (District Organizer, National War Front, Chingleput) திருவாளர் T. S. நடராச பிள்ளை B.A. ,B.L., அவர்கட்கு 'ராவ்சாகிப்' என்னும் பட்டமும், 'குருமருந்து' வகைகள் புதிது கண்டு புகழோங்கிய திருவாளர் டாக்டர் A. மதுரம் அவர்களுக்கு 'ராவ்பகதூர்' என்னும் பட்டமும், சென்னைத் துணைத் தண்டலாளர் (Deputy Collector) திருவாளர் R. சுப்பையா பிள்ளையவர்களுக்கு 'ராவ்சாகிப்' பட்டமும் கிடைத்திருக்கின்றன.

இப் பெருமக்கள் தமிழறிஞரும் தமிழ்த் தொண்டருமாவர்; தமிழ் வளர்ச்சியில் நிரம்ப ஈடுபட்டவர்கள். இவர்கள் பெறுகின்ற நலங்கள் தமிழர் பெறுகின்ற நலங்கள்; தமிழ்த்துறை, நாட்டில் வளர்ச்சி பெறுதற்கு இப் பெருமக்கள் போன்றாரின் மகிழ்ச்சியே வேண்டும். ஆதலால், தமிழ்மக்கள் இச் சிறப்புக்கு மிகவும் மகிழ்ச்சி யடைகின்றனர். திருவருளுதவியால் இப் பெருமக்கள் இன்னும் பற்பல சிறப்புக்களும் வாழ்க்கைப் பேறுகளும் பெற்று ஓங்கி விளங்குகவெனப் பெரிதும் விரும்புகின்றோம்.

* * *

இன்னும் தமிழ் இசைக்கு எதிர்ப்பா?

பெருமை தங்கிய பல்கலை வள்ளல் செட்டிநாட்டு அரசாவர்கள் தமிழ் இசை வளர்ச்சிக்கு வேண்டும் உதவியத்தனையும் செய்து வருகின்றார்கள். அவர்கள் இயக்கம் தமிழகத்திற் பெருவாரியாக வளர்ந்தோங்கி வருகின்றது. நாளுக்குநாள் தமிழகத்தில் ஊக்கமும் முயற்சியும் ஒற்றுமையும் தமிழிசையில் வியக்கத்தக்க வகையாகச் செழித்து வருகின்றன. இசையரங்குகள் பலவற்றிலும் இப்போது தமிழ் இசைப்பாட்டுகள் மிகுதியாகப் பாடப்படுகின்றன. இசைவாணர்களுக்கு அஃதொன்றினாலேயே இப்போது மதிப்பு நிலை பெறுவதாயிருக்கின்றது. தமிழ் இசைப்பாட்டுக்கள் புதிய புதியவாக அமைக்கப்படுகின்றன. தேவாரம் திருவாய்மொழி முதலிய முன்னைத் தமிழிசைப் பாட்டுக்களும் தமிழ் மொழியில் நிரம்ப உள்ளன. இங்ஙனம் பாட்டமைப்பார்க்கும், பண் அமைப்பார்க்கும், பாடுவார்க்கும் பரிசுகளும் பலப்பல தோன்றி வழங்கப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு தமிழ் இசைக்கே சிறப்பின் உரியது. தமிழிசை மேற்காட்டியவாறெல்லாம் ஒரு புதுக்கிளர்ச்சியாக வளர்ந்து விளங்கி வருகின்ற மங்கல அழகினைக் கண்டு நல்லுள்ளமுடைய மாந்தர் எவ்வளவு மகிழவேண்டும்! இதற்கு மகிழ்ச்சி கொள்ளாதவர்களும் இத் தமிழ் நாட்டில் சிலர் இருக்கின்றார்களென்றால், அந் நிலை எவ்வளவு இரங்கற்பாலதாயிருக்கின்றது!

சின்னாட்களுக்கு முன் மீண்டும் திரு. வேங்கடசுப்ப ராவ், திரு. அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர், திரு. வேங்கடராம சாஸ்திரியார் முதலியோர் தமிழிசைக் கிளர்ச்சிபற்றி இசைவில்லாது பேசியதும், 'இந்து' 'சுதேசமித்திரன்' தாள்களும் இசைவில்லாது எழுதியதும் பெரிதும் வருந்தத்தக்கன.

தமிழ் நாட்டில், அதன் தாய்மொழியாகிய தமிழ் மொழியிலே, பாட்டுக்களை இசைமேடைகளிற் பாடவேண்டுமென்றால், 'இசைக்கு மொழி வேற்றுமை ஏன்? எந்த மொழியிற் பாடினாலென்ன?' என்பது என்ன தமிழன்பைச் சார்ந்தது? எந்த மொழியிற் பாடினாலும் ஒன்றுமில்லாத போது தமிழ் மொழியிற் பாடுதலில் ஏன் வேற்றுமை காட்டவேண்டும்? ஏதோ நல்ல காலமாகச் செட்டிநாட்டு அரசர்பெருமானார் பெரும்புண்ணியத்தால் தானே தமிழிசை யியக்கம் நாட்டில் தழைத்து வருகின்றபோது, அதனை வரவேற்று மகிழ்தற்குக்கூட இசையாமை காட்டும் மனம் தமிழ் மனம் ஆகுமா? ஆகாதபோது, எதிர்த்துப் பேசுதற்கும் எழுதுதற்கும் என்ன உரிமை இருக்கின்றது?

மாட்சிமை சான்ற செட்டிநாட் டரசரவர்கள், இவர்கள் போன்றார்க்கு ஏற்ற விடைகளை அவ்வப்போதும் ஆணித்தரமாக அளித்திருக்கின்றார்கள். ஆனால், தமிழிசை யியக்கம் பின்னும் மாட்சிமையாகவே நடைபெற்று வருகின்றது.

தமிழ்ப் பாட்டுப் பாட விரும்பாத இசைப்புலவர்களைத் தம் வீட்டுச் சிறப்புகட்குத் தமிழ் மக்கள் வருவிக்காத நிலையும் மிகுந்து வருகின்றது. தமிழ்ப் பாட்டுப் பாடாத இசையரங்குகட்குத் தமிழ் மக்கள் போகக்கூடாதென்னும் உறுதியும் பெருகி வருகின்றது. இரங்கத்தகுந்த இந் நிலைமைக்கு ஏதுவான தமிழிசை எதிர்ப்புத்தன்மை அவ்வொரு சிலரிடமும் இல்லாது அறவொழிந்து, தமிழ் நாட்டில் தமிழ் வளர்ச்சி கொண்டே எல்லாரும் இனிது வாழும் நன்னிலை விரைவில் ஓங்கி வருமாக!

"நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தர்" முதலியோர் நிலவிய தமிழ்நாடு இது! தமிழிசை அன்றான்று எதிர்ப்பின்றியே நிலவியது. உலகவர்முன் தாளம் ஈந்து அப் பெருமான் பாடலுக்கு இரங்

குந் தன்மையாளனும் ஆண்டவனும் அப்போது ஆதரவளித்த நாடு இது! இத் தெய்வத் தமிழிசை நாட்டிற்குத், தமிழிசைக் கிளர்ச்சி, என்றும் இயல் பானதன்றோ? ஆகையால் தமிழ்மக்கள், நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பிப் பொருளுணர்ந்து நெஞ்சுருகும் தமிழ்ப் பேற்றை யாண்டும் மிகுத்து வருதல் அவரவர்க்கும் உயிர்க்கடமையேயாகும்.

தமிழிசை வளர்ச்சிக்குப் புத்துயிர் அளித்து மிகச் செழிப்பாக வளர்த்து வருதலில் தங் கருத்தெல்லாம் இருத்திவரும் பெருந்தவத் தோன்றலாரான நிறைநலத் திருவினர் செட்டிநாட் டரசரவர்கள் வழி நின்று, அவர்கள் உள்ளம் மகிழும்படி, தமிழ்மக்கள் தமிழிசையைப் போற்றி வருவார்களாக!''

உரையும் பாட்டும்

" உரையெல்லாம் அறிவு நிலையைப்பற்றியே நிகழுமல்லாது அதன் மேற் சென்று உணர்வு நிலையைப் பற்றமாட்டாதாகும். பெரியதொரு மலைமுழைஞ்சினுட் பொன்னும் மணியுஞ் சிதறிக்கிடத்தல் வியப் பன்று; ஒரு சிறு கற்பிளவிலே அரிய பெரிய முழுமணிகள் அடுக் கடுக்காய்க் கிடந்து, எடுக்குந்தோறுங் குறைபடாதிருத்தலே பெரி தும் வியக்கற்பாலதாகும். சிறிய வான்மீன்கள் அகன்ற அவ் வானத் தின்கட் காணப்படுதல் ஒரு வியப்பன்று. அவ்வகன்ற வானும் வேறு மாடமாளிகை கூட கோபுரங்களும் ஒரு சிறிய கண்ணாடியி னுட் காணப்படுதலே மிகவும் வியக்கற்பாலதாகும்."

—மறைமலையடிகள்.

" மலேவில்லார் "

(இளவழகனுர்)

மக்கள் எஞ்ஞான்றும் ஆறுதலுடன் இருக்கப் பழகுதல் இன்றியமையாதது. சிறிய நிலேகளிலும் ஆறுதல் கொள்ளுந் திறம் ஒரு வகையான தெய்வ ஆற்றலே மக்கட்கு ஊட்டிவரும். தணிந்த அமைதி நிலேயில், வாழ்வு நன்கு விளக்கங் கொள்கின்றது. ஆரா இயற்கையாகிய அவா நீங்கிய விழுமிய வீட்டு நிலே, நிறைவான அமைதி வெள்ளமேயாகும்.

'இயல்பு' என்பதும், 'மாறுதலில்லாத ஒரு நிலே' என்பதும், 'பேரா இயற்கை' என்பதும், ஆறுதலான ஒரு பெரிய நிலேயினே நினைவு கூர்விக்கின்றன. இயல்பாயிருத்தலாகிய இத் தேறிய நிலேயில் எளிமையும் இனிமையும் ததும்பித் திகழ்கின்றன. காரியம் வீறுடையதாய் அலே வெள்ளமெனு, ஊழித் தீயெனப், பெரும்புயலெனத் தானே நிகழ்கின்றது; ஆனுல் அதன் காரணத்திலோ, முழுதும் எளிமை நிழலாடுகின்றது.

ஆறுதலான இந்த இனிய வாழ்க்கை சாறு நிரம்பிய கனிந்த பெருந்தண் வாழ்க்கை! விளங்கிய மெய்வாழ்க்கை! மோன வாழ்க்கை! மென்மையும் உறுதியும் தழைவும் பொருந்திய ஆணிப்பொன் நிழல்! கல்லால் நிழல்!

தேங்கிய மெய்வாழ்க்கை எஞ்ஞான்றும் தெளிந்த நிலேயுள்ளதாய்த் திகழ்கின்றது. மாறுபாடுகள் அவிந்த நிலேயே அந்த ஆறுதல் நிலே. அந்தத் தெளிவு நிலேயில் எங்கும் பொதுமையே விளங்குகின்றது. அதன்முன் எவ்வகையான மலேவும் இல்லே. தக்க தெளிவுடையோரே, இயல்புடையோரே 'மலேவில்லார்' எனப்படுகின்றனர்.

தம் இயல்பினும் மலேவில்லே; தம் காரியப்பாட்டினும் மலேவில்லே. செயல்கள் இயல்பாக எவரிடையினும் மலேவின்றி, இனிது ஆற்றலுற்றுச் செல்கின்றன. தேங்கிய தெளிவின்முன், கால மலேவு, இட மலேவு, பொருள் மலேவு, கருத்து மலேவு யாது

மில்லே. அவ்வவற்றிற்கு வாய்ப்பாக இணேவுற்றே, தெளிவு, எங்கும் விளங்கிக் கிடக்கின்றது. கீழுள்ள மேடு பள்ளங்க ளெல்லாம் மலேவின்றி நிரம்பி, மேலே ஒரே வெள்ளமாய், நீர் பரவிப் பெருகுவதுபோலவே தெளிவு முரணவித்துப் பரவிச் செயலுறுகின்றது.

இங்ஙனம் ஆறுதலியல்பு, எளிதாய் நிகழ்தலோடு, முரண வித்தும் வீறுபடைத்தும் பயன்மிகுக்குந் தெளிபளிங்கியற் கையா யிருக்கின்றது. இதனல், அத் தெளிவின்கண் அமைந்து நிழலாடாத பகுதி உலகின் எப்புறத்தும் இல்லே. வெளிப் பொருள்களுக்கு ஏற்றபடி தெளிவு தன் நிலேயில் ஏதும் மாறுதலின்றி, மற்றுத், தன்னியல்பிற் பிறவெல்லாம் இசைந்து எழிலுற, எல்லாந் தானய், விரைந்தெழுந்து பொங்கித் ததும்பி இயற்கையாய் (சுயம்புவாய்) விளங்கித் திகழ்கின்றது.

இயல்பாய் இருத்தல் என்னும் இவ்வெளிய தெளிவு நிலேயில், இருந்தல் என்னும் இவ்வெளிமையும், வீறுடன் செயற்படுதல் என் னும் இனிமையுமாகிய ஒன்றற்கொன் றியைபுள்ள, இணேமலர்கள் போன்ற இருவிரிந்த நிலேகள் விரவியுள்ளன. அமர்ந்த நிலேயும் இயங்கு நிலேயுமாகிய இவ்விரண்டும் ஒருங்கியைந்த ஒரு பெரு நிலேயே மலேவில்லா இயல்பு நிஃயாயிருக்கின்றது.

நிலே உயர்ந்த பெருமக்கள் அந் நிலேயிணே அணிந்து எழிலுற விளங்குகின்றனர்.

"கல்லால் நிழல் மலே
வில்லார் அருளிய
பொல்லார் இணேமலர்
நல்லார் புனேவரே"

—சிவஞானபோதம் : மங்கலவாழ்த்து.

சுழற்சி

ஆர். கே. விசுவநாதன், M.A.,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

ஒரு சாட்டில் கனமான குண்டு ஒன்றைக் கட்டி, நுனியை இறுகப் பிடித்துக்கொண்டு, குண்டைச் சுற்றுவதாகக் கொள்வோம். அப்பொழுது குண்டு சீரான கதியோடு ஒரு வட்டத்தின் பரிதியின்மீது ஓடிக்கொண்டிருக்கும். மேலும் கையில் பிடித்துக்கொண்டிருக்கும் நுனி அவ் வட்டத்திற்கு மையமாக இருக்கும். அவ்வாறு சுற்றும்போது நமது கையில் குண்டை நோக்கிச் சாட்டினூடே தொழிற்படும் ஒரு சக்தியின் உணர்ச்சியைப் பெறுகிறோம். இச் சக்தியை மைய விலக்கச் சக்தி என்று கூறுவார்கள். இதன் கருத்தை நன்கு உணரலாம். சுற்றும்போது குண்டு நம்முடைய கையிலிருந்து தப்பி ஓட முயலுவதினாலேயே இச் சக்திக்கு இப் பெயர் வந்தது. மேலும் சுழலும் வேகத்தை அதிகரித்தால் இச் சக்தியின் வலிமையும் அதைத் தொடர்ந்து அதிகமாவதைக் காண்கிறோம். இச் சக்தி சாட்டின் மிதுவால் தலைப்பட்டு நிற்பதால், சக்தியின் பலம் அதிகரிக்க, சாடு இதைத் தாங்கமாட்டாமல் அறுந்து போய் விடுவதுமுண்டு. மற்றும் இச் சக்தியின் அளவு சுழலும் வட்டத்தின் ஆரத்தையும் பொறுத்திருக்கின்றது. அதாவது பல் வேறு ஆரங்களைக் கொண்ட வட்டங்களின் பரிதியில் குண்டு ஒரே கதியுடன் சென்றால் ஆரம் குறைய, சக்தியின் பலம் அதிகரிக்கும் என்பதே இதன் கருத்து. சர்க்கஸ் விளையாட்டில் குதிரைகளை வட்டங்களில் ஒட்டிச் செல்லும் காட்சியைக் கவனித்திருக்கலாம். இங்கும் மையவிலக்கச் சக்தி குதிரையின்மீது தொழிற்படுகிறது. இதைத் தவிர்க்கச் சவாரி செய்பவன் எப்பொழுதும் மையத்தை நோக்கித் தன் உடம்பை வளைத்துக் கொண்டு சவாரி செய்துகொண்டிருப்பதைக் காணலாம். இருப்புப் பாதை வளைந்து செல்லுமிடத்தில் மையத்திற்கு வெளிப் புறத்திலிருக்கும் தண்டவாளம் உட்புறத்தில் இருப்பதைக் காட்டிலும் உயர்த்தப்பட்டிருப்பதைக் கவனிக்கலாம். இதன் காரணம் யாதெனில் வண்டித்தொடர் வளைந்த இடத்தில் செல்லும்போது மைய விலக்கச் சக்தியினால் தாக்கப்படுகின்றது.

இதனல் வண்டிச் சக்கரங்கள் தண்டவாளங்களின்மீது உராய்ந்து செல்ல வேண்டி யிருக்கின்றது. இது நீடித்தால் அவை தேய்வுற்று, வண்டி, பாதையை விட்டு இறங்கிவிடக் கூடும். இதைத் தவிர்க்கவே வளைந்து செல்லுமிடங்களில் வெளிப் புறத்திலுள்ள தண்டவாளம் உட்புறத்திலுள்ளதைக் காட்டிலும் சற்று உயரமாகப் போடப்பட்டிருக்கிறது.

இப்பொழுது இம் மைய விலக்கச் சக்தியைப் பயன்படுத்தி இயற்றப்பட்டிருக்கிற சில சாதனங்களைப் பார்ப்போம். நீராவி இயந்திரங்களிலே கண்காணி (Governor) என்ற அமைப்பு ஒன்றுண்டு. இதனல் நீராவியின் செலவை நாம் கட்டுப்படுத்திக்கொள்ளலாம். இக் கண்காணியில் நிமிர்ந்துள்ள சட்டம் ஒன்றைச் சுற்றி இரண்டு குண்டுகள் சுழலுமாறு செய்யப்பட்டிருக்கின்றன. இவ் வமைப்பின் கீழ்ப்பகுதி நீராவி அறையை அடைத்து நிற்கும் ஒரு வழிக்கதவு (Valve) ஒன்றுடன் பிணைக்கப்பட்டிருக்கிறது. இதன் தொழில் முறையைச் சற்றுக் கவனிப்போம். என்ஜின் ஓடிக்கொண் டிருக்கும்போது அது எதிர்த்துச் செய்யவேண்டிய வேலை திடீரென்று குறைந்து விடுவதாகக் கொள்வோம். உடனே என்ஜினின் வேகம் அதிகரிக்கின்றது. அதனல் அதிலுள்ள கண்காணியும் வேகமாகச் சுழலுகிறது. மைய விலக்கச் சக்தியினல் கண்காணிக் குண்டுகள் அதிகமாக இடைவிரித்துவிட அதன் கீழ்ப்பகுதி மேலெழுந்து ஒரு வழிக் கதவைச் சிறிதளவு அடைத்துவிடும். இதனல் நீராவியின் செலவு குறைந்து என்ஜினின் வேகமும் குறைவுபடும். இதற்கு மாருக என்ஜின் அதிக வேலையைச் செய்ய வேண்டி யிருக்கும்போது அதன் வேகம் குறைந்து விடுவதால் கண்காணியின் இடை குறுகிவிட அதன் கீழ்ப்பகுதி கீழிறங்கிக் கதவை அதிகமாகத் திறந்துவிடும். இதனல் நீராவியின் செலவு அதிகமாய்விட என்ஜின் வேகமாகச் சென்று அதிக வேலையைச் செய்யும். இதுவே கண்காணியின் உபயோகமாகும். இதைப்போல இன்னும் அனேக சாதனங்கள் இம் மைய விலக்கச் சக்தியைப் பயன்படுத்தி வேலை செய்கின்றன. பட்டாடைகள், மெல்லிய பஞ்சாடைகள் முதலியவற்றை உலர்த்துவதற்கு இயற்றப்பட்டிருக்கிற சாதனத்தில் இக்

கருத்தே கையாளப்பட்டிருக்கிறது. பக்கங்களில் துவாரங்கள் நிறைந்துள்ள குவளை ஒன்று இதில் உண்டு. ஈரமான ஆடைகளை வைத்துக் குவளை சுற்றப்படும். ஆடைகளிலுள்ள நீர், துவாரங்களின் வழியாக மையவிலக்கச் சக்தியினுல் தள்ளப் பட்டு, ஆடைகள் சீக்கிரம் உலர்ந்துவிடுகின்றன. இதைப் போலவே பல வேறு செறிவு கொண்ட துகள்கள் கலந்து நிற்கும் திரவங்களிலிருந்து துகள்களை வெவ்வேருகப் பிரித்து அடைவதற்கு ஒரு சாதனம் இயற்றி யிருக்கின்ருர்கள். இதைக் கொண்டு பாலிலுள்ள சத்தையும் பிரித்து எடுத்துவிடலாம். குழந்தைகளின் ஆகாரத்துக்காக விற்கப்படும் எல்லாவித மாவுகளும் இச் சாதனத்தைக் கொண்டே தயாரிக்கப்படுகின்றன.

சுழற்சியினுல் ஏற்படும் மற்ருெரு விளைவை இப்பொழுது காண்போம். திண்மையற்ற பொருள்களுக்குச் சுழற்சியினுல் திண்மை உண்டாகின்றது. உதாரணமாக ஒரு காகிதத்தின் மையத்தில் சிறு துவாரமிட்டு அதில் ஓர் ஊசியைச் செருகி அதனுல் காகிதத்தைச் சுற்றவும். இப்பொழுது காகிதத்தின் விளிம்பை ஒரு குச்சியினுல் அடித்தால் காகிதம் அட்டை மாதிரி எதிர்த்து நிற்பதைக் காணலாம். இதற்குச் சுழற்சியினுல்தான் இத் திண்மை ஏற்பட்டது. ஆறுகளில் நீர்ச்சுழல்களிருக்குமிடங்களைக் கடந்து ஒருவன் நீந்தி வர மிகவும் சிரமப்படுவதும் இதே காரணம்பற்றித்தான். சுழலும் பொருள்கள் எல்லாம் ஓர் இருசைச் சுற்றியே சுழலும். இவ் விருசு எப்பொழுதும் ஒரே திசையிலிருக்க முயலுகின்றது. இதனுல் ஏற்படும் விளைவுகளைக் காண்போம்.

குழந்தைகள் விளையாடும் பம்பரத்தை அனைவரும் பார்த்திருக்கலாம். இதில் ஓர் உலோகக்கம்பியின் முனை நீட்டிக் கொண்டிருப்பதைக் கவனிக்கவும். சுற்ருதபோது இம் முனையின்மீது பம்பரம் தாங்கி நிற்க இயலவில்லை. ஆனுல் சுற்றிக் கொண்டிருக்கும்பொழுது முனை பூமியில் செங்குத்தாக நின்று பம்பரம் நிமிர்ந்து சுற்றுவதைக் காண்கிருேம். மேலும் பம்பரத்தை இலேசாகத் தட்டினுல் அது கீழே விழாமல் சற்றுச் சாய்ந்து சுற்றிவந்து மறுபடியும் நிமிர்ந்து விடுவதைக் காண்கிருேம். இதிலிருந்து சுழற்சி இருசு தன் திசையை மாற்றிக்

கொள்ளப் பிரியப்படுகிறதில்லை என்று உணரலாம். அதனுல் தான் சுற்றும்பொழுது பம்பரம் நிமிர்ந்த நிலையில் நிற்கும் இயல்பைப் பெற்றது. சுழற்சி நின்றவுடன் பம்பரம் படுத்து விடுவதைக் காணலாம். ஆகையினுல் சுழலும் பொருள்கள் எல்லாம் அவற்றின் நிலையை மாற்ற இயலாத தன்மையைப் பெற்றிருக்கின்றன என்று அறியலாம். செப்பிடு வித்தைக்காரன் பல கத்திகளை ஒன்றன்பின் ஒன்ருக எறிந்து கத்திகள் ஒன்றும் கீழே விழாமல் கைக்குக் கை மாற்றுவதைப் பார்க்கிறேம். இதன் காரணத்தை இப்பொழுது உணரலாம். கையை விட்டுச் செல்லும்போது அவன் கத்திகளைச் சற்றுச் சுழற்றி எறிந்து விடுவதால், அவற்றின் நிலைகள் மாருமல் அவை மேலேறிச் சாவதானமாகக் கீழிறங்கி வர, அவன் மற்ருெரு கையினுல் அவற்றை வாங்கி, கைமாற்றி, மறுபடியும் முன்போல எறிந்து எல்லாக் கத்திகளும் ஒரு பெரிய வட்டத்தின்மீது வருமாறு காண்பிக்கின்ருன். இதைப்போலவே நெருப்புப் பந்தங்களையும், அம்மானைகளையும் எறிந்து காட்டுகின்ருன். நாம் சைகிள் வண்டி ஏறிச் சவாரி செய்ய இயல்வதும் இக் காரணம் பற்றித்தான். பீரங்கிகளிலிருந்து வெளிச்செல்லும் குண்டுகள் காற்றுத்தடையை எதிர்த்துச் செல்லும்பொருட்டு ஒரு சுழற்சியுடன் வெளியேறுமாறு பீரங்கிக்குழாய்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. மேலும் இக் கருத்தை உபயோகப்படுத்தியே கப்பல், ஏரோபிளேன் என்ற இவைகளுக்குத் திசைகாட்டும் கருவிகளென்ன, ஒற்றைத் தண்டவாள இருப்புப்பாதை என்ன, இவை இயற்றப்பட்டிருக்கின்றன.

கடைசியாகப் பூமியின் சுழற்சியைச் சற்றுக் கவனிப்போம். பூமி சூரியனைச் சுற்றி வருவதல்லாமல் தன்னைத்தானே சுற்றிக் கொள்கிறது. பூமியின்மீதுள்ள பொருள்களெல்லாம் அதன் மையத்திற்கு இழுக்கப்படுகின்றன. இச் சக்தியைப் பூமிக் கவர்ச்சி சக்தி என்று கூறுவார்கள். பூமி தன்னைத்தானே சுற்றுவதால் அதன்மீதுள்ள பொருள்களெல்லாம் மையவிலக்கச் சக்தியினுல் தள்ளப்படுகின்றன. எனவே பூமிக்கவர்ச்சி சக்தியும் மையவிலக்கச் சக்தியும் ஒன்றுக்கொன்று எதிராகத் தொழிற்படுகின்றன. இவற்றில் மையவிலக்கச் சக்தியின் பலம் குறை

வானது. ஆகையினல் கவர்ச்சி சக்தி சிறிதளவு குறைவு படுகிறது. பூமி இன்னும் அதிக வேகமாகத் தன்னையே தான் சுற்றி வந்தால் மையவிலக்கச் சக்தி பின்னும் அதிகரித்துக் கவர்ச்சி சக்தி குறையும். இவ்வாருனல் ஒரு நிலையில் பூமியி லுள்ள பொருள்களெல்லாம் அதைவிட்டு வெளியே தள்ளப் படவும் கூடும். நிற்க, சுழற்சியினல் கவர்ச்சி சக்தி குறைந் ததன் விளைவு என்ன என்று கவனிப்போம். ஒரு பொருளின் எடை என்பது, அப் பொருளைப் பூமியை நோக்கி இழுக்கும் சக்தியின் அளவு ஆகும். சுழற்சி இருசு வடதுருவத்தையும் தென்துருவத்தையும் சேர்க்கும் கோடேயாகும். எனவே இவ் விருசைப் பூமியிலுள்ள பொருள்கள் பூமியுடன் சுற்றி வரு கின்றன. பூமியின் நடுவரையின்மீதுள்ள பொருள்களின் கதி உச்சமதிப்பைப் பெற்றிருப்பதால் அவை மையவிலக்கச் சக்தி யினல் அதிகமாகப் பாதிக்கப்படும். ஆனல் துருவங்களுக்கு அருகில் உள்ள பொருள்களின் கதி மிகக் குறைவாக இருப்ப தால் அவை மையவிலக்கச் சக்தியினல் பாதிக்கப்படாது. எனவே தலைப்படுத்தி எஞ்சி நின்ற பூமிக்கவர்ச்சிச் சக்தி நடு வரைக்கருகே நீசமதிப்பையும், துருவங்களுக்கருகே உச்ச மதிப் பையும் பெறுகின்றது. அதனல் பொருளின் எடை நடுவரைக்கு அருகில் நீச மதிப்பையும், துருவங்களுக்கு அருகில் உச்ச மதிப் பையும் பெறும். ஒரு பொருளின் எடை நடுவரைக்கு அருகே 200 கிராம் எனக் கண்டால் அது வடதுருவத்தருகிலே 201 கிராம் ஆகிறது என்று கண்டார்கள். வேருெரு விளைவையும் கூறலாம். தன் வயமாகத் தொங்க விடப்பட்ட காந்தசட்டம் தெற்கு வடக்காக நிற்பதிலிருந்து பூமி ஒரு பெரிய காந்தமா யிருப்பது அறியப்பட்டது. சுழற்சியினுலேயே பூமி இந்த இயல்பைக் கொண்டிருக்கிறது என்று கருதுகின்றுர்கள்.

சங்ககாலத்துச் செந்தமிழ்ச்செல்வி

ஆசிரியர் ஒளவை. சு. துரைசாமிப் பிள்ளை
S. V. S. College, Tirupati

(முன் தொடர்ச்சி)

"ஆயர் வேட்டுவர் ஆடூஉத்திணைப் பெயர், ஆவயின் வரூஉம் கிழவரும் உளரே" என்று வருவது தொல்காப்பியம். இக் குறவர் ஆயர் முதலியோரை வேட்டுவர், குன்றவர், வெற்பர், இடையர், பொதுவர், கோவலர் முதலிய பல வேறு பெயர்களாலும் சான்றோர் அழைப்பர்.

இவர்கள் உயர்தொழிலும் சிறுதொழிலும் என இருவகைத் தொழிலும் செய்தனர். உயர்தொழிற்கண் உயர்கல்வி கற்று அறம் கூறுதலும், அரசாளலும், வாணிபம் செய்தலும், உழவுத் தொழில் செய்தலும், நிரைமேய்த்தலும், வேட்டையாடலும், தேனீட்டலும், மீன் பிடித்தலும் பிறவும் அடங்கின. உயர் தொழிற்குரிய வாய்ப்பின்மையால், அத் தொழிலுக்குத் துணை புரிதலும், உயர்தொழிலாளர்க்கு ஏவலராதலும், அடியராதலும் பிறவும் சிறு தொழில்களாகக் கருதப்பட்டன.

பொருள் ஈட்டலும், அதனல் அறம் செய்தலும் இன்பம் நுகர்தலும், வாழ்க்கையின் குறிக்கோளாகக் கருதப்பட்டன. அறமே பொருள் இன்பங்களைப் பெறுதற்கு நெறியாவது என்பது, "சிறப்புடை மரபிற் பொருளும் இன்பமும், அறத்து வழிப்படூஉம்" (புறம். 31) என்பதனல் அறியப்படுகின்றது. "அறன் கடைப்படாஅ வாழ்க்கையும், என்றும் பிறன்கடைச் செலாச் செல்வமும்" (அகம். 155) அவர் வாழ்வில் முதலிடம் பெற்றிருந்தன. சுருங்கச் சொல்லின் அவர்கள், "நாளது சின்மையும், இளமைய தருமையும், தாளாண்பக்கமும், தகுதியது அமைதியும், இன்மையதிழிவும், உடைமையதுயர்ச்சியும், அன்பின தகலமும்" (தொல். பொருள் சூ. 41) நன்கு தெரிந்திருந்தனர்; ஈதலும் இசைபட வாழ்தலுமே உடலோடு கூடிவாழும் உயிர்க்கு ஊதியமாகக் கருதினர். ஈதல் குறித்தே பொருளீட்டினர்; புகழ்பெறுவது குறித்தே ஈகை மேற்கொண்டனர். அப்

புகழின் அழியாமை யறிந்து, அது பெறுவது குறித்து அறப் போர் உடற்றினர். "புகழெனின் உயிரும் கொடுக்குவர்" என்பது புறநானூறு (182).

அறங்கூறுவோர் அறவோர், சான்றோர், ஐயர் எனப்படுவர். அறவோர் எவ்வுயிர்க்கும் அருள்பூண்டு ஒழுகுபவராதலின் அவரை அந்தணர் என்று உயர்த்துக் கூறினர். "அந்தணர் என்போர் அறவோர் மற் றெவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகலான்" எனத் திருவள்ளுவர் தமக்கு முன்பிருந்த சான்றோர்மேல் வைத்து "என்ப" என்று கூறுதல் காண்க. "ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோர் பலர் யான் வாழுமூரே" (புறம். 191) என அறவோர் சான்றோராகப் பேசப்படுதல் காண்க. "சால்பும் வியப்பும் இயல்பும் குன்றின், மாசறக் கழீஇ வயங்குபுகழ் நிறுத்தல், ஆசறு காட்சி யையர்க்கும் அந்நிலே, எளிய என்னுர் தொன்மருங் கறிஞர்" (குறிஞ்சி) என அறவோர் ஐயராகவும் வழங்கப்படுமாறு காணலாம்.

அரசாட்சி புரிந்தோர் அரசர், வேந்தர், மன்னர் என்றும், வாணிபம் புரிந்தோர் வணிகர் என்றும், உழவுத்தொழில் புரிந்தோர் உழவர், வேளாளர் என்றும் வழங்கி வந்தனர்.

இனி, இவர்களைப்போல நிலம்பெருது, தமிழகமெங்கும் திரிந்து, ஆங்காங்கு வாழ்ந்த செல்வர்களையும் மன்னர்களையும் அவர்தம் குணஞ்செயல்களைப் புகழ்ந்து பாடி பரிசில் பெற்று வாழ்ந்த மக்களும் தமிழ்நிலத்தே உண்டு. அவர்கள் கூத்தர், பாணர், பொருநர், விறலியர் முதலாகப் பல திறத்தினராவர். அறமுரைக்கும் சான்றோராகிய புலவர்களும் செல்வர்களைப் பாடிப் பரிசில் பெற்றனர்; எனினும், அவருடைய புலமை நலத்தால், பாணர் முதலாயினுர் வரிசையில் வையாது, செல்வர்கட்கு ஒத்த நிலையிலும் உயர்நிலையிலும் அப் புலவர்கள் வைத்துப் பேணப்பெற்றனர். இருபேரரசர்கட் கிடையே தூது சென்று ஒற்றுமை செய்து உயிர்க்கேடு நீக்கும் உரவோராதலின், இவரை நாடோடிகள் எனக் கருதுவது குற்றம். "இகல்மீக்கடவும் இருபெருவேந்தர், வினையிடை நின்ற சான்றோர்" (குறிஞ்சி) என்று போற்றுதல் காண்க.

இவ்வாறு, சங்ககாலத் தமிழ்மக்கள் தம்மில் செயல்வகையால் பலவகைப் பெயர் வேறுபாடு பெற்றிருந்தனரே யன்றி மகட்கோடல், உணவுகோடல் முதலிய துறைகளில் யாதொரு வேறுபாடும் கொண்டிலர். அறவோர் முதல் கூத்தர் பாணர் ஈருக அனைவரும் ஒருங்கிருந்து உணவு கொள்வர்; ஒருவர்க்கொருவர் மகட்கொடை புரிந்துகொள்வர். இக் காலத்துச் சாதி வேறுபாடும், உணவு வேறுபாடும், மணவேறுபாடுமாகிய இவற்றின் முடைநாற்றம் அக் காலத்தே அவரிடையே தோன்றவே இல்லை. நெய்தல் நிலத்தவர் பிற நிலத்தவரோடும், பிறர் பிறரோடும் கொள்வன கொடுப்பன செய்து இனிது வாழ்ந்தனர். இவற்றின் வேறுபாடு நுழைந்து அவர்தம் அறவாழ்க்கையின் சீரைக் குலைக்கவில்லை. ஊனுண்டனர்; மீனுண்டனர்; பாலுண்டனர்; பழமுண்டனர்; சோறுண்டனர்; இனிய சுவையுடைய நல்லனவெல்லாம் உண்டனர்.

பட்டாடையும் பருத்தி யாடையும் உடுத்தினர். பொன்னும் முத்தும் மணியும் பிறவும் பூண்களாய் அவர் மேனியிற் கிடந்து அழகு செய்தன. ஆடவரும் மகளிரும் உயரிய அணிகளை அணிந்து கொள்வர். பூவும் தொடுத்தணிவர். ஆடவர் தலையில் அணிந்துகொண்ட பூவணி கண்ணியெனவும், தோளிலணிந்தது தார் எனவும் பெயர்பெறும். மகளிர் வண்டு மொய்க்கும் பூக்களைத் தம் குழலில் அணிவர். இளமகளிர் இடையில் ஆம்பலும் பிறவும் விரவத்தொடுத்த தழையை உடைமேல் அணிந்துகொள்வர். அவர்கள் கையில் வளையும் தொடியும் பெய்துகொள்வர். காலில் சிலம்பு பூண்பர். ஆடவர் தோளில் கடகமும், காலில் கழலும் புனைவர்.

ஆண் மக்களின் நினைவு, சொல், செயல்களில் பெருமையும் ஊக்கமும் விளங்கி நிற்கும். கல்வி கேள்வி மிகுந்து மேலும் பல நூல்களை ஓதுதல், வினைபலவும் செய்தல், பொருளீட்டல் ஆடவர்க்குப் பொதுவாய செய்கைகளாகும். ஆடவன் தன் வாழ்க்கைத் துணைவியைத் தானே தேடிக்கொள்வன். பெற்றோர் அது குறித்து முயலும் முயற்சி யொன்றும் சங்ககாலத்து நூல்களில் காணப்படவில்லை. அவன் தேர்ந்துகொண்ட பெண்ணைப் பின் மணம் செய்துகொள்ளுங் காலத்தில் பெற்றோர் முதலிய

சான்றோர்களின் உதவியும் வாழ்த்தும் பெறுகின்றான். "போனகம் என்பது தான் உழந் துண்டல்" என்னும் பெருமொழியே அவன் உள்ளத்தில் முன் நிற்கிறது. பெற்றோர் ஈட்டிய பொருளைப் பெற்றுத் தான் இனிது வாழலாம் என்ற கருத்து அவன் நினைவில் நிகழ்வதையே காணோம்.

அவன் எஞ்ஞான்றும் பழிபாவங்கட்கு அஞ்சும் இயல்பினனாகவே உள்ளான். புகழ்பெறுவதே அவற்குக் குறிக்கோள். அன்பும் அருளும் அறமும் அவனுடைய நினைவிலும் சொல்லிலும் செயலிலும் நிலவுகின்றன. இறைவனான முருகனைப் பரவும்போதும், "யாஅம் இரப்பவை, பொருளும் பொன்னும் போகமுமல்ல, நின்பால், அருளும் அன்பும் அறனும் மூன்றும், உருளிணர்க் கடம்பின் ஒலிதாரோயே" (பரிபா. 5) என்றே வேண்டுகின்றான். அஞ்சாநெஞ்சமும் அறிவு நுண்மையும் படைவன்மையும் உடைய இத் தமிழ்மகனது பொதுவியல்பு இன்னும் விரிக்கிற் பெருகும்; ஈண்டு அது பொருளுமன்று.

III

இனி, இச் சங்க காலத்துச் செந்தமிழ்ச் செல்வியைக் காண்போம். இவள் பேதை பெதும்பை என்ற இருபருவத்தும் தன்னைப் பெற்றோர் ஆதரவில் அழகின் கொழுந்து வளர்வதென வளர்கின்றாள். இக் காலத்தே இவள் பெற்றோரால் திருந்திய கல்வியும் பொருந்திய ஒழுக்கமும் பெறுகின்றாள். கடிமணமான பின் கணவன் காவலில் இல்லிருந்து நல்லறம் புரியுந் திறத்தால் தன்னை மனைவியாகப் பெற்றவனுக்கு உயிர்க்கினிய உறுதி பயக்குந் துணைவியாய் அவனுவப்ப மக்களைப் பயந்து இன்புறுகின்றாள். "கணவருவப்பப் புதல்வர்ப் பயந்து....சுற்றமொடு, வளமனை மகளிர் குளநீர் அயர" (மதுரைக் காஞ்சி, 600-3) என மாங்குடிமருதனார் கூறுதல் காண்க. முதுமை யெய்திய வழி, கணவனொடு தானும் (முதுமையின் பயனாக) மறுமைக்குச் சிறந்த நல்வினையை ஆற்றுவள். "கிழவனும் கிழத்தியும் சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே" என்பது தொல்காப்பியம். இதன்கண் "இறந்த" தென்றது, வயது முதிர்ந்தது என்னும் பொருளதாகும்; "இளமையும் தருவதோ இறந்த பின்னே" (கலி. 15) என வருதல் காண்க. ஒருகால், தாம்

உயிருடன் இருக்கும்போதே கணவன் இறக்க நேரின், தாமும் அவனுயிருடன் உடன் கட்டையேறி மாய்தலும் உண்டு. இன்றேல், மறுமையில் கணவனைக் கூடல் வேண்டிக் கைம்மை நோன்பு நோற்றிருத்தலும் உண்டு. இருமணம் புணரும் வழக்கம் பண்டைத் தமிழ் மகளிர்பாற் கிடையாது. "அலர்ந்த, விரிநீர் உடுக்கை உலகம் பெறினும், அருநெறியாயர் மகளிர்க்கு, இருமணம் கூடுதல் இல்லியல் பன்றே" (கலி. 114) என்பதனால் துணியப்படும்.

இம் மகளிரது இளமை, காமஞ் சாலா இளமையும், அது சான்ற இளமையும் என இருதிறமாகக் கருதப்படுகின்றது. காமஞ்சாலா இளமைக்காலத்தே இம் மகளிர் புறத்தே சென்று நன்கு விளையாடுவர். சிற்றில் புனைதலும், சிறுசோ றடுதலும், பாவை வைத்து விளையாடலும், அம்மனை, கழங்கு, கழல், பந்து முதலியன கொண்டு விளையாடலும் பிறவும் விளையாட்டுக்களாகும். பூக்கொய்து மாலை தொடுத்தலும் தழை புனைதலும் சிறிது முதிர்ந்த இளமகளிர் செய்வர். குறிஞ்சி நிலத்தவராயின் காமம் சாலும் பருவமெய்தும் நிலையிலுள்ளார், சுனைகுடைதலும், தினைப்புனம் காத்தலும்; முல்லை நிலத்தவராயின் ஆனிரை பின் சென்று பால் கறந்து கொணர்தலும்; மருதநிலத்தவராயின், தாமரையும் பிறவும் கொய்து மாலை தொடுத்தலும், நெற்போரில் ஒளித்து விளையாடலும், ஊரையாடலும்; நெய்தல் நிலத்தவராயின், மீன் கவர வரும் புள்ளோப்புதலும், கடற்கானலில் புன்னை நீழலில் வண்டலயர்தலும் பிறவும் செய்வர். காமம் சான்ற பருவம் எய்தியவழி இம் மகளிர் இற்செறிக்கப்படுவர்.

> " ....முள்ளெயி றிலங்கின ;
> தலைமுடி சான்ற ; தண்தழை யுடையை;
> அலமர லாயமொடு யாங்கணும் படாஅல் ;
> மூப்புடை முதுபதி தாக்கணங்கு உடைய ;
> காப்பும் பூண்டிசின் ; கடையும் போகலை ;
> பேதை யல்லை ; மேதையங் குறுமகள்,
> பெதும்பைப் பருவத்து ஒதுங்கினை புறத்து." (அகம். 7)

என வருதலால் இற்செறிப்பின் இயல்பு புலனாகும்.

இப் பெதும்பைப் பருவத்தே இவள் தனக்குரிய காதலனைத் தேர்ந்து கொள்வள். இற்செறிக்கப்பட்டபோதும் இவள் தன் மனையகத்தே யாண்டு வேண்டினும் இனிது செல்வள். இவள் இப் பருவத்தேயே சீரிய குணங்கள் நிரம்பி விடுகின்றனள். அச்சம், நாணம், மடன் என்ற மூன்று குணங்கள் நன்கு நிலைபெற்று விடுகின்றன. ஆசிரியர் தொல்காப்பியனாரும் இம் மூன்றையே பல விடத்தும் வற்புறுத்துகின்றார். "அச்சமும் நாணும் மடனும் முந்துறுத்த, நிச்சமும் பெண்பாற் குரிய என்ப" என்பது தொல்காப்பியம். "காமத்திணையிற் கண்ணின்று வரூஉம். நாணும் மடனும் பெண்மைய" என்றும், "உயிரினும் சிறந்தன்று நாணே நாணினும், செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்றெனத் தொல்லோர் கிளவி புல்லிய நெஞ்சம்" என்றும், "உயிரும் நாணும் மடனுமென்றிவை, செயிர்தீர் கற்பின் நால்வர்க்கும் உரிய" என்றும் பலவிடத்தும் தொல்காப்பியர் நாணமும் மடனும் கற்பும் இன்றியமையாது அமைந்திருத்தலை எடுத்தோதுகின்றார். மடன் என்பது தான் தேர்ந்துகொண்ட தனை எத்தனை இடையூறும் இடையிடும் எய்தினும் விடாமை. கற்பென்பது தன் மென்மைத் தன்மையைப் பெற்றோராலும், சான்றோராலும் நூல்முகத்தாலும் அறிந்து எக்காலத்தும், தன்னைப் பாதுகாத்தொழுகும் அறிவுடைமை. நாலாராய்ச்சியும் அகப்பட இக் கற்பென்னும் சொல் நிற்பதனை யறியாதார் தாம் வேண்டியவாறெல்லாம் கூறி, அதன் உண்மைப் பொருளை மறைத்து ஒழிந்தனர். "உலகந் தோன்றிய மேம்படு கற்பின் வில்லோர் மெய்ம்மறை" (பதிற். 59) எனக் காக்கைபாடினியார் என்ற பெண்பாற் புலவர், ஆடுகோட்பாட்டுச் சேரலாதனைப் பாடுதலால், கற்பினைக் கல்விமேல் நிறுத்திப் பண்டையோர் வழங்கியவாறு காணலாம். எத்துணை யிடுக்கண் வரினும் தம் கல்வி யறிவு மழுங்காதவரையே பண்டைத் தமிழறிஞர், "தொலையாக் கற்பு" (பதிற். 43, 80) என்று ஓதியிருக்கின்றனர். வேதங்களை "எழுதாக் கற்பு" (குறுங். 156) என்பர். ஆசிரியர் தொல்காப்பியனாரும் மகளிர்க்குக் கல்வி யறிவின் இன்றியமையாமையைக் கற்பென வாளா ஓதாது. "செயிர்தீர் காட்சிக் கற்பு" என்று கூறியருளினர். பிறிதோரிடத்தே இம் மகளிர்பாலுள்ள சிறப்புடைய குணம் கூறலுற்று, உயிரினும் நாணி

னும் சிறந்த கற்பினைக் கற்பென்ருேதாது அறிவு என்று நாட்டிக் கொண்டு, "செறிவும் நிறைவும் செம்மையும் செப்பும் அறிவும் அருமையும் பெண்பாலான" என்று ஓதினர். மகளிர்க்குத் தவத்தினும் கற்பே சிறந்ததென்பது பண்டையோர் முடிபு. இதனை அடியார்க்கு நல்லார், "புனமயிற் சாயற்கும் புண்ணிய முதல்விக்கும் என் திறம் உரையாதேகு" (சிலப். 11 : 199-200) என்பதன் உரையில் உரைப்பதால் இனிது உணரலாம்.

கணவனொருவனைக் கடிமணம் செய்து கொள்ளும் கடப்பாட்டினையுடைய இவள்பால் "கற்பும் காமமும் நற்பால் ஒழுக்கமும், மெல்லியற் பொறையும் நிறையும், வல்லிதின் விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும்" இவை போலுள்ள நலங்கள் பலவும் திகழ்கின்றன. தன் மனக்கினிய காதலன் ஒருவனைப் பெற்றதும் "அவன் வரம்பு இறத்தல்" (தொல்) தனக்கு அறமன்று என்பது இவட்குத் தெரிந்து விடுகிறது. "அவன் சோர்பு காத்தல் கடன்" (தொல்) இவட்கு, என்னும் கற்பு நெறி தானே புலனுகி விடுகிறது. அவன்பால் தவறு உண்டாகிய வழி, "தாய்போல் கழறி" அதனை உணர்வித்துத் "தழீஇக் கோடல்" (தொல்) என்னும் பெருந்தன்மை இவட்கே உரித்தாய் நிற்கிறது. இவ்வாறே தன் வயிற்றிற் பிறக்கும் மகனுக்கும் நல்லறிவு கொளுத்தும் நன்மகளாகின்ருள்.

> "ஈன்றுபுறந் தருதல் என்தலைக் கடனே,
> சான்ருே னாக்குதல் தந்தைக்குக் கடனே
> நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே
> வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
> ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக்
> களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே." (புறம். 312)

என்பது அவள் தன் அருமை மகனைத் தெருட்டும் செவ்வை நன்மொழியாகும்.

இன்ன நலங்கட்கு இடனாகிய தமிழ்ச்செல்வி பெதும்பைப் பருவம் கடந்து கணவனொருவனைக் கூடிக் கடிமணம் செய்து கொள்ளும் திறமும், அவனுக்கும் தனக்கும் உயிரொன்றிய காதலன்பை வளர்க்கும் திறமும் ஆராயுங்கால் மிக்க இன்பத்

தைத் தருகின்றன. இவை பெரும்பாலும் பெற்ரேரும் பிறரும் அறியாவகையில் நிகழ்தலின் இவ்வொழுக்கம் களவொழுக்கம் எனப்படுகிறது. இதனைக் காந்தருவ மணம்போலும் ஒருவகை மணம் என்பர். காந்தருவத்தில் மணந்தவர், பிறகு வேறே வரைவு செய்துகோட லின்றியும் மகப்பெற்றும் அமைவர். இஃது அவ் வியல்பினை யுடையதன்று. களவின்கண் காதல் சிறந்து முதிர்ந்து ஒருவரை யொருவர் இன்றியமையாத் தொடர்பெய்தி மேம்படுவதும், அக் களவொழுக்கம் வெளிப்பட்ட பின்பும் சிறித அதற்கு முன்பும், பெற்ரேரும் சான்ரேரும் அறிய மணம் செய்து கொள்வதும் சிறப்பாக உடையதாகும். ஆதலால், வடவர் கூறும் காந்தருவ மணம் வேறு; பண்டைத் தமிழ் நன்மக்கள் மேற்கொண்டிருந்த களவியல் மணம் வேறு. காதலர் இருவர் கொடுப்பாரும் அடுப்பாரும் இன்றித் தாமே தனித்துக் கூடி மனங்கலந்து அன்பு சிறந்து நிற்கும் அவ் வியைபு ஒன்றையே கருதி ஆசிரியர், "காமக்கூட்டம் காணும் காலைத் துறையமை நல்லியாழ்த் துணைமையோர் இயல்பே" என்று ஓதினர்.

இவ் வொழுக்கமே பெரும்பான்மையாக நிகழினும் சிறுபான்மை கொல்லேறு தழுவியும், பன்றியெய்தும் இவைபோலும் சில ஆண்மை தோற்றுவிக்கும் செயல்களைச் செய்தும் மேம்பட்ட ஆடவனுக்கு மகட்கொடை செய்தொழுகும் மணமுறையும் நிகழ்ந்திருக்கிறது. அதனைப் பின்பு காண்பாம். இனிக் களவுக் காட்சியிற் புகுவாம்.

இராவணாசுரனா ? இராவணேசுவரனா ?*

[காழி சிவ. கண்ணுசாமி பிள்ளை, பி. ஏ.]

அசுரர்

அரக்கர், அவுணர், இயக்கர், இராக்கதர், தானவர், நிருதர் போன்ற சொற்களெல்லாம் அசுரரையே குறிக்கும். இப்பெயர்களைக் கேட்டவுடனேயே இரும்பினுங் கரிய நிறம், தீக்கனலுங் கண்கள், புகை கக்கும் பேழ்வாய், வாள்போன்ற பற்கள், மலை போன்ற திண்டோள், செம்பட்டைமயிர் முதலிய சிறப்புகள் அமைந்த உருவங்களே, பொதுவாக நம் கண்முன் விளங்குகின்றன ; கடுமையுங் கொடுமையும், வண்மையும் திண்மையும், சோரமுங் கோரமும் நிறைந்த உருவங்கள் தாண்டவமாடுகின்றன ; ஆம், அசுரர் என்றால் இவர்கள்தாம் ; பஞ்சமா பாதகங்களுக்கும் உறைவிடமாகக் கருதப்படுகின்ற இவர்கள்தாம் ! அயனாற் படைக்கப்பெற்ற பதினெண் கணங்களுள் இவர்கள் ஒரு கணமென்றும், தேவர்களை எதிர்த்துப் போரிட்டு வரும் ஒருவகைச் சாதியினர் என்றும் நிகண்டுகள் இவர்களைக் குறிக்கும். தேவர்களை எதிர்ப்போர் என்ற ஒரு காரணத்தாலேயே தீயொழுக்கங்கள், அடாத செயல்கள், முறை கேடான நடத்தைகள் ஆகிய இழுக்கங்களுக்கெல்லாம், இவர்கள் உறைவிடமாகக் குறிக்கப்பட்டார்கள்போலும் ! வெண்ணிறம் வாய்ந்தோர் சுரர் ; கருநிறம் படைத்தோர் அசுரர் ! ஒளிக்கும், இருளுக்கும் எத்தனை மாறுபாடுண்டோ, அத்துணை மாறுபாடு இவர்களிடையே கற்பிக்கப்பட்டு வந்துளது. இந்த நிறச்சண்டை பண்டைநாட் சண்டையே போலும் !

ஈசுவரர்

இயன்ற வரையிற் கருநிறமில்லாமலும், கடவுட்பற்று மேலீட்டால் உடலை நலித்தும் வருத்தியும், மனைவி மக்களையும் உடைமையாதியவற்றையும் ஒரு பொருட்படுத்தாமலும், சமயத் துறையிற் புகுந்து பணிகள் புரிந்தும் வருபவர்களைச் சுவாமி

---

* காரைக்குடியில் நடைபெற்ற கம்பர் விழாவின் போது 31-3-42 நிகழ்த்திய சொற்பெருக்கு.

கள் என்றும், ஈசுவரனென்றும் கூறுவது உலக வியல்பு. ஈசுவரன் என்ற சொல் கடவுள் என்ற பொருளேயும், தலைவன் என்ற பொருளையும் பயக்கும். ஒருவனைக் கடவுளாகக் கருதாவிடினும் தலைவனாகக் கருதுவதில் பிழையொன்றுமில்லை. ஜெர்மனி நாட்டுத் தலைவன் அடால்-ப்-ஹிட்லர் பிறநாட்டு மக்களாய நம்போன்றார்க்கு அசுரனாகத் தோன்றலாம்; ஆனால் ஜெர்மனி நாட்டார்க்கு ஈசுவரனாகவே தோன்றுகிறானன்றோ? உலகத்தில் படைக்கப்பெற்ற பல்லுயிர்களுக்குந் தொடர்ந்து துயர் விளைவிப்பவனாகக் கருதப்பெறும் சனிக்கோளை, உலகோர் சனியசுரன் என்னாமல் சனீசுவரன் என்று கொண்டாடுவதேன்? அவன் தேவர்களுள் ஒருவனாகக் கருதப்படுவதனாலன்றோ?

அசுரர்கள் அறிவியலறிஞர்

அசுரர்கள் எல்லோரும் அறிவுக் கலைகளிலும், அணிமா, மகிமா, இலகிமா முதலிய எண்பெருங் கலைகளிலும் வல்லவர்கள்; செயற்கரிய காரியங்களை மிக எளிதாகச் செய்து முடித்தவர்கள்; தாம் மேற்கொண்ட எப்பெரிய காரியத்தையும் தேவர் உதவியோ, தேவ தேவர் ஆதரவோ இல்லாமற் செய்துமுடித்த அசகாயசூரர்கள். அதனாலன்றோ இன்றும் சிறந்த மாப்பெருஞ் செயல்களைச் செய்து முடிக்கும் ஒருவனை "அவனா! அவன் அசுரனாயிற்றே! இராட்சசன் ஆயிற்றே!" என்று புகழ்வது உலக இயல்பாயிற்று. இன்றும், என்றும் அறிவுச் செல்வமே சிறந்த செல்வமாகக் கருதப்பெற்று வந்துள்ளது. அறிவிற் சிறந்து அறிவுக் கலைகளுக்கு இருப்பிடமாயிருந்த அறிஞர்களை அசுரர்கள் என்று இழிப்பது நிரம்பிய அறிவோ? நிரம்பிய அறிவோ?

இராவணன்

இராவணன் பழுத்த சிவனடியான்; தன் வழிபடு கடவுளாகிய சிவபெருமானை நோக்கிப் பன்னூறாண்டுகள் வருந்தித் தவங்கிடந்து கோடிக்கணக்கான ஆயுளும், வரமும், வாளும் பெற்றவன்; படைத்தற் கடவுளாகிய பிரமனின் மானச புத்திரரோன்பதின்மரினும், சப்த ரிஷிகளினும் ஒருவராகக் கருதப்பெறும் புலத்தியரின் மரபில் வந்தவன்; சிவபெருமானின் இருக்கையாகிய கயிலை மலையையே வேரோடு அசைத்துப் பெயர்த்த

வன்; சிவபெருமான் காற்பெருவிரலா லூன்றப்பெற்று, அம் மலை யின்கீ ழகப்பட்டு வருந்தியவன்; பின் நாற்பெரும் வேதங்களில் ஒன்ருகக் கணக்கிடப்பெறும் சாம வேதம் பாடி விடுதலை பெற்றவன்; செயற்கரிய இச் செயலைச் செய்ய முயன்றமை கருதித் தேவர்களாலும், தேவதேவர்களான மூவர்களாலும், சைவசமயப் பெருங் குரவர்களாலும் போற்றப் பெற்றவன்; சிவபிரானுகிய தன் குலதெய்வத்தையும், அருட்கடலாகிய உமை யையும், அவ் வுமையின் அண்ணனென்றும் ஆண் அவதாரம் என்றும் கருதப்பெறும் திருமாலையுந் தவிர, ஏனைத் தேவர்களை யெல்லாம் உண்மைத் தேவர்களாகக் கணக்கிடாமல் அவர் களைத் தனக்குப் பணிசெய்யுமாறு அமர்த்திக்கொண்டவன்; (தெய்வ ஆற்றல் வாய்ந்தவர்களாக எண்ணப்பெறும் அத் தேவர் களும் வேறு வழியில்லாமலோ, தேவதேவர்களின் அருள் நோக்கிற் கிலக்காகக் கொடுத்து வையாமையாலோ, பல்லா யிரம் ஆண்டுகள் இராவணனுக்குத் தொண்டுபுரிந்து வந்துளார் கள்). இத்தகைய பேராற்றல் வாய்ந்த ஒருவன், கயிலைமலை போலத் துளங்காத இயல்பு வாய்ந்த சிவபிரானையும் தன் அன் புத் தவமாகிய கயிற்ருற் பிணித்தசைத்தவன்; சிவபிரானின் பெருவிரல் ஊற்றமாகிய சத்திநிபாதம் பெற்றுச் சாமவேதம் இசைத்த பெரியோன் இராவணன் அசுரனு? ஈசுவரனு?........ அசுரனென்றுதான் வான்மீகர் தீட்டினுர்; வான்மீகரோ வரகவி!

இனித் தமிழிலக்கியத் தெய்வமாகக் கருதப்பெறும் கம்பர் தம் அரும் பெரும் பனுவலாகிய கம்ப ராமாயணத்திலிருந்து, புறக்கூற்ருயில்லாமல், பொய்யறியாப் புலமையோனுன அனு மான், நேரிற் சென்று கண்டதாகக் கூறும் அகக்கூற்றுகளைக் கொண்ட கடல் தாவு படலம், ஊர்தேடு படலம், நிந்தனைப் படலம், காட்சிப் படலம், முதலியவற்றிலிருந்து இராவணனது சிறப்புப் பண்புகளைச் சுருங்கிய அளவில் ஆராய்வோம்.

இலங்கை

இலங்கையைச் சேரக் கருதி அனுமான் தென் கடற்கரையி லுள்ள மகேந்திர மலையின்மீதேறிப் பேருருக்கொண்டான்;

வானுலகைத் துருவி நோக்கினான்; பின்னர்ப் பார்வையைக் கீழே செலுத்தினான்; கண்டனன் இலங்கை மூதூர்! நறுமணம் வீசும் கற்பகச் சோலைகள்; முத்தும் இரத்தினமும் நிறைந்த மாடமாளிகைகள்; பொன்மயமான வட்ட மதில்; ஒப்பரிய வெற்றி மதில்வாயில்; நாம் முன் கண்டது தேவருலகமாயின், இது அதன் கண்ணாடிச் சாயையோ என்று கருதினான்.

"விண்ணிடை யுலகமென்னு மெல்லியன் மேனி நோக்கக்
கண்ணடி வைத்த தன்ன இலங்கை"

(கடல்தாவு படலம்-91)

என்று கண்டான். வானுலகிற்கு நேராகக் கீழே ஒரு பெரிய நிலக்கண்ணாடி வைத்தால், அக் கண்ணாடியில் வானுலகம் எவ்வாறு கவினுறத் தெரியுமோ, அவ்வாறு தெரிந்ததாம் இலங்கை! நன்கு நோக்கினான்; வியந்தான்; அந்த வானுலகினும் சிறந்ததாகவன்றோ தெரிகிறது! என்று இறும்பூதெய்தினான்.

நன்னக ரதனை நோக்கி நளினக்கை மறித்து நாகர்
பொன்னக ரிதனை யொக்கு மென்பது புல்லி தம்மா!

(கடல்தாவு படலம்-92)

என்று முடிவு செய்தான்! எல்லா உலகங்களையும் வென்று கீழ்ப்படுத்தி ஆண்டுவருபவனான இராவணன் இவ் விலங்கையைத் தன் இருப்பிடமாகக் கொண்டமையினாலேயே இதற்கிணையான வேறூர் இல்லை இல்லை என்று காரணமுங் கற்பித்தான்!

"அந்நகர் இதனினன்றே அண்டத்தை முழுதும் ஆள்வான்
இந்நகர் இருந்து வாழ்வான் இது அதற்கேது என்றான்."

தேவருலகைத் துறக்கமென்று கூறுதல் மடமை! துறக்கத்திற்குரிய உண்மைப் பண்புகளெல்லாம் நிறைந்து விளங்கும் இந்த இலங்கை மூதூரின்முன் பொன்னகராகிய துறக்கம் நரகமேயாகும்!

"நரக மொக்குமால் நல்நெடுந் துறக்கம் இந்நகர்க்கு"

(ஊர்தேடு படலம்-14)

அன்பர்களே! துறக்கத்தினுஞ் சிறந்த இத்தகைய மூதூரை ஆண்டவன் அசுரனா? ஈசுவரனா? வான்மீகியார் அசுரனென்று தான் கூறினார்; அவரோ வரகவி!

கடலரண்

மகேந்திர மலையிலிருந்து இலங்கையை நோக்கிக் கடல்மீது தாவுகிறான் அனுமான்; பாதித் தொலை வானூர்திபோற் கடந்து விட்டான்; அப்பொழுது யாரோ தன்னைப்பற்றி யிழுப்பது போல் உணர்ந்தான்; ஆ! தன் உருவத்தின் நிழலைப் பற்றி யன்றோ ஒரு பெண் இழுத்தாள்! ஆலகால நஞ்சினை யொத்த வள்; கார்மேகத்தை யொத்த நிறத்தினள்; துண்டப் பிறை போன்ற கோறைப் பற்களுடையாள்; யானைத்தோல் போர்த்த வள்; அங்கார தாரை! இலங்கை மூதூர்க் கடலரண் காவலாளி யான பேராக்கி! அவள் தன் முன் நிற்கக்கண்டான் அனுமான்; திறந்த அவள் வாயினூடே பாய்ந்து வயிற்றைப் பீறிக்கொண்டு வெளியே வந்தான்!

அன்பர்களே! அப் பெருங் கடலைத் தாவவல்லவன் அனுமா னன்றி வேறலன் என்பது காப்பியக் கூற்று; அட்டமா சித்தி களில் வல்ல அத்தகைய ஒருவன் கடல்தாவி ஒருகால் வர நேரிட்டாலும் அவனையுந் தடுக்கும் ஆற்றல் வாய்ந்த காவலாளி யொருத்தியை இராவணன் முன் யோசனையுடன் அமர்த்தி யிருந்தான்! மேற்செல்லும் பொருள் கண்ணிற் காணமல் உயரச் செல்வதாயினும் அதன் நிழலைப்பற்றி யிழுக்கும் ஆற்றல் வாய்ந்த காவலாளியை அமைப்பது அறிவுடைமைச் சிகர மன்றோ? அனுமான் உயரப் பறந்து சென்றது வானூர்தியை ஒப்பதாயின், அதன் நிழலைப் பற்றியிழுப்பது காந்தக் கவர்ச்சிப் பொறி (Magnetic device) ஒன்றை ஒப்பதாகாதோ! இவ்வாறு கருதி அமைக்கும் ஆற்றல் வாய்ந்த அண்ணல் அசுரனும்; ஈசுவரனல்லனும்; வான்மீகியார் கூறுகிறார்; அவர் ஒரு வரகவி!

மதிலரண்

அங்கார தாரையை முடித்து மேற்சென்று இலங்கை மதிற் புறத்தமைந்த ஒரு பவளக் குன்றின்மீது குதித்தான் அனுமான்; பெரியதொரு மதிலரண் தன்முன் மூதூர் முழுதையும் வளைத்து நிற்கக் கண்டான். பொன்மயமான கலசங்கள்; போர்க் காலத்தே உள்ளிருந்தபடி எதிரிகளின்மீது அம்பெய்வதற்கும், எறி கருவிகள் எரிவதற்கும் ஏற்ற ஏப்புழைகள்; அவ்வாறு

எறிவோர் எதிரிகளின் போர்க் கருவிகளுக்குத் தப்பிக்கொள்ளு மாறு காப்பாக அமைந்த ஞாயில்கள் ! ஆ! எத்தகைய மதில் !

கறங்கு கால்புகா கார்புகா கதிர்புகா மறலி
மறம்புகாது இனிவானவர் புகார் என்கை வம்பே

(ஊர்தேடு படலம்-23)

ஒப்பரிய இம் மதிலுக்குச் செப்பரிய வேலைப்பாடு அமைந்த ஒரு கோபுரம்; எண்பத்து நான்காயிரம் யோசனை உயர்வுள்ள தென்று கணக்கிடப்பெற்ற மகாமேருவும் வெட்கும்படியாக அதனினும் உயர்ச்சி மிக்கது அக் கோபுரம்! அக் கோபுர வாயி லின் கால்கள் தேவர்கள் தம் வானுலகத்திற்கு ஏறிச்செல்லு மாறு அமைத்துக்கொண்ட ஏணிக்கால்களோ? அன்றி வானுல கங்கள் ஏழும் நிலைதவறி வீழாமல் தடுக்க அமைந்த நிலத் தூண்களோ? இல்லை, கடல்நீர் முழுவதும் புகுந்து ஓடுவதற் கமைந்த மடைவாயோ! என்று அனுமான் வியக்கிறான். அக் கோபுர வாயிலின் வழியே உலகத்துள்ள உயிர்களெல்லாம் ஒரே காலத்தில் ஒன்றுகூடி, ஒருசேர அஃதாவது ஒருவர் பின்னொரு வர் என்ற கட்டுப்பாடின்றி, ஒரே கூட்டமாக உட்செல்லலா மாம்!

"எழுலகின் வாழுமுயிர் யாவையு மெதிர்ந்தா
லூழின் முறையன்றி உடனே புகுதலுண்டே"

(ஊர்தேடு படலம்-67)

இப் பெரிய மதில்வாயிலுக்கு எண்ணற்ற காவலர்கள்; அவர் களுக்கெல்லாம் தலைமையாக இருந்து தனிக்காவல் புரிபவள் இலங்கைமாதேவி! எட்டுத்தோளாள், நான்கு முகத்தாள்; உலகேழையுந் தருவிப்பார்த்து வரும் ஆற்றல் வாய்ந்தவள்; சுழல்கண்ணாள்! வலிமை மிக்க இக் காவலாளியை அனுமான் வென்று மதிலைத் தாவி உட்புகுகின்றான். சிறந்ததொரு மதி லரணை இவ்வாறு சூழ்ந்தமைக்கவல்ல அறிவாளியான இராவ ணன் அசுரனும், ஈசுவரனல்லனும்; வான்மீகியார் அசுர னென்றுதான் கூறினர்; வான்மீகி வரகவி!

இலங்கை மூதூரமைப்பு

அந்திவேளையில் உட்புகுந்த அனுமான் அப்படியே வியப்பினால் அயர்ந்துவிட்டான்; உட்புறம் எழுநூறு யோசனை அகன்றிருந்த அந் நகரம் மூன்று பகுதியாயமைந்திருந்தது; புறநகர், இடைநகர், அகநகர் என்ற அம் மூன்றிற்கும் இடையே பெரும் அகழிகளும், சோலைகளும் நந்தவனங்களும் கணக்கில; மக்களும் உவவனங்களும் எண்ணில!

வானும் நிலனும் பெறுமாறினி மற்றுமுண்டோ
கானும் பொழிலும் இவை செங்கன கத்தினுலும்
ஏனும் மணியாலும் இயற்றிய வேனும் யாவுந்
தேனும் மலரும் கனியுந் தரச்செய்த செய்கை.

(ஊர்தேடு படலம்-19)

பொன்மணிகளா லியற்றப்பெற்ற செயற்கைக் காடுகளும் சோலைகளும் இயற்கை மரங்கள் போலவே, தேன், மலர், கனிகளைத் தருகின்ற விந்தை இந் நகரத்திலன்றி மற்றை நிலவுலகத்தினும் வானுலகத்தினும் எங்குமில்லையாம். அன்பர்களே! பொன் மலர் நாற்றமுடைத்தாதலே அரிதென்று கருதும்போது, பொன் மரங்கள் தேனும் மலருங் கனியுந் தருவதாம்! என்னே இராவணனது செய்தொழிற் சிறப்பு! இவையன்றி உலக மூன்றிலும் உயர்வாகக் கருதப்பெறும் பொருள்களெல்லாம் இம் மூதூருழைச் செறிந்திருக்கக் கண்டான் அனுமான்.

இலங்கைப் புறநகர்

மாடுகள் கட்டப்பட்ட ஆத் துறு சாலைகள், யானைக் கூடங்கள், தேர் நிலயங்கள், குதிரைச்சாலைகள், அரக்கியர் ஆகாய கங்கை நீராடும் அழகிய பூஞ்சோலைகள், நடன சாலைகள், பளிங்குக்கல் மயமான திண்ணைகள், கரும்பாலைகள், கோடி ஞாயிறுகள் ஒன்ருகத் திரண்டு ஒளி வீசுகின்றமைபோல ஒளி காலும் மாடமாளிகைகள், மிலேச்சர் இல்லங்கள்; எழுயோசனை தொலை அகன்றுயர்ந்த கும்பகர்ணன் துயிலும் மண்டபம், விபீஷணன் இல்லம், இந்திரசித்து, அட்சகுமாரன் முதலியோர் மாளிகைகள்,

" மாட கூடங்கள் மாளிகை யோளிகை மகளி
ராடரங்குகள் அம்பலம் தேவாலயங்கள்
பாடல் வேதிகை பட்டி மண்டப முதற்பலவு
நாடி எகினன் " (அனுமான்).

(ஊர்தேடு படலம்-133)

இஃது இலங்கைப் புறநகரமைப்பு! இனி,

இடைநகர்

அனுமான் கடலனைய நடு அகழியைக் கடந்து இடைநகர் அடைந்தான். பன்னிரண்டு யோசனை தூரமுள்ள மூன்று லட்சம் தெருக்களை யுடையது அவ்விடைநகர்!

" மற்றோர் தேயத்தார் தேயஞ்
சேறல் தெருவிலோர் தெருவின் சேறல் "

(ஊர்தேடு படலம்-35).

ஒரு தெருவை விட்டு மற்றோர் தெருவிற்குச் செல்லுதல், ஒரு நாட்டிலுள்ளவர்கள் பிறிதொரு நாட்டிற்குச் செல்லுதல் போலாம்! இத்தகைய தெருக்களில் கணக்கற்ற வீடுகள்! இது இடைநகர்! இனி

அகநகர்

இவ் விடை நகரையும், அதைப் பிரிக்கும் அகழியையுங் கடந்து அகநகரை அடைந்தான் அனுமான். அங்கேதான் இராவணனது திருமாளிகை இருந்தது. பற்பல போர்களிற் சிறைப்படுத்திவந்த உரிமை மகளிர் வீதிகள், இயக்கியர் வீதிகள், நான்கு கோடி அரக்கியர் வீதிகள், சித்தமாதர் வீதிகள், வித்தியாதர மகளிர் வீதிகள், பட்டத்தரசியான மண்டோதரி யின் மாளிகை—இவற்றிற்கு நடுவே அமைந்திருந்தது இராவணன் அரண்மனை!

போரி யற்கை இராவணன் பொன்மனை
சீரி யற்கை நிரம்பிய திங்களாத்
தார கைக்குழு விற்றமு வித்தொடர்
காரி யற்குறை வாமிட நண்ணினன்.

(ஊர்தேடு படலம்-167)

அவ் வகநகரிடையே மிகப் பெரியதாய் பொன்மயமா யமைந்த இராவணன் அரண்மனை, கலைநிரம்பிய பூரணச் சந்திரன், அவன் மனைவியர்களெனப்படும் நட்சத்திரங்களினிடை விளங்குவதை யொத்திருந்ததாம். இந்தத் திருமாளிகையைக் கரந்துறை கோயில் என்று கூறுகிறுர் கம்பர் பெருமான்! ஏன்? அகத்தே வசிப்பவர் புறத்தே செல்லுதலும், புறத்தே வாழ்பவர் அகத்தே செல்லுதலும் எளிதில் முடியாது; இன்ன இடத்தில் அஃது இன்ன தன்மையதாயுள்ளதென்று புறநாட்டவர் எளிதிற் கண்டுகொள்ள முடியாது; அவ்வாறு அமைந்திருந்தது அவ்வரண்மனை யாதலின்.

அன்பர்களே! இத்தகைய நகரமைப்பு நாகரிக மிகுந்தவர்களாகக் கருதப்பெறும் இக் காலத்தாராலும் மனத்திடை எண்ணவுங் கிடக்கின்ற தோன்றுமோ? ஒருங்கே எல்லா வகையான நாகரிக நல வசதிகளும் வாய்ந்ததாக இச் சீரிய நகரமைப்பை அமைத்து அரசாண்ட இராவணன், அசுரன் தானும்; ஈசுவரனல்லனும்! வான்மீகியார் கூறினுர்! அவரோ வரகவி!

பொங்கல் விருந்து!

[புத்தனேரி ரா. சுப்பிரமணியன்]

1. செம்முடிச் சேவல்க ளே!-தின்னச்
செந்நெல் விதைதரு வேன்;
கும்பலாய்த் தைமுதல் நாள்-விடியக்
கூவி எழுப்பிடு வீர்!

2. சோலை மரக்கிளி யே!-பொங்கற்
சோறுண்ண வாரா யோ?
பாலைப் பொழிபசு வே!-புதுநாட்
பாரதிந் துள்ளா யோ?

3. சின்னஞ் சிறுகுயி லே!-தோகைச்
சிருடை யாய்மயி லே!
இன்னிசை யாடலு டன்-பொங்கல்
இன்னமு துண்ணுவ மே!

4. காகமே! உன்இனத் தைக்-கூவிக்
கட்டாயம் நீவரு க!
பாசமாய்ப் பாலரு டன்-கூடிப்
பாலுடன் சோறுண்ணு வோம்!

5. நாவுக் கினிய சுவைக்-கரும்பும்
நல்ல பழவகை யும்
பூவும் பனங்கிழங் கும்-புதுநாள்
பூத்த சிறப்பிவை காண்!

6. செந்நெல் நிறைநாழி-திருவைச்
சேர்க்குந் திருவிளக் காம்
மன்னிய மஞ்சட்குலை-பொங்கலின்
மங்கல நற்குறி யாம்.

7. நாட்டின் வளங்கொழிக் கும்-உலகில்
நல்ல தமிழ்செழிக் கும்!
வீட்டினிற் பொங்கல்இன் பம்-விருந்து
வேண்டி யுணவளிப் போம்!

காலம்

[முருக மாணிக்கனார்]

இப் பரந்த உலகின்கண் திரண்டு வாழும் பல உயிர்வகைகளுள்ளும் விழுமிய பிறவியாகக் கருதப்படுவது மக்கட்பிறவியேயாகும். மக்கள் ஏனைய உயிர்களைக் காட்டிலும் சிறந்த அறிவு பெற்றிருப்பதனாலன்றோ அவர் உயர் பிறப்பினராக விளங்குகின்றனர். இங்ஙனம் அறிவினால் மேம்பாடடைந்த மக்கள் தம் அறிவின் துணையால் நேரம் வாய்த்த போதெல்லாம் தம் அறிவிற் கெட்டியவாறு இவ்வுலகில் நிகழ் பொருள்களையும் பொருள் வேறுபாடுகளையும் ஆராய்ந்தறிந்து வருகின்றனர்.

இவ்வாறு உலகில் நிகழும் பற்பல பொருள்களை ஆராய்வோர் பலரேயாயினும் அவற்றின் அடிப்படைக் காரணங்களைக் கண்டோர் யாவரும் இல்லையென்றே கூறிவிடலாம். இம் மூல காரணங்களைக் கண்டறியும் ஆற்றலின்மைக்குக் காரணமாய் நின்று, (length) (breadth) (thickness) நீளம், அகலம், கனம் எனப்படும் அளவுகளால் அளவிடற்கரியதாய், மற்றும் அம் மூன்று பொருள்களுக்கும் முதற் காரணமாக நின்று மனிதனால் இதுவரை ஊடுருவிப் பார்க்க முடியாததாய் இருப்பது காலம் எனப்படும் ஓர் அரிய பொருளேயாம். காலத்தின் இத்தகைய பண்பினை இனிச் சில எடுத்துக் காட்டுக்களால் கண்டறிவோம்.

உலகில் உயிர்கள் இனிதே வாழும் பொருட்டுத் தன் வாழ் நாளைக் கழிக்கும் அரசியல் சூழ்ச்சியாளன் ஒருவனை நோக்குவோம். அவன் நேற்று நடந்த இன்னல்களைத் திருத்துகிறான். இன்று அவன் பல்வேறு வாயில்களை உண்டு பண்ணுகிறான். அதுவுமன்றி அவன் நாளைய தினம் உலகம் நன்கு ஓங்க வேண்டுமென்று உழைக்கிறான். அதாவது, அவன் தற்காலத்தில் (present) செய்யும் செயலானது இறந்த காலம் (Past) ஒன்று இருந்ததனால் ஏற்பட்ட வினையாகி எதிர்காலத்தில் (future) முற்றுப்பெற வேண்டிய வினைவாகின்றது. அதாவது, இறந்தகால நிகழ்ச்சிகளே அவனுடைய தற்காலச் செயல்களுக்குக் காரணமாக நிற்பதாகும். இங்கு எதிர்காலமும், இறந்த காலமும் இல்லையேல் அந்த அரசினனுக்கு நிகழ்காலமுமில்லை.

அஃதாவது, நிகழ்காலத்தில் அவன் தன் புலன்களால் ஆக வேண்டிய வினை யாதுமின்றித் தான் உலகின்கண் தோன்று வதற்கே காரணமின்றிப் போய்விடுகிறது. இவ்வுலகம் எதிர் காலம் ஒன்று இல்லாமல் இன்றே அழிந்துவிடுமே யாகில், உலகை எதிர்காலத்தில் செழிப்புற்றிருக்கச் செய்யவேண்டும் என்ற எண்ணம் இல்லாகி அவ்வினைஞன் தற்காலத்தில் செய லழிந்து இருப்பான். ஆகலின் காலமென்னுமோர் அளவில்லை யேல் இவ்வுலகின்கண் தோற்றும் பல பொருள்களுக்கும் அவை களின் தன்மை குலைந்து ஒழிந்துபோய்விடுகிறது.

ஒருவர் காலை எட்டு மணிக்கு ஒரு பாத்திரத்தில் நீர் ஊற்றி அரிசி போட்டு அடுப்பில் வைப்பதாக எண்ணிக்கொள்வோம். ஒன்பது மணிக்கெல்லாம் அடிசிலாக மாறிவிடுகிறது. இதனானே அப் பாண்டத்திலிட்ட நீர் சற்றேறக்குறைய எட்டேகால் மணிக் கெல்லாம் வெப்பமேறிப் பிறகு 8½ மணிக்கெல்லாம் மிக்க கொதிப்பெடுத்து, நீர்ப்பொருளாக நின்ற அந்நீர், காற்றுப் பொருளாகிய நீராவியாக மாறி, அதன்கண் இருந்த அரிசியை அடிசிலாக்கிக்கொண்டிருந்தது. ஒன்பது மணிக்கெல்லாம் அரிசி முழுவதும் நல்ல அடிசிலாக மாறி நின்றது என்று உணர்கி றேம்.

இனி இறைவனிடமிருந்து நாம் ஏதோ ஒரு மாய வல்லமை யைப் பெற்று இப்படி 8 மணியிலிருந்து 9 மணி வரை முன் சென்ற காலத்தைப் பின் செல்ல வைக்கும் திறமுண்டேயானல் என்ன நிகழும்? முற்றும் திருந்திய அவ்வடிசிலானது சிறிது சிறிதாக அரிசியாக மாறுபாடடைந்து பின்பு 8¾ மணிக்கெல்லாம் பாதி அடிசிலாகவும், பாதி அரிசியாகவும் ஆக, நீராவியாக மாறு பட்டு வெளிச்சென்ற நீர் மீண்டும் தனது நீர்த் தன்மையைப் பெற்று அப் பாத்திரத்தினுள் நுழைந்து 8¼ மணிக்கெல்லாம் முழு அடிசிலும் அரிசியாகி, வெளிச்சென்ற நீராவியனைத்தும் நீராகி அப் பாண்டத்தில் கொதிப்பு நீரும் அரிசியுமாக நிற்கும். பிறகு 8 மணிக்கெல்லாம் அது குளிர்ந்த நீராகி அம் மனிதர் அதை அடுப்பிலிட்ட நிலையில் நின்றதாகும்.

இது மிக வேடிக்கையாகவும், நகைக்கிடமாகவும் தோன்றி னும் இதில் பெரியதோர் உண்மையுள்ளது. அஃதாவது அந்

நீரிலிட்ட அரிசி, காலமானது நீண்டுழி அடிசிலாக மாறிற்று என்பதாம். அவ்வரிசியை அடுப்பிலிட்ட காலத்தோ காலமானது நீண்டு மூன்றுக்கு, அதாவது 9 மணிக்கு, செல்லாமல் 8 மணியிலேயே ஒரு முடிவு பெற்றதுபோல் நின்றுவிட்டிருந்தால் வினைகள் யாவும் 8 மணியில் இருந்த அளவிலேயே நின்றதாகும். அதாவது, அவ்வரிசியானது அடிசிலாக மாறியிராது.

இவ்வுண்மையானது நாம் நாடோறும் காணும் இமைப் படங்களினின்று (snap shots) நன்கு விளங்கும். இமைப்படமானது அசைகின்ற பொருள்களை மிக மிகக் குறுகிய காலத்தில் எடுக்கப்படும் ஒரு படமாகும். அவ்வசையும் பொருள் மணிக்குப் 10 அடி தூரம் செல்கிறது என்று வைத்துக்கொள்ளுவோமேயாகில் அப்பொருள் மிகக் குறுகிய காலமாகிய $\frac{1}{1000}$ விநாடியில் சற்றேறக்குறைய இடம் விட்டே பெயர்ந்திராது என்றே கூறலாம். ஆகலின் அதை $\frac{1}{1000}$ விநாடிக்குள் ஒரு படம் பிடித்தால் அசைவின்றி நிற்பதுபோல் காண்கிறது. ஏன் இங்ஙனம்? அப்படத்திற்குக் கால அளவானது மிகமிகச் சிறிய $\frac{1}{1000}$ விநாடியேயாகலின், செயலுள்ள பொருள்களும் செயலற்றனவாய்த் தோற்றின. செயலானது காலமென்னும் பரப்பில் நிகழ்வதொரு பொருளேயாம்.

காலத்தின் இயல்பு

"காலப் போக்கு என்பது இன்னதென்று தொட்டு அறியப்படாத ஓர் இயற்கை வாய்ந்தது; அஃது அக் காலத்து மக்கள் இயற்றும் நூல்களிலும், கொத்து வேலைகளிலும், உடைகளிலும், அவர்கள் நடாத்தும் வாணிக வாழ்க்கையிலும், அவர்கள் அமைக்குந் தொழிற்சாலைகளிலும் எல்லாந் தன் அடையாளத்தைப் பதிய இடுகின்றது......ஒரு புலவனும் ஒரு கால இயற்கையின் வழி நின்றே நூல் எழுதுபவனாவன். அக் கால இயற்கை அல்லது அம் மக்கள் ஒப்புரவு அவன் எழுதுவனவற்றையெல்லாந் தன் உருவாக்கி அவற்றிற்குத் தன் நிறத்தை ஊட்டுகின்றது. இதனை நாம் கண்டறிவதற்கு அக் காலத்தின் பொது இயற்கையும், அதன்கண் அவன் குறிப்பிட்ட மக்கள் நடையினியற்கையும், அவன் இருக்கும் இடத்தின் இயற்கையும் இன்றியமையாது ஆராயற்பாலனவாகும்."

—வில்லியம் மிண்டோ.

(ஆசிரியர் மறைமலையடிகள் மொழிபெயர்ப்பு.)

தனித்தமிழ்க் கீர்த்தனைகள்

இராகம் - இரதிபதிபிரியா ; தாளம் - ஆதி.

பல்லவி

அருள் நலமே, உருவான நல்வாழ்வு ! (அருள்)

துணைப் பல்லவி

இனம் அளாவிய உலக வாழ்வு
ஒத்து நாடின் அகமலரும் ஓர் வாழ்வே ! (அருள்)

சரணம்

வாய்ந்து குலாவு மகாரும், எல்லா வகை
மக்க ளே,மனை யாள்,பொருள்
ஏய்ந்தும் நெகிழ்மனம் கொள்ளும் வழியில்லையோ
ஈகை நாவார்ந்த இன்சொல் நிலாவிய (அருள்)

—இளவழகனார்.

இராகம் - இரதிபதிபிரியா ; தாளம் - ஆதி.

பல்லவி

இனிநலமே தமிழ்மா மகளே, கேள். (இனி)

துணைப் பல்லவி

நினைவெ லாம்நி னைப்பரவ வேண்டி
நிகழ்வ தாதலால் குறைவ திலாமலே. (இனி)

சரணம்

தான் தனி யாம் தமிழ்த் தாய் நின தாள்பணி
தான்புரி வோம் தயங் கோம் இனி யாம்
தேங்குபுகழ் மிகச் சொல்லும் வளமில்லையோ
செஞ்சொல் நலம் பல செய்திடு வோம் யாம். (இனி)

—ஔவை சு. துரைசாமிப் பிள்ளை.

இராகம் - சாமா ; தாளம் - ஆதி.

பல்லவி

தமிழ்மொழியைப் போற்றுவோம்—நிம் (தமிழ்)

துணைப் பல்லவி

அமிழ்தினு மினியசெந் தமிழ்மொழிச் சுவையை நாம்
அருந்திடில் உளம் மகிழ் தெளிவைக் கொடுத்திடும் (தமிழ்)

சரணம்

பாவலர் நாவலர் பாக்கள் இசைக்கவும்
பண்புடன் பகர்வதற் கின்பந் தழைக்கவும்
காவல ருங்கண்டு கண்ணியம் செய்யவும்
கருத்துடன் வாழநல் அருள்மழை பெய்யவும் (தமிழ்)

நலம்பல கொடுக்குந்தென் மொழியிது போன்று
நானிலம் புகழுமோர் மொழியையுங் காணேம் ;
உலகினி லுயர்ந்தவர் தாழ்ந்தவ ரெல்லாம்
உரிமையு டன்கற்றுப் பெருமைகொண் டாடவே. (தமிழ்)

—மு. மு. தண்டபாணி தேசிகர்.

பிரிவாற்றுமை


1. திருச்சி செயின்ட் யோசேப் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் திருவாளர் மு. நடேச முதலியாரவர்கள் சின்னாட்களுக்கு முன் இறைவன் திருவடி நீழல் எய்தினர். இவர்கள் ஞானியாரடிகளின் மாணவர் ; சென்னை இந்து அறநிலைப் பாதுகாப்புக் கழகத் தலைவர் திவான்பகதூர் T. M. நாராயணசாமிப் பிள்ளை, B.A., B.L., அவர்கட்கு உற்ற நண்பருமாவார். திருச்சி மலைக்கோட்டையில் தமிழ் வகுப்பு ஒன்று வைத்து அதன் வாயிலாகப் பத்துப்பாட்டு, குமரகுருபரர் பிரபந்தங்கள் முதலியன பாடம் கூறி வந்தனர். இவர்கள் பிரிவு தமிழ்க்கே ஓர் இழப்பாகும்.

2. சென்னை வேப்பேரி, திருவாளர் வே. பா. கமலநாத முதலியாரவர்கள் பெரும்பிரிவும் இரண்டு கிழமைக்கு முன் நிகழ்ந்துவிட்டது. இவர்கள் கோயம்புத்தூர் திரு. A. T. திருவேங்கட முதலியாரவர்களின் மருகராவர். தமிழ்ப்புரவலர். தமிழறிஞர்பால் மிக்க அன்பும் நேயமுங் கொண்டு ஒழுகியவர். தூய பண்புடையார். செடிகொடி நூலாராய்ச்சியில் தனியான ஊக்கமும் செயல்முறையும் உடையவர்.

இத் திருவாளர்கள் இருவர் மறைவுக்கும் கழகம் பெரிதும் வருந்தி, உரியவர்கட்கு இரக்கந் தெரிவித்துக்கொள்கின்றது.

ஓர் எலிக் குடும்பம்

[காழி சிவ. கண்ணுசாமிப் பிள்ளை, பி. ஏ.]




1. அழகிய தோட்டம்
அழகிய மரங்கள் ;
மரங்கள் நடுவே
மாடி வீடு ;
சமையல் அறையில்
ஒரேவொரு எலி வளை.

2. தகப்பன் எலியும்
தாய் எலி ஒன்றும்,
மின்னி சின்னி
என்றிரு குஞ்சும்,
வளையில் குடும்பமாய்
வாழ்ந்து வந்தன.

3. மின்னிக் குஞ்சு
பெரியது, துடுக்கு ;
சின்னிக் குஞ்சு
சிறியது அடக்கம் ;
ஆயினும் இரண்டும்
அன்பாய் இருந்தன.

4. தந்தை எலியும்
தாய் எலியும்
ஒருநாள் இரைக்கு
வெளியே கிளம்பின ;
" அப்பா நானும் "
என்றது மின்னி.



5. " வேண்டா மின்னி !
வேண்டா நில்லு ;
தங்கை சின்னி
தனியாய் வருந்தும்
இருவரும் இருங்கள் "
என்றது தாய் எலி.


6. சின்னி கேட்டு
ஒப்புக் கொண்டது ;
" அம்மா சொற்படி
இருப்போம்" என்றது;
மின்னி பிடியாய்
முரண்டி நின்றது.

7. தந்தை எலியும்
 தடுத்து, " மின்னி !
வெளியில் பூனை
 பொறிகள் உண்டு ;
வளையை விட்டு
 வராதே " என்றது.

8. பெரிய எலிகள்
 போனதும், மின்னி
" நாமும் வெளியே
 செல்வோம்" என்றது;
தனிமை அஞ்சித்
 தொடர்ந்தது சின்னி.

9. வளையின் வெளியே
 வந்து நின்றன ;
எங்கும் நோக்கின ;
 யாரும் இல்லை ;
எதிரே கூடம் ;
 எங்கும் சாமான்.

10. " அச்ச மில்லையா
 அண்ணா உனக்கு "
என்றது சின்னி ;
 " அச்சமா அச்சம் "
என்று மின்னி
 எடுப்பாய்ப் போனது.



11. எதிரே இருந்தது
 ஓர் அல மாரி ;
கதவும் சிறிது
 திறந்து கிடந்தது ;
தாவி உள்ளே
 குதித்தது மின்னி.


12. தத்தித் தொத்திச்
 சின்னியுஞ் சென்றது;
கிண்ணம் நிறைய
 வெண்ணெய் இருந்தது ;
தட்டு நிறையத்
 தித்திப் பிருந்தது.

13. " வளையில் இருந்தால்
 என்ன கிடைக்கும் ?
இங்கே நிறையத்
 தின்னலாம் " என்று
துள்ளிக் குதித்து
 இரண்டுந் தின்றன.

14. " போதும் போதும்
 போவோம் வாநீ ;
அம்மா வந்தால்
 அடிப்பாள் வைவள் "
என்றது சின்னி ;
 இகழ்ந்தது மின்னி.

15. பக்கத் தில்ஒரு
மரவை இருந்தது ;
மஞ்சள் தூள்அதில்
நிறையத் தெரிந்தது ;
மூக்கை நீட்டி
மின்னி மோந்தது.

16. நீட்டிய மூக்கில்
நிறைந்தது மஞ்சள் ;
தப்பிக் கீழே
குதித்தது மின்னி ;
சின்னி துடித்துப்
பின்னே விழுந்தது.



17. மிளகு கவிழ்ந்தது
நெடி மிகுந்தது ;
ஆ ஊ என்று
தும்மின விம்மின ;
பூனை ஒன்று
மெதுவாய் வந்தது.

18. தடதட ஓசை
கேட்டதும், சிறுவர்,
மடமட என்று
உள்ளே வந்தனர் ;
கண்ட இரண்டும்
கலங்கித் திகைத்தன.

19. அருகில் சிறுவர்
நெருங்கி விட்டனர் ;
தா ! தா ! என்று
தாவிக் கிட்டினர் ;
மின்னியுஞ் சின்னியும்
அலறி உருண்டன.



20. உருண்டு சிறுவர்
காலிற் சிக்கின ;
மருண்டு அவரும்
உதறித் தள்ளினர் ;
அள்ளிச் சுருண்டு
அப்பால் விழுந்தன.


21. ஓட்டம் ! ஓட்டம் !
ஒரே ஓட்டம் !
மின்னி ஒருபுறம்,
பூனை ஒருபுறம் ;
சின்னி ஒருபுறம் ;
சிறுவர் ஒருபுறம் ;

22. அச்சம் ! அச்சம் !
ஒரே அச்சம் !
உடம்பு உதறல் !
உள்ளம் நடுக்கம் !
செய்வது யாது ?
என்று தவித்தன.

23. இதற்குள், இரைக்குப்
போன எலிகள்
வளைக்குள் வந்து
குஞ்சுகள் இன்றிப்
பதைப்புடன் திரும்பி
இடையிற் பாய்ந்தன.

24. எதனைப் பிடிப்பது?
எதனை விடுவது?
பூனைக்கு ஒன்றும்
புரிய வில்லை;
சிறுவர் இங்கும்
அங்கும் துள்ளினர்.

25. பூனை திகைத்தது
ஒருகொடிப் பொழுது;
சிறுவர் திகைத்தனர்
மறுகொடிப் பொழுது;
ஆயினும் எலிக்கு
அக்கொடி போதும்.



26. தப்பினேம் பிழைத்தோம
என்று குஞ்சுகள்
தத்தித் தெத்தி
வளையுள் நுழைந்தன;
தாயும் தந்தையும்
தொடர்ந்து புகுந்தன.

27. மின்னியும் சின்னியும்
வளையுள் நுழைந்ததும்
அஞ்சிப் பதுங்கி
நடுங்கி நின்றன;
தந்தையும் தாயும்
சீறி நோக்கின.

28. பெற்றோர் சொல்லைத்
தட்டி நடந்தது,
குற்றம் குற்றம்
பெரிய குற்றம்;
என்று குஞ்சுகள்
இரண்டும் நடுங்கின.

29. நடுங்கி நின்ற
மின்னியைத் தந்தை,
“ஒடுங்கி உள்ளிரு
என்றால், நீ ஏன்
வெளியிற் போனாய்?”
என்று கடிந்தது.

30. “இதுவே பாடம்
இவ்விரண் டிற்கும்;
போதும் பட்டது”
என்றது தாய் எலி;
இரண்டும் அதுமுதல்
திருந்தி மகிழ்ந்தன.

மதிப்புரை

பாரியூர் ஸ்ரீ கொண்டத்துக் காளியம்மை ஆற்றுப்படை :

ஆசிரியர் : வித்துவான் இ. கே. நடேச சர்மா ; லயோலாக் கல்லூரி, சென்னை. விலை அணா 5.

கோயம்புத்தூரை யடுத்த கோபிசெட்டி பாளையத்தின் அருகில், அதற்கு இரண்டு கல் தொலைவில் உள்ள பாரியூர் என்னும் பதியில் அமர்ந்து விளங்குங் கொண்டத்துக் காளியம்மையின்மேல் இவ்வாற்றுப்படை நூல் இயற்றப்பட்டுள்ளது. கொங்குநாட்டின் பெருமை, தமிழரின் பழக்க வழக்கங்கள், இக்காலத்துச் சில தமிழர் கருத்து, பாரியூரும் அதன் அயலும், அன்னையின் துதியும் ஆற்றுப்படையும் என்னும் ஐவகைப் பாகுபாட்டில் இந்நூல் இயன்றிருக்கின்றது.

பரிசில் பெறுதற்குத் தகுதி வேண்டாது, அயலவரை இந்நூல் ஆற்றுப் படுத்தியுள்ளது.

எளிய இனிய செம்பாகமான தமிழில் 376-அடிகளமைந்த ஆசிரியப் பாவில் கனிந்த நடையில் நூல் தெளிந்து காணப்படுகின்றது. நூலின உரைநடை யொன்றும் நல்ல நடையில் தக்காங்கு உரைநடைப்படுத்தி முகப்பிற் சேர்க்கப்பட்டிருக்கின்றது.

ஆசிரியர் உருவப்படமும், அம்மை கோயில் அதன் அறநிலைத் தலைவர் உருவப்படங்களும் ஆங்காங்கு இணைக்கப்பட்டு, நல்ல தாளில் நல்ல அச்சில் நூல் பிழையின்றி அழகாக அச்சிடப்பட்டிருக்கின்றது.

கோயிலிலுள்ள கல்வெட்டு, வேள் பாரியின் ஊர் இதுவென்பது, 'வெம்மை வேண்டல்' என்னுந் தொல்காப்பிய நூற்பாவின் பொருட் பேறு, தமிழரியல்புகள், கொங்குநாட்டின் நிலைமை முதலியவற்றைப்பற்றிய குறிப்புக்கள் இந்நூலில் அங்கங்கும் வந்திருக்கின்றன.

நூல், உணர்ச்சியும் இரக்கமும் எதுநடையும் வாய்ந்து சிறந்திருக் கின்றது.

வள்ளி வேட்கை : ஆக்கியோர் : கடையநல்லூர் உ. போ. முத்து ராமலிங்கம் பிள்ளையவர்கள், செவ்வேளகம், தூத்துக்குடி. விலை ரூ. 1.

இது செய்யுள் நூல். கந்தபுராணத்தைத் தழுவியது. ௩௬௩-பாடல்க ளால் ஆனது. சிறந்த சிறுகாப்பியம். செய்யுட்கள் சொல்லழகும் பொருளழ கும் வாய்ந்து கனிந்து தேனொழுக நிற்கின்றன. பாகுபாடுகளும் முறை களும் பொருட்கோப்புகளும் வியக்கத்தக்கவை. இலக்கியம் கவினித் துளும்புகின்றது. நடை தெளிவாகவும் ஆற்றொழுக்காகவும் மொழுமொழு வெனச் செல்கின்றது. தமிழ் அமிழ்தமா யுள்ளது. இவ் வினிய கவிஞர் தமிழகத்துக்கு ஒரு தேனருவி.

கவிச்சுவை என்னும் பெயரால் இக் காலத்தில் தமிழ்ச்சுவை கெடுக்கும் சிலச்சில புதுக்கவிகளாகிய புற்களினிடையே, இத் தீந்தமிழ்க் காப்பிய மலர் நறுமணம் பரப்பி அழகாக மலர்ந்துள்ளது. செய்யுளில் இதுகாறும் வெளிவாராத இனிய தமிழ்ச் சான்றோர் வரலாறுகள் பலவும் பிறவும் இவ் வாசிரியரால் அடுத்தடுத்து வெளிவருமாயின் தமிழ்க்கு ஆக்கமாகும்.

இவர் இந் நூற்றாண்டின் இனிய கவியெனத் திகழ்ந்து விளங்குக வெனத் திருவருளைப் பரவுதும்.

புதுவை இளைஞர் கழகம்

பதினொருவது ஆண்டுப் பெருவிழா

20-12-42 ஞாயிறு காலை 9-30 மணிக்கு மகாமகோபாத்தியாய **பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார்** அவர்கள் தலைமையிற் பெருவிழா தொடங்கிற்று. கடவுள் வாழ்த்தின் பின்னர் (கழகம்), திரு. ஆளவந்தார் அவர்கள் கழக ஆண்டறிக்கை படித்தனர். தலைவர் பண்டிதமணி அவர்கள் தம் தலைமையுரையில் கழகத்தின் தமிழ்த் தொண்டினைப் பாராட்டி அதன் நோக்கங்களையும் செயல்முறைகளையும் புகழ்ந்தனர். தொடர்ந்து பேசும் முறையில் கல்வியின் உயர்வைக் கூறிக் கலைமகளின் அருளைப்பெறும் நெறியை விளக்கித், தம் இன்சொல்லால், அறிவூற்றம் சிறந்த புதுவை மக்களுக்குப் பெருமகிழ்வு ஊட்டினார்கள்.

பின், வித்துவான் திரு மு. இராசக்கண்ணு முதலியார் B. O. L. அவர்கள், 'அமெரிக்க நாட்டு ஆங்கிலக் கவிஞர்' எனும் பொருள்பற்றிப் பேசினர். மணி அவர்கள் முடிவுரை கூறக் காலை நிகழ்ச்சி முடிவுற்றது.

மாலை 4 மணிக்குக் கூட்டம் மீண்டும் தொடங்கியது. 'மூவர் தமிழ்' எனும் பொருள்பற்றித் திருமதி காஞ்சனமாலை அம்மையாரும், 'கம்பரும் அவரது நூலறிவும்' என்பதைப்பற்றித் திரு. அமிர்தலிங்கனாரும், 'வள்ளுவர் வனப்பு' என்பதுபற்றித் திரு. வித்துவான் G. சுப்பிரமணியம் பிள்ளை M.A., B.L., அவர்களும், "தமிழர் நாகரிகம்" என்பதுபற்றித் திரு. வித்துவான் P. D. கண்ணப்ப முதலியார் அவர்களும் பேசினார்கள்.

தலைவரவர்கள் இடையிடையே ஆழ்ந்த கருத்துக்களை வடமொழி தென்மொழி ஆம் இருமொழிகளினின்றும் ஒத்து நோக்கித் துய்க்கும் முறையில் எடுத்துரைத்து அளவில்லா மகிழ்ச்சியில் யாவரையும் அழுந்தச் செய்தனர். கழகத் தலைவர் திரு. ஆளவந்தார் அவர்கள் முடிவுரை கூறக் கூட்டம் முடிவுற்றது.

N. B. இக் கழகம் செய்துவரும் தொண்டு மிகச் சிறந்ததொன்று. தமிழ்க் கல்லூரி ஒன்றினைத் திறந்து ஆக்க வேலை ஆற்றி வருகின்றது. இக் கழகத்திற்கு அறிஞர் பலரும் உறுதுணையாய் நின்று ஆவன புரிந்து மேலும் இதனை வளர்க்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

—கழக அமைச்சர்.



வித்துவான் பாரிப்பாக்கம்
கண்ணப்ப முதலியார்



வித்துவான் மு. இராசாக்
கண்ணனார், B.O.L.

ஸ்ரீ
செந்தமிழ்ச் செல்வி
திங்கள் வெளியீடு

சிலம்பு-௨௦]   சித்திரபானு—தை (1943)   [பரல்-ரு

சிவத்திரு ஞானியாரடிகள்

[சிவத்திரு ஞானியாரடிகள் முதலாண்டு நினைவு விழாவில் திரு. P. R. சாமிநாத முதலியார், M.A., L.T., பேசியது.]

அலகில் கலைத்துறை தழையவும், அருந்தவத்தோர் நெறி வாழவும், உலகில் வரும் இருள்நீங்கி ஒளி விளங்கவும், சிவம் பெருகவும், தீதகன்று உலகமுய்யவும், பொய்மை உலகில் மாயவும் ஆகிய சைவ சமயாசாரியர் நால்வரும் தோன்றினர். இத்தகைய வழிவழியடியரில் கடைசியாக நாம் கண்டவர் புலிசை சிவத்திரு ஞானியா ரடிகளாவர். திரு நாகேச்சுரத்து அண்ணாமலை ஐயர் என்பார்க்கும் பார்வதி யம்மைக்கும் தோன்றியவர். இளமைப் பருவத்தே புலிசை மடாலயத்து வந்து கல்வி கற்று வந்தார். தமது பதினாரும் ஆண்டில் பட்டம் ஏற்ருர். வேறொருவர் ஏற்றுக்கொள்ள இருந்ததை அன்றைய முன்னாள்தான் இவர்க்கென மாற்ற வேண்டியதாயிற்று. காரணம், மற்றொருவர் அப்போது மடம் இருந்த சுருங்கிய நிலையில்தான் ஏற்றுக்கொள்ள மறுத்தமையாலேயே. கல்வியில் தெலுங்கு, தமிழ், ஆங்கிலம், கன்னட முதலிய மொழிகளிலும் கலைகளில் இசை, மருத்துவம், கோள்நூல் முதலிவைகளிலும் தேர்ச்சி யுற்றவர்.

புலிசை, திருக்கோவலூர், ஆரணி முதலிய இடங்களில் மிகவும் உயர்ந்த மடாலயங்களைக் கட்டியுள்ளார். திருமுதுகுன்றம் என்னும் விருத்தாசலம் மடம் வேலை நடந்து கொண்டிருக்கிறது. செஞ்சிக் கடுத்தாற் போலுள்ள சிவகிரி எனும் மடத்திற்குச் சொந்தமான சிறு குன்று ஒன்றுண்டு. அங்கே

மடத்தைவிட்டு நீங்கியிருந்த சில நிலங்களை மீட்டுள்ளார். இத்தகைய அபிவிருத்தி இவர் காலத்தே ஏற்பட்டவையே.

நாடோறும் அவர் காலத்தில் நாம் மடத்துள் நுழைந்தால் கால வரையின்றி, குலவேற்றுமை பால் வேற்றுமையின்றிப் பொருள் எதிர்பாராத நிலையில் அவரவர் தகுதிக்கேற்ப பாடங்கள் சொல்லிக் கொடுக்கப்படும். காலை ஆறு மணிக்கும் பாடம் நடக்கும்; உச்சி ஒரு மணியிலும் சிலர் படிப்பார்கள்; இரவு பதினொரு மணிக்கும் பாடம் நடக்கும். இக் காட்சி என்றும் மாறுமல் அவர்கள் உள்ளவரை நடந்த காட்சிகளில் ஒன்றுகும்.

உபதேசம் செய்வித்தல், பாடம் நடத்துதல், வந்தவர்கள் ஐயங்களை நீக்குதல், அளவளாவல், ஞாயிறு மாலைதோறும் தவருது ஏதாவது சொற்பொழிவாற்றல், அங்கு வரும் புலவர்களை அவரவர் தகுதிக்கேற்ப ஆதரித்தல் ஆம் இவை எங்கள் மடத்தில் அறியக்கூடிய சாதாரண அநுபவங்களாகும்.

பல்லக்கில் பல கிராமங்கட்குச் சென்று சமய அறிவை வளர்த்த பெரியார் ஞானியாரடிகளாவர். வேற்று நாட்டினரும் வேற்று மதத்தினருமாகிய சில டென்மார்க் தேயத்திய பாதிரிமார்கள் இவரைக் கண்டு பேசி மகிழ்ச்சியுற்று புகைப் படம் எடுக்க விரும்பி அங்ஙனமே எடுத்துச் சென்று தங்கள் தேசத்தில் வெளிவரும் தாள்களில் தென்னிந்தியாவில் தற்போது கிறித்தவ மதம் விரைவில் பரவாததற்குக் காரணம் இவரே என அப் புகைப் படத்தை வெளியிட்டிருக்கின்றனர்.

இவர் அடிக்கடி கற்றுரைக் கூட்டி ஒரு பொருளைக் கொடுத்துப் பலரைப் பேசவைத்து (Debate) முடிவுகட்ட வேண்டும் என்று விரும்பினர். பட்டத்திற்கு வந்தபோது மூன்றே நூல்களிருந்த நூல் நிலயத்தை மிகவும் பெருக்கி அதன் மூலமாகப் பல வித்துவான்கள் தற்போது வெளிவருவதற்குரிய முயற்சிகளைச் செய்தார். இலவச மதப்பாடசாலை ஒன்று நடத்தி வந்தார். தற்போதும் நடந்து வருகின்றது. அது மிகச் சிறப்போடு நடத்தப்பட வேண்டும் என்பது அவர் கருத்து. ஆண்டவன் அருள் அங்ஙனமே அம் முயற்சியை முற்றுவிக்கவேண்டும்.

இவரிடத்து அடியேன் கண்ட சில சீரிய பண்புகள் எளிமை, நல்வார்த்தை, புன்சிரிப்பு, உதவி புரியுங் குணம், தான் எடுத்துக்கொண்ட வேலையை உறுதியுடனும் கடவுட்குப் பயந்தும் செய்யவேண்டும், எல்லோருக்கும் தன்னுலியன்றவரை கடவுள் நினைவுவரச் செய்யவேண்டும் என்றவைகளாகும். இறுதிக் காலத்தில் சொற்பொழிவுகளாக இருந்த இவரது பேச்சு உண்மையில் அருள்வாக்குகளாக மாறியது எல்லோராலும் உணரப்பட்டது.

சீமுக ஆண்டு வைகாசித் திங்கள் 4-ம் நாள் வியாழன் மூலநாள் தோன்றி சென்ற ஆண்டு தைப்பூச நன்னாளில் ஆண்டவன் அடியினை எய்தினர்.

---

*வாழ்த்து

ஞானியா ரென்றால் நமக்குத் திருப்புலிசை
ஞானியா ரென்றே நவில்வேமால்—ஞானியார்
தோற்றம் தமிழோ சுடரும் சிவநெறியோ
எற்ற உலகறியு மீங்கு.

கண்டிகையு நீறும் கவினும் உருளங்கே
தொண்டர் குழாம்சூழும் தோற்றமெங்கே—தண்டா
தெளிநில் தொடுத்துரைக்கும் இன்னுரைஎங் கேயோ
ஒளியுலகிற் காண்பேன்கொல் உற்று.

---

*இப்பாக்கள் குருபூசை விழாக் கூட்டத்தில் மகாமகோபாத்யாய பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியாரவர்களால் பாடப்பெற்றன.

கம்பரும் தமிழ்நாடும்

[வித்துவான் மு. இராசாக்கண்ணனார், B. O. L.
சிவத்திரு ஞானியாரடிகள் முதல் ஆண்டு நினைவு விழாவில் பேசியது]

சைவம் தழுவிய தலைவரவர்க்கும் பெரியோர்க்கும் என் வணக்கம். இக் கூட்டம் தமிழ் உருவாய்ச் சைவ நெறியின் பேரொளியாய்த் திகழ்ந்து என்போன்ற ஏழையருக்கும் அருள் புரிந்த பெரும் பெருமான் சிவத்திரு ஞானியாரடிகளின் நினைவினைப் பற்றிக் கூட்டப் பெற்றிருக்கின்றது. இச் சென்னைக்கு மும்முறை வந்து பன்முறை பல்லிடங்களில் தமிழறிவையும் தமிழ்க் குரவனும் தனி முதல்வனையும் பற்றிப் பேசிய அப் பெருந்தகையாரின் நினைவைக் குறித்துத் தென்னிந்திய சைவ சித்தாந்த சங்கத்தினர் கூட்டிய இக் கூட்டம் சிறப்பு நெறி செல்லும் செந்நெறிக் கூட்டமே. அடிகளின் நினைவை நினைத்தற்கெண்ணிய இச் சங்கத்திற்கும் இதன் செயலாளர் திரு. சுப்பையா அவர்களுக்கும் அடிகளின் திருவடித்தொண்டன் என்ற நெறியில் என் வணக்கங்களையும் நன்றியையும் அறிவிக்கின்றேன்.

கூட்டம் நிகழும் இவ்விடம் கந்தகோட்டத்து முருகன் முன்னர் ஆகும். இரவு பகலாய் முருகனை எண்ணிக் கரைந்து பன்னிருகைப் பெருமானும் அவன் பெயரையே வாய்விட்டுரைத்துத் தான் மறந்திடினும் தன் நா அவன் திருப்பெயரைப் புகலச் சிறந்து பழநிப்பெருமான் திருவடியிணைகளிலே பழநியம் கிரிச் சார்பில் அமர்தற்குரிய பெரும் பேறெய்திய பேரறிஞர் அவர்களுக்கு அம் முழுமுதல்வனாகிய முருகப்பெருமான் திருமுன்னரே கூட்டம் நிகழ்தல் மாபெரும் பொருத்தத்துடன் இறை இயைபையும் எடுத்துக் காட்டுகின்றது. அடியேற்கு உயிர்க்குயிராய் விளங்கும் அடிகளின் திருவடிகளை எண்ணிக் **கம்பரும் தமிழ்நாடும்** எனும் பொருள்பற்றிப் பேசலுறுகின்றேன்.

அரியதென அறிஞரால் சுட்டப்படும் மக்கட் பிறப்பெய்திய மாண்பு நமக்குண்டு. நாம் வெளியுலகப் பொருள்களைக் கண்டு கேட்டுண் டுயிர்த்துற்றறிய ஐம்பொறிகளைப் பெற்றிருக்கின்றோம். அவையே மெய், வாய், கண், மூக்கு, செவி என்பன. கண்கள் ஒரு பொருளைக் காண்கின்றன; காணும் தகுதி பெற்றுள்ளதாக விளங்கும் கண்கள் நள்ளிரவில் இருள்நிறைந்த

காலத்தில் விழிப்புறின் காணும் தகுதியை இழந்தனபோன்று திகைக்கின்றன. இந் நிகழ்ச்சி எதனல்? வேருெரு ஒளி காட்டும் பொருளைக் கண்கள் நமக்குக் காட்டும். ஒளி இல்லாக் காலத்துக் கண்கள் காட்சிப் பயனில் ஈடுபடுவதில்லை. இக் கண்களுக்கு மற்ருெரு இயல்பும் உண்டு. நாம் ஒரு பொருளைப் பார்த்துக் கொண்டிருப்பதாக மற்றவர்கள் எண்ணுவார்கள். நாம் அக் காட்சியில் கலப்பின்றி இருப்போம். 'இதைப் பார்க்கவில்லையோ' என்று அவர்கள் வினவுங்கால், 'இல்லை - நான் வேறு எண்ணிக்கொண்டிருந்தேன்' என்கின்ருேம். ஆதலின் நினைவில் அழுந்தி நிற்போரின் கண்கள் அலர்ந்த தாமரை போன்று இமைகள் திறக்க இருப்பினும் காணுதல் இல்லை என்பதை அறிகின்ருேம். இவ்வாறே ஐம்பொறிகளும்.

ஒவ்வொரு பொறியும் பயன்படுவது உள்ளத்துடன் கூடிய காலத்தில்தான்; கூடாத காலத்தில் அவை 'கோள் இல்பொறிகள்'. பொறிஉணர்வு மக்களிடம் எத்துணை அளவு அழுந்தி நிற்கின்றது? விட்டில் என்பதனை யாவரும் கண்டு கொண்டிருப்பர். அது எரியும் விளக்கைச் சிறந்ததொரு பொருள் எனக் காண்கின்றது. அதன் கண்களுக்கு விளக்கொளி பெருவிருந்து நல்குகின்றது; காணும் விட்டில் அக் காட்சியில் கலந்து மகிழும் எண்ணத்துடன் ஒளியில் மூழ்கிவிடுகிறது. கண் எனும் பொறியே அதன் கருத்தாய் உள்ளமாய் உணர்வாய் உயிர் போக்கும் நமனுய் அமைந்தது. செவிப்புலனுக்கு அசுணமா என்பதைக் கூறலாம். இன்னிசை கேட்டு மகிழும் அசுணம் கடிய கொடிய பறை இசை கேட்டவுடன் உடல் சோம்பி உணர்வு அவிழ உயிர் ஓய்ந்து விழுகின்றது. செவிப் புலநுகர்ச்சி இதற்கு எல்லாம் என்னலாம்; இவ்வாறு பொறிப்பயனே பெரும்பயன் எனக் கருதித் தம் வாழ்நாளை அப் பயனுக்கு அளிக்கும் ஆற்றல் மக்கள்பால் மிகக் காண்கின்ருேமா?

மக்களுக்குச் சிறப்புடைப் பொருள் யாது? கண் முதலியன இன்றியமையாதவையே: ஆயினும் கண்களைத் திறந்து காணும் எல்லையளவினும் மூடிக்காணில் அளவில் தொலைவு காணமுடியும். அங்ஙனமே ஒவ்வொரு பொறியையும் வெளியில் உலவச்செய்து, செய்வதால் அறிவைப் பிரித்து நோக்குதலினும் ஐந்தையும் மூடி உள்ளே செலுத்தின் அடையும் பயன் மிகப் பெரிது. செலுத்துவதுடன் நில்லாது நினைவுக்களமாகும் உள்ளத்தைப் பிடித்துக்கொண்டிருக்கும் மாசுகளை நீக்கித் தூய்மை யாக்குதற்கு மேலும் மேலும் தூய்மை ஆகியவற்றையே நினைத்தல் வேண்டும். அவ்வண்ணம் தூய்மை எய்தும் அறிவு நிலையைப் புலம் என்பர். அதனை உடையவரே புலவராவர்.

புலம் எனும் சொல், உண்மை அறிவு அல்லது மெய்ஞ் ஞானம் எனும் பொருள் பெற்றது என்பதைப் 'புலம் பிரிந்துறையும் சேவடி' (திருமுருகு. 62:3) என்பதால் அறியலாம். 'புலம்' பெற்றோர் புலவர் என்பதும் அச் சொல்லின் பொருள். மெய்யறிவு தலைப்பட்டோர் என்பதை 'புலவர்க்காயினும்' (சிறுபாண் 203) எனுமிடத்தே காணலாம்.

இத்தகைய புலவரின் தகுதிகள் எவை? அவர்கள் சீரிய கூரிய இனிய அரிய அழகிய பண்புடைச் சொற்களையே பேசுவர்; பிறருக்கும் சொல்லுவர். உலகப் பொருளையேனும் அவற்றின் எல்லை தாண்டிய கடவுட் பொருளையேனும் சொல்லுதற்கு அமையும் அவர்தம் சொற்களில் அழகு காணப்படும். இங்கே அழகு என்பது சொல்லின் தெளிவும் அச் சொல்லாலுணர்த்தப்படும் பொருளின் உண்மைப்பொலிவுமே. மேலும், அவர்கள் வாய்வழி வெளிப்போதரும் கருத்துக்கள் தேர்ந்த அறிவின் முடிவுகளே. நுண்ணிய தெளிவையும் அழகிய சொற்களையும் பெற்றுச் சிறத்தல் அவர்தம் பெருந்தகுதிகள்.

அஞ்சொல் நுண்டேர்ச்சிப் புலவர் (புற. 235)
செந்நாப் புலவர் (,, 107)
நாநவில் புலவர் (,, 282)

இந் நெறிய அறிஞர் அடையும் பயன் எத்தன்மையது என்பவற்றால் காணலாம் என்பதையும் சிறிது காணுவோம். முதலில் ஒன்று குறிக்க எண்ணுகின்றேன். நக்கீரர் என்ற அருட் புலவர் இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்தவர். அவரை இன்றும் பொலிகின்ற பேரறிஞராகவே தமிழுலகம் ஏற்று மகிழ்கின்றது. இந்நாளில் 2000 கல் தொலைவில் வாழ்கின்ற இருவர் ஒருவரை ஒருவர் அறிதல் முடியுமா? சிறந்த அறிவும் பேராற்றலும் உலகம் புகழும் உயர்குண நலங்களும் அமைந்து வாழ்வோர் ஆயின் அவரை அறிதலும் கூடுமே அன்றி வெற்று மகன் ஒருவனை அறிதல் இயலாது. நக்கீரர் உடல் மறைந்தும் அவர் புகழும் அவர் முருகனைப் புகழ்ந்து தமிழுக்கு ஆக்கம் தேடிய பேரியல் நூலும் பாட்டும் நிலைத்து வாழும் இயற்கை எய்தி, எய்தியமையால் அவரையும் வாழச் செய்தன. இது கொண்டு என்ன அறியலாம். ஆயிரக்கணக்காக ஆண்டுகள் மாண்டொழியினும் புலவர்தம் புகழ் மறையாது—அழியாது—ஒழியாது—நின்று நிலைத்தொளிரும் என்பதே. இவ்வுண்மையைச் சேரருள் ஒருவராய்ச் சிறந்த பாலை பாடிய பெருங்கடுங்கோ என்பார்,

"சேண் விளங்கு நல்லிசை நிறீஇய......புலவர்" என்றுரைப்பதினின்றும் தெளிவாக அறியலாம். வாழ்நாளில் வெகு தொலைவு வரையின் தம் புகழை விளங்குமாறு நிறுவுதலும் பின்னுளில் அழியாது விளங்குமாறு புகழை நிறுவுதலும் புலவர் செயல் போன்றதாயினும் அதுவே அவர் பெறும் பெரும்பேறு என்னலாம்.

மேலும் அவர்களை ஒருவர் இருவர் அன்றி எண்ணற்ற பலர் என்ஞான்றும், 'இத்தகைய அருங் கருத்துக்களை உதவிய பெரும்புலமைப் பெருமணி என்றென்றும் வாழ்க! வாழ்க!' என்று அவர்தம் பாக்களைப் படித்துக் களிப்புக்கடலில் ஆழ்ந்து உண்மை தெளிந்து உணர்வுற்றோர் உள்ளம் வாழ்த்தாநிற்கும். ஆதலின், உலகம் எந்நாள்வரை வாழும்; அந்நாள்வரை உலகத்தோடு வாழ்கின்ற ஒப்பற்ற பெருமை சிறந்தோர் இவர் என்பதும் முடிந்த முடிபு. இம் முடிபினைத் தமிழகத்திற் குதவியோன் மற்றொரு மாசிலா மன்னன். தலையாலங்கானம் என்னும் இடத்தில் எழுவர் மன்னரை ஒரே காலத்தில் புறங்கண்ட பெருவெற்றி சிறந்தகோன், 'உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பிற், புலவர்' என்று கூறியமையினின்றும் விளக்கமுறத் துளக்கமற அறியலாகும்.

இவ் வியல்பினராகிய புலவருடன் பேசும் வாய்ப்புக்கிட்டினுர் அவ்வாய்ப்புநாளை என்றும் மறவார்; அவரைப் பிரிய நேர்ந்தால் உளம் நைந்து நொந்து வாடுவர்: எனும் இக் கருத்துப்படப் புலவர் பெருமான் வள்ளுவனுர்,

'உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்'

என்றுர். இக் குறளை மற்றொரு வகையாகவும் கருதலாம் என்று கருதுகின்றேன். நம் உடல், உள்ளம், உணர்வு உவக்க நம்முடன் கூடிப் பல்லாண்டு வாழ்ந்து இன்று இந் நினைவு நாள் வழியே நினைக்குமாறு நம்மின் நீங்கிய அடிகள் நினைவு நாளுக்கும் இக் குறள் இடம் தருகின்றது என்பதே என் மற்றொரு வகைக் கருத்து. 'அனைத்தே புலவர் தொழில்' எனும் தொடரில் காணப்படும் அனைத்து என்பதற்கு, 'தாம் நல்வழி ஒழுகுதல், பிறர்க்குறுதி கூறல் என்பன இரண்டும் தொழிலென ஒன்றாய் அடங்குதலின் அனைத்தே என்றுர்' எனும் உரையாசிரியர் கருத்தும் காணுதற்குரியது. பிறர் உவத்தற்குப் பிரிந்த ஞான்று தொல்லையுறற்கும் காரணங்கள் இரண்டு என்கின்றுர் பரிதியார். அவை, தம் நல்வழி ஒழுகல் பிறருக்குறுதி கூறல் என்பன.

உள்ளம் தெளிந்தோர் நடையில் ஒழுக்கத்தில் கள்ளம் ஏது? கள்ளமில்லா வாழ்வினர் உரை உறுதிகூறும் உயருரையே. இவை சுருங்கிய முறையின் புலவர் மாண்பினைத் தெரிக்கின்றன.

இதுவரை கூறிவந்த புலமைப் பெருமையினைப் பெற்றவர் கம்பர். கம்பர் யார்? என்ற வினவுக்குக் கம்பர் சிறந்த தமிழ்ப் புலவர் என்பதனையே விடையாக்க ஆசைப்படுகின்றேன். என் கருத்தால் கூற நான் இசையவில்லை. சிறந்த அறிஞர் கம்பர் பாக்களைக் கற்றுக் கம்பன் இராமாயணத்தில் கருத்தூன்றி அதன்கண் கண்ட உண்மையைச் செய்யுள் வடிவில் நமக்கு உதவியிருக்கின்றார்கள். 'நாதை பாச் செய்த கம்பன்' என்று இராமன் கதையினைப் பாட்டாகப் பாடினான் கம்பன் என்றனர். 'கம்ப நாட்டாழ்வான் கவி' என்று கம்பனிடம் தனிச்சிறப்பு அவன் தரும் கவிச்சுவையே என்றனர். 'கம்பன் தமிழினால் கவி செய்தானே' என்று கம்பனுக்குத் தனிப் பெருமையாக நாம் எண்ண வேண்டியது யாது எனின், இந்நாள் மக்கள் ஆங்கில மோகத்தால் தமிழ் நாட்டுப் பிறந்தாரும் தாம் கண்ட அரிய விஞ்ஞான நுண்மையை ஆங்கிலத்தில் எழுதுவது போன்றன்றித் தமிழ் மக்களுக்குணர்ச்சி தரும் காவிய நூலாக்கம் கருதிய அறிவான் 'தமிழினால்' கவி செய்தான் என்றனர். இவ்வாறு நூல் ஆக்கும் நுண்மாண் நுழை புலம்மிக்குச் சிறந்த புலவன் கம்பன் என்பதைக் 'கம்பராம் புலவரைக் கருத்திருத்துவாய்' என்ற தொடரானே குறித்தனர். பன்னிரண்டு ஆயிரம் பாக்களுக்கு மேற்பட்ட பெருந்தொகைச் செய்யுளால் அருங் கருத்துக்கள் பலவற்றைச் செந்தமிழ் நலத்துடன் தேர்ந்து சொல்லுதற்கு இறைவன் திருவருளும் வாய்க்கப்பெறுதல் வேண்டும், என்று கருதிய கருத்தினால், 'தெய்வப் புலமைக் கம்ப நாட்டாழ்வான்' என்று கம்பனின் புலமையைத் தெய்வப்புலமை எனச் சுட்டினர். ஆக, கம்பர் சிறந்த தமிழ்நலமும் பெரும் புலமும் ஒன்றுபட்ட உண்மை அறிவினர் என்றறியலாம்.

(தொடரும்)

அமெரிக்க நாட்டு ஆங்கிலக் கவிஞர்*

வித்துவான் மு. இராசாக்கண்ணு, பி. ஒ. எல்.

இருமொழித் தலைமைபெறும் தலைவரவர்களே! புதுவைப் பெருமக்களே!

வணக்கம் பல. இன்று என் கடமை ஆற்ற முற்படுதற்கு முன் ஒன்று சொல்லவேண்டிய அழுந்திய விருப்பமுடையேன். இத் தமிழ் நாட்டில் அரசியலார்பால் தமிழ் மக்கள் பெற்றுவக்கும் பட்டங்கள் பல. அவை பல நெறியின. அறிவியற் கூறுபாடுகளை ஒட்டி வருவனவும் சில உள. 'மகாமகோபாத்தியாய' என்பதும் அவற்றுள் ஒன்று. இந் நாள் வரை அப் பட்டத்தினை எய்தியோர் பல வகையினர். தமிழ் அறிவுடன் வடமொழி எனும் மொழி ஒன்று உண்டென்று தெரிந்த பெரியோர்; வடமொழி ஆற்றல் மிக்குப், பேச்சு மொழியாகச் சிறந்தது தமிழ் என்று உணர்ந்தவர்; என இவ்வாறு அவரைக் கூறுவர் சிலர். 'தமிழ் கூறு நல்லுலகத்து' 'முன் தோன்றி மூத்த குடி' மக்களுள் எவரேனும் இப் பட்டம் பெற்றனரோ என்று எண்ணி அவ்வாறு பெற்றோர் எவரும் இல்லாதிருத்தலைக் கண்டு, தமிழகம் நெஞ்சகம் வெதும்பியதுண்டு. இக் குறைபாட்டினைப் போக்கிய போக்கறு புலவர் பண்டிதமணி அவர்கள். வடமொழியைப் பாணினி அறிந்தான்; தென்மொழியை மலையமுனி உணர்ந்தான்; இன்று அவ்விருமொழி ஆற்றலையும் அறிந்து சிறக்கச் சொல்லும் செம்மை சான்றவராகத் திகழ்பவர் இப் பேரவைத் தலைமை தாங்கும் செட்டிநாட்டுச் சிந்தாமணி அவர்களாவார். இவர்கள் நம்மிடைப் பண்டிதமணியாய்ச் சிந்தாமணியாய் அறிவின் நல்லொளியாய் விளங்குகின்றார். இவர்கள் பட்டங்கள் பல பெற்றுக் கட்டுடல் வன்மையும் தமிழ்த்தொண்டில் உயர்ந்த பேரூக்கமும் சிறந்து நீடுநின்று வாழவேண்டும் என்று எனை ஆட்கொண்டு என்னுள்ளத்துச் சிறக்கும் சிவத்திரு ஞானியாரடிகள் திருவடி மலர்களை இறைஞ்சுகின்றேன்.

---

* 20-12-42-ல் புதுவையில் பெருந்திரு மகாமகோபாத்தியாய பண்டிதமணி கதிரேசச் செட்டியார் அவர்கள் தலைமையில் நடந்த இளைஞர் கழகத்துப் பதினாறாட்டைப் பெருவிழாவில் ஆற்றிய சொற்பொழிவு.

தமிழ்த்தாயின் செல்வம் அனையீர்!

இன்று பேசும் பொருளாக அமைந்தது, 'அமெரிக்க நாட்டு ஆங்கிலக் கவிஞர்' என்பது. தமிழ் நாட்டினை விடுத்துத் தமிழ் மொழியினை விட்டு அமெரிக்க நாடு புகுந்து ஆங்கிலக் கவிஞரைப் பற்றிப் பேசுவதென்பது போர்த்தொல்லை மிக்க இக் காலத்தில் சிலர்க்கு ஐயத்தை விளைக்கும்.

இளைஞர் கழகத் தலைவர், உலையா முயற்சியில் சிறந்தவர், திரு. ஆளவந்தார் அவர்கள் அட்டைக் கடிதவழிப் பேசும் பொருள் யாதெனவினவினர். அஞ்ஞான்று அமெரிக்க நாட்டுக் கவிஞர் பெருமான் திரு*லாங்பெலோ அவர்களால் எழுதப்பட்ட †எவான்சலென் என்பதைப் படித்துக்கொண்டிருந்தேன். அக் காவியப் பாடல் என்னுள்ளத்தைத் தூண்டியது. ஆதலின், அதனையே குறிக்கோளாகக் கொண்டு அப் புலவரின் மற்றைய பாடற்பகுதியையும் இயன்றவரை ஆய்ந்து ஒருவாறு தொகுத்துப் பேசுவதையே நோக்கமாகக் கொள்ளக் கருதி முன் கூறிய தலைப்பினை எழுதி அனுப்பினேன். அடுத்துத் தொடர்ந்தெண்ணியபோது நான் நினைத்தது ஒழுங்கே என்றும் கண்டேன்; எவ்வாறெனில் எவானின் வரலாறு ‡பிரெஞ்சு குடியேற்ற நாட்டினை ஒட்டியது; நான் பேசுதற்குரிய இடமாகிய புதுவையும் பிரெஞ்சு அரசியல் எல்லையுள் படவே ஒத்துநின்ற இட அமைதி எண்ணத்தின் அமைதியைத் திண்ணிதாக்கியது.

அறிஞர்களே!

இனி, முன்னுரையாகச் சில சொல்லி, அமெரிக்க நாட்டு வரலாற்றைச் சிறிதே கருதி, திரு. லாங்பெலோ அவர்களின் வாழ்க்கையினைச் சுருங்கக் கண்டு, அவர் ஆக்கித் தந்திருக்கும் பாடற்பெருகுதியுள் புக்கு அதனைக் காண்பதே என் பேச்சின் பெரும்பிரிவுகளாகும்.

அறிவால் உயர்ந்தவர் மக்களாகிய நாம். நமக்கு வாழும் இடமாக இறைவனால் கொடுக்கப்பட்டிருப்பது இந் நில உலகம். இதன்பால் இயைந்துள்ள நாம் நாடோறும் அறிந்தோ அறியாமலோ இதன் இயல்புகளைச் சிறிது சிறிது அறிந்து வருகின்றோம். நாம் வாழும் இத் தமிழ்நாடு கதிரவன் கடுங்கதிர்க்

---

* Longfellow. † Evangeline. ‡ French.

கிலக்காகும் இடம். வடக்கு நோக்கி வெகு தொலைவு செல்வோமாயின், அவ்வாறே தெற்கு நோக்கியும் சென்றால், குளிர்ந்த நிலப்பகுதியைக் காண்கின்றோம். வடதுருவம் தென்துருவம் எனப்படும் நிலப்பகுதிகள் கொடுங்குளிர் நாடாக இருக்கின்றன. இவ்வாறு காணும் நாம் நிலப்பகுதியை முல்லை மருதம் பாலை நெய்தல் குறிஞ்சி என்று பிரித்துக் கண்டவாறேபோல் கடுங்குளிர் நிலம், குளிர்நிலம், வெந்நிலம் எனவும் பிரிக்க அமையும்.

முத்திறப் பகுதிகளிலும் வாழ்வோர் உணவு, உடை, நடை முதலியவற்றால் மாறுபாடெய்துகின்றனர். மாறுபடக் காரணம் நாட்டின் வெப்பதட்ப நிலைகளே. இருந்தும் எல்லோரும் இறைஞ்சுவது இறைவன் ஒருவனையே. பனிக்கட்டி வீடுகட்டி வாழ்வோனும் குளிரில் நடுங்குவோனும் வெம்மையில் வெதும்புவோனும் வணங்கி வாழ்த்தும் கடவுள் ஒருவனே. முதலாமவனுக்கு மிகக் குளிர்ந்த கடவுளும் அடுத்தவனுக்கு நடுங்கும் கடவுளும், மூன்றாமவனுக்குச் சுடும் கடவுளுமாகக் கடவுளர் மூவகையினர் அல்லர் என்பதே அறிவுடை உலகம் கொள்ளும் சீரிய நெறி. அங்ஙனமே மக்கள் உடலின் நீட்சி, குறுக்கம்; பெருக்கம், சுருக்கம்; நிறம் முதலியன நாட்டின் நிலைகளுக்கேற்ப மாறலாமே அல்லாமல், உடலில் வாழும் உயிர் மாறுவதின்று. காட்சிக் குட்படாத அணு எனும் உயிர் மாறுதல் கொள்ளுவதில்லை என்றுறுதியாகக் கூறுவதில் தொல்லை இல்லை அல்லவா?

உயிரின் தொழில் யாது? இது உடலை அடைந்ததேன்? ஐயமீர்! நான் 'தத்துவ விசாரணையில்' இறங்கி விட்டேன் என்று கருதாதிர்! பேச்செல்லையிலிருந்தே எண்ணவேண்டியவனுயுளேன்.

ஐம்பொறிகளின் வாயிலாக உலகையும் அதன்கண் இறைவன் படைப்பையும் அறிவதன்றோ உயிராற்றும் செயல்! இச்செயலைச் செய்து முடித்தற்கு உறுதுணையாக நிற்பதன்றோ உடல்! ஆகவே, உயிரின் தொழில் அறிவது. அறிந்த பொருளில் தெளிவும் அறிந்தறிந்து உணர்வதும் அறியுங்காலத்து நிகழ்வன.

உயிர், அறிவு, தெளிவு, உணர்வு என்பன ஒருவாறு ஒன்ரே டொன்று தொடர்புற்று விளங்குகின்றன.

யாண்டும் வாழ்வோர் உயிரால் ஒத்தவர் என்று முன் உரைத்தேன். உயிரைப்பற்றி நிகழும் பிற தொழில் வகைகளிலும் அவர்கள் எல்லோரும் ஒத்த நெறியினரே என்றுரைத்தல் மிகை ஆகாது. கருதத் தக்கது ஒன்றிருக்கிறது. வெளி உலகக் காட்சியே அறிவை முதல் நிலையில் வளர்க்கின்றது. வளர்கின்ற அறிவு, வெளியில் உலவி உள்ளே செறிந்து திணிந்து ஒளிர்ந்து நிற்றலே முடிந்த நிலைமை. வெளியுலக மாட்சிமையால் வளர்ச்சியைப் பெறும் நிலையில் மாறுதலைக் காணலாம்; ஏனெனில் சுற்றுச்சூழல் இடந்தோறும் வேறுபடுதலினாலே அச்சூழல் வழி அறிவை வளர்த்துக்கொள்வோரும் வளர்ப்பு முறையில் சிறிது மாறுதல் இயல்பே. ஆனால், உள்ளுணர்விற்கே ஆக்கம் தருவதாக வெளிநிலை முடிகின்றமையின் உள்நோக்கம் சிறந்த கவிஞரோ, புலவரோ, அறிஞரோ, எவராயினும் அறிவின் முடிவில் ஒத்திருத்தல் உண்மையே. 'ஆகவே பல்லாயிரக் காவதக் கற்றொலைவில் பிறந்தோராயினும் சான்ரேர் உணர்ச்சி ஒத்தும், நினைவு ஒத்தும், செய்யும் செயலொத்தும் திகழ்கின்றனர். இங்கே,

"என்றும் சான்ரேர், சான்ரேர் பாலராப"

எனும் புறநானூற்றுக் கருத்து நினைவுக்கு வருகின்றது. கூறியவற்றால் மக்கள் பிறப்பிடத்தால் வேறுபட்டனராயினும் அறிவு வளர்ச்சியில் ஒன்றுகின்றனர் என்பதே கருத்து. மேலும், இதனை வலியுறுத்துதற்கு ஒன்றிரண்டு மேற்கோள்களைக் காணலாம்.

கிறிஸ்தவ மதத்தினைப் பரப்புதற்கென்று இந்தியா நோக்கி வந்து தென்னாட்டில் நீண்ட காலம் நிலைத்த பெரியார் *செயின்ட் தாமஸ் என்பவர். இவரே திருவள்ளுவர் என்பவராவர் என்று கூறுவோர் உண்டு. அவர் கூற்றுத் தமிழாராய்ச்சி மிக்கார்க்கும் தமிழர்க்கும் மிக்க நகை விளைப்பதொன்றே. ஆயினும் அக் கூற்றில் எண்ணுதற்குரிய கருத்துண்டு. அவர்கள் அவ்வாறு கூறுவானேன்? தம்முயிரினும் மேலாக அன்னவர் கருதும் விவிலிய நூற்கருத்துக்கள் திருக்குறளில் முழுவதும்

*Saint Thomas.

செறிந்து திணிந்து காணப்படுவது கொண்டே அவ்வாறு கூறு தற்கு அவர்கள் முற்படுகின்றார்கள். திருக்குறளின் விழுமிய கருத்துக்கள் விவிலிய நூலொடு ஒத்து நிற்பதெதனால்?

ஐரோப்பிய மக்களின் உணர்ச்சிக்கும் கிளர்ச்சிக்கும் அடிப்படையாக விளங்குவது பண்டைய உரோம கிரேக்க நாகரிகத் திட்பமே ஆகும். பழங்கால வரலாறுகப் பேசப்படு வது *திரோசச் சண்டை என்பதும் ஒன்று. †திராய் எனும் நகரத்து அழகி ‡எலன் என்பாள் பொருட்டு இருபெரு அரசிய லார் பொருதழிந்தனர் என்பதே அதன் சுருக்கம். திருமகள் ஒருத்தி காரணமாக நடந்த இராமாயணப் பெரும்போர் தங்கள் நினைவில் இதுபோழ்து வரவில்லையா? இது எவ்வாறு இவ்வாறு அமைந்தது?

சகப்பிரியர் நாடகங்களுள் ஒன்றாகிய ||'நடுவேனி லிரவுக் கனு' என்பதைப் படித்த காலத்தில் உள்ளத்தில் ஊன்றி நின்ற தோர் பகுதியையும் மூன்றாவது சான்றாக உரைத்தற்கு முற்படு கின்றேன்.

1 ஏதென்ஸ் ஒரு சிறிய நாடு. அதன் ஆளுகையைக் கொண்டவன் 2 தீசியஸ் என்பான். அவனால் நன்குமதிக்கப் பட்ட சிறந்த செல்வர் 3 ஈசியஸ் என்பவர். இவருக்கு ஒரு மகள் உண்டு. அவள் பெயர் 4 எர்மியா என்பது. இவள் உள்ளத்தில் 5 லைசாண்டர் என்பவன் குடிகொண்டான். அவ னுள்ளத்தில் இவளும் மாறிக் குடிபுகுந்தாள். இவள் தந்தை, மற்றொருவன் 6 திமித்திரியஸ் என்பவனை மணக்குமாறு கட் டளை இடுகின்றான். அவள் எவ்வாறு ஏற்றுக்கொள்ள முடியும்?

ஏதென்ஸ் நாட்டில் ஒரு சட்டம் உண்டு. தந்தையின் வழி மக்கள் ஒழுகவேண்டும்; தவறின் அவரை எல்லா வழியாலும் தண்டிக்கும் முழு உரிமை தந்தைக்குண்டு என்பதே. இச் சட் டத்தினைத் தான் மேற்கொள்ள ஈசியஸ் விரும்பினான். சிற்றரசனை நணுகித் தன் குறையைக் கூறினான். அவனும் எர்மியாவை

---

*Trojan War. †Troy. ‡Helen. || A Mid-summer Night's Dream. 1. Athens. 2. Theseus. 3. Egeus. 4. Hermia. 5. Lysander. 6. Demetrius.

அழைத்து அவள் மணந்தால் திமித்திரியனை மணக்கவும், இல்லை யேல் கன்னியாகக் காலம் கழிக்கவும் வேண்டும் என்றான்.

உண்மைக்காதலர் வழி யொன்றுங் காணாது வருந்தினர்; இறுதியாக ஒரு முடிவுக்கு வந்தனர். ஏதென்ஸ் எல்லையைத் தாண்டி லைசாண்டரின் உறவினர் ஒருவரில்லத்திற்கு ஏகுவ தென்று கொண்டர். உடன்போக்கு நெறிப்பட்டாள் எர்மியா. செல்லும் வழியில் அடர்ந்த பெரிய காடொன்றுண்டு. இரவுக் காலத்தில் வழியினை விளங்க அறிய முடியாதவனானான் லைசாண் டர். சுற்றிச் சுற்றிக் கால் அலுத்தனர். இங்குத்தான் யான் சொல்ல விரும்பிய இடம் அணுகுகின்றது. மூலத்தின் வழி, ஒருவாறு மொழிபெயர்ப்பினைத் தருகின்றேன்.

லைசாண்டர்: அழகிய அன்பே! காட்டில் அலைந்ததால் நீ மிகுதி யும் வாடியிருக்கின்றாய். உண்மையைக் கூறுமிடத்து, நான் வழியை மறந்திருக்கின்றேன். எர்மியா! கதிரவன் வெளிப்போந்து நமக்கு நேரிய வழியைக் காட்டும் வரை இங்குத் தங்குவோம்.

எர்மியா: நன்று. அவ்வாறே ஆகுக. அன்பரே! நான் இப் புல்லணையைத் தலையணையாக்கொண் டுறங்குவேன்; நீவிர் நுமக்கோர் தனிப் படுக்கையை மேற்கொள்விர் ஆகுக.

லைசா: இப் புல்லணை நம் இருவருக்கும் தலையணை ஆகட்டுமே; ஒரு கருத்து, ஒரு படுக்கை; ஈர் உடல்; ஓர் உண்மை வழிக் கொண்டவர்கள் அல்லரோ நாம்.

எர்மி: உண்மை அன்பரே; விலகிப் படுங்கள்; இவ்வளவு அரு கில் படுக்க வேண்டா; என் அன்பைக் கருதியேனும் என் கருத்தின்வழி ஒழுகுங்கள்.

லைசா: பேதைப் பெண்ணே! நீ அறியாத உண்மையும் உண்டோ! காதல் காதலுடன் கலந்து வாழ எண்ணுதல் இயல்பே; காதல் கனிந்த இரண்டுள்ளங்கள் தனித்தனி இருக்க எண்ணுமோ? தெளிவாகக் கூறல் வேண்டு மெனின் என்னுள்ளமும் நின்னுள்ளமும் காதலில் பின்னிக் கிடக்கின்றன. ஆதலின் நாம் இருவரும் தனித்தனியாக உள்ளம் பெற்றேம் அல்லம்; நம்மிருவருக்கும் ஓர்

உள்ளமே உள்ளது. இருவர் நெஞ்சமும் ஒரே உறுதியில் உயர்ந்தன ; ஆதலின் இருநெஞ்சமும் ஓர் உறுதியைத் தழுவி நிற்கின்றது. இவ்வாறு நிலைத்து வாழும் நம்மிடையே வேறுபாடு ஏது? இத்தகைய எனக்கா நின்னருகில் படுக்கை இல்லை? பொய்மை சிறிதும் கலவாத யான் நின்னருகிருத்தல் தக்கதே.

எர்மி : காதற்றேழரே ! தம்முள்ளம் பொய்படுபள்ளம் என்று யான் கருதியது என்றும் இன்று ; தாம் கூறியன யாவும் நன்று நன்று என என்றேன். ஆயினும் பெண்மை, கற்புடைமை, கன்னிமை ஆயவற்றைக் கருதிக் கூறுவதைக் கேட்பீர். மணச்சடங்கின் முன்னர் மணமாகா மக்கள் நடக்கை முறை எனும் உலகியல் வழிநின்று அன்போடு யான் வற்புறுத்துவதை உளம் கொண்டு விலகிப் படுப்பீராக.

லைசாண்டர் எர்மியாவின் கருத்துக்கு முரண்படாமல் நடந்து கொள்கின்றான். இச் செய்தியைப் படித்த காலத்தில் விரைந்து என் கண்முன் வேறோர் காட்சி நிலைத்தது. திருமருகல்-கடவுள் கோயில் - செட்டிப்பெண் - நஞ்சால் மடிந்த கணவனை முன்வைத்துக் கடவுளை நோக்கிக் கதறல் - திருஞான சம்பந்தர் முன்வரல் - அருளால் நஞ்சை நையவைத்தல் - செட்டிமகன் பிழைத்தல் - அங்குச் சம்பந்தர் பேச்சு.

> தலைவனை இறந்த போதும் தனியுயிர் பெற்ற போதும்
> சிலைநுதல் காதல் மாமன் செல்வியாய் இருந்தும் தீண்டா
> நிலைமையும் அன்பும் கற்பின் நீர்மையும் வியந்து நோக்கி
> மலைமகள் ஞான முண்டார் வணிகனை நோக்கிச் சொல்வார்.
>
> —திருவிளை. வன்னி. 28

உண்மை அன்பும் சிறந்த கற்பும் மிக்கோங்கிய அப் பெருமகள் இறந்த தன் மணாளனைத் தீண்டாது -அழுதாள். உள்ளத்தால் முழுவதும் ஒன்றியோராயினும் புறக்கரணமாகத் திகழும் திருமணத்தின் பின்னரே தீண்டுதல் தக்கதென்று கருதியன்றோ தீண்டா நிலைமையை மேற்கொண்டாள். இவ் வரலாற்றினையோ அல்லது இதனை ஒத்ததனையோ கூறவந்த சேக்கிழார் பெரியாரும் “வாளரவு தீண்டவும் தான் தீண்ட கில்லாள்” என்றார்.

அறிஞர்களே !

சகப்பிரியர் பெருஞ்சொல் விளக்கமும், புராணமுடையார் இருவரின் திட்பநுட்பச் சொற்சுருக்கச் சிறப்பும் முடிந்த கருத்தில் ஒற்றுமையுடன் திகழ்தலைக் காணலாம். இவ்வொற்றுமை வந்தது எதனால் ?

விவிலிய நூல் ஒத்தவாறும் திரோசச் சண்டையின் நுட்பமும் ஆங்கில நாடகத்துடன் புராணத்தியையும் ஒருவாறு ஒத்து நோக்கற்கு இடம் தந்ததேன் ? புலமை பழுக்கும் உள்ளங்கள் ஒரு நெறியே செல்லும் இயல்பினாலன்றோ ? எண்ணுங்கள்.

(தொடரும்)

'செந்தமிழ்ச் செல்வி'க்கு வாழ்த்து

'மதி'

" தெளிதமிழின் திருவரங்கில் ஓயாது
நடஞ்செய்வாள் எங்கள் செல்வி
அறியேங்கள் உய்வுறையுஞ் செழுநடனத்
தடோடிச் செறிந்து நிற்குங்
களிதுளும்புர் தமிழருளத் துயிர்நாடி
நிழலாடல் நடனத்தாடு
ஒளிஞானப் பெருமாட்டி கலாநடனந்
தமிழ்வாழ்க்கை நிலயம் அன்றோ !"

ஆர்க்காடு

வித்வான் மா. இராசமாணிக்கம், பி. ஓ. எல்.

ஆர்க்காடு பழைமை பெற்ற பெருநகரம். அப் பதியில் தேவாங்கர் மரபில் தோன்றியுள்ள வள்ளல் வரதராஜச் செட்டியார் அவர்கள் தமிழ்ப்பெரு வள்ளலாய் விளங்குகின்ருர். அப் பெரியார் கட்டியுள்ள சுந்தரர் நிலையம் என்னும் விடுதியில் (23-8-41') நடந்த சுந்தரர் விழாவன்று யான் திருவாளர் R. P. சேதுப் பிள்ளை B.A., B.L. அவர்கள் தலைமையிற் பேசும் பேறுபெற்றேன்; மறுநாள் அப் பண்டை நகரைத் திருவாளர் ஒளவை சு. துரைசாமிப் பிள்ளை அவர்களுடன் சென்று பார்வையிட்டு மகிழ்ந்தேன். யான் கண்டறிந்த சிலவற்றை ஈண்டுக் கூறுவேன்.

நகரக் காட்சி

ஆர்க்காடு பாலாற்றங் கரையில் பண்புற அமைந்த பழைய நகரம். அதன் தெருக்கள் அகன்றும் குறுகியும் உள்ளன. நகர் எங்கும் கோரிகள், பழைய கட்டடங்கள், இடிந்த சுவர்கள், இடிந்த மசூதிகள், பள்ளமான பழைய குளங்கள் எரிகள் காணப்படுகின்றன. பின்னவை இருந்த இடங்கள் இப்பொழுது பயிர்கள் காட்சி அளிக்கின்றன. நகரத்திற்கு வெளியே நாற்புறமும் பழைய கோரிகளும் மசூதிகளும் இருக்கின்றன. இவற்றுல் ஆர்க்காட்டு அண்மை அரசர்கள் முஸ்லீம்கள் என்பது எளிதிற் புலனும்.

ஊருக்கு வெளியே

பாலாற்று எதிர்க்கரையில் குடிமல்லூர் என்னும் பழம்பதி இருக்கிறது. அந்த இடத்தில் உள்ள சிவலிங்கம் மிக்க பழமை வாய்ந்ததும் பார்க்கத் தக்கதும் ஆகும் என்பது ஆராய்ச்சி அறிஞர் கோபிநாதராவ் கருத்தாகும்.* மேலும் குடிமல்லூரில் இரட்டைப் புலவரைப் பற்றிய குறிப்புகள் உண்டென்றும் புலவர்கள் புகல்கின்றனர். குறிப்பிடத்தக்க மற்ருேர் ஊர் வன்னி

* Vide his ‘Indian Iconography’ Vol. I.

வேடு என்பது. இது, 'வன்னிவேடாகிய சதுர்வேதி மங்கலம்' என்று சாஸனங்களில் பயின்று வருகின்றது. இங்குச் சில சிதைவுகள் உள. இவற்றால் இப் பதியும் பழம் பதி எனக் கூறல் பொருந்தும்.

மற்றோர்பால் ஊருக்குத் தெற்கே, களரி, தாசிபுரம் என்னும் இரண்டு இடங்கள் இருக்கின்றன. அங்கு ஆர்க்காட்டு நவாபின் குரு மசூதி இருக்கின்றது.

கோட்டை வாயில்

பாலாற்றங்கரை ஓரமாகக் கோட்டை மதிற்சுவர் செல்கின்றது. அது பல இடங்களில் தரைமட்டம் ஆகிச் சாலையாகி விட்டது. மாட்டு வண்டி போகத்தக்க அளவு (பத்தடி) அகலம் கொண்டதாக அம் மதிற்சுவர் இருந்ததெனல் மிகையாகாது. ஆற்றங்கரையில் மதிற்சுவருக்கு இருந்த பழைய வாயில் இன்று பழுதுபட்டுக் கிடக்கிறது. அதன் மேற்புறத்தை அடைய இரு புறத்தும் படிக்கட்டுகள் இருக்கின்றன. மேல் இடத்தில் ஈரிடங்களிலும் ஞாயில்கள் (காவல் அறைகள்) இருக்கின்றன. இவ் வாயிலுக்குத் தெற்கே சில கோரிகள் இருக்கின்றன. இவ் வாயில் பாலாற்று வடகரையில் இருக்கிறது. கோட்டையைச் சூழ இருந்த அகழி பாலாற்றிலிருந்து நீரைப் பெற்று வந்தது; கிழக்கு மேற்காக வந்து கோட்டைக்குள் இருந்த ஏரிக்குள் முடிவு பெற்றது என்பதை இப்பொழுது ஒருவாறு கண்டு கொள்ளலாம். கோட்டை ஏறக்குறைய ஒரு சதுர மைல் பரப்புடையதாக இருந்திருக்கலாம். 'இக் கோட்டை 1751-ல் கிளைவ் பிரபுவினால் கைப்பற்றப்பட்டது' என்பது கோட்டை வாயிலில் பதிக்கப்பெற்றுள்ள சாஸனத்தில் அறியலாம்.

சிவன் கோயில்

இங்குள்ள சிவனார் பெயர் கச்சீஸ்வரன் என்பது. பிராகாரம் கவனிப்பார் அற்றுப் புல்பூண்டுகள் முளைக்க இடமாக உள்ளது. வலக்கைப் பிராகாரப் பகுதியில் பிள்ளையார் கோயில் இருக்கிறது. அதன் முன்புறம் துவாரபாலகர் இருவர், நூதன ஆடையணிகள் உடையராய்க் காண்கின்றனர். மூலச்சுவரின் வெளிப்புறத்தில் ஆங்காங்குத் தனிச்சிலைகள் பல வைக்கப்பட்டுள.

அவற்றை அடையப் படிக்கட்டுகளும் இருக்கின்றன. இடக் கைப் பிராகாரப் பகுதியில் சுண்ணும்பாலான நவக்கிரகக் கோவில் இருக்கிறது.

மூலத்தான எதிர்மண்டபத் தூண்களில் உள்ள உருவங் கள் தேய்ந்து கிடக்கின்றன. திரிதண்ட யோக நிலை, நடனம், யானை, யாளி, அன்னம் முதலியன வேலைப்பாடுகள் காண்கின் றன. துவாரபாலகர் சிலைகள் பெயர்ந்து கிடக்கின்றன.

கோபுரம் பாதியளவு கல் கட்டடத்தையும் மேற்பாதி செங்கல் கட்டடத்தையும் கொண்டது. புதுப்பித்த கணவன் - மனைவி உருவங்கள் கோபுர வாயிற் சுவர்களில் எதிரெதிரே பொறிக்கப்பட்டுள. ஆடவர் காதில் வளையம் காணப்படுகிறது. பெண் கம்மல் அணிந்தவள்; முக்காடு இட்டவள். பிராகாரத் தில் உள்ள மடைப்பள்ளி முதலிய அறைகள் பாழடைந்து கிடக்கின்றன. மூலத்தான கோபுரம் பிற்காலச் சோழர் காலத்ததாகக் காண்கிறது. அதன் காலம் கி. பி. 10 அல்லது 11-ஆம் நூற்றுண்டினதாகலாம்.

கோரிகளும் மசூதிகளும்

ஊரை அடுத்த பகுதியில் நவாப் ஒருவர் கட்டிய மசூதி எதிரே செய்குளத்தை உடையதாக இருக்கிறது. அக் குளம் சுற்றிலும் மூன்று படிக்கட்டுகள் இருக்கின்றன. குளத்தின் ஒரு மூலையில் சதுரக் கிணறு ஒன்று சிறிய அளவில் இருக்கிறது. அதன் ஆழம் நான்கடி இருக்கலாம். குளத்து நீரை அப்புறப் படுத்தக் குளத்திற்குத் தென்புறச் சுவரில் கபிலை ஏற்றம் காண் கிறது. குளத்து அடித்தளம் நன்முக அமைக்கப்பட்டுள்ளது. இதைக் கண்டபோது மொஹெஞ்சொதரோவில் உள்ள செய் குளம் நினைவிற்கு வந்தது மிகையாமோ?

மேற்சொன்ன மசூதிக்கு வடக்கே வேறு ஒரு குளம் 4 படிக்கட்டுகளை உடையதாகவும் நடுவில் கம்பம் ஒன்றைக் கொண்டதாகவும் இருக்கிறது. குளம் 25 அடி ஆழமுடையது. வடமதில்மீது 3 வாசல்கள் இருக்கின்றன. கிழக்கே 4 அடுக் குச் சிறுமதில் ஒன்று இருக்கிறது.

சிறிது தூரத்தில் மேடைமீது வடக்கு நோக்கியபடி பீரங்கி ஒன்று வைக்கப்பெற்றுள்ளது.

முதலிற் சொன்ன மசூதிக்கு மேற்கே வயல்கள் நிறைந்த பள்ளம் பண்டைக்காலத்தில் ஏரியாக இருந்ததாம். இவ்விடத்தை அடுத்து இன்றும் ஓர் ஏரி இருக்கிறது. அதனிடமே அகழி வந்து முடிகிறது.

ஏரிக்குத் தெற்கே உள்ள இடம் களரி எனப்படுகிறது: இச் சொல் சாஸனங்களில் பயின்று வருதல் வெளிப்படை; அக் கால அரசியல் உத்தியோகத்தர்கள் உறைந்த இடமாகலாம்.

பச்சைக்கல் மசூதி பார்க்கத் தக்கது. உள்ளே முஸ்லீம் பெரியார் பலர் அடக்கமாகி இருக்கின்றனர்; பாழடைந்த குளம் ஒன்று இருக்கிறது; 7 வளைவுகள் கொண்ட பிரார்த்தனை இடம் பார்க்கத் தக்கது. அங்கு இப்பொழுது மதக்கல்வி போதிக்கப்படுகிறது. அதன் எதிரே பச்சைக்கல் மசூதி இருக்கிறது. இதற்குள் ஒரு பெரியவர் அடக்கம் ஆனாராம். அவருக்கு நாடோறும் பூசை நடக்கிறது. மேல் விமானம் வட்டமானது; முழுதும் உயர்தரக் கற்கள் பதிக்கப்பெற்றது; உட்சுவர்கள் வெள்ளைக்கற்கள் பதிக்கப்பெற்றவை; வெளியே பச்சைக்கற்கள் பதிக்கப்பெற்றவை. விமானத்தின் தென் மேற்கு மூலை குண்டடி பட்டுச் சிதைந்துள்ளது. விமானத்தின் மீது தாமரை மலர் வடிவம் - அதன்மீது கலசம் - அதன்மீது பிறை: இவை பார்க்க அழகானவை. நவாபின் முதல் அமைச்சர் புதைகுழியும் இருக்கிறது. அது மகிழ மரத்தடியில் உருது எழுத்துக்களைக் கொண்ட கல் நடப்பெற்றுக் காட்சி யளிக்கிறது; சுற்றிலும் மேடை அமைக்கப்பெற்றுள்ளது.

சங்ககாலத்துச் செந்தமிழ்ச் செல்வி

வித்துவான் ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை,
கீழ்க்கலை யாராய்ச்சிக் கழகம், திருப்பதி

IV

பெதும்பைப் பருவத்தின் முடிவிலோ சிறிது இடையிலோ நம் தமிழ்ச் செல்வி தன் உயிர்க்கினிய தலைவனைக் கண்டு காதலுற்றுத் தேர்ந்து கொள்ளுகின்றாள். இப் பருவத்தே இவள் புறத்தே சென்று விளையாடும் இயல்பினள் என்பது முன்பே கூறப்பட்டது. அக்காலத்தே அவளை அவ்வாறு விளையாட விடாது இல்லின்கண் செறித்து வைத்தல் அறமுமன்று; அதனால் அவள் உடல் நலமுருமையின், அவளது எதிர்கால வாழ்க்கைக்குரிய ஆக்கமும் தேயும் என்பது பண்டையோர் நன்கறிந்திருந்தனர். "விளையா டாயமோடு ஓரையா டாது, இளையோர் இல்லிடத்திற் செறிந் திருத்தல், அறனு மன்றே ஆக்கமும் தேய்ம் என........வல்லிதின் வணங்கிச் செல்லுநர்ப் பெறினே" (நற். 68) எனச் சங்ககாலத் தமிழறிஞர் கூறுதல் காண்க.

இக் கருத்தால், நம் செல்வி தன் தோழியருடன் குறிஞ்சியாயின் மலைச்சாரல், மலைச்சுனை, அருவி முதலிய இடங்களிலும், முல்லையாயின், முல்லைக்கொடியும் பாங்கர்க்கொடியும் பிறவும் தழைத்த தோட்டங்களிலும், மருதமாயின், நீர்த்துறைகளிலும், நெய்தலாயின், கழிமருங்கிலும் கானற் சோலையிலும் கடற்கரையிலும் மகளிர்க்குரிய விளையாட்டுக்கள் பலவும் அயர்வள். இவ் விளையாட்டிடத்திற்கு ஒரு தமிழ்ச் செல்வ மகன் வந்து யாதானுமோருதவியோ, இனிய சொல் சொல்லுதலோ செய்வன். அதுவே வாயிலாக அவட்கு அவன்பால் காதல் பிறக்கும்; அவனுக்கும் அவள்பால் காதலன்பு தோன்றிப் பிணிக்கும்.

குறிஞ்சி நிலத்தே, ஒருகால் ஒரு தமிழ்ச் செல்வி தன் தோழியர் பலருடன் மலைச்சாரலில் நின்ற வேங்கை மரத்தின் பூக்கொய்து விளையாடற்குச் சென்றாள். மரத்திலேறிப் பூக்களைக் கொய்துகொண்டிருக்கையில் ஒரு சில மகளிர், வேங்கையின் பூவுதிர்ந்த கரும்பாறை புலிபோலத் தோன்றக் கண்டு விளையாட்டாகவே "புலி புலி" என்று இரைச்சலிட்டனர். அது

கேட்டுத் திடுக்கிட்ட மகளிரும் உண்மை தெளிந்து தாமும் அத் தோற்றம் வியந்து "புலி புலி" என்று பூசலிட்டனர். அவ்வழியே வடிவெடுத்த காமன்போல வடிக்கணையும் வரி வில்லு மேந்திய தமிழ்ச் செல்வ மகனொருவன் வந்தான். அவன் காதில் இம் மகளிரெழுப்பிய பூசலொலி விழுந்தது. அவன் உடனே வில்லில் அம்பு தொடுத்து அவர்முன் போந்து, "எங்கே, எங்கே புலி ?" என வினவி நின்றான். அவனைக் கண்டதும் இம் மகளிர் நாணி ஒருவர்பின் ஒருவராக மறைந்து கொண்டனர். அவர் முகந்தோன்றாது கூந்தலே தன் கண்ணிற்குப் புலனாகக் கண்ட அக் காளை, "மையீரோதி, மடவீர், நும்வாய்ப் பொய்யும் உளவோ ?" என்றான். இவர்கள் ஒன்றும் கூறாது நாணித் தலை யிறைஞ்சி நின்றொழிந்தனர். நம் செல்வியின் மலர் முகமும் ஒளிநுதலும் வாட்கண்களும் பன்முறை மனங்குளிரக் கண்டு மகிழ்ந்தான். அவளும் அவன் உயர்தோளும் விரிமார்பும் தடக் கையும் தன் இரு கண்களும் ஆரக் கண்டாள். இருவர் கருத் தும் ஒன்றுபட்டன. பின்பு அவன் சென்றுவிட்டான். அவன் மறையுங்காலும் இவள் அவனையே நோக்கி நின்றாள். அவன் மறைந்த பின், இவள் தன் தோழியை நோக்கி, "இவன் மகனே, தோழி" (அகம். 48) என்றாள். "அதில் தடை யென்னை ?" எனத் தோழி கேட்ப, "இல்லை ; கேட்டேன்" என முறுவலித்தாள் இத் தமிழ் மகள். இஃதொரு திறம்.

ஒருகால் இம் மகளிர் சுனையிற் குடைந்து விளையாடுங்கால், அதன்கண் சேய்மையில் ஆழத்தில் பூத்திருந்த பூவைப் பறிக்க முயல்கின்றனர் ; அக் காலை இத் தமிழ்மகன் போந்து அதனைத் தான் நீந்திச்சென்று பறித்துத் தருகின்றான் ; அவ் வுதவி வாயி லாகக் காதல் தோன்றுகிறது. பிறிதொருகால், இம் மகளிர் பறித்த பூக்களை மிக அழகாக விரைவில் மாலையாகத் தொடுத் துதவுகின்றான் ; அவர்கள் வைத்து விளையாடும் பாவையின் பொருட்டுத் தான் அணிந்திருந்த கண்ணியை எடுத்து அத் தமிழ் மகன் இச் செல்வமகட்கு உதவுகின்றான். (நற். 173) இதனாலும் காதலன்பு பிறந்துவிடுகிறது.

மற்றொருகால், இச் செல்வி தன் தோழியருடன் தினைப் புனத்தே யிருந்து, அத் தினைக் கதிரைக் கவரவரும் கிளிகளை

ஒப்பிக்கொண்டிருக்கிறுள். அருகே மலேச்சாரல் உளது; அதன்கண் மூங்கில் வளர்ந்து தழைத்து நீண்டிருக்கிறது. கோடைக்காற்று வீசுகிறது. அம் மூங்கில் சிலவற்றுள் துளே தோன்றி யிருக்கிறது. அத் துளேவழி வீசும் காற்றுக் குழலோசை யெழுப்புகின்றது. அதனருகே மலேயருவி வீழ்வது முழவு ஒலி போல்கின்றது. ஆங்காங்குப் பூத்திருக்கும் பூக்களில் தேனுண்ணும் வண்டினம் யாழ்போல இசைக்கின்றது. மந்திகள் பாறைமேல் இருந்து இவ்விசை கேட்டு மருண்டிருக்கின்றன. மூங்கில் நிறைந்த சாரலில் மயில் தன் தோகையை விரித்துக் கூத்தாடும் விறலிபோல் ஆடுகின்றது. இக் காட்சி, விழாக்களத்தே குழலியம்ப முழவு முழங்க, யாழிசை இனிதிசைப்ப மக்கள் இருந்து காண விறலியர் கூத்தாடும் இனிய காட்சியை வழங்குகிறது. இது கண்ட நம் தமிழ்ச் செல்வமகள் அக் காட்சி யின்பத்தைத் துய்த்திருக்கின்றுள். அக்காலத்தே தமிழ் மகனெருவன் வில்லும் அம்பும் கொண்டு, யானே வேட்டம் வருவான் இவள்பால் வந்து, "யானே சென்றது கண்டீரோ? அஃது எவ்வழிச் சென்றது, கூறுமின்," என்று அத் திணேப் புனத்தின் ஒரு மருங்கே நிற்கின்றுன். அவனே இத் தமிழ் மகள் கண்டு காதலுறுகின்றுள் (அகம். 82). இஃதொரு திறம்

இனி, இவ் வண்ணமேயன்றி வேறு வகையாலும், காதலன்பு தோன்றற்கு வாயிலுண்டு. செந்தமிழ்ச் செல்வி யொருத்தியது காதலொழுக்கத்தை யுணர்த்தும் வாயிலாக ஆசிரியர் கபிலர் ஆரியவரசன் பிரகத்தன் என்பானுக்குத் தமிழறிவிக்கின்றுர். அது பத்துப் பாட்டினுள் ஒன்றுகிய குறிஞ்சிப்பாட்டு எனப் படும். அதன்கண், செந்தமிழ்ச் செல்வி ஒருத்தியை அவள் தாய்,

" துய்த்தலே வாங்கிய புனிறுதீர் பெருங்குரல்
நற்கோள் சிறுதினேப் படுபுள் ஒப்பி
எற்பட வருதியர் " (37-9 என விடுவிக்கிறுள்.)

அவளும் தன் தோழியருடன் புனம் சென்று, ஆங்கு அமைத்திருந்த பரண்மீது இருந்துகொண்டு,

" சாரல் குரல் தகைபெற வலந்த
தழலும் தட்டையும் குளிரும் பிறவும்
கிளிகடி மாபின ஊழுழ் வாங்கி " (42-4)

புனங் காவல் புரிந்து வருகின்ருள். வருங்கால் வெயில் வெம்மை மிக்கு வருத்தும்போது, அருவியிலும் சுனையிலும் நீராடி, நனைந்த கூந்தலைப் புலர்த்திக்கொண்டு, ஆங்குப் பூத்திருக்கும் காந்தள், ஆம்பல், அனிச்சம், குவளை, குறிஞ்சி, வெட்சி முதலிய பல வகைப் பூக்களைப் பறித்துத் தொகுத்துத் தழையும் கோதையும் தொடுத்துப் புனைந்துகொண்டு அசோக மரமொன்றின் நிழலில் இருக்கின்றனள். இடையிடையே கிளியோப்புவதை மறக்க வில்லை. அப்போது தமிழ் மகனொருவன், தன் தடக்கையில்,

> " வண்ண வரிவில் ஏந்தி அம்பு தெரிந்து
> நுண்வினைக் கச்சைத் தயக்கறக் கட்டி
> இயலணிப் பொலிந்த விகை வான்கழல்
> துயல்வருந் தோறும் திருந்தடிக் கலாவ
> முனைபாழ் படுக்குந் துன்னரும் துப்பின்
> பகைபுறங் கண்ட பல்வேல் இளைஞரொடு " (124-29)

அவ்வழியே வருகின்றான். அவனுடன் வேட்டை நாய்கள் வந்தவை இம் மகளைச் சூழ்ந்து கொள்கின்றன. அது கண்டு இம் மகள் அஞ்சி நடுங்குகின்றனள். உடனே அவன் போந்து, மென்மொழி சில கூறி, இவளைத் தேற்றி, அந் நாய்களையும் போக்கிவிட்டு,

> " மடமதர் மழைக்கண் இளையீர், இறந்த
> கெடுதியும் உடையேன் " (141-2)

என்கின்றான். அவற்கு இவள் ஒரு விடையும் பகர்கின்றாள் இல்லை. அவன் மனம் திகைத்து,

> " கெடுதியும் விடீராயின் எம்மொடு
> சொல்லலும் பழியோ? மெல்லியலீர் " (144-5)

என்று கேட்டு நிற்கின்றான். இருந்தாற்போலிருந்து கானம் கல்லென்னுமாறு ஒரு பெருமுழக்கம் கேட்கிறது. சிறிது போதிற்குள்ளே,

> " கார்ப்பெயல் உருமின் பிளிறிச் சீர்த்தக
> இரும்பிணர்த் தடக்கை யிருநிலஞ் சேர்த்திச்
> சினந்திகழ் கடாஅம் செருக்கி மரங்கொல்பு
> மையல் வேழம்." (162-5)

ஒன்று மடங்கல்போல் எதிர்வருகின்றது. உடனே இம் மகள் அஞ்சி அலமந்து, வளையொலிப்ப நாணம் மறந்து விரைந்தோடி அத் தமிழ்மகனை யடைந்து நடுங்கி நிற்கின்றனள். தமிழ் மகளைத் தழீஇநின்ற அத் தமிழ்க் காளை,

"உடுவுறும் பகழி வாங்கிக் கடுவிசை
அண்ணல் யானை அணிமுகத் தழுத்தலின்
புண்ணுமிழ் குருதி முகம்பாய்ந் திழிதரப்
புள்ளி வரிநுதல் சிதைய நில்லாது" (170-3)

அயர்ந்து புறங்கொடுத்து ஓடி விடுகின்றது. செல்வியும் அவ னைத் தழுவி நின்ற கை விடாது சிறிதுபோது நிற்கின்றாள். அப் பெருந்தகையும்,

"அஞ்சி லோதி! அசையல், யாவதும்;
அஞ்ச லோம்பு நின் அணிநலம் நுகர்குஎன
மாசறு சுடர்நுதல் நீவி நீடுநினைந்து" (180-2)

அவள் முகம் நோக்கிக் குறுநகை முகிழ்க்கின்றான். அப்போது அவட்கு நாணும் உட்கும் தோன்ற, அவள் சிறிது பிரியக்கருத அவன் அவளை விடாது தழீஇக் கொண்டு நிற்கின்றான். பின்பு அவன் தான் கொணர்ந்த அடிசிலை,

"நின்னொடு உண்டலும் புரைவது என்றாங்கு
அறம்புணை யாகத் தேற்றிப் பிறங்குமலை
மீமிசைக் கடவுள் வாழ்த்திக் கைதொழுது
ஏமுறு வஞ்சினம் வாய்மையின் தேற்றி
அந்தீந் தெண்ணீர் குடித்தலின் நெஞ்சமர்ந்து" (207-11)

இனிது இருக்கின்றான். பின்பு பொழுது சாய, அந்திமாலை நெருங்குகிறது. அதனைக் கண்டதும் அவன், தமிழ் மகளின்,

"நேரிறை முன்கை பற்றி நுமர்தர
நாடறி நன்மணம் அயர்கம், சின்னாள்
கலங்க லோம்புமின், இலங்கிழை யீர்" என (231-3)

ஈரமொழிகள் சில கூறி அவளுடன் அவளிருக்கும் ஊர்க்கு வாயிலில் உள்ள நீர்த்துறைக்கண் விடுத்துவிட்டுத் தான் சென்று விடுகின்றான். இஃதொரு திறமாகும்.

இனி, மேலே கூறியவாறன்றி, இத் தமிழ்மகள் விளையாட்டிடத்தோ பிறண்டோ, அவள் தனித்திருக்குங்கால் ஒரு தமிழ் மகன் அவளைக் காண்டலும் அவள் அவனைக் காண்டலும் இருவரும் கருத்தொருமித்து அன்பு கொள்வதும் உண்டு. அவ்வாறு உண்டாகிய அன்பு, பிறிதொருகால் அவர்கள் தாமே தமித்துக் கண்டு கூடலால் பெருகிக் காதலாய் ஒருவரை யொருவர் இன்றியமையாத நிலைமை பயந்துவிடுகிறது. இந் நிலைமைக் கண் அவள், தான் அவனையின்றி அமையமாட்டாத் தன்மையை உணர்ந்துகொள்கின்றாள்; ஆனால் அதனைப் பிறர்க்கு எடுத்தோதும் பெற்றி பெண்மைக்கு இல்லாமையால், பசுமட்கலத்துள் நீர்பெய்து வைத்தவழி, அது புறத்தே பொசிந்து காட்டுவது போலத் தன் வேட்கை தானே தன் மெய்ப்பட்டு அரிது தோன்றுமாறு ஒழுகுவள்; சொல்லால் கூறாள் எனத் தொல்காப்பியனார் கூறுவர்; இளந்திரையன் என்பார்,

"காமஞ் செப்பல் ஆண்மகற் கமையும், யானே, பெண்மை
தட்ப நண்ணிநில் தாங்கி" (நற். 94)

எனத் தமிழ்ச் செல்வமகள் கூற்றில் வைத்துப் பெண்மையே அவளை அவ் வேட்கையைக் கூறமாட்டாது தடுக்குமென்று ஓதுகின்றார்.

இதனால், அவளை அவன் கண்டு காதலால் தழீஇக்கொண்டு, அக் காதலின் தோற்றம் கூறுவான்,

"யாயும் யாயும் யாரா கியரோ?
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்?
யானும் நீயும் எவ்வழி யறிதும்?
செம்புலப் பெயல்நீர் போல
அன்புடை நெஞ்சம் தாம்கலந் தனவே" (குறுந். 40)

என்று அவட்குக் கூறுகின்றான். பின்பு அவளின் நீங்கித் தனித்திருக்குங்கால் அவள் நினைவே மிகுந்து மெலிந்து அம் மெலிவு கேட்ட நண்பனுக்குத் தன் காதன்மையை எடுத்தோதுகின்றான்.

"கேளிர் வாழியோ கேளிர், நாளும்என்
நெஞ்சுபிணிக் கொண்ட அஞ்சி லோதிப்
பெருந்தோட் குறுமகள் சிறுமெல் லாகம்
ஒருநாள் புணரப் புணரின்
அரைநாள் வாழ்க்கையும் வேண்டலென் யானே" (குறுந். 280)

என்று கூறுகின்றான். மீண்டும் அவளது "கதுப்பயல் விளங்கும் திருநுதல், புதுக்கோள் யானையிற் பிணித்தற்றால் எம்மே" (குறுந். 129) என்றும், "கொடிச்சி கையகத் ததுவே பிறர் விடுத்தற் காகாது பிணித்தவென் நெஞ்சே" (நற். 95) என்றும் பலப்பல கூறி அவன்தான் அவளை இன்றியமையாக் காதலனாதலைப் புலப்படுத்துகின்றான்.

இவ்வண்ணம், இத் தமிழ்ச் செல்வ மகனும் தமிழ்ச் செல்வ மகளும் தம்மில் தாமே தமித்துக் கூடலே பெரும்பான்மை; சிறுபான்மையே தமிழ் மகள் முதற்கண் தோழியர் கூட்டத்திடையே நின்று தமிழ் மகனைக் காண்டலும் காதலுறுதலும் நிகழ்வது. தனித்துக் கண்டு காதலெய்தும் மாண்புடைய இவள் தன் செய்கையின் அருமைப் பாட்டினையும், திருமணத்தின் சிறப்பினையும் உணராதவளல்லள்.

"முத்தினும் மணியினும் பொன்னினும் அத்துணை
நேர்வருங் குரைய கலம்கெடிற் புணரும்;
சால்பும் வியப்பும் இயல்பும் குன்றின்
மாசறக் கழீஇ வயங்குபுகழ் நிறுத்தல்
ஆசறு காட்சி ஐயர்க்கும் அந்நிலை
எளிய என்னார் தொன்மருங் கறிஞர்." (குறிஞ்சி. 13-8)

என்றும்,

"கொடுப்பின் நன்கு உடைமையும் குடிநிரல் உடைமையும்
வண்ணமும் துணையும் பொரீஇ எண்ணாது
எமியேம் துணிந்த ஏமம்சால் அருவினை" (குறி. 30-2)

என்றும் இம் மகளிரிடை நிகழும் பேச்சுக்களை நோக்கின் இவர்கள் காதல் வாழ்வின் சிறப்பும் கடிமணத்தின் குறிப்பும் பிறவும் நன்குணர்ந்திருத்தல் இனிது விளங்குகிறது.

சொற்பொரு ளாராய்ச்சி

[வித்துவான் ஞா. தேவநேயப் பாவாணர்]

எந்நாட்டிலும் எம்மொழியிலும் பொதுமக்கள் வாயிலாய்த் தோன்றிய இயற்கைச் சொற்கள் எல்லாம் ஒவ்வோர் பொருளைக் கொண்டவையே. இதனாலேயே,

"எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே" என்றார் தொல்காப்பியர்.

தனிச்சொல்லெல்லாம் பொருள் குறித்தனவே யெனின், அத் தனிச் சொற்களாலான தொடர்ச்சொற்களும் பொருள் குறித்தனவே யென்பது சொல்லாமலே பெறப்படும். மேனாட்டாரியரும் கீழ் நாட்டாரியரும் பல நூற்றாண்டுகட்கு முன்னரே தத்தம் மொழிச்சொற்கட்கு மூலம் கண்டு வைத்திருக்க, இவ் விருபதாம் நூற்றாண்டிலும், தக்க துணையிருந்தும், கால்டுவெல் போன்ற அயல்நாட்டறிஞர் வழிகாட்டியும் தமிழ்ச் சொற்களின் வேர்களையும் மூலத்தையும் தமிழர் காணாதும் கவனியாதுமிருப்பது பெரிதும் வருந்தத் தக்கதாகும். திரிபினுருவான ஆரிய மொழிகளிலும் சொல்லாராய்ச்சி பயன்படுவதாயின், இளங் குழந்தைவாயிற் றேன்றினாற்போல் இயல்பாயெழுந்த தமிழ் மொழியில் மிகமிகப் பயன்படுமென்பதற்கு எள்ளளவும் ஐயமில்லை.

தனிச்சொல் தொடர்ச்சொல் ஆகிய இருவகைச் சொற்களில், முன்னதற்கு வேர் காண்பது அரிதாயினும் பின்னதற்கு மூலங்காண்பது எளிதென்றே கூறத்தகும். அதை மெய்ப்பிக்கும் அளவாகச் சில தொடர்ச்சொற்களின் வரலாற்றைக் காட்டுகின்றேன்.

சீர்தூக்கல் : சீர்=துலைத்தட்டு. தூக்கல்=தூக்கி நிறுத்தல். சீர்தூக்கல்=சரக்கெடையை நிறுத்தறிந்தாற்போலப் பொருள்களின் இயல்பை எண்ணியறிதல்.

அரவணைத்தல் : அரவு=பாம்பு. அணைத்தல்=தழுவல். அரவணைத்தல்=பாம்பு பின்னித் தழுவினாற்போல நெருங்கக் கட்டியணைத்தல், அங்ஙனம் அணைத்தாற்போலப் பாதுகாத்தல்

கட்டாயம்: கட்டு=செலுத்து. ஆயம்=வரி. கட்டாயம்= வரிசெலுத்தல்போற் கண்டிப்பு.

ஏராளம்: ஏர்=கலப்பை. ஆள்+அம்=ஆளம்=ஆளின் தன்மை. ஏராளம்=உழவன் வருவாய்போல் மிகுதியாயிருத்தல். உழவன் நேரடியாயும் மிகுதியாயும் உணவுப்பொருளை விளைவித்த லின், பொருள் மிகுதி ஏராளமெனப்பட்டது. அம் மிகுதியினா லேயே உழவன் வேளாண்மை செய்து வேளாளனாயினன். 'வேளாளனென்பான் விருந்திருக்க உண்ணாதான்'

தாராளம்: தார்=சேனை. ஆளம்=தன்மை. தாராளம்= படைமறவர்போல், விருப்பம் போலப் பிறர்பொருளைக் கையாடு தல் அல்லது வழங்கல். இன்றும் படைமறவர் பிறர்பொருளை மனம்போற் பயன்படுத்தலும் கொள்ளை யடித்தலும் காண்க.

சிங்கியடித்தல்: சிங்கி=தாளம். அடித்தல்=தட்டுதல். சிங்கி யடித்தல்=இரப்போன் தாளம் தட்டி இரப்பதுபோல் திண் டாடுதல்.

தாளக்கருவியை உருவக (ரூபக) தாளத்தில் தட்டினால் சிங் சீயான் என்ற ஒலியெழும். இதனால், தாளக்கருவிக்குச் சிங்கி யென்றும் சீயான் என்றும் இருபெயருண்டு.

தாயமாடல்: தாய்+அம்=தாயம்=தாயினின்று பெறும் உரிமை. ஆடல்=விளையாடல். தாயமாடல்=சீட்டுப் போடு வதுபோல் முத்தும் பலகறையும் போட்டு உடன்பிறந்தார் பாகம் பிரித்தல்; முத்ினாலும் பலகறையாலும் விளையாடிப் பிறர் உரிமையைப் பெறுதல் அல்லது பறித்தல்; தாயமாடிக் காலத்தை வீண்போக்குவதுபோல் வேலை செய்யாமற் காலங் கழித்தல் அல்லது தாழ்த்தல்; 'வேலை தாயமாடுகிறது' என்னும் வழக்கை நோக்குக.

மினுக்கிடுதல்: > மினக்கிடுதல் > மெனக்கிடுதல். மினுக் கிடுதல்=அலங்கரித்தல். அலங்காரத்திலேயே கருத்தாயிருந்து வேலையைக் கை நெகிழவிடல். 'வேலை மினக்கிடுதல்' என் னும் வழக்கையும் 'தேவடியாள் சிங்காரிக்குமுன் தேர் நிலைக்கு வந்து விட்டது' என்னும் பழமொழியையும் நோக்குக.

தொடர் கதை :



[புத்தனேரி ரா. சுப்பிரமணியன்]

முன் கதை

[சிறு வயதிலேயே தன் தந்தையை இழந்த பாண்டி நாட்டு இளவரசனான நம்பி நெடுஞ்செழியன் இளைஞனா யிருந்தமையால் முதல் மந்திரி புகழனாரே அரசை ஏற்று ஆட்சி செய்து வந்தார். நம்பிக்கு உற்ற துணைவராய் இருந்து நல்வழிப்படுத்தி வந்தவர் பேரெயின் முறுவலார் என்னும் புலவர்.

ஒருநாள் இரண்டாவது மந்திரி வேம்புநாதன் செய்து வரும் சூழ்ச்சிகளினால் மனக்கவலை யுற்றிருந்த இளவரச னுக்கு நிம்மதியளிக்கக் கருதிய புலவர் நம்பியைத் தன் னுடன் கூட்டிக்கொண்டு நாட்டுவளங் காணுமாறு புறப் பட்டார். இருவரும் தத்தம் குதிரைகளில் மதுரை யைக் கடந்து பரிகளை விரைவாகச் செலுத்தி வரும் போது இடைவழியே காட்டில் "குழுவர்கள்" என் னும் இனத்தாரைச் சந்தித்தனர். நம்பியும் புலவரும் குழுவர்களின் வேண்டுகோளின்படி அவர்களுடைய குடிசையில் தங்கி அவ்வினத்தாரின் பழக்க வழக்கங்களை அறியும்போது, குழுவர் தலைவனான நல்லானின் குடிசையிலிருந்த பொன் உருவத்தைத் கண்டு வியப்புடன் அதனைத் திறந்து அதில் "அன்புஞ் சிவமும்" என்று தொடங்கும் திருமந்திரப் பாடல் தங்கத் தகட்டில் பொறிக்கப்பட் டிருத்தலைக் கண்டனர். குழுவர்களின் அன்பு மதக் கொள்கை அறிந்தனர்.]

ரு. கழனியூர்க் கிழவி

குழுவர்கள் தழுவிய அன்பு மதத்தின் பெருமையை அறிந்த புலவரும் நம்பியும் பேருவகை பூத்தனர். தம் நாட்டுப் பழங்குடி மரபினர் சமூக வாழ்க்கையை அன்பால் பிணைத்து அறிவுத் துறையில் செலுத்தி யிருந்த

உண்மை அவர்கள் உள்ளத்தைக் கிளரச் செய்துவிட்டது! இருவரும் குழுவர்களைப் பெரிதும் பாராட்டினர்.

காட்டு அன்பர்கள் அங்குக் கிடைத்த இனிய பழவகைகளைக் கூடை கூடையாகக் கொண்டுவந்து வீரர்கள் இருவர்க்கும் விருந்தளித்தனர். இருவரும் உண்டு களித்து இரவில் அன்பருடன் உறங்கினர்.

"நம்பீ! விடிவெள்ளி முளைத்துவிட்டது! எழுந்திரு! புறப்பட வேண்டாமா?" என்ற குரலைக் கேட்டுச் சட்டென எழுந்து காலைக்கடன்களை முடித்துக்கொண்டு தயாராய் இருந்தான் இளவரசன்.

புலவரும் புறப்படுவதற்கு ஆயத்தம் செய்துகொண்டு, குழுவர்களைப் பார்த்து, "அன்பர்களே! உங்கள் அன்புக்கு நாங்கள் என்றும் கடமைப்பட்டிருக்கிறோம். இப்பொழுது நாங்கள் எங்கள் பயணத்தை மீண்டும் துவக்கப்போகிறோம்......" என்று சொல்லும்பொழுது குழுவர்கள் கண்களில் முத்து முத்தாய்க் கண்ணீர் அரும்பிக் கன்னங்களை நனைத்தது!

"பெருமக்களே!... இந்த ஏழைகளை ஒரு பொருட்டாக மதித்த தாங்கள் இன்னும் சிலநாட்கள் எங்களுடன் தங்கலாகாதா?" என்று மன முருகிக் கெஞ்சினன் குழுவர் தலைவனான நல்லான்.

"இல்லையப்பா!... எங்களுக்கு இன்னும் எவ்வளவோ வேலைகள் இருக்கின்றன. உங்கள் குடிசையும் கூட்டமும் எங்கள் மனதைவிட்டு ஒருநாளும் அகலமாட்டா?... நாங்கள் போய் வருகிறோம்..." என்று அவர்களைத் தேற்றியபின் நம்பி தன் குதிரைமீது ஏறிக்கொண்டான். புலவரும் தன் குதிரையிற் புறப்பட்டார். பின்னர் நல்லான் ஒரு துணி மூட்டை நிறைய நல்ல பழங்களைக் கட்டி அவர்களிடம் அன்புடன் கொடுத்தான். அவர்களுக்கு அது ஒரு அன்பு மூட்டையாகவே தோன்றிற்று!

குதிரைகள் இரண்டும் கிளம்பிப்போன வேகத்தில் கிளம்பிய புழுதி, குழுவர்கள் ஏக்கமாய் நின்ற காட்சியைத் திரைபோட்டு மறைத்தாற் போலிருந்தது!

காட்டுப் பாதையில் மேடுகள், பள்ளங்கள், புதர்கள், ஓடைகள் முதலியவற்றையெல்லாங் கடந்து ஒரு மலைப் பகுதியை அடைந்ததும் மலையின் உயரத்தைக் கண்டு அறிவுக் குதிரைகள் மலைத்தன? இதனை யறிந்த பாண்டிநாட்டார் இருவரும் மலையடிவாரத்தின் ஓரமாகக் குதிரைகளைச் செலுத்தினர்.

கொஞ்ச தூரம் சென்றதும் மலையின் சரிவான பகுதியில் தணிவான பள்ளத்தாக்குத் தென்பட்டது. அதன் வழியே மலையைக் கடக்கலாம் என்ற

உறுதியில் குதிரைகள் அவ்வழியே செலுத்தப்பட்டன. சரிவான பொற்றையின் வழியே பள்ளத்தாக்கில் இறங்கும்பொழுது, சிறிது தூரத்தில் சிலசில வீடுகள் தெரிந்தன. கொடிய பாலைவனத்தின் மத்தியில் ஒரு நீர்நிலைப் பூங்காவைக் (Oasis) கண்டதுபோல், ஆள் நடமாட்டமில்லாத நீண்ட காட்டுப் பாதையைக் கடந்து களைத்த பாண்டிநாட்டார் அவ்வூரைக் கண்டவுடன் மன அமைதிகொண்டு மகிழ்ந்து சென்றனர்.

அவ்வூர் ஒரு பட்டிக்காடு. சிறுசிறு குடிசைகளாகப் பல இருந்தன. நடுவே ஒன்றிரண்டு பெரிய வீடுகள் உண்டு. ஊரைச் சுற்றிலும் வயல்கள் சூழ்ந்திருந்தன. மேல்புறமும் வடபுறமும் இரண்டு பெரிய குளங்கள் தெரிந்ததிலிருந்து அவ்வூர் நீர்வளமுள்ளதெனத் தோன்றிற்று. ஊரின் நடுவே சிறுசிறு ஒடுக்கமான தெருக்களிருந்தன. மலையடிவாரத்திலிருந்த அவ்வூர் இயற்கை அழகுடன் விளங்கிற்று.

"பட்டிக்காட்டான் யானை பார்த்த மாதிரி!" என்று சொல்வார்களே, அதுபோன்று குதிரைவீரர்கள் இருவர் வருவதைக் கண்டு அவ்வூர்ச் சிறுவர்களும், பெரியோரும், வாய்க்குள் ஈ போவதுகூடத் தெரியாமல் இமைகொட்டாது வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தனர். ஊருக்குள் சென்றதும் அவ்வூரின் பெயர் கழனியூர் என்பதை வீரர்கள் அறிந்து கொண்டனர்.

இரு குதிரைகளும் ஊருக்கு வடக்குக் கடைசியிலிருந்த ஒரு சிறு குடிசையினருகில் நிறுத்தப்பட்டன. அக் குடிசையின் வெளித் திண்ணையில் வெள்ளிக் கம்பிபோன்று நரைத்த தலையும், கோடு வரைந்தாற் போன்று சுருக்கு விழுந்த ஒட்டிய கன்னங்களும், குழிவிழுந்த கண்களும், எலும்பு தெரியும் உடலும் உடைய எழுபது வயதுக் கிழவியொருத்தி உட்கார்ந்திருப்பதைக் கண்டனர்.

இருவரும் அவளிடம் அணுகினர்.

"பாட்டி! நாங்கள் வெகு தூரத்திலிருந்து வருகிறோம்! களைப்பாயிருக்கிறது! கொஞ்சம் உங்கள் வீட்டில் தங்குதற்கு இடந்தா முடியுமா?" என்று நம்பி மரியாதையாகவும் இனிமையாகவும் பேசினான்.

"அப்பா! நீங்கள் இங்குத் தங்குவதனால் என் மாளிகை தேய்ந்து விடவா போகிறது? தாராளமாய் இருங்களப்பா! இந்த ஏழைக் கிழவியால் இதைவிட வேறு என்ன உதவி செய்ய முடியும்?" என்று அன்புடனும் ஆசையுடனும் கூறினள் கிழவி.

குதிரைகளை மரங்களில் கட்டிவிட்டுத் துணிமூட்டையை எடுத்துக் கொண்டு இருவரும் கிழவியின் குடிசைக்குள் நுழைந்தனர்.

தனித்தமிழ்க் கீர்த்தனைகள்

இராகம் : சண்முகப்பிரியா—தாளம் : ஆதி

பல்லவி

ஈகையிலாதவர்க் கின்பமுண்டோ—பொருள். (ஈகை)

துணைப் பல்லவி

ஆகையினாலவர் அன்பையறிவதில்லை
ஓகையுடன்கூடி உண்டுமகிழ்வதில்லை. (ஈகை)

சரணம்

அறந்தரும் அருளினை அணுவென மதிப்பார்
அறிவுக்கலைகளினை ஆகாதென் றுரைப்பார்
இசைதருஞ் செயலினை வசையென நினைப்பார்
இழுக்குகள் பலசொல்லி எந்நாளுங் கழிப்பார். (ஈகை)

பாடிடும் பாவலர் பக்கமும் சேரார்
பஞ்சம்வந் திடிலதற் கஞ்சியும் தாரார்
ஓடிடும் உயிரதை உன்னியும் ஓரார்
ஓமெனு மெழுத்தினை எண்ணியும் பாரார். (ஈகை)

—இசையரசு மு. மு. தண்டபாணி தேசிகர்.

இராகம் : சுந்தரசந்யாசி—தாளம் : ரூபகம்

பல்லவி

வாழ்த்தவேண்டுமே (நாம்) நம்
வள்ளல் அண்ணாமலை அரசனை. (வாழ்த்த)

துணைப் பல்லவி

வாழ்த்துவதேநம் மனமகிழ்வது
தாழ்ச்சியில்லை புகழ்ச்சிபெரிது. (வாழ்த்த)

சரணம்

ஆங்கிலந் தென்மொழி ஆரியநன்மொழி
ஆந்திரமலையாள முதல் மொழி
ஓங்கிவளரப் பல்கலைக் கழகம்
ஊழியளவும் வாழச் செய்ததால். (வாழ்த்த)

இயற்றியவர் :

வித்வான் மு. அருணசலம் பிள்ளை, தமிழாசிரியர்,

அண்ணமலைப் பல்கலைக் கழகம்.

இசையமைத்தவர் : மு. மு. தண்டபாணி தேசிகர்

இசையரசு தண்டபாணி தேசிகர் பாட்டு

21-1-43 ஞாயிறு மாலை சென்னை, கோகலே மண்டபத்தில் இசையரசு தேவாரமணி தண்டபாணி தேசிகர் அவர்கள் நுண் கலைக் கழகச் (Fine Arts Society) சார்பில் இசையரங்கு நடாத்தினர். பட்டினத்தாரிற் பாராட்டிய நந்தனரிற் கண்டு கழிபேருவகை பூத்த மக்கள் தேசிகரை நேரிற்கண்டு அவர்தம் தமிழ்ப் பாட்டுக்களைக் கேட்கத் திரளாக வருவார்களென்பதில் புதுமை ஒன்றுமில்லை. எனவே மண்டபம் நிரம்ப ஆடவரும் பெண்டிரும் ஆர்வத்தோடு வந்து குழுமி யிருந்தனர்.

அன்று பாடப்பெறும் பாட்டுக்களின் முதற்குறிப்பு அடங்கிய துண்டுத்தாள் முன்னரே கூட்டத்தினர்க்கு வழங்கப்பட்டது. தமிழ்ப் பாட்டுக்களையே பாடவேண்டுமென்ற உண்மைத் தமிழிசைவாணரான திரு. தேசிகர் அவர்கள் இங்கே எந்த முறையில் பாடுவார்களோ என்ற ஐயம் எல்லாருக்கும் உண்டு. ஆனல் துண்டுத்தாளில் அடங்கிய மொத்தம் பத்தொன்பது பாட்டுக்களில் தியாகராஜ கீர்த்தனங்கள் இரண்டேதான்; ஏனைய பதினேழும் தமிழ்க் கீர்த்தனங்களே.

திரு தேசிகரவர்கள் சுவரமும் பல்லவியும் பாடுவதில்லை. என்றபோதிலும் மூன்று மணி நேரம் மக்கள் மனங்கவர்ந்து இனிக்கப் பாடினர். தமிழ்ப் பாட்டுக்களைப் பாடாமல் பிற மொழிக் கீர்த்தனங்களை சுவரம் பல்லவி இல்லாமல் வெறும் பாட்டாகவே அத்தனை மணி நேரம் பாடமுடியாது. சில பல இராகங்களை விளக்கமாகப் பாடினர்களெனினும் அவற்றில்

காம்போதி இராகத்தை மட்டும் மிகவும் விளக்கமாகவும் நுணுக்கமாகவும் பாடி மக்களுக்குப் பெருமகிழ்வை ஊட்டினுர்கள். முடிவுகாறும் கூட்டம் கலேயாதிருந்தமை தேசிகரவர்கள் திறமையை நன்கு தெரிக்கின்றது.

திருவாளர் தேசிகரவர்கள் 'இசையரசு' 'தேவாரமணி' என்னும் இரண்டு பட்டங்களைப் பெற்றிருக்கின்ருர்கள். இன்னும் பல உயரிய பட்டங்களைப் பெறுந் தகுதி வாய்ந்தவர்கள். அவர்கள் அப்பட்டங்களை யெல்லாம் பெற்று நீடுவாழ இறைவன் அருள்புரிவாஞக!

இப்போது தமிழிசைக் கிளர்ச்சி நடைபெறினும் தமிழ்ப் பாடல் என்று வழங்குகிற பாடல்களெல்லாம் பெரும்பாலும் வடசொற் கலப்பு மிக்குடையனவே. அதனுல் வடசொற்களைக் கலக்காமல் தூயதமிழில் பல இராக தாளங்கள் அமையக் கீர்த்தனங்கள் இயற்றுதல் இயலாததொன்று என்று சிலர் அறியாது கூறி வருகின்றனர். ஆனுல் நம் தேசிகர் அவர்களோ பிறமொழிச் சொல் ஒன்றுகூடக் கலவாமல் தூய தனித்தமிழில் கீர்த்தனங்களைத் தாமே இயற்றி வருகின்றனர். அவை செந்தமிழ்ச் செல்வியில் வெளிவந்து கொண்டிருக்கின்றன. தமிழ்க் கீர்த்தனங்கள் இயற்றுபவர்கள் திரு. தேசிகரவர்களைப் பின்பற்றுவார்களாக!

இசையரசு வாழ்க! தேவாரமணி தேசிகர் வாழ்க!

பிரிவாற்ருமை

வித்துவான் இ. சிவகுருநாதன்

இவர் நல்ல தமிழ் இளைஞர்; அறிஞர்; தோற்றப்பொலிவினர்; இனிய சொல்லினர்; செப்மை உள்ளத்தினர். 'என் கடன் பணிசெய்து கிடப்பதே' என்னும் அருள்மொழிக் கிலக்கானவர். திருமுதுகுன்றம் என்னும் விருத்தாசலம் போர்டு உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர். பெண்ணுகடம் தமிழ்ச் சங்கத்தின் அமைச்சர். விடுமுறைக் காலங்களில் தொண்டர்களைக்

சேர்த்துக்கொண்டு ஊர் ஊராகச் சென்று தமிழ் மக்களிடையே தமிழ் சமயச் சீர்திருத்தக் கருத்துக்களைப் பரப்பி வந்தனர். இவர் புலவர்க் கினியராய்த் திகழ்ந்தனர். 15-12-40-ல் கழகவழி நடாத்திய அகநானூற்று மாநாட்டிற் குறிஞ்சித் திணைபற்றிப் பேச ஒப்புக்கொண்டு எலி கடியினால் வரக்கூடாதவரானார்கள். ஆனால், அவர்கள் எழுதி யனுப்பிய சொற்பொழிவு அகநானூற்றுச் சொற்பொழிவு நூலின்கண் வெளிவந்திருக்கின்றது. அவர்கள் தமிழ் நடை எளிமையும் இனிமையும் தூய்மையும் வாய்ந்தது; சிறு சிறு தொடர்களால் அமைந்தது. இத்தகைய நல்ல இனிய இளைய ஆள்வினை மிக்க தமிழ்ப் புலவரை இத்துணை இளமைக் காலத்தே இழக்க நேரிட்டது தமிழ் மக்களின் தீவினையேயாகும். பிரிந்த இன்னுயிர் மீண்டும் தமிழ்நாட்டிற் பிறந்து விட்ட தொண்டு தொட்ட தொண்டுகளைச் செய்து முடிக்குமாறு இறைவன் தண்ணருள் புரிவானாக!

புலவர் R. கந்தசாமியார்

கழக வெளியிடாகிய சொல்லதிகாரம் சேனாவரையம் பதிப்பாளரும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழாசிரியராயிருந்து விடுதி பெற்றவரும் ஆகிய புலவர் திரு. R. கந்தசாமியார் அவர்கள் விடுதிபெற்ற சில திங்களிலேயே சோழவந்தானில் அண்மையில் இறையடி சேர்ந்தமை தமிழ் நாட்டிற்குப் பேரிழப்பாகும்.

திவான்பகதூர் கீ. தெய்வசிகாமணி முதலியார்

இளமையில் ஊர் அதிகாரியாய் வாழ்க்கை துவங்கிப் பின்னர்ப் படிப்படியாக உயர்ந்து கூட்டுறவுத் துணைப்பதிவாளராக அமர்ந்து ஒய்வு பெற்று, பல அமைப்புக்களில் தலைவரும் அமைச்சரும் உறுப்பினருமாயிருந்து பணியாற்றி, இறுதியில் தமிழ்த் தொண்டாற்ற விரும்பிச் சென்னைத் தமிழ்ச் சங்கம் என்பதனைத் தோற்றுவித்து அதன் தலைவராக அமர்ந்து அதனைத் தோற்றுவித்த சில திங்களிலேயே திடுமெனத் தம் பருவுடல் நீத்த பொல்லாச் செய்தி தமிழ் நாட்டைத் திடுக்கிடச் செய்து தமிழ் மக்களைத் துன்பக்கடலில் ஆழ்த்தி விட்டது.

அவர்கள் எண்ணம் ஈடேற இறைவன் இன்னருள் புரிவானாக!

செய்திகளும் குறிப்புகளும்

தமிழ் வித்துவான் சங்கம், சென்னை

7-1-43 ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்குச் சென்னை பிரம்ம சமாசக் கட்டிடத்தில் சங்கத் தலைவர் திரு. வித்துவான் T. P. மீனாட்சி சுந்தரனார், B. A., B. L., M. O. L. அவர்களின் தலைமையில் கூடிய செயலாற்றுக் குழுவில் கீழ்க்கண்ட முடிவு ஒரே உள்ளத்துடன் செய்யப்பட்டது.

ஆசிரியர் சங்கம் (Teachers' Guild) தமிழ்ப்பாட புத்தகங்களை அச்சிடுதலை மேற்கொள்கின்ற தென்பதை அறிகின்ற தமிழ் வித்துவான் சங்கம் அச்சங்கத்தின் நல்நோக்கம் பல ஏழைத் தமிழாசிரியர்களின் வாழ்விற் குறுதியாகும் வருவாயை அடியோடு அழித்துவிடும் என்பதை வருத்தத்துடன் அறிந்து தமிழைத் தவிர்த்து மற்றக் கலைப்பாட நூல்களை வெளியிடுதலை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றது.

(Sd.) வித்துவான். மு. இராசாக்கண்ணனார், B.O.L.
(Sd.) வித்துவான் அ. புகணபதி.

செயலாளர்.

மறைத்திரு ஞானியாரடிகள் குருபூசை விழா

திருக்கோவலூராதீனம் திருப்பாதிரிப் புலியூர் ஞானியார் மடாலயம் ஐந்தாம் பட்டத்து மறைத்திரு ஞானியாரடிகள் மறைந்து ஓராண்டு முடிவெய்தியது. அடிகள் மறைந்த நாளாகிய பூசநாள் சேர்ந்த வியாழக்கிழமை (21-1-'43) யன்றும், அடுத்த வெள்ளிக்கிழமை (22-1-'43) யன்றும் குருபூசை விழா கொண்டாடப்பட்டது. முதல் நாள் வியாழன் காலை 8 மணிக்கு மடத்து முருகன் கோவிலில் திருமுழுக்கு முதலியன நடந்தன. அதற்குமேல் சமாதியில் திருமுழுக்கும் ஒளிவழிபாடும் முடிந்தன. நண்பகலில் அடியவர்கட்கு ஆடையும் உணவும் அளிக்கப்பெற்றன. மாலை 6 மணிக்குமேல் தற்போதைய அடிகளார் முன்னர் உயா திருவாளர் திவான்பகதூர் T. M. நாராயணசாமிப் பிள்ளை M. A., B. L. (President H. R. E. Board) அவர்களின் சீரிய தலைமையில் அடியில் வரும் சொற்பொழிவுகள் நடைபெற்றன.

திரு. பு. ரா. சுவாமிநாதன், M.A., L.T., அவர்களால் தலைவர்க்கு வரவேற்பு கூறப்பட்டது. பின்னர் அடிகளார் திரு. வுருவப்படத் திறப்பாளராகிய திரு. வி. கல்யாணசுந்தர முதலியாரவர்கட்குத் திருவாட்டி இராஜேஸ்வரி யம்மையாரால் வரவேற்புரை படிக்கப்பட்டது. தலைவர் முன்னுரை முடிந்து திரு. வி. க. அவர்களால் அடிகளார் உருவப்படம் திறந்து வைக்கப்பட்டது. பின்னர் திரு. K. இராமநாதஞ் செட்டியார் B.A., B.L., அவர்கள் "பித்தர் கூட்டம்" என்பது பற்றியும், மகாமகோ

பாத்தியாய பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியாரவர்கள் அடிகளார் மேல் தாமியற்றிய பாக்களைப் பற்றியும் திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை B.A. L.T., (D.E.O. N. Arcot Dt.) அவர்கள் "ஞானியார் காட்டிய நன்னெறி" என்பது பற்றியும சொற்பொழி வாற்றினார்கள். தலைவர் முடி வுரைக்குப் பின், தற்போதைய அடிகளாரின் வாழ்த்துரையுடன் கூட்டம் இனிது முடிவுற்றது.

மறுநாள் வெள்ளிக்கிழமை (22-1-'43) காலையில் திரு. அரங்கைய பத்தர் அவர்கள் தலைமையில் ஞானியார் மாணவர் கழகக்கூட்டம் நடை பெற்றது. திரு. சங்கரய்யர், கந்தசாமி முதலியார், சுப்பராய முதலியார், பாலசுந்தர நயினர் வித்துவான்கள் ஆறுமுக முதலியார், முருகேச முதலி யார், சிவலிங்கம், திரு. சம்பந்தன், தண்டபாணி, ஏகாம்பரம், ஜயராமன் ஆம் இவர்கள் அடிகளாரைப்பற்றிச் சொற்பொழிவாற்றினர். திரு. வித்து வான் இராசாக்கண்ணு B.O.L. அவர்கள் வந்தனங்கூறத் தற்போதைய அடிகளாரின் வாழ்த்துரையுடன் கூட்டம் முடிவுற்றது.

நண்பகல் 1½ மணிக்குமேல் வேலூர் இராமமூர்த்திக் குழுவினரால் தக்க பக்க இன்னிசைக் கருவிகளுடன் தமிழிசையரங்கு நடைபெற்றது. மேற்படியார்க்கு ஒரு வெள்ளிக்கிண்ணம் பரிசளிக்கப்பட்டது.

மாலை 6 மணிக்குமேல் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்கள் தலைமையில் சொற்பொழிவுகள் நடைபெற்றன. "குருபரன் வருவதெப் போது," "குருபக்தி," நான் கண்ட ஞானியாரடிகள்" எனும் பொருள் கள் பற்றி முறையே காஞ்சிபுரம் சிவசாமி தேசிகர், பரங்கிப்பேட்டை வித்துவான் பெரியசாமிப் பிள்ளை, பட்டம்மா (அவர்கள், கடலூர் ஆசிரியை பயிற்சிப்பள்ளி) ஆம் இவர்கள் பேசினர். தலைவரது இனிய முடிவுரைக் குப் பின் திரு. தி. கி. நாராயணசாமி நாயுடு அவர்களால் நன்றி கூறப்பட்ட தோடு தற்போதைய அடிகளாரால் நன்றியும் வாழ்த்துங் கூறப்பட்டு இறை வணக்கத்துடன் கூட்டம் இனிது முடிந்தது.

இரவு, மறைந்த அடிகளாரின் திருவுருவப்படம் ஊர்வலம் எழுந் தருளப் பெற்றது. சிதம்பரம் நாதசுர வித்வான்கள் இன்னிசை முழக்கினர்.

சென்னையில் சிவத்திரு ஞானியாரடிகள் முதலாண்டு நினைவுவிழா

நினைவு விழா சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் ஆதரவிலுள்ள தென்னிந்திய சைவசித்தாந்த சங்கத்தின் சார்பில் 7-2-'43 ஞாயிறு மாலை 4 மணிக்குமேல், சென்னைக் கந்தகோட்டப் பெருமான் மெத்தை விழா அழகிய மண்டபத்தில், தொடங்கப்பெற்று இரவு 8 மணி வரையில் மிகக் கிளர்ச்சியாக நடந்தேறியது. அவ்வமயம் புலவர்களும் அன்பர்களுமாக நானூற்றுக்குமேல் ஆர்வத்துடன் வந்து மண்டபம் நிறையக் குழுமி யிருந்தனர்.

இசைத் தமிழ் வாணர் திரு. சுந்தர ஓதுவா மூர்த்தியவர்கள் மாண வர் காஞ்சிபுரம் திரு. சாரங்கபாணிச் செட்டியார் அவர்கள் எதிர் பாரா

மலே விழாவிற் கலந்து இன்னிசைத் தேவாரப் பாடல்களை இடையிடையே மிகவும் இனிமையாகப் பாடி மகிழ்வை ஊட்டினர்.

இக்கூட்டத்திற்கு **வித்துவான் பாரிப்பாக்கம் கண்ணப்ப முதலியார்** அவர்கள் தலைமை ஏற்று முன்னுரை கூறியதும். வித்துவான் திரு. மு. இராசாக்கண்ணனுர் B. O. L., **கம்பரும் தமிழ் நாடும்** என்னும் பொருள்பற்றி ஊக்கத்தோடும், ஆர்வத்தோடும் தமிழன்பு ததும்பவும், கேட்போர் இறும்பூ தெய்தவும் கம்பரிடமிருந்த தமிழ்ப் புலமையையும் தமிழன்பினையும் இராமாயணம் பாடிய நோக்கத்தையும் காலப்போக்கை யும் பற்றி மிக விளக்கமாக யாவருடைய மனமும் களிப்பெய்துமாறு எடுத்துச் சொல்லி, நேரவரையறையினுல் இன்னுஞ் சொல்வதற்கில்லையே யென்ற மனக்குறையோடு பேச்சை முடித்துக் கொண்டனர். திரு. P. R. சாமிநாத முதலியார் M.A., L.T., அவர்கள் **சிவத்திரு ஞானியாரடிகள் வரலாறு** என்னும் பொருளைப்பற்றித், தாம் அவர்தம் மாணுக்கராக உடனிருந்தவரா தலின், நேரிற் கண்டபடியே எல்லாச் செய்திகளையும் படம் பிடித்துக் காட்டுவதுபோல் எடுத்துச் சொல்லி, அவ்வரலாற்றினைக் கேட்போர் மனத்தில் ஊன்றப்பதியுமாறு தமது மென்மொழியால் சொற்பொழிவாற்றி யாவரையும் இன்பமயமாகச் செய்தனர்.

சேக்கிழாரும் பெரிய புராணமும் என்னும் பொருள்பற்றிப் பேச வேண்டியவராகிய **வித்துவான் திரு. S. ஆறுமுக முதலியார் M.A., L.T.,** அவர்கள் வேறு அலுவல் இடையிட்டதன் பொருட்டுக் கூட்டத்துக்கு வந்து சொற்பொழிவாற்ற இயலாமற் போனமையின் ஷை பொருள்பற்றித் தலைவர் அவர்களே பேச நேர்ந்தது. அவர் முன்னறிவிப்பில்லாமல் திடுமென அப்பொருள்பற்றிப் பேச நேர்ந்தபோதிலும் கேட்போர் மனம் இன்புற்று வியக்குமாறு தேவாரத்துக்கும் பெரிய புராணத்துக்கும் உள்ள ஒற்றுமை நயங்களைத் தெற்றென எடுத்துக்காட்டிச் சேக்கிழார் அடிகளின் காவிய வன்மையும் கண்கூடாகச் செய்தனர்.

பிறகு தலைவர் சொற்பொழிவாளர்கள் இருவரின் பேச்சுக்களைப் பற்றிய முக்கிய குறிப்புக்களை எடுத்துக்கூறினர். அதன் பின்னர் சங்கச் செயலாளர் திரு. வ. சுப்பையா பிள்ளை தலைவர் சொற்பொழிவாளர், இசைவாணர் வந்திருந்தோர் முதலியோர்க்கு நன்றி கூறியதோடு இந் நினைவு விழாவுக்குச் சென்னை கந்தகோட்டப் பெருமான் கோவில் மெத்தை விழா மண்டபத்தைத் தந்துதவியதோடு இன்னும் இதைப் போன்ற விரிவுரைகட்கும் தருவதாக ஷை கோயில் அறக்காப்பாளர் ஐவரும் அன்பு கனிந்தருளியதைப் பாராட்டிப் பேசினர்.

குறிப்பு: தலைவர் சொற்பொழிவாளர்களின் பேச்சுக்களின் பிழிவு மூன்று நான்காம் பரல்கள் முகப்பிற் காண்க.

மதிப்புரை

1. **திருவள்ளுவர் நினைவு மலர்:** *திருத்தவத்துறை* (வால்குடி) திருவள்ளுவர் கழக வெளியீடு (1942-3). விலை ரூ. 1-4.

இதன்கண், திருக்குறள் அறத்துப்பாலின் மூலமும், திருவள்ளுவர் திருநாட் கழக விழா நிகழ்ச்சியும், மேனாட்டறிஞர் நங் நாட்டறிஞர் கருத்துரைகளும், திருக்குறட்குப் பரிதியார் உரை என ஒன்றின் சில பகுதியும், புதிய முறையில் வெளிவந்திருக்கும் அரிய கட்டுரைகள் சிலவும், மாட்சிமை சான்ற செட்டிநாட்டரசரவர்கள் முதலிய பெருமக்கள் பலரின் வாழ்த்துரைகளும் அடங்கி யிருக்கின்றன. பலவகையாலும் இடுக்கண் நேரமாகிய இக்காலத்திலும் திருத்தவத் துறைத் திருவள்ளுவர் கழகத்தார் புலவர் திருவள்ளுவரை நினைந்து இங்ஙனம் பேரன்போடு தொண்டு செய்து நினைவு மலரை வெளியிட்டது பெரிதும் பாராட்டற்பாலதாகும்.

2. **வாலாஜாபாத் இந்துமத பாடசாலைச்** சித்திரபானு ஆண்டுப் **பொங்கல் மலர்:** பாடசாலை வரவர மேலோங்கி வளர்ந்துவருஞ் சிறப்பு, இப் பொங்கல் மலரினால் நன்கு விளங்குகின்றது. மாணவர் இல்லத்தின் ஆட்சிமன்ற விளக்கம் நன்றாயிருக்கின்றது. திருவள்ளுவர் தொழிற் சாலை மேலுமேலும் விரிவடைந்து வருதல் தெரிகின்றது. சென்ற ஆண்டில் தொடக்கப்பள்ளிகளின் எட்டாம் வகுப்புக்கு அரசியலார் முதன் முதலாக நடத்திய தேர்வில் இப்பாடசாலை மாணவர் 30 பேருக்கு 28 பேர் வெற்றி பெற்றிருப்பது மிகப் பெரிதும் பாராட்டற்குரியது. இது காறும் **திரு. மாசிலாமணி முதலியாரவர்கட்கு** உற்ற துணையாயிருந்து விளங்கிய அவர்தம் தமையனார் காலஞ் சென்றனராயினும் திரு. முதலியாரவர்கள் மிகு வெற்றிகரமாக இவ்வாண்டிற் பாடசாலையினை வளர்ச்சியுற நடத்தி மேம்படுத்தியிருக்குந் திறம் சாலவும் அறிந்து மகிழற்பாலதாயிருக்கின்றது. பாடசாலை நன்கு தழைவதாக!

3. **சுந்தரர் உலா:** ஆசிரியர்: தேனூர்—சொக்கலிங்கன், துறையூர். விலை அணா 6

இந்நூல் 782-கண்ணிகளால் இயன்று சைவ சமய குரவருள் ஒருவரான சுந்தரமூர்த்தி நாயனாருடைய அருமை பெருமைகளை நன்கு விளக்குவதா யிருக்கின்றது. கண்ணிகள் எளிய தெளிந்த தமிழில் அமைந்திருக்கின்றன. ஆசிரியரது தொழில் வணிகமென்று தெரிகின்றது. பொருளுக்குத் தொழிலும் அன்புக்குத் தமிழுமாயிருக்கும் வாழ்வியல் மிகவும் பெருமைக்குரியது. இவர்தம் முயற்சி தமிழ்க்குப் பயனுடையதாய் மிளிருமென்று நம்புகின்றோம்.

கட்டுரைக் கோவை **விலை ரூ. 1-4**

ஆசிரியர்: அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துத் தமிழாசிரியர் பண்டித லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார்.

இச்சிறிய கோவை நூல் ஐந்து கட்டுரைகள் அடங்கியது. இது கல்லூரிக்குப் பாடநூலாக அமைத்தற்குரியது. சிறந்த நல்ல பதிப்பு.



வேலூர். திருநாவுடையார்
தேவாரம் திருப்புகழ் இசைப்புலவர்
திரு. T. M. அப்பாத்துரை ஆச்சாரியார்

ஓம்

செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு-உ௦]　　　சித்திரபானு—மாசி (1943)　　　[பரல்-ச

சொல்லின் செல்வர்*

நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள்

உலகில் மக்கள் எய்தும் பேறுகளுள் கல்வி, பொருள் என்ற இரண்டையும் செல்வம் என ஆன்றோர் வழங்குவர். இவ்வுலக வாழ்க்கைக்குப் பொருள் இன்றி யமையாததாயினும் கல்வியை நோக்க இறப்ப இழிந்ததேயாகும். திருத்தக்கதேவர் சிந்தாமணியில்,

'நற்பொருள் செய்வார்க்கிடம் பொருள் செய்வார்க்கு மஃதிடம்'

எனப் பொருளினை வாளா கூறிக் கல்வியை நற்பொருள் என விசேடித்துக் கூறினர். தெய்வப்புலமைத் திருவள்ளுவ னர் யாரானும் வெளவப்படாததும் கொடுத்தலாற் குறை வுருததும் ஆகிய சீரிய செல்வம் கல்வியே என்றும், பொன், மணி முதலியன அன்னவல்ல என்றும் அவற்றின் இயல்பு தெரிந்துணர்த்தி யுள்ளார். மாணிக்கவாசகப் பெருமான் ஓதற் குப் பிரியும் தலைவன் கூற்றில் வைத்து,

"சிரளவில்லாத் திகழ்தரு கல்விச் செம் பொன்வரை"

எனக் கல்வியை மேருமலையோடு ஒப்பித்துப் பாராட்டி யுள்ளார். இங்ஙனம் கல்வியின் சிறப்பைக் கூறும் சான்றோர் கூற்றுக்கள் எண்ணிறந்தன வாகும்.

---

* 18-11-1939-ல் நிகழ்ந்த உயர்திரு. ஞானியார் அடிகளின் பொன் விழாப் பாராட்டுரை இது. செந்தமிழ்ப் பூம்பொழிலின் முதற் பகுதியி னின்றும் எடுத்தது.

இத்தகைய சிறந்த கல்வியைப் பெற்றுளோர் சொல் வன்மையும் உடையராதல் வேண்டும். அஃதின்றேல் அவர் அக் கல்வியால் உலகிற்குப் பெரும்பயன் விளைக்குநர் அல்லர். ஏனோரால் நன்கு மதிக்கப்பாடும் எய்துநரல்லர்.

"இணரூழ்த்து நாறா மலரனையர் கற்ற
துணர விரித்துரையா தார்."

என்பது வாயுறை வாழ்த்து. திருக்குறள் அமைச்சியலில் சொல்வன்மை என்ற அதிகாரத்தா லன்றி, தூது, அவையறிதல், அவை யஞ்சாமை என்னும் அதிகாரங்களாலும் இப்பொருள் வலியுறுத்தப்படுகின்றது. அரசியலில் கேள்வி, அறிவுடைமை என்னும் அதிகாரங்களிலும் இது சுட்டப்படுகின்றது.

சொல்வன்மை என்பது என்னை? கற்கவேண்டும் நூல்கள் பலவற்றையும் கசடறக் கற்றுணர்ந்தோர் தாம் உணர்ந்த அரிய பொருள்களையும் கேட்போர் மனங்கொள்ளுமாறு எளியவாகச் சொல்லுதல்; சிறந்த பயனுள்ளவற்றைச் சுருக்கமும் விளக்கமும் இனிமையும் பொருந்த வழுவிலவாகச் சொல்லுதல்; பருவம், நிலை, கல்வி, ஒழுக்கம், செல்வம் முதலியவற்றால் தமக்கும் கேட்போர்க்கும் உளவாய தகுதி வேறுபாடுகளை அறிந்து அவற்றிற் கேற்பச் சொல்லுதல்; முன் சொல்வனவும் பின் சொல்வனவும் அறிந்து, நிரல்படக் கோத்துச் சொல்லுதல்; கூறும் பொருளுக்கேற்ப எடுத்தல்படுத்தல் முதலிய ஓசை வேறுபாடமையவும், மெய்ப்பாடு தோன்றவும் சொல்லுதல்; நிமிர்ந்த நிலையும் மலர்ந்த முகமும் தெளிந்த குரலும் உடையராய்த் தடுமாற்றமின்றிச் சொல்லுதல் என்றின்னோரன்ன பண்புகளின் தொகுதியே சொல்வன்மை எனப்படும். இவ்வாறு சொல்லின் உலகினர் அதனைப் பின்னும் கேட்க விரும்புவர்; விரும்பி ஏற்றுக்கொள்வர்; ஏற்று அவ்வழி ஒழுகுவர். இவ்வாற்றால் சொல் வன்மை யுடையார்க்கு உலகம் வயமாதல் பெற்றாம். ஆகவே சொல்வன்மையானது ஓர் வளவிய செல்வமாமென்பது, தேறப்படும். குமரகுருபரவடிகள்,

"சொல்வளம் மல்லல் வெறுக்கையாம்"

என்று கூறியதூஉங் காண்க. முதன் முதலாக மாருதி கூறிய மாற்றம் சிலவற்றைக் கேட்ட இராமன், தம்பியாகிய இலக்கு

வன் முன்னர் அனுமானைப் பாராட்டி யுரைத்தானாகக் கம்பர் பாடிய,

"இல்லாத உலகத் தெங்கும் ஈங்கிவன் இசைகள்கூறக்
கல்லாத கலையும் வேதக்கடலுமே யென்னுங் காட்சி
சொல்லாலே தோன்றிற் றன்றே! யார்கொல் இச்சொல்லின் செல்வன்?
வில்லார்தோள் இளையவீர, விரிஞ்சனோ? விடைவல்லானோ?"

என்னும் செய்யுளின் கருத்து ஈண்டு அறிந்து இன்புறற்பாலது.

சொல்வன்மை என்பது நூல் கற்பிக்கும் ஆசிரியர்க்கும், அவையின்கண் சொற்பொழி வியற்றுவார்க்கும், முறை மன்றத்தில் வாது செய்வார்க்கும், அமைச்சர், தூதர் முதலாயினர்க்கும் இன்றியமையாத தாகும். நூல் உரைகளுள்ளும் மேல் எடுத்தோதிய பண்புகள் அமைந்தனவே என்றும் நின்று இன்பம் பயப்பனவாம்.

இம் மலர்தலை யுலகிற் பல தேயத்தும் பண்டு தொட்டு நாவன்மையான் மேவிய புகழினர் பற்பல ராவர். நம் தண்டமிழ் நாட்டிலே தமிழுரையாகிய அமிழ்த மழையைப் பொழிந்து மன்பதை நன்புலம் குளிர்விக்கும் கொண்டலாக இஞ்ஞான்று ஒருவர் உள்ளனர். ஒருவர் என்ற அளவிலே அவர் திருக்கோவலூர் ஆதினம் திருப்பாதிரிப்புலியூர் திரு. ஞானியார் மடாலயத்தில் அருட்குரவராக எழுந்தருளி யிருக்கும் சிவத்திரு. சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய அடிகளாவர் என்பதனைத் தமிழுலகம் தானே அறியும்.

அடிகளின் அளவுபடாத கல்வியின் பெருமையையோ, ஞான மேம்பாட்டினையோ, அறுமுகப் பெருமானை நனவிலும் கனவிலும் தினைத்துணைப் பொழுதும் மறத்தலில்லாத அன்பின் பெருக்கையோ எடுத்தியம்புதற்கு யான் எத்துணையும் சிறியன். அவர்களுடைய சொற்பொழிவுகள் மேலே குறித்தனவும் குறியாது விடுத்தனவுமாய சொல்வன்மைத் திறங்களெல்லாம் ஒருங்கு பொருந்தியவாதல் தேற்றம். அடிகளின் சொன்மாரிகள் சொற்பொழிவுக் கமைந்த பற்பல அற்புத இலக்கணங்கள் என்றே கொள்ளற்பாலன. அவையிற்றை ஈண்டெடுத்து விளக்குதல் எளிதன்று. பன்முறையும் கேட்டு அந் நன்முறை

களைத் தெளிதல் வேண்டும். அவர்கள் மாணவர்க்குக் கற்பிக்கும் அருமையும் அத்தகைத்தே.

உலகிலே சொற்பொழிவு செய்வார் பற்பலர். ஆனால் சிவத்திரு. ஞானியாரடிகளைப்போல் ஐந்து மணி, ஆறு மணி என்னும் காலவளவு நிலைபெயராதிருந்து, கேட்போர் சிந்தையும் பிற்தொன்றிற் செல்லாவாறு சொன்மழை பொழிவாரை 'இன்றினுங்கோ கேளலம்'. தொல்காப்பியம், திருக்குறள், சங்கச் செய்யுள், பன்னிரு திருமுறை, சித்தாந்த சாத்திரம் முதலாய தமிழ் நூல்களினும், உபநிடதம் சிவாகமம், புராணம், இதிகாசம் முதலிய வடநூற்களினும் சான்றுகள் காட்டி மேற் கொண்ட பொருளைத் தெளிவுறுத்தும் அடிகளின் வித்தகச் சொற்பொழிவு கற்றறிந்தோர்க்குக் கழிபேரின்பம் பயப்ப தோன்றும். எவ்வெப் பொருளையும் எப்பாலவரும் எவ்வெம் மதத்தரும் விரும்பிக் கேட்குமாறு உரைக்கவல்லார் அடிகள் ஒருவரே என்பதனை அனைவரும் அறிவர். அடிகள் எத்தனை ஆண்டுகளாகக் கடல்மடை திறந்தாற்போன்று எத்தனை யாயிரம் சொற்பொழிவுகள் நிகழ்த்தி யிருப்பர்; எத்தனை நூறுயிரவர் கேட்டுப் பயனெய்தி யிருப்பர்; என்பன நினையின், அடிகட்குத் தமிழுலகம் எவ்வளவு கடமைப்பாடுடையது என்பது புலனாகும்.

அடிகள் மடாலயத் தலைமை யேற்ற (ஐம்பதாம் ஆட்டைப்) பொன்விழாக் கொண்டாடும் பேற்றுக்குரியமாகிய நாம் அவர் கள் மேலும் நல்லுடம்போடு பல்லாண்டு பல்லாண்டு வாழப் பல்லாண்டு கூறுவோமாக.

சேக்கிழாரும் பெரிய புராணமும்

[சிவத்திரு. ஞானியாரடிகள் முதலாண்டு விழாவில் வித்துவான் திரு. பாரிப்பாக்கம் கண்ணப்ப முதலியாரவர்கள் பேசியது.]

பெரிய புராண மென்பது அருள்நிலை யடைந்த பெரியோர்கள் தம் உண்மை ஞானனுபவ வரலாறுகளை செந்தமிழ் அழகு ததும்ப திட்ப நுட்பமுடன் திறம்பட எடுத்துரைக்கும் ஒப்பற்றதொரு திப்பிய அருட்காவிய மாகும். செந்தமிழ் அழகெலாம் ஒருங்கு திரண்டு விளங்கும் இக் காவியம் பத்தி யென்னும் பேரொளியால் தமிழ் உலகினை விளக்கி நிற்கின்றது. இஃது இங்ஙனம் பத்தியின் விளக்கத்தில் ஒப்பற் றிலங்குதல் குறித்தே மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் "பத்திச்சுவைநனி சொட்டச் சொட்டப் பாடிய கவி வலவ" எனச் சேக்கிழார் பெருமானை எடுத்துப் போற்றுவாராயினர்.

பத்தித்தனித்தேன் பெருக்கெடுத் தூற்றும் இவ்வருட் காவியம் செந்தமிழ் இலக்கியச் சுவையினும் ஒப்பற்று இலங்குவது பெரிதும் போற்றற்குரியதாம். இக் காவியம் பாக்களனைத்தும் தெய்வ அருள் நலங்கனிந்த பொருள் பொதிந்ததாகவே விளங்குவதாம். எப்பொருளை எடுத்துரைப்பதாயினும் அப் பொருட்களி லெல்லாம் அருள்நலங் கலந்து இலங்க அவைகளை எடுத்துரைத்தலே சேக்கிழார்தம் மனவியல்பாம். திங்களின் தோற்றம் ஞாயிற்றின் தோற்றம் முதலாக எதனை யெடுத்துக் காண்போமாயினும் அதன்கண் ணெல்லாம் அருள்நிலைப் பொருட் டன்மையைக் காணலாம். வானம் இருளால் சூழப் பட்டது எனக் கூற வேண்டுமாயினும் அதனை "அஞ்செழுத்து முணரா அறிவிலோர் நெஞ்சமென்ன இருண்டது வான்" என வெடுத்துக் கூறும் அவர்தம் அருளனுபவ மனோநிலையை ஏனைய புலவர்தம் மனநிலையுடன் ஒப்புக்காண்ட லாகாது. "குழிநிரம் பாத புன்செய் குறும்பயிர் தடவிப் பாசப்பழி முதல் பறிப்பார் போன்று பறித்தவை கறிக்கு நல்க" என்பது போன்றன எண்ணிலாதனவாம்.

ஞானசிரியர்தம் வரலாறுகளை திருநெறித் தமிழின் வாயிலாய் இனிதுணருமாறு அத் தமிழ் மறையினை பன்முறையும் பயின்று பயின்று நாத்தழும்பேறிய அவர்தம் மனத்தகத்தே

றறிக்கிடப்பது அத் தமிழ்மறைச் சொல்லும் பொருளுமே யாதலின் அவர்தம் பாடலெல்லாம் செந்தமிழ் அழகொடு திரு வருளனுபவம் கலந்து ஒளிரும் தேவார வாசகங்களாகவே மிளிர்கின்றன.

திருமருகலிலே திருஞான சம்பந்தப் பெருந்தகை அரவத்தா லிறந்த வணிக மகனை எழுப்புமாறு அருளிய "சடையா யெனு மால் சரணி யெனுமால்—விடையா யெனுமால் வெருவா விழு மால்—மடையார் குவளை மலரும் மருகல்—உடையாய் தகுமோ இவளுண் மெலிவே" என்று தொடங்கும் திருப்பதிகத்தைக் குறிக்கும்பொழுது நம் சேக்கிழார் பெருமான்—"சடையானை எவ்வுயிர்க்குந் தாயானைச் சங்கரனைச் சசிகண்ட மௌலி யானை—விடையானை வேதியனை வெண்ணீற் றானை விரவாதார் புரமூன்று மெரியச் செற்ற—படையானைப் பங்கயத்து மேவி னானும் பாம்பணையிற் றுயின்றானும் பரவுங்கோலம்—உடையானை உடையானே தகுமோ இந்த ஒள்ளிழையாள் உண்மெலிவென் றுறுத்துப்பாட" என்ற திருப்பாடலை ஊன்றிக் காண்போ மாயின் அவர்தம் அருளநுபவ மனஇயல்பும் அருள்நாத ஒலி யாகிய தேவாரப் பாடல்களே அவர்தம் பாடல்களாக உருப் பெற்று வெளிப்போது மியல்பும் நன்கு விளங்குவனவாம்.

"ஐந்து பேரறிவுங் கண்களே கொள்ள அளப்பருங் கரணங்கள் நான்கும்—சிந்தையேயாகக் குணமொரு மூன்றும் சாத்துவிகமே யாக—இந்துவாழ் சடையான் ஆடுமானந்த எல்லையில் தனிப்பெருங்கூத்தின்—வந்த பேரின்ப வெள்ளத்துள் திளைத்து மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்" என்ற திருப் பாடலில் கருவி கரணங்களெல்லாம் ஒருவழிப்பட்டு இறைவ னது திருவருள் நிலையிலே கலந்தொளிருமாறு ஒன்றியிருந்து நினைந்து அருளொடு கலந்த உரையால் அவள்தன் அருட்டிரு அறிவை வாழ்த்தி நிற்கும் பேரின்ப நிலையின் அநுபவம் விளக் கப்படுகின்றது.

இங்ஙனம் அருள்நிலையில் கலந்து அநுபவிக்கும் அன்புரு வாம் பரசிவத்தின் இன்ப தரிசன நிலையின் உண்மை இந்த தரிசன சம்பந்தமாகவே வேறோரிடத்ற எடுத்துக்காட்டி விளக்கங் கொடுக்கப்படுகின்றது. அதனைச் சேரமான்பெருமாள் புரா ணத்தே காணலாம். நாளும் தமது பூசனை முடிவில் கூத்தப்

பெருமானின் திருச்சிலம்பொலி கேட்கப்பெற்று இனித்து வந்த சேரமான்பெருமாள், ஒருநாள் தம் பூசனை முடிவில் அது கேட்கப்பெறுது தமது உடைவாளை உருவி உடலைச்சேதிக்க முற்பட்டதும் திருச்சிலம்பொலி கேட்கப்பெற்ருர் பின்னர் இங்ஙனம் காலந் தாழ்த்தமைக்குக் காரணம் என்னேவென்று பெருமானை வினவலும் பெருமான் அருள்புரிந்ததாக "என்ற பொழுதில் இறைவர்தாம் எதிர் நின்றருளா தெழுமொலியான்—மன்றினிடை நம் கூத்தாடல் வந்து வணங்கி வன்தொண்டன்—ஒன்றுமுணர்வால் நமைப்போற்றி உரைசேர் பதிகம் பாடுதலால்—நின்று கேட்டுவரத் தாழ்ந்தோம் என்ருர் அவரை நினைப்பிப்பார்" என்ருெரு பாடலைச் சேக்கிழார் அருளிச் செய்கின்ருர். இதன்கண்ணே சுந்தரர் பெருமான் தில்லைத் திருச்சிற்றம்பலத்தே போந்து ஒன்றுபட்ட மனத்துடன் தன்னைத் தரிசிக்கும் முறையும், அங்ஙனம் ஒன்றுபட தரிசிக்கும் மனத்தில் உண்டாம் பேரின்ப அருளமுத உரையாம் திருநெறித் தமிழின் பெருமையும் குறித்துரைக்கப்படுகின்றது. இக் குறிப்பினுல் ஞானசிரியர் சிவாலய வழிபாட்டு நிலையும், அவ்வழிபாட்டால் பெற்ற பேரின்ப அருளனுபவ நிலையும் விளக்கி உரைக்கும் திறத்தினுல் சேக்கிழார் தம் அருட்புலமைச் சிறப்பு இனிது விளங்கக் கிடக்கின்றது.

திருஞான சம்பந்தப் பெருமான் மதுரைமாநகரில் தாம் தங்கியிருந்த மடத்தில் அமணர் கொளுவிய தீ, பாண்டியன் மேலதாமாறு கட்டளையிட்ட பதிக முதற்பாடலில் "பையவே சென்று பாண்டியற்காகவே" என்றதன் குறிப்புப் பொருள் இன்னின்னவாம் என ஆசிரியர் சேக்கிழார் பெருமான்,

பாண்டிமா தேவியார் தனது பொற்பிற்
பயிலுநெடு மங்கலநாண் பாதுகாக்கும்
ஆண்டகையார் குலச்சிறையார் அன்பினுலும்
அரசன்பால் அபராதம் உறுதலாலும்
மீண்டுசிவ நெறியடையும் விதியினுலும்
வெண்ணீறு வெப்பகலப் புகலிவேந்தர்
தீண்டியிடப் பேறுடைய னுதலாலும்
தீப்பிணியைப் பையவே செல்க வென்ருர்.

என்ற பாடலால் விளக்கிய அருட்பெருஞ் சிறப்பு அருட்பாவலராகிய சேக்கிழார் பெருமாற்கே உரியதாம்.

சிரிப்பும் அழுகையும்

N. K. வேலன்

சிரிப்பும் அழுகையும் மக்களுக்கு இயற்கையாகவே தோன்றும் உணர்ச்சிகள் ஆகும். மனிதனுடைய உடலும் மூளையும் இவ் வுணர்ச்சிகளுக்கு ஏற்றவாறு அமைந்துள்ளன. நமக்குச் சிரிப்பதற்கு விருப்ப மில்லாதபோதும் சில வேளைகளில் சிரித்துவிடுகிறோம். மூளையின் தூண்டுதலினாலேயே சிரிப்பு நிகழ்கின்றது. ஞாயிற்றினை நேரில் காணும் கண்கள் தாமாகவே மூடிக்கொள்கின்றன. இஃதேபோன்று இன்பம் வரும்போது சிரிப்பும் தானாகவே தோன்றுகிறது.

சிரிக்கும் பொழுது முகத்தில் பல வகையான மாறுதல்கள் ஏற்படுகின்றன. கண்களை மூடும்பொழுது கண்களிலுள்ள தசைகள்மட்டும் அசைகின்றன. சிரிக்கும்போது முகத்திலுள்ள தசைகள் எல்லாம் ஆடுகின்றன. மூச்சு விடும் கருவிகளும் குரல் காட்டும் கருவிகளும் விரைவுடன் அசைகின்றன. இவ் அசைவுகளையே நாம் "சிரிப்பு" என்று சொல்கிறோம். இவ் அசைவுகள் எல்லாம் சிரிப்பு மூட்டியவுடன் ஒரே நேரத்தில் தோன்றுகின்றன. நமது பாதத்தின் அடிப்புறத்தைச் சுரண்டினால் உடனே காலை இழுத்துக்கொள்கிறோம். இதுவும் தசைகளின் அசைவினாலேயே ஏற்படுகின்றது. மூளையின் சொற்படி தசைகள் ஆடுகின்றன.

இன்பம் வரும்போது சிரிப்பும், துன்பம் நேரும்போது அழுகையும் இயல்பாகவே தோன்றுகின்றன. சிறு குழந்தைகள் நினைத்த போதெல்லாம் அழுகின்றன. பெரியவர்கள் இங்ஙனம் அழுவதில்லை. குழந்தைகளின் அறிவு வளர்ச்சியடைய மூளை அழுவதற்குத் தூண்டினால் அதன் போக்கில் விட்டுவிடுவதில்லை. அழக்கூடாது என்று மூளைக்குக் கட்டளை இட்டால் அதன்படி அழுகை வராமல் நின்றுவிடும்.

இன்பத்திற்கும் துன்பத்திற்கும் கண்ணீர் பொதுவாக நிற்கின்றது. "நின் அன்பரெல்லாம் களித்து ஆனந்தக்கண்ணீர் கொண் டாடுகின்றார்" என வரும் அடி பேரின்பத்தினால் கண்ணீர் பெருகுவதை உணர்த்துகின்றது. கண்ணீர் நம் கண்களில்

எப்போதும் கசிந்துகொண்டே இருக்கும். ஆயினும் அது நமக்குத் தெரிவதில்லை. அழும்போது கண்களில் நீர் மிகுதியாய்ப் பெருகுகின்றது. அழாதிருக்கும் நேரங்களில் கண்ணீர் நமது கண்களைக் காய்ந்து போகாமலும் அழுக்கடையாமலும் துடைத்து வைத்துக்கொள்ளும்.

கண்களில் அழுக்குப்பட்டாலும் விழிகள் உலர்ந்து விட்டாலும் பார்வை மங்கிப்போகும். இதனால்தான் நாம் கண்களை அடிக்கடி இமைத்துக்கொண்டே இருக்கிறோம். "இமையா நாட்டம் பெற்றவர்கள் வானத்தவர்" எனப் பெரியோர் கூறுவர். நாம் இமைக்கும் போதெல்லாம் விழிகள் கண்ணீரால் கழுவப்படுகின்றன. விழிகளில் தூசு படிந்தாலும் அல்லது உலர்ந்துவிடும்போல் தோன்றினாலும் மூளை உடனே அதனை யறிந்து ஒரு துளி கண்ணீரை இமையுடன் அனுப்பிக் கண்களை மெழுகிவிடும். இங்ஙனமாக இமைகள் கண்களை இடைவிடாது காத்துவருகின்றன. இவ் உண்மையினை

"விண்ணினைக் காக்கின்ற விமலன் வேள்வியைக்
கண்ணினைக் காக்கின்ற இமையிற் காத்தனர்"

என்னும் கவியிற் காணலாம்.

கண்களின் அடிப்புறத்தில் மூக்கின் ஓரமாய்ச் சிறு துளைகள் அமைந்துள்ளன. மிகுதியாய்ப் பெருகும் கண்ணீர் எல்லாம் இத் துளைகளின் வழியாய் மூக்கினுள்ளே செல்லும். இதனால்தான் நீண்ட நேரம் அழுபவர்களுக்கு மூக்கில் நீர்வடிகின்றது. நாம் விழித்திருக்கும் நேரங்களில் எல்லாம் கண்களைத் துடைத்து ஈரமாக்கும் வேலை ஓயாமல் நடைபெறுகின்றது.

உலகில் இன்பமும் துன்பமும் மாறி மாறி வரும். சிரித்தவர்கள் அழுவதும், அழுதவர்கள் சிரிப்பதும் உலக இயற்கை. இன்பத்திலேயே ஆழ்ந்து கிடப்பவருக்குத் துன்பமும் தொடர்ந்தே வரும். "சிரிப்பெல்லாம் நெருப்பு" என்னும் பழமொழி ஒன்று உண்டு. சிவபெருமான் சிரிப்பினால் முப்புரம் எரித்த கதையினையும் இப் பழமொழி உணர்த்துகின்றது.

இராவணாசுரனா? இராவணேசுவரனா?

வித்வான் காழி சிவ. கண்ணுசாமி பிள்ளை பி. ஏ.

(முன் ௬௧-ம் பக்கத் தொடர்ச்சி)

இராவணன் ஆட்சி முறை

இலங்கைமாநகரிலிருந்த குடிமக்கள் தொகை எழு கடல்களினும் மிகுந்தது. இவ்வளவு தொகையினரான மக்களும், தங்களைப் பொறுத்த வரையில் இராவணனாட்சி கொடுங்கோலாட்சி யென்று குறை கூறினதாகத் தெரியவில்லை; வரி மிகுதியென்று அவர்கள் வாடினரல்லர்; கொடுமையாற் பதறினேம் என்று கூறினரல்லர்; வாழ்க்கை வசதிகள் குறைவென்று வருந்தினரல்லர்; பூரண திருப்தியுடன் களிப்பு மிக்கவர்களாய்க் கவலை யென்பதே இல்லாதவர்களாய்க் காலங் கழித்து வந்தாரெனவே கூறப்படுகின்றது.

> "தேறலுண் டாடுநர் பாடுநராகிக், களிக்கின் றாரலாற்
> கவல்கின்றா ரொருவரைக் காணேன்" (ஊர்தேடு படலம் 30)

என்று அனுமான் உறுதி கூறுகிறான்.

> "கறுத்த வா ளரக்கிமாரும் அரக்கருங் கழித்து வீசி,
> வெறுத்த பூண் வெறுக்கையாலே தூரு மிவ் வீதியெல்லாம்."
> (ஊர்தேடு படலம் 39.)

அரக்கியரும் அவர்களுக்கு உயிரன்ன அரக்கர்களும் காதற் களியாட்டத்தில் ஊடிய காலத்தே, தங்கள் தங்கள் நகைகளை மணிப்பூண்களையும் கழற்றிச் சாளரத்தின் வழியே தெருவில் எறிகிறார்கள்; தெருக்கள் அவ்வாறு கழற்றி எறியப்பெற்ற ஆபரணங்களால் தூர்ந்து கிடக்கின்றன என்று கூறுகின்றான் அனுமான். எறிந்த நகைகளை மீண்டும் எடுக்கத்தோற்றாத இலங்கை மக்களின் பொருட்செல்வச் சிறப்பு எத்தகையது பாருங்கள்! அவர்கள் பொறுக்கி யெடுக்காவிட்டாலும் வறுமையால் வாடுவோரோ, வஞ்சகமாகப் பொருள் தேடும் திருடர்களோ அவற்றை எடுத்துக்கொண் டிருக்கலாமன்றோ? அதுவு

மில்லை. செல்வஞ் சிறந்து, வறுமையின்றி, திருடர் பயமென்பது மின்றி, கவலை யின்றி அரசாட்சி செலுத்திவந்த இராவணன் அசுரன்! ஈசுவரனல்லன்! என்று கூறி வான்மீகியார் நம்மை நம்பச்செய்கிறார்! அவரோ பெரிய வரகவி!

இசை வன்மை

இசையில் வல்லுநர்களும், இசைவேட்கை யுடையவர்களும் கொடுந்தொழில் புரியக் கருதார் என்பது உலக அறிவாளர் முடிபு. ஊர்தேடு படலத்தில் கம்பர்பிரான் கூறும் இலங்கையில் அனுமன் கண்ட ஆடல்பாடற் சிறப்புக்களைப் படித்தால், அரக்கர்களுக்கும் அவர்தம் தலைவர்களுக்கும் இசையிலிருந்த பற்றும் வேட்கையும் தெள்ளிதிற் புலனாம்! இராவணனே இசையில் வல்லவன்; சாமகானம் இசைத்தவன்; எப்பொழுதும் இசை வெள்ளத்தில் மூழ்கியிருப்பவன்; பொதிகைமலைக் குறுமுனியாம் அகத்தியன் இசைத்த கந்தர்வமாகிய இசையாற் பிணிக்கப்பெற்று, தமிழ் முனிக்கும் தமிழ் நாட்டிற்கும் தீங்கிழையேன் என்று உறுதி பூண்டு, தமிழ் மொழிக்கும், தமிழிசைக்கும் தனிப்பெருமை யளித்தவன்! சீரிய இத் தமிழன்பன் அசுரனும், ஈசுவரனல்லனும்; வடமுனியாகிய வான்மீகர் தீட்டுகிறார்; அவர் பெரிய வரகவி!

இராவணன் பண்பு நலம்

அல்லெலாம், அதாவது, இருள் எல்லாம் திரண்ட உருவினனாதலின் இராவண்ணன், இராவணன் என்று பெயர்பெற்ற இராவணன் கருநிறத்தான்; எனினும், ஆணில் அழகன்; ஆண்மையில் மிக்கவன், தவத்திற் சிறந்தவன்.

> வண்மைக் குந்திரு மறைகட்கும் வானினும்பெரிய
> திண்மைக் குந்தனி யுறையுளா முழுமுகந் திசையிற்
> கண்வைக் குந்தொறுங் களிற்றொடு மாதிரங் காக்கும்
> எண்மர்க் கும்மற்றை யிருவர்க்கும் பெரும்பய மியற்ற.
>
> (பிணிவீட்டு படலம்-44)

என்று அவன் பத்து முகங்களையும் புகழ்கிறான் அனுமான். அம்முகங்களில் என்றும் புன்னகை நடம்புரியும்!

"சேர்தோறுந் தொடர்ந்த முறுவல்
வெண்ணிலவின் முகமலர் இரவினுங் கிளர''
(நிந்தனைப் படலம்-6)

என்பதனால் அளவிறந்த தன் சுற்றத்தார்கள் ஒவ்வொருவரிடமும், அன்பு பூண்டு, அவர்களைக் காணுந்தோறும் அவ்வன்பு தோன்ற புன்னகை புரிபவன் என்பதும், எதிரிகளிடமும் அவ்வாறே புன்னகை புரிந்து சிரித்துக் கழுத்தறுக்கும் பண்பு வாய்ந்தவ னல்லன் என்பதும், நன்கு விளங்கும். அரசோலக்கத்தி லிருக்குங்கால், பத்து முகங்களில்,

தேவரோடிருந் தாசிய லொருமுகஞ் செலுத்த
மூவரோடுமா மந்திரம் ஒருமுகம் முயல (பிணிவீட்டு படலம்-50)

என்பதனால், அரச காரியங்களைத் தேவர்களோடும், ஐம்பெருங் குழுவினரோடும், நன்கு, ஓர்ந்து தேர்ந்து முறைப்படி முடிக்கும் செங்கோலான் இராவணன் என்பது எளிதிற் பெறப்படும். அரசியன் முறையில் தேர்ந்த நன்மதிகளுக்குக் காது கொடுத்து வேண்டி யாங்கு, தன் கருத்தை நீதிவழி மாற்றிக் கொள்ளும் அரசனே உண்மையான செங்கோல் மன்னனாவான் என்பது அரசியற்றுறையிற் கண்ட பேருண்மை. அநுமான் கழறிய இடித்துரையைக் கேட்டுச் சினந்து, கட்டுமீறி அவனைக் கொன்றுவிடுமாறு இராவணன் கட்டளையிடுகிறான்; அப்பொழுது அவன் தம்பியாகிய விபீஷணன் தூதாக வந்தவனைக் கொல்வது முறையன்று, என்று எடுத்துக் கூறுகிறான். அப்படியானால் 'கொல்லவேண்டா, வாலில் நெருப்பிடுக' என்று இராவணன் தன் கட்டளையை மாற்றுகிறான். இது உரைகேட்டு முறை வழங்குத லன்றோ? அவ்வாறு இராவணனுக்கு மெய்யுரை விளம்பும்போது விபீஷணன்—பின்னர்த் தம் அண்ணனாகிய இராவணனுக்கு எதிராக, இராமனிடஞ் சரண் புகுந்து, பின்னவனுக்கு உதவிபுரிந்த விபீஷணன்—அதனால் இலங்கை யரசுரிமையைக் கைம்மேற் பெற்றுப் பின் விபீஷணாழ்வானாகத் திகழும் விபீஷணனே,

" ஓத நீருல காண்டவ ருன்றனைப்
போத நீதிய ராருளர் போயினர்
வேத நீதி விழிவழிச் செல்வருங்
காதல் நீயறத்தெல்லை கடத்தியோ."

என்று கூறுகிருன்! இந் நிலவுலகத்தை யரசாண்டு காலஞ் சென்ற அரசர்களுள் உன்னளவிற்கு நீதி அறியும் திறமுடைய அரசர் யாரிருந்தனர்? ஒருவருமில்லையே என்று கூறுகிருன். பின்னும்,

"அந்தண னுலக மூன்று மா தியின் அறத்தினுற்றல்
தந்தவ னன்புக் கான்ற தவநெறி யுணர்ந்து தக்கோய்
இந்திரன் கரும மாற்று இறைவன் நீ!"

அறிவு ஆற்றல்களில் தகுதியுடையவனே வேதங்களில் வல்ல வனே, மூவுலகங்களையும் படைத்த பிரமதேவனது அன்பைப் பெறுமாறு சிறந்த தவமியற்றி வரம் பெற்றவனே, இந்திரனது தொழிலாகிய திரிலோகாதிபத்தியத்தையும் நடத்துகிற இறை வன், தலைவன், (ஈசுவரன்) ஆகிய நீ என்று விபீஷணன் இராவ ணனை அழைக்கிருன். எனவே, இந்திரனுடைய பணியை இயற்றும் இராவணன் அசுரனுயின் இந்திரனும் அசுரனுகா மல் ஈசுவரனுவ தெப்படி? இருந்தாலும் இந்திரனை அசுர னென்று கூருமல் தேவர்க்கிறைவன், ஈசுவரன் என்று கூறும் வான்மீகியார், இராவணனை அசுரனென்றுதான் எழுதுகிருர்! வரகவி வாக்கிற் கெதிர்வாக் குண்டோ!

இனி இராவணன் சீதையிடத்துப் புரிந்த தீங்குதா னென்ன? மூக்கை யிழந்து தன்முன் வந்து அழுத தங்கை சூர்ப்பணகைக்கு இழைத்த பழிக்குத் தான் பழிவாங்கக் கருதி, இராமன் மனைவியாய்த் தன் ஆட்சியின் எல்லைக்குட் பட்ட தண்ட காரண்யத்தில் வந்து தங்கியிருந்த சீதையைச் சிறையெடுத்து வந்தான் இராவணன்! பழிக்குப் பழிவாங்குதல் அரசர்க்குரிய நீதியன்ருே? சிறையெடுத்த காலத்தும் சீதையைத் தீண்டினு னல்லன் இராவணன்.

வேலையு ளிலங்கை யென்னும்விரிநக ரொருசார் விண்தோய்
காலையு மாலைதானு மில்லதோர் கனகக் கற்பச்
சோலையங்கதனின் நம்பி புல்லினுல் தொடுத்த தூய
சாலையி னிருந்தாள் ஐய தவஞ்செய்த தவமாந் தையல்

(திருவடி தொழுத படலம்-64)

இராமன் தம்பியான இலக்குவன் புற்களினுல் அமைத்த தூய குடிலகத்திலேயே இருக்கக் கண்டேன் என்று அநுமன்

சூளுரைக்கின்ருன். இராவணனது மாசற்ற மனதிற்கு இது சான்ருகாதோ! சீதையைக் கண்ட ஆணிலழகன்-இராவணன் உண்மைக்காதல் கொள்ளுகிருன்; ஊணுறக்க மின்றி உழல்கிருன்; நிலே துளங்குகிருன்; தத்தளிக்கிருன்; அவ்வாறிருந்தும் அநுமான் அசோகவனப் பொழிலில் தங்கி யிருந்த இரவு நடுயாமத்தில் அவளேக் கண்டுபோக வந்தவன் காதற் கள்ளனேப் போல் கரந்து மறைந்து வராமல் 'வகைய பன்மகுடம் இள வெயில் எறிப்பக் கங்குலும் பகல்பட' இறைவன்போல வந்தான்; (நிந்தனேப் படலம்-1); ஊர்வசி, அரம்பை முதலிய தேவ மாதர் பணிசெய்ய வந்தான்; நானநெய் விளக்க நாலிரு கோடி நங்கையர் அங்கையிலெடுப்ப வந்தான்; அஃதாவது: எட்டுக் கோடி மங்கையர் புழுகுத்தைலம் விட்டு ஏற்றிய விளக்குகளே ஏந்திவர வந்தான்; கருங்கண் இயக்கியர், அரம்பையர், விஞ்சை மங்கையர், நாகமடந்தையர், சித்த நாரீமணிகள், அரக்கியர் முதலியோர் கூட்டமாகச் சூழ்ந்துவர வந்தான்; குழல் யாழ் சில்லரி முதலிய இன்னிசைக் கருவிகள் மிழற்ற, கின்னர மங்கையர் இசைபாட வந்தான்; என்னே! இவ்வாறு வருபவன் இழிந்த எண்ணமாகிய காமத்தாற் கதுவப்பட்டு வந்தவனுகக் கருதவும் படுமோ? "உன் உயிருக்குயிரான இராமனேக் கொன்று உன்னே வலியக் கொள்வேன்; ஆனல் இராமனிறந்தால் நீ இறப்பாய்; நீ இறந்தால் நான் இறக்க நேரிடும்" என்று கூறும் ஒருவனே காமாதுரன்! (நிந்தனேப் படலம்-66) "நீ இணங்காவிட்டால் உனது உயிருக்குத் தீமை செய்யும் நாள், அதாவது உன்னேக் கொல்லும் நாள் இன்னும் இரண்டு மாதத்திற்குள்ளாகத் தேய்ந்து முடிந்துவிடும்!" (நிந்தனேப் படலம்-73) என்று அச்சுறுத்திச் செல்கிருன் வான்மீகியார் கூறும் அசுரன்; உன்னேக் கொல்லுவேன் என்று கூறினதாக அநுமான் மொழிகின்ருனே யன்றி, இரண்டு திங்கள் கடந்து உன்னே வலியக் கொள்வேன் என்று இராவணன் கூறவில்லே என்பதை நோக்குங்கள். இராவணன் இழிந்த காம வயத்தனு, உண்மைக்காதல் வயத்தனு என்பதை ஆராய்ந்து பாருங்கள்! "இராவணன் சீதாபிராட்டியைக் கவர்ந்து வந்து தன் விருப்பத்தை அவளிடத்துத் தெரிவித்தபோது, அன்னுள் இணங்காது பழித்துப் பேச, அப்பொழுது இராவணன் கடுங்

கோபங் கொண்டு 'சீதையே நான் சொல்லுவதைக் கேள் ! பன்னிரண்டு மாதகாலம் நான் பொறுத்துப் பார்ப்பேன் ; அதற்குள் நீ என்னை யடையாவிட்டால், பாசகர் என்னுடைய காலை யுணவிற்காக உன்னைக் கண்டம் கண்டமாக வெட்டிவிடுவார்கள் '' என்று கூறியதாக வான்மீகத்திலிருக்கிறது என்று கம்பராமாயண உரையாசிரியர் ஒருவர் கூறியுள்ளார். இதனால் இராவணன் மனிதனை யடித்துண்ணும் அசுரன், நரமாமிசபக்ஷணி, (Cannibal) என்று தீட்டப் பெறுகிறானன்றோ ? இவன்தான் வான்மீகர் கண்ட இராவணன் ; கம்பர் கண்ட இராவணன் அல்லன்.

இன்னும் இத்தகைய சான்றுகள் கணக்கில காட்டலாம் ; விரிவஞ்சி விடுக்கின்றேன்.

அன்பர்களே, இதுகாறுங் கூறியவற்றால், இராமரையும் அவரைச் சேர்ந்தவர்களின் பெருமையையும் புகழ்ந்து பாராட்டக் கருதியே நூலியற்றவந்த வான்மீகியார், இராவணனை அசுரனாகவே தீட்டினார் என்பதும், அவர்தம் முதனூலைத் தொடர்ந்து வழிநூலியற்றிய கம்பர், முதனூல் உண்மை வழாஅது இராவணனைப் பொதுவாக அசுரனாகவே வைத்துப் பாடினாரேனும், ஆங்காங்கு அவன் மாற்றார்க்கு அசுரனே யன்றித் தன் சுற்றத்தார்க்கும், குடிமக்கட்கும் கேடேதும் இழைக்காத நீதிவழுவா நெறிமன்னன் என்றும், சிவநெறிச் செல்வன் என்றும், அறிவுக் கலைகள், சீரிய நகரமைப்பு, நாகரிகத் துறைவல்லான் என்றும், நீதி திறம்பாச் செங்கோலான், தலைவன், ஈசுவரன் என்றும் எளிதில் உய்த்துணரவைத்தார் என்பதும் இனிது பெறப்படும். உண்மையை நோக்கின் இராவணன் பிறர்க்குக் கொடுமை இழைத்தான் என்பது ஒரு சிறு பங்காயின், பிறராற்கொடுமை இழைக்கப்பட்டான் என்பது பெரும் பங்காகும். இவ்வாறு நயம்பட மொழிந்து நூலியற்றுதல் அருமை, அருமை ! இது தான் உண்மையான கம்ப சித்திரம் ! கம்ப சூத்திரம் !! இலக்கியப் பெருமானாகிய கம்பர் பெருமை கழறவும் போமோ ?

கம்பரும் தமிழ்நாடும்

[வித்துவான் மு. இராசாக்கண்ணனார், B.O.L.
சிவத்திரு ஞானியாரடிகள் முதல்ஆண்டு நினைவுவிழாவில் பேசியது]

சிறந்த தமிழ்ப்புலவர் கம்பர் என்று கூறுவதுடன் அமையாது அவரைப் பற்றிப் பேசப்படுகின்ற பல்வகைக் கதைக் கூறுபாடுகளில் கருத்திருத்தல் அத்துணைச் சிறப்புடையதன்று. கம்பர் நாவில் காளி சூலத்தால் பொறிக்க அதனால் புலமை சிறந்தனர் எனின் சில திங்களுக்கு முன்னர் உலகவாழ்வினை நீத்த தாகூர் கவியரசர் நாவிலும் இன்றைய நாள் விழாத் தலைவராகும் சிவத்திரு அடிகளார் நாவிலும் காளி பொறித்தாள் எனக் கேள்விப்படுகின்றோம் இல்லை. ஆகவே இவ்வாறு அறிவுடன் இயையாத கதைகளைக் களைந்து கம்பர் உள்ளத்தினைத் திறந்து காட்டும் அவருரைவழிக் காண்போம்.

முதற்கண், கம்பர் தமிழமுதத்தைத் தமிழ் நாட்டார் அருந்துமாறு செய்த அருளுள்ளம் படைத்தவர் என்னலாம். தமிழை அமுதெனல் பொருந்துமாற்றைக் காண்போம்.

பொய்யறியா வாய்மொழி சிறந்த பொய்யா மொழிப் புலவர் அகஒழுக்க நெறியில் தலைவியைத் துய்த்த தலைவன், அவளிடத்தே தானுகர்ந்த இன்பம் பற்றிப் பேசும் உணர்வு தலைப்பட்ட ஞான்று பேசியனவாக அமைத்த வரிகள்,

> தேருந் தோறும்இனி தாம்தமிழ் போன்றிவள் செங்கனிவாய்
> ஆருந் தோறும்இனி தாய்அமிழ் தாயதென் னாருயிர்க்கே

என்பனவாம். இவ்வரிகளில் தமிழ் ஆராயுந்தொறும் இனிமை பயப்பதென்பதும் உண்டாரைச் சாவவிடாது காக்கும் அமிழ்தம் போன்று ஆராய்ந்து கலந்தாரை என்றும் வாழவைக்கும் மண்ணுலக அமிழ்து அது என்பதும் அங்ஙனமே தலைவியை முத்தமிடுந்தோறும் அவை இன்பம் நல்கி உடலினை உணர்வு வெள்ளத்தாழ்த்தி அமிழ்துண்டால் பெறும் பயனைப் பெற வைக்கின்றன என்பதும் கூறப்படுகின்றன. தலைமகள் கலப்பிற்குவமை 'தேருந்தொறும் இனிதாம் தமிழ்'. உவமை உயர்ந்

தது என்று விளக்கும், ‘உயர்ந்ததன் மேற்றே உள்ளுங்காலை’ எனும் தொல்காப்பிய விதிவழி தமிழ் உயர்ந்ததாகின்றது. செங்கனிவாய் இனிதாய் அமிழ்தாயது என்றனர். தமிழுக்கும் அவ்வமிழ்த இயல்பினை ஏற்றிக் காணல்வேண்டும். ஆகவே, தமிழ் ஆராய்வாருக்கு இன்பத்தைப் பயக்க அவ்வின்பம் அறிவில் ஊறி உடலில் ஏறிக் குருதி ஓட்டத்துக் கலந்து தசைநாரில் இயைந்து எற்புத் தொளைதொறும் நிரம்பி ஆராய்ச்சி செய்வோரின் உடலை அமிழ்த நிறைவாக்கி இறவா இயல்பினைத் தரும் என்பதாம். மேலும் தன்னலம் மறந்து தமிழ் நலம் விரும்பி ஊக்கம் சிறந்து உழைக்கும் தமிழறிஞர் உலகொடு திரிதரும் நல்வாழ்வினை உடல் மறைந்த காலத்தும் எய்துகின்றனஃ ராதலின் அவருடல் அமிழ்த உடலாய் மாயா தொளிர்வது என்றும் கருதுகின்றேன்.

மேலும், ‘அன்பின் ஐந்திணை’ எனத் தொடங்கி ‘அன்பின் உயர்ச்சி மேன’ என முடியும் இறையனு ரருள்நூலை ஆழ்ந்து எண்ணும் அறிஞர் ‘தமிழ் அன்பின் மேலது’ என்று கூட்டிக் காட்டுவர். ‘அ’ எனத் தொடங்கும் தமிழ்மறை ‘ன்’ எனும் தமிழ்மொழிச் சிறப்பெழுத்துடன் முடிதலையும் கூர்ந்து நோக்குவோர் ‘அன்பு’ என முடித்துக் குறள் அறிவுறுத்தும் பெரும் பண்பு ‘அன்பு’ என்று அறைவர். அன்பாய் இன்பாய் இலங்குறும் தமிழ்மொழியினை அகத்தெண்ணும் அறிவு சான்ஞோர், ‘ஈறிலாப் பதங்கள் யாவையுங் கடந்த இன்பமே என்னுடை அன்பே’ என்னும், இறைவனை விளிக்கும் மணிமொழியார் சொற்களையும் ஒருசேரக் கருதுவார்களானல், இன்பம், அன்பு எனும் பண்புகளை உருவமாக்கொளும் இறைவனும் அப்பண்புகளினுருவமாகும் தமிழும் ஒன்றே என உறுதி கொள்வர்.

ஆக, இறையை ஆய்வதும் இனிய தமிழை ஆய்வதும் ஒன்ருய் முடிய இவ்விரு தொழிலின் முடிந்த பயனும் அந்தமில் இன்பத்து அழிவில் வீடும் ஒன்ருயிற்று. ஆதலினுலே இற்றைநாள்களில் வாழ்ந்த அரசியற் கவிஞர் பாரதியார்,

“தெள்ளுற்ற தமிழமுதின் சுவை கண்டார் இங்கமரர் சிறப்புக் கண்டார்”

என்றனர்.

இச்சிறிய செந்தமிழமுதத்தை உண்டு களித்துவந்த தமிழ் மக்கள் இடைக்காலத்து வந்த வேற்றுமொழியை விரும்பி அம் மொழியில் விழுமியதெனக் கண்ட காவியச்சுவையில் அழுந்தி நின்றனர். அச்சுவையினும் சாலச் சிறந்த சுவை படைத்து அழியா அழகுடன் விளங்குறும் அமிழ்தம் தமிழ் என்பதைக் கம்பர் இராம காதைவழி அறிவுறுத்தித் தமிழ் மக்களுக்கு விழிப்புணர்வைத் தோன்றச் செய்து காவியத் தாகத்தைத் தணித் தவர் என்று எண்ண வேண்டியதாகின்றது. அங்ஙனம் நினைத் தற்கு இடம் தரும் செய்யுள்,

> அம்பிலே சிலையை நாட்டி அமரர்க்கன் றமுத மீந்த
> தம்பிரான் என்னத் தானும் தமிழிலே தாலே நாட்டிக்
> கம்பநா டுடைய வள்ளல் கவிச்சக்ர வர்த்தி பார்மேல்
> நம்புபா மாலே யாலே நருக்கின் றமுத மீந்தான்

என்பதாகும். குட்டுதற்குப் பிள்ளைப் பாண்டியனும் காதைத் தோண்டி அறுப்பதற்கு வில்லியும் தலைவெட்ட ஒட்டக்கூத்த னும் இல்லாத இக்காலத்தில் தமிழையே அறியாது தமிழ்ப் பெரும் பேராசிரியராகத் திகழ விரும்பும் ஆவலுந்தத் தமிழ் நெறி நிற்பார் போன்ற பெருந்தகையினர், இப்பாட்டில் காணப் படும் 'தாலே நாட்டி' என்னும் தொடரை வெட்டித், 'தன்னை நாட்டி' எனப் போட்டு அச்சிடுகின்றார் என்பதைக் கண்டு தமிழுலகத்து அறிவுடை மக்கள் உள்ளம் உடைகின்றனர். இத் தீவினையாளர் ஒருபுறம் இருக்க, இச்செய்யுளின் திரண்ட கருத்து, தமிழ்க் கம்பர் தமிழ் நாட்டினரைத் தமிழமுது அருந்து மாறு செய்தனர் என்பதே.

தமிழ் வாழ வாழும் தக்கோர்களே!

கம்பர் தமிழ்நாட்டுடன் இயைத்துக் காணுதற்குத் தக் கோரே என்பதைக் கண்ட நாம் இனித் தமிழ்நாட்டுடன் அவரைச் சேர்த்துக் காண்போம். காணும் முன்னே கம்பர் காலத்துத் தமிழ் நாட்டின் நிலையைக் காணுதலாலேதான் அவ ராற்றிய தொண்டி னருமையைத் தக்கவா றறிய முடியுமாதலின் நாட்டியல் நிலையைச் சுருங்கக் காணலாம்.

கி. பி. இரண்டாம் நூற்றாண்டின் பின்னர் ஏறக்குறைய ஏழாம் நூற்றாண்டின் தொடக்கம்வரைத் தமிழ்நாடு களப்பிரர்

எனும் வேற்றின மக்கள் ஆட்சியுள் கிடந்தது. அன்றியும் வட மொழிக்கு ஆக்கம் தந்த பல்லவர் இத்தென்னுட்டில் ஏறக் குறைய பத்தாம் நூற்றுண்டு வரை ஆண்டனர். பழங்குடி மக்களாகிய சேர சோழ பாண்டியர் வன்மை இழந்து நின்றனர். இக்காலத்திலே சைனரும் பௌத்தரும் தத்தம் சமயக் கொள்கையுடன் வடமொழியினையும் நாட்டில் பரப்பினர். ஆகவே தமிழ்நெறி குன்றித் தமிழ் மொழியின் ஆக்கம் சிதைவுண்டது. மக்கள் காவியச்சுவையில் ஆழ்ந்து துய்த்துத் தலை துளக்கி மகிழ்ந்தனர். இக் காலப்போக்கினைக் கண்ட கம்பர் அழகொழுகும் தமிழில் காவிய இனிமையைப் புலப்படுத்திப் பண்டைத் தமிழ்ப் பண்புகளைத் திரட்டிக் காட்டும் வழியே சங்க இலக்கியங்களின் அழகினை உணரச் செய்தற்கு எண்ணி அவற்றிற்கு நிலைக்களனுக இராம காதையினைக் கைக் கொண்டனர். அந்நாளைய மக்கள் உள்ளம் விரும்பிக்கொண்ட நூலதுவாகலினுனும் தாம் கருதும் வெள்ளத்தனைய கருத்துக் களைக் கூறற்குப் பெரியதொரு நூல் வேண்டியிருந்தமையாலும் மாக்கதையினைக் குறியாகக் கொண்டனர்.

தம் நூலை அரங்கேற்றுதற்கு அளவில்லாத் தொல்லை அடைந்தனர் கம்பர் என்பதைப் பல கதைகள் அறிவிக்கின்றன. பின் வருவன அவருடைய வாய்மொழிகள்.

1. நொய்தின் நொய்யசொல் நூற்கலுற் றேனெனை
வைத வைவின் மராமரம் ஏழ்தொளை
எய்த எய்தவற் கெய்திய மாக்கதை
செய்த செய்தவன் சொல்நின்ற தேயத்தே

2. வையம் என்னை இகழவும் மாசுஎனக்கு
எய்தவும் இது இயம்புவது யாதெனில்

“செய்த தவத்தினையுடைய வான்மீகி ஆக்கிய மாக்கதையாகிய இராமாயணம் நிலைத்து வாழுறும் இந்நாட்டிலே யானும் இராம கதையைச் சொல்லுவான் முற்பட்டு என்ன பெறுகின் றேன்? வைதலைப் பெறுகின்றேன். தமிழ் மொழியில் மக்கள் உள்ளத்திற் கேற்றவண்ணம் இக்கதையைச் சொல்லும் எனக் குக் கிடைக்கும் பரிசு ‘வைதல்.’ இவ் வைதலுக்கு ஒத்து வருவது மராமரம் ஏழும் தொளைக்கப்பட்ட தன்மை. மரம் தொளை

யுண்டது போன்று யானும் வைதல் என்னும் அம்பால் தொளைக்கப்படுகிறேன் " என்கின்றனர் கம்பர்.

இச்செய்யுள் கூர்ந்து ஆழ்ந்து நோக்குவார்க்குச் சில கருத்துக்களைப் புலப்படுத்தாமல் போகாது. மாக்கதை செய்த செய்தவன் என்பது வால்மீகியைக் குறிக்கின்றது. 'அவன் சொல் நின்ற தேயம்' என்பதால் வால்மீகியின் சொற்கள் நிலைத்து நிற்குமாறு மக்கள் போற்றிக்கொண் டிருந்தனர் என்பது போதரும். தேயம் என்பது தமிழ் நாட்டினைக் குறிக்கும். நாட்டு மக்கள் தன்னை வைவதாகக் கூறுகின்றார். ஏன் வைதல் வேண்டும்? ஒருவழிச் செல்லும் ஊக்கம் சிறந்த மதியினர் மற்றொரு வழி உள்ளத்தைச் செலுத்தத் துன்புறுவர் என்பது உண்மை. அல்லாமலும் தம்மை அவ்வாறு செலுத்துமாறு தூண்டுவோரிடத்துப் பகையுணர்வு கோடலும் தக்கதே. ஆகவே வடமொழிக் கிருந்த வன்மையையும் வடமொழியிடத்தே மக்களுக் கிருந்த வெறியையும் தமிழமுதத்தால் தணிக்கப் புகுந்தவர் கம்பர், என்பது விளக்கமுறும். இக்கருத்தினைத் தெளிவுற விளக்குதற்கே 'வையம் என்னை இகழவும் மாசுஎனக் கெய்தவும்' என்கின்றனர். கம்பர் தமிழ் நாட்டிற்குச் செய்த முதன்மைத் தொண்டின் போக்கு எத்தகைத்து என்பது தமிழறிவுடையோர் எண்ணிக்கோடற் குரியதாம்.

கம்பர் இராமகதை பாடியதற்கு வேறொரு காரணம் தமிழ்ப் பாவிற்குள்ள மாண்பினையும் அழகினையும் ஆம் பிற இயல்புகளையும் தெளிவுற விளக்கிக் காட்டுதல் ஆகும். தமிழருமையைத் தமிழ்ப் பாவினகத்தும் எடுத்து அறிவித்தல் முறைமையே. அத்தொழில் முயற்சிகொளும் புலவர் முத்தமிழினை முறையே கற்றுச் சிறந்த பெரும்புலவர்களைத் தழுவிக்கொண்டு 'என்னைத் தமிழன் என்று கண்டுகொள்ளுங்கள். நான் தமிழ்ப் பித்தன், தமிழ்ப் பத்தன், ஆதலின் என் பாக்களில் பிழைகள் காணப்படின் அன்பால் நிகழ்ந்தன என்று மன்னிக்க' என்கின்றனர்.

1. பொய்யில் கேள்விப் புலமையினோர் புகல்
தெய்வ மாக்கவி மாட்சி தெரிக்கவே

2. நான் தமிழ்ப்
பாவிறலிதுணர்த்திய பண்பரோ

3. முத்த மிழ்த்துறை யின்முறை போகிய
உத்த மக்கவி கட்கொன் றுணர்த்துவேன்
பித்தர் சொன்னவும் பேதையர் சொன்னவம்
பத்தர் சொன்னவும் பன்னப் படுபவோ.

சிறப்புப் பாயிரத்துக் கடைவரியை நோக்குங்கால் உள்ளம் நெகிழ்கின்றது. புலமைக் கடலாகிய கம்பரின் உள்ளப் போக்கு மிகத் தெளிவாகக் காணப்படுகின்றது. படிப்போர் அவ்வரிக்கருத்தில் ஆழ்ந்து தம்மை மறப்பர் என்ப துறுதி. அவ் வரி எது ?

சடையன் வெண்ணெய் நல்லூர்வயின் தந்ததே.

சடையன் - சடையப்ப வள்ளல் - இளமை தொட்டுக் கம்பரைக் காப்பாற்றிய வள்ளல் - அவரைத் தான் மறவாது போற்றும் நெறியைச் செய்ந்நன்றி கொன்றறியாத் தமிழுலகமும் அறியவேண்டும் என்பது கருதி இராம கதையினை யாப்புறுத்த மேற்கொண்டனரோ என எண்ணவேண்டி யிருக்கின்றது.

இனிக் கம்பரின் தமிழ்வழிச் செல்லும் உள்ளத்தினைக் காண்பாம்.

முதலது ஆற்றுப் படலம். இதன்கண் தமிழ்நில ஐந் திணை வளம் அழகுறச் சொல்லப்பட் டிருக்கின்றது. குறிஞ்சி பாலை முல்லை மருதம் நெய்தல் எனும் ஐம்பெரும் பிரிவுகளும் செம்மையாகக் கூறப்படுகின்றன. இத்தகைய திணைப்பிரிவு தமிழ் வழக்கே அன்றி அயல்வழக்காகாது என்பது உறுதியாக அறிந்த தொன்று.

முல்லையைக் குறிஞ்சி ஆக்கி மருதத்தை முல்லை ஆக்கிப்
புல்லிய நெய்தற் றன்னைப் பொருவரு மருத மாக்கி
—ஆற்று 17.

எனும் வரிகளே சாலும்.

அடுத்துக் காணப்படுவது நாட்டுப்படலம். முதற் செய்யுளில் வான்மீகி பாடிய நாட்டினை அன்பெனும் நறவம் மாந்தி

மூங்கையனாகிய யான் பேசலுறுகின்றேன் என்றுரைத்து அடுத்த செய்யுளில்,

வரம்பெலாம் முத்தம் தத்தும் மடையெலாம் பணிலம்

—நாட்டு 2.

என்கின்றனர். வான்மீகி புகழ்ந்த நாடும் இராமன் தந்தை ஆண்ட நாடும் இராமன் வாழ்ந்த நாடும் அயோத்தியே அன்றித் தமிழ் நாடு அன்று. அயோத்தியைப் புகழத் தொடங்கும் தொடக்கத்திலேயே முத்தினைக் கூறுகின்றார் கம்பர். இம்முத்து எந்நாட்டுக் கருப்பொருள்? அயோத்தியில் முத்து ஏது? தமிழ் நாட்டிற்குரிய தனிப்பெரும் பொருள் அன்றோ அது? சில காண்டங்களைத் தாண்டிச் செல்லும் கம்பர் தமிழ் நாட்டினை அண்டர் நாட்டுடன் ஒன்றாக வைத்தெண்ணலாமா என்று வினவும் கம்பர் தமிழ் நாட்டிற்கே சிறப்பாக நிற்கும் முத்தும் முத்தமிழினையும் தருமாயின் அண்டர் நாடு இந்நாட்டிற்கு ஒத்த நாடு என்று சொல்லலாம் என்றனர். ஆகவே எடுத்த எடுப்பில் நாட்டினைப் பாடும் நல்லவர் வாக்கில் வெளிப்படுவது தமிழ் முத்தாயின் அவர், தம்மை மறந்து தமிழராக வைகினர் என்பது திருத்தமாகப் பெறப்படுகின்ற தன்றோ?

தமிழ் மக்களுக்குச் 'சுரம்' விரும்பத்தகும் பொருள் அன்று. இயற்றமிழ் சிறந்த இசைத்தமிழில்தான் கருத்தூன்று வார்கள். பாடுவோரும் பொருள் தெரிந்து பாடுதல் வேண்டும்; கேட்போரும் பொருளறிந்து இசையைத் துய்க்க வேண்டும் என்பது அவர்தம் கருத்து. பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவோரே சிவனடிக்கீழ் வாழும் செல்வத்தைப் பெற்றோர் என்றனர் மணிவாசகனார். இயலறிவில்லா இசையறிவு பாழாய்ப் பயனிலதாய் ஒழியும் என்பதைத் தூய தமிழர் வழியே கம்பரும் விளக்கி யிருக்கின்றார்.

பருந்தொடு நிழல்சென் றன்ன இயலிசை பயன்துய்ப் பாரும்

—நாட்டு. 15.

குழலும் யாழும் தமிழ்நாட்டு இசைக்கருவிகள் அன்றோ?

கூறுபாடலும் குழலின் பாடலும்

—நாட்டு. 56.

நகரப் படலத்துத் தொடக்கத்தில் முதற் செய்புளில் அயோத்தியைக் கூறுதற்கு முன்வரும் நம் புலவர்,

செவ்விய மதுரம் சேர்ந்தநற் பொருளில் சீரிய கூரிய தீஞ்சொல்
வவ்விய கவிஞர் அனைவரும் வட நூல் முனிவரும் புகழ்ந்தது

என்கின்றனர். இங்கே கவிஞர் என்று குறிக்கப்படுவோர் தமிழ்ப் புலவரே ஆவார். அவர்களைக் குறிக்கும் தொடரின் அழகையும் பொருளின் ஆழத்தையும் எண்ணுவோர் உள்ளத்தில் கம்பருக்குள்ள தமிழ்ப்பற்றின் பெருநிலையும் திடமுற விளங்கும். மதுரத்தைச் செவ்விய என்ற அடையுடன் சேர்த்தும் பொருளை நல் எனும் அடையுடன் இயைத்தும் சொல்லை, சீரிய கூரிய தீம் எனும் மூன்று அடையுடன் கூட்டியும் கூறியுள்ள நிலையையும் இவ்வாறு கூறப்பட்ட கூற்றுக்களால் எழும் செறிவையும் எண்ணுவோர் கம்பரின் கருத்தினையும் விழிப்புறக் கண்டோராவர். வட நூல் முனிவர் என்றே இரு சொற்களால் அம்மொழிப் பெரியோரைக் குறித்ததும் உன்னற்பாற்று. சிலர் தமிழ்ப் புலவர் என்பது வெளிப்படையாகச் சொல்லப்படவில்லையே என ஐயுறுவராயின் இந்நாட்டு மொழியுடன் வந்தேறியதாகிய வடமொழியைத் தவிர்த்து வேறு மொழிகள் கம்பர் காலத்து வாழ்ந்தன அல்ல ஆகலானும், அயோத்தியா காண்டத்தில்,

தென்சொற் கடந்தான் வடசொற் கடற்கெல்லை தேர்ந்தான்

என்று கூறுகின்றுழி முன்னர்த் தென்சொல் எனத் தமிழைக் குறித்தலானும் தென்மொழி தமிழே ஆதலானும் இங்குக் குறித்ததும் தமிழையே என்று குறிக்கொள்ளுதல் வேண்டும்.

தமிழ்மொழித் தொடர்பினைப் பெற்ற முனிவர் அகத்தியர் பேசப்படும் இடங்களில் அவரைத் தமிழுடன் இயைத்துக் கூறிக் கூறிச் செல்லுங்கால் தமிழின் பெருமையினையும் புலப்படுத்துகின்றார். தாடகைவதைப் படலத்தில்,

தமிழெனும் அளப்பருஞ் சலதி தந்தவன்

என்றும், அகத்தியப் படலத்தில்,

நீண்ட தமி ழாலுலகை நேமியி னளந்தான்

என்றும்,

உழக்கு மறை நாவிலு முயர்ந்துலக மோதும்
வழக்கிலு மதிக்கவியி னும்மரபி னுடி
நிழற்பொலி கணிச்சிமணி நெற்றியுமிழ் செங்கண்
தழற்புரை சுடர்க்கடவுள் தந்ததமிழ் தந்தான்

என்றும்,

நின்றவனை வந்தநெடி யோனடி பணிந்தான்
அன்றவனும் அன்பொடு தழீஇயழுத கண்ணுன்
நன்றுவர வென்றுபல நல்லுரை பகர்ந்தான்
என்றுமுள தென்தமி ழியம்பியிசை கொண்டான்

என்றும் கூறியமை காணுதற்குரித்து. இவற்ருல் தமிழ்மொழிக்கெனத் தொண்டு செய்தவன் அகத்தியன் என்பதும் தாமரைக் கண்ணுன் தன் திருவடிகளா லுலகை அளந்தவாறேபோல் அகத்தியனும் தமிழால் உலகை அளந்தான் எனவே உலகெங்கும் பரவிய பண்டைச் சீரிய செம்மொழி தமிழ்மொழி என்பதும் விளக்கமுறு வேதத்திலும் சிறந்து உலக வழக்கினும் செய்யுள் வழக்கிலு முள்ளனவற்றை முறையே அறிவிக்கும் ஆற்றல் சிறந்தது தமிழ் என்பதும் உலகம் தோன்றிய நாள் தொட்டு அழியாத இயல்பினை உடைத்தாய்ச் சிறக்கும் தென்னுட்டில் மக்கள் என்று பேசத்தொடங்கினரோ அன்று தொட்டு வழங்கும் வழக்காற்றினை யுடையதாகவே காலம் வரையறை செய்துணரா மாட்டாச் சிந்தையுஞ் செல்லாச் சேணெடுங் காலமாய்த் தழைத்தது கன்னித் தீந்தமிழ் என்பதும் கம்பர் கருத்துக்களாக அறியத்தக்கன.

இவ்வுல கெங்கும் பரவி யிருந்த பழம் பெருமை தமிழருக்கே உண்டென்றுணரும் தற்கால ஆராய்ச்சி அறிவுக் குறுதுணையா யமைந்த 'நீண்ட தமிழாலுலகை நேமியினளந்தான்' எனும் தொடர்க் கருத்துப் பொன்னினும் உயர்ந்த மணியினும் சிறந்தது. ஒருமொழியினை ஒருவர் உண்டாக்கி வழங்கச் செய்தல் இயலாதது எனும் மொழிநூல் கொள்கைக் குடன்பட்டவரான கம்பர், 'தமிழெனும் அளப்பரும் சலதி தந்தவன்' என முதலில்

குறித்தாரேனும் அதன் பொருள் 'அகத்தியன் தமிழ்க் கடவுக்குத் தனிப்பெருந் தொண்டாற்றிய தொண்டன்' என்றே கொள்ளல் வேண்டும் என வலியுறுத்துவாராய்' என்றும் உள தென்தமிழ்' என்றும், இறைவனை ஒத்து அழியாது விளங்கும் பண்புடையதென்று அறிவிப்பாராய்க் 'கணிச்சிக் கடவுள் தந்த தமிழ்' என்றும் கூறினர். மேலும் தமிழ்மொழிப் பண்புணர்வோர் பெருதன இம்மையிலும் அம்மையிலும் இல்லை என்பதனைத் திடமுற விளக்கும் விருப்பத்தினராய், இராமன் தன்னைக்கண்ட பிற முனிவர்களிடம் தான் அகத்தியரைக் காணும் விருப்பத்தினன் என்பதை அறிவித்த ஞான்று அவர்கள் கூறியதாக,

> "...........அவன் சேருதி சேர்ந்தபின்
> இல்லை நின்வயின் எய்தல்இல் லாதவே"

என்றனர். தமிழ்க் குரவனைச் சார்ந்தால் இராமன் எல்லாவற்றையும் பெறுவான் என்றதின் குறிப்புத் தமிழைச் சார்ந்தார் பெருதன இல்லை என்பதை அறிவிக்கின்றது.

தமிழ் நாட்டுத் தமிழ்ச் சங்கத்தைப் பற்றிக் கூறும் கம்பர் கருத்து என்றென்றும் நினைவில் பொதிந்து கோடற்குரியது. கிட்கிந்தைக் காண்டம் நாடவிட்ட படலத்தில் தென்திசை நோக்கிச் சீதையைத் தேடுமாறு வானர வீரர்களை நோக்கிச் சுக்ரீவன் கூறும் கூற்ருய்,

> தென்தமிழ்நாட் டகன்பொதியில் திருமுனிவன் தமிழ்ச்சங்கம்
> 　　　　　　　　　　　　　　　　சேர்கிற்றீரேல்
> என்றுமவண் உறைவிடமாம் ஆதலால் அம்மலையை இடத்திட்டேகி

என்கின்ருர். தெற்குத் திக்குத் தவிர்த்து வேறு திசையில் தமிழ் நாடு இல்லை ஆகவும் இனிமை நிறைந்த நாடு என்று குறிப்பான் தென் தமிழ்நாடு என்றும் பொதியில் சிறு மலையாயினும் அகன்று பெருகிய தமிழ்மொழி கலந்தொளிர ஒளிரும் மலையாதலின் 'அகன் பொதியில்' என்றும் தமிழ் எனும் செம்மைத்திரு சேர்ந்த முனிவரர் 'திருமுனிவர்' என்றும் தமிழ் நாட்டகத்தாய சங்கம் தமிழ்ச்சங்க மாதலன்றி வேற்று மொழிச் சங்கம் சிறத்தற்குத் தகுதி இல்லாமலிருக்கவும் எண்ணுந்தொறும் படிக்குந்தொறும் இன்ப ஊற்றெழுதற்குக் காரணமாய சங்கம் என்றற்குத் 'தமிழ்ச் சங்கம்' என்றும் வானரராகும் அவ் வீரர்க்கு ஆண்டுச் சேரும் ஆற்றல் குறைவு என்பார் 'சேர்கிற்றீரேல்' என்றும் சேரின் தமிழினிமை செவியகம் புக்கு உள்ளகத் துணர்வினைக் கிளர்ந்தெழச் செய்து உடலினை அமிழ்த

நிறைவாக்க அத் தீந்தமிழ்க் கடலிலேயே தேக்கெறிந் தெஞ் ஞான்றும் கிடப்பராதலின் ' அவண் உறைவிடமாம் ' என்றும் வலமாகச் சூழில் பிறவிப் பயன் எளிதே கைவர மேற்கொண்டு செல்லும் முயற்சி குன்றியொழியும் என்பார் ' இடத்திட்டேகி ' என்றும் கூறிய நெறியில் கருத்திருத்தும் அறிஞர்கள் கம்பரின் தமிழ்ப் பண்புகளால் உருவாக்கப்பட்ட உள்ளத்தின் உயர் வினைக் கண்டோராவர்.

இறுதியாகக் கம்பர் தமிழ் நாட்டினைப் பற்றிக் கொண் டுள்ள கருத்துக்கள் ஒன்றிரண்டைக் கூறிக் கால வரையறைக் குள் என் சொற்களை முடித்துக் கொள்ள முயல்வேன்.

' வட வேங்கடம் ' என மங்கலச் சொல்லால் பனம்பார னர் வாழ்த்திய வேங்கடமாகிய தமிழ் நாட்டின் வட எல்லையை,

> ' கோடுறுமால் வரையதனைக் குறுகுதிரே லுங்கெடிய கொடுமை நீங்கி
> வீடுறுதி ராதலான் விலங்குதிர் '

என்றனர். தமிழ் நாட்டின் எல்லை சாரும் குரக்கினம் எல்லை சேர்வதன் முன்னர்ப் பெறுத பெரும் பேறுகிய உள்ளக் கொடுமை உயிர்க்கோணல் நீங்குந் தன்மையினை எய்துவர் எனின் தமிழ் நாட்டில் பிறக்கும் பெருமை பெற்றுண்மைத் தமிழ் மக்களாய் வாழும் அரிய பேறெய்தியோர் எத்துணை உயர் நலத்தை எய்துதற்குரியார் என்பதைக் கூருக் கூற்ருய்க் கூறும் கம்பரின் கருத்தைக் காணுங்கள் !

இனித் தமிழ் நாட்டினைத் தொண்டை நாடு சோழநாடு தென்பாண்டித் தமிழ்நாடு எனப் பிரித்துக்கொண்டு ஒவ்வொரு நாட்டினையும் விளக்கமுறக் காட்டிச் செல்லுகின்ருர். தொண்டை நாட்டினைக் கூறும் பாக்களுள் ஒன்று கூறுவேன்.

> குன்று சூழ்ந்த கடத்தொடும், கோவலர்
> முன்றில் சூழ்ந்த படப்பையும், மொய்புனல்
> சென்று சூழ்ந்த கிடக்கையும், தெண்டிரை
> மன்று சூழ்ந்த பசப்பு மருங்கெலாம்.

இங்கே குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் எனும் நானில வளம் கூறப்படுதலைக் காண்மின். ஆற்றுப் படலத்திலும் நானில வளம் கூறிய கம்பர் உரையுடன் இதனையும் சேர்த்து நோக்கு வோமாயின் தமிழ்ப் பழகிய கம்பருள்ளத்தின் கனிவும் மாண் பும் எண்ணுந்தோறும் இனிமை பயக்கின்றது.

சோணாட்டினைக் காட்டும் பல பாக்களுள் ஒருவரியினையே குறிக்க எண்ணுகின்றேன்.

துறக்க முற்றார் மனமெனத் துறைசெழுநீர்ச் சோணாடு.

இறுதியாகத் தென்பாண்டித் தமிழ் நாட்டினைப் பேசும் பாக்களுள் ஒன்றினைத் தமிழ்நாட்டு வணக்கமாகக் கூறி என் சொற்களை முடித்துக் கொள்கின்றேன்.

அத்தி ருத்தகு நாட்டினை அண்டர்நா
டொத் திருக்கு மென்றா லுரை ஒக்குமோ
எத்தி றத்தினு மேழுல கும்புகழ்
முத்தும் முத்தமி ழும்தந் து முற்றுமோ

வானாடு தமிழ் நாட்டினை ஒக்கும் என்றால் உரையானும் ஒவ்வாது என்பதும் சொல்லுதற்கும் எண்ணுதற்கும் சார்தற்கும் உரியனவாகக் கருதப்படும் திறங்கள் எல்லாவற்றானும் அறிவுடையோ ரெல்லோரும் ஒருங்கே புகழும் முகத்தினையும் முத்தினை ஒத்துத் தண்ணிய வெள்ளொளி வீசி விளக்கம் தந்து அறியாமைப் பேரிருளை அகன்றேடுமாறு அழிக்கும் இயல் இசை நாடகம் எனும் முக்கூற்றினது ஆம் தமிழையும் பெறுதது அது என்பதும் கூறப்படுகின்றன.

செந்தமிழ் நலம் சிறந்த சீரியோர்களே !

இதுவரை, புலவர் இன்னார் என்பதும் கம்பர் அவரினத்தினர் என்பதும் அவர் தமிழமுதை அருத்தியவர் என்பதும் காலநிலை கண்டு செய்ய வேண்டிய கடமை உணர்ந்து தமிழ் வழிச் சென்ற ஆன்றோர் என்பதும் தாய்மொழிக்கே உடல்பொருள் உயிர் உதவிய ஒழுங்கில் தமிழ்நெறி தழுவித் தமிழின் நல்லியல்புகளை விளக்கிச் சொற்றனர் என்பதும் தமிழ் நாட்டின் தனிப் பெரும் பெருமையை உள்ளவாறு உறங்கிய மக்களுக்கு இடித்துரைத்த தனிமகார் என்பதும் கூறப்பட்டன.

எங்கள் தனிப்பெரும் குரவராகிய சிவத்திரு ஞானியாரடிகளாரின் முன்னர் இருந்த ஊழ்வினை வலியால் சில கூறினேன். நல்லனவற்றை அவர்களின் தாமரைத் திருப்போதுகளுக்காக்கிப் பிழை உண்டெனின் மன்னிக்க வேண்டுகின்றேன். தங்களுக்கும், இக் கூட்டத்திற்குக் காரணமாய்ச் சிறக்கும் சைவ சித்தாந்த சங்கத்திற்கும், அதன் செயலாளர் திரு. வ. சப்பையா அவர்களுக்கும், என் நன்றியைக் கூறி எங்கள் அடிகளாரின் அடியிணைகளை வழுத்தி என் பேச்சினை முடித்துக் கொள்கின்றேன்.

திருவாரூர்ப் பள்ளு

[வித்துவான் திருவாட்டி சிவ. பார்வதியம்மையார்]

13-11-42-ல் திருச்சி வானொலியில் பேசியது.

திருவாரூர்ப் பள்ளு என்பது திருவாரூரிலே கோயில் கொண்டிருக்கும் தியாகராசப் பெருமானைப் பாட்டுடைத் தலைவராகக்கொண்டு பதினாறும் நூற்றாண்டில் விளங்கிய கமலை ஞானப்பிரகாசர் என்னும் பெரியாரால் இயற்றப்பெற்றதோர் தமிழ்ப் பிரபந்தம். இது, தியாகராசர் பள்ளு எனவும் வழங்கும்.

திருவாரூர் என்பது சோழநாட்டில் உள்ள, தேவாரப் பாடல் பெற்ற திருப்பதிகளில் ஒன்று. இப் பதி, விராட் புருடனுக்கு மூலாதாரமெனவும், பூமிதேவிக்கு இதயகமலமெனவும் பஞ்சபூதத்தலங்களுள் பிருதிவித் தலமெனவும், பிறக்க முத்தி தரும் திருப்பதி யெனவும் கூறப்படும்.

இப் பதி, சோழமன்னர்கள் முடிசூடுதற்குரிய நகரங்கள் ஐந்தனுள் ஒன்றாயும், அவர்களுக்குத் தலைநகராயும் உள்ளது. இப் பதியிலே கோயில் கொண்டிருக்கும் தியாகேசர், அசைந்தாடிய பெருமான், அடிக்காயிரம் பொன்னளிப்பவர், அந்தியும் சந்தியும் ஆடுவார், இருந்தாடழகர், திருவந்திக்காப்பழகர், தியாக சிந்தாமணி, வீதி விடங்கப்பெருமான் என்பனவாதிய பெயர்களைப் பெறுவர். இப் பெருமான் முதலில் திருப்பாற்கடலிலே திருமாலாலும், பின்பு அவரால் அளிக்கப்பெற்ற இந்திரனாலும் அதன் பின்னர் அவன்பாற் பெற்ற முசுகுந்தச் சக்கரவர்த்தியாலும் வழிபடப்பெற்றவர். அவ்வரசனால் இத் தலத்திற்கு எழுந்தருளியவர் இந்நூலாசிரியராகிய ஞானப்பிரகாசர் திருவாரூரிலே வாழ்ந்து வந்தவர். அதனாலேயே 'கமலை ஞானப்பிரகாசர்' எனப்படுவர். இவர் ஓர் இல்லற ஞானி, எப்பொழுதும் யோக நிட்டையில் அமர்ந்திருக்கும் இயல்பினர். இவர் திருவாரூர்ப் பள்ளையன்றி, சிவானந்த போதம், திருமழுவாடிப்புராணம் முதலிய வேறு பல நூல்களும் இயற்றியுள்ளார். இவர் எத்தனையோ பல அற்புதங்கள் நிகழ்த்தினாராகக் கதைகள் உள்ளன. இவரது வரலாற்றையும் பெருமையையும் உணர்த்தும் நூல் ஒன்றும்

ஞானப்பிரகாசமான்மியம் என்னும் பெயருடன் உளது. இவருடைய மாணக்கர்களில் குருஞானசம்பந்தர் என்பவர் வரலாறு உள்ளத்தை உருக்கும் நீர்மையது. அவர் சீவில்லிபுத்தூரிற் பிறந்தவர் என்றும், மதுரையை அடைந்து துறவுபூண்டு சொக்கலிங்கப் பெருமானை வழிபட்டு வந்தவர் என்றும் தெரிகிறது. அப் பெரியார் தமக்கு அருள்செய்யும் குருபரனை நாடிக் கவலையுற்றிருந்து இறைவனருளால் ஞானப்பிரகாசர் பெருமையை அறிந்து, திருவாரூரை யடைந்து அவரைத் தரிசித்தவர். அப்பொழுது அவரே தமது ஞான குருவென்ற உணர்ச்சி மேலிட்டு,

‘ கண்டேனிப் பாசங் கழிந்தே னமுதமுகந்
துண்டே சிவானந்தத் துள்ளிருந்தேன்—வண்டிமிர்காத்
தேனைப் பொழிகமலைச் செங்கமலப் பொற்பாதன்
ஞானப்ர காசனை நான் ’

என்னும் வெண்பாவாற் றுதித்தனர். ஒருநாள் மாலையில் வழக்கம்போல் ஞானப்பிரகாசர் திருக்கோயிலை அடைந்து இறைவனை வழிபட்டுத் தென்முகக்கடவுளின் திருமுன்பு சமாதிகூடிப் பின் அந் நிலையினின்றும் நீங்கி இல்லத்திற்கு ஏகலும், அவருடன் திருக்கோயிலுக்குச் சென்ற அடியார்களும் பின் தொடர்ந்தனர். ஞானப்பிரகாசர் அடியார்களை நிற்கப் பணித்து, இல்லிலுட் சென்றார். அடியார் யாவரும் விடைபெற்று அவரவர் உறைவிடஞ் சென்றனர். ஞானசம்பந்தரோ குருவின் ஆணை கடக்க அஞ்சி, ‘நிற்க’ எனப்பணித்த இடத்திலேயே இரவு முழுதும் நின்றார். அவ்விரவு முழுதும் விடாமல் மழை பெய்தது. விடியற்காலையில் இதனைக் கண்ட ஏனைய அடியார்கள் தங்கள் ஞானாசாரியரிடம் இதனைத் தெரிவிக்க; அவர் வந்து ஞானசம்பந்தரை நோக்கி, ‘ஏனப்பா நிற்கின்றாய்’ என்று வினவிய பொழுது,

‘ கனக்கும் பொதிக்கு மெருதுக்குந் தன்னிசை கண்டதுண்டோ
எனக்கு முடற்கு மெனதிச்சை யோவிணங் கார்புரத்தைச்
சினக்குங் கமலையுண் ஞானப்ர காச சிதம்பரவின்
றுனக்கிச்சை யெப்படி யப்படி யாக வுரைத்தருளே.’

என்று விடையிறுத்து ஆனந்தக் கண்ணீர் உகுத்து நின்றனர். அப்பொழுது அவரது அதிதீவிர பக்குவநிலையைக் கண்ட ஞான

தேசிகர் மாயூரத்திற்குக் கீழ்பாலுள்ள தருமபுரத்திலே தங்கிச் சைவ சமயத்தை வளர்க்குமாறு பணித்தருளினர். ஆசிரியர் ஆணை கடத்தற்கு அஞ்சிய ஞானசம்பந்தரும், அவ்வாறே சென்று தருமபுரத்திலே திருமடம் நிறுவிப் பக்குவர்களுக்கு உபதேசம் செய்து வந்தார், என்பது.

ஞானசம்பந்தர் ஆசிரியர் இல்லின் வாயிலில் இரவில் நின்ற பொழுது மழை அவர் நின்ற இடத்தில்மட்டும் பெய்யாதிருந்தது என்றும், 'கனக்கும் பொதிக்கும்' என்ற செய்யுள் தம்மைத் தருமபுரத்திற்கு ஏகப்பணித்தபொழுது ஞானசம்பந்தர் பாடியதென்றும் கூறப்படுதலும் உண்டு. இங்ஙனம் திருக்கயிலாய பரம்பரை தருமபுரவாதீனத்தை நிறுவிய முதற் குரவராகிய ஞானசம்பந்தருக்கும் ஆசிரியராய் விளங்கிய ஞானப்பிரகாசர் எத்துணைப் பெருமையுடையராதல் வேண்டும்.

பள்ளு என்பது குலப்பெயர். மருத நிலத்திலே உழுதொழில் புரியும் மக்கள் உழவர், கடையர் என்னும் பெயர்களால் வழங்கப்பெறுவர். களமர், மள்ளர் என்ற பெயர்களும் இவர்களுக்கு வழங்கின. மள்ளர் என்ற பெயரே திரிந்து பள்ளர் என வழங்குகின்றது. பள்ளருக்குப் பெண்பால் பள்ளி ஆகும். இச்சொல் பள்ளத்தியெனவும் திரிந்து வழங்குகிறது. மருத நிலமக்களாகிய பள்ளன் பள்ளி என்பவர்களுடைய இயல்புகளை நாடக முறையில் இயம்பும் பிரபந்தம் பள்ளு எனப்படும். பள்ளர்கள் உழுதொழில் செய்வோர். மக்கள் வாழ்க்கைக்கு இன்றியமையாத தொழில் உழவே. தெய்வப் புலமைத் திருவள்ளுவனர்.

'உழுவா ருலகத்தார்க் காணி யஃதாற்
றெழுவாரை யெல்லாம் பொறுத்து'

என அருளிச் செய்தனர். கம்பர் ஏரெழுபது என்னும் பிரபந்தத்தால் உழவின் மேன்மையை விளக்கினர். ஔவையாரும் 'உழுதுண்டு வாழ்வதற்கொப்பில்லை' என்றார்.

(தொடரும்)

தனித்தமிழ்க் கீர்த்தனைகள்

இராகம் : பிலகரி—தாளம் : மிச்ர சாப்பு

பல்லவி

அன்பையறிந்திடடா—அதையறிந்தால்
துன்பம்விலகுமடா. (அன்)

துணைப் பல்லவி

வன்பகைகளொழித்து வாழவகைதெரிந்து
இன்பமுடனுருகி இறைவனையேதொழுது (அன்)

சரணம்

மற்றவர்தருந்துன்பம் மனதினில்வைத்துக்கொண்
டுற்றவர்போலவே ஊரினிற்றிரியாமல்
கற்றவருடன்கூடிக் கனிந்தஅருளைநாடி
நற்றவமேபுரிந்தால் நாளும்நலமேதரும்.

உண்ணவுணவுமின்றி உடுக்கவுடையுமின்றி
எண்ணில்நினைவுமின்றி எழுத்தில்கருத்துமின்றி
தன்னந்தனியாகவே தான்தோன்றியாகாமல்
நன்னெஞ்சுடனேநோக்கி நாதனையேவணங்கி (அன்)

இராகம் : சக்ரவாகம்—தாளம் : ஆதி

பல்லவி

நாவுக்கரசனை ஞானக்கொழுந்தினை
நாவாரவேவாழ்த்தி நலம்பெறுவோம்திரு (நாவு)

துணைப் பல்லவி

பாவுக்கரசனும் பண்புள்ளதமிழனும்
பாவாணர்போற்றுதிருத் தேவாரந்தனைத்தந்த (நாவு)

சரணம்

தாண்டகவேந்தனித் தண்டமிழ்மீதன்பு
பூண்டபெருமையைப் புகழவுங்கூடுமோ
வேண்டும்நல்வாழ்வினை விரும்பியன்றேதரும்
ஆண்டபெருந்தகையான் அப்பனருளைப்பெற்ற (நாவு)

நாமார்க்குங்குடியல்லோம் நடலையில்லோமென
நவின்றதிருமறையாம் நல்லோர்வணங்குந்தமிழ்ப்
பாமாலையேபுனைந்த பாவலனையெந்நாளும்
பரவிப்பணிந்துநோக்கிப் பான்மையுடன்வாழவே (நாவு)

இந்தவுலகினை இயக்குமிறைவனை
எந்தவுருவிலும் எங்கணுங்கண்டவன்
நந்தமிழ்நாட்டினில் பைந்தமிழிசையுடன்
செந்தமிழ்ப்பாடலைச் செம்மையுடன்றந்த (நாவு)

அப்பாவுன்பாவைப்போல்வ தப்பாவெனப்புகழ்ந்தே
னப்பாவுன்னுள்ளம்போல்வ தப்பாஎனக்கிங்கரு
ளப்பாவுன்மெய்ப்பொருளைத் தப்பாமலென்னிடஞ்சே
ரப்பாவெனத்தொழுது இப்பாரினிலேநாளும். (நாவு)

—இசையரசு தேவாரமணி மு. மு. தண்டபாணி தேசிகர்.

விவேகானந்தர் வாலிபர் சங்கம், காரைக்கால்

இச் சங்கத்தின் ஆறுவது ஆண்டு நிறைவு விழா 13, 14-2-43-ம் நாட்களில் உயர்திரு ச. சோமசுந்தர பாரதியார், எம். ஏ., பி. எல்., அவர்கள் தலைமையில் மிகவுஞ் சிறப்பாக நடைபெற்றது. அந்நாட்களில் வித்துவான் திரு. சி. இலக்குவனர், B.O.L., வித்துவான் திரு. மு. இராசாக்கண்ணனர், B.O.L., வித்துவான் மா. இராசமாணிக்கனர், B.O.L., வித்துவான் மறைத் திருநாவுக்கரசனர், வித்துவான் திரு. வி. மு. சோமசுந்தரனர் முதலியோர் சொற்பொழிவாற்றினர்கள். சமய உணர்ச்சியும் தமிழுணர்ச்சியும் நன்கு பரவும் வகையில் சொற்பொழிவுகள் திறம்பட இருந்தன. சங்கம் நீடுவாழ்க!

ஒரு தமிழ் முடங்கல்

"மா. கு."

[நெடுநாளாய் முடங்கல் தீட்டாதிருந்த தன் உயிர்த் தோழனுக்கு இளமுருகன் என்பான் ஒரு தமிழன் எழுதியது :—]

விழுநலம் பொதுளுஞ் செழுந்தமிழ்த் தெள்ளமுதே,

தமிழ் ததும்புந் தம்முடைய அருளுள்ளத்திற்கு அளியேனின் புல்லிய வணக்கங்கள் உரியவாகுக. கலையரசே, தாம் நலமோ, யான் நலமே. ஈண்டுள்ள நின்னன்பர் மணிவண்ணனாரும் நலத்திற்கோர் இலக்கியமாக வாழ்கின்றார். நலம் மாண்ட அவர் மனைவியும் மக்களும் அல்லவை செய்யலறியாதார். அவர் கண்டனையர் அவர் இளையரும். அவருறைவது ஆன்றவிந்தடங்கிய சான்றோர் ஆயத்தில். ஆயின், நலமன்றிப் பிறிதென்ன அவர்பால் நிழலாடும் ?

தீந்தமிழ்ப் பொலன்குடமாகிய நின்னுள்ளத்தின் கொழுஞ்சுவை நறுந்துளிகளை—அத்துளிகளுடு முகேரென்று பாய்ந்து பாய்ந்தாடுந் தெள்ளிய நலங்களை யான் நுகர்ந்து நெடுநாட்கள் ஆயினவே ! அறியிரோ ?

கருத்தழகுங் கலையழகும் ஒருங்கு நகைசெய்யுந் தஞ் செவியறிவுறூஉக்களைச் செவிமடுத்துப் பன்னெடுநாள் சென்ற என்போலியர்க்குத், தமிழ் மணக்குந் தங்கள் திருமுடங்கலும் அருள்மணக்கும் அதன் உள்ளுறையும் ஆராவின்பம் அளிக்குமென்பது தாமறியாததோ ?

இருந்தும், அருட்பிழம்பாகிய தம்முள்ளம் அருள்சுரக்காத காரணம் என்னோ ? இளகிய மனம் கல்லானதோ ; நன்முடங்கல் ஒன்றேனும் போக்கலாகாதோ ?

கருத்தமுதம் பொதிந்தொளிரும் உணர்ச்சிக் கொழுந்தனையாய் !

தமிழ்க் கருவூலமாகிய தங்களைத் தொலைநில இடையறவு என்னினின்றும் பிரித்துவிட்டது. தம் அருளுள்ளக் கேணியில் அன்புநீர் பருகிக் கிடந்த என்னைப் பிரித்தெடுத்த அவ்வறவு, சிறுமுது பிரிவிற்கொரு கல்அதர் அத்தங்கொல் ?

"என் உள்ளத்தில் இன்ப ஓவியம் பொறிக்கும் எழுத்தாணி நீயே" என்றென்னை உரைப்பீரே, அதை மறந்தீரோ? இல்லை, இளந்தைப் பொழுதில் நெடுநகை புக்குங் குறுமொழி கோட்டியும் நாம் விளையாடி மகிழ்ந்ததையும் மறந்தீரோ? இல்லை, இலக்கியப் பண்டாரத்தில் தம்முள்ளம் நிழலாடிக் கிடக்கின்றதோ, பொருள் பொதிந்த புதையலன்ன செழுநூல் எதிலேனும் ஆழ்ந்துவிட்டீரோ? தம்முள்ளத் தொருமுடங்கல் முகிழ்க்காதோ, அருளூறித் தமிழாக என்பா லது வாராதோ?

அன்பெனும் அணுவுள் அமைந்தபே ரொளியே!

தாங்கள் இறுதியாக வரைந்த திருமுடங்கலில் கலைதுளும்பிற்று; தெள்ளறிவு ஒளிவீசிற்று; செய்யதமிழ் நகைசெய்தது; உணர்வரும்பி, நலம் பூத்து, செயல் கனிந்தது. அக்கடிதத்தின் உள்ளுறை அவ்வளவுஞ் சுவை! முற்றும் அமுது! முழுதும் தேன்! எல்லாம் அன்பு! அக்கடிதம் என் நெஞ்சத்தை அப்படியே அள்ளிக்கொண்டது எனக்கூறவும் வேண்டுங்கொல்?

தமிழ் மலர்ந்த திருப்பொய்கையோ தம்முள்ளம்? அருள் மணக்கும் மலரீட்டமோ தஞ்சொற்கள்? அறிவுரைக் களஞ்சியமோ தம்முடங்கல்? அன்பரும்பா அருள்மலரா தமிழ்ப் படிவா இவையாவுமா தம்முரைக் கூட்டம்?

தம்முடங்கலில் தங்கள் அறிவுருவம் நிழலாடிக் கிடக்கின்றது. இனிக்க நினைந்து, சிறக்க உரைத்து, ஆழ்ந்து பணியாற்றும் பெருமகனாகத் தங்களைச் சித்தரிக்கின்றது; அது புனையாச் சித்திரம். உயர்ந்த உள்ளம், கருத்தடர்ந்த வாக்கு, அறிவொளிரும் ஒழுகலாறு இம்மூன்றுந் திரண்ட உருவாகத் தங்களை யது தீட்டும்; அது எழுதாக் கவிதை.

சொல்லேர் உழவ, அம்முடங்கலூடு சுடரோடிக் கிடக்கும் அன்புரிமை தமக்கேயோ? விடைமுடங்கல் தாராயோ?

கருத்தின் குருத்தே!

உலகாண்ட தெள்ளுரைத் தமிழ்மொழி இன்றுள்ள நிலை கருதி உளம் நொந்து தாங்கள் வரைந்த சொற்கள் எத்துணை விழுமியவாய்ப், பொருள் பொதிந்தவாய்க், கருத்தலர்ந்தவாய் விளங்குகின்றன! மெல்லிய இனிய சொற்களில் அரிய சிறந்த கருத்துக்களை நடமாடச் செய்துள்ள தம் நடைத்திறனை என்னென்பது!

ஆம், "ஸ்ரீனிவாச நிவாஸ்"கள் இன்னுந்தான் தமிழர் இல்லங்களாக விளங்குகின்றன! "கிருஷ்ணபவ"னினுஞ் "சந்திரவில்லா"வினுந்தானே தமிழர் இன்னும் உறைகின்றனர்! "தமிழகங்"களும், "நக்கீரர் மனை"களுந் "திருவள்ளுவரில்லங்"களும் போன்ற தமிழ்க்குடில்கள் கண்டெடுக்க தமிழரால் இயலவில்லையே! "விவாக சுப முகூர்த்தங்கள்" அடியோடு போய் விடவில்லை; "கோகிலகான சங்கீத சபா"க்களும் நடமாடிக் கொண்டுதான் உள்ளன தமிழகத்தில்! அதிகம் அறைவானேன்! சில்லாக்களும் மாகாணங்களும் போய்க் கோட்டங்களும் வளநாடுகளுங்கூடத் தோன்றவில்லையே தமிழ் நாட்டில்!

"முடிதிருத்துஞ் சாலை"களெங்கே? "திருவள்ளுவர் வீதி"களெங்கே? "திருமால் பூஞ்சோலை"களெங்கே? சிற்றுண்டி விடுதி"களும் "அம்மையப்பர் திருக்கடை"களும் எங்கே எங்கே?-என்று தமிழன்னை தேடுகிறாள் என்று தாம் தெளிந்து உரைக்குஞ் சொற்களில் தமிழுணர்ச்சி சுடர்விட்டு ஒளிரவில்லையா! நாகரிகம் நடமாடவேண்டிய நகரங்களில் தமிழன்னை காண்பது இவ்வோவியமோ என்று தாங்கள் கடாவும்போது கல்லும் கனன்றெழுமே!

துன்பத்திலும் ஓர் இன்பப்-அலுப்பிலும் ஒரு மகிழ்ச்சி உண்டுபோலும்! இரங்கத்தக்க இந்நிலை தமிழ் நகரங்களில் வேரூன்றிவிட்டது எனினுந் தமிழ்ச் சிற்றூர்களில் காலூன்றவில்லை!

'போனகமென்பது தானுழந்துண்டல்' என்னுந் தமிழுரையை நினைவூட்டிக்கொண்டே யிருக்கும் **போனகசட்டி** (போன்சட்டி) அங்கன்றே நிழலாடும்? "அமர்க்களத்"தைத் தான் அமக்களம் பின் எங்குக் காண இயலும்?

"**கல்லெடுக்க**" என்று சிற்றூரார் வைதாலும் ஓரழகு அதிலும் அரும்பி மலரவில்லையா! இறந்தார்க்கு வீரக்கல் நாட்டும் பண்டைத் தமிழர் பெருவழக்கை நினைப்பூட்டும் அச்சொற்றொடரின் அமைதிதான் எத்துணை அருமை பிறங்கியது?

அப்பன் ஆணை அம்மை ஆணை என்று குழந்தைகளுங் குடிமுதற்சுற்றத்தை யன்றோ ஆணையிட்டுரைக்கின்றன! தமிழ்ப் புலவர்கள்மேலும் குடிமக்கள்மேலும் ஆணையிட்டுச் சூள் உரைத்த சங்கத் தமிழ்மன்னனின் சீர்த்தமதியை நினைப்பூட்டவில்லையா இது!

"கலத்துக்குக் குறுணி தேருமா" என்பது போன்ற நாட்டுப் பழமொழிகள் போதாவா தமிழர் பழமொழிச் செல்வத்தை நினைவூட்ட!

சாவா மருந்தினுஞ் சுவைப்புடை உயர்மொழி ஊறும் ஊருணியே!

வேளாண் தொழிலின் விழுமிய பல நிலைகளைக் குறித்தொளிருஞ் சொற்களெல்லாந் தூயதமிழ்ப் பெயரினவாய்க், கருத்தாழம் பொலிந்தனவாய்ச் சிறந்து ஒளிருஞ் சொல்லூற்றுகளல்லவோ? விளைநிலத்தைக் கழனி என்பார்! வயல் எல்லையை வரம்பு என்று பொருள்பட வரப்பு என்பார்! நாற்றுகளை நடுந் தொழிலை "நடு" என்றே சொல்வார்! விளைந்த பயிர்களை அறுக்குந் தொழிலை "அறுப்பு" எனவே அழைப்பார்! களைகட்டலைக் களைகளைப் பறித்தெடுத்தல் என்று பொருள்படக் "களைபறி" என்று அவர் உரைதெருட்டுவார்! இருபத்தை இருபது என்னுமாறு, முப்பத்தை முப்பது என்னுமாறு ஒருபத்தை ஒருபது என்றும் உரைகூட்டுவார்! "பிணையோட்டு"வார். "களத்துமேட்"டில் பயிர் அளந்திடுவார்! "போர்"களை யங்குக் குவித்திடுவார்!

உண்மைதான்! தூயதமிழ் திருநடம் புரியும் மன்றஞ் சிற்றூர்த் தொகுதிதான்! துய்ய தமிழுணர்வு வீறிட்டெழ வேண்டிய செருமுனையும் அதுவேதான். இது உண்மை; வெறும் புகழ்ச்சியில்லை!

கருந்தமுதே,

முடங்கல் நீண்டுவிட்டது. மன்னிப்பு வேண்டற்பாலது. ஈதை தங்கள் சொத்து அன்றோ?

தமிழரசு, உடன்முடங்கல் போக்குவையோ?

இங்ஙனம்,
நின் அருட்கடலாடும் அளியன்,
இளமுருகன்.

முருகன் செந்தமிழ்க் கழகம், மயிலம்

இக்கழகத்தின் ஆறாம் ஆண்டு விழா 10-3-43 புதன்கிழமை மயிலமலையில் மகா மகோபாத்யாய முதுபெரும்புலவர், பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார் அவர்கள் தலைமையில் நடைபெறும். வித்துவான் முத்துசாமிப் பிள்ளை அவர்களும், வித்துவான் பொ. வே. சோமசுந்தரனாரவர்களும், பா. சிவஞானம் அவர்களும் சொற்பொழி வாற்றுவார்கள்.

கழகம் நீடுவாழ முருகன் திருவருளை வேண்டுகின்றோம்.

செய்திகளும் குறிப்புகளும்

மங்கையர்க்கரசியார் கழகம், தென்காசி

மாதர் முன்னேற்றத்தின் பொருட்டுத் தென்காசியில் இக்கழகம் நிறுவப்பெற்று அதன் முதலாண்டு நிறைவு விழா 28-2-43 ஞாயிற்றுக் கிழமை உலகம்மன் கோயில் திருமுன்பு மிகவுஞ் சிறப்பாக நடைபெற்றது.

சென்னை இராயபுரம் நார்த்விக் மகளிர் கல்லூரித் தலைமைத் தமிழாசிரியராயிருந்து. இப்போது நூலாசிரியரா யிருந்துவரும் திருவாட்டி திருவரங்க நீலாம்பிகை அம்மையார் தலைமையில் விழா தொடங்கியது.

திருநெல்வேலி திருவாட்டி உலகம்மையார் 'வாழ்க்கைத் துணை நலம்' என்னும் பொருள்பற்றித் திறம்படப் பேசினார்கள். கழக மாணவிகள் கும்மி, கோலாட்டம், உரையாடல், கண்ணப்பர் நாடகம் முதலியவற்றால் குழுவினர் கட்புலனுக்கும் செவிப்புலனுக்கும் நல்ல விருந்தளித்தனர். திருநெல்வேலி, திருவாட்டி மங்கையர்க்கரசி யம்மையார் திருவாசகப் பாக்களை இசையுடன் இனிக்கப் பாடினார்கள்.

கூட்டத்திற்கு இருபாலரும் திரளாக வந்திருந்தனர். தலைமை தாங்கிய அம்மையாரவர்கள் தூய தமிழில் சமயக்கோட்பாட்டையும் தமிழ்ப் பெருமையையும் பற்றி விளக்கமாகப் பேசினார்கள். சைவ சமயமே எல்லாச் சமயங்கட்கும் பழமையானதென்றும் சிவபெருமானே முழுமுதற் கடவுளென்றும் பேசியதும், சங்க நூல்கொண்டு கற்பை விளக்கியதும், கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய் இருந்தன.

இக்கழகம் நிறுவுவதற்கு முதற்காரணராயுள்ளவர் தென்காசி ஜில்லா முன்சீப் திரு. நடராஜ நாடார் அவர்களின் துணைவியார் திருவாட்டி புஷ்பம் நடராஜன் அவர்களாவர். இவ்வம்மையாரின் தமிழ்ப்பற்றும், தொண்டும் பெரிதும் போற்றுதற்குரியன. தென்காசி வழக்கறிஞர் திரு. V. M. சோமசுந்தரம் பிள்ளை அவர்கள் துணைவியார் திருவாட்டி அன்னபூரணத் தம்மையாரும்; வழக்கறிஞர் திருவாளர் A. C. சண்முகநயினார் பிள்ளை அவர்கள் துணைவியார் திருவாட்டி முத்தம்மையாரும், மற்றும் திருவாட்டி சண்முகத் தம்மையார் முதலியோரும் கழகச் செயலாளரும் உறுப்பினருமாயிருந்து கழகத்தைச் சிறப்புற நடத்தி வருவது எல்லோராலும் தமிழ் நாடெங்கணும் பாராட்டற்பாலதோடு பின்பற்றற்பாலதுமாகும்.

இக்கழகம் நீடுவாழ்ந்து நற்பணியாற்றவும், இதைப் போன்ற கழகங்கள் தமிழ் நாடெங்கணும் தோன்றவும் அம்மையப்பன் திருவருளை வேண்டுகின்றோம்.

இசைத் தமிழ்க் கழகம், திருநெல்வேலி

தமிழன்பர்கட்கு ஒரு வேண்டுகோள்

திருநெல்வேலியில் இதுவரை இசைத் தமிழ்க் கழகம் இல்லாதது பற்றித் தமிழர் ஏக்கங்கொண்டிருந்தனர். இப்போது எங்கே பார்த்தாலும் இசையைப் பற்றிய இயக்கம் வலுத்து வருவதை அன்பர்கள் நன்குணர்வர்.

தமிழிசையைப் போற்ற வேண்டுவது தமிழர்கள் கடமையன்றோ! இயல், இசை, நாடகம் என மூன்றையும் முன்னேயோர் 'முத்தமிழ்' என்றே வழங்கி வந்திருக்கின்றனர். இதனாலேயே ஞானசம்பந்தப் பெருமானை 'முத்தமிழ் விரகர்' என்று பாராட்டிப் பரவுவாராயினர். சங்க காலத்திற்குப் பின்னுள்ளவர்கள் இயற்றமிழையே பெரும்பாலும் போற்றுவாராயினர். ஆதலால் இசைத் தமிழும் நாடகத் தமிழும் சிறிது சிறிதாகத் தளர்வுறலாயிற்று. அதனை யுணர்ந்து இசைத் தமிழையும் நாடகத் தமிழையும் வளர்த்தல் தமிழ் மக்களுடைய தலைமையான கடனாக இருக்கின்றது. ஆதலால் பொருளாளர்களும் அறிஞர்களும் இசைவாணர்களும் இச்செயலுக்கு உரிமையாளராகித் தமிழிசையை நன்கு வளரும்படி உதவிபுரிய மிகப் பணிவுடன் வேண்டுகின்றோம்.

உறுப்பினர் கையொப்பமிட வேண்டிய இதழை அடியிற்கண்ட முகவரிக்கு எழுதிப்பெறுக. அதிற் கையொப்பமிட்டு கையொப்பத் தொகையுடன் கீழ்க்குறித்த கழக முகவரிக்கு (விலாசத்திற்கு) அனுப்ப வேண்டுகின்றோம். இதனைத் தங்கள் நண்பர்களுக்குந் தெரிவித்து அவர்களையும் இம்முயற்சியிற் கலந்து கொள்ளும்படி செய்தல் நன்று.

1. கா. சங்கரம் பிள்ளை
2. சு. நம்பா பிள்ளை
3. ரா. கனகசபாபதி பிள்ளை
4. பே. திருப்பாற்கடல்நாத பிள்ளை

} தமிழ் இசைவாணர்கள் திருநெல்வேலி.

இசைத் தமிழ்க் கழகம்,
24, கீழரத வீதி,
திருநெல்வேலி.

வ. திருவரங்கம் பிள்ளை
திருவுவிப்பவர்.

"சென்னை மாகாணத் தமிழர் ஒன்பதாவது மாநாடு-இசைமாநாடு"

இவை சென்னை மாகாணத் தமிழ்ச்சங்க ஆதரவில் 27, 28-3-43 ஆகிய சனி, ஞாயிறுகளில் திருநெல்வேலியில் நடைபெறும். தலைவர் திருவாளர் இராவ்பகதூர் சோ. ம. இராமச்சந்திரன் செட்டியாரவர்கள் பி.ஏ., பி.எல்., ஆணையாளர், இந்து அறநிலையக் காப்புக் கழகம். முன் மந்திரியும் நமது தமிழ் மாகாணத் தேசியப் போர்முனை முதல்வரும் ஆகிய திருவாளர் பொன்னம்பல தியாகராசனவர்கள் எம். ஏ., தமிழ்க்கொடியேற்றுவார்கள். இசைமாநாட்டுத் தலைவர் இசைத்தமிழ்ச் செல்வர் திருவாளர் தி. இலட்சுமணப் பிள்ளையவர்கள், பி. ஏ., திருவனந்தபுரம் தமிழிசை யரங்கும் நடைபெறும்.

தமிழ் மக்கள் யாவரும் திரளாக வந்தருள்வாராக! தமிழ் ஆக்கம்பற்றிய பொருள்களே ஆராயப்பெறும். தீர்மானங்கள் அனுப்ப விரும்புவோர் அவை 25-3-1943-க்குள் அமைச்சரிடம் சேருமாறு அனுப்ப வேண்டுகின்றோம்.

சங்கரநயினார் } கோயில் }

இ. மு. சுப்பிரமணிய பிள்ளை,
அமைச்சர்.

தமிழ் வித்வான் சங்கம், சென்னை

தமிழாசிரியர் பொதுக்கூட்டம்

சென்ற ஞாயிறு (21-2-43) மாலை 4-மணிக்கு, சிந்தாதிரிப்பேட்டை உயர்நிலைப்பள்ளியில் சென்னைத் தமிழாசிரியர்களின் பொதுக்கூட்டம் ஒன்று, தமிழ் வித்துவான் சங்கத்தின் சார்பில் நடைபெற்றது. பண்டித எஸ். எஸ். அருணகிரிநாதர் அவர்கள் தலைமை தாங்கினர்.

வித்துவான் அன்பு கணபதி அவர்கள் கூட்டத்தின் நோக்கத்தை விளக்கி, தமிழாசிரியர்களின் ஒற்றுமைக்கும், உயர்வுக்கும் ஒரு சங்கம் இருக்க வேண்டுவதன் இன்றியமையாமையை எடுத்துக்கூறி, அதற்கென்றே நண்பர் பலர் சேர்ந்து தமிழ் வித்துவான் சங்கத்தைத் தொடங்கிச் சென்ற ஓராண்டாக நடத்தி வருவதாகத் தெரிவித்தார்.

வித்துவான் மு. இராசாக்கண்ணு B.O.L. அவர்கள், செயற்குழு தயாரித்திருந்த சங்க விதிகளை வாசித்தார். சிற்சில மாற்றங்களுடன் அவ் விதிகள் எல்லாத் தமிழாசிரியர்களாலும் ஒரே உள்ளத்துடன் ஒப்புக்கொள்ளப்பெற்றன. முதன்மையான விதிகளிற் சில :—

1. 'தமிழ் வித்வான் சங்கம்' என்பது இச்சங்கத்தின் பெயர். 2. இதன் பதிவு நிலையம் சென்னையிலேயே இருத்தல் வேண்டும். 3. நோக்கம்: தமிழ் வித்வான்கள், தமிழாசிரியர்களுடைய நிலையினையும் மதிப்பையும் உயரச்செய்தலும், தமிழ்மொழி வளர்ச்சிக்குரிய எல்லாத் துறைகளிலும் வேலை செய்தலும். 4. தமிழ் வழங்கு நிலமெல்லாம் பரவி நிற்கும் உரிமையுடையது இச்சங்கம். 5. உறுப்பினர்: சென்னை அல்லது அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துத் தமிழ் வித்துவான் தேர்விலோ, தமிழ் M.A., B.O.L., M.O.L. தேர்வுகளிலோ தேர்ந்தோரும், பிறதமிழ்த் தேர்வுகளில் தேர்ச்சி பெற்றோ பெறாமலோ தமிழாசிரியராயிருப்போரும் இச்சங்கத்தில் உறுப்பினராதற்குரியராவர். 6. கட்டணம்: உறுப்பினர், நுழைவுக்கட்டணமாக ரூ. ஒன்றும், ஆண்டுக்கட்டணமாக ரூ. ஒன்றும் செலுத்தக்கடவர்.

தேர்ந்தெடுக்கப்பெற்ற செயற்குழு:—தலைவர்: வித்துவான் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், M.A., B.L., M.O.L. துணைத்தலைவர்கள்: வித்துவான் மு. வரதாசனார் B.O.L., பண்டித. எஸ். எஸ். அருணகிரிநாதர், ஆசிரியர் மயிலை. சிவ. முத்துக்குமாரசாமி முதலியார். செயலாளர்கள்: வித்துவான் மு. இராசாக்கண்ணு, B.O.L., வித்துவான் அன்பு கணபதி. பொருளாளர்: வித்துவான் ம. இராசமாணிக்கம்.

பிறசெயற்குழு உறுப்பினர்: வித்துவான்கள் பா. சொக்கலிங்கனார், ம. மாசிலாமணிப் பிள்ளை, அ. கிருட்டிணமூர்த்தி, திருவேங்கடம் பிள்ளை, முருக. இலக்குவர், ச. அ. சிதம்பரனார், ஆ. சண்முகவேலர், எம். சி. கண்ணபிரானார், நா. சீநிவாசனார், எம். எ. துரையரங்கனார், B.O.L., த. வைத்தியலிங்கம், சே. இலக்குமித் தாயாரம்மாள்.

தலைவர் தமது முடிப்புரையில், "நாம் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும். அவ்வாறு உழைத்தால் எவ்வளவோ காரியங்களைச் சாதிக்கலாம். காலஞ் சென்ற பேராசிரியர் நமச்சிவாய முதலியார் தமிழாசிரியர் உயர்வுக்காகப் பெருங்கனவுகளைக் கண்டார். அக்கனவுகளைச் செயலிற் கொணா

வேண்டுவது நமது கடமை. சென்னை நகரத்தில் மட்டுமல்ல, மாகாண மெங்குமுள்ள தமிழாசிரியரனைவரும் நம் சங்கத்தில் சேரவேண்டும், சேர்க்க வேண்டும். தமிழாசிரியர் ஒன்று கூடினால், தமிழ்-தமிழ்நாடு உயரும். தமிழ்த்தாய் தழைகிற்பாள்'' என்று கூறி முடித்தார். வித்துவான் மு. இராசாக்கண்ணு B.O.L., நன்றிகூற மாலை 6-மணிக்குக் கூட்டம் இனிது நிறைவெய்தியது.

வேண்டுகோள்

அருந்தமிழாசிரிய நண்பரீர் !

நமக்கென்று ஒரு சங்கம் வேண்டாவோ ! இன்றே தமிழ் வித்துவான் சங்கத்தில் சேருங்கள்! ஒன்றி உழையுங்கள்! ஒன்று பட்டால் உண்டு வாழ்வு!

தே. போ. மீனுட்சிசுந்தரனர் — தலைவர்.

மு. இராசாக்கண்ணு
அன்பு கணபதி
செயலாளர்.

[முகவரி : 2, சாலை விநாயகர் கோயில் தெரு, ஜி. டி. சென்னை.

நக்கீரர் கழகம், சென்னை

11-ஆம் ஆண்டு நிறைவு விழாவும் முத்தமிழ்த் திருநாளும்

இக் கழகத்தின் 11-ஆம் ஆண்டு நிறைவு விழாவும், முத்தமிழ்த் திருநாளும் 1943 ஜனவரி 18, 19, 20 திங்கள், செவ்வாய், புதன் கிழமைகளில் சென்னைத் தங்கசாலைத் தெருவில் உள்ள தொண்டை மண்டல துளுவவேளாளர் உயர்நிலைப் பள்ளியில் நடைபெற்றது.

இயற்றமிழ்த் திருநாளன்று திருவாளர் வித்துவான் வே. வேங்கடராஜுலு ரெட்டியார் அவர்கள் தலைமை தாங்கினர்கள். திருவாளர், தமிழ் இசைவாணர் வேதாசல முதலியார் அவர்கள் தமிழ் இசையரங்கு நடத்தினர். திருவாளர் திரு. வி. கலியாணசுந்தரனர் அவர்கள் தமிழ்க்கொடியேற்றி வைத்தார். பின்னர் திரு. ஈ. தா. இராசேசுவரி அம்மாள் அவர்கள் "பெண்கள் தமிழ் இலக்கிய வகுப்பு" திறந்து வைத்தார்கள். பின்னர் உரையாளர்கள் திரு. வித்துவான் அ. கி. பரந்தாமனர் அவர்கள், திரு. வித்துவான். பா. சொக்கலிங்கம் அவர்கள் முறையே "புறநானூறு", "மேகலையின் முத்தம்" என்பனபற்றி பேசினர். கூட்டத்தில் காலஞ் சென்ற பேராசிரியர் மணி திருநாவுக்கரசு முதலியார் பாடிய "பொங்கற் பொன்னாள்" வாழ்த்து பலருக்கும் வழங்கப்பட்டது.

இரண்டாம் நாள் திருவாளர் டாக்டர். E. M. துரைசாமி, L. M. & S. அவர்கள் தலைமையில் இசைத்தமிழ்த் திருநாள் கொண்டாடப்பட்டது. திரு. A. S. ஞானசம்பந்தம் M. A. அவர்கள் "தமிழ் இசை" என்னும் பொருள்பற்றிப் பேசினர்.

மூன்றும் நாள் திருவாளர் ம. சண்முகசுந்தர முதலியார் M.A., L.T., அவர்கள் தலைமையில் நாடகத்தமிழ்த் திருநாள் கொண்டாடப்பட்டது. திரு. வித்துவான். அன்பு கணபதி அவர்கள் "மனேன்மணீயம்" என்பது பற்றியும், திருவாளர் முருக இலக்குவனர் அவர்கள் "தமிழ்ப் படக்காட்சிகளும் சிலப்பதிகாரமும்" என்பதுபற்றியும் சொற்பொழிவாற்றினர்கள்.



ஸர் R. K. சண்முகஞ் செட்டியார், K. C. I. E.

ஓம்

செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு-உ0] சித்திரபானு—பங்குனி (1943) [பரல்-ரு

சர். ஆர். கே. சண்முகஞ் செட்டியாரவர்கள்

உரை விருந்து

உரைவிருந்து என்னும்போதே உள்ளத்தில் மகிழ்ச்சி மீதூருகின்றது. அதினும், தமிழ்ப்பெருந் திருவினர் சர். ஆர். கே. ஷண்முகஞ் செட்டியாரவர்களுடன் என்றால், அதினும் தமிழைப் பற்றி என்றால், கிளர்ச்சிக்கு என்ன குறை!

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் சென்னைக் கிளை நிலைய முகவர் திருவாளர் வ. சுப்பையா பிள்ளையவர்களும் யானுமாக 10-1-43-ல் திரு. செட்டியாரவர்கள் திருமாளிகைக்குச் செல்ல நேர்ந்தது. செட்டியார் நுங்கம்பாக்கம் மாளிகையில் தங்கியிருந்தனர்.

நாங்கள் மாலை நான்கு மணிக்கு அவர்கள் மாளிகையை அடைந்தோம். முற்றத்தை அடைந்ததும், திரு. செட்டியாரவர்கள், முகப்பு மண்டபத்திலிருந்து சற்று முன்வந்து, தம் நகை முகம் மலர்த்தி அன்புடன் நல்வரவு வழங்கினார்கள். நாங்கள் அவர்களைக் கண்டு அளவளாவுதல் விரும்பி முன்னமே அவர்கட்குத் தெரிவித்து அவர்கள் இசைவினைப் பெற்றிருந்தோமாயினும், குறித்த நேரத்தில் அவர்கள் எங்களை எதிர்பார்த்து முகப்பு மண்டபத்தில் உலவிக்கொண்டிருந்த அருமையும் தமிழ் உரிமையும் மிக்க மகிழ்ச்சி யளித்தன.

மூவரும் மண்டபத்தில் இனிய இருக்கைகளில் இருந்தனம். என் செவிப்புலனின் நிலை எனக்குத் திரு. செட்டியாரவர்

களின் அருகில் அமரும் உரிமையை வழங்கியது. எல்லாம் நன்மைக்கே என்னும் பொருளுரையின் ஓர் உண்மை எனக்கு அப்போது தெளிவாயிற்று.

செட்டியார் நீண்டு உயர்ந்த இனிய பொன்மேனியர். அன்று அவர், முற்றும் தூய வெண்ணிற ஆடை அணிந்திருந்தனர். இறையனாரகப்பொரு ளுரை முதலிய பழைய தமிழ் நூல்களில், 'வெண்ணிற ஆடை அறிவின் பெருமைக்கு அடையாளம்' என வருகின்ற குறிப்பு அப்போது நினைவுக்கு வந்தது.

அளவளாவி மகிழும் அன்புரைகள் கிளர்ச்சியோடு நிகழ லாயின. இடையே கழக முகவரவர்கள் தமிழின் வளர்ச்சி குறித்துப் பேச்செடுத்தனர். திரு. செட்டியாரவர்கள் உள்ளத் தில் தமிழைப்பற்றி விளங்கிக்கொண்டிருக்கும் நற்கருத்துக் களைத் தெரிந்துகொண்டு, அவற்றின்படி முயன்று தமிழ்க்குப் பயன்படுத்த வேண்டும் என்பது முகவரவர்கள் கருத்து. தக்கோர் பலரையும் அடைந்து அவர்களோடு அளவளாவி, அவர் கள் எண்ணங்களை அறிந்து தொகுத்து உலகுக்கு நலம் புரிவது ஒரு சிறந்த தொண்டுநெறியாகு மன்றோ! திரு. செட்டியார், தம் இயற்கை அறிவாற்றலால் இந்தியச் சார்பாளராய், ஜினிவா, இங்கிலாந்து, ஒட்டவா, ஆத்திரேலியா, அமெரிக்கா முதலிய பிற நாடுகட்குஞ் சென்று அங்கங்கும் பழகி நிலைகளறிந்த பெரு மகனாராதலாலும், எதொன்றையும் திறமையாக வாதிப்பதில் வல்லுநராதலாலும் இவர்கள் போன்றாரது கருத்துத் தமிழ் மக்கட்கு முதன்மையுமாகுமன்றோ! பேச்சுப் பின்வருமாறு நிகழ்ந்தன :

முகவர் : தமிழ் நூல்களை மக்கள் மிகுதியாகவும் செவ்வையாக வும் படிக்கும்படி செய்ய வேண்டும். அதற்குத் தக்கபடி யெல்லாம் கழகம் நூல்களைப் பதிப்பிட்டுக் கொடுக்க வேண்டுமென்று விரும்புகின்றது.

சர். செட்டியார் : சங்க நூல்களை மக்கள் படித்துப் பெருமை அறியவேண்டும். படிக்கும்போதே சொல்லிலும் பொருளி லும் சிக்கலில்லாமல் இருப்பதற்கு வழி செய்யவேண்டும். சொற்களைச் சந்திபிரித்து அச்சிடலாம்.

சங்கநூல் என்றவுடன் எனக்கு மின் இயக்கம்போல் ஓர் உணர்ச்சி மேலிட்டு உடம்பெங்கும் பரவியது.

முக: முழுதும் சந்தி பிரித்தால் செய்யுளழகும் ஓசையினிமையும் சிதைந்துவிடுமே என்று நினைக்கவேண்டி யிருக்கிறது.

சர்: அவைகளுக்கெல்லாம் வேறு பதிப்பு வைத்துக்கொள்ளலாம். நூல்களை எப்படியும் பலரும் படிக்கச் செய்வது முதன்மை. கருத்தை அறியச் செய்ய வேண்டுவது முதன்மை. அப்போது நூலின்மேல் மதிப்பும், வாழ்க்கையில் திருத்தமும் மக்களுக்கு உண்டாகும்.

முக: கழகத்தில் பெரும்பாலும் இப்போது அச்சிட்டு வருகிற நூல்களில் கடின சந்திகளைப் பிரித்தே அச்சிட்டு வருகிறோம்.

நான்: குற்றியலுகரம் போன்ற சில சந்திகளைப் பிரிப்பது தான் இடராயிருக்கின்றது.

சர்: பொருள் விளக்கத்துக்குத் தடையில்லாமலிருந்தால், ஓசையினிமைகளைச் சில இடங்களில் கருதலாம். மேலும், நூல்களை அச்சிடும்போது அந் நூல்களைப்பற்றி முன்னறிவாகத் தெரிந்துகொள்ளக் கூடிய குறிப்புக்களை, முதலில் எளிய உரைநடையில் கொடுத்திருக்க வேண்டும். நூலின் உட்பிரிவுகளிலும் அப்படியே தரவேண்டும்.

சிலப்பதிகாரத்தில் உள்ள 'மங்கல வாழ்த்துக் காதை'யை ஒருவர் படிக்க விரும்பினால், அந்தக் காதையின் முதலில், அதிலுள்ள கருத்துக்களையும் கவனிக்க வேண்டிய பகுதிகளையும் பற்றித் தொகுத்துச் சுருக்கமாக அச்சிட்டிருக்குமானால், அவருக்கு அது மிகவும் உதவியாயிருக்கும். செய்திகள் தெரியாமலே செய்யுளில் நுழைந்தால், ஆர்வம் தடைப்பட்டுக் குறைந்து போகிறது. எப்படி அச்சிட்டிருந்தால் நல்லது என்பதற்கு முன் மாதிரியாக நான் ஒன்று எழுதியிருக்கிறேன்.

என்று சொல்லித் 'தமிழ் வளர்ச்சி' என்னும் பொருளில் 'வசந்தம்' என்னும் இதழில் ஒரு சிலப்பதிகாரப் பகுதியை

எடுத்துத் தாம் விளக்கி எழுதியிருந்த கட்டுரையை அவர்கள் படித்துக் காட்டினார்கள்.

திரு. செட்டியாரவர்கள் என் காதுக்கும் நன்றாகக் கேட்கும்படி உரத்துப் படித்தார்கள். அந்த அருமையும் பெருமையும், நான் என்றும் மறக்க முடியாததா யிருக்கின்றது. எங்ஙனம் மறக்க முடியும்?

சர். செட்டியாரவர்கள் தமிழில் செய்தித் தாள்களுக்குக் கட்டுரைகளும் எழுதி உதவுகிறார்கள் என்று அறிந்தபோது, தமிழ் அடையவேண்டிய முன்னேற்றத்திற் பெரும்பகுதியை அடைந்துவிட்டதாகவே தோற்றிற்று. தமிழ் வளர்ச்சியைப் பற்றிய கவலையில் திரு. செட்டியாரவர்கள் தாமே பெரும் பங்கு எடுத்துக்கொண் டிருப்பதனால், அவர்கள் ஊக்கமும் அன்பும் இன்னும் நன்கு விளங்குகின்றன. நடையும் முறைகளும் அவர்கள் எழுத்தில் நன்றாக இருந்தன. எழுத்து, விளக்கமாகவும் சுருக்கமாகவும் உரமாகவும் இருந்தது. திரு. செட்டியாரவர்கள் பொருளாதாரத் துறையிற் சிறந்த தலைவர் என்பதும், சிக்கனத்தில் வல்லவர் என்பதும், அவர்கள் இந்திய அரசியல் நடுக் கழகத்திற் பல ஆண்டுகள் தலைவராகவும் உறுப்பினராகவும் விளங்கியிருந்து அரசியல் வரவு செலவுத் திட்டங்களை அவ்வியல்புகள் தோன்ற அமைத்து உதவியதிலிருந்து நன்கு அறிந்திருக்கின்றோம். அவர்கள் எழுத்திலும் அவ்வமைப்புச் சிறப்பாகக் காணப்பட்டது.

சர்: இன்னும், நூல்களில் வருகின்ற சில அமைப்புகட்கும் கருத்துகட்கும் தகுதியான ஆராய்ச்சிக் குறிப்புக்களும் காரணங்களும் நூலுள் அங்கங்கும் சேர்த்துத் தருவதும் நல்லது. படிப்பவர்களுக்கு எவ்வளவுக்கெவ்வளவு சிக்கல் தீர்த்து எளிமை செய்யக்கூடுமோ அவ்வளவும் செய்ய வேண்டும். தொல்காப்பியத்தில், அகத்திணையியலில், நிலங்களைப்பற்றி அழகான பாகுபாடு வருகின்றது. அதற்கு உரிய காரணமும் ஆராய்ச்சிக் குறிப்பும் அங்கே சேர்க்க வேண்டுவது முதன்மை.

முக: முதன்மைதான்; படிப்பவர்க்கு அது நல்ல விளக்கத்தைத் தருவதோடு கிளர்ச்சியையுங் கொடுக்கும். இளவழக

ஞர் 'அகத்திணையியல் விளக்கம்' என்று ஒரு நூல் இந் நோக்கத்தோடு பதிப்பித்திருக்கிறார்.

சர்: அதை நான் பார்க்கவேண்டும். ஆங்கிலத்தில் ஒரு நூலைப் பற்பல வகையாகப் பதித்திருக்கிறார்கள். எந்த நிலையில் உள்ளவர்களும் தமக்கு ஏற்ற பதிப்புக்களை வாங்கிப், பிறர் உதவியில்லாமலே படித்துக், கருத்தும் அழகும் அறிந்துகொள்ளுகிறார்கள். நாளடைவில் ஓரளவு புலமையும் அடைந்துவிடுகிறார்கள். தமிழில் அப்படியெல்லாம் நூல்கள் வரவேண்டுமென்று ஆவலாயிருக்கிறது.

முக: கழகம் அந்தப் பணியில் தலைசிறந்து வரவே முயன்று வருகின்றது. இன்னும், தமிழ் நூல்களை ஆங்கிலம் முதலிய பிறமொழிகளிலும் வெளியிட்டுப் பிறநாட்டாரும் தமிழின் உயர்வை அறிந்து கொள்ளும்படி செய்ய எண்ணமா யிருக்கிறது.

சர்: நம் நாட்டாரை நாம் முதலில் செவ்வையாகப் படிக்கச் செய்வதற்கு வழிசெய்ய வேண்டும். தமிழ் மொழியிலுள்ள சொற்களுக்குச் சரியான பொருளும், நூல்களிலுள்ள உயர்ந்த கருத்துக்களும், நம்மவர்களில் எல்லா நிலையினரும் உள்ளூர அறிந்து மதித்து மகிழும்படி செய்து விட்டால், நாம் சிறந்த வெற்றியுடையவர்களாக ஆவோம்.

இடையில் நான், புறநானூறு மாநாடு நடக்கவிருப்பது பற்றித் திரு. முகவரவர்கட்குச் சிறிது நினைப்பூட்டினேன்.

முக: சங்க நூல்கள்மேல் சில காலமாக மாநாடுகள் கூடி வருவதும் அதற்கு ஒரு வகையில் ஆக்கமாயிருக்கிறது. மாநாட்டு விரிவுரைகளை முன்பாகவே அச்சிட்டு மாநாட்டுக் காலத்திலேயே கழகம் வெளியிட்டு வருகிறது. நூலின் கருத்துக்களை விளக்கிப் பேசும் விரிவுரைகளாக அவை இருப்பதனால் கேட்பவர்களுக்கும் படிப்பவர்களுக்கும் அவை மிகவும் உதவியாயிருக்கின்றன.

சர்: அது நல்லதுதான். நூல்களாக வெளிவராத சொற்பொழிவுகளைக்கூட, அச் சொற்பொழிவுகள் நடக்கு முன்பே, அவற்றை முழுமையும் அச்சிடாமல், அவற்றின் அமைப்பும் பொருட் குறிப்புக்களும் தெரியும்படி சுருக்கமாக

அச்சிட்டு அவையோர்க்கு வழங்குதலும் நன்றாகும். முழுமையும் அச்சிட்டுத் தந்தால் சொற்பொழிவு கேட்பதில் வேட்கையிராது. என் சொற்பொழிவுகளை அச்சிட நேரும்போதும் இம் முறையையே நான் மேற்கொள்கின்றேன்.

முக: அண்மையில், புறநானூறு மாநாடும் நடத்தவேண்டுமென்று கழகம் தீர்மானித்திருக்கிறது. திருவாளர் ரா. பி. சேதுப் பிள்ளை யவர்கள் அன்று தலைவராக இருக்க இசைந்திருக்கிறார்கள். புலவர்கள் ஐவரேனும் அறுவரேனும் பல தலைப்புக்களின்மேற் பேசக்கூடும். தாங்கள் அன்று விழாவிற் கலந்துகொண்டு சிறப்பித்தால் நலமாயிருக்கும். மாநாட்டுத் திறப்புரையாகச் சில சொல்லித் திறப்புவிழாச் செய்யலாம்.

சர்: வருகிறேன். அப்படியே செய்வோம்.

தமிழ்ச் சொற்கள் சிலவற்றின் பொருட்காரணம்பற்றி, யானுஞ் சில நேரம் இடையிடையே பேசி வந்தேன்.

வெளியில், வேறு பெருமக்கள் சிலர் சர். செட்டியாரவர்களைப் பார்க்கும்பொருட்டு வந்திருந்தனர். அவர்களும் தாம் வருவது குறித்து முன்பே இசைவு பெற்றிருந்தனர்; ஆயினும் திரு. செட்டியாரவர்கள் தமிழன்பு, தமிழின் அளவளாவுதலை அவ்வளவு விரைவில் விடுவித்துக்கொள்ளவும் விரும்பவில்லை. 'சற்று வெளியில் அமருங்கள்' என்று வந்தவர்கட்குச் சொன்னார்கள். சிறந்த தமிழ்ப் பெருமகனாரோடு அளவளாவுதலில் நாங்களும் எல்லாவற்றையும் மறந்திருந்தோம். பின்பு, பிரியும் உள்ளமில்லாமலே அன்று நாங்கள் விடைபெற்றுக் கொள்ளவேண்டி யிருந்தது.

திரு சர். ஷண்முகஞ் செட்டியாரவர்கள் தமிழன்பு வெல்க!

—இளவழகன்.

"அகமும் புறமும்"

[திரு. வித்துவான் K. கோவிந்தன், திருவத்திபுரம்]

உலக வாழ்க்கை இரவும் பகலும் போன்று இன்பமும் துன்பமும், நன்மையும் தீமையும், செய்யத்தக்க செயல்களும் செய்யத் தகாதனவாய செயல்களும் நிறையப்பெற்றது என்பதை யாவரும் ஒப்புக்கொள்ளுவர். அத்தகைய உலக வாழ்க்கையை மேற்கொண்ட மக்கள் பலரும், தாம்தாம் பெற்று நிற்கும் அறிவுநிலைக் கேற்ப, காட்சி வகையானும், கருத்து வகையானும் ஆய்ந்து ஆய்ந்து, இன்பமாவன இவை, துன்பமாவன இவை எனவும், நன்மையாவன இவை, தீமையாவன இவை என்வும், தக்கன இன்ன, தகாதன இன்ன எனவும் வகுத்து வகுத்துக் கூறிச் செல்வாராயினர். இவ்வாறு படைப்புக் காலம் தொடங்கி வாழ்ந்துவந்த மக்கள், தம் வாழ்க்கையில் கண்ட முடிபுகளைத் தம் பின்னுள்ளோர் எளிதில் உணர்ந்து உய்தற் பொருட்டு, தம் முன்னுள்ளோர் கண்ட முடிபுகளுடன் கூட்டித் தொகுத்துக் கூறிச் செல்வாராயினர். இவ்வாறு கூறப் பட்ட நெறியே அறநெறியாம். சுருங்கக்கூறின், முன்னோர் விதித்தனவற்றைச் செய்தலும், விலக்கியனவற்றைச் செய்யாமல் ஒழிதலும் ஆய இவ்விரண்டே அறநெறியாம்.

இவ்வறநெறி கடைப்பிடித்து வாழ்வான் துன்பத்தின் நீங்கிய இன்பத்தினையும், தீமையின் நீங்கிய நன்மையினையும் பெற்று வாழ்பவனாகின்றான். அவ்வாறு பெற்ற இன்பத்தினை அவன் என்றும் ஒருநிலைத்தாகப் பெற விரும்புதலும் இயல்பே. அவ்வறநெறி வாழ்வதாற் பெற்ற இன்பத்தினைச் சிறிது மிகைப் படுத்தித் தருவது, அவ்வறநெறியே ஈட்டிய பொருளாகும். இவ்வாறு அறிநெறி நின்று பெற்ற இன்பத்தினைப் பரந்த அளவில் தருவது பொருள் எனக் கண்டான், அப் பொருளினை முன்னோர் கூறிய அறநெறியே நின்று பெற்று வாழ்கின்றான். இவ்வாறு அறநெறி நின்றும், பொருள் ஈட்டியும் பெற்ற இன்பமும் என்றும் ஒரு நிலையில் இலதாய் நாள்தோறும் குறைவுறுவதைக் காணும் அவன், குறைவின்றி நிறைந்த ஓர் இன்பத்தினைப் பெற முயற்சித்து இறுதியில் அவ்வின்பத்தையும் பெற்று நிற்பன். அவ்வின்பத்தையே வீட்டின்பம் என்று நூல்கள் கூறுகின்

றன. இந்நெறி அறத்தால் பொருளும், பொருளால் இன்பமும், இன்பத்தால் வீடும் பெற விழைதலே மக்கள் தம் மனத்தின் இயல்பாம். இவ்வியல்பினின்றும் வேறுபடுவார் மக்கள் எனும் தகுதிப்பாட்டிற்கு உரியரல்லர். இவ்வறம், பொருள், இன்பம், வீடு ஆய இந் நாற்பொருளையே, நம் தமிழ் நாட்டினர், அகம், புறம் என இரண்டனுள் அடக்கிச் செல்வாராயினர். அகமாவது, மக்கள், என்றும் தம் உள்ளம் குறைவின்றி நிறைந்த இன்பக் கேணியில் திளைத்திருக்க வாழும் வாழ்க்கையாம். புறமாவது, அவ்வுள்ளம் அவ்வின்பக்கேணியில் படிந்து இருத்தற்கு உறு துணையாய பொருளினை அறவழியே ஈட்டுதற்கு மேற்கொள்ளும் முயற்சி வகைகளாம்.

இனி, மக்கள், அறம், புறம் ஆய இரண்டையும் ஒப்பக் கருதாது, புறத்தை மறந்து அகம் ஒன்றையே பற்றியோ, அன்றி, அகத்தை மறந்து புறம் ஒன்றையே பற்றியோ வாழ்வாராயின், அவர்கள் வாழ்க்கை பயனுடைய வாழ்க்கை யாகாது. மக்கள் அகத்தையும், புறத்தையும் ஒப்பக் கருதிப் பேணிவந்த பண்டைக் காலத்தே அவர்தம் வாழ்க்கை செம்மையுற்றிருந்தது. இடைக்காலத்தே மக்கள் அகம் ஒன்றையே கருதிப் புறத்தை மறந்தார்கள். ஆகவே அவர்கள் வாழ்க்கை நிலை கெடுவதாயிற்று. அவ்வாறு கெட்டவருள், சச்சந்தனும், சேரன்கணைக்கால் இரும் பொறையும் சேர்ந்தோராவர். முன்னோன், தன் மனைவிபால் பெறலாகும் காம இன்பம் ஒன்றையே பெரிதாக எண்ணிப் புற நிகழ்ச்சிகளை அறவே கைவிட்டு, அரச உரிமையையும் அமைச்சன் கட்டியங்காரன்பால் ஒப்படைத்து வாழ்ந்ததினால், அரசை இழந்து, இல்லாளை இழந்து, இறுதியில் உயிரையும் இழந்தான். பின்னோன் ஆயுந்தொறும் ஆயுந்தொறும் இன்பம் பயப்பதாய நூல்களை ஆராய்வதன் கண்ணேயே தனது முழுக் கருத்தையும் செலுத்தி, தனக்குரிய புற ஒழுக்கமாய நாடு காவலை நாடாது ஒழியவே, அவன் சோழன் செங்கணானால் சிறை செய்யப்பெற்று, சிறையிலேயே உண்ணவும் நீர் இன்றி, உயிரையும் இழந்தான்.

இவ்வாறு இடைக்காலத்தே மக்கள், அகம், புறம் ஆய இரண்டினையும் ஒப்பக் கருதாது, அகம் ஒன்றினையே பற்றி

வாழ்க்கையின் முழுப்பயனையும் எய்தாது கெட்டது போன்றே, இக்காலை, மேனுட்டினர், அகத்தை அறவே மறந்து புறத்தி லேயே தம் நாட்டத்தைச் செலுத்திக் கெட்டொழிவதைக் காணும் நாம், அகம், புறம் ஆய இவற்றின் ஒன்றினிடத்தே மட்டில் உளத்தைச் செலுத்தாது, நம் பண்டை முன்னோர் போன்று அகத்தையும் புறத்தையும் ஒப்பக் கருதி வாழ்ந்து உயர் நிலை பெறுவோமாக.

இனி, பண்டையோர் அகத்தையும், புறத்தையும் ஒப்பக் கருதி வாழ்ந்த உயர்வுடையோராவர் என்பதற்கு ஒரு சில சான்றுகளைக் காட்டி இக் கட்டுரையினை முடிக்கின்ரும்; ஒரு வினையைச் செய்து முடித்தல் வேண்டும் எனத் தொடங்குவான் ஒருவன் அதை இடையில் மடங்காது செய்து முடிக்க விரும்பு வானுயின், அவ் வினையைத் தொடங்குவதற்குமுன், அவனுல் எண்ணித் துணியப்பட வேண்டுவன பலவாம். முதற்கண் தான் செய்யத் தொடங்கிய வினை பழியொடு படராப் பண் புடைய வினைதானு என்று நோக்குதல் வேண்டும். பின்னர் அவ்வினையைச் செய்யுழி உளவாம் அழிவுப்பொருளின் அள வினையும், அவ் வினை முட்டின்றி முடிந்தால் உளவாம் ஆக்கப் பொருளின் அளவினையும் சீர்தூக்கிப் பார்த்து, அழிவுப் பொருளி னும், ஆக்கப்பொருள் மிக்கிருப்பின் அவ்வினையைச் செய்யத் துணிதல் வேண்டும். பிறகு, அவ்வினையினது வலியையும், "நல்ல காரியத்திற்கு நானூறு இடையூறு" என்பவாகலின் அவ்வினையைச் செய்ய ஒட்டாமல் தடை செய்வார்தம் வலியை யும் ஒருபால் நிறுத்தி, அவ் வினையைச் செய்யும் தன் வலியையும், தனக்குத் துணையாவார்தம் வலியையும் வேறு ஒருபால் நிறுத்தி ஒப்பு நோக்கி, முன்னிரண்டு வலியைக் காட்டினும், பின் இரண்டு வலி மிக்கிருப்பின் அவ்வினையைச் செய்யத் தொடங்கு தல் வேண்டும். தொடங்குங்கால், அவ் வினை முட்டு இன்றி முடிதற்காம் காலத்தையும் இடத்தையும் தேர்ந்துகொண்டு, அஞ்சாமை, ஊக்கம் முதலிய குணங்களுடன் செய்யத் தொடங்கி, இடையே இடுக்கண்கள் பல அடுக்கிவரினும் அவை கண்டு அஞ்சாது, மெய்வருத்தம் பாராது, பசி நோக்காது, கண் துயிலாது, எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளாது, செவ்வி

அருமையும் பாராது, அவமதிப்பும் கொள்ளாது, கருமமே கண்ணுய் இருந்து அவ்வினையைச் செய்து முடித்தல் வேண்டும். இவ்வாறு பேரிடர்ப்பாட்டினுக் கிடையே அவ் வினையைச் செய்து முடித்தான், அவ் வினையாலாம் பயனைப் பெறுங்கால், அவன் உள்ளம் கொள்ளும் இன்பத்திற்கு எல்லையும் கூறமுடியுமா? இவ்வாறு புறத்தே தொழிலாற்றிப் பெற்ற இவ்வின்பத்தினை ஒரு புலவன் "வினைமுடித்தன்ன இனியோள்" (நற்றிணை, 3) என அக இன்பமாகிய பெண் இன்பத்திற்கு ஒப்பிட்டுக் கூறுவாருயின், அக்கால மக்கள் உள்ளம், அக இன்பத்தையும், புற இன்பத்தையும் ஒப்பக் கருதி வந்தன என்பது தெள்ளிதிற் புலனும் அன்றே?

மேலும், "ஒரு காலத்து ஒரு பொருளான் ஐம்புலனும் நுகர்தற் சிறப்புடைத்தாய இன்பம்" எனவும், "சுவை பல என்று கூறுவார் கூறுக, யாம் கூறுவது இன்பச்சுவை ஒன்றனையுமே" எனவும் பாராட்டிப் பேசப்பெறும் இன்பத்தை அளிப்பாராகிய பெண்களை, புற இன்பம் பெறும் எண்ணத்துடன் வினையாற்றுவார் அவ் வினைக்கிடையே நினைத்தலும் கூடாது என்பார் "கிழவி நிலையே வினையிடத்துரையார்" என்று கூறி, அவ் வினையை முற்றுப்பெற முடித்து அவ் வினையாலாம் முழுப்பயனையும் நுகருங்கால், பெண் இன்பம் தம்மை யறியாதே தம் மனத்திடைத் தோன்றி நிற்கும் என்பார் "வென்றிக் காலத்து விளங்கித் தோன்றும்" என்றும் கூறிய ஆசிரியர் தொல்காப்பியனர் அவர்களின் சொல்லே பண்டையோர் அக இன்பத்தையும், புற இன்பத்தையும் ஒப்பக் கருதிய உயர்பேராளர் ஆவர் என்பதைக் குன்றிடை விளக்கென நின்று காட்டுகின்றது. மேலும், சான்று பல காட்டிச் செல்வேமாயின் கட்டுரை விரியுமென்றஞ்சி இம்மட்டில் முடிக்கின்ரும்.

காலை மலர்ச்சி!

[புத்தனேரி. ரா. சுப்பிரமணியன்]

1. வெள்ளி விடிவதைக் காணுதடி—வானம்
வெண்மை வரவரத் தோணுதடி
புள்ளினங்கள் கூட்டை நீங்குதடி—வண்டு
பூக்களில் தேனுண்ண எங்குதடி.

2. சின்னக் குயிலிசை பாடுதடி—காற்றில்
சேர்ந்து மரக்கிளை யாடுதடி
தென்னை பனைக ளசையுதடி—அணில்
தேமாங் கனியைப் பிசையுதடி.

3. காக்கைக ளினத்தைக் கூவுதடி—பசுங்
கன்றுகள் தாயிடந் தாவுதடி
சீக்கிரம் பாலைக் கறந்திடவே—ஆயர்
சென்று தொழுவைத் திறந்தாரடி.

4. நந்த வனத்தினிற் பூக்களிலே—இதழ்
நாள்மலர் பூக்க விரிந்ததடி
சிந்தை குளிர்ந்தவை கொய்தாரடி—மக்கள்
சேர்த்தழ காய்மாலை செய்தாரடி.

5. பாரடி காளைகள் ஓட்டிக்கொண்டு—ஏழைப்
பள்ளர்கள் பாடல்கள் மீட்டிக்கொண்டு
ஏரினால் உழுது பண்படுத்த—வயல்
ஏகிடும் புான்மையைக் காண்பாயடி.

6. சின்னஞ் சிறுவர்கள் கூடிக்கொண்டு—தனிச்
சிங்கார மாய்விளை யாடிக்கொண்டு
பொன்னி நதிதனில் நீராடக்—களி
பொங்கிக் குதிப்பதைப் பாராயடி.

7. சேலக் கயல்விழி மாதரெல்லாம்—நல்ல
நித்திரை நீங்கி வாயில்தெளித்துக்
கோலங்க ளிட்டெழில் நின்றாரடி—பின்னர்க்
கூடிக் குளித்திடச் சென்றாரடி.

8. அன்ன நடையிற் கை வீசிக்கொண்டு—பெண்கள்
ஆற்றுக்குச் செல்லும் விரைவினிலே
பின்னே அழுதகை வண்டியுடன்—வரும்
பிள்ளையைக் கூட நினைப்பதில்லை.

9. ஆற்றுநீர் செல்லும் அமைதியிலே—மீன்கள்
அங்குமிங்குந் துள்ளி யாடுமடி!
காற்றலை தள்ளக் குளிப்பவர்கள்—தள்ளும்
கையலை கள்பல தோன்றுமடி!

10. கங்குல் இரவுங் கழிந்ததடி!—நல்
காலை மலரும் மலர்ந்ததடி!
எங்கும் உணர்ச்சி பிறந்ததடி!—நாட்டில்
பொங்கும் மகிழ்ச்சி சிறந்ததடி!

திருவாரூர்ப் பள்ளு

[வித்துவான் திருவாட்டி சிவ. பார்வதியம்மையார்]

13-11-42-ல் திருச்சி வானொலியில் பேசியது.

(முன் கஙo-ம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும், நம் முன்னோர்கள் உணவிற்கு ஆதாரமான உழவு தொழிலை மிக மதித்துள்ளார்கள் என்பதற்குச் சிந்தாமணி முதலாகவுள்ள செந்தமிழ்க் காப்பியங்கள் பலவற்றிலும் நாட்டுப் படலம் என ஓர் பிரிவை வகுத்துக்கொண்டு, அதில் ஆற்றில் நீர் பெருகி வருவதும், வயல்களில் நீரைப் பாய்ச்சுவதும், உழுவதும், விதை தெளிப்பதும், நாற்று நடுவதும், களை பறிப்பதும், கதிர் அறுப்பதும் முதலிய செய்கைகளைப் புனைந்துரைப்பதே சான்றாகும். திருவாரூர்ப் பள்ளில் பண்ணைத் தலைவன், வன்மீகப் பள்ளன், வன்மீகப்பள்ளி, சிரங்கப்பள்ளி யென்போர் நாடகப் பாத்திரங்களாகவுள்ளனர். சதாசிவ மூர்த்தி பண்ணைத் தலைவன் அல்லது ஆண்டையாகவும், மகேசுரன் பள்ளனாகவும், இருசத்திகள் பள்ளிகளாகவும் உருவகம் செய்யப்பட்டுள்ளது என்று கூறுவர். இதில் மழை நீர் பெருகி ஐந்திணைகளிற் செல்லுதல், மணிமுத்தாறு பெருகி வருதல், பண்ணைத் தலைவன் வருகை, அவன் பள்ளனைப் பண்ணைச் செயல் வினவுதல், பள்ளன் அதனையும், எருத்துமாடு, ஏர்க்கால், மேழி, கொழு, நெல்லின் வகை என்பவற்றையும் எடுத்துரைத்தல், பண்ணைக்காரன் பள்ளனை விதை தெளிக்கச் சொல்லல், நடவு நடப் பள்ளத்திகளை யழைத்தல், பள்ளத்திகள் ஒருவரை யொருவர் ஏசுதல், என்னும் இவை முதலாயின அழகாகவும், நகைச்சுவை தோன்றவும் கூறப்பட்டுள்ளன. இதில் வெண்பா, கலித்துறை, விருத்தம் முதலியவற்றுடன் சந்தப் பாக்களும் அமைந்துள்ளன.

இந் நூலிலே குறிஞ்சியில் பெய்த மழைநீர் முறையே ஐந்திணைக் கருப்பொருள்களை வாரிக்கொண்டு செல்லுதல் கூறுமிடத்து முல்லை நிலத்திற் செல்லுதல் இவ்வாறு கூறப்பட்டுள்ளது:

புரண்டு முல்லை நிலத்திற் புகுந்து பொதுவர் மனையில் கதலியே
பதிய கெய்யும் பழைய தயிரும் பொருந்து பாலு மருந்தியே

கரந்தை யணியும் பரந்த சடையர் கமலைத் தியாகர் விடையைப்போல்
கள்ள மேகொடு வெள்ள மேவிய கான வாரண மோடவே
தூரந்து பயிலும் உழையும் முயலு மொழிந்து திரையி லழுந்தவே
தோன்றிக் குருந்துங் தான்றி யடகுஞ் சுழியி லிடையி லுழலவே
பருந்தி ராசன் பொருந்து முபய பதங்கள் கருதி வணங்கியே
பரிந்த துளவும் செருந்து மீதினில் பரந்து மருதங் கலந்ததே.

மற்றும்,

'வாளை திருக்கை சுறவு தொழுத்தை வஞ்ச னம்சிறு மஞ்சனம்,
மடவை யுல்லம் அயிரை கெளிறு மகரம் குறவை மலங்குமீன்,
தேளி யுழுவை மயறு சன்னை திமிதி மிங்கிலம் பலபுரவிமீன்,
சீளி கைத்தலை யானை மீனொடு தெள்ளி ருல்வாளை வெள்ளிருல்.'

முதலிய மீன் வகைகளும் ;

'முட்டிக் காலன் வெட்டுக்கிடா முட்டக் கருப்பன் மோழைக் காளை விணைக் கொம்பன் ஆனைச் சொரியன் மட்டக் கொம்பன் நெட்டைக்காலன் வட்டக்குறியன்' என இவை முதலாக மாட்டின் பெயர்களும் ; 'அரிய நாயகன் குறுவை பொற்காலி அருச்சுனன் தியாதாலுணங்கு திருவரங்கன் அழகிய வாணன் தில்லைநாயகன் சீரகச்சம்பா' முதலிய நெல் வகை களும் கூறப்பட்டிருப்பன ஆசிரியரின் பரந்த உலகியல் அறி வைப் புலப்படுத்தி இன்பம் விளைப்பனவாகும்.

பண்ணைத் தலைவனைப் பள்ளிகள் கண்டு,

'குறுத்தமெய் யழகரே கும்பிடுகிறேன்
கொழுக்கட்டை மூக்கரே கும்பிடுகிறேன்
சொறித்தலை யழகரே கும்பிடுகிறேன்
கூனும்சோணி வயிற்றரே கும்பிடுகிறேன்
பறித்தகண் ணழகரே கும்பிடுகிறேன்
ஊசிப்பாசிப்பல் லழகரே கும்பிடுகிறேன்
அறுத்தகா தழகரே கும்பிடுகிறேன்
பண்ணையாண்டவரே ஆண்டவரே கும்பிடுகிறேன்.'

என்று கூறிப் பாராட்டி வணங்கினர்களாம். ஆகா ! பண்ணைத் தலைவனுடைய அழகே அழகு.

இவ்வாறே நகைச்சுவை தோன்றக் கூறியிருப்பவற்றில் பள்ளன் பண்ணைச் செயல் விளம்புதலும் ஒன்று:

'இளவிதைகார் பாசான விதையில்
    எலியருந்தியது தொண்ணூறு கோட்டை
வளவிலே யிட்ட பட்டடையில்
    பட்டிமாடு தின்றதெழுநூறு கோட்டை
அளவுவாசி யறுநூறு கோட்டை
    யந்துநின்றதோ ரைந்நூறு கோட்டை
களவுபோனது நானூறு கோட்டை
    கண்டகோட்டையும் முந்நூறே யாண்டே.'

என்பது காண்க.

மற்று, இப் பிரபந்தத்தில் பள்ளன் மனைவியருள் மூத்தாளாகிய வன்மிகப் பள்ளியும், இளையாளாகிய சீரங்கப்பள்ளியும் ஒருவரையொருவர் ஏசிக்கொள்வதே முதன்மையான பகுதி. மூத்தாள் சீரங்கப்பள்ளியின் ஆண்டையாகிய திருமாலையும் இளையாள் வன்மீகப்பள்ளியின் ஆண்டையாகிய சிவபெருமானையும் அவர்கள் செய்த செயலெல்லாம் தகாதனவாகக் கூறி இகழ்வதே பள்ளிகளின் ஏசலாகும். அவையெல்லாம் பழிப்பது போற் புகழும் புகழாகப் புகழ்ச்சியணியின்பாற்படும். அவ் வேசலிலே சிலவற்றைக் காண்போமாக.

'அந்தமுட னந்தரச ரைவ ரேவவே
    அன்று தூது சென்றானுங்கள்
    ஆண்டை யல்லோடி.
சுந்தரன் விடுத்தபோ தந்த விரவில்
    தூது சென்றா னுங்களுடைச்
    சோதி யல்லோடி.
மட்டுப்படாத் துட்டத் தனம் செய்த சோதைதன
    மத்தடி யுண்டா னுங்கள்
    கத்த னல்லோடி.
பிட்டுக்கு மண்சுமந்து பாண்டியன் கையாற்
    பிரம்படி பட்டா னுங்கள்
    பிரா னல்லோடி.
ஆட்டுக் காலுக் காசை யாகிக் கோட்டுப்பன்றியாய்
    அன்று தேடிச் சென்றானுங்க
    ளாண்டை யல்லோடி.

மோட்டுப் பன்றி யாயன்று குட்டிதனக்கு
முலையுங்கொடுத் தானுங்கள்
முத்த னல்லோடி.'

என்று இவ்வாறு ஏசிவிட்டுத் தத்தம் ஆண்டையின் பெருமையைக் குறித்து 'முடிகவித்து விபீடணர்க்கன்றரசாள மூதிலங்கை கொடுத்தானெங்க ளாண்டையல்லோ, முடிவிலா பறைவனந் தன்னிலெலிக்கு மூவுலகீந்தானென் னுண்டையல்லோடி' என்று இங்ஙனம் புகழ்கின்றனர். பின்பு 'கேசவனை யேசுவ திங்கேது சொல்லடி கிட்டிப்பார்க்கி லவர்க்கவ ரிட்டமல்லோடி, ஈசனை யேசுவதிங் கேது சொல்லடி யிருவர்க்குமுற வன்றிப் பகையு முண்டோ' என்றும்;

'மறந்திடா யென்பிழையை யன்பு கூறவே
வன்ம மாக எண்ணு தேநீ வன்மீ கப்பள்ளி
சிறந்துநா மிருவருங் கூடி யாடியே
சேர்ந்து வாழ வேணுங் காணுஞ் சீரங் கப்பள்ளி.'

என்றும் கூறி ஒற்றுமையாகிவிடுகின்றனர். மேலே காட்டியவற்றுள் 'ஆட்டுக்காலுக்கு ஆசையாகி' என்றது பொன்னம்பலத்தில் ஆடுகின்ற திருவடியைக் காண்டற்கு விரும்பி என்றபடியாம்.

இந்நூலாசிரியர் இங்ஙனம் பள்ளிகளின் ஏசல் வாயிலாகச் சிவபிரான் பெருமைகளையும் திருமாலின் பெருமைகளையும் உணர்த்திச் சைவத்தையும் வைணவத்தையும் சமரசப்படுத்தி முடித்திருக்கும் திறம் பாராட்டற்குரியது. இவ்வாசிரியர் சிறுத்தொண்ட நாயனர், அமர்நீதி நாயனர், இயற்பகை நாயனர் முதலியவர்கள் வரலாற்றையும், சிவபிரான் சுந்தரமூர்த்தி நாயனுருக்காகப் பரவை நாச்சியார் வீட்டுக்கு இரவிலே பாதஞ் சிவக்கத் தூது சென்றது, திருஞானசம்பந்தர் திருமயிலாப் பூரிலே என்பைப் பூம்பாவையாகச் செய்தது, மாணிக்கவாசகர் பொருட்டு இறைவன் நரியைப் பரியாக்கியது, பிட்டுக்கு மண் சுமந்து பாண்டியன் கையாற் பிரம்படிபட்டது முதலிய செய்திகளையும் கூறியிருப்பது சிவனடியார்கள் வரலாற்றில் இவருக்குள்ள ஈடுபாட்டினைப் புலப்படுத்துவதாகும். மற்றும் காமனை யெரித்தது, தக்கன் வேள்வியை அழித்தது, சிவ புண்ணியத்தால்

எலியை மாவலியாக்கி மூவுலகாட்சியளித்தது முதலிய சிவ புராணக் கதைகளும் இதில் வந்துள்ளன. அவ்வாறே திருமால் கிருட்டிணவதாரத்தில் நிகழ்த்திய பல விளையாடல்களும், இராமாவதாரச் செய்திகளும் பிறவும் கூறப்பட்டுள்ளன. 'தளித்தேறு செந்தமிழைக் கொண்டவரசர் தக்கபுகழ்போல் நாற்றுஞ் சமைந்த திப்போ' என்று தமிழ் வளர்க்கும் அரசர் புகழைப் பாராட்டியிருப்பதும், 'சிவகாரியந்தனக்கு அகிதங்கள் செய்யுமவர் தி நரகில் விழுவே கூவாய் குயிலே' என்று சிவகாரியத்திற்கு அழிவு செய்வோரை மிக வெறுத்துரைத்திருப்பதும் சிந்திக்கற்பாலன. தியாகேசர் கனகத்ண்டில் அசைந்தாடும் அழகை,

'மங்கை யாடக் குடிலச் சடில மருவு தாள மாடவே
மார்பிற் செங்கழு நீரிற் பைந்தொடை மணிப்பொற் றேடு மாடவே
சங்கை யாடத் திங்க ளாடக் கனக தண்டினி லாடுவார்
கமல வாழும் அமலர் மேவு சயறு லாவும் வயலுளே'

எனப் பாட்டின் சந்தத்தாலும் புலப்படுத்தியிருப்பது இன்பம் விளைப்பதாகும்.

தனித்தமிழ்க் கீர்த்தனைகள்

['நமது சென்ம பூமி' என்னும் முறை]

நம்முயிர்த் தமிழ் மொழி
நம்முயிர்த் தமிழ் மொழி
நம்முயிர்த் தமிழ் மொழி (நம்)

தேனும் பாலும் கலந்த பாகின்
தேவிவு தன்னின் இனிக்குமே
வானம் சுருங்க வளர்ந்த தாரும் (நம்)

அன்பும் அருளும் இன்ன என்று
அறிஞருக்கும் தந்தது
என்புருக்கும் இசையைப் பெற்ற (நம்)

உலகம் தோன்றும் நாளின்முன்னர்
உலவிநின்ற செம்மொழி
கலைகள் பலவும் கவினநின்ற (நம்)

கடவுள் கண்ட தன்பர் விண்ட
தளவிலாத உலகினர்
மடமை ஒழிக்கத் துணைகொடுக்கும். (நம்)

—வித்துவான் மு. இராசாக்கண்ணனார், B.O.L.

குண்டலகேசி அகவல்*

[அடிகள் சுத்தானந்த பாரதியார்]

தமிழில் ஐம்பெருங்காப்பியம் இருப்பதாகப் பெருமை கொள்கிறேம். அவற்றுள் சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய மூன்றே உருப்படியாக உள்ளன. வளையாபதி, குண்டலகேசி ஆகிய இரண்டும் மறைந்தன. அவற்றினின்று சில செய்யுட்களே அங்குமிங்கும் நமக்குக் கிடைத்துள்ளன. வளையாபதியிலிருந்து 100 பாட்டுக் கிடைத்துள்ளன. குண்டலகேசி விருத்தங்களில் பத்தொன்பதே கிடைத்துள்ளன.

குண்டலகேசி சூளாமணிபோன்ற இனிய மாகவி. அதை வீரசோழியம் "அகல கவி" என்னும். அது பௌத்த சமயச் சார்பானது. அறம் பொருள் இன்பம் வீடு ஆகிய நாற்பொருளையும் விளக்குவது. நீலகேசியில் இக் காவியக் குறிப்புகள் உள்ளன. அவற்றல் ஒருவாறு கதையை ஊகிக்க முடிகிறது. நீண்டகாலம் இதன் காப்புச்செய்யுளே நமக்கு மிச்சமிருந்தது. அண்மையில் புலவர் ஆராய்ச்சியால் பதினெட்டுச் செய்யுட்கள் கிடைத்தன.

அவற்றுள் இரண்டை இங்கே தருகிறேன். காவியத்தின் சுவையைப் பாருங்கள்.

முன்றான், பெருமைக்கண் நின்றான் ; முடிவெய்து காறு
நன்றே நினைந்தான் ; குணமே மொழிந்தான் ; தனக்கென்று
ஒன்றேனு மில்லான் ; பிறர்க்கே உறுதிக் குழந்தான் ;
அன்றே இறைவன் ; அவன்றாள் சரணங்க ளன்றே.

இறைவன் என வணங்கத்தக்கவன் பெருமைகளையும் தன்மைகளையும் இச் செய்யுள் விளக்குகிறது. இறுதிமட்டும் நலமே புரிதல், நலமே நினைத்தல், எல்லாருக்கும் இனிதாகும் நற்குணங்களையே மொழிதல், தனக்கென்று எதுவும் இல்லாமை, அகப்புறப்பற்றின்மை, பிறர் நலத்திற்கே பாடுபடுதல், ஆகியவையே

---

*இந்நூல் விரைவில் திருத்தமாக அன்பு நிலையத்திலிருந்து வெளிவரும்.

இறைவன் அருட்பெருமையாகும். அப் பெருமை சான்ற முதல்வனைச் சரண்புகுந்து வணங்கும் மாந்தர் அறநெறி நின்று அருளோங்கி நலம்பெறுவார்கள். இது காப்புச் செய்யுள்.

பாளையாந் தன்மை செத்தும், பாலனுந் தன்மை செத்தும்,
காளையார் தன்மை செத்தும், காமுறும் இளமை செத்தும்
மீளுமிவ் வியல்பும் இன்னே மேல்வரு மூப்பு மாகி,
நாளுநாம் சாகின் றேமால் நமக்குநாம் அழாத தேனோ?

மனிதன் ஒவ்வொரு பருவத்திலும் செத்து முதிர்ந்து, ஒவ்வொரு நாளும் சாகிறான். உடலின் நிலையாமை அவ்வாறிருப்பதால், பிறர் சாகும்போது அழுவதினும், நாமே தினஞ் சாவதைக் கண்டு வருந்தி முத்திமார்க்கத்தை அடைவது நலம்.

இக் கருத்துக்களையே பொருளாகக் கொண்ட இக் கவியிற் பொதிந்த கதையை அகவலாகச் சுருக்கிச் சொல்லுகிறேன். குண்டலகேசி என்னும் பெயரால் சில தொடர்பான கதைவரிகளாவது விளங்கவேண்டும். அந்தப் பெயர் காலச் சுழலில் மறைந்து போகக் கூடாது என்பதே இம் முயற்சியின் கருத்து.

குண்டலகேசி

௧. ஒளிவார் முகமுங், கருணை விழியும்,
அருளார் மனமும், அன்புச் சொல்லும்,
பிறர்க்கே வாழும் பெருந்தகை வாழ்வும்,
அறமார் பணியும், அணிந்த பகவன்,
மாசறு காட்சி மன்னன்,
சேவடிக் கமலஞ் சிந்தைசெய் வோமே!

௨. அவனருட் பெருமை அறியச் சொல்லும்,
பழந்தமிழ்ப் புலவர் பாடிய குண்டல
கேசி யென்னும் தேசறு மாகதை,
ஐம்பெருங் காப்பிய மதனுளே ஒன்றும்.
ஆயினும்,
பெயரள வினிலே உயிர்வைத் துள்ளது.
சூளா மணிபோற் சொற்சுவை மிக்கதாம்
'அலைக் காவியம்' அதிற்பத் தொன்பதே
பாட்டு நமக்குப் பாக்கி யுள்ளது.

கவிதை போயினும் கதையினை யேனும்
தமிழர் அறியச் சாற்றிடு வேனே.

௫. சீர்த்தி யோங்குந் திருநக ரதிலே,
கல்வியும் வாணிபச் செல்வமுஞ் செழித்து
வாழ்ந்தான் இசைபெறு வாணிக மணியே.
அன்னவன் பெற்ற மின்னிடை யன்னம்,
மதிவளர் முகத்தாள், மலர்தரு விழியாள்,
அமுதம் பொழியுங் குமுத வாயாள்,
புயலும் புகையும் போலச் சுருண்ட
கூந்த லழகி, குண்டலகேசி
என்னும் *பத்திரை, பதுமினி
சித்திரத் தெழுதொணுத் திருவுடை மாதே...

௬. பருவ மடைந்த திருமா தொருநாள்,
கொஞ்சுங் கிளிபோற் கூவுங் குயில்போல்,
தோகை மயில்போல் தோழிய ருடனே
மாடத் தின்மேல் ஆடித் திரிந்தாள்.

௭. அத்தறி தெருவில் அரசன் காவலர்,
திருட ஞெருவனைச் சிறைப்பிடித் தேகினர் ;
பார்த்தாள் பெண்மணி பதைப தைத்தாள் ;
“ எழிலார் வாலிபன், இளந்திரு வுடையான்,
என்மனம் விரும்பு மன்மதன் இவனே ;
இவனே கள்வன்...இவனென் காதலன் !”
என்று திகைத்து நின்றா ளாங்கே !
காளன் என்னும் காளையக் கள்வன்
அரசருக் கினிய அமைச்சன் புதல்வன்.
பௌத்த சமயம் புகுந்தும் பயின்றும்,
அடங்கா மனத்தால் அறம்பி ழைத்தான்
சிறையிட் டிவனைச் சிரம்வாங் கிடவே
வேந்தன் பணித்தான்...வினைப்பய னென்னே !
கோவின் காவலர் கொண்டுசென் றாரே.

௮. காத லாலே கலங்கிய, நங்கை,
உடல்வெ ளுத்தாள், உள்ளஞ் சோர்ந்தாள்,
நுவலமாட் டாத நோய்கொண் டயர்ந்தாள்,

---

* பத்திரை என்பதே அவள் இயற்பெயர்.

கண்ணைக் கவர்ந்த கள்வனைத் தவிர
வேறு நினைப்பெலாம் வீணென மறந்தாள்.
காதலன் விடுதலை காண வேண்டிப்
போதி நாதனைப் பூசனை செய்தாள்.
பெற்றோர் திருமணம் பேசும் போதெலாம்,
“மனத்திற் கிசைந்த மணாளன் ஒருவனே,
அவனை யன்றி யெவனையும் பாரேன்”
என்றுதன் உள்ளம் நன்றெடுத் துரைத்தாள்.

ஏ. மந்திரி முயன்றான்; மாசறு தந்தையும்,
அரசனை வேண்டினான்; ஆண்டவன் கருணையால்,
காளன் விடுதலை கண்டான்...கண்டு
கன்னி மகிழ்ந்தாள்...கடிமணம் புரிந்தாள்.
செல்வம் பெருகிய செட்டி மகிழ்ந்தே,
எனதிளஞ் செல்வர் இனிதுவாழ் கென்றே
இல்லந் தந்தான் செல்வந் தந்தான்...
கவலை யற்றுக் காதலர் நாளும்
புதுப்புது போகம் புசித்தனர் ஆங்கே.
உலகை மறந்தார், உடலுக் கினிய
சுகமே சுகமெனச் சொக்கிப் போனார்.
இருவரும் அன்பால் ஒருவரே யானார்.
கணப்பொழு தேனும் இணைபிரி யாமல்,
கரையிலாக் காமக் கடலிற் குளித்தார்.

அ. துய்த்துக் காமந் துடைப்போ மென்னல்,
அனலை நெய்யால் அணைப்பது போலாம்.
நினைவறப் புணர்ந்ததை நீக்குவோ மென்பார்,
புனலாற் புனலின் போக்கினைப் பவரே.
வேல்விழி தாக்கத் தோல்வியுற் றிணங்கிக்
காமத் தீயில் வேகும் மாந்தர்,
எத்தனை போகம் துய்த்து மென்னே...!
அவர்நுக ரின்பம் அரைகோடி யின்பமே;
நில்லா யாக்கை நிகரவே யதன்பால்,
வுறுங் காமமும் வேறுபா டுறுமே...
மாந்தர் ஆசை மண்டல மதனில்,
விருப்பும் வெறுப்பும், விழைவுஞ் சோர்வுமே
இனிப்புங் கசப்பும், எரிப்புங் குளிரும்,

அலைகளைப் போலே ஆடிப் புரளும்...
இன்றுநே சித்தவர் இன்னொரு நாளே,
கொடும்பகை கொதிக்குங் கூற்று வாரே...

௯. கேசியுங் காளனு நேசித் திருந்த
வாழ்விற் கலக்கம் வந்ததும் விந்தையோ?
கூடலே யுவந்து நீடிய காதல்,
கூடல் சுருங்கி ஊடல் பெருகவே,
ஊடலி னூடே உரைகள் வளரவே,
உரைக ளுடனே குறைகள் கூறவே,
பேச்சுத் தடிக்கவே, பெண்ணணங் கொருநாள்,
" ஒழுக்க மென்னும் உயர்நல முடைய,
செல்வன் அருமைச் செல்வி யானே...
நீயோ ஒழுக்க நிலைகெட் டலைந்து,
கடுஞ்சிறை வருந்திய கள்வனென் றாளே...
நானுன் கணவன் நீயென் மனைவி
என்னையா கள்வன் என்றனை...பெண்ணே
பாதகி உன்னைப் பழிவாங் குகிறேன்...
என்றுட் சினத்தால் எரிமனக் காளன்,
போலிச் சிரிப்பாற் பொழுதைப் போக்கிக்
காலம் பார்த்துக் கண்விழித் தானே.

௧0. உட்பகை கொண்ட வறவெத் தனைநாள்!
உதட்டு நேயமும், உட்சின முறுவலும்,
புழுவுளை துளைத்த பழமெனப் போமே.
காளன் ஒருநாள் " கனியிளம் பாவாய்,
செல்வச் சீமான் செல்விநீ யின்றுன்
அணிமணி வரிசையாய் அணிந்து மற்றோர்
அரம்பைபோல் என்னுடன் அழகாய் வா, வா,"
என்றனன் ஆங்கே சென்றனள் பேதை...
காளனும் சரிகை கட்டித் தன்னை
மாரவேள் போலவள் மதித்திட நின்றான்.
குண்டல கேசியின் கோமள வனப்பைக்
கண்டு கள்ளக் கனிநகை பூத்து...
" கண்ணே, அழகுக் கரும்பே, உத்தமப்
பெண்ணே, எனது பெருமட மானே,
துயர்ச்சிறை நீங்கித் தூக்கு மேடையைத்

தப்பினேன் போதி யப்பன் அருளால்...
ஆதலால் இன்றே அவனை வணங்கிப்
படையல் வைக்கப் பருவதச் சிகரம்
ஏறிச் செல்வோம் ; என்னுடன் வா''வெனக்
கூட்டிச் சென்றான், குலமகள் சென்றாள்.

கக. மலைமுடி மேலே, மணாளர் சென்றதும்,
சிலைபோற் சற்றே சிந்தனை செய்து,
காதலன் முகத்திற் கடுமை காட்டி,
“ கள்ளி நீயெனக் கள்வன் என்றாய்...;
ஆம்யான் கள்வன் ; அழகுச் செருக்கி...
மண்டைக் கருவங் கொண்ட பேதையே,
கள்வன் இன்றுனைக் கொள்ளை யடித்துக்
கொல்லப் போகிறான் கொடுமனக் கசடீ !
என்றான்.
தீப்பொறி பறக்குஞ் சினக்கண் உருட்டி
நிற்குங் கணவனைப் பொற்கொடி பார்த்தாள்...
சற்றே கலங்கிச் சங்கடப் பட்டாள் ;
பிறகுதன் னுள்ளே பேசிக் கொண்டே,
“ கணவனைப் பணிதலே கற்பிற் கழகாம்.
தேவரீர் செய்க திருவுளம்...ஆனால்
என்னைக் கொல்லுமுன், இன்னிய கணவரே,
தம்மை மூன்று தடவை சுற்றி
வணங்கி நிற்கும் வரந்தர வேண்டும் ”
என்றலுங் கள்வன் இணங்கினான் ; அந்தக்
கள்ளியும் வலம்வரக் காட்டி அவனைத்
தந்திர மாகத் தள்ளினாள்...அந்தோ !
“ புத்தா சரணம்...போதி நாதா ...
வஞ்சனை செய்ய வந்தேன் ; என்னை,
வஞ்ச நினைவே வதைத்தது...செய்த
தீவினை யுண்டது தீப்பயன்! என்னை
மன்னித் துனது மலரடி சேர்ப்பாய் ”
என்று கானன் இறைவனை நினைந்தே,
இருட்கண வாயில் உருண்டு வீழ்ந்தான்...
வெருவுறு பாழின் இருள்படர்ந் ததுவே !

கஉ. “ தற்கொல் வினை முற்கொன் றேன்” என
ஒருகொடி நகைத்தாள்...மறுகொடி “ அந்தோ...

கணவனைக் கொன்ற கள்ளியா னேனே !
என்ன தீவினை யியற்றி முடித்தேன் !...
இந்த வினைப்பழி விடுமோ...தெய்வமே...
என்ன செய்வேன்...எனது நாதரே...
நானும் உம்முடன் எளிக் கணத்தில்
விழுந்துசா காமல் கழுந்துபோ லிருக்கிறேன் ?
என்று கண்ணீர் இறைத்து நின்றாள்...
பிறகிவ் வுலகிற் பிறந்த பயனை
அடைந்தே சாதல் அழகெனக் கொண்டாள்.
" பிறந்தவ ரெல்லாம் இறந்து வினையாற்
பிறந்து பிறந்துயிர் துறந்துமண் ணுவார்.
சுற்றும் உலகில், சூழும் இயற்கையில்,
கற்றும் கேட்டும் கண்டும் பெற்ற
பொருளிற் செல்வ போக மதனில்...
எதுவே நிலையாம் ? எல்லாம் ஓட்டம்...
இன்றுளார் நாளை யில்லையென் றுவார்...
குழந்தை யிறந்து குமரி யாகிக்
குமரி யிறந்து குலமக ளாகிக்
குலமகள் தாயாய்க் குலச்சுமை தாங்கித்
தாயும் பாட்டியாய்த் தளர்ந்து, தளர்ந்து
புதைகுழிக் கிரையாய்ப் போய்மண் ணுவதே
உடலின் கதையாம்...உயிரின் கதையோ...
மனத்தி லடைந்த மாசுக ளெல்லாம்,
பற்றாய்ப் பெருகிப் பந்த தொந்த
விகாரமாய் வளர்ந்து, வெவ்வினை பெருகி,
சித்தமும் புத்தியுஞ் சிதைந்து கெட்டு,
மோகங் கொண்டு, மூட மதியால்,
ஆவியும் விடுதலை யடைந்தி டாமல்,
மீண்டும் கருமம் வேண்டும் பலனை
அனுபவித் தனுபவித் தயர்வதை எண்ணின்,
ஆஆ...துன்பம்...ஆஆ...பிறவி !
வேதனை தப்பி விடுதலை பெறவே,
உடலையும் உலகையும் உள்ளே துறந்து,
அருளார் வாழ்வை அடைந்த சிலரே...
உயர்ந்த முத்தர், உற்றவர் வழியில்
செல்வேன் இந்தச் சென்மத் தொல்லையைக்

சொல்வேன்" என்று குண்டல கேசி
ஆரியாங் கனைகள் அருகனை வணங்கும்
தவமடஞ் சேர்ந்தபின் சத்துவ போதராம்,
புத்தர் சேவடி புகலெனப் புகுந்தாள்.
புத்த பிக்குணி, புனித விரதையாய்க்
கலக்க மற்ற மனதைக் காத்துப்
புலன்களை யடக்கிப் புத்தியை வென்று,
வாழ்வை யெல்லாம் வன்றவ மாக்கினாள்.
வெயிலுடன் மழையும் வெப்புடன் குளிரும்,
பசியும் விருந்தும், பழிப்பும் புகழும்,
சமமெனத் தாங்கித் தன்னூண் சுருக்கி ..
காற்றையே நோக்குங் கப்பலைப் போலே,
உயிரைச் சார்ந்த உடலைப் போலே,
சத்த சித்தனாம் புத்த தேவனின்
அருளையே சார்ந்து மருளை விலக்கினாள்.
தீக்காய் வோர்புகைத் தீதை நோக்கார் ;
நோயர் மருந்தின் கசப்பை நோக்கார்,
வன்றவம் புரிவோர் வருத்தமே நோக்கார் ;
நல்ல தாகு நலமே நோக்கார்;
தீய தாகுந் தீமையே நோக்கார்.
நலந்தீ தற்ற பொலங்கொள் சமதை
காக்குந் தூயர் கனலுறத் தவஞ்செய்
சங்க மெய்திய நங்கை கேசி
வினையினி யென்றும் விளையா வாறே
ஆசா பாச மறுத்தக நோற்று,
மாசறு மனமும், தேசறு ஞானமும்,
பெற்றாள் ; புத்த பிரானையுங் காணப்
பெற்றாள் பிறப்பின் பெரும்பயன் யாவும்
பெற்றாள் இனிமேற் பிறவாப் பெருமையே...
பிறவாப் பெருமையிற் பெருமையு முளதோ.

குண்டலகேசி அகவல் முற்றும்.

(அடுத்த இதழில் விளையாபதி தொடரும்.)



[புத்தனேரி ரா. சுப்பிரமணியன்]

௬. குதிரை எங்கே?

"அப்பா ! நீங்கள் யார் ? எங்கிருந்து வருகிறீர்கள் ?"

"நாங்கள் மதுரைவாசிகள் ; அங்கிருந்துதான் வருகிறோம் !"

"உங்கள் முகத்தைப் பார்க்குபோது அரசகுடும்பத்தைச் சேர்ந்தவர்கள்போல் தோற்றுகிறதே! இப்படித் தனியே காட்டு வழியில் எங்கே கிளம்பிப் போகிறீர்கள்? என்ன காரியம் ?"

"ஒன்றுமில்லை பாட்டீ ! சும்மா இப்படிப் பல ஊர்களையும் பார்த்திட்டு வரலாமென்று புறப்பட்டோம் !...என் ?...நாங்கள் இங்கு தங்குவதில் தடங்கல் ஒன்றுமில்லையே?..."

"அப்படி ஒன்றுந் தடங்கல் கிடையாது !...ஆனால்..."

"ஆனால்...என்ன பாட்டீ ?...மறையாமற் சொல்லுங்கள் !..."

"நீங்கள் என் குடிசையில் தங்குவதால் எனக்கொன்றும் கெடுதல் இல்லை !...ஆனால் என் பிள்ளை ஒருவன் இருக்கிறான் !...அவன் முரட்டுக் குணமுடையவன் !...கோபக்காரன் ! ஆட்களோடு பழகவே தெரியாது !... அதுதான் திகைத்தேன் !..."

"பாட்டீ ! இப்பொழுது அவர் எங்கே போயிருக்கிறார் ?"

"கொஞ்ச நேரத்துக்கு முன்னேதான் வெளியே போனான்! திடீரென்று வந்தாலும் வந்திடுவான் !...திட்டமாய்ச் சொல்ல முடியாது !... இருந்தாலும் அதற்கென்ன?...நீங்கள் பயப்பட வேண்டாம் ! அவன் வருவது தெரிந்தால் உங்களை மறைத்து வைத்துக்கொள்கிறேன்..."

"நாங்கள் பயப்படவில்லை பாட்டீ !...இருந்தாலும் சீக்கிரமாய்ச் சிறிது உணவெடுத்துக்கொண்டு கிளம்பி விடுகிறோம்..."

இவ்வாறு நம்பியும் பாட்டியும் அளவளாவிக் கொண்டனர். பின் தாம் கொண்டு வந்திருந்த துணி மூட்டையைப் புலவர் அவிழ்த்தார்.

"பாட்டீ ! இதோ இந்தப் பழத்தைச் சாப்பிடுங்கள் !" என்று கிழவியிடம் இரு மாம்பழங்களை நீட்டினார்.

"வேண்டாமய்யா !...சாகப்போகிற கட்டைக்கு மாம்பழம் கிம்பழம் இதெல்லாம் என்னத்துக்கு ?...நீங்களே சாப்பிடுங்கள் !" என்றாள் கிழவி.

"இல்லை பாட்டீ! பல்லில்லாத வாய்க்குப் பாலும் பழமுந்தானே எளிதான உணவு? கூசாமல் எடுத்துக் கொள்ளுங்கள்!" என்று நம்பி தனது இளமைக் குரலில் இனிதாகக் கூறியதும் பாட்டிக்கு மாம்பழத்தின் இனிப்பு மிகுதியாகத் தோன்றி விட்டது! மூவரும் வயிறு நிரம்பப் பல வகைப் பழங்களையுந் தின்று களித்தனர்.

தின்றதுபோக எஞ்சியிருந்த பழங்களைத் துணியோடே கிழவியிடம் கொடுத்துவிட்டு மதுரைக்காரர்களிருவரும் புறப்படத் தயாராயிருந்தனர்.

இதற்கிடையில் ஏதோ எண்ணியவள்போல் குடிசையின் அடுப்பங் கரைக்குள் நுழைந்த கிழவி ஒரு கும்பா நிறையப் பழைய சோற்றைப் பிழிந்து நன்றாக உப்பிட்டுப் பிசைந்து ஊறுகாயுடன் கொண்டுவந்து புறப் பட்டுக்கொண் டிருந்த மதுரைவாசிகள் முன்வைத்து,

"குழந்தைகளே!...என்னமோ இந்த ஏழைக்கிழவி உங்களுக்குக் கொடுக்கக்கூடிய உணவு இதுதான்! இதனை மறுக்காமல் சாப்பிட்டுப் போங்கள்!" என்று அன்புடன் கூறினள்.

கிழவியின் அன்பை முறிக்க மனமில்லாமல் இருவரும் பழைய சோற்றை உண்ணத் தவங்கினர்.

இதே சமயம், குடிசைக்கு வெளியே மரத்தில் கட்டப்பட்டிருந்த குதிரைகளை யாரோ ஒருவன் முறைத்துக்கொண்டு பார்த்து நின்றான். அவனுடைய உருவம் குண்டு மரக்கால்போல் தோன்றிற்று! காதைத் தொடும் மீசைகளை முறுக்கிக்கொண்டு "திறுதிறு"வென விழித்துக் கொண்டு நின்றான். பின்னர் மெதுவாகப் புலவருடைய குதிரையின் கிட்டே அணுகி, அதனை அவிழ்த்தான். அதன் வாலை முறுக்கி விரட்டப் பார்த்தான். "படீர்" என்று அவனுடைய கைகளில் உதைத்தது குதிரை! ஒரே பாய்ச்சலாகக் கதறிக்கொண்டே ஓடிவிட்டது!

குதிரையின் உதையினால் ஏற்பட்ட காயத்தைத் துடைத்த வண்ணம் வாயில் வந்தபடி திட்டிக்கொண்டு திரும்பினான். திரும்பியவன் நேரே கிழவியின் குடிசைக்குள் நுழைந்தான்! குடிசையில் இருவர் உட்கார்ந்திருப் பதைப் பார்த்துவிட்டு,

"ஏ! கிழட்டுப் பிணமே! வீட்டுக்குள்ளே யாரை யெல்லாம் கூட்டி வைத்துக் கூத்தாடுகிறாய்?..." என்று அவன் விண்ணதிரக் கத்தியதி லிருந்து அவன்தான் கிழவியின் மகனான **சல்லியன்** என்பது தெரிந்தது.

அவ்வளவுதான்! கிழவியின் உடல் பதறிற்று! நாக் குழறியது! கை கால்கள் நடுங்கின! திகைத்துப் போய் நின்றுவிட்டாள்!

வாயில் வைத்த சோற்றுக் கவளத்தை விழுங்கக்கூட இல்லாமல் இமைகொட்டாமல் ஆச்சரியத்துடன் நோக்கினர் மதுரைவாசிகள்!

கொஞ்ச நேரங் கழித்துப் புலவர் தைரியமாகச் சல்லியனை நோக்கி, "ஐயா! தாங்கள் ஏன் இவ்வளவு கோபப்படுகிறீர்கள்? ஏதோ களைப்பி னால் இங்கே தங்கிவிட்டோம்! இதோ போய்விடப் போகிறோம்! கோபம் வேண்டாமய்யா!..." என்று சமாதானப்படுத்தினர்.

"எய்! உன்கிட்டே யார் பேசினது? பேசாமல் வெளியே போ! நீ ஒன்றும் புத்தி சொல்லத் தேவையில்லை..." என்று "மடமட"வென முரட்டுக் குரலில் அதட்டினான் சல்லியன்.

இதைக் கேட்டதும் நம்பியின் கண்கள் சிவந்தன! கைகள் துடித்தன! மறைத்து வைத்திருக்கும் வாளை உருவி அந்த முரடனைத் துண்டித்து விடுவோமா என்று மனங் குமுறினான்! அதுவும் தன் மதிப்புக்குரிய புலவர் பெருமானை வாயில் வந்தபடி "போ! வா!" என்று சல்லியன் பேசியது அவன் மனதைத் துன்பப்படுத்தியது! உணர்ச்சி மிகுந்தமையால் கோபம் பொங்குங் குரலில் அரச கெம்பீரத்துடன் பேசத் தொடங்கினான்:—"அடே பயலே! அவரை யாரென்று எண்ணினாய்?...மரியாதை யில்லாமல் பேசினால் மரியாதை இழந்துவிடுவாய்!...எச்சரிக்கை!..."

இவ்வாறு அதட்டுவதற்குள் புலவர் இடைமறித்து, "நம்பீ! வேண்டாம்! வேண்டாம்! பதறாதே! ஒன்றுங் குடி முழுகிப் போகவில்லை!... அவனுடைய பேச்சினால் என் மதிப்பு ஒன்றுங் குறைந்துவிடாது!......" என்று ஆறுதல் கூறினார். பின் நம்பியின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு குடிசையைவிட்டு வெளியேறினார்.

இருவரும் மரத்தினருகே வந்தனர்! குதிரை யொன்றைக் காணவில்லை! திடுக்கிட்டனர்! சுற்று முற்றும் பார்த்தனர்! கண்ணுக்கெட்டிய தூரம் வரை குதிரை காணப்படவில்லை!

"ஐயா! இதுவும் இந்த முரடனின் வேலைதான்! அவனைச் சும்மா விட்டுவிடக் கூடாது! இதோ அவனிடம் போய்க் குதிரை இருக்குமிடம் கேட்டு வருகிறேன்..." என்று நம்பி துடிதுடித்துக் கொண்டு நின்றான் முறுவலார் அவனைத் தடுத்து,

"வேண்டாம்! அவன் முரடன்! முரட்டுக்குணத்தில் எதையும் துணிவாகச் செய்துவிடுவான்! காரியம் கெட்டுப்போய் விடும்!..."

"இல்லை ஐயா! முரடனை எப்படியும் அடக்கித்தான் ஆக வேண்டும்! இல்லையானால் இவனால் உலகிலேயே பல தீமைகள் நிரம்பிவிடும்...!" என்று கூறிக்கொண்டே, இடுப்பிலிருந்த உடைவாளை உருவிய வண்ணம் கிழவியின் குடிசைக்குள் நுழைந்து,

"அடே! என் குதிரை எங்கே! சொல்கிறாயா? அல்லது விண்ணுலகம் போக மூட்டை கட்டுகிறாயா?......" என்று சிங்கம் போலச் சீறினான் நம்பி.

உடனே சல்லியன், "குதிரையா? கிதிரையா? எனக்கு ஒன்றுமே தெரியாதே!..." என்று விழுங்கிப் பேசினான்.

"சரி! நீ உண்மை சொல்லும்வரை உனக்கு இந்த உலகில் இடமில்லை" யென்று நம்பி வாளை யோங்கி வீசப்போகும் சமயத்தில், கிழவி

ஓடிவந்து அவன் கையைப் பிடித்திராவிடில் சல்லியன் தலை தரையில் உருண்டிருக்கும் !

சல்லியன் மனம் இப்பொழுதுதான் பதறிற்று ! உடல் நடுங்கினன் ! நம்பியின் கால்களில் வீழ்ந்தான் ! தன்னை மன்னித்து ஏற்றுக்கொள்ள வேண்டினன் ! குதிரையைத் தான் அவிழ்த்துத் துரத்தியதைக் கூறித் தனக்கு அபயம் அளிக்குமாறு கெஞ்சினன் !

இளவரசனின் கோபம் தணிந்தது ! " அப்பா ! இதை அப்போதே சொல்லியிருக்கக் கூடாதா ?...சரி ! எழுந்திரு ! குதிரை சென்ற திசையைக் காட்டு !..." என்று சல்லியனிடம் கூறி, அவனையும் கூட்டிக்கொண்டு புலவரிருந்த இடத்திற்கு வந்தான் ! கிழவியும் பின் தொடர்ந்தாள்.

" ஐயா ! இப்போது சல்லியன் சாதுவாய் விட்டான் " என்ருன் நம்பி சிரித்துக்கொண்டே !

" எல்லாம் ஐயாவுடைய வாளின் மகிமைதான் ! என்று தன் பொக்கு வாயினல் சிரித்தாள் கிழவி !

பின்னர், சல்லியன் புலவரையும் வணங்கி மன்னிப்பு வாங்கிக் கொண்டான் ! குதிரை ஓடிய திசையையும் சுட்டிக் காண்பித்தான் !

பின்னர் நம்பி முறுவலாரைப் பார்த்து,

" ஐயா ! நீங்கள் இந்தக் குதிரையுடன் இங்கேயே இருங்கள் ! நான் எப்படியாவது உங்கள் குதிரையைப் பிடித்து வருகிறேன் !" என்று கூறினன் !

" வேண்டாம் நம்பீ ! உன்னல் எவ்வளவு தூரந்தான் நடக்க முடியும் ? நீ இங்கேயே இரு ! நான் போய்ப் பார்த்து வருகிறேன் !" என்ருர் புலவர் !

மீண்டும் இளவரசன் தானே போவதாக வற்புறுத்தினமையால் புலவர் அவனை மற்ருெரு குதிரைமீது போகுமாறு கேட்டுக்கொண்டார். அதற்கு நம்பியும் சம்மதித்தான்.

புலவர், கிழவியினுடைய குடிசையிலேயே தங்குவதாகக் கூறினர். இளவரசன் தான் புறப்படத் தயாரானன் ! இப்பொழுது அவன் ஒரு வேடன்போல் மாறுகோலம் பூண்டுகொண்டான். முதுகில் அம்பறாத் தூணியும், இடது தோளில் வில்லும், இடுப்பில் உடைவாளும், தலையில் தலைப்பாகையும் அணிந்துகொண்டு குதிரையிலேறிச் சல்லியன் சுட்டிய திசை வழியே சண்டமாருத வேகத்தில் கிளம்பினன்.

(தொடரும்)

ஒளிக் கற்கள்

காழி. சிவ. கண்ணுசாமி பிள்ளை, B.A.

இயற்கையின் அழகு இணையற்ற அழகாகும். இயற்கையின் அழகுகளில் ஈடுபட்டு மக்கள் எய்தும் ஐம்புலவின்பங்களும் பேரின்பமாகும். பல நிறப் பூக்கள், பலவகை இன்னோசைகள், வகைவகையான மணம் முதலிய எல்லா இன்பப் பொருள் களுக்கும் இயற்கை வற்றாத ஊற்றாக இருக்கின்றது. இன்ப மளிக்கும் இவ்வாற்றலை இயற்கை முழுவதுங் காட்டுவதில்லை; அவ்வப்போது ஒவ்வொன்றின் கோடியைமட்டுமே காட்டி மறைத்து விடுகின்றது. மின்னல் மின்னி மறைவதைப்போல் அழகுப் பொருள்களைத் தோற்றுவித்து, நீடிக்கச் செய்யாமல் மறைத்துவிடும் செயலே இயற்கையின் சிறப்பை மிகுத்துக் காட்டுவதாகும். கண்ணைப் பறித்தெழும் பகலவன் ஒளி மழுங்கி மறைகிறான்; கனைத்துக் குமுறியெழுங் கடலலைகள் திரைத்து அடித்து ஓய்கின்றன; பளிச்சென்று நிறங்காட்டி மிளிரும் பூக்கள் வாடி வதங்கி வீழ்கின்றன. இளவேனிலும் முதுவேனிலும், கோடையும், கூதிரும் மாறிமாறித் தோன்றி மறைகின்றன. மின்னனைய தோற்றமும் இடைவிடாத மாற்ற முமே இயற்கையின் அழகுத் திறத்திற்குத் திறவுகோல்கள் போலும்!

இவ்வாறு மாறிமாறி இன்பமளிக்கும் இயற்கைப் பொருள் களுள்ளும், மாறாமல் நிலைத்திருந்து இன்பமளிக்கும் பொருள் களும் சில உள. இடியும், புயலும், பருவமாற்றமும் அவற்றை ஒன்றும் செய்வதில்லை. காலத்தின் முழுஆற்றலை அவை எதிர்த்து நிற்கின்றன என்றே கூறலாம். அவற்றுள் ஒளிக் கற் களும் அடங்கும்.

ஒளிக்கற்கள் என்றது மாணிக்கம், வைரம், இந்திரநீலம் முதலிய ஒளிவிடும் கற்களையேயாம். நம் நாட்டார் பொதுப்பட இவற்றை 'நவமணிகள்' என்பர். கடல்படு முத்தும், பவளமும் இவ்வகையில் அடங்குவனவே. ஆயிரத்துக்கு மேற்பட்ட ஒளிக்கற்கள் உள என மேனாட்டாராய்ச்சியாளர்கள் ஆராய்ந்து வகைப்படுத்திக் கூறியுள்ளார்கள்.

இயற்கைதரும் இந்த ஒளிக்கற்கள் இயற்கையின் ஆற்றலை யும் எதிர்த்து நின்று தம் ஆற்றலை வெளிப்படுத்திச் சிறக்கின் றன. மூங்கில் இலைமேலே தூங்கும் பனிநீரைப் போலத் தோற்றும் முத்து, பகலவன் தோற்றங் கண்டு மறைந்தழிவதில்லை. பசும்புல் நிறம் வாய்ந்து காணப்பெறும் பச்சைக்கல் அப் புல் லைப் போன்று காய்ந்து கரிவதில்லை. மக்கள் குருதிபோன்று காணப்பெறும் குருதிக் கல் (மாணிக்கம்), மக்கள் மாய்ந்து மறைந்தாலும் தம் நிறத்திற் குறைவதில்லை. தலைமுறை தலைமுறை யாகக் கைமாறிக்கொண்டே வந்தாலும் வைரம் தன் பளபளப் பிற் குறைவதில்லை.

பழகப் பழகப் பாலும் புளிக்கும் ; பருகப் பருகத் தேனும் தெவிட்டும் ; ஆனால் பார்க்கப் பார்க்க ஒளிக்கற்கள் சலிப்பளிப்ப தில்லை. பண்டேபோல் என்றும் புதுநிறங் காட்டி அவை ஒளி விருந்தளிக்கின்றன. விளைவறியாக் காலத்தே ஒளிக்கற்களைக் கண்டு வியந்த சிறுவனொருவன் தான் வயதேறி நரைத்துத் திரைத் துக் கிழத்தன்மை யடைந்த காலத்தும், அக் கற்களைக் கண்டால் முன்போலவே பார்த்து மகிழ்கின்றான். நிறத்தில் மாறாதிருந் தாலும் தம் மேற்படும் ஒளிக்கதிர்களின் ஆற்றலுக்கேற்ப ஒளிக் கற்கள் புதுப்புது நீர்மை காட்டிப் பளிச்சிடுகின்றன. மாணிக் கம் சிவப்புதான், மரகதம் பச்சைதான், வைரம் வெள்ளைதான், ஆனாலும், அவற்றின்மேல் காலை வெயிலும், மாலை வெயிலும், மின்சார ஒளியும் படுங்கால் அவை வேறு எத்தனை வகையான ஒளிநிறங்களைக் காட்டி இன்பமளிக்கின்றன ! "அழகுடைத் யொரு பொருள் என்றும் இன்பமளிக்கும்" என்று ஆங்கிலப் பெரும்புலவர் கீட்ஸ் கூறிய உண்மைக்கு, ஒளிக்கற்களை விட வேறு சிறந்த எடுத்துக்காட்டுமுண்டோ !

ஒளிக்கற்களானா லென்ன ? அவையும் வெறுங் கற்கள் தானே ? கிடைக்கும் அருமையினாலும் விலையின் மிகுதியினாலும் அவை சிறப்புடைப் பொருள்களாகக் கருதப்படுகின்றனவே யன்றி, அவற்றால் மக்கள் பெறும் உண்மைப் பயன் யாது ? இயற்கையில் அழகு வாய்ந்து தோன்றும் ஒரு பொருளுக்கு, இவ்வொளிக்கற்கள் எவ்வகையிற் புது அழகு அளிக்கப் போகின்றன ? அழகுக்கு யாரே அழகு செய்வார் ? நிலைத்த

உண்மைப்பயன் யாதொன்றும் அளிக்கவியலாத "ஆகுல நீர்மைய"வான ஒளிக்கற்களைப் போற்றிப் புகழ்தல் பைத்தியமே என்று இகழ்ந்து கூறுவாருமுளர். இது பிழைபட்டதொரு கூற்ருகும். சொல்வன்மையினும், உண்மை யறிவினும் சிறந்து விளங்கிய ஹேன்ரி வார்டு பீச்சர் என்பவர் எப்பொழுதும் தம் சட்டைப் பையில் ஓர் ஒளிக்கல்லை வைத்திருந்தார். நினைத்த போதெல்லாம் அதனை அவர் எடுத்துப் பார்த்துப் பார்த்து அதன் அழகை வியந்து அகமகிழ்ந்தார். சிறந்த அவ்வியற்கைப்பொருள் அவருக்குப் புரையற்றதொரு மகிழ்ச்சியை அளித்தது. அவர் அதனை அணியாகச் செய்து அணிந்துகொள்ளவில்லை என்பது இங்குக் குறிப்பிடற்பாற்று. அரசர்களும், செல்வர்களும் அளவற்ற விலை கொடுத்து ஒளிக்கற்களை வாங்கிச் சேர்ப்பது அறிவின்மை யாகுமோ? உள்ளத்தனையது உயர்வாதலின், உயர்ந்த அழகுப் பொருள்கள் உயர்ந்த எண்ணங்களையே அகத்தில் எழுப்பும். ஒளிக்கற்களின் உயர்வை அறிந்து மதித்துப் போற்றும் ஆற்றல் வாய்ந்திருப்பது ஒருவனை அவனது தாழ்நிலையிலிருந்து மேனிலைக்கு உயர்த்துவதாகும். இவ்வாற்றல் நிரம்பிய குடிகள் நிறைந்த ஒரு நாடு பேரரசாகத் திகழ்தற்குரிய பெற்றிமை வாய்ந்ததொன்ருக உயர்ந்து சிறப்பெய்தும்.

ஒளிக்கற்களுள்ள இடத்தில், ஆண்மையும் வீரமும் சிறந்து விளங்கும். ஒளிக்கற்களாகிய அணிகளை அணிந்த ஒருவன் தன் புருவங்களை நெரித்தானுனல் அண்டையிலுள்ளோர் நடுக்கமெய்துவர். ஏன்? ஆக்கவும் அழிக்கவும் வல்ல ஆற்றல்வாய்ந்த தலைவன் அவன் என்பதை அக் கற்கள் குறிக்குமாகலின். ஒளிக்கற்கள் காரணமாக எத்தனையோ பேர் கடுந்துன்ப மெய்தியுள்ளனர்; உயிரையும் இழந்திருக்கின்றனர்; எத்தனையோ பெரும் போர்கள் நிகழ்ந்திருக்கின்றன.

இதுகாறுங் கூறியவாற்ருல், நிலைத்து நின்று ஒளித்திறங் காட்டி மக்களுக்கு இன்பத்தை யளித்து, ஆண்மையையும் வீரத்தையும் எழுப்பி உயர்வையளிக்கும் ஒளிக் கற்கள், மக்களுக்கும் நாட்டிற்கும் ஒருங்கே ஒளியை (புகழை) அளிப்பனவாம் என்பது இனிது விளங்கும்.

சங்ககாலத்துச் செந்தமிழ்ச் செல்வி

வித்துவான் ஒளவை சு. துரைசாமிப் பிள்ளை,
கீழ்க்கலை யாராய்ச்சிக் கழகம், திருப்பதி

V

தமித்து நின்று ஒருவரை யொருவர் கண்டு உளம் கலந்து உணர்வொன்ற எய்திய காதல் பின்பு எவ்வகையில் வளர்கின்றது; இவர்களால் எவ்வண்ணம் வளர்க்கப் பெறுகின்றது என்பனவற்றை இனிக் காணலாம். செந்தமிழ்ச் செல்வியின் உள்ளத்தில் முளைத்திருக்கும் காதலை, அவள், பெருநாணும் பேரச்சமும் உடையளாதலின், பிறர்க்குச் சிறிதும் புலனாகாது மறைத்தொழுகுவாள், அவளோடு உடனிருந்து உடனுறைந்து உடன் பயின்று உடனெழுகும் உயிர்த்தோழிக்கும் வாய்விட்டு உரையாள். செறிவும் நிறைவும் செம்மையும் செப்பும் அறிவும் பிறநலங்களும் மிகவுடைய இத்தமிழ் மகட்கு உயிர்த்தோழியாக இலகுபவள் அறிவிலும் ஒழுக்கத்திலும் சொல்நலத்திலும் எத்துணையும் குறைவில்லாதவள். அறிவு, அன்பு, அறம் என்ற மூன்றும் கலந்து பெற்ற பெண் வடிவமொன்று உளதாயின் அதனைத் தமிழ் மகளின் உயிர்த்தோழி என்று கூறலாம். அறிவே அவளது உள்ளம்; அன்பே அவளது சொல்; அறமே அவளது செயல். இத்தோழியின் துணைமை இருந்தாலன்றி, தமிழ் மக்கள் இருவர் பாலும் பிறந்த காதல் சிறக்குமாறு இல்லை யென்பதைத் தமிழ் மகள் நன்கு உணர்ந்து சில குறிப்புக்களால் அவள் தன் காதலனுக்கு உணர்த்தி விடுகின்ருள். அவள்தான் தோழியரிடையே இருக்குங்கால், காதலன் வரின் அவன் உணருமாறு, தன் உயிர்த்தோழியுடன் அடிக்கடி சொல்லாடியும் கட்கடையால் குறிப்பாய் நோக்கியும் உணர்த்துவள். அவன் அதனைப் பிழையற உணர்ந்து கொள்வன். இதுவேயன்றி அவனும் தமிழ் மகளைத் தனித்துக் காணுமிடத்து, "இனிவருங்கால் நீரின் தோழியுடன் வருக" (ஐங். 175) எனச் சொல்லால் சொல்லுவன். தோழியின் செய்கைகளைக் கண்டும் அவன் அவளை அறிந்து கோடலும் உண்டு.

இக்காலத்தே அவள் பெண்மை நலம் சிறந்து காதல் மாட்சியெய்தும் முதுக்குறைவு உடையளாயினும், இச்செறிக்

கப்பெறும் அத்துணை யருமைப் பாட்டினை எய்திலளாதலின், அவள் தோழியுடன் புறத்துச் சென்று பயிலும் இடமே தமிழ் மகன் தோழியின் மதியினை உடம்படுவிக்கும் முயற்சிக்கு ஏற்ற இடமாகிறது. அதற்குரிய செவ்வியைப் பெறுவதற்கு அவன் காலம் நோக்கியிருக்கின்றான். தமிழ்மகள் தினைப்புனம் காத் தற்குச் செல்லும் காலத்தை யறிந்து அதனை நன்கு பயன்படுத் திக் கொள்கின்றான்.

தமிழ்மகள் புனங்காத்து ஒழுகுமிடத்து, அவளுடன் உயிர்த் தோழியும் இருக்கின்றாள். இருவரும் ஒருங்கிருக்கும் செவ்வி யறிந்து, அவன் வேட்டம் செல்வான்போற் சென்று, "இங்கு யான் எய்த களிறு வரக்கண்டீரோ? மான் வரக்கண்டீ ரோ? பன்றி வரக்கண்டீரோ?" என்று வினவி நிற்பன். அல்லது, புதியோன்போல நின்று, அவர்களுடைய ஊரும் பெயரும் ஊர்க்குச் செல்லும் வழியும் உரைமின் என்று இரந்து நிற்பன். மேதக்க தழையொன்று புனைந்துகொண்டு போந்து, "இதனை ஏற்றுக்கொண்மின்" என வேண்டுவன். இவ்வாறு பலவகை யாலும் தோழிபால் சொல்லாடும் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டு அவள்பால், தான் தமிழ்மகள்பால் கொண்ட காத லுறவினைக் குறிப்பால் தெரிவித்துவிடுவன்.

தமிழ்மகனது சொல்லும் செயலும் அவன் காதற்குறிப்பை நன்கு புலப்படுத்தக்காணும் தோழி, அவன்பால் பரிவு கொண்டு, தமிழ்மகளின் மனக்கருத்தை யறிந்துகொண்டு அவனை இத் தமிழ்மகள் கருத்துக்கு இசைவிக்கும் கடப்பாட்டினைப் பெறு கின்றாள். தமிழ்மகளின் பெருமையும் தோழியின் தோழமை யும் செயலின் அருமையும் பிறவும் ஒன்றற்கொன்று இசைவு றுது பிணங்குகின்றன. இந்நிலையில், அவர்களிடையே நிகழும் சொல்லாட்டுக்களைச் சிறிது காண்பாம். அச் சொல்லிடையே ஒளிரும் நுட்பமும் அறிவொட்பமும் பண்டைத் தமிழ் மக் களின் சீரிய நாகரிகத்தை இனிது விளக்குகின்றன.

செந்தமிழ்ச் செல்வியைத் தனித்துக் கண்டு காதலுற்றுக் கருத்தொன்றிய தமிழ்மகன், அவள்தன் தோழியுடன் இருக் கும் செவ்வி நோக்கியிருக்கின்றான். அவள் தோழியருடன் தினைப்புனம் காத்தற்கு வருகின்றாள். அவனும் அப் புனத்திற்

குப் போதருகின்முன். அவள் தன் தோழியருடன் கூடித் தினைக் குரல் கவரும் கிளிகளை ஒப்புகின்முள். அக்கிளிகளின் கூட்டம், ஒப்புந்தோறும் நீங்கி, ஒப்பி ஓயுந்தோறும் வந்து புனத்தே படி கின்றன. அதனுல், அவள் புனத்தே இருத்தலை அத்தமிழ்ச் செல்வமகன் உணர்ந்து, "செந்தமிழ்ச் செல்வி புனங்காவல் புரி வதை இக் கிள்ளைகள் நமக்குக் காட்டின ; "வெள்ளவரம்பின் ஊழிபோகியும் கிள்ளைவாழிய பலவே" (ஐங். 281) என்று வாழ்த்தி, "நன்றே செய்த உதவி ; நன்று தெரிந்து யாம் எவன் செய்குவம் (ஐங். 288) நெஞ்சே !" என்று தனக்குள்ள நன்றி யறிவைப் புலப்படுத்தி மகிழ்ந்து கொள்கின்முன்.

பின்பு, அவன் அச்செல்வியும் உயிர்த்தோழியும் பிறரும் கூடி நீராடச் செல்லுதல் கண்டு மெல்ல மறைவிருந்து பார்த்து, "தலைப்புணைக் கொளினே தலைப்புணைக் கொள்ளும், கடைப்புணைக் கொளினே கடைப்புணைக் கொள்ளும், புணைகை விட்டுப் புன லோ டொழுகின், ஆண்டும் வருகுவள் போலும்" (குறுந். 222) எனத் தோழியின் பெருமையும் துணைமையும் தெளிந்து கொள் கின்முன். இதுபோலும் நெறிகள் பல உண்டு. தோழியைத் தேர்ந்து கொண்டதும் அவளை யண்மி "களிறு, மான், பன்றி முதலியன வரக்கண்டதுண்டோ" என்று வினவுவன் ; தக்க விடை பெருது நீங்குவன். பிறிதொருகால், தோழியும் செல்வி யும் ஒருங்கிருப்பப் போந்து, ஊரும் பேரும் பிறவும் வினவி, "பெருங்கல் வேலிச் சிறுகுடி யாது எனச் சொல்லவும் சொல்லி ராயின்,..................செங்கேழாடிய செழுங்குரல் சிறுதினைக், கொய்புனங் காவலும் நுமதோ? (நற். 213) என்று வினவி, அவர் கள் முகந்தாராமை கண்டு நீங்குவன். இந்நிலையில், அவன் வரவும், அதுகண்டு செல்வி ஒழுகும் ஒழுக்கமும் நோக்கமும் பார்வையும் தோழியால் குறிக்கொண்டு நோக்கப்படும்.

நம் செல்வியோ அத் தமிழ்த் தோன்றலை முன்பே கண்டு காதல் சிறந்து நிற்கின்முளாதலின், அவன் வருந்தோறும் தோழி யோடு சொல்லாடுந்தோறும், கண்டு உள்ளத்தே உவகைமிகி னும் அதனை மறைத்து ஒன்றும் அறியாள்போன்று ஒழுகுகின் முள். தோழியும் பேறறிவினளாதலின், அச் செல்விக்கும் செல்வ னுக்கும் முன்பே காதலுறவு உண்டாகியிருத்தலை ஒருவாறு

உணர்ந்து கொள்கின்ருள். அதனை நன்கு அறிந்துகோடல் குறித்து மிக நுட்பமாக அவளுடன் பேசி ஆராயத் தொடங்கு கின்ருள்.

புனங்காத் தொழுகும் நாளில், ஒருநாள் தோழியும் செல்வி யும் ஒரு புடையே இருக்கின்றனர். ஏனை மகளிர் புனத்தின் பல மருங்கிலும் இருந்து புள்ளினங்களை ஒப்பிக்கொண்டிருக் கின்றனர். தனிமை நன்கு அமையக் கண்ட நம் அறிவுடைத் தோழி, செல்வியின் முகத்தை நோக்கினள்; பின்பு ஏதோ கூறு வாள் போலச் சொல்லெடுத்தாள். செல்வியும் ஆவலுடன் நோக் கினள். அது கண்ட தோழி, "உண்கண்ணய்! பார்த்தனையா, ஒருவன் புலிவேட்டம் மேற்கொண்டு அதன் அடிச்சுவடுபற்றி வருவான்போல வில்லும் அம்பும் ஏந்தித் தலையில் கண்ணி சூடிப் பன்னுளும் வருகின்ருன். வருபவன், என்னை நோக்கி, சில குறிப்புக்களைக் காட்டுவனே யன்றித் தன் மனத்தே உற்ற வருத்தத்தை வாயால் சொல்லாமலே போய்விடுவன். என் மனத்தே அவன் வடிவே பதிந்துவிட்டது. அவன் நினைவே மிகுந்தது. அதனல் யானும் இரவெல்லாம் கண்ணுறக்கம் இன்றி வருந்தாநிற்பே ஞயினேன். இவ்வாறே சில நாட்கள் கழிந்தன. அவனும் தன் கருத்தை என் முன்னின்று உரைத்தல் ஆற்ருன்; நமக்கோ நம் காதற்குறிப்பை வாய்விட்டுரைப்பதும் பெண்தன்மை யன்று. இதனல், சில நாட்களில் அவன் என்னைக் காணுமலே போய்விடுதலும் உண்டு. என்னுலும் இனிப் பொறுத்தல் முடியாது என்றெரு நிலையுண்டாயிற்று. ஆகவே, யானும் அரிதில் துணிந்து ஒரு நாணின்மை செய்தேன்" என் கின்ருள். இது கேட்டதும், செல்வி முகம் சிவப்ப, உள்ளத் தெழுந்த அருவருப்பால் நுதலொளி மாற, வாயில் புன்னகை தவழ, "நடந்தது என்னை" என்கிருள். அவள் முகவேறு பாட்டைத் தோழி குறிக்கின்ருள்.

அதன்மேல் தோழி, மேலும் கூறலுற்று,

"........நறுநுதால்! ஏனல்
இனக்கிளி யாம்கடிந் தோம்பும் புனத்தயல்
ஊசல் ஊர்ந்தாட, ஒருஞான்று வந்தானை
'ஐய, சிறிது என்னை ஊக்கி' என (யான்) கூறத்

'தையால்! நன்று' என்று அவன் வைக்கக், கைநெகிழ்பு
பொய்யாக வீழ்ந்தேன் அவன் மார்பில்; வாயாச் செத்து
ஒய்யென ஆங்கே எடுத்தனன் கொண்டான்மேல்,

என்று கூறினளோ இல்லையோ, செல்வி மிகச் சினந்து, வாய் துடிப்ப நகைத்து, "சீச்சி" என்று சொல்லி, "பின்பு நடந்தது என்னை? சொல் சொல்" என்கின்றாள். அவட்குத் தோழி, முறுவலித்து,

"மெய் அறியாதேன் போல் கிடந்தேன் மன்"

என்கின்றாள். செல்வி, பொருமை மீதூர, சினத்தீ கிளர, "இனி, இதை என்னிடம் சொல்லாதே; போ; அவ் வன்கண்ணன் யாவன்" என்று சொல்லவும், தோழி, அவனை விடாதே, "இதைக் கேள்" எனப் பற்றி நிறுத்தி,

"..ஆயிடை
மெய்யறிந்து எற்றெழுவேனாயின், மற்று, ஒய்யென
'ஒண்குழாய்! செல்க' எனக்கூறி விடும் பண்பின்
அங்கண் உடையன் அவன்" (கலி. 37)

என்று முடிக்கின்றாள். செல்வியும், "வாழ்ந்தேன்" என வாய் வெருவுகின்றாள்.

இச் செயல்களால், தமிழ்ச் செல்விக்கு அச் செல்வன்பால் முன்னுறவு உண்டென்பதைத் தோழி யறிந்துகொண்டு, அவனை நோக்கி, "நெருநல்வந்த அவன் இன்றும் வருவன்;

"இன்றும், தோலாவாறில்லை, தோழி! நாம் சென்மோ
சாயிறைப் பணைத்தோட் கிழமை தனக்கே
மாசின் றாதலும் அறியான்; ஏசற்று
என்குறைப் புறநிலை முயலும்
அண்க ணாளனை நகுகம் யாமே" (அகம். 32)

என்று மொழிகின்றாள். இவற்றைக் கேட்டு அச் செல்வி படும் பாடும், பார்க்கும் பார்வையும் குறிப்பும் தோழியின் ஐயத்தை அறவே நீக்கிவிடுகின்றன.

இஃதிவ்வாறாக, முன்னை நாள் செவ்விபெறாது வாடிச் சென்ற தமிழ் மகன் மறுநாள் மகளிர்க்குரிய அழகிய தழை

யொன்று புனைந்துகொண்டு தோழிபால் வருகின்றான். அத் தழையின்கண் முல்லை, மருதம், நெய்தல் முதலிய நிலத்துப் பல் வகைப் பூக்கள் விரவியிருக்கின்றன. அதுகண்டு, "நீ கொணர்ந்த இத் தழையின்கண் வேறு நிலத்துப்பூக்கள் இருக்கின்றன; எங்கள் 'குன்றம் குருதிப்பூவின் குலைக்காந்தட்டு' (குறுந். 1); ஆதலின் வேண்டேம்; வேண்டியணியின் வேறு பல ஐயத் துக்கு இடனும்" என மறுத்து விடுகின்றாள். அச் செல்வன் சொல்லாடுந் திறனின்றி ஏங்கி நீங்குகின்றான். செல்வியும் அத னைத் தான் ஏற்று அணிந்து அவனை மகிழ்வித்தற்குக் கூடாமை யால் மனம் மறுகி வருந்தும் வருத்தத்தை மறைத்துக்கொண்டு ஒழுகுகின்றாள். இச் செயலாலும் இருவர்பாலும் முன்னுறவு இருத்தலைத் தோழி தெளிகின்றாள்.

பின்னொரு நாள், அச்செல்வன் இச் செல்வியும் தோழியரும் கூடித் தொடுக்கும் தழைபோலும் தழையுடை யொன்று தொடுத்துக்கொண்டு போந்து, தோழியை இரந்து நின்று "இதனை ஏற்றுக்கொண்மின்" என்கின்றான். இனி, மறுத் தற்கு இயலாமையின் ஏற்றுக்கொண்டு செல்வியை யடைந்து,

"..............................குன்ற நாடன்
உடுக்கும் தழைதந் தனனே; யாம் அஃது
உடுப்பின் யாய் அஞ்சுதுமே; கொடுப்பின்
கேளுடைக் கேடு அஞ்சுதுமே; ஆயிடை
வாடல கொல்லோ தாமே, அவன்மலைப்
போருடை வருடையும் பாயாச்
சூருடை யடுக்கத்த கொயற்கருந் தழையே" (நற். 359)

என்று கூறுகின்றாள். இதற்குள், அவன் தன் வேண்டுகோளை, இத்தோழியும் செல்வியும் கேளாராயின், தன் காதலைப் பலரறி யத் தோற்றுவிக்கும் நெறியை மேற்கொள்வதா? யாது செய் வது? என்று பலபட நினைந்து தோழியின் காதில் விழுமாறு, "மாவென மடலொடு மறுகில் தோன்றித் தெற்றெனத் தூற்ற லும் பழியே, வாழ்தலும் பழியே பிரிவுதலை வரினே" (குறுந். 12) எனக் கூறி இனைகின்றான்.

உடனே தோழி அவன் முன்னே நின்று, இருவர் குறிப் பும் நன்கு தெரிந்தும் அவனை மறுத்து,

இவளே,
கானல் நண்ணிய காமர் சிறுகுடி
நீனிறப் பெருங்கடல் கலங்க உள்புக்கு
மீன்எறி பரதவர் மகளே.
நீயே
நெடுங்கொடி நுடங்கும் நியம மூதூர்க்
கடுந்தேர்ச் செல்வர் காதல் மகனே
நிணச்சுறா அறுத்த உணக்கல் வேண்டி
இனப்புள் ஓப்பும் எமக்குநலன் எவனோ ?
புலவு நாறுதும் ; செலநின் றீமோ
பெருநீர் விளையுள்எம் சிறுநல் வாழ்க்கை
நும்மொடு புரைவதோ அன்றே ;
எம்ம னோரில் செம்மலு முடைத்தே " (நற். 45)

என்று மொழிகின்றாள். இச்சொற்களால் அச்செல்வன் சிறிதும் தளராது மேன்மேலும் வந்து எவ்வாறேனும் தோழியின் துணை பெற்றுச் செல்வியைக் கூடும் கருத்தினனாகின்றான். அவன் நெஞ்சில், செல்வியைக் காணுந்தோறும் வேட்கை மிகுகின்றது (குறுந். 165). மறுமுறையும் தோழியை இரந்து கேட்கவே விழைகின்றான்.

" அருளிலும் அருளா ளாயினும் பெரிதழிந்து
பின்னிலை முனியல்மா நெஞ்சே என்னதூஉம்
அருந்துய ரவலம் தீர்க்கும்,
மருந்துபிறி தில்லை யான் உற்ற நோய்க்கே " (நற். 140)

என்று பன்முறையும் முயன்று முடிவில் தோழி தன் குறையை முடித்துத் தர உடன்படுமாறு செய்துகொள்கின்றான்.

இனி, தோழி செல்வியோடு சொல்லாடி அச் செல்வன் குறை முடித்தற்கு முயலும் முயற்சி மிக்க அருமை வாய்ந்த தாகும். செல்வி, அச் செல்வன் தன் காதலன் என்பதை ஒரு போதும் வாய்விட்டுத் தோழிபால் உரைத்ததில்லை. ஆகவே, அவளைத் தன் கருத்திற்கு உடன்படுவித்தலில் தோழி தன் அறிவை மிக்க நயமும் நுட்பமும் அமையக் கையாளும் கடமை யளாகின்றாள்.

செய்திகளும் குறிப்புகளும்

குலசை வள்ளியம்மையார் பள்ளிக்கூடப் பழைய மாணவியர் கழகத் திறப்பு விழா

நிகழும் 18-3-43 வியாழக்கிழமை மாலை 5 மணிக்குத் திருநெல்வேலி மாவட்டத் தண்டல் நாயகர் (Collector) உயர்திரு திவான்பகதூர் V. N. விசுவநாதராவ் எம். ஏ., பி. எல்., அவர்கள் தலைமையில் திறப்பு விழா மிகவும் சிறப்பாக நடைபெற்றது. அவ்வமயம் திருநெல்வேலி நாட்டுப் போர்முனை, கண்காணிப்பாளர் வித்துவான் திரு. கு. அருணாசலக் கவுண்டரவர்களும், சென்னை நார்த்விக் மகளிர் கல்லூரித் தலைமையாசிரியராயிருந்த திருவாட்டி திருவரங்க நீலாம்பிகை அம்மையாரவர்களும் சொற்பொழி வாற்றினார்கள். அம்மையார் சொற்பொழிவைக் கேட்டபின் தலைவரவர்கள் தம் மனைவியாரை அழைத்துக்கொண்டு வந்திருப்பின் நலமாயிருந்திருக்குமெனச் சொன்னார்களாம். சுகுமாரி என்ற நாடகம் இளமாணவியர்களால் திறமையாக நடிக்கப்பெற்றது. நன்றி கூறியபின் கூட்டம் இனிது முடிந்தது.

சேலம் சூரமங்கலம் பொதுநல் சேவாசங்கம்

இச்சங்கத்தின் ஆதரவின்கீழ் 28-3-'43 மாலை 7-30 மணி முதல் 9 மணி வரை திருப்பராய்த்துறை இராமகிருஷ்ண மடம் உயர்திரு சித்பவானந்த அடிகளாரின் தலைமையில் பொருஞ்சொல் விளக்கனர் திரு. அ. மு. சரவண முதலியாரவர்கள் (தலைமைத் தமிழாசிரியர், நாட்டாண்மை உயர் நிலைப்பள்ளி, அரியலூர்; திருச்சி ஜில்லா.) "இராமகிருஷ்ணரும் இராமலிங்க அடிகளும்" என்ற பொருள்பற்றி மிகவும் சுவைபட விரிவுரை ஆற்றக் கற்றோரும் மற்றோரும் கேட்டு இன்புற்றனர்.

சேலம் மேட்டுத் தெருவு சுகவனநாதர் திருக்கோயில் 30-3-43 செவ்வாய் மாலை 7 மணி முதல் 9-மணி வரை ஷை யார் "வாளால் மகவரிந்து ஊட்டவல்லார்" என்ற பொருள்பற்றியும், 31-3-43 புதன் ஷை இடத்திலேயே, "மாது சொன்ன சூளால் இளமை துறக்க வல்லார்" என்றது பற்றியும், குகை திருச்சி ரோட், சமரச சன்மார்க்க சபையில் 1-4-'43 வியாழன் மாலை 7 மணி முதல் 10 மணி வரையில் "தொண்டு செய்து நாளாறில் கண்ணிடந்து அப்பவல்லார்." என்றதுபற்றியும் செவ்வாய்ப் பேட்டை அப்புச் செட்டித் தெரு, செந்தமிழ்ச் சங்கத்தில் 2-4-43 வெள்ளி மாலை 7 மணி முதல் 9-30 மணி வரையில் "திருஞான சம்பந்தரின் சீரிய கொள்கை" என்ற பொருள்பற்றியும் சொற்பொழிவுகள் ஆற்றிச் சேக்கிழாரின் தெய்வத்தன்மையினையும், பெரிய புராணத்திலுள்ள அறநீதிகளையும் அன்றாட வாழ்க்கைக்கு வேண்டிய வழிவகைகளையும், எடுத்து விரிவாக விளக்கிச் சொன்னார்கள். இப் பெரியாரின் சொற்பொழிவுகளைக் கேட்ட தமிழ் இளைஞர்கள், பெரிய புராணத்தை ஊன்றிக் கற்றுப் பயனடைய வேண்டுமென்னும் ஒரு புத்துணர்ச்சியினைப் பெற்றனர்.

சேலம் ஓரியண்டல் சினிமா உரிமையாளர் திரு. S. S. வேலாயுதம் பிள்ளை அவர்களும், சேலம் குரமங்கலம் டாக்டர் திரு. S. M. நமசிவாய முதலியாரவர்களும் வேண்டும், பொருள், இடவசதி முதலியன செய்து கொடுத்து சொற்பொழிவுகளை நடாத்தி மக்கள் தமிழை இன்புறுமாறு செய்தது மிகவும் பாராட்டத்தக்க தொன்றாகும். இம்முறையில் தமிழ் நாட்டிலுள்ள செல்வர்கள் பல புலவர்களையும் கொண்டு தமிழ் விரிவுரைகள் தங்கள் ஊரில் பல இடங்களில் செய்வித்துப் புகழும் புண்ணியமும் பெறுமாறு எல்லாம்வல்ல அம்பலவாணன் அருட்டிருவடிகளை இறைஞ்சுகின்றேன்.

இங்ஙனம்,

ரா. பெருமாள் பிள்ளை.

தமிழிசை முழக்கம்! தமிழிசை வெற்றி!

திருநெல்வேலி இசைமகாநாடு

பங்குனிமீ 14, 15௳ (1943 மார்ச்சு 27, 28) தேதிகளில் சென்னை மாகாணத் தமிழர் மாநாடு, இசை மகாநாடு வெற்றிகரமாக நடைபெற்றன. அவ்வமயம் திருவாளர்கள் அண்ணாமலைப் பல்கலைக்கழக இசை யாசிரியர் மைலம் திரு. வச்சிரவேலு முதலியார் அவர்கள், திருநெல்வேலி அரசியலார் ஆசிரியப் பயிற்சிப்பள்ளி இசை யாசிரியர் நெல்லை திரு. சங்கரன் பிள்ளை அவர்கள் இவ்விருவராலும் தனித்தமிழிசை யரங்குகள் நடத்தப்பெற்றன. பெரும்பாலும் அண்ணாமலைப் பல்கலைக்கழக இசைப் பேராசிரியர் திருப்பாம்பரம் சுவாமிநாத பிள்ளை அவர்களின் இராக இலக்கணங்களாலும், பொருந்திய ஓசைப்பெருக்காலும் ஓசை அமைக்கப்பெற்ற முத்துத்தாண்டவர் பாடல்களை, மைலம் வச்சிரவேலு முதலியார் அவர்கள் தம் இசைத்திறனால் கேட்போர் மனங் கவரும் வண்ணம் உயர்ந்த இசை நடையில் அவையோரை மகிழ்வித்தார்கள். இரண்டாவதாக, நெல்லை திரு. சங்கரன் பிள்ளை அவர்கள் வேதநாயகம் பிள்ளை பாடல்களையும், இசைத் தமிழ்ச்செல்வர் திரு. இலட்சுமண பிள்ளை அவர்களால் இயற்றப்பெற்ற பாடல்களையும், தேவாரம் திருவாசகம் முதலிய இன்சுவைப்பாக்களையும் இராக பாவத்துடன் இனிமையாகவும் ஓசைநயத்தோடும் பாடினது அவையோரைப் பரவசப்படுத்தியது. இவ்விரு இசைவாணர்களும் தமிழே இசைக்குப் பொருத்தம், இசைக்கேற்ற மொழி தமிழே, என்னும் உயரிய உண்மைகளை மெய்ப்பித்தனர். கடைசியாக இவ்விரு அரங்குகளிலும் தலைமை தாங்கிய இசைத்தமிழ்ச் செல்வர் திரு. இலட்சுமணப் பிள்ளை அவர்கள் இவ்விரு இசைவாணர்களின் இசைத்திறனைப் போற்றி வாழ்த்தி, மறைந்து கிடந்த இவ்வுண்மைத் தமிழிசை இயக்கத்தைத் தோற்றுவித்த வள்ளல் இராஜா சர். அண்ணாமலைச் செட்டியார் அவர்களையும் போற்றித் தமிழிசை இயக்கம் குன்றாது உயர்ந்தோங்குக என வாழ்த்தினர்.



செந்தமிழ்ப் பாவலர்

பாரதிதாசனார்

ஓம்
செந்தமிழ்ச் செல்வி
திங்கள் வெளியீடு

சிலம்பு-௨௦] சுபானு—சித்திரை (1943) [பரல்-௬

குறிப்புக்கள்:

சைவப் பெரியார்

மா. வே. நெல்லையப்ப பிள்ளை, பி.ஏ. அவர்கள்

நமது செந்தமிழ் நாட்டில் எத்தனையோ சான்றோர்கள் அவ்வப்போதும் தோன்றித் தமிழ் அறிவிற்கும் அருளுணர்வுக்கும் மாபெருந் தொண்டுகள் செய்து தம் புகழினை எதனாலும் அழியாவாறு நிறுவிச் சென்றிருக்கின்றார்கள். அதனால், காலந்தோறும் தமிழ்நாடு அடைந்துவரும் நலன்கள் அளப்பில்லாதனவாகும். தமிழ்நாடு அவர்கட்கு யாது கைம்மாறு செய்தல் இயலும் ?

அணுக்கத்தில் திருவாளர், உமாமகேசுரம் பிள்ளை அவர்கள், பெரியார் ஞானியார் அடிகள், ஆசிரியர் உ. வே. சாமிநாதய்யர் அவர்கள் முதலிய பெருமக்கள் நமது நாட்டில் தக்க தொண்டுருவங்களாய் விளங்கி, நினைதொறும் நாட்டினர் உள்ளம் மறுகி அலமருமாறு பிரிந்து மறைந்தனர். அவர்கள் பிரிவினால் நாடு இன்னமும், ஆறுதலுறாது ஏங்கி நிற்கின்றது. இந்நிலையில் நம் நாட்டின் சைவச் செழுந்தொண்டரான பெரியார் சிந்துபூந்துறை மா. வே. நெல்லையப்ப பிள்ளை, B. A., அவர்களும்

14-4-43 புதன்கிழமை நம்மைவிட்டுப் பிரிந்துவிட்டமை மிகப் பெருந்துயர் தந்து உள்ளத்தை மிகுதியும் உருகச் செய்துவிட்டது.

சிந்துபூந்துறை, தமிழ்ச் சைவ வளம் பெரிது கெழுமிப் பொருநையாற்றின் பூங்கரையில் விளங்கிநிற்கும் பழம்பெருந் திருப்பதியாகும். அத் திருப்பதி திருவாளர் பிள்ளை யவர்களால் இந்நூற்றூண்டில் மிகவும் விளக்கமுடையதாயிற்று. பிள்ளையவர்கள் அரசியலில் 'தாசில்தார'ராக அலுவல் பார்த்து வந்த காலங்களிலும், பிற் காலங்களிலும் இடையரூது சைவத் தமிழ்ப் பெரும் பணி செய்து வந்தவர்கள். ஆண்டில் முதுமையுற்றவர்களானுலும், செயலிலும் சுறுசுறுப்பிலும் என்றும் இளைஞராகவே விளங்கியவர்கள்.

நமது சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்கும், அதன் அறநிலையங்களுள் ஒன்ருன தென்னிந்திய சைவ சித்தாந்தச் சங்கத்திற்கும், கழகத்தின் திங்கள் வெளியீடான 'செந்தமிழ்ச் செல்விக்'கும் பலகாலும் தலைவராய் அணுக்கராய் இருந்து தொண்டு புரிந்து வந்திருக்கின்ருர்கள். நெல்லையில் வேறு பல பொதுத் தொண்டுகளிலும் கலந்து பணியாற்றி யுள்ளார்கள்.

சைவ சித்தாந்தக் கொள்கைகளை நன்ருகப் பரவச் செய்யவேண்டும் என்பது இவர்கள் அழுந்திய கொள்கையாகும். அதன்பொருட்டு இவர்கள் பற்பல ஆராய்ச்சிகளும் தொண்டுகளும் நெடுகச் செய்துவந்திருக்கிருர்கள். தேவாரத் திரட்டுக்குத் தெளிவான விளக்கங்களும் எழுதியிருக்கிருர்கள். திருக்குறளில் சைவ சமய உண்மைகள் தக்கவாறு விளங்குதல் குறித்தும், செந்தமிழ்ச் சொற்களில் சைவசித்தாந்தக் கருத்துக்கள் நிறைந்து துளும்புதல் குறித்தும் இவர்கள் பற்பல ஆராய்ச்சிகள் செய்து, சொற்பொழிவுகள் முகமாகவும்

கட்டுரைகள் முகமாகவும் நன்கு விளக்கியிருக்கின்றார்கள். இன்னும் பற்பல தொண்டுகள் செய்யவேண்டுமென்று கருதியிருந்ததாகவும் தெரிகின்றது.

இத்தகைய அரிய சைவப் பெரியார் அணுக்கத்தில் நம்மைவிட்டுப் பிரிந்துவிட்டமை எண்ணுதொறும் உருக்கம் விளைத்து வருகின்றது. இவர்கள் ஆருயிர் எல்லாம் வல்ல முழுமுதற் சிவமாகிய இறைவன் திருவடி நீழலிற் பொருந்தி என்றும் அமைதியுறுக எனத் திருவருளை நினைந்து வழுத்துதலோடு, இவர்கள் குடும்பத்தாருக்கும் கழகத்தின் ஆறுதலுரையை இதன் முகமாகத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

* * * * *

தமிழர் சமயம்

தமிழ் மக்கள் நாவலந்தீவு என்னும் இந்திய நாட்டின் பழங்குடி மக்களாவர். ஆரியமக்கள் இந் நாட்டிற்கு வருவதற்கு முன்னிருந்தே தமிழர் சிறந்த நாகரிக வாழ்க்கையில் வாழ்ந்தவர்கள். 'மொகஞ்சோதாரா' நாகரிகமானது தமிழர் நாகரிகத்தைச் சிறப்பாக விளக்கிக் காட்டுகின்றது. இற்றைக்கு ஏறக்குறைய ஐயாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட 'தொல்காப்பியம்' என்னும் தமிழ் இலக்கண முதல்நூல், தமிழர் கொள்கைகளை நன்றாகத் தெளிவுபடுத்துகின்றது.

சமய வாழ்க்கை யென்பது உயர்ந்த நாகரிகமுடைய மக்களிடமிருந்தே அரும்பி உருவாவதற்குரியது. உலக வாழ்க்கையில் பன்னெடுங்காலப் பழக்கமும், இன்பதுன்பங்களின் அழுந்திய நுகர்வும், பல்வேறு வகையான உயிர்த்தொகுதிகளின் நெருங்கிய கூட்டுறவும், அறநெறி உண்மைகளும் வாய்ந்து பெருவாழ்வு வாழும் நாகரிக நன்மக்களே இம்மை மறுமை வாழ்வாகிய சமய வாழ்க்கையை ஆராய்ந்து கண்டு அறிவுறுத்துதற்குரியர். ஆதலால், தமிழ் மக்கள் பழமையான சமயவாழ்க்கை உடையவர்கள் என்பது ஐயுறவின்றித் தெளியக்கூடியதேயாம்.

இந்திய நாட்டில் இப்போது பலவகையான சமயப் பெயர்கள் கேட்கப்படுகின்றன. சமயங்கள், பெரும்பாலும், வாழ்க்கையில் உயர்வகையான இன்பத்தைத் தேட முயன்றிருக்கின்றன. வாழ்க்கையானது துன்பம் கலந்திருப்பதனாலேதான் இம் முயற்சியைச் சமயங்கள் மேற்கொள்ளலாயின. பெரும்பான்மையான சமயங்கள் இம்மையோடு மறுமையும் உண்டென்று நம்பியே இம் முயற்சியை மேற்கொண்டிருக்கின்றன எனலாம்.

இங்ஙனமான இச் சமயங்கள், குருமாரரையே முடிந்த தலைவராக எண்ணிச் செல்லுவனவும், இறைவனையே தலைவனாக எண்ணிச் செல்லுவனவும் என இருவகைப்பட்டு நிற்கின்றன. தமிழ் நாட்டில் மிகப் பழைய நூல்களாக உள்ளவற்றில் **தெய்வக் கோள்கை** இல்லாத நூல் எதுவும் இல்லை. தெய்வம் என்பது இயல்பாகவே பேரறிவு பேரருள் முதலியன உடையதென்று நூல்கள் விளக்கி யிருக்கின்றன. உலகுக்கு அவனே தலைவன் என்றும் அறிவுறுத்துகின்றன. பிறப்பிறப்பில்லாதவன் என்றும் தேற்றுகின்றன. **குருமாரேன்போர்** இயற்கையே அத்தகைய நிலைகள் உள்ளவர்களாகக் காணப்படவில்லை.

குருமாரைத் தலைவராகவுடைய சமயங்களுள் மிகவும் பழைமையானது **சமண் சமயம்** என்று கூறலாம். இறைவனைத் தலைவனாகவுடைய சமயங்களுள் மிகவும் பழைமையானது **சைவ சமயம்** என்று கூறலாம். இவ்விருவகைச் சமயங்களுள்ளும் பழைமையானது எதுவென்பது இங்கே ஆராய்வதற்குரியது.

சமண் சமயத்திற்கும் சைவ சமயத்திற்கும் பெரும்பான்மையும் நெருக்கம் உண்டு. சைவ சமயத்தில் நந்தியெம் பெருமானைக் குருவாகக்கொள்ளும் மரபு உண்டு. நந்தியெம் பெருமானுக்கு 'ரிஷபதேவர்' என்னும் பெயருங் கேட்கின்றோம். சமண் சமயம் 'ரிஷப தேவரை'யே 'ஆதி தீர்த்தங்கரர்' என்னும் முதற் குருவாகக் கொண்டுள்ளது. மகாவீரர் அச் சமயத்தின் கடைசி தீர்த்தங்கரராவர்.

இனி, சமண்சமயமும் சைவசமயமும், உயிர் உண்மையையும், வினை உண்மையையும், மறுமை உண்மையையும், 'சத்தியம்' 'அகிம்சை' உண்மைகளையும் பொதுவில் ஒப்புக்கொள்ளும் ஒற்றுமையுடையனவா யிருக்கின்றன.

ஆதலால், இவ்விரண்டுக்கும் உள்ள முதன்மையான வேறுபாடெல்லாம், மிகச் சிலவேயாகும். அவற்றுள்ளும் மிக முதன்மையானது, சமண் சமயத்திற்குக் கடவுள் உண்மை இல்லாததும், சைவ சமயத்துக்குக் கடவுள் உண்மை உள்ளதுமேயாம். அடுத்தபடி, வீடுபேற்றை அடைவதற்குச் சமண்சமயம் உலகையும் பெண்ணையும் புறத்தேயும் வெறுத்தொதுக்கும் துறவு நெறியை உரிய நெறியாகக் கடைபிடிப்பதும், சைவசமயம் அங்ஙனம் உலகையும் பெண்ணையும் புறத்தே வெறுமல் அகத்துறவு நெறியை உரியநெறியாக மேற்கொள்வதுமாகும்.

இங்கே காட்டிய இவ்விரண்டு கொள்கை வேறுபாடுகளில் பழைய தமிழ் நூல்களில் ஆதரவுபெற்ற கொள்கைகள் எவை என்பது ஆராய்ந்தனமாயின், இவற்றுட் பழைய சமயம் எது வென்பது இனிது வெளிப்படும். தமிழ் மொழியில் உள்ள மிகப் பழைய நூல் தொல்காப்பியம் என்பது. அதனில் தெய்வக் கொள்கையைப்பற்றி வருகின்ற இடங்கள் அங்கங்கும் இருக்கின்றன. 'அகத்திணையிய'லில் கருப்பொருள்களைப் பற்றிக் கூறுகின்ற இடத்தில், "தெய்வம் உணாவே மாமரம் புட்பறை" என ஒரு நூற்பா கூறப்படுகின்றது. அதன்கண், தமிழருடைய தெய்வ வழிபாட்டு முறை 'தெய்வம்' என்னுஞ் சொல்லினாலேயே எடுத்துக் காட்டப்படுதலை அறிகின்றோம். இனி, முதற்பொருளைக் கூறுகின்ற இடத்தில், ஒவ்வொரு நிலத்துக்கும் உரிய தெய்வக்கொள்கை நுவலப்பட்டிருக்கின்றது. முருகக் கடவுளைப்பற்றிய உண்மைகளும், இறைவியைப்பற்றிய உண்மைகளும் பொருளதிகாரத்தின் 'புறத்திணை யியல்' முதலிய இயல்களில் அங்கங்குங் கூறப்பட்டிருக்கின்றன. 'புறத்திணை இய'லிற் "கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே" என்று வருகின்ற தொடரில், கடவுள் வாழ்த்து என்னுங் கொள்கை வருதலைக் காணலாம். 'மெய்ப்பாட்டிய'லில் "தெய்வம் அஞ்சல் புரையறம் தெளிதல்" என்னும் நூற்பாவில், தெய்வம் அஞ்சியொழுகும் தமிழர்தம் ஒழுகலாறு விளக்கப்பட்டுள்ளது. இவ்வாற்றால், 'தொல்காப்பியம்' என்னும் மிகப் பழைய நூலில், தெய்வக் கொள்கை அங்கங்கும் எடுத்துக் காட்டப்பட்டிருத்தல் அறிந்துகொள்ளப்படும்.

இனிக், 'கற்பியலின்' இறுதியில்,

" காமஞ் சான்ற கடைக்கோட் காலை
ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே"

என்று வருகின்ற நூற்பாவில் உலகையும் பெண்ணையும் புறத்தே வெறுது அகத் துறவோடு இருந்து, தவப்பயிற்சி கொள்ளும் உண்மை நன்கு எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றது. மேலும், தொல்காப்பியத்தில், பொருளதிகாரமென்னும் முதன்மையான அதிகாரத்தில் பொருளின்ப அறவொழுக்கங்கள் செவ்வையாய்த் தெளித்தெடுத்து உரைக்கப்படுதலும் இங்கே நினைவு கூர்தல் வேண்டும்.

இங்ஙனமே திருக்குறள் என்னுங் கடைச்சங்க காலத்து அறநூலினும் "அகர முதல எழுத்தெல்லாம்" என்னும் முதற் குறளிலேயே, 'இறைவன் உலகுக்குத் தலைவன்' என்பதும், கடவுள் வாழ்த்து என்னும் அம் முதலதிகாரத்தின் இறுதியில் 'பிறவிப் பெருங்கடல் நீந்துதலே முடிந்த பேறு' எனக் காட்டி அதன்கண், இறைவன் அங்ஙனம் பிறப்பு முதலியன இல்லாத வன் என்பதும் விளக்கப்பட்டுள்ளது. மேலும், பொருள் அற இன்ப வொழுக்கங்கள் இம் மாபெரு நூலினும் விளக்கப்பட் டுள்ளமை தெளிபொருளேயாம்.

இனிக், கடைச்சங்க காலத்தின் இறுதியில் எழுந்த சிலப்பதிகார மென்னும் அரிய தமிழ்ப் பெருங் காப்பியத்தில்,

" பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும் "

எனப் பிறப்பு இறப்பில்லாத ஒரு முழுமுதற் கடவுளின் நிலை யையே தெய்வப் பெயர் வரிசையின் முதற்கண் எடுத்து ஆசிரியர் இளங்கோவடிகள் நிறுவி விளக்கி யிருக்கின்றார். நூலின் இறுதியினும்,

"தெய்வம் தெளிமின்; தெளிந்தோர்ப் பேணுமின்."

என்று தக்க அறிவுரை நிறுத்திக், கடவுள் உண்மையையும் அதனைத் தெளிந்த குருமாரின் பெருமையையும் வேறு வேருக வைத்து விளக்கி முடித்திருக்கின்றனர். இன்னும், சிலப்பதிகாரக்

காப்பியத்தின் மூவகை நோக்கங்களாக ஆசிரியர் உரைப்ப வற்றுள்,

"உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும்"

என்னும் பெண்களின் மேன்மை ஒரு நோக்கமாகச் சிறப்புற் றிருத்தலும் அறிதல் வேண்டும்.

இங்ஙனமெல்லாம் பழம் பெருந் தமிழ் நூல்களில், தமிழர் களின் முதன்மையான ஒழுக்கங்களாக வைத்து விரித்தோதப் படுகின்றவை, சைவசமய உண்மைகளுக்கே பேராதரவாய் இருத்தல் தெளிவாக விளங்கிநிற்கின்றன. எனவே, தமிழ் மக்களின் பழம் பெருஞ் சமயம் சைவசமயமேயாதல் தெற்றெ னத் தெளியப்படும். தொல்காப்பியம், திருக்குறள், சிலப்பதிகாரம் முதலிய நூல்களும் சைவசமய உண்மைகளுக்கே வலிமை தந்து அரண்கோலி நிற்றல் உணர்ந்துகொள்ளப்படும்.

இனி, இத்தகைய சமய வாழ்க்கையை மேற்கொண்ட தமிழ் மக்களுள், அவ் வாழ்க்கையை நெறியுறப் பின்பற்றுது அதற்கு மாசு விளைப்பவரும் நாளடைவில் உளராதல் இயற் கையேயாம். அதனுல் தமிழ் மக்களுள் ஒரு சிலர்க்குத், தெய் வக் கொள்கையிலும் அகத்துறவு மேற்கொள்ளுதலிலும் ஐயுறவு உண்டாகி அவற்றின் நீங்கி ஒழுகுதலும் இயல்பாயிற்று. அங்ங னம் நீங்கி யொழுகிய தமிழ் மக்களே, சமண் சமயத்தவராவர் என்பது. எனவே, சமண் சமயத்தில் ஏனைப் பெரும்பான்மை யான கொள்கைகள் தமிழர் சமயக் கொள்கைகளேயாதல் யாவரும் ஒப்பமுடிந்த உண்மையேயாம்.

அண்மையிற் சென்னையில் நடைபெற்ற மகாவீரர் திருநாள் விழாவில் தமிழ்ப் பெருமகனுர் சர். R. K. சண்முகஞ் செட்டியாரவர் கள் தலைமை தாங்கிப் பேசியபோது, சமண்சமயம் தமிழர்சமயம் எனத் தமிழர் சமயமாக அதனை இயைத்துப் பேசிய தலைமை யுரையும் இவ்வாற்ருல் ஒற்றுமையுற்று நிற்றல் காணப்படும்.

மற்றுச், சமண்சமய உண்மைகளையும் தன்னுள் அடக்கிக் கொண்டு, அதற்கு மேலும் விரிந்து, தெய்வக் கொள்கையும் அகத்துறவும் மேற்கொள்ளுத லுடையதாய், இவ்விந்தியத் தமிழ்

நாட்டிற் பழம்பெருந் தமிழர் சமயமாய் என்றும் விளங்கி நிற்பது சைவசமயமேயாதல் தெற்றெனத் தெளியப்படும் என்க.

இவ்வுண்மையைத், தென்றமிழ் நாட்டில் தமிழ் மக்களின் நடுவிற் பலகாலம் வாழ்ந்திருந்து, தமிழ் மக்களின் பழக்க வழக்க ஒழுக்கங்களை நேரிருந்து கண்டு பழகியும், தமிழ் நாட்டின் சிறந்த தமிழ் நூல்களாகிய திருக்குறள், புறநானூறு, சிலப்பதிகாரம், நாலடியார் முதலியவற்றை நன்கு பயின்றும் விளங்கியவரான டாக்டர். ஜி. யு. போப் என்னும் மேலைநாட்டு ஆசிரியர், தாம் இயற்றிய திருவாசகத்தின் மொழிபெயர்ப்பு நூலில் *சைவ சமயமே தமிழர் பழம்பெருஞ் சமயம் எனக் கட்டுரைத்து நிறுவி இனிது விளக்கியிருத்தலும் இங்கு நினைவுகூரற்பாலது.

" நீல மேனி வாலிழை பாகத்து
ஒருவன் இருதாள் நிழற்கீழ்
மூவகை யுலகு முகிழ்த்தன முறையே."

—ஐங்குறுநூறு.

---

* "The Caiva Siddhanta System is the most elaborate, influential, and undoubtedly the most intrinsically valuable of all the religions of India. It is peculiarly the South-Indian, and Tamil religion....... Caivaism is the old prehistoric religion of South India, essentially existing from Pre-Aryan times, and holds away over the hearts of the Tamil people."

—Dr. G. U. POPE.

பருப்பொருள் ஆராய்ச்சி

[த. பு. நவநீத கிருட்டினன், அண்ணுமலைநகர்]

பருப்பொருள் எந் நுண்பொருள்களால் ஆக்கப்பட்டுள்ளது? எனும் வினவை மக்கள் பல்லாயிரம் ஆண்டுகளாய்க் கேட்டுக்கொண்டே யுள்ளனர். பருப்பொருளின் ஈற்றுன தன்மையைக் கண்டுபிடித்தற்கு இடையருது ஆற்றப்பட்டு வரும் பணிகள்மூலமாய்க் கிடைத்த அறிவே விஞ்ஞானமாம். எனவே, பருப்பொருளின் மறைபொருளைக் காணும்பொருட்டுக் கையாளப்பட்ட சோதனைமுறைகளினின்றெழுந்த விஞ்ஞான விளைவியல்கள் விஞ்ஞான வெற்றியின் அறிகுறிகளாம்; பருப்பொருளின் மறையைக் காண இயலாதுள்ளது, 'ஆராய்ச்சியே விஞ்ஞானம்' என்பதை விஞ்ஞானிகள் மனத்திலுறுத்த இயற்கையன்னை தரும் எச்சரிக்கையாம்.

பலபல நூற்றுண்டுகளுக்கு முன்னரே, நமது இந்திய நாட்டுப் பேரறிஞரில் ஒருவரான கானடா என்பார், பொருள்கள் எல்லாம் இடையருது இயங்கிக்கொண்டே யுள்ளன வென்றும், அவை, நுண்ணிய துகள்களாலானவை யென்றும் சிந்தனை வாயிலாகவே கண்டு பிடித்தார். கிரேக்க நாட்டுப் பேரறிஞரில் ஒருவரான டெமாக்ரிடஸ் (Democritus) என்பாரும் இதுபோன்ற முடிவையே வெளியிட்டார். அவர், பருப்பொருளின் அறிவீற்றுன பகுதிகளுக்கு அணு (Atom) எனப் பெயரிட்டார். அச்சொல் இனிப் பகுக்க இயலாததொன்று எனப் பொருள்படும். டெமாக்ரிடஸ் விரித்த 'அணுவியல் கொள்கை' (Atomic theory) யைப்பற்றிச் சுருக்கமாய்க் கூறுவோம். ஒவ்வொரு பொருளும் அதன் தன்மையதான நுண்ணணுக்களாலானது. பல பொருள்களினிடையுள்ள வேற்றுமைகள் இவ்வடிப்படையான பலதிற அணுக்களின் தன்மைகளிடையுள்ள வேற்றுமைகளால் ஏற்படுகின்றன. நீரின் அணுக்கள் மழுமழுப்பாகவும் உருளையாயும் இருப்பதால், அவற்றுலான பொருள் நீரியலாயுள்ளது. இரும்பின் அணு கரடுமுரடாயும் கடினமாயும் உள்ளது. அதனுல், அவற்றுலான பொருள் கடினயான திண்பொருளாயுள்ளது. பலவகையான வடிவவேறுபாடுகளை முன்னிட்டுப் பல நிறங்கள் தோன்றுகின்றன. இவ்வாறே பொருள்களின் பல தன்மைகளுக்கும் காரணம் அவற்றின் அணுக்களின் தன்மைகளேயாம்.

அநேக நூற்றுண்டுகளாய் டெமாக்ரிடஸின் அணுவியல் கொள்கையை அவ்வக்காலத்துப் பேரறிஞர் ஒப்புக்கொண்டே வந்தனர்.

பத்தொன்பதாம் நூற்றுண்டு தொடங்கிற்று. ஜான் டால்டன் (John Dalton) என்ற ஆங்கிலப் பள்ளியாசிரியர் புது வணுக் கொள்கை யொன்றை வெளியிட்டார். அக் கொள்கை யின் முக்கியமான கருத்துக்கள் பின்வருமாறும்: "எல்லாப் பொருள்களும் சில மூலப்பொருள்களினின்று இயைபு மாற் றங்களால் (Chemical Changes) உண்டானவை. இம் மூலப் பொருள்களுக்கு 'அடிப்பொருள்கள்' (Elements) என்று பெயர். இவ்வாறுன அடிப்பொருள்கள் அவற்றிற்கான அணுக்களா லானவை. எனவே, அடிப்படைப் பண்பில் வேறுபட்ட அணுக்கள் சிலவேயாம். பல்வேறுபட்ட வகைகளிலும் பல் வேறுன எண்களிலும் இவை இயைபுமுறையில் சேர்வதால் எல்லாப் பொருள்களும் உண்டாகின்றன." எனவே, டெமாக் ரிடஸ் 'அணு'வெனக் குறித்ததும், டால்டன் 'அணு'வெனக் குறித்ததும், பெயரளவில் மட்டுமே ஒன்றன்றி பொருளில் வேறு பட்டவையேயாம்.

டால்டன் அணுவியல் கொள்கையை வெளியிட்டபோது, விஞ்ஞான அறிஞர் பலர் அதையேற்க மறுத்தனர். ஏனெனின், அக்காலத்தே, புலன்களாலறிய வியலாத அறிவெதுவும் விஞ் ஞானமன்று எனும் கருத்துப் பேரறிஞர் மனத்திலூன்றி, பொது மக்களிடையும் பரவி வந்தது. டெமாக்ரிடஸ் போன்ற பண் டைக் காலத்துப் பேரறிஞரின் கொள்கைகள் வெறும் கற்பனை யியலானவை யென்றும், சோதனை வாயிலாய் நிலைநாட்டப்படாத கொள்கைகள் எவையாயினும், அவை, தம் சீரிய சிந்தனைக் குகந்தவை யன்றெனவும் அக்காலத்துப் பேரறிஞர் பலர் எண்ணி னர். எனினும் சிறிது சிறிதாய் டால்டன் கொள்கையின் சிறப்பை அறிஞர் உணரலாயினர். டால்டன் தன் கொள்கைகளைப்பற்றி விரிவாய் எழுதி வைத்தார். அவர் குறிப்பிட்ட முறையைப் பின்பற்றி, பலவகையான இயைபு மாற்றங்களைப் பற்றியும், இயைபுப்பொருள்களின் சேர்க்கைகளைப்பற்றியும், ஒருவாறு அறிய இயன்றது. இயைபு அடிப்பொருள்கள் ஒன்று சேர்ந்து கூட்டுப்பொருள்கள் (Compounds) ஏற்படும்போது, அவை குறித்த சில விதங்களில் மட்டுமே சேருமெனத் தம் கொள்கையி னின்று காட்டினர். அவர் எடுத்துரைத்த நிறைவீத முறைமை நிலைநாட்டப்பட்டது. எனவே, அணுக்களை நேரேயாவது உருப்பெருக்கம் செய்யும் கருவிகளின் துணை கொண்டாவது காண இயலாவிடினும், டால்டன் கொள்கை ஒருவாறு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

ஆண்டுதோறும் டால்டன் கொள்கைக்கு உடன்பட்ட இயைபு விஞ்ஞானிகளின் தொகை அதிகரித்து வந்தது. குறித்த

சில அடிப்பொருள்களே யுள்ளனவெனும் உண்மை ஒப்புக் கொள்ளப்பட்டது. டால்டன் முறையைப் பின்பற்றுவதால், இவற்றிற்கான அணுநிறைகள் (Atomic Weights) கண்டு பிடிக் கப்படலாம் என்று அறியப்பட்டது. அணுக்களைத் தனியே காணமுடியாமையின் அவற்றை நிறுக்கவும் முடியாது. எனவே, அணுநிறை யென்பது ஓரணுவின் நிறையன்று. ஒரே எண்ணிக் கையான அணுக்கள், பல அடிப்பொருள்களினின்று பெறப் படினும், அவை ஒரே அளவான இடத்தில் இருக்கும். எனவே, ஒரேயளவான இடத்தில், பல அடிப்பொருள்களை இருக்கச் செய்து, நிறுப்பதால், ஒப்பியலான அணுநிறைகளைப் பெறலாம். இவையே அணுநிறைகளெனப்படுகின்றன. இவ்வணு நிறைகளை மூலமாய்க் கொண்ட ஒழுங்குமுறை யொன்று இயைபு நூலில் தலையாய இடம் பெற்றுள்ளது. பின்னர்ச் செய்யப்பட்ட சோதனைகளும் டால்டன் கொள்கையின் உண்மையைக் காட் டின. பல்லாண்டுகளுக்குப் பின் செய்யப்பட்ட சோதனைகளி னின்று ஓரளவுள்ள இடத்திலுள்ள அணுக்களின் தொகையைக் கணக்கிடவும் இயன்றது. எனவே, ஓரணுவின் நிறை என்ன வென்றும் அறியப்பட்டது.

அணுவென்பது 'இனிப் பகுக்க இயலாதவொன்று' என் றார் டெமாக்ரிடஸ். டால்டனும் அது சரியேயென்றனர். ஆனல், 1897-ம் ஆண்டில், ஜே. ஜே. தாம்ஸன் (J. J. Thomson) என்ற விஞ்ஞான மூதறிஞர், 'அணு' பொருளின் ஈற்றான பகுதியன்று என, தக்க சான்றுகளுடன் நிலைநாட்டினர். பெரும் விளைவு களுக்கு அடிகோலிய அவர் சோதனைகள், க்ரூக்ஸ் (Crookes) என்பார் செய்த சோதனைகளைப் பின்பற்றியவையாம். க்ரூக்ஸ் செய்த சோதனை பின்வருமாறும் :

"ஒரு நீண்ட கண்ணாடிக்குழாயின் இரு நுனிகளிலும் சிறு உலோகத்தகடுகள் வைக்கப்பட்டன. பின், அக் குழாய் வெற் றிடமாக்கப்பட்டது. அதாவது, அதிலுள்ள காற்று காற்றிறைவி யால் அகற்றப்பட்டது. ஆனல், காற்றை முற்றும் அகற்ற முடியாது. பெரும்பகுதி யகற்றப்படினும், மிகமிகச் சொற்ப மேனும் எஞ்சியிருக்கும். அதன் அமுக்கம் மிகக் குறைவா யிருக்கும். உலோகத்தகடுகள் வெளியே செல்லும் இருகம்பிக ளுடன் இணைக்கப்பட்டவை. அவற்றினுடன் ஒரு மின்னெழுப் புச்சுருள் (Induction Coil) கம்பிகளால் சேர்க்கப்படும். இதனல் மின்னெழுப்புச்சுருள் பயக்கும் வலிமைமிக்க மின்சாரம் அக் குழாயினுள் பாய்கின்றது. இதற்கு 'மின்சார வீச்சு' (Electric Discharge) என்று பெயர். அக் குழாயின் ஒரு முனைக்கு

'நேர்முனை' (Anode) என்றும், மற்ருேர் முனைக்கு எதிர்முனை (Cathode) என்றும் பெயர். மின்சாரம் பாயும்போது, குழாயில் ஊதாஒளி காணப்படும். எதிர்முனையினின்று மிளிரும் இவ்வொளிக்கு 'எதிர்முனைக் கதிர்கள்' (Cathode Rays) என்று பெயர். அவற்றினருகில் ஒரு காந்தச் சட்டத்தை க்ரூக்ஸ் வைத்தபோது, அக் கதிர்கள் சென்ற திக்கு மாறுபட்டது."

கதிர்கள் சென்ற திக்கு காந்த வலிமையால் பாதிக்கப் பட்டதைக் கண்ட க்ரூக்ஸ் மலைத்துப்போய் நின்ருர். ஏனெனின், பொருண்மையுடைப் பொருள்களே காந்தவியலால் இயக்கப் படும் என அவர் அறிவார். பொருண்மை யற்றதெனக் கருதப் பட்ட ஒளி பொருண்மைத் தன்மையைக் காட்டிற்று. தான் கண்ட கதிர்கள், ஒளியா அன்றிப் பொருளா என்ற ஐயமே அவரை வியக்கச் செய்தது. கதிரியலும் பொருளியலும் ஒருங்கே பெற்ற அவ்வொளியை, அவர், 'கதிரியல் பொருள்' (Radiant Matter) என அழைத்தார். ஆனல் அவரது பணி அத்துடன் நின்றது. தான் கண்ட வியத்தகு ஒளி ஏன் தோன்ற வேண்டும் எனும் வினவிற்கு விடைபெற அவர் எண்ணவில்லை. கதிர்முனைக் கதிர்களின் மறை மறையாகவே யிருந்தது.

ஜே. ஜே. தாம்ஸன் எதிர்முனைக் கதிர்களைப் பற்றின ஆராய்ச்சியிலிறங்கினர். பலவகையான சோதனைகள் செய் தார். ஆண்டுகள் பல கழிந்தன. அவர் செய்த சோதனைக் குறிப்பிதழ்கள் குவியலாயின. முன்னர், பாரடே (Faraday) யென்ற விஞ்ஞானப் பேரறிஞர், உப்புக்கரையங்களினூடே மின் சார ஓட்டம் ஏற்படும்போது காணப்படும் விளைவுகளினின்று மின்சாரம் அணுவியலானது என்று காட்டியுள்ளதை நினைவு கூர்ந்தார். கெட்டியுண்டை யொன்றின் நிறை, அது மின்சார மேற்றப்பட்ட பின் அதிகரித்தலைத் தாம்ஸன் கண்டு, அந்நிறை யேற்றம் மின்னூட்ட நிறையினல் ஏற்பட்டது எனத் தெளிந் தார். இவ்வாறு, மின்னியலான விளைவுகள் பலவற்றையும் பற்றி ஆழ்ந்து சிந்தனை செய்து, மின்னியல் பொருட்டன்மை யானது என முடிவு கட்டினர். இம்முடிவை, அவர், 1897-ம் ஆண்டு ஏப்ரல் 30-ம் நாள் அரச விஞ்ஞானச் சங்கத்தினர்க்கு (Fellows of the Royal Society) எடுத்துரைத்தார்.

"எதிர்முனைக்கதிர்கள், எதிர் மின்சாரத்தின் (Negative Electricity) நுண்கூறுகள். எதிர்முனைக் கதிர்க்கற்றை யொன்று நுண்மின்சாரப் பொருள்கள் அல்லது மின்னணுக் (Electron)

களாலானது. மின்சாரம் ஒரு கண்ணாடிக் குழாயிலுள்ள காற்றினூடே பாயும்போது, அக் காற்றின் அணுக்களினின்று, மின்னணுக்கள் பறிக்கப்படுகின்றன. வேறு எவ் வாயு கண்ணாடிக் குழாயிலிருப்பினும் மின்னணுக்கள் கிடைக்கின்றன. வெவ்வேறு பொருள்களினின்று பெறப்படும் மின்னணுக்களும் ஒன்று போன்றவையே. எல்லா அடிப்பொருள் அணுக்களிலும் அவை உள்ளன. எனவே, அணு பொருளின் ஈற்றான பகுதியன்று. அணுவைப் பிளக்கலாம். அணுவைவிட நுண்ணிது மின்னணு." என்பதே அவர் சொல்லியதின் சாரம்.

பின்னர், தாம்ஸன், தான் கண்டுபிடித்த முடிவை, நன்கு நிலைநாட்ட எண்ணி, இன்னும் பல சான்றுகளைப் பெறுதற்கான சோதனைகளைச் செய்வதில் ஈடுபடலாயினர். அச் சோதனைகளிலொன்று, மின்னணுவின் பொருண் நிறையை (Mass) அளக்க அவர் செய்ததாம். காந்த வலிமை எத்துணை என்றறியப்பட்ட காந்தச் சட்டங்களை (Bar Magnets) வைக்கும்போது எதிர்முனைக் கதிர்க்கற்றை யொன்றிலேற்படும் விலகலை, அவர் அளந்தார். இவற்றினின்று, தமது தேர்ந்த அறிவாலும், எண்நூல் பயிற்சியாலும், பெற்ற துணையைக் கொண்டு மின்னணுவின் பொருண்மை நிறையைக் கணக்கிட்டார். அந்நிறை, அடிப்பொருள்கள் யாவற்றினுள்ளும் மிகவும் குறைந்த நிறையுடைய நீரிய (Hydrogen) அணுவைவிட ஆயிரத் தெண்ணூறு மடங்கு குறைவாகவுள்ளது.

விஞ்ஞான அறிஞர் எவரும் தாம்ஸன் எடுத்துரைத்த முடிவுகளை மறுத்துரைக்க முன் வரவில்லை யெனினும், அவர்களிற் சிலர், அம் முடிவுகள் திண்ணமாய் நிலைநாட்டப்பட வில்லை யெனும் கருத்தை வெளியிட்டனர். "எல்லாம் எண்ணியலால் பெற்ற முடிவுகளே. மின்னணுக்கள் உள்ளன வென்பதற்கான சோதனைச் சான்றுகள் இலவே" எனத் தம்முள் பேசிக் கொண்டனர். தாம்ஸனும், சோதனைச் சான்றுகளால் அரணாக்கப்பட்ட முடிவுகளே நன்கு நிலைநாட்டப்பட்டவை யெனும் கருத்துக்கொண்டவர். எனவே சோதனைச் சான்றுகளை நாடினார். தம் மேற்பார்வையின்கீழ் ஆராய்ச்சிகள் செய்துவந்த மாணாக்கர் சிலரை அப் பணியிலீடுபடச் செய்தார். அவர்களில் ஒருவரான வில்சன் (Wilson) என்பார், தன் ஆசிரியர் காட்டிய வழியைப் பின்பற்றி, சோதனைகள் செய்யலாயினர். அவற்றினின்று மின்னணுக்கள் உளவென மெய்ப்பித்தார். அவர் செய்த சோதனை பின்வருமாறும். "நீராவி கலந்துள்ள காற்றை ஓரிடத்தில் அடைத்து வைத்து, அவ்விடத்தைச் சடுதி

யில் விரித்தால், காற்று குளிர்ச்சி யடைகின்றது ; அதனால் நீராவி நீர்த்துளிகளாய் மாறுகின்றது. அவ்வாறு அவை இறுகும் போது, காற்றிலுள்ள சிறு தூசிகளை நடுவாய்க் கொண்டு துளிகள் உருவாகின்றன என்பதை அவர் முன்பே அறிந்திருந்தார். தூசிகள் மிகச் சிறியவையாதலின், துளிகள் அவற்றின் மீது ஏற்படும் முன், அவற்றை (தூசிகளை)ப் படம்பிடிக்க இயலாவிடினும், நீர்த்துளிகள் படிந்தபோது, அவை புலப்படுகின்றன. தூசிகளே யில்லாத காற்றில் துளிகள் உண்டாவதில்லை. எனவே, தூசியற்ற காற்றினுள் மின்சாரம் செலுத்தப்படின், மின்னணுக்கள் நீர்த்துளிகளுக்கு நடுவாகி, அவற்றின் படம் எடுக்கப்படலாம் என வில்சன் எண்ணினார். அவ்வாறே, தானமைத்த ‘மங்குல் அறை’ (Cloud Chamber) என்ற கண்ணடிப் பெட்டியில் தன் சோதனையைச் செய்தார். தான் எண்ணிய வண்ணமே, மின்னணுக்கள் நீர்த்துளிகளுக்கு நடுவாய்க் காட்சி யளித்தன. எனவே, மின்னணுக்கள் உண்மையில் உள்ளனவே யென்பதை அவர் நிலைநாட்டினார்.

(தொடரும்)

முருகன் துதி

முருகனெனப் பெயர்கொண்டு மூவுலகுந்
தொழநின்ற முதல்வா! என்றும்,
தருநிழலே! தண்ணளிசேர் தற்பரனே!
தயாநிதியே! யருளாய் என்றும்,
உருகுமனத் தடியார்கள் உளத்துளொளிர்
விளக்கே! நின் னுடைமை யானேன்
தருகவினை தருளென்றே யான்வேண்டல்
எற்றுக்கோ? அறிவை நீயே.

சேவற்கொடியோன் சேவடி வாழ்க.

—வித்துவான் மு. நமச்சிவாயன்.

திருவிளக்கு வழிபாடு

[புத்தனேரி ரா. சுப்பிரமணியன்]

க. கதிருற்றேன் கடனுற்றி மேற்றிசையில்
கலந்தவுடன் கனிவு காட்டிக்
குதியுற்று ஒருநொடியில் குவலயத்தே
குடிகொண்டு குவிந்து நிற்கும்
கதியற்ற மூதேவி முன்னிருளைக்
கலைத்தில்லம் கவினுற் றேங்க
மதியொற்று வைகின்ற வாடாத
மணிவிளக்கே ! வணக்கம் அம்மா !

உ. விண்ணுெத்து மிகப்பரவும் அன்பொளியில்
கலப்புற்று வீயா வேட்கைக்
கண்ணுெத்து வாழ்கின்ற காதலர்தம்
கவினேங்கும் இல்லம் சேர்ந்து
கிண்ணத்திற் பால்பழமும் கிளிமொழியாள்
வழிபாடும் கீர்த்தி ஏற்கும்
வண்ணத்தே பொன்னுெத்த செஞ்சுடரே !
திருவிளக்கே ! வணக்கம் அம்மா !

ங. நெய்யாகப் பெய்கின்ற அன்பதனை
நீள்திரியாய் நிலவு கின்ற
மெய்யான வழியேற்றின் வீறுகொளும்
சுடர்அறிவாய் விளங்கி நிற்கும் ;
மையான இருள்நீங்கும் ; மனத்தில்ஒளி
வளர்ந்தொளிரும் ; மணிவி ளக்கே !
பொய்யாத ஒளியுன்றன் ஒளியலவோ ?
பொற்புடையாய் ! புனிதத் தாயே !

ச. திருநாளின் போதுன்னைச் சிந்தித்துத்
தேடாத செயலும் உண்டோ ?
திருநாணைப் பூட்டுங்கால் நீயின்றேல்
அதிலேதும் சிறப்பும் உண்டோ ?
திருக்கோயிற் பெருஞ்சோதிச் சிவனுர்முன்
நீயின்றேல் தெளிவும் உண்டோ ?
திருவாக்கும் செயலெல்லாம் திகழ்கின்ற
சிறப்பே !எம் திருவி ளக்கே !

டு. நற்கணவன் வாய்க்கவென நங்கையர்கள்
நாவாரத் துதித்து நிற்பர் ;
கற்புடைய மடவார்தம் காதலரின்
நல்வாழ்வைக் கருதி நிற்பர் ;
கற்பவற்றில் கருத்தூன்றித் தேர்ச்சிபெற
மாணவரோ கைகு விப்பர் ;
பற்பலர்க்கும் அருள்தருவோய் ! பரஞ்சுடரே
திருவிளக்கே ! பணிகின் றேமே !

இளமுருகன் தமிழ் முடங்கல்

முடங்கல் 2

"மா. கு"

அன்பிலில் விளைந்த ஆரமுதே,

நல்லேன்; நலனிலே அறிய வேண்டுவல். உயிர்ச்செல்வன் நின் உய்வுறை மதியழகன் முழுநலமும் பெற்றுப் பொலிகின்றார். நல்லுணர்ச்சிச் சுடர்விரித்து, அருள்விளக்கஞ் செய்தொளிர்ந்து, தண்ணென்று வாழ்வதுதானே குளிர் மதியத்தின் இயல்பு! அன்னரை முடங்கல் விடுக்கத் தூண்ட வேண்டுகிறீர். அது தூண்டா மணி விளக்கு. யானே தூண்டுபவன்!

எளியேங்கள் நலமுணரக் கட்டுமீறிய ஆவல் கொள்கின்றீர். தங்கள் மடல் விரித்ததும் "நலமா?" என்ற நன்மொழிகள் புன்முறுவல் செய்கின்றன. அந்த மூவெழுத்துச் சொல், உட்பொதிந்த ஆர்வத்தை உளங்கிளர் உணர்ச்சியை நெஞ்சத்தின் நல்எழுச்சியை அருமையாகப் படம் பிடிக்கிறது. தங்கள் அன்புள்ளத்தின் செவ்வியுஞ் சொற்கூட்டத்தின் செழுமையும் ஒழுகலாற்றின் விருப்பமும் எவ்வளவு மன உருக்கத்தை உண்டு பண்ணுவனவாயிருக்கின்றன!

செல்வரே, நலந்தான். நலத்திற்கென்ன குறை? வாழ்க்கைப் பண்ணையை வளப்படுத்த நீங்களுண்டு. இளமழை முழக்கஞ் செய்ய மதியழகருண்டு. "விறெடு விளைகெனத் தொழுது வித்துதற்கு" மணிவண்ணனாருமுண்டு. பின் யாண்டிருந்து புகும் நலக்குறை?

உள்ளுறை உயர்வே,

உணர்வு வெள்ளத்தில் மலர்ந்த தங்கள் நறுமலர்களை வாரி எடுத்துக்கொண்டேன்; தாங்கள் தொடுத்தனுப்பிய தெள்ளுறைத் தொடலைகளை எல்லாம் சிரமேல் அணிந்தணிந்து மகிழ்வு கொண்டேன். தங்கள் தேனூறு தீஞ்சொற்களை நாவூற ஊறச் சுவைத்து மகிழ்ந்தேன். வேறென்ன சொல்ல?

தங்கள் முடங்கல்கள் உடைந்த உள்ளத்தை அப்படியே உருவகித்து விட்டன; தங்கள் பேறுமுனை சென்ற காலத்தை

அழைத்து வந்து விட்டது; தங்கள் சொல்லமுது நல்விருந்து படைத்துவிட்டது. விருந்துண்ட களிப்பு உள்ளத்தில் துளும்பு நலம் விளைக்காதோ?

தெளிந்த கருத்துக்கள் உதிர்ந்த மலர்கள் ஒத்து அங்கு மிங்கும் நகைக்கூட்டஞ் செய்தன. அப் புன்னகைப் பூந்தோட் டத்தில் புகுந்துவிட்டேன். இளந் தென்றல் வீசிற்று என்று சொல்லவும் வேண்டுமா?

"வறண்ட பாலை"யிலிருந்து (அலுவலகம்) மீண்டு வரு வேன் மாலை நேரம். தங்கள் கடிதம் குளிர்ந்த நீருடன் காத் துக் கொண்டிருக்கும். மடமடவென்று முழுவதும் பருகிவிடு வேன். ஆ! தண்மை! நட்பு எதுதான் செய்யாது?

"தேனொடு பால் கலந்தற்றே" என்ற பொய்யில் புலவன் பொருளுரைக்கு இலக்கியமாகிய தங்கள் திருமுகங்களைக் கண் டேன். அமிழாத நலம் பொதுளும் பெருங் கருத்துச் செல்வங் கள் அம் முடங்கலூடு சுடரோடிக் கிடக்கக் கண்டேன். பிரிவாற் ருமைப் பெருங்கடலிற் சிக்கிட்ட உமது உள்ளங்கண்டேன். அக்காலை அது சொரிந்திட்ட அமுததாரை உண்டேன். மகிழ்ச் சியா இன்பமா துன்பமா எல்லா உணர்ச்சியுந் துய்த்தேன்.

உள்ளக் கமலத்தின் வெண்தோட்டில் அந் நறுமலர் பிலிற் றுங் கொழுந்தேன் துளிகளைப் பெய்து தாங்கள் தீட்டிய திரு முடங்கல் விழுமிய கருத்தொளிருஞ் செழுந்தமிழ்க் கருவூலமோ? தெள்ளொளி கான் றெளிவீசுந் திருமலரோ? நுண்பொருட் பெற்றிகள்பல அழகுற அரும்பித், தண்ணென மலர்ந்து, நிறைந்த தமிழ் மணங் காலும் புதுமலர்ப் பூஞ்சோலைகொலோ? இல்லை, கலை துளும்பும் பொலன்குடமோ?

தமிழ் ததும்புந் திருவுள்ளப் பெற்றியாய்,

மகிழ்பூத்த அம்முடங்கல் அருள்பூத்த "சங்க இலக்கியம்" என்னுந் தெள்ளொளித் தீந்தமிழ்நூலை உடன்கூட்டி வந்தது. கட்டமுதொத்த பத்துப்பாட்டும் எட்டுத்தொகையுஞ் சேர்ந்த அவ்விழுமிய செழுநூலில் தொட்ட தொட்ட இடமெல்லாஞ் செய்யதமிழ் நகை செய்கிறது; கலைஞாயிறு கதிர் வீசுகிறது; புலமை உள்ளம் கிழலாடுகிறது; செந்நாவீறு செழுநடம்

புரிகின்றது. நூல் முழுவதும் உணர்ச்சி வெள்ளம் ஊடோடிப் பாய்கிறது.

அச் சங்க இலக்கியத்தில் வளமை செறிந்த தமிழகம் காட்சியளிக்கிறது; தோலா நாவின் மேலோர் பேரவை ஒளி வீசுகிறது; "குடிப் பிறப்புடுத்துப் பனுவல் சூடி விழுப்பே ரொழுக்கம் பூண்டு" விளங்கிய பழந்தமிழர் இதயஒலி சிறுபறை முழங்குகிறது; அவர்கள் வைகிய நடுவுநிலை நெடுநகர் இடையிடையே தோற்றஞ் செய்கிறது.

அவ்விலக்கியத்தின் ஒரு பாங்கர், வான்றோய் நல்லிசைச் சான்றோரான பழந்தமிழ்ப் புலவர்தம் பெருமிதம் நிழலாடும். ஒருபாங்கர், "பூத்தலை அறாஅப் புனைகொடி முல்லைக்குக் கறங்கு மணி நெடுந்தேர் கொள்கெனக் கொடுத்த" பெரு வள்ளல்களின் பண்புநலம் பாவிசைக்கும். மற்றொரு பாங்கர், "ஒளிறு வாள் அருஞ்சம முருக்கிக் களிறெறிந்து பெயர்தலே" கடனாகக் கொண்ட வீர இளங்காளைகளின் வாழ்க்கை முரசம் வீறு செய்யும். இன்னொரு பாங்கர், "மேனாள் உற்ற செரு"வில் தன் முன்னோனையும், "நெருநல் உற்ற செரு"வில் தன் கொழுநனையும் இழந்த ஒரு தமிழன்னை அந்நாட் போர்க்குத் தன் ஒரு மகனைச் செருமுக நோக்கிச் செல்கென விடுக்குந் தமிழ்வீரம் நடமாடும்.

சங்க இலக்கியம் உண்ண உண்ணத் தெவிட்டாத தெள்ளமுதம்; எடுக்க எடுக்கக் குறையாத கலைநிட்டம்; தொட்டனைத்து ஊறு மணற்கேணி; கற்றனைத்து ஊறும் அறிவூற்று; அது எய்ப்பில் வைப்பாகத் தமிழர் வைத்துப் போற்றுஞ் செழுஞ்செல்வம்; தமிழர்க்கு ஓர் உரையாணி; நல்லறிவுப் பூங்கா.

* "தமிழர்க்குச் சங்கத் தமிழினும் விழுநிதி வேறில்லை. அதன் தமிழெழில் வேறெதனாலும் பெறப்படாது. ஒவ்வொரு மொழியும் பேரொளிச் சுரங்கம். அதனை ஆராய்ந்து மணிகண்டெடுக்குந் தமிழறிவு தவவறிவு. அவ்வருந் தவத்திற் றமிழர் பலருந் திரள்திரளாய்த் திரண்டு முயன்றால், வேண்டிய வேண்டியாங் கெய்தலாம்."

* "சங்கநூற் கட்டுரைகள்" பதிப்புரை.

பிறர்நலம் பேணும் பிறவிக் குணக்குன்றே,

வறண்ட வாழ்க்கையின் இருண்ட பாதையில் தன்னந் தனியனாய், எளியனாய், மெல்ல நடந்து, வாழ்க்கைப் பள்ளங் களையும் பிணியுழந்த வழிகளையுங் கடந்து செல்லுங்காலையில் வழித்துன்பம் மாற்றுவோர் பலராவர் ; தலையாயவர் நீர்.

யாண்டு நோக்கினுஞ் செங்கதிர்ச் செல்வனின் வெங்கதி ரால் காய்ந்து அள்ளுந் தணல் எழுப்பும் மணல் பரவிய பாலை யில் ஊற்றுநீர் நீர்.

கள்ளங் கபடின்றித் தூய உள்ளம் உடையீர்,

நட்புக் கனியமுதே, நங் குழந்தைப் பருவத்தில் எவ்வளவு இன்பமாக நாம் இருந்தோம். வெடிபடச் சிரிப்போமே, குறு குறு நடப்போமே, மதலை மொழிவோமே, மகிழ்ந்து வாழ் வோமே, அவ் வாழ்வெல்லாம் யாண்டுப் போய் ஒளிந்தன.

இளந்தைப் பொழுதில்தான் என்ன? தென்னங்காற்று, பொன்னூசல் ஆடிற்றே நம் வாழ்க்கை வளத்தோட்டத்தில்! கொள்ளாத மகிழ்ச்சி ததும்பிற்றே நம் உள்ளங்களில்! பள்ளி யில் தன்னந் தனியராய் இன்முகத்தோடு உறவாடுவமே, மனங் கலந்து பேசுவமே, ஆ! அது இழந்து எத்துணை நாட்கள் ஆயின !

அப்போதெல்லாம் நம் உள்ளங்களில் இன்னதென்றறியாத ஒளியொன்று சுடரோடிக் கிடக்குமே, அதுவும்போய் மாண் டொழிந்ததோ ?

அன்பு அமர் அகமே, இனி உம்மைக் காணாது காணு வேன். நெடுந்தொலைதான் கடந்தீர். ஆனால் அன்பு மனம் அதனையுங் கடக்கும். நட்பு எனும் நளிகடல்முன் தொலைவும் பிரிவும் என்செய்யும்?

என்னென்று எடுத்துரைக்க இயலா என்னன்ப,

காலத்தை என் செய்கின்றனை? கொல்கின்றேன் என்று சொல்கின்றனை. நன்று: எவ்வாறு கொல்கின்றாய்? கலைக் கோயிலைச் சுற்றியா? தமிழ்த் தென்றலிற் படிந்தா? வாழ்க் கைப் பாடங்களைப் பயின்றா? விடை வேண்டும்.

கலன்பெய் பேழையன்ன சிலப்பதிகாரத்தின் துளும்பு நலங்களை அதிற் பொதிந்தொளிரும் கருத்தமுதங்களை நுகர்ந்து

வருகின்றீர்களா? சிலம்புநூற் கருவூலத்தில் தாங்கள் காணும் பொன்னையும் பொருளையுஞ் சிறிது சிறிதாகவேனும் தங்கள் முடங்கல்கள் வழியாக எனக் களிக்கக்கூடாதா? "முழுதும் பழுதற்ற முத்தமிழின் பாடலை" என்னோடும் உடன்உண்ணக் கூடாதா?

திருவள்ளுவர் குறள் தங்கள்பால் இருக்கலாமே! நாளுக்குச் சில குறள்கள்—ஒரு நாளைக்கோர் அதிகாரமேனும் மனப்பாடஞ் செய்யலாமே! அது வாழ்க்கைக் கட்டிடத்திற்குச் சிறந்த அடிப்படையாகத் திகழுமே!

வாழ்க்கையை வடித்தெடுத்து அணிபெறத் தொகுத்தளித்த "வான்சுவை அமிர்த வெள்ளந்"தானே திருக்குறள். "திருவள்ளுவர் உலகையே திருக்குறளாக எழுதினர். உலகின் எழுத்தோவியந் திருக்குறள் என்று கூறலாம்" என்பர் ஆசிரியர் திரு. வி. க. "திருவள்ளுவர் உலகுக்கென்றே பயின்றார். உலகுக்கென்றே வாழ்ந்தார். அதனால் அவர்தம் உள்ளத்தில் உலகம் நின்றது. அவர் உலகமாயினர் உலகம் அவராயிற்று" என்று மேலுந் தெருட்டித் தெளிவுரை பகர்வர் அவ்வாசிரியர்.

"திருவள்ளுவரின் அறத்தில் நின்று பொருளில் புதைந்து, இன்பத்தில் இயைந்து" அவர்தம் உள்ளத்தைப் புலனுழுது காண்க. கண்டு நினைத்துக்கொண்டே இருக்க. அதற்குள் என்னுடைய மறுமுடங்கலை அனுப்புவேன்.

தங்கள் செழிப்பு வேண்டும்,
இராமுருகன்.

"நிற்பது கூடாது"

[வித்வான் மு. வரதராசனர், B.O.L.]

யான் ஆரும் வகுப்பில் கற்றபோது எனக்குத் தமிழ் இலக்கணம் கற்பித்தவர் கணக்கு ஆசிரியர். அவர் தமிழ் கற்றுத் தேர்ந்தவர் அல்லர்; வடமொழியைப் பாடமாகக் கொண்டு தேர்ந்து கணக்கு ஆசிரியராக வந்தவர்; ஆயினும், தமிழ் வகுப்பு அவரைத் தமிழ் கற்கத் தூண்டியது. அவர் நடத்திய வகுப்பில் இலக்கணப்பகுதி வரும்போதெல்லாம் மாணவர்க்குப் பேரச்சம். 'இலக்கணக் கேள்விகளுக்கு நன்ருக விடை எழுதுவோர்க்கு நல்ல மார்க்குத் தருவேன். அப்படித்தான் வரதராசன் என்னிடம் 60, 65 என மார்க்கு வாங்குகிருன்' என்று மற்ற மாணவரிடம் கூறுவார். ஆனல் யான் தவறு செய்யும் போதெல்லாம் தண்டனையும் இரட்டிப்பாகத் தருவது அவர் வழக்கம்.

ஒருநாள் 'எழுவாய் பயனிலை' வாக்கியங்கள் பலவற்றிற்கு எழுவாய் பயனிலை கூறிவந்தனர் மாணவர். எனக்கு முன் நான்காம் வரிசையில் உள்ள மாணவனுக்கு முறை வந்தது. 'அவனல் மணலைக் கயிருகத் திரிக்க முடியாது' என்பது அவனுக்குக் கொடுத்த வாக்கியம். 'அவனல்—எழுவாய்' என்ருன் அவன். 'மணலை—எழுவாய்' என்ருன் அடுத்தவன். 'கயிருக' என்ருன் மற்றெருவன். 'திரிக்க—எழுவாய்' என்றேன் யான். எல்லோருக்கும் பிரம்பால் ஒவ்வோர் அடி கிடைத்தது. எனக்குமட்டும் அன்று மூன்று அடி. 'கண்ணை மூடிக்கொண்டு அந்த வாக்கியத்தில் உள்ள ஒவ்வொரு சொல்லையும் எழுவாய் எழுவாய் என்கிறீர்களா' என்று சினந்தார் ஆசிரியர். 'நீயும் அவர்களைப்போல ஆகிவிட்டாய்' என்று வெகுண்டார் என்னை. 'அவன் என்பது தோன்ரு எழுவாய்' என்று அவரே விடை கூறினர்.

யான் கண்ணை மூடிக்கொண்டு சொல்லவில்லை. ஆசிரியர் கற்பித்த முறையே சென்றுதான் எழுவாய் கண்டேன். முதலில்

பயனிலை காணவேண்டும் என்றும், அது பெற்ற பிறகு, எவர், எது முதலிய கேள்விகளை எழுப்பி விடையாக வருவது எழுவாயாகக் கொள்ளவேண்டும் என்றும் அந்த ஆசிரியரே எனக்குக் கற்பித்திருந்தார்.

'முடியாது' பயனிலை என்று கண்டேன். எது முடியாது என்று கேட்டேன். நிரிக்க முடியாது என்று விடை வந்தது. நிரிக்க—எழுவாய் என்று கூறினேன்; மூன்று அடி பெற்றேன். ஆசிரியர்பால் எனக்குச் சிறிதும் வெறுப்பு இல்லை. அவர் 60, 65 என உயர்ந்த மார்க்கும், தவறியபோது இரட்டிப்புத் தண்டனையும் கொடுத்த கொடையே என்னை இன்று தமிழ்க்கடலுள் திளைக்கச் செய்துள்ளது என நினைந்து நன்றியுடையே னாகும்போது என் உள்ளம் குளிர்கின்றது.

அவன்—எழுவாய் என ஆசிரியர் சொன்ன விடை என் உள்ளத்தில் பதியவில்லை.

பதின்மூன்றாண்டுகள் கழிந்த பின்னர் அதே உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியர் தொழில் பெற்றேன். பத்தாம் வகுப்பு வரை தமிழ் கற்பிக்கும் உரிமை பெற்றேன். எனக்கு எழுவாய் பயனிலை கற்பித்த ஆசிரியரோ, அன்றும் அந்நிலையில் இருக்கக் கண்டேன். என் ஆசிரியர் என்னை நண்பனாகக் கொண்டார். யான் அன்றும் இன்றும் ஆசிரியராகவே அவரை மதித்து வருகின்றேன்.

எழுவாய் பயனிலை கற்பிக்கும் வாய்ப்பு எனக்கு ஒருநாள் வாய்த்தது. 'அவருடைய புகழை எவராலும் சொல்ல முடியாது' என்பது வாக்கியம். மாணவரைக் கேட்டேன். வெவ்வேறு வகையான விடைகள் வந்தன. எல்லாம் தவறே. 'முடியாது—எது' என்று கேள்வி கேட்குமாறு வழிகாட்டினேன். அப்போதும் பலரும் திகைத்தனர். ஒருவன் எழுந்து 'சொல்லுவது—எழுவாய்' என்றான். 'வாக்கியத்தில் இல்லையே' என்றேன். மற்றொருவன் தோன்றா எழுவாய் என்றான். 'தோன்றா எழுவாயினைச் சேர்த்துப் படித்தால் வாக்கியம் நிரம்பவேண்டும்; இது மிகையாகின்றது. ஆகையால் தோன்றா எழுவாய் ஆகாது. சொல்ல என்பதை எழுவாயாகக் கொள்ள வேண்டும்' என்று கற்பித்தேன். இன்னொரு மாணவன் எழுந்தான்.

'நேற்று சொல்ல—வினையெச்சம் என்று சொல்லிக் கொடுத்தீர்கள்' என்றான். மற்றொருவன் எழுந்து ஏதோ கேட்க முயன்று வாளா அமர்ந்தான். இன்னொருவன், 'பெயர்ச்சொல் தானே எழுவாயாக வரும்; வினையெச்சம் எழுவாயாகுமா?' என்று கேட்டான்.

மாணவர் மூளையை எண்ணி வியந்தேன். இதுபோன்ற வாக்கியம் என் ஆறும் வகுப்புக் கல்வி முதற்கொண்டே, என் உள்ளத்தைக் கலக்கித் தெளிவித்திருப்பதால், அன்று மாணவர் உள்ளம் கொள்ளுமாறு விளக்க முடிந்தது.

என் உயர்நிலைப்பள்ளிக் கல்வி முடிந்த பின்பு, திரு. வி. கலியாணசுந்தரனார் உரைநடை கற்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. "தீண்டாமைப் பேய் இந்நாட்டினின்றும் ஒழிதல் வேண்டும்; சாதிவேற்றுமை என்னும் தொத்துநோய் தொலைதல் வேண்டும்; பெண்ணடிமை ஒழிந்து பண்டைத் தமிழ் நாட்டிற்போல் பெண்ணுரிமை ஓங்கல் வேண்டும்" என்பன போன்ற வாக்கியங்கள் என் நினைவில் பதிந்தன. ஒழிய வேண்டும், தொலைய வேண்டும், ஓங்க வேண்டும் என்று பிறர் எழுதும் இடங்களில் ஒழிதல் வேண்டும், தொலைதல் வேண்டும், ஓங்கல் வேண்டும் என்று திரு. வி. க. எழுதுவதைக் கூர்ந்து ஆய்ந்தேன். வினையெச்சம் என்று யான் கருதியவற்றை அவர் தொழிற்பெயராக எழுதியிருத்தல் கண்டேன். பின்னர் மறைமலையடிகளார் எழுதிய நூல்களைக் கற்றேன்; உண்மை மேலும் விளங்கிற்று. திருக்குறள் — பரிமேலழகர் உரை கற்றேன்; உண்மை தெளிவாயிற்று. மறந்தும் மேற்குறித்த வினையெச்ச வாய்பாட்டால் எழுதாத பரிமேலழகர் உரைநடையினை துருவித் துருவி ஆராய்ந்தேன். சங்க இலக்கியங்களைக் கற்கும் வாய்ப்பு, பின்னர் வித்வான் தேர்வுக்குரிய கல்வியால் ஏற்பட்டது. ஐயங்கள் அனைத்தும் பறந்தொழிந்தன.

ஆதலின், மாணவரிடம் 'சொல்ல' என்பது தொழிற்பெயர் என்றும் 'சொல்லல்' என்பதன் ஈறு சிதைந்தது என்றும், பாண்டியநாடு என்பது பாண்டிநாடு என்றானாற்போல் சொல்லல் வேண்டும் என்பது சொல்லவேண்டும் என்றாதல் மரூஉ எனக் கொளற்பாற்று என்றும் விளக்கினேன்.

இஃது எவ்வாறே உடனுள்ள தமிழாசிரியர் மற்றெருவர் செவிக்கு எட்டியது. மறுநாள் காலையில் பள்ளியுள் நுழையும் போது, சொற்பொழிவு ஒன்று கேட்டது. "இந்தக் காலத்தில் இலக்கணம் என்றால் என்ன என்று நினைத்துக்கொண்டிருக் கிறார்களோ, தெரியவில்லை. ஒரு விதியை மாற்றுவார்களானல் தமிழ் அடியோடு போயிற்று என்பதை உணரவில்லை. மனம் போன போக்கெல்லாம் இலக்கணமாம் 'சொல்ல' என்பது ஒரு வாக்கியத்துக்கு எழுவாயாம். இவர்கள் எல்லாம் வித் வான்களாம். வித்வான் பட்டம் வந்த அன்றைக்கே கெட்டது தமிழ். இந்தப் பல்கலைக் கழகத்தார்தாம் வித்வான் பரீட்சை ஏற்படுத்தித் தமிழைக் குட்டிச்சுவர் ஆக்கிவிட்டார்கள்" என்று சொற்பொழிவு நீண்டுகொண்டே யிருந்தது. என் தலை கண்ட தும் சொற்பொழிவு குறுகிவிட்டது. அத் தமிழாசிரியர் என் நண்பரே. ஆயினும் தமிழின்மேல் கொண்டுள்ள பற்றே அவரை அந்தச் சொற்பொழிவு ஆற்றத் தூண்டியது.

நண்பருடன் உள்ளம் கலந்து பேசமுடிந்தது. ஆனல் உண்மையை விளக்க முடியவில்லை. என் குறைபோலும்! அவர் என் கருத்து வேறுபாட்டிற்கு இடந்தர மறுத்துவிட்டார்.

மொழியியல் (Philology) என்பது மேனுட்டவர் சென்ற நூற்றுண்டில் வளர்க்கத் தலைபட்டதோர் உயர்ந்த அறிவியல் துறை. அத் துறையில் யான் முதன்முதலாகக் கேட்டுக் கண்டு கற்றநூல் கால்டுவெல் பெரியார் எழுதிய ஒப்பிலக்கணமாகும். அது மேலும் பல நூல்களைக் கற்கத் தூண்டியது. அவற்றுள், 'ஆறு மொழிகளில் சொற்றெடரிலக்கணம்' (Syntax in six Languages - By F. M. Purdic M.A.) என்பதொன்று. அத னுள், தொழிற்பெயர் நிலையில் உள்ள சொல் எச்ச வடிவிற்கு மாறுவதைப் பற்றிய ஆராய்ச்சி உள்ளது. தொழிற்பெயர் அவ் வாறு எச்சமாக மாறுதல் லத்தீன் மொழியில் காணப்படுகின் றது என்றும், ஜெர்மனி மொழியிலும் அஃது உள்ளது என்றும், பிரஞ்சு மொழியில் அது வினையெச்சமாக மாறிய பின்னும் எழுவாயாகவும் செயப்படுபொருளாகவும் அமைதல் உண்டு என்றும், ஆங்கிலத்தில் அந்தப் பெயர்ச்சொல் ஈறு கெட்டு உருபு ஏற்கின்றது என்றும் ஆராய்ந்து எழுதியுள்ளார்.

தமிழிலும் ஆங்கிலத்திற் போல, அந்தச் சொல் உருபேற்றல் உண்டு.

மணலைக் கயிருகத் திரிக்க முடியாது
மணலைக் கயிருகத் திரிக்கிறதற்கு முடியாது

என்னும் இரண்டும் பேச்சு வழக்கில் உண்டு. திரித்தல் திரிக்கல் திரிக்கிறது என்னும் மூன்றும் தொழிற்பெயர். முதல் சொல் எழுத்து வழக்கில் உள்ளது. இரண்டாம் சொல் மேற்கூறியவாறு சிதைந்து பேச்சு வழக்கில் உள்ளது. மூன்ரும் சொல் காலங் காட்டும் தொழிற்பெயர். அது நான்கனுருபு ஏற்று மேற்கூறியவாறு வழங்குகின்றது. இந்த மூன்றனுக்கும் உள்ள தொடர்பை உன்னின், எழுவாய்—பயனிலை வகுப்பில் வந்த மயக்கம் தெளியுமன்ரே?

'திரிக்கிறதற்கு முடியாது' என்பதில் தொழிற்பெயர் நிகழ் காலம் காட்டுவது. 'திரிப்பதற்கு முடியாது' என்பதில் தொழிற்பெயர் எதிர்காலம் காட்டுவது; ஆயினும் காலம் குறியாது பொதுவாக வழங்குவது.

ஒருநாள் சென்னை டிராம் வண்டி ஒன்றில், சுற்றிலும் எழுதப்பட்டுள்ளவற்றைப் பார்த்து வந்தேன். 'நிற்பது கூடாது' என்ற தொடர் தெரிந்தது. மற்ற எழுத்துக்கள் நெடியார் ஒருவர் தலையால் மறைந்திருந்தன. அவர் திரும்பி அசைந்தார். பிரயாணிகள் டிரைவர் பிளாட்பாரத்தில் நிற்பது கூடாது என்று முழுமையும் தெரிந்தது. சிறிது தயங்கினேன். Passengers are forbidden to stand on the driver's platform என்று ஆங்கில வாக்கியம் உடனிருந்ததைக் கண்டேன்; தெளிந்தேன். மேற்கூறிய இலக்கண நினைவுகள் எல்லாம் வந்தன.

மொழிபெயர்ப்பு அழகிதே. சுருங்கச்சொல்லல் என்பதே அந்த அழகு. அன்றியும், 'Spit here' என்பதற்குத் 'துப்பு இங்கே' என்று எழுதியது போன்ற சொற்பெயர்ப்பு இராமல் மொழிபெயர்ப்பாகவே அமைந்துள்ளது அறிந்து மகிழ்ந்தேன். You are requested to attend the meeting என்பதற்கு 'கூட்டத்திற்கு வருமாறு நீங்கள் வேண்டிக்கொள்ளப்படுகின்றீர்கள்' என்று மொழிபெயர்க்கும் நண்பர் டிராம்வே கம்பெனி

யார்க்குக் கிடைத்திருந்தால் வேறுவகைப் புதுமை காணக் கிடைத்திருக்கும்.

'நிற்கக்கூடாது' என்று பேச்சு வழக்கில் உள்ள ஒன்றை 'நிற்பது கூடாது' என்று தொழிற்பெயர் வாய்பாட்டால் எழுதியவர் போற்றத் தக்கவரே. முன்னது எளியது என்பதும் பின்னது அரியது என்பதும் உண்மையே. ஆயினும், 'நிற்க என்னும் பேச்சுச் சொல்லை 'நிற்பது' என்று திருத்திய அவர் நோக்கம்தான் யாதோ? யாதாயினும் ஆகுக. அவர் 'வினை யெச்சம் எழுவாயாகுமா' என்றும், 'தொழிற்பெயர் இவ்வாறு சிதைந்ததோ' என்றும் ஐயுறும் இலக்கணக்கல்வி பெற்றில ராயினும் ஆகுக. இவ்வாறு எழுதிய அவர் மூளை தமிழ் வடிவி னது, அவர் தாய்மொழி தமிழ் என்று துணிந்து கூறலாம்.

"இறை, உயிர், கட்டு என்னும் முப்பொருள்களுள், காளத்தி யப்பரும் கண்ணப்பரும் இறையும் பக்குவ முதிர்ந்த உயிருமாம்... கட்டாகிய ஆணவம், மாயை, கன்மம், மாயேயம், திரோதாயி என் னும் ஐவகைப்படும் பாசங்களின் இயல்புகளை முறையே நாகன், தந்தை, காடன், நாணன், தேவராட்டி என்னும் இவர்கள் செயல் கள் புலப்படுத்துவன...திருக்காளத்தி மலைமிசை ஏறியது, தத்துவங் கடத்தலைப் புலப்படுத்தும்."

—மகாமகோபாத்தியாய பண்டிதமணி
மு. கதிரேசச் செட்டியார்.



[புத்தனேரி ரா. சுப்பிரமணியன்]

எ. அழுகைக் குரல்

காணுமற்போன குதிரையைக் கண்டுபிடித்தல் என்னும் ஒரே குறிக்கோளுடன் புறப்பட்ட புதிய வேடன் முதலில் கழனியூரைச் சுற்றிலும் ஒருமுறை தேடிவிட்டுத் தன் குதிரையை வடக்கு நோக்கிச் செல்லும் பெரிய சாலை வழியாகச் செலுத்தினன். அவனுடைய பார்வை சாலையின் நாலா பக்கங்களிலும் கூர்ந்து சென்றது.

“ அதோ! குதிரை!...ஓடு! பிடி!” என்று அவன் மனமானது கழுத்தைப் பிடித்துத் தள்ளுவது போலிருக்கும்! உடனே அந்த இடத்தை நோக்கித் தன் குதிரையை ஓட்டுவான்! ஐயோ! காண்பது குதிரையன்று! ஈவிரக்க மற்றுக் குத்துக்கல்லாக நிற்கும் பாறையைப் பார்த்துவிட்டு ஏமாந்து திரும்புவான்! இவ்வாறு பொய்த்தோற்றம் பூண்டு இயற்கைப் பொருள்களெல்லாம் வேடனை ஏமாற்றி நகைப்பது அவனுக்கு மனச்சலிப்பை உண்டாக்கி விடும்!

உடனே, “ முரட்டுக் குதிரை!...போனல் போகட்டும்! இனிமேல் நான் அதைத் தேடப் போவதில்லை...” என்று மனம் நொந்து எண்ணுவான்!

“குதிரையைத் தேடிக் கண்டுபிடிக்காமல் திரும்பினல் புலவர் என்ன எண்ணிக் கொள்வார்? தன் குதிரையைத் தேடுவதில் எனக்குக் கருத்தில்லை என்று இகழமாட்டாரா?” என்ற தயக்கம் அடுத்த நொடியில் கிளம்பும்.

“ சரி! என்ன ஆனுலும் குதிரையைக் கண்டு பிடிக்காமல் புலவரின் கண்முன் நிற்கப்போவதில்லை!...” என்று முடிவு கட்டுவான்!

இவ்வாறு வேடன் பலவகையான எண்ணமிட்டுக் கொண்டே வெகு தூரம் வந்துவிட்டான்! குதிரை அகப்பட்டபாடில்லை! எத்தனையோ ஒற்றையடிப் பாதை, பொற்றையடிச் சாரல், காட்டுப்புதர் ஓரம், குன்றோரக் குகை, இவற்றிலெல்லாம் குதிரையைத் தேடிக் கல்லிலும் முள்ளிலும் தன் குதிரைமீது தடுமாறி அலைந்து பார்த்துவிட்டான்! தேடுவது கிடைத்தால் தானே?

இன்னும் கொஞ்ச தூரம் சென்றவுடன், வேடன் பயணம் செய்து கொண்டிருந்த சாலை இரு கிளைகளாகப் பிரிந்தது? குதிரை இடது கிளை வழியே போயிருக்குமா? அல்லது வலது கிளைப்பாதையூடே சென்றிருக்குமா? இத்தகைய புதிய தத்தளிப்பு வேடனின் மனதை அலைத்தது. சாலைகள் பிரியும் இடத்திலேயே வெகு நேரம் நின்று ஆலோசனை செய்து கொண்டிருந்தான்! பின் ஒருவகை முடிவுக்கு வந்து வலது கிளைப்பாதை வழியாகத் தன் குதிரையை ஓட்டினான்.

புதிய சாலையின் வழியாகப் போகும்போது நடுப்பகல் ஆய்விட்டது. வெயில் மண்டையைப் பிளப்பதுபோ லிருந்தது. சாலையின் இருமருங்கிலும் சிறுசிறு மரங்களடங்கிய சமவெளி தென்பட்டது. சமவெளியினூடே வடமேற்கு நோக்கி வளைந்து வளைந்து ஓர் ஒற்றையடிப் பாதை சென்றது. அப் பாதையில் இறங்கி வேடன் தன் குதிரையைச் செலுத்தினன்.

போகப் போக, ஒரு பெரிய மலைக்குகை நெருங்கிக்கொண்டே வந்தது. சற்று நேரத்தில் வேடன் குகையருகில் வந்துவிட்டான். வெளியில் குதிரையை நிறுத்திவிட்டு அவன் குகைவாயிலை அணுகும்போது யாரோ பெருமூச்சுவிட்டு அழுகின்ற குரல் கேட்டது. குரலில் பின்னியிருந்த மென்மை அது ஒரு பெண்ணின் குரல் என்பதை அறிவித்தது. துயர்க்கடலில் மூழ்கியுள்ள ஒரு பெண்ணின் அழுகைக்குரல் என்பதை வேடன் உணர்ந்து கொண்டான்.

முன்பின் தெரியாத புதிய குகைக்குள் திடீரென நுழைவதற்கு முதலில் துணிவுகொள்ளவில்லையாயினும், பின்னர் மன உறுதியுடன் அடிமேல் அடிவைத்து வேடன் மெதுவாகக் குகைக்குள் நுழைந்தான். ஒரே இருள்மயமா யிருந்தது! மனத்தளர்ச்சி யடையாமல் உள்ளே செல்லச் செல்ல அழுகைக்குரல் மிகத் தெளிவாகக் கேட்டது. ஆயினும் குகை பெரிதாக இருந்தமையால் இருட்டில் வழி தெரியவில்லை.

எனவே வேடன் குகையைவிட்டு வெளியேவந்து தன் குதிரையின் கழுத்தில் அணிந்திருந்த நவமணி மாலையைக் கழற்றிக் கையில் வைத்துக்கொண்டு திரும்பவும் குகைக்குள் நுழைந்தான். நவமணியின் ஒளி குகையிருளைச் சற்று விலக்கியது. இந்த இயற்கை விளக்கின் துணையால் குகைக்குள் வளைந்து செல்லும் பாதை வழியே விரைவாகப் புகுந்தான்.

குகை யிருளைத் திடீரென விலக்கி ஒளிகாட்டும் காட்சியைக் கண்டு திடுக்கிட்டெழுந்த ஒரு பெண்மணி பதற்றத்துடன் 'ஓ' வென்று அலறினள்! வேடன் கேட்ட அழுகைக்குரல் இந்தப் பெண்மணியால் எழுப்பப்பட்டதே என்பதை அவன் உணர்ந்து கொண்டான். அலறி எழுந்த பெண்ணை நோக்கி,

"அம்மா !...பதறாதே !..." என்று சாந்தமான குரலில் பேசினான் வேடன் !

"புயலுக்குப் பின் அமைதி ! துன்பத்திற்குப் பின் இன்பம் ! ஆம் ! கொடுஞ்செயலும், கடுஞ்சொல்லுமே கொஞ்ச நாளாகக் கண்டு கேட்டுள்ள நான் இன்று கேட்கும் இந்த இனிமைச்சொல் உண்மைப் பேச்சு தானா ? அல்லது இதெல்லாம் கனவா ?..." என்று மனதிற்குள் எண்ணித் திகைத்தாள் அம் மங்கை.

மீண்டும் வேடன், "பெண்ணே ! நீ யார் ? இங்கு எப்படி வந்தாய் ?..." என்று அன்பாக வினவியதும் ; மங்கையின் விம்மலும் பெரு மூச்சும் தம்மை மீறிக்கொண்டு மிகுந்தன ! அவற்றை அடக்க முடியாதவளாய் அவள் 'ஓ'வென்று மீண்டும் கதறிவிட்டாள்.

வேடனுக்கு ஒன்றுமே தோன்றவில்லை ! இரக்கம் ஒரு புறம், துணிவு ஒருபுறம் ; திகைப்பு ஒருபுறம் ; அச்சம் ஒருபுறம் ; இங்ஙனம் மாறிமாறிச் சிந்தனை அலைகள் அவன் உள்ளத்தில் மோதிக்கொண்டிருந்தன.

"அழாதே !...அம்மா ! நீ ஏன் பதறுகிறாய் ?...பயப்படாதே !..." என்று வேடன் திரும்பவும் பரிவாகக் கூறியதும், அந்தப் பெண்ணின் உள்ளத்தை மூடியிருந்த அச்சம் என்னும் திரை சற்று விலகியது.

"ஐயா ! நீங்கள் யார் ?...இப்படிக் கனிவான பேச்சைக்கேட்டு...... ஒரு வாரம் ஆய்விட்டதே !...அன்புக்குரல் கொடுக்கும் தாங்கள் எப்படி இங்கு வந்தீர்கள் ?..." என்று ஏங்கிக்கொண்டே கேட்டாள் அம் மாதரசி.

"அம்மா !...அதைப்பற்றி யெல்லாம் பிறகு பேசிக்கொள்ளலாம் !... முதலில் நாமிருவரும் குகைக்கு வெளியே போகலாம்...வா !" என்றான் வேடன்.

துக்க மேலீட்டால் தள்ளாடிக்கொண்டு அந்தப் பெண்மணி மெதுவாக வேடனைத் தொடர்ந்து குகைக்கு வெளியே வந்தாள் !

இப்பொழுதுதான் வேடன் அவளை நன்றாகப் பார்க்க முடிந்தது. பெண்மணியும் நாணத்துடன் குனிந்துகொண்டே கடைக்கண்ணால் மெதுவாகப் பார்த்துவிட்டுச் சட்டெனத் திரும்பவும் தரையை நோக்கினாள்.

அப் பெண் தலைவிரி கோலமாயிருந்தாலும் வேடனுக்கு அதுவும் ஒரு அழகாகத்தானிருந்தது. உச்சியிலிருந்து உள்ளங்கால்வரை ஒரு பொட்டு நகைகூடக் கிடையாது. பொன்னிறமான திருமேனியுடைய பெண்ணிற்குப் பொன் நகையும் வேண்டுமோ ? ஒல்லியான மேனியுடைய இளமங்

கையின் உயரிய தோற்றமும் முகப்பொலிவும் பார்த்துப் பார்த்து மகிழக் கூடியனவாயிருந்தன.

அன்பு ததும்பும் அவளுடைய கருணைக் கண்களிலிருந்து மாலைமாலையாகக் கண்ணீர் வடிந்த காட்சி வேடனுக்கு ஓர் அன்பு மழை போன்றிருந்தது! விம்மி விம்மி அழுவதால் அசைகின்ற அவளுடைய சிவந்த உதடுகளைக் கண்டதும் அவை இன்னும் கொஞ்சம் அசையட்டும் என்று அவற்றின் அழகில் வேடன் சொக்கிப் போய் விட்டான். அவளுடைய அழுகைக் கண்ணீர் மழையானது தாமரைக் கைகளின்மேல் பொழிந்து அவற்றை அன்று பூத்த புதுப்பூக்கள் போன்று மலர்வித்தது!

இத்தகைய அழகு வாய்ந்த பெண்மணியை வேடன் பார்க்கும்போது அவள் வெட்கத்தால் தலைகுனிவதும், அவள் மெதுவாகக் கருவிழியை கண்ணோரத்தில் கொண்டுபோய் புதிய மனிதனை நோக்கும் பான்மையும்,

“ யானோக்கும் காலை நிலனோக்கும் நோக்காக்கால்
தானோக்கி மெல்ல நகும்!”

என்னும் குறளுக்கேற்ற சித்திரமாக நின்றன!

தன்னைக் காப்பாற்ற வந்த புதிய ஆடவர் அழகுமிக்க இளங்காளையாக இருப்பதைக் குறிப்பாக அறிந்த மங்கையின் முகப்பொலிவு ஒளிபெற்று மலர்ந்தது. இந்த ஆணழகனைக் கண்டதும் அவள் உள்ளத்தில் ஒருவகை நல்லுணர்ச்சியும் கிளர்ச்சியும் பொங்குவதை மறைக்க முடியவில்லை.

“ஐயா! மற்றதெல்லாம் பிறகு பேசிக்கொள்ளலாம். முதலில் இந்த இடத்தைவிட்டுப் போய்விடுவோம்!...இதைக் கண்டாலே எனக்கு ஒரு வகையான அச்சம் ஏற்படுகிறது!...” என்று தெளிவாகவும் இனிமையாகவும் கூறினாள் இளமங்கை!

“ அம்மா!...இனி நீ அஞ்சவேண்டியதில்லை!—கவலைப்படாதே!... துன்பத்தில் வதங்கிய உன் முகம் இன்பத்தில் பூரிக்கும் வழியைத் தேடுவேன்!...வா, என்னுடன்!...” என்றான் வேடன்.

பின்னர் இருவரும் குதிரையின் அருகில் சென்றனர். குதிரை மீதிருந்த சேணத்தைக் கொஞ்சம் பின்னால் நகர்த்தித் தனக்கு முன்னால் அப் பெண்மணியைக் குதிரைமீது அமரச் செய்து மிகக் கவனமாகவும் மெதுவாகவும் குதிரையைச் செலுத்திக்கொண்டு தான் முன்பு வந்த ஒற்றையடிப்பாதை வழியே வேடன் திரும்பினான்.

(தொடரும்)

ப்ராமனர் என்னும் சொற்பொருள்

[வித்துவான் மா. இராசமாணிக்கம் B.O.L.]

'பிராமனர்' என்னும் சொல் வடமொழியினின்றும் தமிழ்ப்படுத்தப் பட்டதாகும். அதில் உள்ள 'அர்' விகுதி நீக்கப்பெறின், எஞ்சிய 'ப்ராமன்' என்பதே வடமொழி மூலச் சொல். இச் சொற்பொருள் காணவேண்டுமாயின், வடமொழி ஆராய்ச்சி வேண்டற்பாலது. அத்துடன் இந்தோ-ஐரோப்பிய மொழி ஆராய்ச்சியும் வேண்டற்பாலது. இவ்விரண்டையும் கொண்டு பார்ப்பதேன்? எனின், 'ஆரியர் இந்தியா, பாரசீகம், இட்டாலி, ஜெர்மனி முதலிய இடங்களிற் சென்று குடியேறிய வர் ஆதலின் அவர்கள் பேசிய வடமொழி, பாரசீகமொழி, லாட்டின், பழைய ஜெர்மன் ஆகிய மொழிகள் ஓரினத்தன ஆகும். ஆதலாற்றான் ஒப்பிலக்கண முறைப்படி இவற்றை நோக்குதல் வேண்டும். இங்ஙனம் நோக்குதலாலும் இப் பல திறப்பட்ட ஆரிய மக்கள் வரலாற்றை நன்கறிவதாலும் சில நுட்பமான செய்திகள் ஒருமைப்பட்டிருத்தல் அறியக்கூடும். இது நிற்க, 'பிராமன்' என்னும் சொல் லாட்டின், பெர்ஷியன் மொழிகளில் உள்ளதா? இருப்பின் அதன் பொருள் யாது? அது யாரைக் குறித்தது? என்னும் கடாக்கட்கு உற்ற விடை களைக் காணல் சுவை பயப்பதாகும்.

பரெஸ்மன் (Baresman)—புற்கம்பிகளின் கட்டு, அல்லது, வேள்வி மேடையை மூடுதற்காகப் பரப்பப்பட்டதும் உயர்த்தப் பட்டதுமான தூய 'புற்கட்டு' அல்லது, வேள்விக்கென அமைக்கப்படும் 'புல் ஆசனம்.'

பரெசிஷ் (Barezish)—மெத்தெனும் ஆசனம் (cushion); இந்தியாவில் 'குசைப்புல்'; வேள்விக்களத்தில் விரிக்கப்படுவது; கடவுளர்க்கு ஆசனமாகப் போடுவது.

ப்ராமன் (Brahman)—ஆண்பாற்சொல்; யாகமேடையைத் தயாரிப்பவன் அல்லது யாகமேடையைப் புல் படலத்தால் மூடு பவன்.

ப்ரமன் (Brahman)—யாகம் (அஃறிணை, ஒன்றன்பால்). '**ப்ரமன்**' என்னும் சொல் முதலில் யாகமேடைக்கு அமைக்கப் படும் புல்லுக்காகி, யாகமேடைக்காகி, பின்னர் யாகத்துக்காகி, அதனைச் செய்யும் மனிதனுக்காகி வந்தது என்பது நன்கு அறி யத்தகுவது. இங்ஙனம் ஒருசொல் மும்முறை பல்வேறு

பொருள்களைக் குறித்து வருதலை, 'மும்மடி ஆகுபெயர்' எனத் தமிழ் இலக்கணம் கூறும்.

இட்டாலி நாட்டில் பூசை முதலியன செய்தவன் 'ப்லாமென்' (flamen) எனப்பட்டான். இப் 'ப்லாமென்' என்பார் சிறு தொகையினரே; ஒரு குறிப்பிட்ட சாதியார் அல்லர்; இத் தொழிலும் பரம்பரைப் பாத்தியமுடையதன்று. நகர மக்களால் இறை வழிபாடு செய்ய இவர்கள் அமர்த்தப்பட்டிருந்தனர். ரோமாபுரியில் இருந்த முப்பது பண்டைக்குடிகள் (tribes) தத்தமக்கெனத் தனித்தனிப் 'ப்லாமென்' உடையராயிருந்தனர். இவரன்றித் தனித்தனிக் கடவுள் பூசை செய்வதற்கெனப் பதினைந்து 'ப்லாமென்' அமர்த்தப்பட்டிருந்தனர். இவருள் முதன்மையாக இருக்கத் தக்க மூவர்—ரோமாபுரியில் இருந்த இரண்டு உயரிய வருணங்களைச் சேர்ந்தவர் ஆவர். ["ரிக்வேத காலத்தில் இந்தியா வந்த ஆரியர்க்குள்ளும் முதல் இரண்டு வகுப்பாரே யாகம் செய்து வந்தனர் என்பது அறியத்தகுவது விஸ்வாமித்திரர், திரிசங்கு மன்னர் செய்த யாகத்துக்குப் புரோகிதராக இருந்தார். 'தேவபி' என்னும் க்ஷத்ரியர், சந்தனுவின் புரோகிதராக இருந்தார்."*] இம்மூவருள் தலைவனாக இருந்தவன் 'டியாலிஸ்' (flamen Dialis) எனப்பட்டான். அவன் ஜுபிட்டர் (டியாலிஸ் பிதா) தேவனின் புரோகிதன். அவனே வேதகாலத்தில் 'டியாயஸ் பிதா' (Dyaus pita) எனப்பட்ட கடவுளின் புரோகிதன்.† அவன், தன் மனைவி உயிரோடிருக்கும்வரைதான் புரோகிதனாக இருத்தல் வேண்டும். ஏனெனில் இருவரும் சேர்ந்து சில சடங்குகள் செய்ய வேண்டியிருந்தன. மனைவி இறப்பின்,

---

* 'நிருபேந்திர குமார் டட்' எழுதிய 'இந்திய ஜாதிகளின் தோற்றமும் வளர்ச்சியும்'—புத். 1, பக். 39, 52-54.]

இங்ஙனமே, பாரசிகம் புக்க ஆரியருள்ளும் முதல் மூன்று வருணங்கள் இருந்தன என்பது 'அவெஸ்டா' (Avesta) என்னும் பாரசிகர் மத நூலால் அறியலாம். எனவே, இந்தியா முதலிய இடங்கட்கு வருமுன்னரே ஆரியர்க்குள் முதல் மூன்று வருணங்கள் பெயரளவில் (தொழில் அளவில்) ஏற்பட்டிருந்தன என்பது நன்கு புலனும். ஆரியர் இந்தியா வந்த பின்னர்த் தம்மினும் நிறம்-மொழி-நாகரிகம் இவற்றில் வேறுபட்ட மக்களைத் 'தாசர்' எனவும், 'சூத்திரர்' எனவும் கொண்டனர் என்பது அறியத்தக்கது."

† "வேதகாலத்துக்கு முற்பட்டதும் இந்திய-ஈரானிய ஆரியர் காலத்துக்கு முற்பட்டதுமான தேவர்கள் 'தியஸ்பிதா, திவோ பிதா' ஆவர். இவர்களே ரோமர்களால் 'ஜுபிட்டர், ஜியஸ் (zeus) எனப்பட்டவர்கள்" (Dr. R. Timmerman's article in 'Proceedings Transactions of the Third Oriental conference, Madras, 1924, p. 116).'

அவன் வேலையினின்றும் நீங்குதல் வேண்டும் என்பது விதி. 'ப்லாமென்' வேலை 'ப்லாமோனியம்' எனப்படும். இத்துடன் 'ப்ராமன்' வேலை 'ப்ராமனியம்' எனப்படுதலை ஒப்பு நோக்கிச் சுவைக்க.

பாரசீக 'ப்ரெஸ்மன்' என்னும் 'புல் கதிர்க்கட்டு' பாரசீகப் புரோகிதனது இன்றியமையாத பொருளாக விளங்கினது போல—ரோமாபுரியில் 'பாஸிஸ்' (fasees) என்பன கோடரி கொண்டனவாய் நீதிபதிகள் முன்னும் 'ப்ராமன் டியாலிஸ்' என்னும் பிரதம குருமுன்னும் கொண்டு செல்லப்பட்டன. இவை குற்றவாளிகளைத் தண்டிக்கவல்லன; ஆனால் அவர்களைத் தூய்மைப்படுத்தும் கருவிகளாகவே கொண்டு செல்லப்பட்டன. அக்கால நீதிபதி அல்லது புரோகிதன் தெய்வீகத்தன்மை யுடையவன்; தீயவரையும் தீய ஆவிகளையும் விரட்டுபவன் என நம்பப்பட்டான். அதனால்தான் புரோகிதன் அதனைக் கையில் தாங்கி வருதல் வழக்கம். இஃதன்றி, ரோமாபுரியில் யாகத் திற்கு என்று இலைக்கொத்துகள், சில செடிகளின் இலைகள், முதலியன பயன்படுத்தப்பட்டன. இவை 'வெர்பேன' (Verbanae) எனப்பட்டன. [இப்பெயருடன் ரிக்வேதகாலத் 'தர்பை' என்னும் பெயரை (புல்-பெயர்) ஒப்பிடுக.] ரோமாபுரிப் புலவர் ஒருவர் புதிய புல்லாலும் வெர்பேனாலும் மேடை யமைக்க விரும்புவதாகவும், பிறிதோரிடத்தில் 'வெர்பேனால் மேடை சுற்றி அமைக்கப்பட்டுப் பலியிட்ட ஆட்டிறைச்சி சித றப்பட்டதாக இருத்தல் வேண்டும்' எனவும் கூறியுள்ளமை நோக்குக. வேறொரு லாட்டின் புலவர் அரசனை நோக்கி, "பொதுக்கடவுளர் பொருட்டுச் சிலர் வெர்பேனையும் புல்மேடை யினையும் அமைத்தனர்; சிலர் தீயையும் தண்ணீரையும்............ தங்கள் நெற்றியில் வெர்பேனையும் கட்டிக்கொண்டு கொணர்ந்த னர்" எனக் கூறியுள்ளார். இந்த 'வெர்பேன' என்பது 'ப்ரெஸ்மன்' என்பதைப் போன்றது—குசைப்புல்லைப் போன்றது—யாகமேடைக்கு அமைப்பது. இதுவே இட்டாலியில் 'ப்லாமென்' எனவும், பாரசீகத்தில் 'பரெஸ்மன்' எனவும் ரிக்வேத இந்தியாவில் 'ப்ரமன்' எனவும் வழங்கப்பட்டது என்பது இது காறும் கூறியவற்றால் நன்கறியலாம்.*

---

* "ப்ராமன்: இச்சொல் ரிக்வேதத்தில் ஒன்றன்பாலிலும் வழங்கப் பட்டுள்ளது. பின்னர் அது 'சுலோகம், ஆசிரியன், ஓதுவான், ஓதுவான் மகன், ஆசிரியன் மகன், புரோகிதன்' என்னும் பல பொருள்களில் வந்துள் ளது" எனக் கூறும் நிருபேந்திர குமார் டட் (புத். I, பக். 40) கூற்று இங்கு நோக்கத் தக்கது.

அங்ஙனமாயின் 'ப்ரஹ்மன்' என்பதில் உள்ள 'ப்ரஹ்' என்பது பகுதியாகும். இதில் 'ர்' என்பது, முற்பட்ட 'ல்' என்பதற்குச் சமம். 'ப்ஹ்' (bh) என்பது லாட்டின் மொழியில் 'ப்' (f) ஆகும். எனவே, 'ப்லாமென்' (flamen) என்பது 'ப்ராமன்' (bhraman) என வரும். 'த்ரஹித்' என்பது (பாரசிகச்சொல்) வடமொழியில் 'த்ராங்மா' எனவரும். எனவே, 'பரேஸ்மன்' என்பது வடமொழியில் 'ப்ராமன்' என வரும்.

இதுகாறும் கூறியவற்றால்,

லாட்டின்	—'ப்லாமென்'	என்பன ஒரு பொருளன—ஒரே
பாரசிக	—'பரேஸ்மன்'	தொழிலையுடைய புரோகிதனைக்
சம்ஸ்கிருத	—'ப்ராமன்'	குறிப்பன என்பது நன்கறியலாம்.

எனவே, இச் சொல் மூலம், இவ்வாரியார் பொது இடத்தினின்றும் பிரிவதற்கு முன்னரே ஏற்பட்டதென்பதும், புரோகிதக் கூட்டம் அம் மூல இடத்திலேயே இவர்கள் பிரிவதற்கு முன்னரே இருந்திருத்தல் வேண்டும் என்பதும், ஒருவகைக் கொலை வேள்வி அவ்விடத்திற்றானே நடைபெற்று வந்ததென்பதும், குறைந்த பக்ஷம் உயர் இருசாதிகள் அப் பழைய காலத்திலேயே உண்டாகி (சிறந்த வேறுபாட்டோடு இல்லை) இருத்தல் வேண்டும் என்பதும் இதுகாறும் கூறிய விளக்கமான விவரங்களால் நன்கறியலாம்.

[இவ்வாராய்ச்சிக் கட்டுரை, C. M. மல்வந், M. A. B., Litt., என்பாரது 'இந்திய-ஐரோப்பிய மொழி' என்னும் ஆராய்ச்சி நூலைக்கொண்டும் (பக். 93-95), ஹூக்ளி-கல்லூரிச் சரித்திரப் போசிரியரான நிருபேந்திர குமார்டட், M.A., என்பாரது 'இந்திய சாதிகளின் தோற்றமும் வளர்ச்சியும்' என்னும் அரிய ஆராய்ச்சி நூலைக்கொண்டும் எழுதப்பெற்றது.]

செய்திகளும் குறிப்புக்களும்

தமிழ் இசைச் சங்கம்

நம் செந்தமிழ் நாட்டுக்கு இவ்விருபதாம் நூற்றாண்டிற் கிடைத்திருக்கும் அரிய பெரிய பேறுகளுள், பல்கலை வள்ளல் செட்டிநாட் டரசர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் நன்முயற்சியினால் நிகழ்ந்து வருகின்ற தமிழிசை இயக்கம் ஒன்றாகும். தமிழின் இனிமைக்குப் புதிய உயிரும் மலர்ச்சியும் உண்டாவதற்கு இந்த இயக்கமே, இப்பொழுது தலைசிறந்த இயக்கமாய் இருக்கின்றது. பொது மக்கள், செல்வர்கள், கற்றோர் முதலிய எல்லா வகையான நன்மக்களுக்கும் இன்பமும் கிளர்ச்சியும் கொடுத்து, அவரவர் உள்ளத்துக்குப் பெருவிருந்தாய் இருப்பது இசையாகும். அத் தகைய இன்னிசையில், தமிழ் மணமே முழுவதும் கமழுமாறு திரு. செட்டிநாட்டு வள்ளலவர்கள் இவ்வியக்கத்தின் வாயிலாக முயன்று வருவதனால், தமிழுக்குச் சிறந்த மறுமலர்ச்சி உண்டாகப் போவது மிகவும் உறுதியேயாம்.

அண்மையில், தமிழ் மக்களின் உயிர்போன்ற இத் தமிழிசை இயக்கம், சென்னையில் தமிழிசைச் சங்கம் என்று ஒரு சங்கத்தையும் நிறுவி இருக்கின்றது. வள்ளல் அவர்கள் அழைப்புக்கிணங்கி 19-4-43-ம் நாள் திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு, அவர்கள் அடையாற்று மாளிகையில் மேற்குறித்த சங்கத்தின் நன்கொடையாளர்களின் கூட்டம் குழுமியது. தக்க பெரியோர்கள் பலர் வந்திருந்தனர். விருந்துக்குப் பின் இசையரசு தண்டபாணி தேசிகரவர்களின் தமிழ் இன்னிசையரங்கு சிறப்பாக நடைபெற்றது. ஏறக்குறைய நான்கு லட்சம் ரூபாவுக்கு மேலாகவே, தமிழிசைச் சங்கத்திற்கு நன்கொடை சேர்க்கப்பட்டிருக்கின்றது.

அரசர் சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் தலைவராகவும் சர் R. K. சண்முகஞ் செட்டியார் அவர்கள் துணைத் தலைவராகவும், இச் சங்கத்திற்கு அமைந்துள்ளனர். திவான்பகதூர் C. S. இரத்தினசபாபதி முதலியார் முதலிய பெருமக்கள் பலர், இச்சங்கத்தில் ஊக்கத்துடன் தொடர்பு கொண்டுள்ளனர்.

இச் சங்கத்திற்கு அரசியற் பதிவு பெறவும் ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றனவென்று தெரிகின்றது.

காரியவெற்றியும், தமிழ்மொழி ஊக்கமும், மதிவன்மையும், பல வகைத் துணைநலங்களும் ஒருங்கு பொருந்திய பெருமக்கள் பலர் தகு முறைகளோடு மேற்கொண்டு செல்லும் இவ்வரிய பெரிய தமிழிசைச் சங்க நன்முயற்சி எல்லாம்வல்ல இறைவன் திருவருளால் இத்தமிழகத்திற்

போற்றலோடு என்றாளும் இனிது நடைபெற்றுச் செந்தமிழ்ப் பாடலிசையைச் செழிக்கச் செய்துவர வேண்டுமென்று பெரிதும் விரும்புகின்றோம்.

தமிழ் நங்கை பண்டைச் சங்ககாலத்திலும் மேலாக, வரவரச் செழுமையுற்றுத் தனியரசு நடத்துவதற்கு முயற்சி செய்வார் எவரெவரோ அவர்கள் பெயர்களே இத்தமிழகத்தில் என்ஞான்றும் நிலைபெற்று விளங்கும். அயல்மொழிக் கலப்பினாலும் அயலினத்தார் சேர்க்கையினாலும் தமிழ் நங்கையின் பிற்கால வாழ்வு சுருங்கி நிற்றலையே நன்றாய் அறிகின்றோமாகையால், இனி அப் பிறமொழி முதலிய கலப்பினின்றும் தமிழ் நங்கையை விடுவித்துச் சீராட்டுதலே கட்டாயமாகச் செயற்பாலது என்பது விளங்குகின்றது. ஆதலின், வள்ளல் செட்டி நாட்டரசர் அவர்கள், தனிச் செந்தமிழ்ப் பாடலால் இசைவளர்க்கும் நன்முயற்சிக்குத் தமிழ் மக்கள் எல்லா வகைகளிலும் ஒற்றுமையுற்று நின்று அவர்கள் அரும்பெரும் நோக்கத்தை நிறைவேற்றி வைப்பது இன்றியமையாக் கடமையாகும்.

பழநி, திருப்புகழ் மாநாடு

முருகன் எழுந்தருளி யிருக்கும் திருப்பழநித் திருப்பதியில், 1943 ஆண்டு மேமீ 6வ முதல் 8வ வரை மூன்று நாட்கள், திருப்புகழ் மாநாடு திருவனந்தபுரம் உயர்நீதி மன்றத்தின் தலைமை நடுவராகிய திருப்புகழ்மணி T. M. கிருஷ்ணசாமி அய்யர் அவர்கள் B.A., B.L., தலைமையில் நடைபெறும்.

மேமீ 9-ம் நாள் ஞாயிற்றுக்கிழமை பழனி சைவசித்தாந்த சபை இரண்டாவது ஆண்டு நிறைவு விழா கோவை சிவக்கவிமணி சிவத்திரு. சி. கே. சுப்பிரமணிய முதலியார் B.A., அவர்கள் தலைமையில் நடைபெறும்.

மேமீ 10-ம் நாள் திங்கட்கிழமை திருமுறை திருப்புகழ் விழா, சூரியனார் கோயில் ஆதீனம் மறைத்திரு. மகாசந்நிதானம் அவர்கள் தலைமையில் நடைபெறும்.

ஐந்து நாட்கள் இங்ஙனம் நடைபெற விருக்கும் பெருவிழாவில் கல்வியும் ஆராய்ச்சியும் வல்ல பேறிஞர்களின் சொற்பொழிவுகள் பல நடைபெறும்.

சாமிநாதையர் திருநாள்

சென்னை, கோகலே மண்டபத்தில் தமிழ்ப் பேராசிரியர் சாமிநாத அய்யரவர்கள் திருநாள் 28-4-43-மாலை திரு. வி. வி. சீனிவாச அய்யங்கார் தலைமையில் கொண்டாடப்பெற்றது. அப்போது திவான்பகதூர் T. M. நாராயணசாமிப் பிள்ளை, திரு. வி. கலியாணசுந்தர முதலியார், K. பால சுப்பிரமணிய அய்யர், உருக்குமணி தேவி, T. P. மீனுட்சிசுந்தரம் பிள்ளை முதலியோர் சாமிநாதையர் அவர்கள் தொண்டும் வாழ்க்கையும் பற்றிப் பாராட்டிப் பேசினர்கள். முடிவில் ஆசிரியர் வாழ்க்கை நடத்திய இல்லத்தை விலக்கு வாங்கிச் 'சாமிநாதையர் கழகம்' என ஒன்று அமைக்க வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சாமிநாதய்யர் அவர்கள் தமிழ்க்கு எடுத்திருக்கும் உழைப்பும், செய் திருக்குந் தொண்டும் மிகவும் பாராட்டற்பாலன. அவர்கள் நினைவுக்காக அமையும் அமைப்புக்கள் எவையும் எல்லாராலும் மகிழ்ச்சியாக வரவேற்கத் தக்கன. தக்க ஏற்பாடுகள் விரைவில் நிறைவேறி நிலைபெறுமாக!

சென்னை நக்கீரர் கழகம்
நக்கீரர் தமிழ் இலக்கிய வகுப்பு

பெண்கள் பகுதி: மேற்படி தமிழ் இலக்கிய வகுப்பில் தைத் திங்களிலிருந்து ஒவ்வொரு சனிக்கிழமையும் மாலை 3 மணி முதல் 4 மணி வரை "பெரிய புராணம்" வகுப்பு திருமதி வித்துவான், K. இலக்குமித் தாயாரம்மாள் அவர்களால் (தமிழாசிரியர், உயர்நிலை ஆசிரியப் பயிற்சிப் பெண்கள் பாடசாலை) சென்னை பெத்து நாய்க்கன் பேட்டைச் சிவஞானம் பார்க்குக்கு அருகில் உள்ள சைவ உயர்தர ஆரம்பப் பாடசாலையில் நடத்தப்படுகின்றது.

சென்னை நக்கீரர் கழகம்
புலவர் விழா

மேற்படி கழகத்தின் சார்பில் சென்னைத் தொண்டைமண்டலம் உயர்நிலைப்பள்ளியில், 4-4-'43, 7-4-'43, 14-4-'43, 21-4-'43 28-4-'43, ஆகிய நாட்களில் புலவர் விழா கொண்டாடப்பட்டது.

முதல் நாள் சென்னை நகராண்மைக் கழகத் தலைவர் இராவ்பகதூர் திரு. C. தாதுலிங்க முதலியார் அவர்கள் தலைமை தாங்கினர். கழகப் புலவர், திரு. இளவழகனர் அவர்கள் அரியதொரு விரிவுரை செய்து

புலவர் விழாவினைத் தவக்கி வைத்தனர். மேற்படி விழாவில் ஐந்து நாட்களிலும் "தோல்காப்பியர்" முதலாக 26 புலவர்களைப்பற்றி 24 தமிழ் வித்வான்கள் மிக அழகாகச் சொற்பொழி வாற்றினர்.

மதிப்புரை

குடும்ப விளக்கு :—இயற்றியோர் : பாரதிதாசன். வெளியிட்டோர் : புதுவைப் பாரதசக்தி நிலையத்தார். விலை அணு 6.

இது கவி நூல். இதன் முற்பகுதி 122 அடிகளுடைய ஆசிரியப் பாவினுலும், இடைப்பகுதி 53 அறுசீர் விருத்தங்களாலும், இறுதிப்பகுதி 16 எண்சீர் விருத்தங்களாலும் இயன்றிருக்கின்றன. உரை நடையில் ஒரு சிறிய ஆக்கியோர் முன்னுரையும், அகவற் பாவில் கல்லல் பண்டித இரத்தினம் அவர்களுடைய ஒரு சிறப்புரையும் நூலின் முகப்பில் உள்ளன.

நூலின் தலைப்புக் கேற்றபடி இந்நூல், குடும்பத்துக்குச் சிறந்த வாழ்க்கை யறிவை விளக்கும் ஓர் அரிய குடும்ப விளக்காகவே விளங்குகின்றது. தமிழ் மொழிக்கு இக்காலத்திற் செய்ய வேண்டிய அருந் தொண்டு ஒன்றை இந்நூல் செய்திருக்கின்றது. பண்டைக்காலத்தில் சங்கநூற் பாட்டுக்கள் பெரும்பாலும் வாழ்க்கையின் விளக்கங்களாகவே உள்ளன. இடைக்காலத்தில் மக்கள் மறுமை மறந்து வாழ்ந்தபோது, அம் மறுமை உணர்வைப்பற்றிய பாட்டுக்கள் பெருக எழலாயின. பிற்காலத்தில் இம்மை யுணர்வை மறந்து மறுமை யுணர்வையே பெரிது பேசி, வாழ்க்கை வேறுனமையால், இம்மையின் நல்வாழ்வைப்பற்றிய முயற்சிகள், அறிவுரைகள் இக்காலத்தில் இன்றியமையாதனவாய் இருக்கின்றன. குடும்ப விளக்கென்னும் இந்நூல், இப்போது காலத்திற்கேற்ற சிறந்த தொண்டினைச் செய்திருக்கின்றது.

வாழ்க்கைக்குப் பலவகை உணர்ச்சிகள் இன்றியமையாதன. ஒவ்வொரு காலத்தில் ஒவ்வோர் உணர்ச்சியையே மிகுத்தெடுத்துப் பேசுதலும், தனித்தெடுத்துப் பேசுதலும் அவ்வவ் வுணர்ச்சியாளர்களின் இயல்பாய் இருக்கின்றது. இதனுல், உலகில், காலந்தோறும், செயல்களும் நோக்கங்களும் வேறுபாடு உள்ளனபோல் தோன்றி, மேன்மேற் கட்டாயமான தொண்டுகளுக்கு, இடஞ்செய்து வருகின்றன.

'குடும்ப விளக்கு' என்னும் இந்நூலை ஆக்கியோர், "முன்னேற்றம் உடைய குடும்பம் எப்படி இருக்குமென்பது பற்றிய என் எண்ணந்தான்

இந்தச் சிறிய நூல். நல்ல குடும்பம் பல்கலைக் கழகம்!'' என்று தமது முன்னுரையிற் கூறியிருக்கின்ற பகுதி, தக்க அறிவுத் திவலையாய்ச் சிறந்து நூலின் உட்பொருளையும் எடுத்துக் காட்டுவதாய் விளங்குகின்றது.

பாரதிதாசனார் சீர்திருத்தமான கருத்துக்கள் உடையவர். இக் கருத்துக்களைக் கவர்ச்சியான வண்ணங்கள் தீட்டி எழுத்தோவியம் புனையும் வன்மை படைத்தவர். தெறிக்குஞ் சொற்களால், மிடுக்கு நடையிற் செய்யுட்கள் இயற்றவல்லவர். இச் சிறப்புக்கள், இந்நூலிலும் எங்குந் திகழ்ந்து மிளிர்கின்றன.

விடியற்காலையில் துயில் எழுவதிலிருந்து இரவு துயில்கூடும் வரையிலும், குடும்பத்துக்கு விளக்காகிய ஒரு மாது, சற்றுஞ் சோம்பாது அன்பும் பொறுப்புங் கொண்டு நடந்துகொள்ளும் இனிய முறைமை இந்நூலில் அழகாக விளக்கப்பட்டுள்ளது. கணவன், மாமன், மாமி, நாத்தி, குழந்தைகள் முதலியோர் ஒழுகலாறுகளும் அங்கங்கும் வருகின்றன. தாய், குழந்தைகட்குக் கல்வி பயிற்றல், குடும்பத்தை இசையரங்கமாய் நிறுத்தி மகிழ்வூட்டல், அட்டில் செய்தல், தையல் தைத்தல், பண்டங்களை விலை பேசல், வீட்டுக் கணக்கெழுதல், மருத்துவம் பார்த்தல், அளவளாவிப் பழகல், கணவன் அலுவலிலும் பங்குகொள்ளல், அறிவுரை கூறல், குழந்தைகளை வளர்த்தல் முதலிய பல வகையான குடித்தனத் திறமைகளையும் ஆசிரியர் இச் சிறு நூலில் கருத்தாக அடக்கிப் பெய்து விளக்கி யிருக்கின்றார். நூன்முழுமையும் அன்பும், ஒற்றுமையும், இரக்கமும், உதவியும், துணையும், சிறப்பாக விளங்குகின்றன.

பாரதிதாசனார் செய்திருக்கும் இத்தொண்டு தமிழுலகுக்குப் பெரிதும் பயன்தரவல்லது. இந்நூல் பெருகப் பரவுக என விரும்புகின்றோம்.

குழந்தைகள் பள்ளி விட்டு
  வந்தார்கள்; குருவிக் கூட்டம்
இழந்தநல் லுரிமை தன்னை
  எய்தியே மகிழ்வ தைப்போல்
வழிந்தோடும் புதுவெள் ளத்தை
  வரவேற்கும் உழவ ரைப்போல்,
எழுந்தோடி மக்கள் தம்மை
  ஏந்தினாள் இருகை யாலும்.

—குடும்ப விளக்கு.

குண்டலகேசி அகவல்: ஆசிரியர்: சுத்தானந்த பாரதியார். வெளியிட்டவர்: அன்பு நிலையத்தார், இராமச்சந்திரபுரம், திருச்சி ஜில்லா. விலை அணு 4.

ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றான குண்டலகேசி என்பது இப்போது கிடைக்கவில்லை. காப்பியம் கிடைக்காது போயினும் கதையேனும் தமிழ் மக்கள் அறிந்துகொள்ளும்படி ஆசிரியர் இந்நூலில் முயன்றிருக்கின்றார். கதை, சுவை மிக்கது. கவிநலம் பொருந்திய எளிய இனிய அகவற்பாவால் இந்நூல் இயற்றப்பட்டிருக்கின்றது. தமிழ் மக்களிடம் இது பரவுதற்குரியது.

தமிழர் கலைச்செல்வங்களாகிய கம்பராமாயணத்தையும் பெரிய புராணத்தையும் எரிக்கும் முயற்சி :—ஆக்கியோர் : தமிழ் பெருங்கவி முதுபெரும்புலவர் ராவ்சாகிப் வெ. ப. சுப்பிரமணிய முதலியார் அவர்கள், G. B. V. C. Retired Dy, Supdt., C. V. Dept. வெள்ளக்கால்.

இது உரைநடை நூல். தமிழ் நாட்டில் தன்மதிப்பியக்கத்தார் கம்பராமாயணத்தையும் பெரிய புராணத்தையும் பற்றிப் பேசிவரும் வாதங்களும் அவைகளுக்கு எதிர்வாதங்களும் இதன்கண் வருகின்றன. வெள்ளக்கால், முதுபெரும் புலவரவர்கள் இதன்கண் ஆணித்தரமான விடைகள் அளித்திருக்கின்றார்கள்.

மன்னார்குடி அரங்கசாமி முதலியார் மாணவர் இல்லத்தின் வெள்ளி விழா மலர் :—வெளியிட்டோர் : மாணவர் இல்லத்தார்.

3-4-43-ல் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் துணைத்தலைவர் M. இரத்தினசாமி M.A. (Cantab) Bar-at-law C.I.E. அவர்கள் அரிய தலைமையில் இம்மாணவர் இல்லத்தின் வெள்ளி விழா நிகழ்ச்சி இனிது நடைபெற்ற குறிப்பு இதன்கண் விளக்கப்பட்டுள்ளது. மாணவர் இல்லத்தை நிறுவியோர் முதலிய தக்கோர் உருவப்படங்களும் இவ்விழாவில் பெருமக்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளன. சென்னைப் பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. R. P. சேதுப்பிள்ளை அவர்களின் அரிய சொற்பொழிவும் இவ்விழாவில் நடைபெற்றுள்ளது.

வெள்ளி விழா மலர் இல்லம் நிறுவியோரது அரிய வரலாற்று குறிப்புடன் மறைத்திரு, விபுலானந்த அடிகள் முதலிய அறிஞர் பெருமக்களின் அரிய கட்டுரைகளும் வேறு பற்பல அறிய குறிப்புக்களும் அடங்கி இருக்கின்றன. இம் மலர் காணவும் கருதவும் மிக்க இன்பம் அளிப்பதாய் உள்ளது.

செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு-உ௦] சுபானு—வைகாசி (1943) [பரல்-எ

குறிப்பு

திருநாள் விழா

நமது செந்தமிழ் நாடு பண்டைக்காலத்திலிருந்தே நுட்ப உணர்வுகள் கொழுந்தோடிப் பொலியுந் திருவருள் நாடாக விளங்கி வருகின்றது. அதனல், பிற்காலங்களில் தோன்றி வருகின்ற அறிஞர்களுக்கு, இந்நாட்டில், கூர்த்த உணர்வுகள் இயல்பாகவே விளங்கிப் பெருகிவர ஏதுவாகின்றது. இவ்வுண்மையை உற்றுநோக்குங்கால், பண்டைக்காலத்து முன்னேர் இந் நாட்டுக்குத் தத்தம் உணர்வு நுட்பங்களாற் செய்து வந்திருக்கும் பேருதவியை எங்ஙனம் மறக்கமுடிகின்றது!

ஆசிரியர் தொல்காப்பியனுர், திருவள்ளுவர், நக்கீரர், கபிலர், இளங்கோவடிகள் முதலிய சங்ககாலச் சான்றேர்கள், ஆசிரியர் திருமூலர், திருஞானசம்பந்தர், பொய்கையார், சேக்கிழார் முதலிய பிற்காலச் சான்றேர்கள் என்னும் பெருமக்களால் நமது நாடு முறைமுறையே அடைந்துவந்திருக்கும் தெளிவான வாழ்க்கையுணர்வுகள், பலராலும் போற்றி வியக்கத்தக்கன வாயிருக்கின்றன. தமிழ்மக்களின் சிறந்த உள்ளம் நன்றி மறப்ப தன்று. குற்றங்களில் மிகப்பெரிய குற்றமாக இவர்கள் கருதி அஞ்சியது, நன்றி மறப்பது ஒன்றையேயாம். முன்னைப் பெரியோர்களின் உணர்வு அழகுகளே, பிற்கால நன்மக்களாகிய தமக்கு மூலவைப்புக்கள் என்று உண்மையாக அறிந்துகொள்வோர் எவரும், ஒரு தினையளவாயினும் எஞ்ஞான்றும் நன்றி மறந்து ஒழுகுவாரல்லர்.

ஆசிரியர் திருவள்ளுவரது திருநாளும் ஆசிரியர் சேக்கிழாரது திருநாளும் இத் திங்களில் நமது நாட்டில் அங்கங்குங் கொண்டாடப்பெற்றிருக்கின்றன. நம்மனோர், நன்றி மறவாது பழைமை போல் ஒழுகிய இச்செயல் பெரிதும் போற்றற்பாலதாகும். நாட்டில் இவ்வுணர்ச்சி எவ்வளவுக்கெவ்வளவு தழைத்து மிகுமோ, அவ்வளவுக்கவ்வளவு கனிந்த பெருவாழ்வும் இங்கே பெருகிவரும் என்று உறுதியாகத் துணிந்து கூறலாம். மக்களின் நல்வாழ்க்கையாகிய செழும்பயிர்க்கு இந் நன்றிக் கொண்டாட்டங்களே கொழுவிய வித்துக்களாகும். நாகரிக மிக்க நாடுகளில் நிகழும் ஊன்றிய செயல்கள் பலவற்றையும் உற்று நோக்கினால், அவரவரும் தத்தம் முன்னோர்களைப் போற்றிக் கொண்டு வாழ்வு பெருக்கும் முறைமைகளே மிகுந்து காணப் படுகின்றன.

இங்ஙனம் நன்றி பாராட்டுதல் என்பது பலவகையான பிரிவுகளில் நிகழ்ந்து செல்லலாம். திருநாள் விழா நிகழ்த்துதல், முன்னோர் உணர்வு நலங்களைத் தொடர்ந்த எழுத்துக்களாலும், பேச்சுக்களாலும், உந்தும் நினைவுகளாலும் யாண்டும் பரவச் செய்தல், அவர்கள் நூல்களையும் செயல்களையும் பற்பல வகையாகப் புதுப்புது முறைகளில் உலகவர் உள்ளங் கவரத்தக்கவாறு வெளியிட்டு வழங்குதல் முதலியன அம் முறைகளுள் சில வாகும். செய்யவேண்டிய பெருங்கடமைகளை நோக்கினால் இப்போது செய்துவரும் நற்செயல்கள் இன்னும் எத்தனையோ மடங்கு பெருகவேண்டும் என்பது தோன்றுமற் போகாது. நாட்டின் செல்வம், நன்றிமறவாத இவ்வுணர் வழுக்கன்றோ பெரிதும் செலவாதல் வேண்டும்!

திருவள்ளுவர், சேக்கிழார் முதலிய நஞ் செந்தமிழ்ச் சான்றோர்களின் தெய்வத் திருநாளை இத் திங்களிற் கொண்டாடி உணர்வு பெருக்கிய கழகங்கட்கும், அவைகளின், அன்பர் கட்கும் எமது வாழ்த்து உரியதாகுக! தமிழ்நாடு மேன்மேலும் வதாக!

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் ; உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு" —திருக்குறள்.

இ. அ.

திருவென்னும் சொல் தென்சொல்லே

[ஞா. தேவநேயன்]

மருவ லர்கொள மன்பொரு ளற்றபன்
மரபி னுருளர் மைந்திலர் வாயிரு
திருவி ழந்தபின் திருவெனுஞ் சொல்லையு
மொருவ நின்றவன் தமிழ னொருவனே!

மிகமிகச் சிறுபான்மையரான வடமொழியாளர் பன்னூற்றுக் கணக்கான தென்மொழிச் சொற்களை வடமொழியில் திரித்துக் கொண்டது மன்றி, சொல்லாராய்ச்சியும் கலைமுறை யறிவும் மிக்க இவ்விருபதாம் நூற்றாண்டிலும் அவற்றை வடசொற்களே யென்று வலிப்பதும் வடசொல் வடிவங்களையே தமிழ் நாட்டில் வழங்க நெஞ்சழுத்தங் கொள்வதும் விந்தையினும் விந்தையே!

திருவென்னுஞ் சொல் ஆரியரான வடமொழியாளர் நாவலந் தேயத்திற்கு வருமுன்னரே தமிழகத்தில் வழங்கி வந்த தமிழ்ச் சொல் லென்பதற்கு, தொன்முது சார்பு நூலான தொல்காப்பியத்திலேயே அது ஆட்சி பெற்றிருப்பதும் மேலை யாரியமொழிகளுள் ஒன்றிலேனும் அது எவ்வடிவினும் காணப்படாமையும், அதன் வேர்ப்பொருள் வடமொழியிலில் லாது தமிழிலேயே யிருப்பதும் போதிய சான்றுகளாம்.

திருவென்னுஞ் சொல் தமிழில், 1. செல்வம், 2. திருமகள், 3. சிறப்பு, 4. அழகு, 5. காந்தி, 6. பொலிவு, 7. பேறு (பாக்கியம்), 8. தூய்மை அல்லது தெய்வத்தன்மை, 9. நல்வினை, 10. கணியன் (சோதிடங் கூறுவோன்), 11. மாங்கலியம், 12. பழைய தலையணி வகை, 13. மகளிர் கொங்கைமேல் தோன்றும் வீற்றுத்தெய்வம், 14. தூய்மை அல்லது பெருமை குறிக்கும் அடைமொழி முதலிய பல பொருள்களில் தொன்றுதொட்டு வழங்கி வருகின்றது; அழகு என்னும் பொருளில் 'திருமை' எனப் பண்புப் பெயர் விகுதி பெற்றும், செல்வம் பெருமை தூய்மை முதலிய பொருள்களில் 'திருவம்' என அம்மீறு பெற்றும், அக் குணங்களைக் குறித்துத் திருவன் திருவாளன் திருவாட்டி திருவத்தவர், திருவினள் என உயர்திணைப்பெயராகியும் வழங்கியிருக்கின்றது. 'ஸ்ரீ' என்னும் அதன் வடசொல் வடிவமோ கடைக்கழகத்திற்குப்

பிற்காலத்ததாய், அதுவும் உரை நூல்களில், 1. செல்வம், 2. திருமகள், 3. பேறு, 4. அழகு, 5. தூய்மை யடைமொழி என்னும் ஐம்பொருள்களிலே வடமொழியாளர் தொடங்கிவிட, அவராலும் மொழிநூலறிவும் தாய் மொழிப் பற்றும் அற்ற தமிழ ராலும் வழங்கப்பட்டு வந்திருக்கின்றது. 'ஸ்ரீ' என்பதிலுள்ள ஸகரம் தமிழ்ச் சகரத்தை யொத்த ஒலியினதா யிருப்பது கவனிக்கத்தக்கது.

திருவென்னுஞ் சொல்லுக்கு மேற்கூறப்பட்டுள்ள பொருள் களுள், செல்வம் அழகு தூய்மை யென்னு மூன்றே முக்கியமும் பிறவற்றுக்கு அடிப்படையுமாகும். அம் மூன்றனுள்ளும், செல் வம் என்பதே முதலதாகும்.

செல்வத்தினால் ஒருவர் சிறக்கவுண்டு இன்பமாய் வாழ்வ தால் உடல் மொழுமொழுவென அழகு பெறுகின்றது; வறுமை யினால் வயிறு காய்ந்து மனங்கவன்று வெயிலில் வாடி மேனி கெடுகின்றது. இதனாலேயே, செல்வமுள்ள இனத்தாரை வெள் ளொக்க லென்றும் வறுமையுற்ற இனத்தாரைக் காரொக்க லென்றுங் கூறினர் நம் முன்னோர். செல்வ மிகுதியினால் ஒருவர்க் குப் பெருமையும் தெய்வத்தன்மையும் உண்டாகின்றது; உல கிற் செல்வமிக்க அரசன் தெய்வத் தன்மையுடையவனாகக் கருதப்படுகின்றான். கடவுள் உலகெலாமுடைய செல்வர். அள விறந்த மதிப்பே தெய்வ வணக்கமாகும். மதிப்பு செல்வத்தால் வருவது. அறிவும் ஒரு வகைச் செல்வமே. தெய்வத் தன்மை யுள்ள விடமெல்லாம் தூய்மை கருதப்படும்.

ஆழ்ந்து நோக்கின், திருவென்னுஞ் சொல்லுக்குரிய பொருள்களெல்லாம் மேற்கூறிய மூன்றனுள் அடங்கும்; நோக் கிக் காண்க.

திருவென்னுஞ்சொல் இப்போதுள்ளபடி முதன் முதலா கத் தொல்காப்பியத்தில்,

"பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டோ
டுருவு நிறுத்த காம வாயில்
நிறையே அருளே உணர்வொடு திருவென
முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே"

(மெய்ப்பாட்டியல், 25)

என்னும் நூற்பாவில், செல்வம் என்னும் பொருளிலேயே வழங்கப்பட்டுள்ளது. பின்னர், திருக்குறளில்,

" அழுக்கா றெனவொரு பாவி திருச் செற்றுத்
தீயுழி யுய்த்து விடும் "
" அறனறிந்து வொல்கா வறிவுடையார்ச் சேருந்
திறனறிந் தாங்கே திரு "
" ஊருணி நீர்நிறைந் தற்றே யுலகவாம்
பேரறி வாளன் திரு "
" இருவே றுலகத் தியற்கை திரு வேறு
தெள்ளிய ராதலும் வேறு "
" நல்லார்கட் பட்ட வறுமையி னின்னாதே
கல்லார்கட் பட்ட திரு "
" வினைக்கண் வினையுடையான் கேண்மைவே றாக
நினைப்பானை நீங்குந் திரு "
" இனத்தாற்றி யெண்ணாத வேந்தன் சினத்தாற்றிச்
சீறிற் சிறுகுந் திரு "
" முயற்சி திருவினை யாக்கு முயற்றின்மை
யின்மை புகுத்தி விடும் "
" இருமனப் பெண்டிருங் கள்ளுங் கவறுந்
திருநீக்கப் பட்டார் தொடர்பு "
" கருமணியிற் பாவாய்நீ போதாயாம் வீழுந்
திருநுதற் கில்லை யிடம் "

எனச் செல்வம் (செல்வத்திற்குத் தலைவியான) திருமகள் அழகு என்னும் முப்பொருள்களில் வழங்கியுள்ளது; பிற பொருள்களில் பிற நூல்களில் வழங்கியுள்ளது.

இனி, இருவகை வழக்கிலும், தேவியல் மகவியல் என்னும் இருவகைச் சார்பில், திரு என்னும் சொல் தூய்மை செல்வம் அழகு மங்கலம் கண்ணியம் என்னும் பொருள்களுள் ஒன்றில் அடைமொழியாகத் தொன்றுதொட்டு வழங்கி வருவதைப் பின் வருங் காட்டுக்களாலறிக.

1. தேவியல்

(க) தெய்வம்: திருமகன், திருமகள், திருமால், திருமடந்தை.

நூல்: திருக்கடைக்காப்பு, திருக்குறள், திருக்குறுந்தாண்டகம், திருக்கோவை, திருநெடுந்தாண்டகம், திருப்பதிகம், திருப்

பல்லாண்டு, திருப்பாட்டு, திருப்பாவை, திருப்புகழ், திருமந்திரம், திருமுறை, திருமொழி, திருவகுப்பு, திருவாசகம், திருவாய்மொழி, திருவெழுத்து.

ஊண்: திருக்கன்னலமுது, திருப்படிமாற்று, திருமதுரம், திருமாலை வடை, திருவமுது.

அணி: திருச்சுண்ணம், திருநீறு, திருப்பட்டம், திருப்பாவாடை, திருமண், திருவாத்தி.

பொருள்: திருச்சின்னம், திருமரம், திருமலர், திருமுட்டு, திருமுளைப்பாலிகை, திருவலகு, திருவாசிகை, திருவாடுதண்டு, திருவிளக்கு.

இடம்: திருச்செந்தூர், திருநகர், திருநாடு, திருநெல்வேலி, திருப்பதி, திருமலை, திருவரங்கம், திருவிதாங்கூர், திருவேங்கடம், திருக்கண், திருக்களிற்றுப்படி, திருக்கற்றளி, திருச்சுற்று, திருப்பாற்கடல், திருமடம், திருமாளிகை, திருமுற்றம், திருமுன், திருவுண்ணாழிகை, திருவோலக்கம்.

காலம்: திருநாள், திருவாதிரை, திருவோணம்.

சினை: திருக்கண் (சாத்துதல்), திருச்செவி, திருமுடி, திருமேனி, திருவடி, திருவாய் (மலர்தல்), திருவுள்ளம்.

குணம்: திருக்குறிப்பு, திருவருள், திருக்கோலம்.

தொழில்: திருக்கலியாணம், திருக்கார்த்திகை, திருவிழா, திருவூறல், திருக்காப்பு, திருக்கூத்து, திருத்தொண்டு, திருப்பணி, திருப்பள்ளி, திருமுழுக்கு, திருவிளையாடல்.

(உ) **அடியார்:** திருக்கூட்டம், திருச்சிற்று, திருத்தக்கதேவர், திருத்தொண்டர், திருமூலர், திருவடிமார், திருவள்ளுவர், திருவோடு.

2. மகவியல்

(க) **வேந்தியல்:** திருமடு, திருமுகம், திருமுத்து, திருமூப்பு, திருமந்திரம், திருவாணை, திருவாய்க் கேள்வி, திருவோலை.

(உ) **பொதுவியல்:** திருநிலைக்கால், திருநிலைமகளிர், திருப்பூட்டு, திருமகன், திருமகள், திருமங்கிலியம், திருமணம், திருவாங்குதல், திருவில், திருவினை, திருவழுத்து (அணி).

இவற்றுள், திருநெல்வேலி, திருவரங்கம் முதலிய இடப் பெயர்கள் தொன்று தொட்டு உலகவழக்கில் திருவென்னும் அடைபெற்றே வழங்குவதையும், ஸ்ரீரங்கம் என்னும் வடிவம் இருவகை வழக்கிலும் பிற்காலத்த தாதலையும் நோக்குக. இதனால், திருவில்லிபுத்தூர் என்பதே ஸ்ரீ வில்லிபுத்தூர் என்பதன் பண்டை வடிவமும் என அறிக.

திருமகன் என்னும் பெயர் திருமான் என மருவிச் செல் வம் அல்லது பெருமை குறிக்கும் அடைமொழியாகும். பெரு மகன் என்னும் பெயர் பெருமான் என மருவுதல் காண்க. திரு என்பதை ஸ்ரீ என்று திரித்ததனால், திருமான் என்னும் அடையை ஸ்ரீமான் என்று திரிப்பர் வடமொழியாளர். அதனுள், மான் என்னும் ஈற்றை 'மத்' என மற்றும் திரித்து, 'ஸ்ரீமத்', 'ஸ்ரீமதி' என்பவற்றை முறையே ஆண்பால் பெண்பாலடை மொழிகளாக முழு வடவடிவில் வழங்குவர். திருமகன் திருமான் என்னும் ஆண்பாற் சொற்கட்குத் திருமகள் திருமாட்டி என் பவை தமிழில் முறையே பெண்பாலாகும். பெருமான் என்னும் ஆண்பாற் சொற்குப் பெருமாட்டி என்பது பெண்பாலாதல் காண்க. ஸ்ரீ என்னும் வடசொல் வடிவைத் தமிழில் சி எனச் சிதைத்துத் திருமான் திருமாட்டி என்பவற்றைச் சீமான் சீமாட்டியென எழுதுவது, கோழிக்கோடு என்பதை Calicut என்னும் ஆங்கிலவடிவு வாயிலாய்க் கள்ளிக்கோட்டை யென்றெழுதுவதும் காளிக்கோட்டம் என்பதை Calcutta என்னும் ஆங்கில வடிவு வாயிலாய்க் கல்கத்தா என்றெழுதுவதும் போன்ற அறியாமையேயாகும். இதனால், சீகாளத்தி என்னும் வடிவினும் திருக்காளத்தி என்னும் வடிவே தக்கதாகும் என அறிக.

இனி, திருவென்னுஞ் சொல்லையன்றிச் சிறுவென்னுஞ் சொல்லையும் ஸ்ரீ எனத் திரித்துள்ளனர் வடமொழியாளர். பெண் டிர்க்குச் சொந்தமாகவுள்ள சிறு செல்வத்திற்கு அல்லது செல் வத்திற்குச் 'சிறுபாடு' என்றும், 'சிறுதனம்' என்றும் பெயர்.

"சிறுதனந் தேடுவள்" (தண்டலை, 95). வீட்டுச் செலவில் மீத்துவைக்கும் சிறு தொகைக்குச் 'சில்வானம்' என்று பெயர்.

'சிறு தனம்' என்பது பிற்காலத்தில் தனி வேற்று (Private) நிதி எனப் பொருப்படவும் பொருள் பெற்றது.

> "உடையார்ஸ்ரீ ராஜராஜ தேவர் சிறுதனத்துக்
> கொடுத்த" (S. I. I. ii, 3).

சிறுதனம் என்பது ஸ்ரீதனம், சிதனம் எனத் தவறாய் வழங்குகின்றது.

ஸ்ரீ என்பதைத் திருவென்றும், ஸ்ரீலஸ்ரீ என்பதைத் திருப் பெருந்திரு அல்லது திருமிகுதிரு என்றும், மகாராஜராஜஸ்ரீ என்பதை மக வரச வரசத்திரு அல்லது மாவரச வரசத்திரு என்றும், ராஜஸ்ரீ என்பதை அரசத்திரு என்றும் தமிழில் வழங்க வேண்டும். ம. ா (ரா). ா (ரா). ஸ்ரீ என்னும் முகவரியடையில், ஸ்ரீ என்பது தவிர மற்ற மூவெழுத்துக்களும் தமிழ்ச்சொற்களின் முதலெழுத்துக்களாயே யிருத்தலைக் காண்க. இதனால், ஸ்ரீ என்பது பின்னை வடிவ மென்பதை யோர்க.

சிர்காழி என்பதன் முதல் வடிவம் சிகாழி என்பர். சீர் என்னுஞ் சொல் செந்தமிழாயிருத்தலின், சீர்காழி யென்றே வழங்குவது நல்லது. இதற்கிசையாதார் திருக்காழி யென்றே வழங்குதல் வேண்டும்.

இனி, திருவென்னுந் தமிழ்ச் சொற்கு வேர்ப் பொருள் என்னையோவெனிற் கூறுவேன் :—

திருவென்பது தில் என்னும் வேரடியாய்ப் பிறந்து திரட்டப் படுவது அல்லது ஈட்டப்படுவது என்னும் பொருளது. ஒப்பு நோக்க : தேட்டு (தேடப்படுவது) = செல்வம்.

தில் > திர் > திரள் > திரளை > திரணை.

தில் > திர் > திரு.

தில் > திர் > திரம் > திறம் > திறன் > திறல்.

தில் > திள் > திட்டு > திட்டை > திறம் > திறமை.

திள் > திண் > திண்ணை > திணை.

திண் > திண்ணம்.

திண் > திண்டு.

திட்டு > திட்டம் > திடம்.

திட்டு > திட்டல் > திடல்.

தில்லு முல்லு > திண்டு முண்டு.

தில் என்னும் வேர் முறையே திரட்சி, கட்டி, மேடு, என்னும் பொருள்களையும் திரட்சிப் பொருளினின்று உறுதி, குழு, குலம், வலிமை, அணை (மெத்தை) முதலிய பொருள்களை யும் தருதலை மேற்காட்டிய திரிசொற்களாற் (Derivatives) காண்க. இனி, தில் என்னும் வேர்க்கும் மூலவேர் ஒன்றுளது. அதை இங்கு விரிப்பிற் பெருகும்; சுருக்கின் விளங்காது. அதன் விளக்கத்தை எனது மொழி நூலின் முதன் மடல் இரண்டாம் பாகத்திற் கண்டுகொள்க.

இதுகாறும் கூறியவற்றால், திரு என்பது தென் சொல்லே யென்றும், அதுவே வடமொழியில் ஸ்ரீ எனத் திரிக்கப்பட்டுள்ள தென்றும் தெள்ளத் தெளிய அறிக. ஸ்ரீ என்பதே செவிக் கினிய தென்று வடமொழியாளரின் அடியார் சிலர் கூறு வாராயின்,

"——நேர்நின்று
காக்கை வெளிதென்பார் என்சொலார் தாய்க்கொலை
சால்புடைத் தென்பாரு முண்டு"

எனக் கூறி விடுக்க.

யாழ் இசை

கரும்பிலே யினிய வோசை
　　காதிலே யோடி யோடி
யிரும்பிலே வலிய நெஞ்சை
　　யிளக்கிவிட் டின்பங் காட்டி
வரம்பிலா வுவகை பொங்க
　　வாரியிட் டெமைவி ழுங்கும்
நரம்பிலே கேட்ட கீதம்
　　நாங்கண்ட தில்லை யம்மா! (1)

இயலிசை தமிழர் செல்வம்
　　எழிற்கலை யாவுஞ் சொந்தம்
அயலதொன் றில்லை யென்பார்
　　அமுதுகு நரம்பின் நல்யாழ்
குயில்வகேட் டின்பம் மாந்திக்
　　கொண்டுதேக் கெறிந்த ஞானச்
செயலினர் தெய்வங் கண்ட
　　திறத்தினர் யாங்க ளன்றே! (2)

—கிளிக்காட்டு - இறையோலியன்.

அமெரிக்க நாட்டு ஆங்கிலக் கவிஞர்

[வித்துவான் மு. இராசாக்கண்ணனார் B. O. L.]

புலமை யாண்டும் ஒரு நிலையினதே என்பதைக் கண்ட நாம் இனி அமெரிக்க வரலாற்றில் கருத்தூன்றுவோம்.

இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் பின்னாக வாழ்ந்த தமிழ் மக்கள் கலம் கொண்டு கடல்கடந்து வாணிகத்தில் சிறக்க வாழ்ந்தனர் என்பதனை அறிவோம். கிரேக்க ரோம் நாட்டுத் தொடர்புடன் மேலோங்கிய வாணிகத் தொடர்பைப் பெற்ற நம்முன்னோர் பல்வகை இன்னலால் அவ்வுயர்வினை மெல்ல இழந்தனர். மார்க்கஸ் அரீலியஸ் என்ற உரோம நாட்டுப் பெருமன்னன் தென்னாட்டுத் துணிவகை தன்னாட்டு வருதலாகாது எனத் தடுத்தான்; தடுத்தமைக்குக் காரணம் துகிலின் மேன்மையும், அம் மேன்மை மக்களை இன்பத் துறையில் எளியராம் தன்மையை புண்டாக்கினமையும் எனின் தமிழ் மக்கள் தம் பண்டைய வாணிபச் சிறப்பினையும் எண்ணுதற் குரியவரே.

பதினைந்தாம் நூற்றாண்டில் மேலைநாட்டு அறிவுடை மக்களிடம் வாணிகப் பரபரப்பைக் காண்கின்றோம். அவர்கள் கண்ணும் கருத்தும் கீழ்நோக்கம் பெற்றன. கீழை நாட்டுச் செல்வத்தை மேலை நாட்டுச் செல்வமாக நாட்டும் நாட்டமே அந் நாட்டாரிடம் நாட்டம் பெற்றது. அவர்கள் மத்தியதரைக் கடல்வழி வாணிகம் செய்யத் தொடங்கினர். அங்ஙனம் அவர்கள் வருங்கால் துருக்கி நாட்டு வழி அவர்கள் வழிக்கிடந்தமையால் துருக்கியரின் அன்பற்ற மறச் செயலுக்கு உட்படவேண்டியவர்களானார்கள். கொடுஞ் செயல், கொள்ளைச் செயலாகவே, அவ்வழி பெரிதும் பிழை தருவதாயிற்று. ஆகவே, வேறு வழியாகக் கீழ்நாட்டிற்கு வர முயன்றனர். அம் முயற்சியே பெருநாடாகும் அமெரிக்காவினைக் கண்டு பிடித்தற்குத் துணை ஆயிற்று.

1492-ம் ஆண்டில், ஸ்பெயின் நாடு, கிறித்தவர் கொலம்பஸ் என்பாரை அவர்தம் வேண்டுகோளுக்கிணங்கி இந்தியாவுக்குப் புது வழி கண்டுபிடிக்க அனுப்பிற்று. அந்நாளில் கீழை நாடுகளாகிய சீனா, ஜப்பான், இந்தியா எனும் நாடுகளை எல்லாம்

இந்தீஸ் (Indies) என்னும் பொதுப் பெயரால் ஐரோப்பிய நாட்டினர் அழைத்து வந்தனர்.

வழிகாண வந்த கொலம்பஸ் பலநாள் பலவகை அல்லலுற்று உயிரையும் இழக்கும் நிலையை அடைந்து ஒருவாறு மேற்கிந்தியத் தீவுகள் (West Indies) என வழங்கும் தீவுக் கூட்டத்தைக் கண்டுபிடித்தனர். ஆனால் உலக மக்கள் எல்லோரும் வாய்பிளந்து நோக்கத்தக்க செல்வச் சிறப்புற்ற அளகையம்பதியான அரசிருக்கையாகும் அமெரிக்காவின் அருகுவரைத் தாம் சென்ற உண்மையை அறியாமலே உயிர் துறந்தனர்.

பின்னர்ப் போர்த்துக்கேசிய அரசியல் ஊழியன் அமெரிக்கோ * வெஸ்பூச்சி எனும் இதாலிய நாட்டுப் பிறந்தோன் அமெரிக்காவின் தென்பகுதியினைக் கண்டு தன்பெயரால் அமெரிக்கா என அழைத்தான். அப் பெயரே அப் பெரிய பூ உலகத்திற்குப் பெயராய் அமைந்தது. மற்றொரு போர்த்துக்கேசிய கப்பலோட்டி நன்னம்பிக்கை முனையைச் (Cape of Good Hope) சுற்றி இந்திய நாட்டிற்கு வழி கண்டான். பாய்மரக் கலத்தில் நீண்ட தொலை வருதல் மிகுந்த தொல்லை தருவதாக இருந்தது!

கண்டுபிடிக்கப்பட்ட புது உலகில் விரைந்து வெண்ணிற மக்கள் குடியேறத் தொடங்கினர். அந்நாட்டுப் பழங்குடி மக்களுக்கு இப் புதுவகைப் பெருமக்களால் துன்பம் பெருகிற்று. ஸ்பெயின் நாட்டார் மெக்சிகோவிலும், ஸ்வீடன் நாட்டினர் டலாவேர் ஆற்று மருங்கிலும், டச்சுக்காரர் ஹட்சன் ஆற்றுக் கரையிலும், பிரெஞ்சு நாட்டு மக்கள் செயிண்டு லாரென்ஸ் பகுதியிலும், ஆங்கிலேயர் வட அமெரிக்காவின் கிழக்குக் கடலோரத்திலும் குடியேறித் தத்தம் அரசியலுக்கு ஆக்கம் தேடும் ஊக்கம் மிகுந்தனர்.

குடியேறிகள் ஊழியம் செய்வோராக நீக்கிரோவரை ஆக்கிக் கொண்டனர். கருநிற அடிமைகளால் நிலங்கள் திருந்தின; பண்ணைகள் பருத்தன; பயிர் செழித்தது; செல்வம் சிறந்தது; செல்வாக்கு உயர்ந்தது.

---

* **Americo Vespucci.**

அமெரிக்க நாட்டில் பெருந்தொகையினராகக் குடியேறியோர் ஆங்கிலேயராவார். அவ்வாறு குடியேறுவானேன்? இங்கிலாந்தினர் [1]தோதர் மன்னன் எட்டாம் ஹென்றி வரை பழஞ் சமயமாகும் கத்தோலிக் சார்பில் இருந்தனர். அச் சமயத்தின் தலைவர் உரோம நகரத்து வாழும் போப் ஆண்டவராவர். அவர், ஹென்றி மன்னரின் விருப்பப்படி மனைவி மற்றொருத்தியை மணக்க விடவில்லையாகவே சமயத் தலைமையையும் அரசியற்றலைவராகிய மன்னர் ஏற்றார். அக்காலத்தில் ஐரோப்பா கண்டத்தில் [2]மார்டின் லூதர் என்பவர் தலைமையில் சமயப் புரட்சி வலுத்துக் கிளைத்துப் பரவலாயிற்று. அதன் முடிவே மறுப்புச் சமயம் (Protestantism) ஆகும். இதன் வழிப் பல கிளைகள் தோன்றலாயின. ஒரு சாரார்-தூய சமயத்தினர் (Puritans) இங்கிலாந்தில் நிலைத்தனர். இவர்தமக்கு அரசியல் சமயப் போக்கு உடன்பாடாகா தொழிந்தது; அன்றியும் கத்தோலிக் சமயத்தினருக்கும் இத் தொல்லை விளைந்தது. இவர்கள் எலிசபெத் அரசியின் காலத்திலும் அடுத்துவந்த மற்றைய மன்னர் அரசியர் காளிலும் துன்பச்சூழலுட் புகவேண்டியவரானார்கள். தாம் கருத்துற எண்ணும் கடவுளை வாயார வாழ்த்தி உளம் மகிழ வழிபடும் நல்வினை தங்கட்கில்லை என்பதை அறிந்த இவர்கள் உள்ளம் முடித்து வெளிப்படையாக உள்ளம் கனியக், கவலையற்றுக் கடவுளை வழுத்தும் இடம் காடாயினும் அங்கேயே செல்ல வேண்டும் என்று கருதியவர்களாய்க் கலங்களில் சென்று அமெரிக்காவினை அடைந்தனர். இவர் போன்றார் தொகை நாடோறும் மிகமிகப், புதுக்கண்டம் பொலிவு பெறலாயிற்று.

18-ம் நூற்றாண்டில், பற்றுள்ளம் கொண்ட [3]மூன்றாம் ஜார்ஜ் மன்னருக்கும் ஆங்கிலேய அமெரிக்கருக்கும் நடந்த சில ஏற்பாடுகளால் உண்டாகிய குழப்பம் அமெரிக்க ஐக்கிய மாகாணத்திற்குத் தனித்த அரசியல் பெருமையைத் தந்து இங்கிலாந்தினையும் அங்ஙனம் மதிக்குமாறு செய்தது.

இதுவரை கூறிவந்ததிலிருந்து அமெரிக்காவின் பழைய வரலாற்றினைச் சிறிது அறிந்தோம். இனி மேற்கொண்ட புலவர் வாழ்க்கை வரலாற்றை நோக்குவாம்.

1. Tudor King. 2. Martin Luther. 3. George III.

ஐக்கிய மாகாணத்தின் தென் பகுதியில் குடியேறிய மக்கள் அப் பகுதிக்குத் தம் பிறப்பு நாடாகிய இங்கிலாந்தின் நினைவு பற்றிப் [1]புது இங்கிலாந்து எனப் பெயரிட்டனர். இப்பகுதி கீழ்க் கடற்கரைச் சார்பில் உள்ளது. இப் பகுதியில் சிறந்த துறை முகம் [2]போர்த்லந்து என்பது. நம் புலவர் பெருமான், இப் புது இங்கிலாந்தில் போர்த்லந்தில் வாழ்ந்த ஸ்டீபன் லாங்பெல்லோ (Stephen Longfellow) எனும் வழக்கறிஞருக்கும் சில்பா (Silpah) எனும் அவர்தம் இல்லறக் கிழத்தியாருக்கும் 1807-ம் ஆண்டு பிப்ருவரித் திங்கள் 7-ம் நாளில் பிறந்தனர். இவர்தம் திருப்பெயர் ஹென்றி வாட்ஸ்வொர்த் லாங்பெல்லோ (Henry Wadsworth Longfellow) என்பதாகும்.

புலவரின் தந்தையார் வழக்கறிஞர் தொழிலில் பெருமை எய்தியவர். 19-ம் நூற்றுண்டின் தொடக்கம் வழக்கறிஞருக்குச் சிறந்த செல்வாக்கினைத் தந்துகொண்டிருந்தது. செல்வச் சிறப் பில்லையாயினும் தொழிற் சிறப்பால் மாபெருமை அடைந்திருந் தனர் ஸ்டீபன் அவர்கள்; மக்களிடைப் பெருமதிப்பு இவ ருக்கு இருந்தது. இத்தகைய தந்தையைப் பெற்ற தக்க மகனுராகிய நம் புலவர் இளமையிலேயே பிறர் கூர்ந்து நோக்கும் ஆக்கமும் தகுதியும் பெற்றிருந்தார் என்றல் மிகை அன்று.

திரு லாங்பெல்லோ அவர்கள் தம் மிக்க இளமைக் காலத்தி லேயே பாக்களை யாத்து மகிழ்ந்தார்; அவற்றைச் செய்தித்தாள் களுக்கும் அனுப்பினுர். ஒவ்வொரு பாட்டிற்கும் ஒரு டாலர் பெற்றுர் என்று சொல்லப்பட்டிருக்கிறது. போர்த்லந்திலிருந்து திங்கள்தோறும் வெளிப்போந்த செய்தித்தாளிலும் அமெரிக்கக் கெஜட்டிலும் (American Gazeteer) இவர் செய்யுட்கள் பொலி வுற்றன. 'தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டில்' எனும் நந் தம் மூதுரைக்கிணங்கப், பிறந்து மொழிபயின்ற காலந் தொட்டே செய்யுள் தொடுத்தலில் சீர்பெற்ற புலவர், வாழ்க்கை யின் குறிக்கோளாக அதனையே கைக்கொண்டு ஆங்கிலேயமும் பிறமொழியும் கற்றுேர் போற்றும் ஆங்கிலக் கவிஞர் ஆயது வியப்பில்லை போலும்;

---

1. New England, 2. Portland.

பதினேந்தாம் ஆண்டுகள்வரைச் சில சிறு பள்ளிகளில் படித்த லாங் அவர்கள், பௌடின் கல்லூரியில் சேர்ந்து 1825-ம் ஆண்டில் (தம் பதினெட்டாம் ஆண்டில்) பட்டம் பெற்ருர். இவருடன் ஒருசாலை மாணவர்களாகக் கல்லூரியில் கற்ற பலர் பிற்கால வாழ்க்கையில் பெருமை பெற்றோராவர். வரலாற்றறிஞர் (Historian) அபட் (Abbot), அமெரிக்க ஐக்கிய மாகாணத் தலைவர் பிராங்கிலின் (Franklin Pierce), மாபெரும் புலவர் ஆத்தார்ன் (Nathaniel Hawthorn) ஆகியோர் ஒருசாலை உறவினர்.

லாங்பெல்லோ அவர்களின் கல்லூரிக்காலம் எத்தகைத்து என்பதைச் சிறிது நோக்குவாம். அமெரிக்கர் ஆங்கிலேயத்தைத் தம் தாய் மொழியாகக் கொண்டவர். அம் மொழிப் பயிற்சி ஒன்றே சாலும் என்ற கொள்கையைக் கொண்டிருந்தனர். மேலும், வேற்று மொழிக் கருத்தும் விரவப் பெருது நின்றனர். 19-ம் நூற்றுண்டின் தொடக்கம் வேறு சில புரட்சிகளைக் குடியேறிய மக்களின் உள்ளத்தில் குடியேறும் வண்ணம் செய்தது. ஆங்கிலமே அன்றி ஸ்பெயின், பிரெஞ்சு, ஜெர்மன், லத்தின், கிரிக் முதலிய ஐரோப்பிய மொழிகளையும் அவற்றில் பொதிந்துள்ள கருத்துக்களையும் அறிந்துகொள்ள வேண்டும் என்ற அவா அறிவுடை மக்களிடை எழுந்தது. இவ் வெண்ணத்தை வலியுறுத்திப் பலர் பேசத்தொடங்கினர். இதன் முடிந்த பயனுக ஹார்வார்டு கல்லூரியில் (Harvard College) ஸ்மித் பிரொபசர்சிப் (Smith Professorship) என்பது நிலை நாட்டப்பட்டது. பன்மொழிப் புலவராகிய சார்ச் டிக்னர் (George Tickner) என்பவர் அதற்குரியவராக்கப்பட்டார்.

பௌடின் கல்லூரியினரும் ஹார்வார்டு கல்லூரியினரைப் பின்பற்றக் கருதிப் பன்மொழிப் பயிற்சிக் களத்தை உண்டாக்கி அதனை எவர் கையில் ஒப்புவிப்பதென்று சிந்தித்தனர்,

நம் அறிஞர் லாங் அவர்களை அவர்தம் தாதையார் வழக்கறிஞராக ஆக்கக் கருதினர். கல்விக் கடல் புகுந்து கருத்து மணிகளைத் தொடுத்து இன்பமாலையை அணிந்து மகிழ விரும்பியது மகன் உள்ளம். இத் தனிமக னுள்ளத்தே தலைசிறந்த

புலமைக் கரு உளது என்பதைப் பௌடின் ஆட்சியாளர் கண்டு இவரைப் பன்மொழிப் புலமை ஏற்குமாறு கேட்டனர். உடன், 'ஆம்' என்று உடன்பாட்டினை அறிவியாது, ஐரோப்பா சென்று குறைந்த அளவாகும் மூன்றாண்டிலேனும் தக்க மொழி பலவற்றின் பயிற்சியைப் பெற்று வந்த பின்னரே ஏற்றுக் கொள் வதாக உறுதி கூறி 1826-ம் ஆண்டில் ஐரோப்பாவிற்குச் சென்றார். ஐயரீர்! தகுதி உண்டென்று பிறரால் கருதப்படும் அளவினும் தகுதியை மிகுதியாகக் கொள்ள விழைகின்ற புலவ ரின் உள்ளத்தின் தகுதி உற்று நோக்கி உணரற் குரித்தென்பது மட்டும் குறிக்கின்றேன்.

தாம் மேற்கொண்ட தலைமைப் பணியில் ஆறு ஆண்டுகள் உழைத்தனர். இடையில் 1831-ம் ஆண்டில் போர்த்லந்து நீதி மன்றத் தலைவர் உயர்திரு பேரட் பாட்டர் (Judge Barret Potter) என்பவரின் திருமிகு செல்வி மேரி ஸ்டோரர் பாட்டர் (Mary Storer Potter) என்பவரை மணம் புரிந்தனர். இருவரும் கருத்தொத்த காதலர்களாய் இல்வாழ்க்கையினை நடத்தினர்.

1835-ம் ஆண்டில் ஹார்வார்டு கல்லூரியில் பன்மொழிப் புலமை நடாத்திவந்த டிக்னர் என்பார் கல்வித் துறையில் தனித் திருந்து துய்க்க விரும்பித் தம் தொழிலை விடுத்து ஒய்வு பெற்றார். பெற்றவர் தாம் ஏற்றிருந்த பொறுப்பினை ஏற்று நடத்தும் தக்க புலவர் லாங்பெலோ ஒருவரே எனக் குறித்தார்; ஆதலினால் ஹார்வார்டு கல்லூரிப் பொறுப்பாளர் நம் புலவரை அழைத்தனர். பௌடின் கல்லூரிப் பணியினும் ஹார்வார்டு அகன்ற பரப்பினது எனப் புலவர் அறிவாரதலின் அத் தகுதியை ஏற்கும் முன் ஓராண்டு ஐரோப்பாச் சென்று தம் அறிவை விரிவு செய்து கொள் ளக் கருதிச் சென்றனர். அந்தோ! வாழ்க்கை எனப்படுவது இன்பமும் துன்பமும் கலந்ததொன்று. பூவினுள் உயர்ந்த நறுந் தாமரை தூய மணமும் அழகும் பெற்று விளங்கினும் அஃது அலர்வது, முள்ளொடு கூடிய தண்டின் மேலன்றோ? அதனா லன்றோ 'முட்டாட் டாமரை' என்றனர் புலவர் பெருந்தகை நக்கீரனார்! ஆங்கிலக் கவிஞரின் இனிய இல்வாழ்வில் முளைத்த இன்னலைக் கேண்மின்கள்!

கல்விக் கருத்துடன் ஐரோப்பாச் சென்ற அறிஞர் தம் மாட்சி சிறந்த மனைவியுடன் சென்றிருந்தனர். 1635-ம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 29-ம் நாளில் ராட்டர்டாம் (Rotterdam) எனும் இடத்தில் தம் இனிய மனைவியை இழந்தார். கலந்த கேண்மையையும் சிறந்த இல்வாழ்வினையும் ஆரத் துய்த்தோர் இருவருமாதலின் ஒருவரைப் பிரித்தல் மற்றொருவருக்குப் பொல்லாத் துயரினை விளைப்பது இயல்பே. நம் கவிஞர் கலங்கித் துயருற்றுத் தவித்தார். உலகியல் உணர்ந்த உயரியோர் அவராதலின் ஒருவாறு உள்ளத்தை அமைதியில் இருத்திக் கொண்டனர். எனினும் அவர் யாத்துள்ள பாக்களில் சிற்சில இடங்களில் மனைவியின் உணர்வு பிறிட்டெழுதலைக் காணலாம்.

'The footsteps of Angels' எனும் பாடலில் பின்வருமாறு கூறுகின்றனர். "இளைஞர் மடிந்தனர்; இறைவன் நெறி நின்றோர் இறந்தனர்; உடல் வன்மை ஒழிந்தோர் அழிந்தனர்" என்றுரைத்து வந்து "அவர்களுடன் என் இளமைக் காலத்தென்னுடன் வாழுமாறு அளிக்கப்பட்டவளும் உலகப் பொருள் பிறவற்றினும் சால என்னையே அன்பொடு காதலித்தவளும் அழகிற் சிறந்தவளும் ஆகிய அவளும் விண்ணில் இயைந்து அறிவரும் கூட்டத்துள் ஒருத்தி ஆயினள்" என்று கவன்றனர். இக் கருத்தினை ஒருவாறு பின்வரும் செய்யுள் நெறியில் கூறலாம் என எண்ணுகின்றேன்.

"அவர்களோ டென்னுளத்தை ஆழப் பிணித்தே
இவறுலாம் பல்பொருளின் ஏற்றம்—இவனுக்கே
என்றென்னைச் சார்ந்த இளங்கொடியும் விண்ணுலகில்
ஒன்றுமி ஓங்கினளோ."

(And with them the Being Beauteous
Who unto my youth was given
More than all things else to love me
And is now a saint in heaven.)

அவ்வியாண்டுச் சுற்றுச் செலவின் பின்னர் ஹார்வார்டு கல்லூரியில் பன்மொழித் தலைமை ஏற்றனர். 1839-ம் ஆண்டில் பானி எலிசபெத் அப்பல்டன் (Fanny Elizabeth Appleton)

என்னும் பெயரிய இருபானுண்டு மங்கையைக் காதலித்து மணக்க விரும்பினர். அவ்வம்மையோ தன்னினும் ஆண்டில் மிக முதிர்ந்தவர் கவிஞர் என்று கருதினமையால் முதலில் உடன்பாடு கொள்ளா தொழிந்தனர்; பின்னர் நான்காண்டுகள் சென்று கவிஞரை ஏற்றுக் கொண்டனர். இல்லறம் இனிது நடக்கத் தொடங்கிற்று.

கவிஞரின் உள்ளம், மேற்கொண்டிருந்த தொழிலில் ஊக்கம் கொள்ளாது குலேந்தது. ஏன்? நாள் முழுவதும் இடையீடின்றி மாணவர்களிடைக் காலத்தைக் கழித்து விடுவதால் எண்ணியவண்ணம் புலமை வானத்தில் திரிந்து களிக்க முடியவில்லே என்பதால்தான். மேலும் ஆசிரியத் தொழில் ஒரு சிறு தொகையினராகிய மாணவருக்கே பயன் தருவது. நீடு நிலேக்கும் ஆற்றல் மிக்க தொண்டுகளே ஆற்றுவதால் என்றும் மக்கள் பயனடைய முடியும் என்று கருதலாயினர். இறப்பு நிகழ்வு எதிர்வெனும் முக்காலத்து மக்கள் அத்துணேப் பேருக்கும் அறிவின் அழுத்தத்தைத் திருந்திய முறையில் நல்கும் செம்மைத் தொண்டாகிய செய்யுள் யாக்கும் புலமைத் தொண்டினே மேலும் மேற்கொண்டு செவ்வனே செய்தல் வேண்டும் என்ற உறுதி மிகுந்தனர்.

1854-ம் ஆண்டில், தம் 47-ம் ஆண்டில், வேலேயினின்றும் விலகி இடைவிடா நன் முயற்சியுடன் புலமைப் பயிரைச் செழிப்புடன் வனப்புடன் வளர்க்கத் தொடங்கினர்.

1861-ம் ஆண்டில் புலவர் வாழ்க்கைக் கடல் கொந்தளித்துப் பெரும்புயல் வீசி அரும்பொருளொன்றைச் சிதைத்தது. இரண்டாம் முறையாக மணந்த ஆப்பில்டன் அம்மையார் தம் மக்களின் தலேமயிரைக் காகித உறையுள் இட்டு முத்திரை இட்டுக்கொண் டிருந்தனர். மெழுகுவர்த்தி முத்திரை இடற்கு உதவிசெய்துகொண் டிருந்தது. உருகிய மெழுகு அவர்கள் ஆடையில் விழ எரிக் கடவுள் ஏற்றெழுந்தான். அனலே ஆற்ருது அம்மை அரற்றினர்; என்னுற்றதோ என அஞ்சிய அறிஞர் மனேவிமருங் கோடினர். எரியிடை நின்ற அவ்வம்மையார் துவண்டு கொழுநன்மேல் சாய்ந்தனர். புலவர் முடிந்தவரை

தீயனைத்தார். தீயோ அம்மையாரை அணைத்துக் கொண்டது. என் செய்வது! அரி என்பதும் அத் தீயின் பெயர் வரிசையில் ஒன்றன்றோ! அது அந் நங்கையாரின் உயிரினை இரை என விழுங்கி ஒழிந்தது! கவிஞரும் கனற்றுன்பம் சிறிது அடைந் தனர்; என்றாலும் தம் அன்புடை மனைவியாரை நினைந்து நைந்து கண்ணீரில் நனைந்து வெதும்பும் வண்ணம் வேகும் தீ அவரை உயிருடன் விட்டுவைத்தது. தன்னுட் கையா றெய்திய கவிஞர் சின்னாளில் பல்லாண்டு கழிந்த கிழமகன் போல் உடல் தளர்ந்தனர்! கையாற்றின் பெருமைதான் என்னே!

ஏழாண்டுகள் மாண்டன. புலவர் பெரியார் ஐரோப்பா சென்றனர். செய்தித்தாள்கள் எல்லாம் கவிஞரைச் சிறப்பித் துப் பேசின. பக்கங்கள் பலவற்றில் புலவரின் புகழ் பூத்திருந் தது. 'வருக! வருக! வருக!' என அத் தாள்கள் புலவரை வாய்விட் டழைத்தன.

இங்கிலாந்து தன் விருந்தினராகப் புலவரை வரவேற்றது. டைம்ஸ் (Times) என்றதோர் புகழ் சிறந்த நாள்தாளில் பின் வரும் செய்யுள் கனிவுடன் கவிஞரை அழைத்தது.

வருகஎம் இங்கி லாந்து வாழிடம் இதற்கே ஐயா!
பொருவறு சொல்லால் [1]சாக்சர் பொன்னவிர் புகழைப் பேசும்
அருமையோய்! அறிஞ ரேறே! அஞ்செயுள் யாக்கும் பண்போய்!
மருவரும் புதுமை பூக்க [2]வாஷிங்கட னகத்தி னின்றும்—

(Welcome to England, thou whose strains prolong
The glorious bead roll of our Saxon song;
Ambassador and Pilgrim bard in one
Fresh from thy home—the house of Washington)

இங்கிலாந்தினர் தலைகால் தெரியாது மகிழ்ந்தாடினர். எங் கும் பெருவிழா! எங்கும் விருந்து! எங்கும் புலவரின் படம்! எவர் வாயிலும் புலவரின் புலமைப் பெருமை! இவ்வாறு மகிழ்ச் சிக் கடலில் ஆழ்ந்தது ஆங்கில நாடு.

அந்நாளில் இங்கிலாந்து அரசியார் புகழ்மிகுந்த விக்டோரியா அவர்கள். அவ்வம்மையார் நம் புலவருக்கு விருந்தளித்துச் சிறப்புச்

1. Saxons. 2. Washington.

செய்தனர்! கேம்பிரிட்ச் பல்கலைக் கழகத்தார் எல். எல். டி. (L. L. D.) எனும் பட்டத்தினை அளித்தனர். கவிஞர் பெருந்தகையார் புகழ்ப் போர்வையில் தம் பண்டைத் தாய்நாடு நீங்கிப் புத்துலகத் தாய்நாடு சேர்ந்தனர்.

புலவரின் 72 வது பிறந்த நாளில் நடந்ததொரு செய்தியை நினைவூட்ட வேண்டியிருக்கின்றது. இவர் * ஊர்க்கொல்லன் எனும் தலைப்புடன் பாடிய பாடல் ஒன்றுண்டு. அதன்கண் முதலில் ஒரு [1]மரத்தைக் குறித்து அம் மரத்து நிழலில் கொல்லன் உலைக்களம் அமைந்துள்ளது என்று பாடியிருக்கின்றனர். நகராண்மைக் கழகத்தினர் சாலையினை அகலமாக்க விரும்பினர்; அவர்களின் முயற்சிக்கு இந்த மரம் தடையாக இருந்தது. தடை நீக்கும் கருத்தினராய் அவர்கள் இம் மரத்தினை வெட்டுதற்கு முற்பட்டனர். நம் புலவர் முற்பட்டுப், பாடல்பெற்ற மரம் அது என்று கூறி 'வெட்ட வேண்டா' என்று தடுத்தனர். ஆனால், நகராளும் கழகத்தாருக்கும் பாடலின் பண்புக்கும் என்ன தொடர்பிருக்கின்றது? ஆகவே, அவர்கள் தங்கள் முயற்சியை முற்றுவித்தனர். அவ்வளவில் அவர்கள் நில்லாது துண்டித்த மரத்துண்டுகளைக் கொண்டு ஒரு சாய்வு நாற்காலியைச் செய்து புலவருக்கு அளிக்குமாறு [2]பள்ளிமாணவர்களைத் தூண்ட அவர்களும் தங்கள் ஒற்றுமை உணர்வினால் ஒன்று சேர்த்த பணத்தினால் நாற்காலியைச் செய்தமைத்து அதனடியில்[2] "ஊர்க்கொல்லன்' எனும் பாடலைப்பெற்ற மரத்தால் செய்யப்பட்ட இந் நாற்காலி புலவர் பெருமான் 72-ம் ஆண்டுத் தொடக்க விழாவில் புலவருக்கு மாணவர்களால் அன்போடு அளிக்கப்படுகின்றது" என்றெழுதித் தந்தனர். பெற்ற புலவர் உள்ளம் மிக மகிழ்ந்து தாமும் சில செய்யுள்களை யாத்தனர். ஒன்றைத் தமிழில் காண்போம்.

இவ்வழ கியவரி யணையென தெனவே
  இயம்பிட அரசருள் ஒருவனோ யானே?
பவ்வம தடையென பகர்தரு முலகில்
  பண்புகள் செறிதரு மணைபெற் றவனே?

---

* The Village Blacksmith, 2. Cambridge University.
1. Chestnut tree.

இதன் பிறகு நம் புலவர் நீண்ட வாழ்க்கையைப் பெறவில்லை. முதுமைக்குரிமையாகும் நோய் அவரைப் பற்றியது. பிடித்த பிணியார் புலவரை வீட்டுலகத்திற்கு அழைத்துச் செல்லும் தூதுவர் என்றறிந்த உறவினர் புலவரைச் சூழ்ந்தனர். எவர் காக்கினும் எமன் விடுவானோ? புலவரும் தம் வாழ்நாள் குறுகுவதை அறிந்தனர்; அறிந்தவாறே தாம் இறுதியாகப் பாடிய பாடலில் வெளிப்படுத்துகின்றார்.

Ultima Thule! Utmost isle
Here in thy harbours for a while
We lower our sails, awhile we rest
From the unending endless guest.

"அல்தி மாதியூலே! முடிந்த இடத்து விளங்கும் தீவே! நின்னுடைய துறைமுகத்தில் யாங்கள் சிறிது ஓய்வினை மேற்கொள்ளப் பாயினைச் சுருட்டிவிட்டோம்; இனி இடைவிடா வேலைச் சூழலினின்றும் ஒருவாறு ஓய்ந்திருக்க விரும்புகின்றோம்."

உற்றார் உடன் இருக்க, உயிர்தோறும் கலந்து நிறையும் ஒப்பற்ற இறைவன் பேரடி நீழலில் நிலைத்துவாழும் பேரின்பத்தைப் புலவர் பெற்றனர்.

(தொடரும்)

அந்தணர்

அறவொழுக்கமும், மறைநூற் கல்வியும், தவப் பயிற்சியும் நிரம்பித் திருந்திய கேள்வியும் அதன்கண் வழுவுதலில்லாத கொள்கையும் நடையும் உடையோர் அந்தணராவர்.

—பரிபாடல் திரட்டு, 1.

இளமையும் இன்பமும்

வில்லி விருந்து பறந்தோடும் அம்புகளின் நிழல் தரையில் எவ்வளவு விரைவாகக் கழிந்து செல்லுமோ, அவ்வளவு விரைவாக உலகத்தில் மக்களுக்கு இன்பமும் இளமையும் நாடோறும் கழிந்து போகின்றன.

—நற்றிணை, 46.

பருப்பொருள் ஆராய்ச்சி

[த. பு. நவநீத கிருட்டினன், அண்ணுமலைநகர்]

(உகசு. பக்க தொடர்ச்சி)

மின்னணு உண்மையேயெனக் காட்டும் சான்றுகள் பலவற்றைப் பெற்ருர். தன் சோதனைகளை அளவியலாய்ச் செய்து, மின்னணுவின் பொருண்மை நிறையையும் கணக்கிட்டார். அவர் பெற்ற நிறை, தாம்ஸன் கணக்கிட்டதுடன் ஒத்திருந்தது.

ஒவ்வொரு அணுவிலுமுள்ள நுண்பகுதிகளிலொன்று மின்னணுவென்று ஐயந்திரிபற நிலைநாட்டப்பட்டது. அதன்பின், "அணுவின் மற்ற நுண்பகுதிகள் யாவை?" என்ற வினு எழுந்தது. இவ் வினுவிற்கு விடையளிப்பது மிகக் கடினமாயிற்று. மின்னணு எதிர் மின்சாரத்துடனுள்ளதால், அதற்கு ஈடான நேர்மின்சாரம் (Positive Electricity) அணுவில் இருந்தேதீர வேண்டுமென்பதைத் தாம்ஸன் துலக்கினர். ஆனல், நேர் மின்சாரத்தின் இருப்பிடத்தைச் சோதனை வாயிலாய்க் கண்டுபிடிக்க அவர் முற்படவில்லை. அரும் அறிவுத்திறன் வாய்க்கப்பெற்றவரான ரூதர்போர்டு (Rutherford) என்ற இணையற்ற விஞ்ஞான அறிஞர், நேர் மின்சாரத்துடனுள்ள அணுப்பகுதியைத் தேடிப் பிடிப்பதற்கான ஆராய்ச்சிகளிலீடுபட்டார். மின்னணுவைப் பிடித்தலே எளிதான பணியன்று எனக் கண்டோம். அப்பணியைவிடப் பன்மடங்கு கடினமான பணியாற்ற ரூதர்போர்ட் முற்பட்டார். குன்ருத ஊக்கத்துடனும், சலியாத உழைப்புடனும், அவர் தம் பணி யாற்றினர். அணுவின் உட்பகுதியைப் பரிசீலனை செய்யவேண்டுமாயின், அணுவைப் பிளந்து அதனுள் செல்லவேண்டும். அவ்வாறு அணுவினுள் புகுந்து செல்லக்கூடிய ஆராய்ச்சிக் கருவி, அவ்வணுவைவிடச் சிறியதாயிருக்க வேண்டும்; இவ்வுலகிலுள்ள பொருள்கள் யாவற்றினும் மிக உறுதியான கட்டுடனுள்ள அணுவைத் தகர்க்க இயன்ற வல்லமையுடனும் அக் கருவி யிருக்கவேண்டும். பெருங் கோட்டைகளைத் தவிடுபொடியாக்க மக்கள் பயன்படுத்தும் பீரங்கிகளெல்லாம் அணுவை நொறுக்கும் கருவிக்கு இணையாகா. அவ்வாருன பேராற்றல் பெற்ற நுண்ணரும் கருவி ரூதர்போர்டுக்கு

வாய்த்தது. அக் கருவி, 'அகரக் கதிர்கள்' (Alpharay) எனப்படுபவையேயாம். அகரக்கதிர் கதிரியத்தினின்று(Radium) கிடைக்கின்றது. கதிரியம் என்ற பொருள் தன்னுள்ளேயே ஒளியைக் கொண்டது; அது இடையறாது கதிர்கள் வீசிக் கொண்டிருக்கும் அடிப்பொருள். அவ்வாறு வீசப்படும் கதிர்களில் ஒருவகையானவை, அகரக்கதிர்கள். தாம் முன்னரே செய்துள்ள சோதனைகளால், ரூதர்போர்ட் அவற்றைப் பெற்றிருந்தார். எனவே, அவர் தம் ஆராய்ச்சிக் கருவியை நாடி அலையும் தேவை ஏற்படவில்லை. அகரக் கதிர்கள் மின்னணுவைவிட எண்ணாயிரம் மடங்கு அதிகமான நிறையுள்ளவையென்றும், அவை விநாடிக்குப் பன்னீராயிரம் மைல்கள் செல்லும் கதியுடனுள்ளவையென்றும், ரூதர்போர்ட், தான் முன்செய்துள்ள சோதனைகளால் கண்டுபிடித்திருந்தார். இவ்வகரக்கதிர்களைவிட அதிக நிறையான அணுக்கள் பலவற்றின்மீது, ரூதர்போர்ட், அகரக்கதிர்களை ஏவினர். அவ்வாறு ஏவப்பட்ட கதிர்களில் பல அவ்வணுக்களினூடே திசைமாறாது சென்றன. ஆனல், இருபதினாயிரத்திலொன்று, நேரே செல்லாது திரும்பி வேறு திக்கில் சென்றது. எனவே, அவ்வாறு திருப்பப்பட்ட கதிர்கள், தம்மைவிட அதிக நிறையுள்ள ஏதாவதொன்றின்மீது பட்டுத் திருப்பப்பட் டிருக்கவேண்டும் என ரூதர்போர்ட் எண்ணினர். அவ்வாறு அகரக் கதிர்களைத் திருப்பிய பொருள், அதனைவிடச் சிறிதான மின்னணுவாயிருக்க முடியாதென்று ரூதர்போர்ட் தெளிந்தார். இருபதினாயிரத்திலொன்றே திருப்பப்படுதலால், கதிர்படும் பொருள் அணுமுழுதும் பரவியுள்ளதன்று, அணுவின் நடுவில் மட்டுமுள்ளது எனவும் அவர் அனுமானித்தார். மேலும் மேலும் சோதனைகள் பலசெய்து தன் அனுமானம் சரியேயென மொழிந்தனர். எல்லா அணுக்களின் மையங்களிலும், நடுமுதல்கள் (Nucleus) உண்டெனவும், அவை நேர் மின்சாரமூட்டப்பட்டவை யெனவும் அவர் கண்டு பிடித்தார். மேலும், நடுமுதல்கள் ஒன்று அல்லது ஒன்றிற்கதிகமான நீரிய (Hydrogen) அணுக்களின் நிறையினவையெனவும் அவர் கண்டார். எனவே, நடுமுதல்கள் நீரிய அணுவின் நிறையினதான நுண்பொருள்களைக் கொண்டவையெனத் தேர்ந்தார். நடுமுதற்பகுதியான அந் நுண் பொருளுக்கு, ரூதர்போர்ட், 'பரமாணு'

(Proton) எனப் பெயரிட்டார். பல சோதனைகள் செய்து, தனியான பரமாணுக்களைப் பிடித்து, பரமாணு ஒரு மின்னணுவை யிழந்த நீரிய அணு என்பதை நிலைநாட்டினர். தான் கண்டு பிடித்தவற்றைக் கொண்டு, அவர், பொருளின் அமைப்புமுறை எவ்வாறிருக்கும் என்று தாம் கொண்டுள்ள கருத்தை வெளியிட்டார். அக் கருத்து பின்வருமாறும். "பொருள்கள் அடிப்படையான அணுக்களாலானவை. ஆனல், இவ்வணுக்களும் பல பகுதிகளுடனும் அமைப்புக்களுடனும் உள்ளன. ஒவ்வொரு அணுவின் நடுவிலும் நடுமுதல் உள்ளது. இதைப் பல மின்னணுக்கள் வேறுபட்ட ஆரையுடனுள்ள வட்டங்களில் சுற்றி வருகின்றன. அணுவெனும் மாடமாளிகையில் ஊரும் சிற்றெறும்பு மின்னணுவாம். நடுமுதல் பல பரமாணுக்களையும் மின்னணுக்களையும் கொண்டுள்ளது. நடுமுதலின் மின்னூட்டம் அணுநிறைக் கேற்றவாறு உள்ளது. அணுநிறை அதிகமான அடிப்பொருள்களின் அணுக்கள் அதிக மின்னூட்டத்துடன் உள்ளன. அணு திண்ணிய உருண்டையன்று. அதில் பெரும்பகுதி வெற்றிடமேயாம்."

ரூதர்போர்டின் கருத்துச் சரியானதென, மோஸ்லி (Moseley) என்ற இளம் விஞ்ஞானியால், சோதனை வாயிலாய் நிலைநாட்டப்பட்டது. அவர் செய்த சோதனையின் சுருக்கம் பின்வருமாறும்: "வெவ்வேறு உலோகங்களாலான தகடுகளினின்று வெளிப்படும் புதிர்க்கதிர்களை (X-Rays) அவர் பரிசீலனை செய்தார். அவற்றின் அலை நீளங்கள் (wave-Lengths) வேறுபட்டன. ஆனல் அலைநீளங்களுக்கும் அணுநிறைகளுக்கு மிடையுள்ள வீதம் மாறுபடாமலிருந்தது. எனவே அணுக்களினுள் அவற்றின் நிறைக்கேற்றுள்ளது ஒன்றிருக்கவேண்டும். அவ்வொன்று, நடுமுதலினுள்ள பரமாணுக்களின் தொகையென்று கருதலாம். அதாவது, ஓர் அடிப்பொருளின் அணுவில் ஒரு பரமாணு உள்ளது; அடுத்ததில் இரு பரமாணுக்களும், அதற்கடுத்ததில் மூன்றும், இன்னும் இதுபோன்று அதிகமாயும் உள்ளன.

ரூதர்போர்டு, மோஸ்லி என்ற இவ்விருவரின் கருத்துக்களுக்கேற்ப, பருப்பொருள்களினுடைய அடிப்பொருள்களின் அணுக்களுக்குரிய உள்ளமைப்பு எவ்வாறிருக்கும் என ஒருவாறு

நாம் அறிகிறோம் அதாவது—"ஒவ்வொரு அடிப்பொருளின் அணுவிலும் நடுமுதலும் மின்னணுக்களும் உள்ளன. நடுமுதலில் மின்னணுக்களும் பரமாணுக்களும் உள்ளன. மின்னணுக்களைவிடப் பரமாணுக்களே அதிகமாயுள்ளன. அதிகப்படியான எண்ணுடையனவான மின்னணுக்கள் நடுமுதலை வட்டமிடுகின்றன. இதனால் அணுவில், நேர் - எதிர் மின்சாரம் சமனாகி, பொதுநிலையிலுள்ள அணுமின்சாரம் ஊட்டமின்றி யுள்ளது."

மேற்கூறிய அணுவமைப்பு முறை முழுமையானதொன்றன்று. எனெனின் அம் முறைமையின் துணைகொண்டு, அணுக்களின் செயற்பாடுகள் பலவற்றையும் துலக்க இயலாதுள்ளது. முக்கியமாய், அணுக்கள் வெண்சுடர் நிலைமை யெய்தியுள்ள போது, அவற்றினின்று பெறப்படும் ஒளிதரும் நிறமாலை என் காணப்படுகின்றதென்பதற்கும், ஒவ்வோர் அணுவும் தனக்கென்றுள நிறமாலையுடன் ஏனுள்ளது என்பதற்கும், மேற்கூறிய அணுவமைப்பு முறையை மட்டுமே கொண்டு, காரணம் கூற இயலாதுள்ளது. அச் செயற்பாடுகளையும் விளக்கும் வண்ணம் அணுவமைப்பு முறையை விரிவாக்கும் முயற்சியில் விஞ்ஞானப் பேரறிஞர் பலர் ஈடுபட்டுள்ளனர். அவர்களில், போர் (Bohr), சாமர்பெல்ட் (Sommerfeld) என்பார் முதன்மையானோர். பல்வேறான அணுக்களில், மின்னணுக்களும் பரமாணுக்களும் எவ்வாறு அமைந்து எங்ஙனம் இயங்குகின்றனவென்பதைத் தெளிவாக்கும் முகத்தான், அவர்கள், எண்நூலின்பாற் பட்ட கொள்கைகள் பலவற்றை வெளியிட்டனர். ஆனால், அவருடைய கொள்கைகள் நிறமாலையியலின்பாற் (Spectroscopy) பட்ட தோற்றப்பாடுகள் சிலவற்றைச் சிறந்த முறையில் துலக்கினவாயினும், பலவற்றை விளக்க இயலாதுள்ளன. எனவே, மின்னணு, பரமாணு என்ற இவையேயன்றி வேறுவகையான மின்னியற் பகுதிகளும் அணுவில் இருக்கவேண்டுமெனவும், மின்னணு, பரமாணு என்பவற்றின் பலபண்புகளும் அறியப்படவில்லையெனவும் எற்படுகின்றது.

இவ்வாறான நிலைமையில், டிப்ராக்ளி (De Broglie) என்ற விஞ்ஞானப் பேரறிஞர், சிறந்த கொள்கையொன்றை வெளியிட்

டார். நிறமாலையியலின்பாற் பட்ட ஆராய்ச்சிகளினின்று ஒளி, ஒரோரமயம் பொருண்மையான துகள் போன்றும், மற்றோ ரமயம் அலைபோன்றும் ஒழுகுவதைப் பல விஞ்ஞானிகள் கண்டி ருந்தனர். அறவே வேறான தன்மைகள் ஒரேபொருளில் இருப் பதைக் கண்ட, டிப்ராக்ளி, ஒளியின் அணுவும், மின்னணுவும் ஒன்றேயாயிருக்கலாம் என அனுமானித்தார். மின்னணு, பொருண்மை பெற்ற துகள் மட்டுமேயன்றி, அது தன்னுடன் எப்பொழுதும் இணைந்துள்ள அலைத்தொகுதியுடனுள்ளது என் பதே அவர் கருத்தாம். டிப்ராக்ளியின் கருத்துச் சரியான தென்று, ஜி. பி. தாம்ஸன் (G. P. Thomson) எனும் விஞ் ஞானப் பேரறிஞர் சோதனை வாயிலாய் நிலைநாட்டினர். ஜி. பி. தாம்ஸன், நாம் இக் கட்டுரையின் தொடக்கத்தில் குறிப்பிட் டுள்ள, ஜே. ஜே. தாம்ஸனின் மகனார். அவர், தன் தந்தை முப்ப தாண்டுகளுக்கு முன்பு கூறியது போன்றின்றி, மின்னணு பொருண்மையெனும் துகளியனுடன் மட்டுமேயன்றி வேறு இயல்களுடனும் உள்ளது என விளக்கினர். "மின்னணு, தன் வலையின் நடுவிலுள்ள சிலந்திபோன்றது. தன்னைச் சுற்றிப் பல திக்குகளிலும் பரவும் மெல்லிழைகளின் நடுவிலுள்ள சிலந்தி அவ்விழைகளுடன் முன்னும் பின்னும் ஊசலாடுவது போலவே, மின்னணுத் துகளும் தன்னுடன் இணைந்துள்ள அலைத்தொகுதி யுடன் இயங்குகின்றது" என, அவர் எடுத்துரைத்தார். டெம்ப்ஸ்டர் (Dempster) என்ற விஞ்ஞானி பரமாணுவும் அலை - துகள் தன்மையானதே எனக் காட்டினர்.

இதன்பின், எண்ணியற் பேரறிஞர் பலர், சிந்தனையறிவின் துணைகொண்டு எண்ணியல் முறையை மட்டுமே பின்பற்றிய கருதுகோள்கள் பலவற்றை வெளியிடலாயினர். இவர்களில் முதன்மையானவர் ஷ்ராடிஞ்சர் (Schrodinger) எனும் எண்ணி யல் நூல் பேரறிஞர். அன்னரின் கொள்கைகளின் முடிவுகளைச் சோதனை வாயிலாய்ப் பரிசீலனை செய்யுங்கால், அணுவின் மின் னியற் பகுதிகள் பல கண்டு பிடிக்கப்பட்டன. அவை, ஒரு மின்னணுவும் ஒரு பரமாணுவும் பிணைந்த சமவணு (Neutron), இரு பரமாணுக்களும் ஒரு மின்னணுவும் ஒருமித்த இருபரமா மின்னணு (Deuteron), மின்னணுவின் நிறையே கொண்ட நேர்

மின்சாரவூட்டம் பெற்ற நேர்மின்னணு (Positron) என்பவை யாம்.

டால்டன், 'இனிப் பிளக்க இயலாதது' எனக்கூறிய அணுவைப் பிளக்கும் முயற்சிகள் தொடக்கமாகி ஏறக்குறைய நாற்பதாண்டுகளாகின்றன. 'ஓரடிப்பொருளை மற்றொன்றாய் மாற்ற இயலாது' என்னும் முடிவு உண்மையன்று என நிலைநாட்டப் பட்டது. அணுவும் வெடித்தது. வெடியின் அதிர்ச்சியால், மின்னணு, பாயாணு, சமவணு, இருபரமாணு, நேர்மின்னணு என்ற கூறுகள் வெளித்தள்ளப்பட்டன. தவிடுபொடியாகிக் கிடக்கும் குப்பை கூளத்தினின்று, விலையற்ற மணிகள் பல வற்றை இனிமேலும் பொறுக்கி யெடுக்கலாம். திண்பொருளும் நுண்ணலைகளாலானது எனும் உண்மை துலங்கிற்று.

அணுவின் மின்னியல் கூறுகள் பல சோதனை வாயிலாய்க் கண்டுபிடிப்பதற்குமுன், அவை உள்ளனவேயெனக் கொண்டு புதுப் புது எண்ணியல் இணைவுகளை அறிஞர் வெளியிடுகின்றனர். அக் கூறுகளைச் சோதனைவாயிலாய்ப் பெறும்முன் பல்லாண்டுகள் கழியலாம்; அன்றி நாளையே பெறலாம். அவற்றை நாடும் ஆராய்ச்சிகளினின்று மேலும் மேலும் பல வினக்கள் எழும். விஞ்ஞானிகள் ஆராய்ச்சி செய்வதில் சலிப்பு என்றும் ஏற்படாது. அறிவு எல்லையற்றது எனவறிந்து, விஞ்ஞானிகள், மேலும் மேலும் ஆராய்ச்சிகள் செய்தலே, உண்மையான வழியெனக் கொண்டு, அவ்வழியே மனங்குன்றாது விடாமுயற்சியுடன் முன் செல்கின்றனர்.

உழைப்பு

உலக முயற்சிகளில் ஈக்கிச்செல்லும் வழக்கமில்லாதவர்களுக்கு, அறத்தில் வழுவாது ஒழுகுதலும், அண்டினோர்க்கு ஆதாரவாயிருந்து தாங்குதலுமான பெருந்தன்மையான உள்ளப்பண்பு உண்டாகாது.

—அகநானூறு, 137

திரு அண்ணாமலையார் திருக்கோவில்

[வித்துவான் மா. இராசமாணிக்கம், B.O.L.]

இத் திருக்கோயில் சைவ சமய குரவர்தம் பாடல்கள் பெற்றது. எனவே, இது கி. பி. 7-ஆம் நூற்றாண்டிற்கும் முற்பட்டதாகும்; ஆயினும், பிற்கால அரசர்களால் அவ்வப் போது சீர்ப்படுத்தப்பட்டதாகும். இன்று இதன் தோற்றம் கண்ணைக் கவரவல்லது; கருத்தினை ஈர்க்கவல்லது. இக் கோயில் இசை நடனம் இரண்டிற்கும் பாதுகாப்பிடம் என்னல் மிகை யாகாது.

நாற்புறங்களிலும் உள்ள கோபுர வாயிற் சுவர்களில் செதுக் கப்பெற்றுள்ள உருவங்கள் நடனக்கலையை நன்கு விளக்குவன வாகும். அவற்றைக் கண்கொண்டு கண்டு களிப்புறலாமேயன் றிக் கூறுதலோ எழுதுதலோ இயலாது. (1) வலக்காலைத் தூக்கி ஆடல், (2) வலக்காலை வலக்கையாற் பற்றிக்கொண்டு ஆடல், (3) முழங்காலை வலது முலைமேல் படவைத்து ஆடல், (4) அங்ஙனமே இடது முலைமேல் படவைத்து ஆடல், (5) வலக் கைக்குப் பின்புறம் வலக்கால் தூக்கி நிறுத்தி ஆடல், (6) கை களைப் பலவாறு வைத்து வலக்காலைத் தூக்கி ஆடல், (7) இடக் காலையும் அவ்வாறே தூக்கி ஆடல், (8) இரு கால்களையும் பலவாறு நிறுத்தி ஆடல், (9) வளைத்து ஆடல், (10) அகற்றி ஆடல், (11) இரு முலைகட்குப் பக்கத்திலும் கீழுமேலும் இடை யிலும் இரண்டு கைகளையும் வைத்துப் பல வகையாக நடித்தல், இன்ன பிறவும் கண்ணையும் கருத்தையும் ஒருங்கே கவர்வன வாகும். நடனம் - சிற்பக் கலைகளில் வல்லார் இவற்றைக் கண்டு ஆராயின், தமிழகத்துக் கலைச்செல்வம் பெருமைபெற வழியுண்டு.

வாயில் நிலையில் உள்ள கற்பாறைகள் தனித்தனிப் பாறை களே. கோபுரங்கள் செங்கல்லும் சுண்ணாம்பும் கொண்டவை; பல உருவங்கள் கொண்டவை; புராணச் செய்திகள் பலவற் றை விளக்குபவை; பார்க்க அழகானவை; பக்தி - இசை - நடனம் - இவற்றை விளக்குபவை.

இக் கோவிலைப் பற்றிய பிற விவரங்கள் யாவும் சுருக்க மாகக் கோவில் காப்பாளர் ஓர் அணு நூலில் வெளியிட்டுள் ளனர். ஆதலின், ஆண்டுக் காண்க.

நந்திக்குக்கோபுரம் கட்டியிருத்தல் பல கோயில்களில் காண முடியாத புதுமையாகும். இரண்டாம் கோபுரவாயிலில் வல்லாள ராஜன் சிலை இருக்கிறது. பிராகாரத்தில் நான்கு முகங்களைக் கொண்ட லிங்கம் (பிரமலிங்கம்) சிறு கோவிலில் இருக்கிறது. நான்காம் பிராகாரத்தில் மேற்புறம் திருப்பாதக் கோவில் இருக் கிறது. மூலஸ்தான பிராகாரத்தில் பல இலிங்கங்கள் இருக் கின்றன. அவற்றுள் ஒன்று மேற்புறம் பாதி உருண்டையள வாக இருக்கிறது; மற்றொன்று மேற்புறம் தட்டையாக உள்ளது. முன்னது சோழ லிங்கம் என்றும், பின்னது சேர லிங்கம் என்றும் கூறப்படும்.

திருவண்ணாமலையார் திருக்கோவிலால் ஏற்பட்ட நூல்கள் சில. பெருமையோ அளவிடற்கரியது. இங்குச் சூரியநாராயண செட்டியார் என்னும் வள்ளல் ரூ. 70 ஆயிரம் முதல் வைத்துத் தேவார பாடசாலை நடத்த ஏற்பாடு செய்துள்ளார். ஆண்டு வருமானம் ரூ. 3500. அதனைக்கொண்டு தமிழ்க் கல்லூரி ஒன்று ஏற்படுத்தப்படின், வடஆர்க்காட்டுக் கோட்டத்தில் தமிழ்க் கல்லூரி இல்லை என்னும் குறை நீங்கலாம். இதனை இந்துஅற நிலையப் பாதுகாப்பாளர்கள் கவனித்து ஆவனசெய்து தங்கள் தமிழ்க் கடன் ஆற்றுவார்களாக!

செல்வம்

நெடிய மொழிதலும் கடிய ஊர்தலும் செல்வம் அன்று; தன் செய் வினைப் பயனே; சான்றோர் செல்வம் என்பது, சேர்ந்தோர் புன்கண் அஞ்சும் பண்பின் மென்கண் செல்வம் செல்வம் என்பதுவே.

—நற்றிணை, 210.

பண்டைக் காலத்து இசை

[இசையரசு எம். எம். தண்டபாணி தேசிகர்]

நாதமே முக்கலை நாத மூவெழுத்து
நாதமே முக்குணம் நாதமே முப்பொருள்
நாதம் மூல மாகி விரிந்து
நாதமாம் பரத்தில் லயித்தது பாரே.

பண்டைக் காலத்துத் தமிழ் இயற்றமிழ், இசைத் தமிழ், நாடகத் தமிழ் என மூவகைப்பட்டது. அவற்றுள், இயற்றமிழிற்கும், நாடகத் தமிழிற்கும் நடுவே இசைத் தமிழ் அமைவுற்றதிலிருந்தே இசைத் தமிழின் பெருமையை மிக உயர்ந்ததாகக் காண்கிறோம். இசை என்னும் சொல்லானது மக்களின்மனதை வயப்படுத்துவது, இசைவிப்பது என்ற பொருள் தருகின்றது. இசை மிகவும் இனிமையைக் கொடுக்கிறது. அது எந்த முறையில் இனிமையைக் கொடுக்கிறது என்றும், மக்களின் மனதை எந்த முறையில் வயப்படுத்துகிறதென்றும் ஆராய்வோம்.

இசையானது, கற்றோர், கல்லார், விலங்கினங்கள், பறவைகள், மரம் செடி கொடிகள் முதலான எல்லா உயிர்கட்கும் இன்பத்தைக் கொடுத்துத் தன்பால் வயப்படுத்தும் எல்லா மக்களும் பிறப்பிலிருந்து இறப்புவரை இசையோடு இசைந்த வாழ்க்கையிலேதான் தமது வாழ்க்கைத் தோணியை நடத்திச் செல்கிறார்கள். மனிதனின் வாழ்க்கையில், இன்பமும், துன்பமும் அடுத்தடுத்து வந்துகொண்டே இருக்கின்றன. ஒருவனுக்குப் பெரிய அரசாங்க பதவி கிடைக்கும்போதும், தனக்கு நிறையப் பொருள் வருவாய் அதிகரிக்கும்போதும், தான் கற்ற கல்வியை உலகினர் புகழ்கிறார்கள் என்பதை உணரும்போதும் மட்டற்ற மகிழ்ச்சியை யடைகிறான். மகிழ்ச்சியினால் இசையை இசைத்துப் பாடத் தொடங்குகிறான். இன்பத்தின் முடிவு எதுவென்றால் இசைதான் என்று முடிவு கூறலாம். மனம் வருந்தக்கூடிய வகையில் துன்பங்கள் வந்த காலத்திலும் இசையினாலேயேதான் மனதைத் தேற்றிக் கொள்ளுகிறான். அழுங்குழந்தைகள் தாலாட்டுப்பாட்டைக் கேட்டபிறகேதான் தூங்குகின்றன. ஏதோ தனக்குத் தெரியாத ஓர் இன்பமானது காதின் வழியே

புருவதனுற்றான் குழந்தைகள் தன்னை மறந்து தூங்குகின்றன. இன்னும் சில ஆண்டுகள் கழிந்த பின்னர், "குழலினிது யாழ் இனிது" என்பர் "தம் மழலைச்சொல் கேளாதவர்" என்று பெரியோர்கள் மொழிந்ததுண்மைதான் என்று தாய் தந்தையர் கட்கு அறிவுறுத்தும் நிலையில், குழந்தையானது தம் மழலைச் சொற்களை இசையுடன் கூடிய குதலை மொழியில் அள்ளி வீசு கின்றன. நாட்டு மக்கள் இசையில்லாமல் நன்மை தீமையான காரியங்களைச் செய்வதே கிடையாது. ஆண் பெண் இருவகை யிலும் அவரவர்களுக்கேற்ற விளையாடல்களில் இசை இருந்து வருகிறது. பெண்களாயுள்ளவர்கள் விளையாடும்போது கொற்றி, பிச்சு, சித்து, சிந்து, அம்மானை, பந்து, கழங்கு, உந்தி, தோள் வீச்சு, சாழல், தெள்ளேணம். இவைபோன்ற விளையாடல் களில் இசை இருந்துவருகின்றன. இசையுடன் கூடிய பாடல் களைப் பாடிக்கொண்டேதான் விளையாடுவார்கள். இன்னும் வேறு வகையான வேலைகளில் சாந்து இடிக்கும்போதும், நாற்றுகளை நடும்போதும், களை எடுக்கும்போதும், காடுகளில் தினைப்புனத் தில் நின்று கிளியோட்டும்போதும் நாட்டுப்பாடல்களை இன்பத் துடன் இயைந்த இசையுடன் பாடிக் களிக்கிறார்கள். ஆண்களா யுள்ளவர்கள், ஏற்றமிறைக்கும்போதும், ஓடந்தள்ளும்போதும், வயல்களில் வேலை செய்யும்போதும் வண்டியோட்டும்போதும் நாட்டுப்பாடல்களில் இசையை அள்ளிவீசித் துன்பமான வேலை யாயிருப்பினும் இன்பத்துடன் செய்கிறார்கள். வண்டியோட்டு பவன், நல்ல இசைப்பாடல்களைப் பாடினால் வண்டி மாடுகள் இசையில் மயங்கி இசை இன்பத்தை அனுபவித்துக்கொண்டே பல காத தூரங்கள் துன்பமன்னியிற் செல்வதை நேரில் காண் கிறோம். பாம்பு பிடிப்பவன் 'மகிடி' என்ற இசைக்கருவி யினால் சில ஓசைகளை அமைத்து வாசித்தானானால் இசைக்கு மயங்கிப் பாம்பானது படமெடுத்தாடுவதையும் அவ்வோசைகளில் பெரிய ஓசைகளைக் கேட்கும்போது சீறுவதையும் காண்கிறோம். பாம்புக்குச் சிறிய செவியாயிருப்பதால் சிறிய ஓசையைத்தான் விரும்புகிறது. பெரிய ஓசையைக் கேட்பின் அதற்குச் சின முண்டாகிறது. அசுணமா என்னும் பறவை இனிய இசை யைக் கேட்குங்காலத்தில் மிக மகிழ்ச்சியடையுமாம். அஃதல்லா மல் வேண்டாத இசையை அதாவது அபஸ்வரமாகக் கேட்பின்

மயக்கமுற்று மூர்ச்சையுற்று விழுந்துவிடுமாம். இப் பறவைக்கு 'இசையறி பறவை' என்றும் ஒரு பெயருண்டாம். வனத்தி லுள்ள வேடுவர்கள் இப் பறவையைப் பிடித்துக்கொள்ள வேண்டுமென்றால் யாழ் வாசிப்பார்களாம். யாழின் இசையைக் கேட்டு வேடுவர்களிடம் இப் பறவை அருகே வரும்போது இதைப் பிடித்துக்கொள்வார்களாம். இந் நிகழ்ச்சியைப்பற்றிச் சில சங்க இலக்கிய நூல்களினால் அறியலாம். காடுகளிலுள்ள தேன் வண்டுகள் தனது ரீங்கார இசையைப் பரப்பி வட்டமிட் டுக்கொண்டே மலர்கள் மலருங்காலத்தில் மலரினுள்ளிருக்கும் தேனைப் பருகுகின்றன. கொன்றை முடிச் சடையாரின் அடித் தொண்டராகிய **ஆனாய நாயனார்** என்பவர் வங்கியம் என்று சொல்லப்பட்ட புல்லாங்குழலில் ஐந்தெழுத்தை முறையுடன் இசைக்கும்போழ்து, பசுக்கூட்டங்களெல்லாம் இசையைச் செவி மடுத்து நாயனாரின் அருகே வந்தயர்ந்தும், கன்றுகளெல்லாம் பசுக்களிடத்தில் பாலுண்ணுவதை மறந்தும், ஆடுந் தொழிலைச் செய்கின்ற மயில்களெல்லாம் ஆடாமல் அயர்ந்தும், பறவைகள் எல்லாம் தனது உணர்வொழிந்தும், அரவமாகிய பாம்பும் மயி லும் ஒன்றாக இருந்தும், புலியும் யானையும் ஒன்றாயிருந்தும், மரங்கள் எல்லாம் அசையாமலும், மேகங்கள் எல்லாம் மழை பெய்யாது நின்றும் இவைகளெல்லாம் தனது இயற்கையை மறந்து நாயனாரின் இசைவயப்பட்டு இன்புற்றிருக்கின்றது. நாயனார் இசைத்த இசையினாலன்றோ பொற்சபையில் நடஞ் செய்யும் ஐயனாகிய இறைவன் இறைவியுடன் நாயனாருக்குப் பிறவாப் பெருநெறி கொடுத்தருளினார். ஐம்புலன்களையும் அகத் தடக்கும் பெரியோர்கள் சித்தத்தை ஒரு நிலைப்படுத்தவும், தவங் கலைந்த பின்னர்த் தவத்தின் இன்பத்தையடைய எண்ணுவார் களாயின் இசையைத்தான் விரும்புவார்கள் என்பதும் ஆன்றோர் கண்ட உண்மை. இறைவனை இசை விரும்புங் கூத்தனென்றும், இசைக்கு ஆடும் பெருமான் என்றும், எழிசையாயும் இசைப் பயனும் உள்ளவன் என்றும், ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே என்றும், பண்ணின் இசையாய் நின்றாய் என்றும், எம் இறை நல் வீணை வாசிக்கும் என்றும், நாதரூபமா நாதராகத் துறைவோனே என்றும், தமிழிசைப் பித்தனென்றும், இசையின்ப வெள்ளத்தை அள்ளியுண்ட பேரறிவாளர்கள் சம்பந்தர் நாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர், தமிழால் தம்மை வைதாரையும்

அன்புடன் ஏற்று அருள்கொடுக்கும் தமிழ்க்கு நல்ல தண்டமிழ் முருகனைத் துதித்த அருணகிரியார் - நம்பாடுவான், திருப்பாணழ்வார், திருநீலகண்ட யாழ்ப்பாணர், பாணபத்திரர் முதலான ஏனையோர்களும் இறைவனை இசைவடிவமாகவே கண்டு நெக்குநெக் குருகி நினைந்து நினைந்து அழுதும் தொழுதும் ஆடியும், இறைவனது புகழை இசைப்பாக்களாய் அமைந்த பாமாலையினற் சூட்டிப் பேரின்ப வாழ்வை அடைந்துள்ளார்கள் என்றால் இசையின் பெருமையை யார்தான் அளவிடக் கூடும்.

இனி இசையானது எத்தனை வகைகள் உண்டென்பதைச் சிறிது கவனிப்போம். பண், பண்ணியம், திறம், திறத்திறம், ஆளத்தி முதலியவைகள் உண்டு. இவைகளில் பண்ணென்பது ஏழு ஸ்வரங்களையுடையது. பண்ணியம் ஆறு ஸ்வரங்களையுடையது. திறம் ஐந்து ஸ்வரங்களைக் கொண்டது. திறத்திறம் நான்கு ஸ்வரங்களைக் கொண்டது. ஆளத்தியென்பது தென்ன தெனவென இராகங்களை ஆலாபித்தல், அதாவது பாடுதல் - தற் காலத்தில் இவைகள் சம்பூர்ணம் - ஷாடவம் - ஔடவம் - ஸ்வா ராந்தம் என்று வழங்கி வருகின்றன. ஒளியில் ஏழுவகை உள் ளதுபோன்று ஒலியிலும் ஏழு வகைகள் அமைந்துள்ளன. இவ்வேழு ஒலிகளுக்கும் ஷட்ஜத்திற்குக் குரல் - ரிஷபத்திற்குத் துத்தம் - காந்தாரத்திற்குக் கைக்கிளை - மத்திமத்திற்கு உழை - பஞ்சமத்திற்கு இளி - தைவதத்திற்கு விளரி - நிஷாதத்திற்குத் தாரம் என்றும் பண்டைய இசைப் பேராசிரியர்கள் பெயரிட்டிருக்கிறார்கள். மூலாதாரந் தொடங்கிய மூச் சைக் காலாற் கிளப்பிக் கருத்தால் இயக்கி ஒன்றெனத் தாக்கி இரண்டெனப் பகுத்துப் பண்ணீர்மைகள் பிறப்பிக்கப்பட்ட பாடல், இயலுக்கமைந்த மிடற்றுப் பாடல் என்றும், கருவி களால் இசைக்கப்படுவதென்றும் ஆக இரண்டு வகைகள் உடையது. மிடற்றால் பாடப்படுவதென்பது நெஞ்சு, மிடறு, நாக்கு, மூக்கு, அண்ணக்கு, உதடு, பல், தலை, முதலான எட்டு உறுப்புக்களின் தொழிலைக்கொண்டு பாடப்படுவது. மிடற்றுப் பாடல், எடுத்தல் - படுத்தல் - மெலிதல் - கம்பிதம் - குடிலம் - ஒலி - உருட்டு - தாக்கு - இவைகளை இசைத்துப் பாடுதல் வேண் டும். இச்செய்திகளை இசைக்கருவிகளின் வாயிலாகவும் இசைக்க வேண்டும்.

இசைக்கருவிகளில் முதன்மையாகக் கருதப்படுவது புல்லாங்குழல்தான். ஏனெனில் காடுகளில் உள்ள மூங்கில் மரங்களில் வண்டானது துளைத்த துளைகளின் வழியே காற்றானது வீசும்போது இன்பமான ஓர் ஓசை உண்டாகும். அதனைக் கேட்டபின்னரேதான் குழலையமைத்தார்கள் என்பது புலனாகின்றது. மூங்கிலால் செய்யப்பட்டதால் இதற்குப் புல்லாங்குழல் எனப் பெயரமைந்தது பொருத்தமென்றே தோன்றுகிறது. புல்லாங்குழல் தோன்றிய பின்னர்த்தான் யாழ், தண்ணுமை என்ற கருவிகள் தோன்றின. இதனாலேயேதான் "குழலினிது யாழ் இனிது" என்று வள்ளுவரும் வரையறுத்தார்.

இசை இலக்கணங்களைப்பற்றியும் இசைக் கருவிகளின் இலக்கணங்களைப்பற்றியும் சங்க காலத்திலுள்ளவர்களாலும், பின்பு உள்ளவர்களாலும் கூறப்பட்ட நூல்கள் பலவுள்ளன. இந்நூல்களில் பெருநாரை, பெருங்குருகு, பஞ்ச பாரதீயம், இசைநுணுக்கம், பஞ்சமரபு, சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, கல்லாடம், பெரிய புராணம், திருவிளையாடற் புராணம் முதலான நூல்களிலும் பேராசிரியர்கள் இசையின் நுட்பங்களை ஆங்காங்கே ஆண்டுவந்திருக்கிறார்கள். தமிழிலே ஒப்பற்ற பாக்களாகச் சிலப்பதிகாரத்தில் நமக்குக் கிடைத்திருக்கும் கானல்வரி, வேட்டுவ வரி, ஆய்ச்சியர் குரவை, ஊர்சூழ்வரி, குன்றக்குரவை, வாழ்த்துக்காதை என்று சொல்லப்பட்ட வரிப்பாடல்களும்; தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருவாய்மொழி, திருப்புகழ், தாயுமானவர், திருவருட்பா முதலிய இன்னிசைப் பாக்களும்; ராமநாடகம், முத்துத்தாண்டவர் கீர்த்தனை, சர்வசமய கீர்த்தனை, அச்சுததாசர் கீர்த்தனை, பராங்குசர் கீர்த்தனை, குறவஞ்சி, பள்ளு, சிந்து இவைபோன்ற இசைப்பாக்கள் எல்லாமும் திகழ்ந்து அன்றும் இன்றும் என்றும் மாபெரும் இசையரண்களாகச் சிறப்புடனிருந்து வருவது மக்கள் செய்த பெரும் பேறாகவே கொள்வோமாக.

தமிழ் இசைப்பாக்களின் உயர்வைப்பற்றிச் சிறிது ஆராய்வோம். 'பண்ணிடைத் தமிழ் ஒப்பாய்' என்று திருக்குருகாவூர் என்ற தலத்தின்கண் எழுந்தருளியிருக்கின்ற பெருமானைப் பாடப்பெற்ற பாடலாகிய சுந்தரமூர்த்திகளின் தேவாரத்தினால் இதுகாணக்கிடைக்கின்றது. பண்ணென்றால் இராகம்; இராகமும்

தமிழும் ஒன்றுபடும்போது தமிழிசையில் இறைவன் இரண்டறக் கலந்துள்ளானென்பது துணிபு. திருக்கோலக்கா என்னும் தலத்தில் திருஞானசம்பந்தப்பிள்ளையார் இவ்விசையுடன் தமிழைப் பரப்பியதால் உலகத்தைக் காக்கும் தாயாகிய அம்மை பொற்றாளத்திற்கு ஓசையைக் கொடுத்தாள். புறச் சமயத்தி லுள்ளவர்கள் நாவுக்கரசர்பால் சினங்கொண்டு கொலை யானையை ஏவி நாவுக்கரசரைக் கொல்ல விடுத்தனர். யானையானது மலை போல் புறப்பட்டு மண்டபங்களையெல்லாம் இடித்துக் கொண்டு எமனே யானையுருவத்தில் வந்தாற்போல் நாவுக்கரையரைக் கொல்ல வந்தது. நாவுக்கரசர் திருக்கெடிலவீரட்டானரைத் துதித்து, சுண்ணவெண் சந்தனச் சாந்தும் என்ற பதிகத்தின் இறுதியில் அஞ்சுவது யாதொன்றுமில்லை அஞ்சவருவதுமில்லை என்று தன் தமிழ்ப் பாமாலையைப் பொழிந்தார். யானையானது இப் பாமாலையைக் கேட்டவுடன் நாவுக்கரசரை வலஞ்செய்து வணங்கிச் சென்றது. இன்னும் இவைபோன்ற நிகழ்ச்சிகள் பற்பல நடைபெற்றிருப்பதாகப் பல நூல்களின் வாயிலாகத் தெரிகிறது. வடலூர் இராமலிங்க வள்ளலார் மணிவாசகப் பெருந்தகையாரின் திருவாசகத்தை எவ்வாறு புகழ்கிறாரென்பதை இரண்டு பாடல்களால் பாடுகிறேன்.

வாட்டமிலா மாணிக்க வாசகநின் வாசகத்தைக்
கேட்டபொழு தங்கிருந்த கீழ்ப்பறவைச் சாதிகளும்
வேட்டமுறும் பொல்லா விலங்குகளும் மெய்ஞ்ஞான
நாட்டமுறும் என்னில் நானடைதல் வியப்பன்றே.

வான்கலந்த மாணிக்க வாசகநின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித்தீஞ் சுவைகலந்தென்
ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாம லினிப்பதுவே.

என்று உள்ளுருகித் தமிழிசையைப் பருகிப் பேரானந்தமடைந்திருக்கிறார். இதைத்தை மிகப்பாடும் அடியார்களும் பண்ணென்ற இசைபாடும் இசையாளர்களும், தமிழிசையைப் போற்றி விதந்தோதியிருப்பதால், பண்டைய தமிழிசையானது ஒல்காப் புகழுடன் பல்காலமும் ஒளிபெற்றுத் தன் கிரணங்களாகிய இசையை மக்கள் அடைந்து இனிது வாழுமாறு வளர்ந்துவர இறையை இறைஞ்சுகின்றேன்.



[புத்தனேரி ரா. சுப்பிரமணியன்]

௪. வஞ்சக வலை

சென்றதைக் கருதாமல், இனிச் சேர்வதும் நினையாமல், வனக் குகையில் கண்டு கூட்டிவரும் இள மங்கையின் இன் சொல் அமுதைப் பருகி மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கிய வேடன், அவ் வழகியை நோக்கி,

"அம்மா! ஆள் நடமாட்டம் அற்ற இக் கொடிய வனத்திற்கு நீ எப்படி வந்தாய்?... உனக்கு நேர்ந்த இடையூறு என்ன?" என்று கேட்டான்.

"அதை என் கேட்கிறீர்கள்? ஐயா! அது ஒரு பெரிய கதை! என்னமோ! எல்லாம் என் தலை விதி!" என்று மனம் நொந்து பதில் அளித்தாள் மங்கை.

"பெண்ணே! நீ அதை என்னிடம் தாராளமாகச் சொல்லலாம்! உனக்கு நேரும் எத்தகைய இடையூறையும் தீர்க்கும் வழியை நான் அறிவேன். சொல் அம்மா!"

"ஐயா! அதைப் பற்றிக் கதை வளர்ப்பானேன்? சுருங்கச் சொன்னால் :—யான் சோழநாட்டைச் சேர்ந்தவள்! என் ஊர் உறையூர்; ஏதோ, சில நய வஞ்சகர்களின் சூழ்ச்சியால் இக் கானகத்தில் கலங்குகிறேன்........." என்று சொல்லி முடிப்பதற்குள் களங்கமற்ற அக் கட்டழகியின் கண்களிலிருந்து கண்ணீர் அரும்பிச் சொட்டுச் சொட்டாக வடிந்தது.

"அந்தக் குகைக்கு நீ வந்து எவ்வளவு நாளாயிற்று? பெண்ணே!

"அந்தச்......சண்டாளர்கள்! ......என்னை அக் குகையில் விட்டுப் போய்......மூன்று நாட்கள் ஆகின்றன!......"

"மாதே! இந்த மூன்று நாட்களும்.........பாவம்! ஊண் உறக்கம் இன்றி வாடினை போலும்!...... சண்டாளர்கள்!...... கொலைகாரர்கள்!!... புதுமலர் போன்ற இப் பூங்கொடியைப் பாழ்படுத்தத் துணிந்த படு பாவிகள்;......வஞ்சகர்கள்!........." என்றவாறு இரக்கம் நிறைந்த சீற்றச் சொற்கள் வேடனின் வாயிலிருந்து 'மட, மட' வென்று வீரத் தூரலில் கொம்பின! அவனுடைய முகம் சிவந்தது.

"அந்தச் சண்டாளர்களை ஒழிப்பதுதான் எனது முதன்மை வேலை ..." என்று உறுதி கூறித் தன்னுடன் வரும் மங்கையைத் தேற்றினன். இவ்வாறு பேசிக்கொண்டே வேடனும், புதிய மங்கையும் குதிரை மீது ஒற்றையடிப் பாதையின் பாதி வழியைக் கடந்து விட்டனர்.

இடையில் திடீரென எதையோ எண்ணியவன் போல் வேடன் இள மங்கையை நோக்கி, "பெண்ணே! உன்னிடம் கேட்க வேண்டிய முதன்மையான செய்தியைக் கேட்க மறந்து விட்டேனே!......உன் பெயர் என்ன? உன் பெற்ருேர் யாவர்?......; என வினவினன்.

"அன்பரே! அவற்றை யெல்லாம் இப்போது கூறவேண்டாம் என்று எண்ணுகிறேன்! சமயம் வரும்போது சொல்கிறேன்!..." என்ருள் இளம்பெண்.

"அதற்கென்ன? உன் விருப்பம்போல் செய்!......அம்மா!...... உன்னை எந்தப் பெயரால் கூப்பிடுவது என்ற திகைப்பு வந்தது. அதனுல் தான் கேட்டேன்! ......" என்று விழுங்கிக் கொண்டே பேசினன் வேடன்.

"ஐயா! தமிழ் மொழியிலே சொல்லுக்குக் கூடப் பஞ்சமா என்ன? எத்தனையோ அழகழகான இயற்கைப் பெயர்கள் இருப்பவற்றைத் தாங்கள் அறிய மாட்டீர்களா?......" என்று வேடிக்கையாய்ச் சிரித்துக்கொண்டே அம் மங்கை கேட்டவுடன், வேடனின் மனம் திடீரென யாரையோ எண்ணி விட்டது! எனவே சற்றுத் திகைத் தாற்போல் இருந்தான். இதனைக் கண்ணுற்ற மாதரசி,

"அன்பீர்! தங்கள் மனக்கருத்து திடீரென மாறுபடுவதன் காரணம் என்ன?..." என்று ஆவலாய்க் கேட்டாள்.

"ஒன்றுமில்லை!......வல்லி!......"

"வல்லி!......என்ன அழகான சொல்!......ஐயா! என்னை இந்தப் பெயராலேயே கூப்பிடுங்கள்!......"

"வல்லி!......நீ 'தமிழ்' என்ற பேச்சை எடுத்தவுடன் எனது மனம் என் உயிர்த் தோழரான தமிழ்வாணரை எண்ணி விட்டது. ......ஆம்! அவர்........." என்று ஆவலுடன் கூறி இடையில் பேச்சை நிறுத்தினன் வேடன்.

"ஐயா! அப் பெரியார் யார்?......" என்று வல்லி கேட்பதற் குள், உலகமே அசைவது போல் தோன்றிற்று! அப்புறம் பேச்சே யில்லை! குதிரையின் கதறலைக் கேட்டு வேடன் கூர்ந்து கவனித்த

போதுதான், குதிரை சாய்ந்து கிடப்பதையும், கீழே வல்லி விழுந்து கிடப்பதையும் கண்டான்! அவனுடைய தலை சுழன்றது!

தான் மட்டும், சாய்ந்து கிடந்த குதிரையை விட்டிறங்காமல் மிகக் கூர்மையாகக் கீழே நோக்கினன்! குதிரையின் கால்கள் ஓர் வலையில் பின்னுண்டு கிடந்தன! கீழே விழுந்த வல்லி எழுவதற்கு முயன்ருள்! அந்தோ! அவளுடைய கைகால்களும் வலையில் அகப் பட்டுக் கொண்டன! நல்ல வேளையாக வேடன் குதிரையை விட்டு இறங்கவில்லை! ஆதலால் அவன் மட்டும் வலையில் சிக்கிக் கொள்ள வில்லை!

"சண்டாளர்கள்!......அவர்கள்தான் இந்த வலையை வீசி நம்மைப் பிடிப்பதற்குச் சூழ்ச்சி செய்திருக்கின்றனர்!......" என்று குமுறிக் கொண்டு தன் இடுப்பிலிருந்த வாளை உருவி வலையை அறுக்க ஆரம் பித்தான் வேடன்!

இதற்குள் 'ஓ' வென்ற கூச்சலுடன் ஐந்து முரடர்கள் ஓடிவந்து இவர்களைச் சூழ்ந்து கொண்டனர்!

வல்லியின் உடல் பதறியது! வேடனே ஊக்கம் குறையாமல் 'மட, மட' வென்று வலையை அறுத்து எறிந்து விட்டு அந்தக் கொடியவர்களைக் கொன்று வீழ்த்தும் எண்ணத்துடன் போருக்கு ஆயத்தமானுன்!

நல்ல வேளையாக, வல்லியின் உடம்பில் காயம் எற்படவில்லை! அவளும் விரைந்து எழுந்து வேடனிடமிருந்த வில்லை எடுத்துக் கொண்டு முரடர்களை எதிர்க்கத் துணிந்து விட்டாள்!

ஐந்து முரடர்களை ஓர் இளங்காளையும், இளமங்கையும் எதிர்த்துப் போரிடும் காட்சி மிகக் கொடூரமானதாகவே இருந்தது. இவர் களுடைய கொடூரச் சண்டையைக் கண்ட குதிரை பயத்துடன் தூர விலகி நின்றது.

சிறு போர் முற்றி விட்டது! மனம் சலியாமல் வல்லி அம்புகளைத் தொடுத்துக்கொண்டே யிருந்தாள்! வேடனே, முரடர்கள் வீசிய ஈட்டிகளின் குத்துக்களைத் தாங்கிக்கொண்டு தானும் தளராமல் வாளை வீசிக் கொண்டிருந்தான்.

வேடனின் உடம்பில் பல காயங்கள் எற்பட்டுவிட்டன! எனினும் அவன் வீசிய வாள், முரடர்களில் ஒருவனை வானுலகுக்கு அனுப்பி விட்டது.

வல்லியின் மெல்லிய உடம்பிலும் சிறு சிறு காயங்கள் எற்பட்டன. மிகப் பொறுமையுடன் அவள் அம்புகளைத் தொடுத்துச் சண்டை செய்யும்போது

முரடன் ஒருவன் ஒரே பாய்ச்சலாய்ப் பாய்ந்து தன் ஈட்டியால் அவளைக் குத்துவதற்கு நெருங்கி விட்டான்! இதனைக் கண்ட குதிரை, நிலைகெட்டுக் கதறிக் கொண்டு மதம் பிடித்ததுபோல் துள்ளி ஓடிக் குறுக்கே பாய்ந்து, வல்லியைக் கொல்ல வந்த முரடனைக் கீழே தள்ளி விழ்த்தி விட்டு ஓடியது! தன் உயிரைக் காப்பாற்றிய குதிரையின் அறிவு மிக்க வீரச் செயலை வியந்த வல்லி மகிழ்ச்சியுடன் ஊக்கமும் கொண்டாள்!

வாயில்லாச் சிற்றுயிரான குதிரையின் வீரச்செயலைக் கண்டு மற்ற மூன்று முரடர்களும் திகைத்துப் போய் நின்றுவிட்டனர்! அவர்களுடைய வீரம் தளர்ச்சியுறத் தொடங்கிற்று! என்றாலும் ஒரே உறுதியுடன் வேடனைக் குத்தி விடுவதென்று தீர்மானித்த முரடன் ஒருவன் தன் உயிரை அற்பமாக மதித்து வீரத்துடன் ஈட்டியை ஓங்கி வேடனை நோக்கிக் குத்தப்புகுந்ததைக் கண்டதும் 'ஆ' வென்ற அலறலுடன் கீழே விழுந்து மூர்ச்சை யடைந்தாள் வல்லி! வேடனோ, தந்திரமாகச் சமயம் பார்த்துத் திடீரென விலகிக் கொள்ளவே, முரடனின் ஈட்டி தரையில் பாய்ந்தது!

இதற்குள் ஏனைய இரண்டு முரடர்களும் விரைந்து ஓடி, மூர்ச்சையாய்க் கிடந்த வல்லியைத் தூக்கிக்கொண்டு போகத் துணிந்தனர். நல்ல சமயத்தில் முரடனது ஈட்டிக்குத் தப்பிய வேடன் 'சரே' லெனப் பாய்ந்து, வல்லியைக் குனிந்து தூக்கிய முரடனின் முதுகில் தன் வாளை வீசினான்! அவ்வளவு தான்! அவனும் எமனுலகு போய்ச் சேர்ந்தான்.

எஞ்சி நின்ற முரடர்கள் இருவரும் இனித் தம் காரியம் செல்லாது என எண்ணித் " தப்பினோம்! பிழைத்தோம்! என்று ஓட்டம் பிடித்தனர்!

" சண்டாளர்கள்! ஒழிந்தார்கள்!......இனி நமக்குக் கவலையில்லை!..." என்ற அமைதியுடன் வேடனும் வல்லியும் களைப்பாறுவதற்காக அமர்ந்தனர். மகிழ்ச்சியால் கனைத்துக் கொண்டே இவர்கள் பக்கத்தில் வந்து நின்றது வீரக் குதிரை!

(தொடரும்)

செய்திகளும் குறிப்புக்களும்

பதினாறுவது ஆண்டுப் பரிசளிப்பு விழா

இலட்சுமிபுரம் உயர்திரு. ந. சொ. அரு. அருணாசலன் செட்டியாரவர்களால் நிறுவப்பெற்றுள்ள சொக்கலிங்க வித்தியாசாலையின் 16-வது ஆண்டுப் பரிசளிப்பு விழா 24-5-'43 திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு மேலைச்சிவபுரி கணேசர் ஓரியண்டல் கல்லூரித் தலைவர் உயர்திரு. P. R. மீனாட்சிசுந்தரம் பிள்ளை M.A. அவர்கள் தலைமையில் நடைபெற்றது. வித்தியாசாலை மாணவ மாணவிகளின் நடிப்புகள் நடைபெற்றன.

நக்கீரர் கழகம், சென்னை

திருவள்ளுவர் திருநாள்

மேற்படி கழகத்தின் சார்பில் சென்னைத் தொண்டைமண்டலம் உயர்நிலைப் பள்ளியில் 23-5-43 ஞாயிறு மாலை 6 மணிக்குத் "திருவள்ளுவர் திருவிழா" திருவாளர், பேராசிரியர் பாரிப்பாக்கம் கண்ணப்ப முதலியார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

திரு. K. M. பாலசுப்பிரமணியம் அவர்கள் B.A., B.L. "திருவள்ளுவர்" என்னும் பொருள்பற்றி 2-மணி நேரம் பல அரிய கருத்துக்களை எடுத்துக்காட்டி, அதனுடன் பெரிய புராணத்திற் பல வரலாற்றுக் குறிப்புக்களை எடுத்துக்காட்டாக எடுத்துரைத்து அளவிலா மகிழ்ச்சியில் அனைவரையும் திளைப்பித்தனர்.

விழாவில் "திருக்குறள்" மறையை மலர்களால் அணிசெய்து வைத்தது மிக அழகுடன் காணப்பட்டது.

கடந்தைத் தமிழ்ச் சங்கம், பெண்ணாகடம்

கோடைகாலத் தமிழ்த் தொண்டர்குழு

காலஞ்சென்ற வித்துவான் இ. சிவகுருநாதன் அவர்களால் நிறுவப்பெற்றுக் கடந்த எட்டு ஆண்டுகளாக மிகச் சிறப்புடன் நடைபெற்றுவரும் இச் சங்கம், சென்ற மூன்று ஆண்டுகளாகக் கோடை விடுமுறையில் புலவர்களையும் மாணவர்களையுங் கொண்டு கிராமங்களில் சென்று தமிழின் சிறப்புக் குறித்தும் தெய்வத்திருநெறி குறித்தும் சொற்பொழிவுகளாற்றித் தொண்டுபுரிந்து வருகிறது. இவ்வாண்டும் வித்துவான் பட்டம் பெற்ற ஐந்து புலவர்களையும் பத்து மாணவர்களையும் ஆசிரியர்களையுங் கொண்டு 15-5-43 முதல் 26-5-43 முடியப் பன்னிரண்டு கிராமங்களுக்குச் சென்று சொற்பொழிவுகளாற்றி வந்தது. கிராமங்கள்தோறும் உள்ள பெரியோர்கள்

குழுவினரைச் சிறப்புடன் வரவேற்ற வேண்டிய துணைபுரிந்தனர். தமிழ்த் தொண்டு புரியும் தமிழகத்தின் ஏனைய கழகங்களும் இம் முறையைப் பின் பற்றி நடத்தல் நலமாகும்.

சேலம், திருஞானசம்பந்தர் திருச்சபை

இத் திருச்சபையின் 23-ம் ஆண்டு நிறைவுவிழா சேலம் தேவாங்க புரத்தில் திரு. இளவழகனுரவர்களின் அரிய தலைமையில் 22, 23-5-43 சனி ஞாயிற்றுக் கிழமைகளில் சிறப்பாக நடைபெற்றது.

கோவைப் பெருமகனுர் துடிசைகிழார் அ. சிதம்பரனுர், சேலம் வித்து வான் திரு. நவநீதம் அம்மையார், ஈரோடு வித்துவான் திரு. பொன்னுசாமி முதலியார் முதலிய அறிஞர்களின் இனிய சொற்பொழிவுகள் நிகழப் பெற்றன.

இருநாட்களிலும் அவையோர் நிரம்பக் குழுமியிருந்து தம்மை மறந்த நினைவினராய்க் கடைசிவரையில் அவை நிகழ்ச்சிகளில் ஈடுபட்டிருந்து உவகையெய்தினர்.

மதிப்புரை

1. தமிழர்க்கு: புதுக்கோட்டைத் தனியரசு கோனுப்பட்டுத் தமி ழன்னை நிலயத்தார் வெளியீடு: விலை அரையணு.

இவ் வெளியீட்டிற் குறித்திருக்கும் கருத்துக்கள் தமிழர்க்கு இன்றி யமையாதவை. இவற்றைத் தமிழ் மக்கள் தழுவி ஒழுகுவாராயின், தமிழ் நாடு உலகுக்கு ஓர் ஞாயிறு என ஒளிரும்.

2. அன்னை அருங்குறள்: ஆசிரியர்: திரு கா. அப்பாதுரைப் பிள்ளையவர்கள் M.A., L.T. வெளியிட்டோர்: புதுக்கோட்டைத் தனியரசு, கோனுப்பட்டுத் தமிழன்னை நிலயத்தார். விலை ஓரணு.

இது 108 குறட்பாக்களால் அமைந்துள்ளது. பாநடை நூலாயினும் எளிய நடையில் இயன்றிருக்கின்றது. கருத்துக்கள் நுட்பநிட்பமானவை. உண்மையும் உணர்ச்சியும் உடையவை. இறுதியிற் குறிப்புரையும் இருக் கின்றது.

தமிழன்னை நிலயத்தார் செய்துவருகின்ற இத் தொண்டுகள் மிக்க ஆதரவுக்கு உரியன.



அறத்திருவாளர்

Rm. அழகப்பச் செட்டியார் அவர்கள்

பார்-அட்-லா.

ஸ்ரீ

செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு-௨௦] சுபானு—ஆனி (1943) [பரல்-௮

குறிப்புக்கள் :

ஐந்து இலட்சம் நன்கொடை :

தமிழ்ப் பெருந் திருவினரும், அரியன தெரிந்து ஆற்றுவோருமான வளத்திரு. Rm. அழகப்ப செட்டியார் M. A., Bar-At-Law அவர்கள் தமிழ் நாட்டின் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துக்கு இச் சிறந்த நன்கொடையினை வழங்கியிருக்கின்றார்கள். பல்கலைக் கழகத்தில், தொழிற் கலையின் பொருட்டு இப் பெருங்கொடை வழங்கப்பெற்றிருக்கின்றதென்றும், பல்கலைக்கழகம் தோன்றிய நாள் தொட்டு அதற்குக் கிடைத்த நன்கொடைகளுள் இதுவே பெரியது என்றும், இது 'திரு. Rm. அழகப்ப செட்டியார் கைத் தொழில் நிதி' என்னும் பெயரால் அமைப்புப் பெறும் என்றும் அக் கழகத்தின் துணைத்தலைவர் தெரிவித்திருக்கும் மகிழ்ச்சியுரையிலிருந்து தெரிகின்றது.

திரு. செட்டியாரவர்கள், கொச்சி வளநாட்டைச் சார்ந்த புதுக்காடு என்னும் இடத்திலுள்ள 'கொச்சி நெசவுச் சாலை' என்னும் தொழில் நிலையத்தின் தலைவர். அவர்கள் நினைவு இங்ஙனஞ் சென்றது நாட்டின் நற்பேறென்றே கூறவேண்டும். தமிழ் நாட்டுக்கு இப்போது கட்டாயமாய்த் தேவையானதொரு துறையை அவர்கள் இதனால் வழிவழி வளர்த்தவர்களாக ஆகின்றார்கள். பயன்தரத் தக்க புதிய தொழில் முறைகளை மாணவர்கட்கு உணர்த்த இது பயன்படும் என்றும் பல்கலைக் கழகத்தார் அறிவித்திருக்கின்றனர்.

தமிழ் நாட்டுக்கு இத்தகைய அருஞ்செயல் வள்ளல்களே இப்போது ஆவன செய்தல் கூடும். பண்டைக்காலத்தில் இருந்த முதல் இடை கடை எழு வள்ளல்களை ஒருங்கு கூட்டி முதல் வள்ளல்களாகவே எண்ணிக்கொண்டு, இனி இடை கடை வள்ளல்களைக் கருதவேண்டிய கட்டாயமே இந்நாட்டுக்கு இருக்கின்றது. பலப்பல துறைகளில், பேரளவான நிலையில், இந்நாடு வளர்ச்சியை அவாவி நிற்கின்றது. நாட்டு மக்களில் வாய்ப்புக் குரியோர் அனைவரும், அவரவர்க்கு இயற்கையாய் அரும்புந் துறைகளில் தடையின்றி மேலோங்கிச் செல்வதற்கு, ஏற்ற அமைப்புக்கள் தமிழ் நாட்டில் அங்கங்கும் அமைந்திருக்கவேண்டும். எல்லா மக்களும் தெளிவென்னுங் குன்றேறி நிற்கச் செய்ய வேண்டுவது, இந்நாட்டுப் பெருஞ் செல்வர்களையே இப்போது பெரும்பான்மையும் பொறுத்திருக்கின்றது. ஆக்கத்தின் பெரும் பகுதி இத்தகைய பொதுநலத் தொண்டுக்குச் செலவாதலே, இந்நாட்டின் நல்லோரும் எந்நாட்டின் நல்லோரும் காட்டும் அறமுறைமை!

செய்தக்க செய்த அறவோரான திரு. அழகப்பரவர்கள் வாழ்க! அவர்கள் அறவழியினைப் பின்பற்றி இந்நாடு பற்பல துறைகளையும் வளமுறப் பெருக்கி வெல்க!

* * *

திரு. வி. க. மணிவிழா :

தமிழ்நாடு ஆவலோடு எதிர்பார்த்திருந்த இம் மங்கல மணிவிழா 25-8-43 - ல் உறுகின்றது. விழா நிகழ்ச்சிகளைச் சிறக்கச் செய்யும்பொருட்டுத் தக்கோர் குழு அமைந்து, செயலாற்றிவருகின்றது.

இது தமிழறிஞர் மணிவிழா. தமிழ்நாடு தனது ஊக்கம் முழுமையும் ஒருங்குய்த்து வளமுற நன்காற்றவேண்டிய கடமை யமைந்தது.

மணிவிழாக் கழகம், செய்முறைகள் சில வகுத்துள்ளது. எல்லாம் நடைபெறச் செய்து, கண்டு மகிழ வேண்டுவது தமிழர் கடன். அவற்றுள் ஒன்று, நமது கருத்தினை மிகவும் ஈர்த்

தெழச் செய்கின்றது. அதனைக் குழுவினர், 'கூடுமானல், சமரச சன்மார்க்க சங்க விடுதி அமைத்து ஏழை மக்கட்கு உணவும் கல்வியும் அளிப்பது' என ஐயுறவோடு அமைத்திருக்கின்றனர்.

திரு. வி. க. வின் உணர்ச்சியுரைகளில் நீண்ட நாட்களாக ஈடுபட்டு வளர்ந்துவருந் தமிழகம், அவர்கள் விழா நிகழ்ச்சிகளில் ஐயுறவு என்ற ஒன்றுக்கும் அணுத்துணையேனும் இடங்கொடுத்துக் காணலாமா? அந்த ஐயுறவினை நீக்குதற்கே முதலிற் கருத்தூன்றி, ஆவன செய்தல் கடன். மேலும், விடுதி அமைப்பது நிலைத்த செயல். விழா நாட்களில் மட்டும் நிகழ்ந்து மறைவது அன்று. ஏழை மாணவர் நால்வர்க்கே வசதியளிப்பினும், அதனைத் திரு. வி. க. அவர்கள் பெயரால் நிலையாகத் தொடர்ந்து நிகழச்செய்வது, அவர்களைப் பரிந்து பாராட்டுதற்குரிய உருவான நற்செயலாகும்.

திரு. வி. க. தமிழகத்தில் தமிழூக்கத்தையும் பலதிற உணர்ச்சிகளையும் எழுப்பிவிட்டு, இயன்ற அளவு ஈடுபடச் செய்து, அம் மகிழ்ச்சியில் திளைத்து, அதுவே தமது வாழ்க்கை யின்பமாகத் தேக்குற்று வருபவர்கள். இத்தகைய புத்துணர்ச்சி நிலைகள் பெறலரியன. அந்நிலையில் தமிழன்னையைப் பற்பல வகையாக அழகுறுத்தி இயக்கி, அவ்வத் துறையினரிடமும் அன்னைக்குச் செல்வாக்குத் தேடி நிலைபெறுத்தியவர்கள். காலம் முதலியன கருதிச், சூழ்ந்து செயல் முயன்ற நன்றிக்குரியவர்கள். அவர்கட்கு உயிர்ப்பமைந்த அடையாளம் நாட்டில் நிலைபெறவேண்டும். உற்ற நேரத்தில் தமிழகம் உறுகடன் ஆற்றி மகிழுமாக!

---

1. தாமரைப்பூ அலர்ந்த அஞ்ஞான்று, அந்தோ, என் மனம் வேறெங்கோ சென்றது. அதை நான் அறியாமல் இருந்துவிட்டேன். எனது மலர்க்கூடை வெறுமையாய் இருந்தது. மலர்மீது என் கவனம் செல்லவில்லை.

2. நான் எனது படகைக் கடலிலே செலுத்த வேண்டும். கரையிலே செயலின்றிக் காலம் கழிந்துபோகின்றது

—இரவீந்திரர்

சமய அணிகலன்

"நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார்"

தமிழகத்திலே பண்டுதொட்டு வழங்கிவரும் சமயங்கள் சைவம், வைணவம் என்னும் இரண்டுமாம். சங்க நூல்களி லெல்லாம் சைவத்திற்கே முதன்மை கூறப்படினும் மால் வழி பாடு யாண்டும் கடியப்பட்டிலது. சைவநன்மக்களெல்லாரும் திருமாலிடத்தும் அன்புடையராகவே ஒழுகிவந்தனர். அது சமயப்பற்றுக்கு மெலிவு தருவதாகக் கருதப்படவில்லை. சங்க நாளிலே தமிழ்மக்கள்பாற் சமயப்பற்று அழுத்தமாக இருந்த தென்பதற்குப் பல குறிப்புகள் உள்ளன. அவற்றுள் ஒன்றே இங்குக் காட்டப் புகுந்தது.

தமிழர்கள் தம் மக்கள் குழவிப்பருவத்து நோய் முதலிய வற்றால் நலிவின்றி வாழ்தல் கருதி அவர்கட்குக் காப்பாக அணியும் அணிகலன்கள் இரண்டு. அவற்றுள் ஒன்று சிவ பிரானுடையைபுடையது; மற்றொன்று திருமாலோ டியைபுடை யது. பின்னது பிற்காலத்திற் பலராலும் கைக்கொள்ளப் பெற்று வந்தமையின் இலக்கியங்களிற் பெரிதும் பயில்வதாயிற்று. இத் திருமாலின் வளை, திகிரி, தண்டு, வாள், வில் என்னும் ஐந்து படைகளின் உருவமைந்தது. இதனை ஐம்படை எனவும், தாலி எனவும், ஐம்படைத் தாலி எனவும் வழங்குவர். புறப்பாட்டிலே, பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழி யனது இளமை மிகுதியைக் குறிக்குங்கால்,

> "தாலி களைந்தன்று மிலனே; பால்விட்டு
> அயினியும் இன்றயின் றனனே"

என இடைக்குன்றூர் கிழார் இதனை விதந்து கூறினர். மணி மேகலையிலே,

> "செவ்வாய்க் குதலை மெய்பெறா மழலை
> சிறந்து சென்னீர் ஐம்படை நனைப்ப
> அற்றம் காவாச் சுற்றுடைப் பூந்துகில்
> தொடுத்த மணிக்கோவை யுடுப்பொடு துயல்வரத்
> தளர்நடை தாங்காக் கிளர்பூட் புதல்வரை"

எனவும்,

" தளர்நடை யாயமொடு தங்கா தோடி
விளையாடு சிறுதே ரீர்த்துமெய் வருந்தி
அமளித் துஞ்சும் ஐம்படைத் தாலிக்
குதலைச் செவ்வாய்க் குறுநடைப் புதல்வர்க்கு"

எனவும் இளம்புதல்வ ரியல்பை விளக்குழிக் கூலவாணிகன் சாத்தனார் இவ்வணிகலனைச் சிறந்தெடுத்தோதினர். இவ்வாற்றால் இது சங்ககாலிலே பயின்றமை பெற்றும்.

" தாலி யைம்படை தழுவு மார்பிடை
மாலை வாயமு தொழுகு மக்களைப்
பாலி னூட்டுவோர் செங்கைப் பங்கயம்
வால்நி லாவுறக் குவிவ மானுமே"

எனக் **கம்பநாடர்** கூறுவது பிற்காலத்திலும் இது பயின்று வந்தமையைக் காட்டும்.

" தம்பிரா னருளி னாலே தவத்தினன் மிக்கார் போற்றும்
நம்பியா ரூரா ரென்றே நாமமுஞ் சாத்தி மிக்க
ஐம்படை சதங்கை சாத்தி யணிமணிச் சுட்டி சாத்திச்
செம்பொனு ணரையின் மின்னத் தெருவிற்றே ருருட்டு நாளில்"

என்னும் **பெரிய புராணத்** திருவிருத்தம் சைவமக்களும் இதனை அணிந்து வந்தமைக்குச் சான்றாகும். பரஞ்சோதி முனிவர் திரு **விளையாடற் புராணத்து** மாமனாக வந்து வழக்குரைத்த படலத்தில்,

" ஐம்படை மார்பிற் காணேன் சிறுசிலம் படியிற் காணேன்
மொய்ம்புடை மதாணி காணேன் முகத்தசை சுட்டி காணேன்
மின்படு குழைகள் காணேன் வெற்றுடல் கண்டே னப்பா
என்பெறு மென்று பிள்ளைப் பணிகளுங் கவர்ந்தா ரென்னு"

என்று கூறுவது முதலியனவுங் காண்க.

இனி, முன்னதாகிய சிவனேடியையபுடைய அணிகலன் **கலித்தொகையில்** பலவிடத்துக் கூறப்பெற்றுளது. மருதக் கலியில் ஓர் இளமைந்தனுடைய காலணி, இடையணி, கையணி, தலையணி என்பன கூறுமிடத்தில்,

" பூண்டவை, எறியா வாளும் எற்று மழுவும்
செறியக் கட்டி யீரிடைத் தாழ்ந்த
பெய்புல மூதாய்ப் புகர்நிறத் துகிரின்
மையற விளங்கிய ஆனேற் றவிர்பூண்"

என மார்பணி கூறப்பெற்றுள்ளது. இடையே ஆனேற்றின் உருவமும், அதன் இரண்டு புறத்தும் வாள், மழு என்பவற்றின் உருவமும் அமைக்கப் பெற்ற அணிகலன் இதில் கூறப்பட்டுளது. வாள் என்றது முத்தலை வேல் (சூலம்) ஆகும். சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடும் சைவ மக்கட்கு இவற்றின் உருவுகள் சிறப்புடைய அடையாளமாதல்,

"பொன்னார் திருவடிக் கொன்றுண்டு விண்ணப்பம் போற்றிசெய்யும்
என்னாவி காப்பதற் கிச்சையுண் டேலிருங் கூற்றகல
மின்னாரு மூவிலைச் சூலமென் மேற்பொறி மேவு கொண்டல்
துன்னார் கடந்தையுட் டூங்கானை மாடச் சுடர்க்கொழுந்தே."

"கடவுந் திகிரி கடவா தொழியக் கயிலையுற்றான்
படவுந் திருவிர லொன்றுவைத் தாய்பனி மால்வரைபோல்
இடபம் பொறித்தென்னை யேன்றுகொள் ளாயிருஞ் சோலைதிங்கள்
தடவுங் கடந்தையுட் டூங்கானை மாடத்தெந் தத்துவனே."

எனத் திருநாவுக்கரசு நாயனார் சிவபெருமானை வேண்டி அவற்றைப் பெற்றமையால் அறியப்படும். இப் பதிகத்து, மூன்று திருப்பாட்டே இஞ்ஞான்றிருத்தலின் ஆளுடைய அரசுகள் வேண்டிய ஏனைய அடையாளங்களை அறிதற்கியலவில்லை. "திருவடி நீறென்னைப் பூசும்" என மற்றொரு திருப்பாட்டில் வேண்டுகின்றனர்.

திருவுருவ வழிபாடு

"ஐம்பொறிகளுக்குப் புலனாகாத பொருள் மனத்தின்கட் புலப்படுமாறில்லை. கட்புலனாய் விளங்கும் ஓர் உருவத்தைப் பற்றி நின்று நினையாதொழியின், அம் மனம் வேறு பிற உருவங்களைப் பற்றிக்கொண்டு அவர்க்குக் கடவுளுணர்வு வரவொட்டாமல் தடை செய்தல் ஒருதலை"

—மறைமலையடிகள்.

சண்டேசுர நாயனுர்

[இராம. மீனுட்சிசுந்தரம் பிள்ளை M. A.]

(18-12-42-ல் திருச்சி வானெலியில் பேசப்பெற்றது.)

செந்தமிழ் மொழியில் பயிலும் இலக்கியங்களைக் காலமுறை யால் மேற்போக்காக மூவகையில் பிரிக்கலாம். சங்க காலத் தன, இடைக்காலத்தன, இக்காலத்தன என்பனவாம். சங்க காலத்தன, இறந்தொழிந்தவை போக நின்றவை எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என்ற பதினெண் மேற்கணக்கும், நாலடி, நான் மணி முதலிய பதினெண் கீழ்க்கணக்குமாம். இவை யெல்லாம் பலவாருய்த் தொகுக்கப்பட்ட முதல் நூற்களே. இந் நூல்களின் கருத்துக்களெல்லாம் இந் நாட்டுக் கருத்துக்களே. இதற்கு மாருக இடைக்காலத்தவை அமைகின்றன. இத்தகைய நூல் பெரிய புராணமும் ஆகும். [இக்காலத்து ஆக்கப்பட்ட புராணங் களெல்லாம் ஸம்ஸ்க்ருதத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்ட வழி நூற்களேயாம்.]

[அத்தகைய மொழிபெயர்ப்பாகவே பெரிய புராணத்தையும் சிலர் கருதுகின்றனர். உபமன்யூ பக்த விலாசத்தின் மொழி பெயர்ப்பு என்பர். ஆனல் சீவகசிந்தாமணி என்ற சைனசமயக் கருத்துக்கள் நிறைந்த காவியத்தில் ஈடுபட்டுச் சைவசமயத் துறையில் சிறிது வழுவ முற்பட்ட அநபாயன் என்ற சோழனைத் திருத்தி இலக்கியச் சுவை சொரியும் சைவ நூலொன்று இயற்றத் துணிந்து, அவனிடம் உறுதி கூறி, சிதம்பரம் ஆயிரக்கால் மண்ட பத்தமர்ந்து அம்பலவாணன் "உலகெலாம்" என அடி எடுத் துதவ, ஓராண்டுக் காலத்துள் சேக்கிழார் என்பார், முதனூலாகவே இதை இயற்றினர் என்று சரித்திரம் கூறுவது சால்புடைத்து.]

அநபாயனுக்கு அமைச்சராய் அமைந்த சேக்கிழார், சுந்தர மூர்த்தி நாயனுரருளிய திருத்தொண்டத் தொகையையும், நம்பி யாண்டார் நம்பிகள் அருளிய திருத்தொண்டர் திருவந்தாதி யையும் ஆதாரமாகக் கொண்டு, அடியார், பிறந்து பெருஞ் செய

குறிப்பு :—இருதலைப் பகரத்துள்ளனவெலாம், வானெலி நிலையத் தாரின் எண்ணத்திற்கேற்ப, பேசும்போது நீக்கப்பெற்றவையாம்.

லாற்றிய பதிகள்தோறும் சென்று, வேண்டும் சான்று பல சேர்த்து, அடியார் பெருமை பிறங்க, பத்திச் சுவைநனி சொட்டச் சொட்டப் பாடி, பெரும் புராணமாய் இயற்றினர்.

பொதுவாக உலகத்து நோக்கப்பெறும் உயர்வு தாழ்வு பற்றிப் பெருமையை அளக்காது, சாதிவேற்றுமையும் இன்றிப் பத்தி ஒன்றனையே அளவுகோலாகக் கொண்டு, பெருமையை அளந்து கூறுவது இந்நூலாம். [என் ஆசிரியர் மகாவித்துவான் ரா. ராகவையங்காரவர்கள் தாம் பாடிய] ஒரு தமிழ்த்தாய் வாழ்த்துள், "பத்தியைத் தொண்டர் புகழ்க்கிடை நட்டாய்" என நவில்வதுபோல், அடியார் பெருமை கூறும் இப் பெரிய புராணம், பத்திப் பயிர் வளர்க்கும் பண்ணையாய் அமைந்துள்ளது என்றல் பொருந்தும்.

"மிகப் பெரியது எது?" என வினவப்பெற்ற ஒளவையார், "பெரிது பெரிது புவனம் பெரிது" எனத் தொடங்கி, ஒவ்வொரு பெரும்பொருளையும் கூறி, இறுதியில் எல்லாவற்றினும் பெரிய இறைவனையே உள்ளத்தில் அடக்கும் அடியாரின் பெருமையை அறையவும் இயலாது எனப் புகன்றார். அடியாருள்ளம் ஆண்டவன் கோவில். அன்னாரை ஆண்டவனாகவே மதித்து, சேக்கிழார் ஒவ்வொருவர் சரிதத்தையும் அவ்வவருக்கே வாழ்த்துக் கூறித் தொடங்குகின்றார்.

எக்குடிப் பிறந்த யாவரே யாயினும் அங்கணன் மாட்டு அன்புகொண்டால் ஆன்றோர் ஆகலாம் என்பதற்குச் சான்று பகரும் இந்நூல். ஆண்டவன்பால் அன்பு செலுத்தும் முறை பலவற்றை அடியார் வாழ்க்கை நிகழ்ச்சி மூலம் அறியலாம். எழுபானிரண்டு அடியாரைப்பற்றிச் சேக்கிழார் பாடியுள்ளார். இவருள் ஒன்பது அடியாரைப் பற்றி விளக்கமான வரலாறு கிடையாமையின், அன்னாரது பண்பு மட்டிலும் அறிவித்தமைஇன்றார். நின்ற அறுபான்மூன்று அடியாரைப்பற்றிய விரிவான வரலாற்றைப் பதின்மூன்று சருக்கங்களிலும் பகுத்துப் புகன்றுள்ளார்.

அவற்றுள், இலைமலிந்த சருக்கத்துள் நுழைவோம். பல காட்சிகளை நம்முன் சித்திரித்து நம்மைச் சேக்கிழார் பிணிக்கிறார்.

இதோ ஒரு காட்சி. ஓர் யாறு. அதன் கரையில் ஓர் ஆத்திமரம். அதன் கீழ் ஒரு வேதியச் சிறுவன். அவனுக்கு முன்னே மணலால் ஆக்கப்பட்ட இலிங்கம். அதன்மேல் பையன் பால் சொரிகிறன். மணல் கரையவில்லை. என்னே! யார் அப் பையன்? ஆம். வியப்புத்தான், சேக்கிழாரைக் கேட்போம்.

அவர் வழிச்சென்றல், சோழவள நாட்டில் மண்ணியாற்றங் கரையடுத்த "சேந்தன் அளித்த திருமறையோர் மூதூராகிய செல்வச் சேய்ஞலூர்" தோன்றுகிறது. அம் மூதூர் வாழ் மறையவரை,

"செம்மை வெண்ணீற் றொருமையினு ரிரண்டு பிறப்பின் பிறப்பினர்,
மும்மைத் தழலோம் பியநெறியார், நான்கு வேத முறைபயின்றர்
தம்மை ஐந்து புலனும்பின் செல்லும் தகையார்; அறுதொழிலின்
மெய்ம்மை ஒழுக்கம் ஏழுலகும் போற்றும் மறையோர் விளங்குவது.'

என அறிமுகப் படுத்தும் வாயிலான், ஒன்று முதல் ஏழிறுன எண்களை எழில்பெற அமைத்துச் சிறந்த பொருட் செறிவோடு. வேதியரின் உயர்வுக்குரிய காரணத்தையும் விளக்குகின்றர். விரிக்கிற் பெருகும்.

இம் மறையவர் வாழ் சேரியில் எச்சதத்தன் என்பவருக்கு அவர் மனைவி பவித்திரை யிடத்தில் விசாரசர்மன் என்ற பிள்ளை, "சைவ வாய்மை வளர" உதயம் செய்தார். அவருக்கு ஐந்து ஆண்டு நிரம்பியது. உலக வழக்கப்படி பள்ளியில் சேர்த்தனர். ஆனல், ஆசிரியர் இவர்பால் மாணவனுகும் நிலையில் இவரது அறிவு ஏர்பெற்று இலங்கியது.

"ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து"—

என்ற திருவள்ளுவர் வாக்குக்கேற்ப நூலறிவும், அவ்வறிவின் றொடர்ச்சியால்,

"பூவினிற் கந்தம் பொருந்திய ஆறுபோல்
சீவனுக் குள்ளே சிவமணம் பூத்தது"

என்னும் திருமூலர் திருமந்திரத்திற்கேற்ப "அலகில் கலையின் பொருட்கு எல்லை ஆடுங்கழலே" என உணர்ந்து, சிறுவயதிலேயே பேரின்ப நெறியறியும் "சிறிய பெருந்தகையாராய்" விசாரசருமர் விளங்கி

ஞர். ஒரு நாள் உடன் பயில்வாருடன் யாற்றங்கரையில் உலவும் போது, அங்கு ஆமேய்ப்பான் ஒருவன், தன்னை முட்டவந்த பசுவைக் கோல்கொண்டு சாலப் புடைத்தான். அஃதோ அணிமையில் ஈன்ற பசு. இதைக் கண்ட விசாரசருமர் வருத்தமுற்று, அவனைத் தடுத்துப் பசுவின் சிறப்பைக் காரணங்களோடு விளக்கினர். "எல்லாத் தேவர்களும் முனிவர்களும் தீர்த்தங்களும் நிறைந்த ஒரு தொகுதியையே உடம்பாகக் கொண்டது பசு" என விளக்கினர். "ஆன் நிரை காக்கும் அதுவே மன்றுள் ஆடும் சேவடிகள் வழுத்தும் நெறியாவதும்" என ஆமேய்க்கும் வினையின் சிறப்பையும் அறிவித்தார். நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரத்து, மாதரி என்ற ஆயர்குல மூதாட்டியைக் கவுந்தியடிகள் புகழும் வாயிலாக,

"ஆகாத் தோம்பி ஆப்பயன் அளிக்கும்
கோவலர் வாழ்க்கையோர் கொடும்பா டில்லை."

என இளங்கோவடிகள் இயம்புவது இங்கே நோக்கற்பாலது.

"இனி யானே அந் நிரை மேய்ப்பன்" எனக் கூறி அன்றிருந்து "கோலும் கயிறும் கொண்டு, குழைக் குடுமி அலையக், குலவுமான் தோலும் நூலும் சிறு மார்பில் துவள, அரைக் கோவணம் சுடர, பாலும் பயனும் பெருகவரும் பசுக்கள் மேய்க்கும் பான்மையின"ராய் விசாரசருமர் மாறினர். இவர் மேய்க்க முற்பட்டதிலிருந்து பசுக்கள் முன்னைவிட மிகுதியாகப் பால் கறந்ததால் மறையவர் மனம் மகிழ்ந்தனர். இனிய புல்லும் நீரும் நிறைந்த இடத்தை நாடிச் செலுத்தி ஆக்களுக்கு வரக்கூடிய தீங்கினை எச்சரிக்கையுடன் முன்னேயே நீக்கினமையால் ஓம தேனுக்கள் மிகவும் மகிழ்ந்தன.

மனைக்கண் தாம் விட்டுவந்த கன்றினை மறப்பினும் தம்மைக் கோ மாதாவாகப் பேணிய "மறைக் கன்றுகிய" விசாரசருமரிடத்து அன்பு கனிந்து அணுகி ஆக்களெல்லாம் வழியில் பாலைச் சொரியும் நிலையை உற்றன.

அப் பால் வீண் போவதைக் கண்ட விசாரசருமர் அதனைப் பூசனைக்குப் பயன்படுத்தக் கருதினர். மண்ணிக் கரையின் மணலை இலிங்க உருவாக்கி அம் மணலாலேயே சுற்றுச் சுவர்,

வாயில் முதலியவற்றை அமைத்தார். அங்கே கிடந்த ஆத்திப்பூ முதலியவற்றை இலிங்கத்திற்குச் சாத்தினுர். குடங்களில் பாலைப் பிடித்து இலிங்கத்திற்கு மஞ்சனம் ஆட்டுவித்தார். இவ்வாறு நாட்கள் கழிந்தன. ஆனுலும், வீட்டிற்குச் சென்றவுடன் இயற்கையாகத் தரக்கூடிய பாலின் அளவில் சிறிதுங் குறையா மல் ஓம தேனுக்கள் உதவின. ஆகவே, யாரும் இவர் செயலைக் கண்டிக்கவுமில்லை. ஏன்? அறியவே இல்லையே. ஒரு நாள் இவரது செயலைக் கண்ட ஒருவன் இவரது பத்திப் பண்பையும் செயற்கரிய செய்யும் திறத்தையும் ஓராது அவ்வூர் மறையோரிடம் அறிவித்தனன். அன்னுர் இச் செயலைத் தீங்காக எண்ணி எச்ச தத்தனிடம் முறையிட்டனர். "இதற்கு முன்பு நிகழ்ந்ததை யான் அறியேன்; இனிப் புகுதிற் குற்றம் எனதேயாம்" என்று அவன் உறுதி கூறினுன்.

மறுநாள் விசாரசருமர் மந்தை கொண்டு செல்லுங்கால் அவரது செயலை ஆராய்ந்து தண்டிக்க எண்ணிய எச்சதத்தன் அவர் அறியவாறு பின்சென்று ஒரு குரா மரத்தின்மிசை ஏறி ஒளித்திருந்தான். இந் நிலையிலேதான், முற்கூறிய காட்சி அமை கின்றது. சிறுவன் பாலை இலிங்கத்தின்மேல் சொரிந்த அவ்வள விலே வெகுண்டெழுந்து விசாரசருமரை அணுகினுன் எச்ச தத்தன். விசாரசருமரைப் பெற்றதால் நல்வினையும் அன்னுர் பத்தி நிலையை அறியாததால் தீவினையும் ஒருங்கு எய்தப் பெற்ற வன் என்பதை விளக்க, "அருமை மணியும் அளித்து அதுவே நஞ்சும் அளிக்கும் அரவுபோல், இருமை வினைக்கும் ஒரு வடிவாம் எச்சதத்தன்" என்று அவனைச் சேக்கிழார் கூறியிருப்பது சிந்தைக்குச் செவ்வ மூட்டும்.

இங்ஙனம் வெகுண்டு வந்த எச்சதத்தன், சிறுவனின் செய லுக்குரிய காரணங்களை வினவி யறியாது, ஒரு பெருங்கோல் கொண்டு விசாரசருமரை நையப்புடைத்தான். ஆனுல், பேசல், கேட்டல், காண்டல் முதலிய எச் செய்கையினும் சிவநினைவுறின், பரவசமாகும் அவரது மனம், சிவ பூசனையினும் மஞ்சனமாட்ட லினுமே ஈடுபட்டிருந்ததால் புறப் பொறியின்கண் நிகழுபவை அவரது மன ஒருமைப்பாட்டை மாற்றவில்லை. பாலினை இலிங்கத்

தின் மீதிலே இடையருது சொரிந்தார். சினந்தணியாத் தகப்பன் மணற் சாமிக்கு அமைக்கப்பெற்ற அப் பாற் குடத்தைக் காலால் எற்றினன்.

தான் ஊறுபட்டாலும் அதைக் கருதாது தன்ஞற் போற்றப் படும் பொருளுக்கு இடையூறு வருங்கால் அதை நீக்க முற் பட்டுச் செய்தார்மீது சீற்றங் கொள்வதே நன்மக்கள் இயல் பாகும். அதேபோல் விசாரசருமர் நிலைமையும் மாறிற்று. மெய் மறந்து இலிங்க உருவிலேயே ஈடுபட்டிருந்தவர் இடையூற்றினை உடனே உணர்ந்து அதனைச் செய்தாரை ஒறுக்க உளங்கொண் டார். எதிரிலே கிடந்த ஒரு கோலை எடுத்தார். வல்லானுக்குப் புல்லும் ஆயுதமல்லவா? அது உடனே ஒரு மழுவாக மாறிற்று. தீங்கு செய்தவன் தன்னைப் பெற்றவனும் தன்னல் வணங்கப் பெறுதற்கு உரியவனும் ஆவன் என்று உணர்ந்தும், செய்த பாவத்திற்கு அறநெறிப்படி தண்டித்தார். மழுவை அவன் காலில் எறிந்தார். எற்றிய கால் அற்று விழ்ந்தது. ஈன்ற தகப்பனது காலை வெட்டியது மிகக் கடிய பாவம் என்றே பொதுவாக எண்ணுவர். ஆனல் ஊன்றி நோக்குவோரே உண்மை உணர்வர். "அரனடிக்கு அன்பு செய்வார் பாவமும் அறமதாகும்" என்கிறது சிவ ஞான சித்தியார். திருக்களிற்றுப்படியார் என்ற நூலிற் கூறியாங்கு தீவினை செய்வதில் வலிவினை, மெலிவினை என இரண்டுவகை யுண்டு. தன்னை மறந்து சிவ நினைவில் ஒன்றுபட்டு எல்லாம் சிவ மாய்ப் பாவித்து நின்ற நிலையில், ஞாலம் அறியப் பிழைபுரிந்த எச்ச தத்தனைத்" தகப்பன் எனக் கருதாது 'சிவத்துரோகி' எனவே துணிந்து அவன் காலை எறிந்து பாவம் போக்கிச் சிவலோகத் துய்த்தார். இதனுனன்றே அன்பாகிய பண்பே பிழம்பாய் அமைந்தவர் கண்ணப்பர் என்னும் எண்ணங்கொண்டு "கண் ணப்பன் ஒப்பதோர் அன்பு" என்று மணிவாசகப் பெருமான் திருவாய்மலர்ந்திருப்பினும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் "எறிந்த சண்டி, இடந்த கண்ணப்பர்" என்று தன் கண்ணையே அளித்த வரினும் இவரே சிறந்த சிவானுபவ முதிர்ச்சியுடையவர் என மதித்து இவருக்கு முதன்மை அளிக்கிருர். மற்றும் ஞானசம் பந்தர், அப்பர், மணிவாசகர், சேந்தனர் முதலிய பலராலும் இவரது செய்கை போற்றப்படுகின்றன. ஆணவ முதலிய

மலங் கரைத்து, யான் எனது என்னும் செருக்கறுத்து, மெய்யுணர்ந்து, இவ்வுலக நினைவற்று, இறைவனேடியைவுற்று நின்ற குற்றமற்ற, "பத்தி முதிர்ந்த பாலகனுர்" மீண்டும் மஞ்சன மாட்டலிலே ஈடுபட்டார்.

அந்நிலையில் சிவபிரான் தேவியோடும் காதல் கூர அணைந்தார். அடிபணிந்த "ஞான முதிர்வுற்ற பாலகரை" எடுத்து அணைத்துக்கொண்டார் எம்பெருமான். "நம் பொருட்டால் ஈன்ற தாதை விழ எறிந்தாய், அடுத்த தாதை இனி உனக்கு நாம்" என்று அவ் வீரத் தியாகியை "மடுத்த கருணையினுல் உச்சி மோந்து மகிழ் பூத்தார்" மாரனை மாய்த்த மாதொரு பாகத்தார். இவ்வுடல் மாயைப் பிண்டம் என்பதை விளக்க மணிமேகலை போன்ற நூற்கள் "பழுது" எனக் கூறும் இப்பூவுலகத்தின் தன்மை மாறி,

"செங்கண் விடையார் திருமலர்க்கை தீண்டப் பெற்ற சிறுவனுர்
அங்கண் மாயை யாக்கையின்மேல் அளவின் றுயர்ந்த சிவமயமாய்ப்
பொங்கி யெழுந்த திருவருளின் மூழ்கிப் பூமேல் அயன்முதலாம்
துங்க அமரர் துதிசெய்து சூழ்ந்த ஒளியிற் ரேன்றினுர்."

மிக்க தொண்டின் பயனுய் அரிதின் பெறவேண்டிய சாலோக, சாமீப, சாருப், சாயுச்சிய நிலைகளுள்ளே சிவசாருப நிலையை இவ்வளவு இளமையில் இன்னுரெய்தியது மற்றைய எந்த அடியாரும் செய்யாத பெரும் செயலே, இதுமட்டுமோ!

இறைவன் தானே கொன்றை மாலையை இவருக்குச் சூட்டிச் சண்டேசுரர் பதமாகிய ஆன்ற அடியார்க்கு அதிபதி நிலையை அருளினுர். சோழர்காலத்துச் சிற்பி யொருவன் கங்கை கொண்ட சோழபுரத்துக் கோயிலில் இக் காட்சியை இன்று நாம் கண்டு களிக்குமாறு சிலையிலமைத்துள்ளான். "அனைத்தும் நாம் உண்ட கலமும் உடுப்பனவும் சூடுவனவும் உனக்காகச் சண்டீ சனுமாம் பதந் தந்தோம்" என்றருளினுர் ஆண்டவன். "அந்த உடம்போடேயே அரனுர் மகனுகி" "சைவநல்லாறு ஓங்க" நம் பெருமான் இன்றும் செவிட்டுச் சாமி என்று தவருக அழைக்கப்பட்டுக் கோயில் கொண்டுள்ளார். ஆகம விதிப்படி சண்டேசுர பூசை செய்தாற்ருன் சிவபூசனையின் பலன் கிட்டும். சிவபிரானுக்குப் பூசனையில் உதவியவற்றில் ஒரு பகுதியைச் சண்டேசுரருக்

களித்து அப் பூசனையின் பயனை இவர்மாட்டுப் பெறவேண்டியது விதி. இதைச் சரியாக அறியாது நமது ஆடையிலிருந்து ஒரு நூலை எடுத்தெறிந்து சிறு ஒலியுண்டாக்கி விரைவு, விரைவாக ஆலயத்திலிருந்து மீளுகிறோம். இது தவறு. இவ் வரலாற்றிற்கு மூலமாகிய "மெய்ம்மையே திருமேனி வழிபடாநிற்க வெகுண்டெழுந்த தாதையை மழுவினா லெறிந்த, அம்மையான் அடிச்சண்டிப் பெருமானுக் கடியேன்" என்ற சுந்தரர் மொழிக்கேற்ப, மெய்மறந்து சிவோ கம்பாவனை என்ற நிலையிலிருந்து அருளும் எம்பிரானிடத்துப் பணிந்து, நயந்து, நம் பூசனையை அறிவித்து, அருள்பெறவேண்டுவது நமது கடன்.

உலகத்து மக்களைப் பேணுதற்கும் தேவபூசனைக்கும் உதவும் பசுக்களை நன்கு வளர்க்கவேண்டுமென்பதும்; அது இறைவனுக்கு இன்பம் ஊட்ட வல்ல தென்பதும்; மாயை நீங்கி மெய்ம்மறந்த நிலையிலே உண்மைப் பூசனை புரிவார்,

> "யான் என(து) என்னும் செருக்(கு) அறுப்பான் வானோர்க்(கு)
> உயர்ந்த உலகம் புகும்"

என்னும் வள்ளுவர் வாய்மொழிப்படி சிவானுபூதி நிலை எய்துவர் என்பதும்; பத்தியின் பயனைப் பெற வயது முறை வேண்டுவ தில்லை என்பதும்; இவ்வடியார் வரலாற்றினின்றும் பெறப்படும் உண்மைகளாம்.

இக்காலத்துப் பெரியார் ஒருவர் [என் ஆசிரியரும், பாட்டனாரும், புதுக்கோட்டை வித்துவானுமாகிய திரு. R. உலகநாத பிள்ளையவர்கள்] இயற்றியுள்ள பெரியபுராண வெண்பா அந்தாதி, சண்டேசுர நாயனார் சரித்திரம் சாற்றும். இப் பாட்டோடு இதை முடிக்கின்றேன்.

> "பெத்தத்தும் முத்தத்தும் பெம்மானே அத்தனென்னும்
> பத்தியால் கன்மம்வெலற் பாலதென்றும்—அத்தன்கால்
> அண்டேச ராடலுக்காம் ஆன்பாலை எற்ற வெட்டிச்
> சண்டேச ரானார் தவசு."

அமெரிக்க நாட்டு ஆங்கிலக் கவிஞர்

[வித்துவான் மு. இராசாக்கண்ணனார் B. O. L.]

(உசுO-ஆம் பக்கத் தொடர்ச்சி)

இனி இவர் வாழ்க்கையில் சில குறிப்புக்களைக் கண்டு மேற் செல்லுவோம்.

இவர் ஆசிரியராக இருபத்தைந்தாண்டுகளுக்கு மேல் உழைத்தவர். கற்பிக்குங் காலத்துத் தம்மோடு ஒன்றிய உள்ளம் இல்லாத மாணவர்களிடம் இவர் எத்தகைய தொடர்பையும் வைத்துக்கொள்ள வில்லை. மாணவர்களுக்குரிய தகுதியைப் பெருதவர்கள் அவர்கள் என்பதும், கல்லூரிக்குக் கட்டணம் செலுத்துமியல்பால் மாணவர்கள் ஆகியோர் அம் மாண்பு இல் லாதோர் என்பதும் அவர் கருத்துக்கள். அவர்களுக்காகச் சிறிதும் இவர் வருந்துவது இல்லை.

பாடம் கற்பிற்கும் காலத்தில் பிற புலவர்களின் கருத்துக் களானும் அவற்றை ஒரு பொறி ஒப்புவிப்பது போல் சொல்லிவைக்க மாட்டார். அக் கருத்துக்களைத் தாம் உணர்ந்து தாமே தக்க சொற்களைத் தேடிக், கேட்போர், சொல்லுகின்ற புலவர் கருத்துக்களே அவை என்று கருதுமாறு சொல்லும் தனிப்பெருமை இவரிடத்திருந்தது என்பது குறிப்பிடத்தகுந்தது.

இவர் கற்ற மொழிகள் ஒன்று இரண்டு எனும் எண்ணுள் அடங்குவன அல்ல. பலப்பல ஆயினும் அவை அவர் வாழ் நாள் முழுவதும் இன்பம் பயந்தன அல்ல. அவர் கற்ற இலத்தீன் முதலிய பண்டைச் செம்மொழிகள், பழம் பெருமையையும் பண்டை நாள் சிறப்புக்களையும் உணர்ந்து மகிழ்தற்குப் பயன் பட்டன. அவற்றுள் சிறந்தனவாகக் காணப்பட்டவை அவர் தம் தாய்மொழியில் மொழிபெயர்த்துக் கொள்ளப்படுதற்கும் உதவியாய் இருந்தன. ஆனல் படித்துத் தினைத்து மகிழ்ந்து தம்மை மறந்து ஈடுபடுதற்கு அவை ஆக்கம் தந்தில, இக் கருத் தினை ஒட்டிப் 'பேரெட் வெண்டில்' கூறிய கூற்றைக் காணுங்கள்.

---

* Barret Wendell

"The languages which he learned so eagerly never seemed to him deserving of life long study for themselves; they were merely vehicles of expression which carried him into new and wonderful worlds beautiful old humanity."

தமிழ்த் தென்றல் மூழ்கும் தண்ணளியீர்!

இதனைக் கேட்கும் தங்கள் உள்ளங்களில் சில கருத்துக்கள் மேலெழாமல் போகா. தாய்மொழி விடுத்துப் பிறமொழி கற்றல் தீமையா? நன்மையா? தீமை இல்லை என்று சிலர் வற்புறுத்திக் கூறுகின்றார்கள். உண்மையே. எப்போது? தாய் மொழிக்கு அரண்செய்யும் நெறியில் பிறமொழி கற்கப்படும் பொழுது என்க. தாய்மொழிவிடுத்துப் பிறமொழியில் எத்துணை யளவு ஊறிக் கிடப் பினும் அதனிடத்து நவில்தோறும் நயம் காணல் அரிது! அரிது!! இம் முடிபினையே பன்மொழித் தலைமை சான்ற அறிஞரும் முடிபாகக் கண்டார். ஆதலின் பிறமொழி வழி ஆழ்ந்து தாய் மொழியைத் தள்ளும் பெரியோர்களே! தங்கள்பால் ஒரு வேண்டுகோள். நம்மைப் பெற்று வளர்த்து நாம் தள்ளினும் தான் தள்ளாது விரும்பும் நம் தமிழன்னையை மறந்து பிற நாட்டி னின்றும் வந்தவர்களைப் போன்று பிறமொழிச் சொல்லையே எல்லை இன்றிப் பேசிப் பழகிப் பின்வரும் குடிமக்களையும் கெடுக் கும் வழக்கத்தை விட்டொழியுங்கள்.

சில நாள்களுக்கு முன்னர் மின்வண்டியில் நடந்ததொரு நிகழ்ச்சியை இங்குக் கூறுதிருக்க உள்ளம் இல்லை.

மின்வண்டி கிண்டியை நோக்கிச் சென்றுகொண் டிருக் கிறது. நானிருந்த வண்டியிலிருந்தோரில் பெரும்பாலோர் ஆங் கிலப்பட்டம் பெற்றவர் என்பதை அவர்தம் உடை நடை கையி லுள்ள கற்றைத்தாள் முதலியவற்றால் அறியமுடிந்தது. கல்லூரி மாணவர் பெரும்பாலோரும் பள்ளி மாணவர் சிறுபான்மையின ரும் இருந்தனர். இரு கிழவியரும் இருந்தனர். அவ் வேளை வானம் கருமேகத்தால் மூடுண்டது; மழைத்துளி கருணையுடன் மண்நோக்கி விரைந்தது. மின்சாரக் கம்பியில் நேர்ந்த தவறுத லால் அக் கம்பிகள் அனற்பிழம்பைக் கக்கத்தொடங்கின. வண்டி யிலிருந்த அத்துணைமக்கள் வாயிலும்,

Fire ! Fire ! Help yourselves !!!

[நெருப்பு ! நெருப்பு !! தப்பித்துக்கொள்ளுங்கள் !!!]
என்ற கூக்குரல் எழுந்தது. ஒவ்வொருவரும் நீமுன் நான்முன் என்று பாய்ந்து வெளிநோக்கி முன்னேறினர்.

வாயிலருகிலிருந்த கிழவியார் இருவருக்கும் இவர்கள் பேச்சுப் புரியவில்லை; ஆனால் பரபரப்புத் திகில் உண்டாக்க அவர்கள் வெளியேற முயற்சி செய்யும் அளவில், நாகரிகப் பெருமக்கள் காலால் உதையுண்டு உந்துண்டு பந்தைப்போல் கீழே உருட்டப்பட்டனர். இருவரும் பெருங் காயத்தை அடைந்தனர்! உயிரோடவில்லை !!

இதனைச் சிந்தித்துப் பாருங்கள்! உயிருக்கே தொல்லை நேர்ந்தகாலத்தும், பட்டினத்து வாழ்வோர் எம் மொழியைக் கைக்கொள்ளுகின்றனர். என்னே ! இக் காலப்போக்கு !

உண்மை

உண்மை என்னும் நன்மலர்கள்
உள்ளச் செடியில் பூப்பனவாம்
தண்மை அழகு மணமெல்லாம்
தங்கப்பெற்று வந்திடுமே. 1

தாழ்ந்தநீரின் அடிப்பாகம்
தாழ்ந்தோர் முத்தை எடுப்பதுபோல்
ஆழ்ந்து நீயும் தேடுவையேல்
அரிய உண்மை பெறுவாயே. 2

கலங்கும் நீரில் முகத்தோற்றம்
காண இயலாத் தன்மைபோல்
உலைந்த மக்கள் வாழ்க்கையினில்
உண்மை காண இயலாதே. 3

—கோட்டாறு தே. ப. பெருமாள்

துறவு

"வித்துவான் K. கோவிந்தன்"

"ஒரில் நெய்தல் கறங்க, ஒரில்
ஈர்ந்தண் முழவின் பாணி ததும்ப,
புணர்ந்தோர் பூவணி அணிய, பிரிந்தோர்
பைதல் உண்கண் பனிவார்பு உறைப்ப,
படைத்தோன் மன்றஅப் பண்பி லாளன்;
இன்னாது அம்ம! இவ்வுலகம்;
இனிய காண்க இதன் இயல்பு உணர்ந்தோரே."

—பக்குடுக்கை நன்கணியார்.

இல்லற வாழ்க்கையினை மேற்கொண்ட தலைமக்கள் இருவரும், இல்லற நெறியில் தத்தமக்கு ஓதிய அறநெறியில் ஒரு சிறிதும் பிறழாது நின்றுபேணி, மனக்கினிய மக்களையும் பெற்று வாழ்ந்தஅந் நிலையோடு அமையாமல், உயிர், உடல், உடைமை முதலாயின தாம் கண்ட நிலையிலேயே நில்லாது நாளும் அழியும் இயல்புடையனவாய் இருத்தலைக் கண்டு, அவற்றிடத்தே வெறுப்புற்று, என்றும் அழியாததாய், இன்பமே நிறைந்ததாய் உள்ள ஒரு நிலையைப் பெற விரும்பி மேற்கொண்ட நெறியே துறவுநெறியாம்.

இத் துறவு நெறி, உலகில் உள்ள யாவராலும் விரும்பி மேற்கொள்ளப்படுகின்றது எனினும், அதை மேற்கொள்ளும் முறைக்கண் வேறுபாடுகள் பல தோன்றுகின்றன; சிலர் இல்லறத்தை இனிதாற்றிய பின்னர், உலகப் பொருள்களிடத்தே வெறுப்புற்று, இயல்பாகவே, துறவிடத்தே தம் உள்ளம் செல்ல, அதை மேற்கொள்ளுகின்றனர்; வேறு சிலர், உலகப் பொருள்களின் இயல்பினைத் தாம் ஓராதே, 'உலகமும், உலகப் பொருள்களும் நிலையற்றன' எனத் தம் முன்னுள்ளோர் கூறியதையே உட்கொண்டு அவ்வுலகப் பொருள்களின் நீங்கி, துறவினை மேற்கொள்ளுகின்றனர். இவ்விரண்டனுள், உலகமும், உலகப் பொருள்களும் ஆய இவற்றின் உண்மை இயல்புகளை, அவற்றோடு கூடி வாழ்ந்த முறையால், தம் அறிவின் துணையால், தாமே உள்ளவாறு உணர்ந்து, அதன் காரணமாக, இயல்பாகவே

அவற்றிடத்தே பற்று ஒழிய மேற்கொண்ட துறவே வள்ளுவர் போற்றிய துறவாம். இத்துறவு நெறியே, சாலச் சிறந்த நெறியாதலையும், இயற்கையோடியைந்த இன்ப நெறியாதலையும் விளக்கி மேலே செல்வாம்.

உலகில் வாழும் மக்கள் அனைவரும், ஒத்த நிலையினராக, ஒத்த கருத்தினராக இருத்தல் இல்லை. உலகின் இயற்கைத் தோற்றங்களைக் கண்டு மகிழும் கண்களைப் பெற்று வாழும் மக்களிடையே அக் கண்களையும் பெறாத மக்களும் வாழ்கின்றனர்; இயற்கைப் பொருள்களின் இன்னோசையைக் கேட்டு மகிழும் காதினைப் பெற்று வாழும் மக்களிடையே, கேளாக் காதைப் பெற்று விளங்கும் மக்களும் உளர்; பல்வகை முயற்சியால், பயன் பல பெற்று வாழ்தற்கேதுவாய கால்களைப் பெற்று வாழும் மக்களிடையே, முடம்பட்ட மக்களும் நின்று காட்சி அளிக்கின்றனர். இவ்வாறு உலகை ஒரு முறை நோக்குவார் ஒவ்வொருவரும், உலகம், "காணார், கேளார், கான்முடப்பட்டோர், பேணுநர் இல்லோர், பிணி நடுக்குற்றோர்" முதலாய பல்வேறு மக்களையும் கொண்டு விளங்குவதைக் காண்பர். தாங்களே முயற்சிசெய்து பொருள்பெற்று, உண்டு வாழ்தற்கியலாத நிலையில் உள்ள இவர்களும், இவர்தம் உயிர், உடலைவிட்டு நீங்கும் வரை பேணப்பட வேண்டியவராகவே உள்ளனர். உயிர் நின்ற உடல் பேணப்படுதல் வேண்டுமாயின், அதற்கு உண்டி இன்றியமையாததாகும்; "உண்டி முதற்றே உணவின் பிண்டம்." தாமே முயற்சிசெய்து உயிரைப் பேணிக்கொள்ள இயலாத நிலையில் உள்ள இவர்தம் உயிரை, உண்டி கொடுத்துப் பேணுவார், இல்லற நெறியில் நிற்பவரேயாவர். "துறந்தார்க்கும், துவ்வாதவர்க்கும், இறந்தார்க்கும் இல்வாழ்வான் என்பான் துணை" என்பது திருக்குறள். இவ்வாறு, தாம் மட்டில் உயர்நிலை உலகம் எய்தி இன்புற முயலாது, பிறரையும் பேணி உடனழைத்துச் செல்லும் இவ்வில்லறத்தார் செயல் போற்றுதற்குரியதேயாம்; இந்நெறியே, தம் தொண்டினைத் தவறாது செய்துவருவார், பிறர் அரிதிலே முயன்று பெறும் உயர்நிலை உலக இன்பத்தை எளிதில் அடைவர் என்பது உறுதி. "தன் கடன் அடியேனையும் தாங்குதல், என் கடன் பணி செய்து கிடப்பதே" என்பர் நாவரசர். இவ்வாறு, தம் உடன்

வாழும் மக்களுக்கும் நன்மை பல செய்து அவரையும் தாம் பெறும் உயர்நிலை உலகத்தைப் பெறச் செய்யாது, தாம் மட்டில் தனித்துப் பெற விழைவது அறமல்ல செயலாம் என்பதை,

"துயர்நிலை உலகம் காத்தல் இன்றி, நீ
உயர்நிலை உலகம் வேட்டனை ஆயின்,
இறுதி உயிர்கள் எய்தவும், இறைவ!
பெறுதி விரும்பினை ஆகுவை அன்றே?
தன் உயிர்க்கு இரங்கான், பிறஉயிர் ஓம்பும்,
மன்உயிர் முதல்வன் அறமும் ஈ தன்றால்;
மதிமாறு ஓர்ந்தனை ; மன்னவ!"

என்று துறவு மேற்கொள்ள விரும்பிய அரசன் ஒருவனை நோக்கி அவன் அமைச்சன் கூறுவனவற்றானும் அறிக. இதனால், உலகில் வாழும் மக்கள் அனைவரையும், உயர்நிலை உலகம் அடையச் செய்த பின்னர், தாம் அவ்வுலகை அடைதலே நேரியமுறையாம் என்பதும், அஃது இல்வாழ்வார்க்கே இயலுவதொன்றாம் என்பதும் பெறப்படும். படவே, அவ்வில்லற வாழ்க்கையினை மேற்கொள்ளாது, துறவினை மேற்கொள்ளுதல் நெறியல்லா நெறியாம் என்பது தெளிவாம்.

இளமையில் இன்பத்தை ஊட்டிய உடல் உறுப்புக்கள், முதுமையில் வெறுப்பினை விளைத்தலையும், உரமும், உறுதியும் உடையதாகக் கருதப்பட்ட உடல், உயிர் நீங்கியபின் அழிந்தொழிவதையும், நிலைபேறுடையதாகக் கருதப்பட்ட பொருள், நிலைகலங்கிக் கெடுவதையும் கண்டாலொழிய, அவற்றிடத்தே வெறுப்பு இயல்பாகத் தோன்றுவதில்லை. காண்பதற்கு இன்பத்தைத் தரும் விளக்கொளியினைக் குழந்தை, தொட முயலுந்தோறும், நாம் அதைத் தடை செய்யின் குழந்தைக்கு அதைத் தொடுதல் வேண்டும் என்று தோன்றிய விருப்பம், குறைவதேயில்லை. மாறாகப் பெருகி வளர்கின்றது; ஒரு முறை அவ் விளக்கினைத் தொட்டு, அதன் வெம்மையால் துன்புற்ற காலத்தேதான் அதன்பால் வெறுப்பு உண்டாகின்றது. இதுபோன்றே, இன்பம் தருவன போன்று தோன்றும் உலகப் பொருள்களைப் பெற்று, அவற்றோடு கூடிவாழ்ந்த காலத்தேதான், அவற்றின்

உண்மை இயல்பு—இன்பம் விளைப்பன போன்று, துன்பம் விளைக்கும் இயல்பு—தோன்றி அப் பொருள்களிடத்தே கொண்டிருந்த பற்று ஒழிய வெறுப்புத் தோன்றுமே யல்லாது, அப் பொருள்களைப் பெற்று அவற்றோடு கூடி வாழாத காலத்தே, அப் பொருளிடத்தில் உண்மையிலேயே வெறுப்புத் தோன்றுவது இல்லை ; பற்று அற்று இருக்க வலிதில் முயற்சிசெய்தால், உண்மையில் பற்று அறுவதும் இல்லை ; மாறாக மிக்கு விளங்குகின்றது.

இயற்கையோடு இயைந்து இன்பம் செறிந்த வாழ்க்கையினையே வள்ளுவர் விழைகின்றார். ஆதலின், அவர் இல்லறத்தின் வழித்தாகிய துறவறமே சாலச் சிறந்தது என்ற நோக்குடையராய், இல்லறத்தின் பின்னரே துறவினைக் கூறுவதோடு அமையாது,

" அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின், புறத்தாற்றில்
போஒய்ப் பெறுவது எவன் ? "

" இயல்பினால் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்,
முயல்வாருள் எல்லாம் தலை. "

" ஆற்றின் ஒழுக்கி, அறன்இழுக்கா இல்வாழ்க்கை,
நோற்பாரின் நோன்மை உடைத்து. "

" துறந்தாரின் தூய்மை உடையர் ; இறந்தார்வாய்
இன்னாச்சொல் நோற்கிற் பவர். "

" உண்ணாது நோற்பார் பெரியர்; பிறர்சொல்லும்
இன்னாச்சொல் நோற்பாரின் பின். "

" ஆற்றுவார் ஆற்றல் பசிஆற்றல் ; அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின். "

என்ற தம் அழகிய குறள்வெண்பாக்களினால் அவ் வில்லறத்தின் பெருமையினை வாயார வாழ்த்துவாராயினர்.

(தொடரும்)

குணமும் நலமும் குழந்தையில் எப்படி?

[சேலம். முத்து. நமச்சிவாயம் L. I. M.]

தம்பொருள் என்ப தம் மக்கள். அவர் பொருள் வினையின் திறத்தது. ஆராயுங் காலையில் வினையின் வகை முத்திறப்படும் என்னலாம். அவையாவன :—

1. பெற்றோரின் வினை 2. புற வினைகள் (கால தேச வர்த்தமானங்களைப் பெரிதுந் தழுவினவை. 3. தன் வினை.

இவ்வகையான வினைகளின் பயன், குழந்தைகளினிடத்து எவ்வாறு அமைகின்றது என்பதையும், இதனால், வாழ்க்கையின் போக்கில் நடை உடை பாவனை முதலிய குணநலங்கள் எவ்வாறு அமைகின்றன என்பதையும் பற்றிச் சிறிது கருதுவாம்.

கருத்தொருமித்த காதலிருவர் ஆதரவோடு நடத்தும் இன்ப வாழ்வில் கருவுற்றுயிர்த்த குழவி இனிது; தலை சிறந்தது. நூலைப்போல் சேலை, தாயைப்போல் பிள்ளை. பெற்றோரின் தகைமையும் தகைமையின்மையும் எச்சம் காட்டும். மங்கலமென்னும் மனைமாட்சிக்கு நன்கலமாவது நன்மக்கட் பேறு. தாய் தந்தையரின் தன்மையே யன்றி, முன்னோர்களின் குண நலங்களும், வழக்களும் தலைமுறைதோறும் வரிசையாகவும், ஒன்று விட்டொன்றும், இடைப்பல விட்டும், தாய் வழியாகவும், தந்தை வழியாகவும், இரண்டுங் கலந்தும் விளங்கிவரும். உலகின் வளர்ச்சியும் தளர்ச்சியும் ஒப்ப, மக்களும், உயர்தலும் தாழ்தலும் உண்டு. உலகின் இயற்கை இதுவேயாகும்.

இயற்கையாலன்றி, உலைவின்றித் தாழாதுளுற்றும் முயற்சியின் பயனாகிய செயற்கையால் மிகுதியாக வளர்தலுங் கூடும். இதுவும் உலக இயற்கைதான்.

நேரான காரணர்களா யிருக்கின்றமையால், அன்னையும் பிதாவும் குழந்தையின் வளர்ச்சிக்கும், மேன்மை தாழ்மைக்கும் மிக முதன்மையான பொறுப்பாளிகளாக இருக்கிறார்கள்.

குழந்தையின் வாழ்வு இருவகைத்து. அவையாவன :—

1. கருவுற்ற நாள்முதல் கருப்பையு ளிருக்குங் காலம்.
2. கருவுயிர்த்த பின்னர் இருக்குங் காலம்.

கருவுற்ற நாள்முதல், உயிர்க்கும் நாள்வரை கருவின் வளர்ச்சிக்கும் குண நலங்களுக்கும் தாயுந் தந்தையுமே காரணம்.

அக்காலத்து, முன்னதேயன்றி, வாழ்க்கைப் போக்கின் எண்ணங்களும், செய்கைகளும், உணவுகளுமான அகக்காரணங்களும புறக்காரணங்களும் குழந்தையின் தன்மையைப் பெரும்பான்மையாக அமைத்துவிடுகின்றன. இதன் உண்மை மிகுதி; அறிதற்கு இலேசில் அரிது. வேண்டின் விரிப்பாம்.

கருவுயிர்த்தபின் குழவியின் வளர்ச்சியைப் பண்படுத்தும் முறைகளை ஒரு சிறிது எண்ணுவோம்.

குழந்தை பிறந்த பின்னரும் பாலுண்ணுங் காலத்தில் தாயின் உணவு, செயல், எண்ணம் முதலியவை இரத்தத்தில் ஊறிப் பாலின் வழியாய் ஊட்டப்படுகின்றன. எண்ணத்தின் விரைந்த உந்துதலால் எழும் அலைகள்மட்டும் எக்காலத்தும் பரவிச்சென்று குழந்தைகளைப் பாதிக்கின்றன.

பாலில்லையாயின், தாதிகளைப் பால்கொடுக்க அமர்த்துவதினும் அறிவீனம் வேறொன்றின்று. உடலும் உணர்வும் ஒருங்கே கெடும். ஆவின் பாலும், ஆட்டின் பாலும் அதனிற் சிறந்தது. பாலிருந்துங் கொடாமலிருப்பது நாகரிகமன்று. அது மடமையின் சிகரம். தாயின்பால் குழந்தையின் பிறப்புரிமை.

ஒத்த வயதுடைய, தாய்க்கு உடன்பிறப்பினரின் பால் கொடுக்கலாமெனினும், மற்றக் குழந்தையைக் கருதுமிடத்து அது முறையின்மையாகும்.

குழந்தையைத், தாயும், சிறுபொழுதும் வேண்டும்பொழுதும் தந்தையும் எடுத்துவைத்துச் சீருடன் பாராட்டி அன்பாய் வளர்க்காமல், உணவுக்காலம் ஒரு சிறிதன்றி மற்றெக் காலத்துப் ஆட்களிடம் விட்டு வைப்பது சிறந்ததன்று. அது பின்னால் பல தீமைகளுக்கு அடிகோலிக்கொள்ளுதலாகும். தாய் பாலூட்டும் ஓர் இயந்திரமன்று. இன்மை காரணமாகத் தன் பால் ஊட்டாத தாய், குழந்தைக்குப் புட்டிப் பாலையும் தாதியையே கொடுக்கச் செய்வதினும் தீங்கொன்றில்லை.

குழந்தைக்கு இயற்கையாய் வளரும் தாயிடத்தன்பு, செயற்கையாய்ச் செல்லும் தாதியினிடத்து. பின்பு அதுவே இயற்கையு

மாகும். தாயைக் கண்டதுந் தாவியோடாது, பரிந்து அழைத்தும் போகேனென்று அழுது புரண்டு, தாதியினிடத்துத் தாவிச் செல்லும் காட்சியினுங் கொடியதொன்றுண்டோ?

ஒவ்வொரு நாளும் ஒருசிறு பொழுதும், ஓய்வு வேளைகளில், தாய் வேறு வேலையாய் இருக்கும்பொழுதும், குழந்தையைப் பேணவேண்டியது தந்தையின் கடமை. தாயேனும், குழந்தையேனும் நோய்வாய்ப்பட்டிருப்பின், தன் தொழிலையும், தேவையெனின் வேண்டுமளவும் விட்டுக், குழந்தையையும் அதன் தாயையும் பேணவேண்டியது தந்தையின் முதற்கடன்.

குழந்தை தாயினிடம் பெறுவது அன்பும் அறிவும்: தந்தை தருவது அறிவும் அன்பும். வாழ்க்கைத் துணை தருவது அன்பும், இன்பும், அறிவும் (முறையே) வாழ்க்கையில். குழந்தை வளர்ந்த காலையில், கண்டு கடைப்பிடித்து உயிரினும் ஓம்புவது விழுப்பந் தரும் ஒழுக்கம்.

தொட்டிற் பழக்கஞ் சுடுகாடு மட்டும். தொட்டிற் பிடித்து ஆட்டுங் கைதான், பட்டிமையால் பாரைப் பிடித்தும் ஆட்டுங் கை. குழந்தைகளையும், அவர்கள் உடை முதலியவைகளையும் என்றுந் தூய்மையாகவும், சிறந்த முறையிலும் வைத்திருக்க வேண்டும். புழுதியிற் சென்று புரளவும், படியிற் சென்று உருளவும் விடக்கூடாது. வண்டிகளும் மாடுகளும் மக்களும் மிகுந்த நடமாட்டமில்லா ஆறு, கடற்கரை முதலிய மணற்பாங்கான இடங்களிலும், புற்றரைகளிலும் ஆடிப் பாடி ஓடி விளையாட விட வேண்டும். வீட்டினுள்ளும், வீதியிற் செல்லாது, அடுப்பு,விளக்கு, நீர்நிலை, மரத்தினடி செல்லாது தவழ்ந்து விளையாட விடலாம்.

இன்னிசையும், இன்சொல்லும், நற்குணமும் மற்றவையோடு பொருந்தியிருக்கும் தாலாட்டுகள் தனிப்பெருமை யுடையன. அவைகளைக் காணுதல் அரிது இப்பொழுது.

காதலர் கண்ட கனி சிறுமகவு. அன்பும், இன்பும், அமைதியும், அறிவும் பொங்கும் இல்லின் குழவியும் அதுவாம். நாளும் வளர வளர, அறிவும் வளரும் அதனுடன் ஒத்தே. பசியென்னும் வேட்கையே முதலில் உண்டாவது. அழுகையால் அதனை அறிவித்து உண்டு அடங்கும். ஒவ்வொன்றாக ஐந்து புலன்களும் சிறிது சிறிதாக விரியும். அறிவும் அதனோடு சிறிது சிறிதாக

மலர்ந்து மணத்தோடு விளங்கத் தொடங்கும். இந்தப் பருவந் தான் குழந்தைகளுக்கு மிக முதன்மையானது. ஒவ்வொன்றை யுங் கண்டு வியப்படையும்; மகிழ்வடையும்; ஆடும்; பாடும்; குதிக்கும். ஒருவர் செயல் முதலியவைகளைக் கண்டு அதுபோலத் தானுஞ் செய்ய விரும்பி முயலும். பார்ப்பதேயன்றிக் கேட்ட துஞ் செய்யும். இக்காலத்திற்முன் மனத்தினிடத்துப் பசுமரத் தாணிபோல் அனைத்தும் பதியும். விட்ட எலும்புபோல் ஒட்டும். உருக்கின உலோகம் எந்த அச்சிலும் பாய்ந்துவிடும்.

சிறு குழந்தையொன்று புதிதாய்ப் பிறக்குங்காலையில் முன் னிருக்குங் குழந்தைகட்கு அம் மகவைக் காட்டி அதன்மேல் அன்பாயும் ஆதரவாயும் இருக்கும்படி பயிற்றுதல் வேண்டும்.

ஒரு சிறிது நாமும், பெரிதும், பிறந்த குழந்தையைப் பார்க்க வரும் மற்றவர்களும், முன்னிருக்கும் பிள்ளைகளிடம் "பாப்பா! இப்போ இங்கே ஒரு சின்ன பாப்பா வந்துவிட்டது. இனிமேல் அம்மா அதைத்தான் அன்பாய்க் கவனிப்பாள்" என்பது போன்ற வார்த்தைகள் பேசக்கூடாது. இது பொருமை, அகங் காரம், கோபம் முதலியவைகளைக் குழந்தைமேல் உண்டுபண் ணும். வெறுப்பும் பகைமையும் ஏற்பட ஏதுவாகும். பிறந்த குழந்தையின்மேலேயே முழு அன்பையுங் காட்டி, அதற்கு முன் குழந்தைகளிடம் முன்போலில்லாமல் இருக்கக்கூடாது. ஒவ் வொரு குழந்தையிடமும் ஒரே வகையான அன்பையும் கனிவை யுங் காட்டி ஏற்றத் தாழ்வின்றி நடத்தவேண்டும். நம் குழந்தை கள் அல்லாதவர்களிடமும் விருப்பமா யிருக்கவேண்டும். விளை யாட்டுச் சாமான் முதலியவைகளை ஒன்றிற்குக் கொடுத்து மற்ற வர்களுக்குக் கொடுக்காமலும், ஒரு பிள்ளையிடம் மறைவாக ஒரு பொருளைக் கொடுத்து "இதை நீ ஒருவரிடமுஞ் சொல்லாதே" என்பதுபோன்ற மொழிகளைக் கூறியும் வேற்றுமை எண்ணத்தை உண்டாக்கக்கூடாது. குழந்தையிடம் "அம்மா மூஞ்சி எப்படி இருக்கு? மாமா எப்படி நடப்பா? காட்டு! தாத்தா பொடி எப் படிப் போடுகிமுர்?" என்று கேட்பதுபோன்றவை என்ன பயக்குமென்று சொல்லவேண்டியதில்லை. நாடோறும் நலந் தரும் பழக்கம் சிறந்ததொன்றேனும் திறம்படப் பயிற்றவேண் டும் அவரறியாமல். குழந்தைகளை மரம், கல், விலங்கு, குணம் முதலியவற்றின் பெயரிட்டு அழைத்தல் கூடாது.

குழந்தையிடத்தில் தாமும் பிரியமாய் நடந்துகொண்டு அதனையும் பிரியமாய் இருக்கும்படி நடத்துவதுமன்றி, அதன் முன்னிலையில், முன்னறிதெய்வமாம் அன்னையும் பிதாவும், அந் நிலையிலேயே தம்மை எத்துதற்குரிய அன்புடனும் இன்புடனும் நடந்துகொள்ள வேண்டும்—மறைவில் வேறு வகையாக நடக்க வேண்டுமென்பது அன்று.

தவறொன்றிழைத்த மகவை இருவரில் ஒருவர் கண்டிக்குங் கால் மற்றவர் அப்பொழுது குழந்தைக்காகப் பரிந்துபேசுதல் கூடாது. அதைவிடக் குழந்தையை வேறு வகையிற் கெடுக்க முடியாது. கண்டிக்கும் முறை அடிப்பது என்பதன்று. அன் பாகவும் இன்பமாகவும், நயமாகவும், பயமாகவும், வல்லமையாக வும் குற்றங் களைய வேண்டும். அடிப்பதென்பது கடைசி முறையே. பெரும்பாலும் அது வேண்டியே யிராது. அதற்கும் ஓர் அளவுண்டு. குற்றங் காணும்போது 'அது சரியன்று' என்று களைவதுமட்டும் போதாது.

நலங் கண்டவிடத்து அதைப் பாராட்டவும் வேண்டும். அது மேன்மேலும் நலங்களைச் செய்யத் தூண்டும். வேண்டுமாயின் பரிசுகளும் வழங்கலாம், தின்பண்டம், விளையாட்டுப்பொருள், உடைகள்போல. திருத்தும் முறைகள் நான்கு. சாம, பேத, தான, தண்டம் என்பன. ஒருவர் சொல்லைக் குழந்தை மீற மற்றவர் இடமளிக்கக்கூடாது. குழந்தையின் எதிரில் இருமுது குரவரும் வாதாடல், வைதல், குடும்பச்சண்டை முதலியன செய் தல் கூடாது. மற்றவர்களெவரையும் ஒழுங்காகவும், மரி யாதையாகவும், இன்சொல்லோடும் நடத்துவதன்றிக், கடுகடுப் பாகவும், பொருள் செய்யாமலும், வசைமொழி புகன்றும், சீறி யும், மரியாதையின்றியும் நடத்தக்கூடாது. அரசனே எனினும், ஆண்டியே எனினும்-வேண்டுமாயின்-அவரவருக்கேற்ற முறை களினின்று வழுவாது மரியாதையாக, இன்பும் அன்பும் தரும் புங் குரலில் பேசவேண்டும். இழிவான ஒழுக்கமும், தீய வார்த் தைகளும், விரும்பத்தகாத குணங்களும் உடையாருடன் பழகு தல் கூடாது. அவர் நம்மிடமும், நாம் அவரிடமும் போதல் கூடாது. இழிதகையுடைய ஆட்களிடத்தே பிள்ளைகளை வேண்டு மளவன்றிப் பொதுவாகப் பழகவிடக்கூடாது. நண்பர்களிட

மும், உறவினர்களிடமும், அயலார்களிடமும் நாம் பழகும் பழக்கமே அவர்களுக்குப் பெரிதும் பிடிபடும்.

உலகின் பொருள்களைக் கண்டுங் கேட்டும், வியப்போடு ஆவலாய்க் கேட்குங் கேள்விகளுக்குக் கடுகடுப்பின்றி அன்பாக, அவர்கள் அறியக்கூடிய முறையில் கூடுமான வரையில் எடுத்துச் சொல்லவேண்டும். அறியத் துவங்கிவிடும் அறியாப் பாலருக்கு, அறிவிக்கும் முறையில் ஆற்றலுள்ள ஆசிரியரை அமர்த்தவேண்டும். அவரிடமும் குழந்தை பணிவாகவும், மரியாதையாகவும் ஊக்கத்தோடும் நடந்துகொள்ளும்படி கற்பிக்கவேண்டும். ஒரு விரிவுரை போன்றன்று. குற்றங் கண்டு ஆசிரியர் கண்டிக்கின் குழந்தைக்காகப் பரிதல் கூடாது. அப்படியானால், குட்டிச்சுவர்தான்; குழந்தை உருப்படாது, வீணன அறிவிற்கேலாச் செல்லங் கொடுக்கின்.

குழந்தைக்கு ஒரே மூச்சில் அனைத்தையும் அறிவித்துவிட முயலுதல் கூடாது. அது முடியாது. குரங்காய் முடியும். 'மட்டில் பெரியம்மை வாகனமு'மாகும்.

எவ்வெத் துறைகளில் குழந்தைகளுக்கு நோக்கமும் ஊக்கமும் இருக்கின்றனவோ, அவைகளை யறிந்து விருத்திசெய்யவும், தூக்கிக் கொடுக்கவும், வழிகாட்டவும் முயலுதல்வேண்டும்.

தாயினிடம் அன்பும், தந்தையினிடம் அறிவு சான்ற அன்பும், உடன்பிறப்பினர் உற்றார் உறவினர் முதலியோரிடத்து அன்பும், வாஞ்சையும், மரியாதையும், பணிவும், நன்றியும் காட்டும்படி செய்ய இயற்கையிலேயே பழகச் செய்ய வேண்டும், நம் செய்முறையால்.

தாய்மொழியின்மேலும், தாயகத்தின்மேலும், தாரணியின் மேலும், கல்வி கேள்வி-படிப்பு ஞானம்-முதலியவற்றின்மேலும், வீரச்செய்கை, தன்னலமிழப்பு, உயரிய நோக்கம், சீரிய ஒழுக்கம், சிறந்த குணங்களிடத்து ஆழ்ந்த பற்று முதலியன அழியாத நிலையாக உண்டாக்கவேண்டும், நடைமுறையினல்.

இவைகளைத் தூண்டுங் கதைகளும், பெரியார் வரலாறுகளும் அவர்கள் மனத்தில் பதியவைக்கவேண்டும்.

தாய், தொட்டில் தாலாட்டாகவும், பொழுது போக்காகவும், தூங்கவைக்கவும் சொல்லும் பாட்டுகள், கதைகள் மூலமாய் இவைகளை ஊட்ட வேண்டும். விரிக்கிற் பெருகும்.

குறுகிய நோக்கமில்லாத, சிறு மனப்பான்மையைத் தராத சமய அறிவு ஒரு சிறிது குழந்தைகட்குப் புகட்டவேண்டும். அறிவு வந்த காலை, பின்னர், தாங்கள் மேலும் படித்துக் கேட்டுப் பார்த்துச் சிந்தித்துத் தெரிந்துகொள்ள இடங் கொடுக்கும்படியாக, அது, அமைதல் நன்று.

புறவினைகளான் குழந்தையின் வளர்ச்சியும், குண நலங்களும் பாதிக்கப்படுகின்றன. இவைகள் கால தேச வர்த்தமானங்களைப் பெரும்பாலுந் தழுவினவை. ஆசிரியர், நண்பர், புத்தகங்கள், உற்றார், உறவினர், அயலார், நாடு, உலகம், பெரிய மனிதர்கள்,—மனைவி மக்கள் பின்னர்—எல்லாம் வாழ்வை யமைப்பதில் சிறந்த பெரும்பங்கு எடுத்துக்கொள்ளுகின்றன.

பின் தன்மையென்பது, அளவிடற்கரியது. முன்னோர் தாய் தந்தை முதலியோர் தன்மைகளெல்லாம் தன்னுள்ளிருப்பினும், தன்னறிவாலும், மேலும் மேலும் முன்னேறிப் போகவேண்டும் என்பது போன்ற சீரிய எண்ணங்களாலும், இடைவிடாத உழைப்பினாலும், ஒரு சிறிதேனும், அரியனவேனும், மேலாம் நிலைகளை அடையக்கூடும். உலக இயற்கைக்கு மாறாகவன்றி மேலுமேலும் வளரச்செய்து இதுகாறும் வளர்த்து வந்தது இதுவே. இதுதான் இயற்கையின் உண்மை. மனிதன் சத்தி அளவிடற்கரியது. காட்சியாய் நிற்குங் கடவுளே மனிதன்.

குழந்தையுந் தெய்வமுங் கொண்டாடுமிடத்தில். வீடு ஒரு கோயில்; அது கோயிலுமாகும். குழந்தை அதில் நடமாடும் அரசன்; ஆண்டவனுமாகும். நாம் அணிவகுத்துப் பாதுகாக்கும் படைவீரர்கள், பணியாற்றுஞ் சிப்பந்திகள், பணிந்தேத்தும் பத்தர்கள். போற்றும்வரை போற்றலாம்; தெளிந்த வரையில் பயனுற்று வாழலாம்.

எனைத்துக் கூறினும் அவரவர், தாமே அமயத்திற்கேற்ப உணர்ந்து, அறிந்து தெளிந்து நடத்தல், இயல்பிற் சிறந்தது.

சிவப்பிரகாசர் செந்நெறி

"இளவழகனார்"

க

பதினேழாம் நூற்றாண்டில், தமிழ்ச் சைவ வானில், இரண்டு கவிச்சுடர்கள் திடீரெனப் பூத்துப் பொலிந்தன. செங்கதிரும் வெண்கதிரும் மாறி மாறிச் சொரிந்து உலகைப் பொன்வண்ணமும் தண்வண்ணமும் ஆக்கி உய்வித்தன. பகல் ஞாயிறும் இரவு மதியமுஞ் சேர்ந்து ஒரு நாள் விளக்கம்! பதினேழாம் நூற்றாண்டின் முற்பாதியும் பிற்பாதியும் இங்ஙனங் குமரகுருபர அடிகளாலும் சிவப்பிரகாச முனிவராலும் வான்விளக்கம் பெற்று விளங்கின.

செஞ்சுடர், நாட்டின் தென்கோடியிற் பாண்டிநாட்டில் தோன்றிக், கவிக்கதிர் சொரிந்துகொண்டே வடகோடியிற் சென்று காசியில் மறைந்தது. வெண்சுடர், நாட்டின் வடக்கே தொண்டைமண்டலத்தில் எழுந்து, தனது மதிக்கலையைப் பெருக்கிக்கொண்டு தென்கோடி நாட்டுக்கு ஏகி, நிறைமதியமாய் விளங்கித், தன் கவிநிலவைப் பொழிந்துகொண்டு, தான் எழுந்த பக்கமே மீண்டு, மறைவுற்றது. ஞாயிறும் திங்களும் முழுவட்டமாய் நிறைகதிர் பெற்றுப் பொலிவுறும் இடம் ஒரு பக்கமே. குமரகுருபர அடிகளுக்கும் சிவப்பிரகாச முனிவருக்கும் 'கந்தர் கலிவெண்பா'வினாலும் 'செந்தில் நிரோட்டக யமகத்'தாலும் நிறைபொலிவு அரும்பி அருள் விளக்கந் துவங்கிய இடம் திருச்செந்திலே!

உலகுய்ய எழுந்த இவ்விரு பெருஞ் சுடர்களும் பொதுவில் அறவொளி வழங்கித் தமிழ்க்கு வாழ்வு பெருக்கியுள்ளன. ஒன்று 'நீதிநெறி விளக்கம்' வழங்கியது. மற்றொன்று, 'நன்னெறிச்' சுடர் அளித்தது!

உ

கவிதை ஒரு விருந்து. உள்ளுணர்ச்சியின் தாண்டவம். அழகுணர்வாகிய கலையே அது. முயற்சியற்ற எளிமையில், தானே அரும்பும் இனிமை. கவிஞனுக்கு எங்கும் எழில். எங்கும் இன்பம். சிறிய துரும்பும் அவனிடம் பெரிய

மெருகு பெறுகின்றது. அழியும் பொருள்களில் அழியாத் திரு நுகர்வோன் அவனே. எதனையும் அவன், கண்ணால் காதால் பிற பொறிகளால் மனத்தால் அறிவால் அறியாமல், உணர்ச்சியால் கலந்து பழகுவோன். உள்ளிருந்து பொங்கும் அவ் விளிமையூற்று, தானே மேல் வழிந்து ததும்பிப் பெருக்கெடுக்கின்றது.

பெருக்கெடுப்பதில் இருவகையுண்டு. ஒன்று, காட்டாற்றுப் பெருக்கு. அது வெறி பிடித்த கவி. வழி துறை தெரியாது. வழிந்து பெருகி, எதிர்ப்பட்டவற்றையும் அழித்துக் கெடுத்து, ஒன்றுக்கும் உதவாமல், இடம்பமாய்க், கலங்கலாய், உருண்டோடி ஒழிதல். இது கவிதையின் பயன்பட்ட நிலையன்று; பொதுநிலை. சிறப்பு நிலையன்று; அதாவது, உண்மைநிலையன்று.

பயன்பட்ட உண்மை நிலை, ஒழுங்குடையதாய்ப் பெருகும். தெளிந்து தோன்றும். அமைந்து, உள்வீறு படைத்துத் திகழும். புவியிறுக்கு அணியாய், உதவியாய், நெறி அளாவித், தண்ணென்று ஒழுகும். கவிதையின் இவ் வுண்மைநிலை,

“புவியிறுக்கு அணியாய், ஆன்ற
பொருள்தந்து, புலத்திற் றாகி,
அவியகத் துறைகள் தாங்கி,
ஐந்திணை நெறிஅ ளாவிச்,
சவியுறத் தெளிந்து, தண்ணென்
றொழுக்கமுந் தழுவிச், சான்றோர்
கவியெனக் கிடந்த கோதா
வரியினை வீரர் கண்டார்”

என்னும் கம்பர் கவின்மொழியில் சுடர்விட்டுப் பொலிகின்றது. இது நல்லாற்றின் இயல்பு! கவிதையின் பொது நிலைக்கும் சிறப்பு நிலைக்கும் எவ்வளவு வேறுபாடு!

பொதுநிலையாகிய கவிவெறி பெரும்பாலும் ஒரே போக்குடையது. ஒரே சந்தை இரைச்சல்! யாழின் தீங்குரலன்று. பயன்பட்ட எழில்நிலை யன்று; கலையன்று; ஆக்க வேலையன்று; அழிவுச் சூழல்.

அப் பொதுக் கவி, பெரும்பாலும் உருவகக் கூக்குரல்! உருவகம், உறுத்த அணி; உவமை, அதன் மெருகு உரு; மென்மை எழில்; சிறப்புக் கவியின் சிறப்பியல்பு. கம்பர், மேற்செய்யுளில், சில உருவகங்களைப் பொதுவகையாக உரைத்து, உவமைச் சிறப்பியல்பில் இயைத்து முடித்திருத்தலை உற்று நோக்குதல் வேண்டும்.

ஆசிரியர் தொல்காப்பியர் கவிதையின் உண்மையியல்பை நினைந்து, அதன் நிலையில் இயல்பாக அது பெற்றிருக்கும் உவமை அணியின் முடிநிலை அழகைக் கருதி, உவமை ஒன்றையே சிறப்பாகத் தமதிலக்கணத்தில் எடுத்து ஒரு தனி இயலில் விளக்கி யிருக்கும் நுட்பமும் ஒட்பமும் கண்டுகொள்ளல் வேண்டும். சங்ககாலத்துக் கவிகள் பெரும்பான்மையும் இவ்வியல்பமைந் தவை.

இன்னும், கவியின் பொதுக் கூச்சலில், பிரிவுபட்ட அழ கியல்புகள் விளங்கித் தெரியா. கவியின் பருவடிவே அது. குழவிக் கல் போன்றது. கவியின் தொடக்க நிலை. இயற்கை முகமாகவே கூறினல், அதனை, முளை போன்ற பொதுநிலை என லாம். அழகிய கிளைகளும், பச்சை இலைகளும், பன்னிற மலர் களும், நறுஞ்சுவைக் கனிகளும், அக் கனிகளின் முத்து வரிசை வித்துக்களுமான இயற்கைச் சித்திரங்கள்-கலையழகுகள்-வெறிக் கவியில் இல்லை. அக் கவி புதுக்கவி யன்று; பொதுக்கவியே! புதுமையில் சிலிர்சிலிர்ப்பிருக்கும். பொதுமையில் இராது; ஒரே குளிர். தென்றலின் குளிர்ச்சி ஆகுமா கூதிரின் குளிர்!

௩

இனி, இயற்கையின் எழிலில், ஓர் அரிய மறைபொருள் எங்கும் மின்னிக்கொண் டிருத்தலையுங் காணலாம். அதனைக் கருத்தூன்றி எண்ணிப் பார்த்தல் வேண்டும். எங்கும் ஒழுங்கு; கண்டிப்பு; கடமை; முறை; நீதி. இவற்றை 'அறம்' என்று ஒரே மொழியால் முன்னோர் விளக்கினர். இயற்கையின்-எழில் மலர்ச்சியின்- உள்ளுறை, அறம். இறை நிலை அது. இறைவனை 'அறவாழி அந்தணன்' என்று திருவாய்மலர்ந்தார்

பெரியார் திருவள்ளுவர்! எழிலின் மலர்ச்சி அவ் வறக்கடவுளின் ஆடை அணிகலன்கள்.

கவிதையின் உண்மைநிலை, கலைப்பிரிவுகளாகிய இயற்கைச் சித்திரங்களை இசைப்பது மட்டுமன்று. அவற்றின் உள்நுழைந்து அறத்தைத் தொட்டு, அங்கிருந்தே ஊற்றெடுத்துப் பெருகுவது. அது, கவியுண்மையின் நுண்மை நிலையாகும். அந்நிலையமைந்த உணர்வு, மேலே மோனமாயினும், அதுவே விறுவிறுத்த ஒலி நிலையம்! அதன் குரல் ஓர் ஒழுங்கான ஒலி முறையிலேயே இயல்பாக எழும்! அவ்வியல்பு முறையையே, இன்ன இன்ன ஒலியொழுங்குகள் என 'யாப்பிலக்கணங்கள்' உணர்த்துகின்றன!

இயற்கையின் இதயமாகிய அறத்தை ஆழ்ந்து தொட்டுக் கொண்டு, இயல்பிலே தேங்கித் திளைத்திருக்கும் பெருங்கவிகளின் வாய்மலர்களில், அவ்வறத்தேன் அல்லது பொங்கி வழிவதற்கு, வேறு என்ன இருக்கின்றது? தெய்வத் திருவள்ளுவர் அங்ஙனம் அறம் உரைத்த பெருங்கவி! நமது நாடு அத்தகைய கவிமணிகளாகிய அறவோர் பற்பலரால் நெடுகச் சிறப்படைந்து விளங்கிவந்திருக்கின்றது!

துறைமங்கலப் பெருவாழ்வாகிய சிவப்பிரகாசர், தமது இயல்பாகிய மெய்க்கவிகளால் நமக்கு இங்ஙனம் **'நன்னெறி'** என்னும் அறநூல் வழங்கிய சான்றோர்!

(வரும்)

விளக்கு, விளக்கு, எங்கே! எரிகின்ற ஆவலாகிய நெருப்பைக் கொண்டு விளக்கை ஏற்று. இடி இடிக்கின்றது; இரைந்துகொண்டு பெருவெளியூடே காற்று விரைகின்றது. கருமணிபோல் இரவு கறுத்திருக்கின்றது. இருளிலே நேரத்தை வீணே கழிக்கவேண்டாம். வாழ்க்கையின் பயன்கொண்டு அன்பாகிய விளக்கை ஏற்று.

— கீதாஞ்சலி.



[புத்தனேரி ரா. சுப்பிரமணியன்]

கூ. சோலையப்பன்

முரடர்களை எதிர்த்ததனால் வேடனது பொன்னிறமான மேனியில் ஏற்பட்ட சிறுசிறு காயங்களில் தேங்கி நிற்கும் செந்நீரின் தோற்றம் அழகிய பொற் பதக்கத்தில் அங்கங்கே சிவப்புக் கற்கள் இழைத்தாற் போன்று இருந்தது. அவ்வளவு புண்பட்ட உடலுடன் இருந்தபோதிலும் அவனுடைய முகத்தில் வாட்டமோ களைப்போ ஏற்படவே இல்லை. விழுப் புண்களைப் பார்த்துப் பார்த்துப் புன்னகை புரிந்த வண்ணமாக வல்லியை நோக்கி,

"வல்லீ! உனக்கு வில்வித்தையும் தெரியுமா?" என்று கேட்டான்.

"ஏதோ, உங்கள் திறமையில் அடியாளுக்கும் ஒரு பங்கு உண்டு!" என்று கூறிக்கொண்டிருக்கையில் அவளுடைய உதடுகள் மலர்ந்தன; கண்கள் கடைப்புறம் செருகின.

"ஆமாம்! உன்னுடைய மெல்லிய மேனியில் அந்தக் கொடியவர்களின் அம்புகள் நுழைந்தால்......வல்லீ! ஐயோ!......நீ எப்படித் தாங்க முடியும்?......"

"எனது மேனி மெல்லியதுதான்! ஆனால் என்னுடைய மனம் எவ்வளவு உரம் வாய்ந்திருந்தது தெரியுமா?......அவர்களை எதிர்த்த அந்தச் சமயத்தில் என் உடம்பில் முரடர்களின் ஈட்டி பாய்ந்து முதுகுப் புறமாகத் துளைத்துச் சென்றாலுங்கூட என் உயிர் பிரிந்திருக்காது!......"

"வல்லீ!......உன்னைப் போல் ஒரு வீரப் பெண்மணியை நான் கண்டதேயில்லை......"

"அப்படிச் சொல்ல முடியுமா?......நம் நாட்டில் ஒவ்வொரு பெண்மணியின் உள்ளத்திலும் வீரம் தேங்கி நிற்கிறது!......அதனைப் பயன்படுத்தும் வாய்ப்பு இல்லாமலே அவர்கள் அமைதியில் இருக்கின்றனர்!... .."

"சரி! நேரமாய் விட்டது! புறப்பட வேண்டாமா?......"

"அதோ! அந்தக் குதிரையினிடம் போய்க் கேளுங்கள். அது நம்மைச் சுமந்து செல்வதோடு மட்டும் நில்லாமல் நமக்கு ஒரு சேனைத் தலைவன்

போதும் துணை செய்தது! அது நன்றாகக் களைப்பாறிய பின் புறப்படலாம்......"

இவர்களுடைய பேச்சின் முடிவை அறிந்துகொண்ட குதிரை தன் உடம்பை நெளித்துக் கொண்டு கிளர்ச்சியாகக் கனைத்தவண்ணம் வேடன் பக்கத்தில் வந்து நின்றது.

"என்ன? புறப்படத் தயாராகி விட்டாயா?" என்று வேடன் குதிரையினிடம் அன்புடன் கேட்டதும், அது தன் தலையை அசைத்து இசைவை அறிவித்தது.

மீண்டும் வேடனும் வல்லியும் குதிரைமீது காணப்பட்டனர். ஆபத்து நிறைந்த ஒற்றைவழிப் பாதையை விட்டு வேறு புதுவழியொன்றைப் பின்பற்றிக் குதிரை செல்லும்போது சூரியன் உச்சியைத் தாண்டி மேற்கில் இறங்கிக்கொண் டிருந்தான். மரங்கள் அடர்ந்த பாதையாக இருந்தமையால் செங்கதிரோனின் வெங்கதிர்கள் இவர்களை மிகுதியாகத் தாக்கவில்லை.

சிறிது நேரத்தில் குதிரை ஓர் ஆற்றங்கரையை அடைந்தது. சிறு சிறு பாறைகளினூடே ஆற்றுநீர் வெண்நுரை பொங்க வேகமாக ஓடிக் கொண்டிருந்தது. ஆற்றுநீரின் சலசலப்பு ஒலியையும் காற்றில் அசைகின்ற காட்டு மரங்களின் சரசரப்பு ஒலியையும் தவிர வேறு மக்கள் ஆரவாரம் ஒன்றையும் கேட்க முடியவில்லை. அந்தக் காட்டாற்றங் கரையூடு குதிரை மூன்று நான்கு காத தூரம் போனபிறகு தூரத்தில் ஒரு மண்டபம் தெரிந்தது. அந்த மண்டபத்தைச் சுற்றிலும் அழகழகான மலர்களுடன் பசுமையான மரங்கள் தென்பட்டன. பக்கத்தில் ஓடும் ஆற்றுநீரின் பளபளப்பையும் பசுமைநிறச் சோலையின் காட்சியையும் கண்டதும் குதிரை மீது வரும் இருவர் உள்ளத்திலும் ஒருவகையான பூரிப்பு ஏற்பட்டது. விரைவில் ஆற்றில் இறங்கி இரண்டு கைகளாலும் தண்ணீரை அள்ளி அள்ளிப் பருகவேண்டுமென்னும் ஆவல் அவர்களுக்கு உண்டாயிற்று!

மலர்ந்த முகத்துடன் அவர்கள் சோலையை நெருங்கும் சமயத்தில், ஆற்றில் குளித்துவிட்டு வேட்டியை உலர்த்திக் கொண்டு ஒருவன் கரையேறினன். குதிரையையும் அதன்மீது வரும் அன்பர்களையும் கண்டதும் அவன் ஓடோடியும் வந்து குதிரைக்கு முன்னல் நின்று கொண்டு,

"பரிமேல் அழகரே! அழகர்க்கேற்ற அழகியே! வருக! வருக!!" என்று வரவேற்றன்.

அவனுடைய கிண்டலான பேச்சையும் கிளர்ச்சியான பார்வையையும் கண்டு வல்லியும் வேடனும் 'குபீ'ரெனச் சிரித்துவிட்டனர்.

"ஏனய்யா? அவ்வளவு பல்லையும் காட்டுகிறீர்கள்? கொஞ்சம் வாயை மூடுங்கள்! சிறுபிள்ளைகள் கண்டால் முல்லைப் பூ பூத்திருக்கிற தென்று எண்ணிப் பூப்பறிப்பதுபோல் பல்லைப் பறித்துவிடப் போகிறார் கள்!......" என்று படபடவென்று பேசினான் அவன். திரும்பவும் ஒரு முறை அவர்கள் நகைத்தனர். இதைக் கண்டதும் அப் புதியவனுக்குக் கோபம் பொங்கிப் பொங்கி வந்தது.

"ஏனய்யா? திரும்பவும் சிரிக்கிறீர்களே! என்னைப் பார்த்தால் உங் களுக்குச் சிரிப்பு வருகிறதோ? அல்லது நான் உம்மைப் 'பரிமேல் அழகர்' என்று கூப்பிட்டது தவறா? 'கழுதைமேல் வரும் கட்டழகா!' என்று கூப்பிடட்டுமா?......" என்று அம் மனிதன் ஆத்திரத்தோடு கூறினான்.

உண்மையில் அவனுடைய தோற்றம் 'விகடகவி'யைப் போன்றே இருந்தது. பாட்டையான தலைமயிரும், கட்டை நெட்டையான தாடியும், குள்ளமான தோற்றமும், குறுகுறுப்பான பார்வையும், கிண்டலான பேச் சும், அடிக்கடி பல்லைக் காட்டும் பான்மையும் அவன் ஒரு பித்தன் என்ப தையே வெளிப்படுத்திற்று.

அம் மனிதன் மீண்டும் சும்மா இராமல் வேடனைப் பார்த்து,

"ஏனய்யா! நீர்தான் பெரிய வீராதிவீரன்—ஆண்சிங்கம்—என்ற மதிப்பில் குதிரைமீது காட்டு வழியே புறப்பட்டு வருகிறீர்!......பாவம் இந்த மெல்லியல் நங்கையையும் ஏன் உம்மோடு இழுத்து வந்தீர்? குதிரை குதித்துக் குதித்து ஓடுகையில் அவள் மேனி குலுங்கிக் குலுங்கி வாடாதோ?" என்று நீட்டி நீட்டி ஆடியாடிப் பேசியதும் வேடனுக்கு அடக்கமுடியாமல் சிரிப்பு வந்துவிட்டது!

உடனே அம் மனிதன் கோபங்கொண்டவன் போல் நடித்து,

"சரி! சரி!! சிரியுங்கள்! நன்றாய்ச் சிரியுங்கள்! வேணுமட்டும் சிரி யுங்கள்!.........ஆமாம்! இப்படி எங்கே கிளம்பிப் போகிறீர்கள்?......" என்று கேட்டான்.

"சும்மா இந்தச் சோலையில் போய்ச் சொக்கியிருக்கலாமென்று தான் வந்தோம்!......"

"ஓ! அப்படியா?......இந்தச் சோலையப்பனுடைய உத்தரவில்லா மல் சோலைக்குள் நுழைந்து விடுவீர்களோ?......சோலை வாயிலைத் திறப் பதற்குச் சாவி—இதோ இவரிடமல்லவா இருக்கிறது?......" என்று தன் கையிலிருந்த திறவுகோலைக் காண்பித்த வண்ணம் கிண்டலாகப் பேசி னான் அவன்.

" ஐயா ! சோலையப்பரே ! நாங்கள் இனிமேல் சிரிக்க மாட்டோம் ! அன்புகூர்ந்து சோலை வாயிலைத் திறந்துவிட மாட்டீரா ?......" என்று வேடன் அன்பு ததும்பக் கேட்டான் !

" அப்படி வாரும் வழிக்கு !...முதலிலே ஆற்றிலே போய்க் குளித்து விட்டு வாருங்கள் !...அப்புறந்தான் உள்ளே போகலாம் !..." என்றான் சோலையப்பன்.

வேறு வழியில்லாமல் வல்லியும் வேடனும் குதிரையை விட்டுக் கீழிறங்கி ஆற்றில் நீராடி வருவதற்காகப் புறப்பட்டனர். போகும்போது சோலையப்பனை நோக்கி,

" அன்பரே ! நீர் இக் குதிரையின் பக்கத்திலேயே உட்கார்ந்து இருக்கலாம். நாங்கள் போய்க் குளித்துவிட்டு வருகிறோம்...!..." என்று சொல்லிவிட்டு ஆற்றுப் படுகையில் இறங்கினர்.

ஆற்றில் இவர்கள் இறங்கிய துறையில் மணல் வெளி மிகுதியாக இருந்தது. ஆற்றின் அக்கரை யோரம் பள்ளமாக இருந்தமையால் தண்ணீர் மறுகரையருகிலேயே ஓடிக்கொண்டிருந்தது.

குதிரையருகில் இருந்த சோலையப்பன் சுற்றிச் சுற்றிப் பார்த்தவண்ணம் கண்களை ஒரு மாதிரியாக விழித்தான். அவனுடைய தோற்றத்தில் அவன் ஏதோ ஆழ்ந்து எண்ணுவதுபோல் விளங்கிற்று. பின் துணிவாக ஒரு முடிவுக்கு வந்தவன் போல் எழுந்து குதிரைமீது ஏற முயன்றான். இரண்டு மூன்று தடவை வழுக்கி விழுந்தும் ஆசை தீராமல் திரும்பவும் முயன்று அதன்மீது ஏறி உட்கார்ந்தான்.

குதிரைமீது அமர்ந்த சோலையப்பன் சும்மாயிராமல் அதன் கடிவாளத்தை இழுத்து அசைத்தான். குதிரை அதைப் பொறுத்துக் கொண்டு பேசாமல் நின்றது. குதிரையை ஓட்டவேண்டு மென்னும் ஆசையினால் சாட்டையை எடுத்துப் " பளிர், பளிர் " என்று இரண்டு அறை கொடுத்தான். அதனையும் பொறுத்துக்கொண்டு குதிரை அடக்கமாக நின்றது.

சோலையப்பனுக்குக் கோபம் வந்துவிட்டது ! சாட்டையை ஓங்கி மாறிமாறிச் சரமாரியாக உதை கொடுத்தான். அடி தாங்கமாட்டாமல் குதிரை பொறுமையிழந்து நாலுகாற் பாய்ச்சலில் கிளம்பிற்று !

ஆற்றங் கரையிலிருந்து மணல் வெளிக்குள் குதிரை தள்ளிக் கொண்டு பாய்ந்ததும், " ஆ ! ஐயோ !" என்று கூச்சலிட்டுக் கொண்டு ' பொத் 'தென்று கீழே விழுந்தான் சோலையப்பன் !

அவனைக் கீழே தள்ளிவிட்டு விரைவாகப் பாய்ந்த குதிரை, ஆற்றில் குளித்துக்கொண் டிருந்த வேடன் பக்கத்தில் வந்து நின்றது. அதே சமயத்தில் சோலையப்பனின் கதறல் ஒலியும் அவன் காதில் விழுந்தது.

உடனே பதறித் துடித்துக்கொண்டு வல்லியும் வேடனும் ஓடோடியும் வந்தனர். அவர்களைத் தொடர்ந்து குதிரையும் வந்தது. மணலில் விழுந்து முனுமுனுத்துக் கொண்டு இருந்த சோலையப்பனை அணுகி, " என்ன நடந்தது ?" என்று கேட்டான் வேடன்.

" குதிரைமீது சவாரி செய்ய விரும்பினேன்......அது என்னைக் கீழே தள்ளிவிட்டது !......" என்று விழுங்கிக்கொண்டே பேசமுடியாமற் பேசினான் சோலையப்பன் !

உடனே கடுஞ்சினங் கொண்ட வேடன், சாட்டையை எடுத்துக் குதிரையைப் ' பளீர் பளீ 'ரென்று அடிக்க ஆரம்பித்தான் ! பாவம் ! வாயில்லாத அந்த உயிரும் கண்ணீர் விட்டுக் கொண்டு நின்றது !

" வேண்டாம் ! குதிரையை அடிக்க வேண்டாம் !......என்னாலே நான் கெட்டேன் !......" என்று சோலையப்பன் கெஞ்சினான்.

" ஐயா ! காயம் மிகுதியோ ?" என்று அவனிடம் வேடன் இரக்கமான குரலில் கேட்டான்.

" இடது தோள்பக்கம் பலமான அடி !......"

" அன்பரே ! கவலைப்பட வேண்டாம் !......இதோ உம்முடைய ஆசையை நிறைவேற்றுகிறேன் !......" என்று ஆறுதல் கூறிய வேடன் சோலையப்பனை மெதுவாகத் தூக்கிக் குதிரைமீது அமர்த்தி அதன் கடிவாளத்தைப் பிடித்துக் கூட்டிச் சென்றான். அவன் அருகில் வல்லியும் நடந்து சென்றாள்.

சிறிது நேரத்தில் இவர்கள் சோலையிற் புகுந்து மண்டபத்தை அடைந்தனர். கவனமாகச் சோலையப்பனைக் குதிரையிலிருந்து இறக்கி மண்டபத்திற்குள் வேடன் கூட்டிக்கொண்டு போனான். அவனுடைய படுக்கையில் சோலையப்பனைப் படுக்க வைத்து அவன் அருகில் அமர்ந்து ஆறுதல் மொழிகள் கூறினான். வல்லியோ அடக்க ஒடுக்கமாக வேடனுக்குப் பின்னால் பெண்மைக் குணம் விளங்க வீற்றிருந்தாள்.

(தொடரும்)

———

மதிப்புரை

நீதிநெறி விளக்கம் (மூலமும் உரைவளமும்) : பதிப்பாசிரியர் : தருமபுர ஆதீன வித்துவான் திரு. காழி. சிவ. கண்ணுசாமி பிள்ளை B. A. அவர்கள். வெளியிட்டோர் : தருமபுர ஆதீனத்தார். விலை : அணா 8.

ஆசிரியர் குமரகுருபர அடிகள் அருளிச்செய்த அரிய நூல், நீதிநெறி விளக்கம் என்பது. அதற்குப் பன்னிருவர்க்குமேல் உரையாசிரியன்மார் உளர். நூலின் மூலமும், அவ்வவ் வுரையாசிரியர் கண்ட உரைவளமும், ஆங்கில மொழிபெயர்ப்புக்கள் சிலவும் இந்நூலில் ஒருங்கு தொகுக்கப்பெற்றுள்ளன. அன்றியும், பதிப்பாசிரியருடைய பதவுரை, உரைநடை, கருத்துரை, மேற்கோள், விளக்கக் குறிப்புக்கள் என்பனவும், நூற்பதிப்பின் பகுதிகளாக நூலின்முன் ஒரு நல்ல முகவுரையும், நூலின்பின் பொருள் அட்டவணை, செய்யுள் முதற்குறிப்பு, சொல்லகராதி என்பனவும் அமைந்துள்ளன.

இதுகாறும் நீதிநெறி விளக்கத்துக்கு இங்ஙனமொரு சிறந்த தொகுப்புப் பதிப்பு வெளிவரவில்லை. தருமபுர ஆதீனத்தின் அருட்குரவர் சிவத்திரு. சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய அடிகள் இவ்வரிய பதிப்புக்கு ஆதாரவாயிருந்து வெளியிட்டருளிய பெருமை மறப்பரிது. இவர்கள் திருவுருவப்படமும், நூலாசிரியர் திருவுருவப்படமும், தக்கோர் அணிந்துரைகளும் இணைந்த இந்நூல் ஏறக்குறைய 400 பக்கங்கள் உள்ளன.

பயிற்சிக்கும் ஆராய்ச்சிக்கும் இப் பதிப்பு மிக்க உதவியாயிருக்கும்.

திருவாரூர் நான்மணிமாலை (மூலமும் வசனமும்): வெளியிட்டோர் : தருமபுர ஆதீனத்தார். விலை : அணா 2.

இந்நூலின் ஆசிரியர் குமரகுருபர அடிகள். அடிகள் இயற்றியருளிய நூல்கள் யாவும் சொற்சுவை பொருட்சுவை நிரம்பி, அவர்களுக்கென்றே தனியாக அமைந்த அழகிய கொழுவிய தமிழோசை அமைந்தவை. சைவ சித்தாந்த நுண்பொருள்கள் ததும்பி நிற்பவை. இத்தகைய அரிய நூல்களுள் ஒன்றான திருவாரூர் நான்மணிமாலை என்பது, இப்போது திருத்தமான பதிப்பாக இவ்வாதீனத்தின் திருவாரூர், கட்டளை விசாரணை சிவத்திரு. முத்துக்குமாரசுவாமி தம்பிரான் அவர்களால் வெளியிடப்பெற்றுள்ளது. இப் பதிப்பின் சிறந்த அணிகலன் இதற்கு அமைந்திருக்கும் வசனப் பகுதியாகும். இது செய்யுள் தொடர்களை விடாது தழுவி நல்ல நடையில் நிரம்பத் தெளிவாக அமைந்துள்ளது. சைவசித்தாந்த ஞானமும் செந்தமி

முறிவும் ஒருங்கு வாய்ந்துள்ள சிவநேயச் செல்வர் **திருவாளர் ரா. சண்முக சுந்தரஞ் செட்டியாரவர்கள்** கைவளமே இவ் வசனம்.

நூலாசிரியர் வரலாறும், செந்தமிழ்ப் புரவலர் கோவைகிழார் அவர்கள் இந்நூலையும் உரைநடையையும் நுகர்ந்து வியந்தெழுதிய அழகிய மதிப்புரையும் நூலின் முகப்பில் உள்ளன.

சென்பகராமன் பள்ளு: பதிப்பாசிரியர்: **மரியஜான் காலிங்கராயரவர்கள்.** விலை: அணா 14.

இந்நூல், திருவிதாங்கூர்ப் பகுதியைச் சார்ந்த நாஞ்சி நாட்டின் கோவை குளத்துப் பரதர்குலச் செம்மலான செண்பகராமக் காலிங்கராயன் என்பானைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு அமைந்துள்ளது. நூலாசிரியர் பெயர் தெரியவில்லை. பள்ளு என்பது நாடக நூல் வகை.

நூல், இயல்பான தழிழோசை வாய்ந்திருக்கின்றது. இடையே சில பகுதிகள் விடுபட்டுள்ளன. இந்நூல் இரண்டு நூற்றாண்டுகட்கு முன் இயற்றப்பட்டதென்று தெரிகின்றது.

பதிப்பாசிரியர், இதனை, முதன் முறையாக நல்ல அமைப்பில் விளக்கமான உரைக் குறிப்புக்களோடு பதிப்பிட்டிருக்கின்றார். அறியவேண்டிய ஆராய்ச்சிக் குறிப்புக்களோடு கூடிய சிறந்த முன்னுரை யொன்றும் விரிவாக எழுதிச் சேர்த்திருக்கின்றார். பதிப்பாசிரியர் தொண்டு பாராட்டுதற்குரியது.

நூலின் முகப்பில் தக்கோர் மதிப்புரைகளும், இறுதியில் அரும்பொருளகராதி முதலியனவும் உள்ளன.

அன்புவிடு தூது: ஆசிரியர்: **P. N. இராசமாணிக்கம் பிள்ளையவர்கள்,** புதுவை. விலை: அணா 12.

இந்நூல், திருமயிலம் என்னுந் திருப்பதியில் எழுந்தருளியிருக்கும் முருகக்கடவுளைத் தலைவனாக வைத்துத் தூது நூல் வகையால் இயன்றது. உருக்கமான எளிய தமிழ் நடையில், தக்க கற்பனைச் சித்திரங்களுடன் அமைந்துள்ளது. கலிவெண்பா யாப்பில் ௩௪௰ அடிகள் உள்ளன. இந்நூலின் ஆசிரியர், அன்பை இவ்வளவு குழைத்து உலகுக்கு வழங்கியிருப்பது, அவர்தம் மெய்யன்பின் நல்லடையாளமே எனலாம். அன்பைத் தூதாக விடுதற்குரிய அமைப்புப் பற்றி, இந்நூலினுள்ளும், இந்நூலுக்கு அமைந்துள்ள மதிப்புரைகளுள்ளும் காரணங்கள் வந்திருக்கின்றன. போற்றப்பெறுதற்குரிய தூது நூல்களுள் இஃதொன்றாய் மிளிர்வது.

இந்நூலுக்குக் கடலூர் புதுப்பதியைச் சேர்ந்த **வித்துவான் தே. ஆ. சீனிவாசாச்சாரியாரவர்கள்** தக்க உரைக் குறிப்புக்கள் அவ்வப் பக்கங்

களின் அடியில் எழுதிச் சேர்த்திருக்கிறார்கள். அவையும், நூலின் முகப்பில், தெளிவான உரைநடையில் எழுதிச் சேர்க்கப்பெற்றிருக்கும் நூலின் பொருட்சுருக்கமும், கற்போர்க்கு மிக்க உதவியாயிருக்கும்.

செய்திகள்

மேலைச்சிவபுரி சன்மார்க்க சபையின் 34-ம் ஆண்டு நிறைவுவிழா 26-6-43-ல் இந்துமத அறநிலையப் பாதுகாப்பாளர் ராவ்பகதூர் உயர்திரு. C. M. இராமச்சந்திரன் செட்டியார் BA. BL., அவர்கள் தலைமையில் இனிது நடைபெற்றது.

மாலை 4 மணி அளவில் மேளதாளத்துடன் தலைவர் வரவேற்கப் பெற்றுத் தலைமை தாங்கினர். திரு. வ. பழ. சா. சிங்காரம் செட்டியார் வரவேற்பு வாழ்த்தினை இசையுடன் வாசித்தளித்தார். பின் கல்லூரி முதல்வர் திரு. P. R. மீனாட்சி சுந்தரம் பிள்ளை M. A., அவர்கள் 34-ம் ஆண்டு அறிக்கையை வாசித்தார். தலைவர் முன்னுரைக்குப் பின் திருவாளர்கள் வித்துவான்.V. S. P. மாணிக்கஞ் செட்டியார் B. O. L., பெருஞ்சொல் விளக்கனர் அ. மு. சரவண முதலியார், மகாமகோபாத்தியாய பண்டித மணி மு. கதிரேசச் செட்டியார் ஆகியோர் முறையே 'வழக்கும் செய்யுளும்' 'திருவெண்காட்டடிகள்,' 'இயலும் இசையும்' என்னும் பொருள்கள் பற்றிச் சொற்பெருக்காற்றினர்கள். இடையிடையே திரு. T. N. மகாலிங்கனுர் முதலியவர்களால் திருமுறை இன்னிசை விருந்தும் அளிக்கப்பெற்றது.

செட்டிநாட்டரசர் அண்ணுமலை வள்ளலின் நன்கொடைப் பரிசு, வித்துவான் முன்னிலை முதல் தேர்வுக்காக T. S. கிருஷ்ணசாமிக்கும், S. நாராயணசாமிக்கும் வழங்கப்பெற்றது. சன்மார்க்க சபையாரின் பரிசு, வித்துவான் முடிநிலை முதல் தேர்வுக்காக M. பழனிவேலுக்கும், வித்துவான் புகுநிலை முதல் தேர்வுக்காக S. அழகப்பனுக்கும் வழங்கப் பெற்றது. மற்றும் ஆரம்பப் பள்ளி மாணவர்களில் பதினைவருக்கும் பரிசுகள் வழங்கப் பெற்றன. தலைவரவர்கள் கருத்துரைக்குப் பின் மகாமகோபாத்தியாய பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியாரவர்கள் தலைவருக்குப் பாராட்டுக் கூறினர்கள். சன்மார்க்க சபைத் தலைவர் திரு. வ. பழ. சா. சாமிநாதன் செட்டியாரவர்கள் வந்தோர்க்கு நன்றி கூறக் கூட்டம் இனிது நிறைவேறினது.

ஓம்

செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு-௨௦] சுபானு—ஆடி (1943) [பரல்-௯

குறிப்புக்கள்

ஓர் இலட்சம் ரூபா நன்கொடை

மாட்சிமை தங்கிய திருவாங்கூர் அரசரவர்கள் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கு ஓர் இலட்சம் ரூபா நன்கொடை அளித்திருக்கின்றார்களென்று தெரிகின்றது. கழகத்தார் அத் தொகையைக் கொண்டு இரண்டு மாணவர் விடுதிகள் (Hostels) அமைக்கக் கருதியிருக்கின்றார்கள் என்றும், அவற்றுள் ஒன்று அரசர் பெயராலும், மற்றொன்று பெருந்தேவி சேது பார்வதிபாய் அவர்கள் பெயராலும் வழங்கப்பெறும் என்றும் கழகத்தின் துணைவேந்தரவர்கள் தெரிவித்திருக்கின்றார்கள்.

தமிழ்நாட்டில் தமிழ்ப் பல்கலைக் கழகமாக விளங்கும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்குத் திருவாங்கூர் மன்னரவர்கள் இங்ஙனம் தக்க தொகையொன்று நன்கொடை வழங்கியிருப்பது தமிழ் மக்கட்கு மிக்க மகிழ்ச்சிதருவதாகும். மன்னரவர்கள், நாட்டின் நலத்திற்காகப் பல அரிய நற்செயல்களைத் தமது காலத்தில் செய்துவருகின்றார்கள். அவர்கள் தொண்டுகள் நாட்டினர் உள்ளத்தில் நிலைபெறுதற்குரியன. மாட்சிமை மிக்க மன்னரவர்களும் பெருந்தேவியவர்களும் நலம் பல நிறைந்து நீடு விளங்கிவருகவென வாழ்த்துவம்.

* * *

கல்விச் சீர்திருத்தம்

சென்னை, புரசவாக்கம் திரு. முத்தைய செட்டியார் உயர் பள்ளியின், ஆசிரியர் கழகத்தின் தொடக்கவிரிவுரை சென்னைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் Dr. A. இலட்சுமணசாமி முதலியாரவர்களால் நிகழ்த்தப்பெற்றது. அதில் அவர்கள், போருக்குப் பின் கல்விச் சீர்திருத்தம் என்னுங் கருத்துப் பற்றிப் பேசிச், சில அரிய குறிப்புக்களைக் கொடுத்திருக்கின்றார்கள். அவர்கள் கருத்துக்கள் வருமாறு :

போருக்குப் பின் பெறவேண்டிய சீர்திருத்தங்களில் கல்விச் சீர்திருத்தம் மிகவும் விரைந்து செய்வதற்கு உரியது. அறியாமையிலிருந்து விடுபடும் உரிமைதான் மற்ற உரிமைகளுக்கு அடிப்படையானது. ஆதலால், போருக்குப்பின் உலகுக்கு வழங்கப்போகும் உரிமைகளில் இதுவே முதன்மையுள்ளதாக இருக்க வேண்டும். கல்வியில் இப்போதிருப்பதுபோலில்லாமல், இன்னும் பெரிய உறுதியான திட்டங்களில் போதிய செலவில் நடைபெற வேண்டும்.

நாட்டின் அறியாமையை ஒழிப்பதற்குத் 'தொடக்கக் கல்வி' (Primary Education) செம்மையாக நடைபெறவேண்டும். தொடக்கப் பயிற்சிதான் நிலையான பயிற்சி. நாட்டில் ஊக்கமில்லை. நாட்டாண்மை நகராண்மைக் கழகங்கள் (Local bodies) இந்தத் துறையில் தக்க ஊக்கம் எடுக்கவில்லை. கல்வித் துறையைக் கடைசி துறையாக அவை கருதுகின்றன. ஒரு தோட்டக்காரனுக்குத் தரும் ஊதியத்தைப்போலத் தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கு 15 ரூபா திங்கட் சம்பளம் அளிக்கப்படுகிறது. அத்தகைய ஆசிரியர்களிடமிருந்து போதிய ஊக்கத்தையும் ஆற்றலையும் எப்படி எதிர்பார்க்கமுடியும் ? படிப்பின்மையை ஒழிக்குந் தொடக்க முயற்சிகள் எளியவை அல்ல ; பல்கலைக் கழகக் கல்வியாளர்கள் தமக்குரிய ஒரு நேரத்தை நாட்டின் அறியாமையோடு செய்யும் இத்தொடக்கப் போரில் செலவிடும்படி தக்க ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

பொதுக் கல்வியோடு தொழிற்கல்வியும் நாட்டுக்கு இன்றியமையாதது. இருவகைக் கல்விகளையுங் கற்பிக்க ஆசிரியர்

களுக்குத் தக்க பயிற்சி வேண்டியிருக்கின்றது. கற்பிக்கும் தொழில் ஒரு கலை; இப்போதிருப்பதைவிட இந்த நாட்டில் பயிற்சி முறை மிகவும் வளர்ச்சி பெறவேண்டும்.

ஆசிரியர்கள், பிள்ளைகளுக்குப் பெற்றோர்களாகவும் இருப்பதற்குரியர். இதனால், இருவகையான ஊக்கங்கள் ஆசிரியர்களுக்கு உரியனவாம். இவை மிகவும் பொறுப்புடைய செயல்கள்.

ஆதலால், கல்விச் சீர்திருத்தத்தில் நாம் அறிவார்ந்த உண்மைத் திட்டங்களை அகன்ற அடிப்படையில் அமைத்துக்கொள்ள வேண்டியிருக்கின்றது. இதனால், நமது நாட்டில் பொது மக்கள் ஒவ்வொருவரும் ஏனையோரைப்போல் நாகரிக வாழ்க்கையும் அறிவும் தோற்றமும் பெறுவதற்கான எல்லா நிலைகளிலும் ஆக்கமடைய இடமுண்டு.

அறியாமை குறைந்தால் அந்நிலை எல்லா வகையான வாழ்க்கை நலங்கட்கும் இடஞ்செய்யுமென்பது அனைவரும் ஒப்ப முடிந்த உண்மையாதலால், திரு. முதலியாரவர்கள் வழங்கிய குறிப்புக்கள், பலரும் முதன்மையாகக் கருதிச் செய்வதற்குரிய அடிப்படைகள் உடையன. நாட்டின் திருந்திய கல்வித் திட்டத்திலும், அதனைப் பேரளவாகச் செய்யவேண்டுமென்னும் ஊக்கத்திலும் திரு. முதலியாரவர்கள் இவ்வளவு கடைப்பிடியுடையவர்களாக இருப்பது நற்பேறு. நாடு அந் நலங்களை விரைந்து பெறுவதாக!

கல்வியும் ஓய்வும்

"கல்வி கற்பவர்களுக்கு இடையிடையே ஆறியிருத்தலும் ஓய்ந்திருத்தலும் பயன் தருவனவாகும். மக்களின் மனமானது, வளைக்கப்படாதவரையில் வலுவுடையதாயிருக்கும் ஒரு வில்லின் தன்மையை யொத்ததாயிருக்கின்றது. என்றாலும், ஒருவன் தன் உள்ளத்தின் ஓட்டத்தை எப்போது தடுத்தாளல் வேண்டும், அல்லததனை எப்போது விடுத்தாளல் வேண்டும் எனப் பகுத்துணர்ந்து நடக்கின்றானோ அதுதான் அவனது உணர்வுக்குச் சிறந்த தன்மையாகும்."

—மறைமலையடிகள்.

பிற்காலப் புலவர்களின் "சுடுசொல்" ஆட்சி

[ந. மு. வேங்கடசாமி நாட்டார்]

மக்கட்கு நாவினால் உண்டாகும் குற்றங்கள் பொய், குறளை, வன்சொல், பயனில்சொல் என்ற நான்குமாம். இவற்றுள் வன்சொல் என்பது, உண்மைக்கு மாறாகவும், அன்பின்றியும், செற்றம்பற்றிப் பிறரை இகழ்ந்துரைக்குமிடத்துக் குற்றமாகு மன்றி, எவ்வழியும் குற்றமாகாது. பிறர் தீமைகளை மென்சொற்களால் மாற்ற இயலாவிடத்துப் பழித்தலும் இடித்துரைத்தலும் இன்றியமையாதனவே.

"புகழ்பட வாழாதார் தந்நோவார் தம்மை
இகழ்வாரை நோவ தெவன்"

என்றார் திருவள்ளுவரும். மருத்துவன் கைப்பும் காரமுமுடைய மருந்துகளால் நோய் தீர்க்குமாறுபோலச் சான்றோர்கள் வெஞ்சொற்களால் பிறருடைய குற்றங்களைப் போக்குவர். ஆசிரியர் தொல்காப்பியனார் இக்கருத்துடன் இதற்கு 'வாயுறை வாழ்த்து' என்று பெயர் கூறி,

"வாயுறை வாழ்த்தே வயங்க நாடின்
வேம்பும் கடுவும் போல வெய்தாத்
தாங்குத லின்றி வழிநனி பயக்குமென்று
ஓம்படைக் கிளவியின் வாயுறுத் தற்றே"

என அதற்கு இலக்கணம் இயம்பினார். திருக்குறட் பாக்களிற் பல இவ்வியல்பினை உடையனவாதலின் அந்நூலுக்கே வாயுறை வாழ்த்து எனவும் ஒரு பெயருண்டு.

பிறரை எள்ளியுரைக்குஞ் சொல் அவருள்ளத்தைக் கருகச் செய்தலினால் அதனை வெஞ்சொல் எனவும், சுடுசொல் எனவும் கூறுதல் பொருந்தும். 'நாவினாற் சுட்ட' என்றார் வள்ளுவனாரும். தீயின் வினையாகிய சுடுதலைச் சொல்லுக்கு ஏற்றியுரைப்பது ஓர் இலக்கணை வழக்கு.

பிறர் தம் பிழையை நினைந்து உளையுமாறு இகழ்ந்துரைத்தல் என்னும் கருத்து ஒன்றாயினும், புலவர்கள் அதனை உரைக்

கும் திறன் பலவாகும். அவை அவ்வக் காலத்துப் புலவர்களின் மன நிலையாலும், மொழிநடையாலும் வேறுபடுதலும் உண்டு. தமிழ் வரலாற்றில் பிற்காலத்தன என்று கருதற்குரிய இலக்கியங்களில் சுடுசொல் அமைந்துள்ள முறையை ஆராய்ந்து காண்போம்.

சுடுசொல்லானது நடுநிலையுடைய சான்றோர்கள் மக்களை நன்னெறிப்படுத்தப் பொதுப்படக் கூறியதும், வரலாற்றில் இயைபுபட்ட ஒருவரை நோக்கிக் கூறியதும் என இருவகைப்படும்.

அறுசுவை யுணவுகளை வயிறார, உண்டும் தம் உடம்பினைப் பல வகையாலும் ஒப்பனை செய்தும், அறிஞர் கூறும் உறுதிமொழிகளைக் கேளாமலும் மதத்தினால் அவர்களை நோக்காமலும் இருக்கும் புன்செல்வர்களைக் குறித்து நீதிநெறி விளக்க ஆசிரியர் கூறும் செய்யுள் இது :

"முடிப்ப முடித்துப்பின் பூசுவ பூசி
உடுப்ப உடுத்துண்ப உண்ணு—இடித்திடித்துக்
கட்டுரை கூறில் செவிக்கொளா கண்விழியா
கெட்டுயிர்ப்போ டுற்ற பிணம்"

இதன் கருத்தும் சொல்லும் உள்ளத்தைச் சுடும் இயல்பினவாதல் காண்க. இவ்வளவு திட்பநுட்பமின்றி, யாவரும் அறியும் எளிய நடையிலே சிலர் பாடியுள்ளனர்.

"பெண்புத்தி கேட்கின்ற மூடரும் தந்தைதாய்
பிழைபுறஞ் சொலு மூடரும்
பெரியோர்கள் சபையிலே முகடேறி வந்தது
பிதற்றிடும் பெரு மூடரும்
....
கற்றறிவி லாதமுழு மூடருக் கிவரெலாம்
கால்மூடர் அரைமூடர் காண்"

என்பது அதற்கு உதாரணமாகும். சிறிதும் கூசுதலின்றியே சிற்சிலரைக் கால்மூடர், அரைமூடர், முழுமூடர் என வெளிப்படையாக இவர் இகழ்ந்துரைக்கின்றார். இவ்விரு மேற்கோளும் பொதுப்பட நீதியாகக் கூறியவை.

ஔவையார் ஒரு காலத்தில் தம்மைப் பாடுமாறு வேண்டிய கயவர் சிலரை நோக்கி,

"மூவர் கோவையும் மூவிளங் கோவையும்
பாடிய எம்தம் பனுவல் வாயால்
எம்மையும் பாடுக என்றனிர் நும்மை
எங்ஙனம் பாடுதும் யாமும்;
களிறுபடு செங்களம் கண்ணிற் காணீர்
வெளிறிலா நல்யாழ் விரும்பிக் கேளீர்
புலவர் வாய்ச்சொல் போற்றீர் மற்றும்
உடீஇர் உண்ணீர் கொடீஇர் கொள்ளீர்
ஓவாக் கானத் துயர்மா மதனில்
அவாக் கனியில் தோன்றி னிரே"

என்று கூறியது ஒரு வரலாற்றில் தொடர்புடையதற்கு உதாரணமாகும்.

இங்ஙனம் வெளிப்படையாகவன்றிக் குறிப்பால் உணருமாறு கூறுதலும் உண்டு. ஒருவரைப் புகழ்வதுபோலப் பழிப்பது, ஒருவரைப் புகழ்வதனால் மற்றொருவரைப் பழிப்பது முதலியன குறிப்பில் அடங்கும். அணி நூலில் இது வஞ்சப் புகழ்ச்சி என்று கூறப்படும். இந்த நாகரிக முறையானது மேன்மையுடையதாகத் தோன்றினும் உள்ளத்தில் ஊடுருவிப் பாயும் இயல்பினது. 'நெட்டிருப்புப் பாறைக்கு நெக்குவிடாப் பாறை பசுமரத்தின் வேருக்கு நெக்குவிடும்' என்றாற்போல, வன்சொல்லாற் கலங்காத நெஞ்சத்தையும் இம் மென்சொல் கலங்கச் செய்யும். 'கயவர்கள் தம்மை நியமிப்பாரின்றித் தாம் விரும்பியவாறு ஒழுகுதலால் தேவரை ஒப்பர்' என்றும், 'பேதையார் கேண்மை பிரிவின்கண் யாதொரு துன்பமும் செய்யாதிருத்தலால் மிகவும் இனிமையுடையது' என்றும் தெய்வப்புலமைத் திருவள்ளுவனாரே இம் முறையை மேற்கொண்டிருத்தலின் இது புலவர்கள் கையாளும் சிறந்த நெறி என்பது போதரும்.

"இரவறியா; யாவரையும் பின்செல்லா; நல்ல
தருமமும் தண்ணீரும் புல்லும்— ஒருவர்
படைத்தனவும் கொள்ளா; இப் புள்ளிமான் பார்மேல்
தடைத்தனவே யன்றோ தயர்."

இஃது ஒரு மானைப் புகழ்வதுபோல் இருப்பினும் இரத்தற்றொழிலையுடைய ஒருவனை நிந்திக்கும் கருத்தினது.

பாரதப்போரில் அபிமன்னன் இறந்தபொழுது தங்கள் வெற்றியைப் பாராட்டிக்கொண்டிருந்த துரியோதனுதியரை நோக்கி, ' வீரராயினுர் ஒருவரோடு ஒருவர் நேர் நின்று போர் செய்தல் உலகியற்கை ; அவ்வாறன்றி, நீவிர் எல்லீரும் கூடிப் போர் புரிந்தும் பருவமெய்தாத ஒரு பாலனுக்கு ஆற்ருமல் பறந்து போனீர்கள் ; பின்பு ஒருவன் பின்னே நின்று தேரை அழிக்க, ஒருவன் கையைத் துணிக்க, ஒருவன் போர் செய்ய, இவ்வாறு வஞ்சத்தால் பொன்றுவித்தீர்கள் ; இதுகொண்டோ பெருமிதம் பேசுகின்றீர்கள் ' என்றிவ்வாறு வீமன் மகனுகிய கடோற்கசன் கூருநிற்க, அதனைக் கேட்ட அரவக்கொடியோன் அவனை வெகுண்டு நோக்கி, ' இருந்த அவைக்கேற்ப உரைக்காமல் தருக்கினுல் இயம்புகின்ற இந்த அரக்கி மகனுடன் ஒன்றும் பேசன்மின் ' என அங்கிருந்த அரசர் யாவர்க்கும் கூறினன். அப்பொழுது கடோற்கசன் கூறும் சுடுசொற்கள் அறியற்பாலன.

" அந்தவுரை மீண்டவன்கேட் டாங்கவனை
நகைத்துரைப்பான் அரக்க ரேனும்
சிந்தனையில் விரகெண்ணுர் செருமுகத்தில்
வஞ்சகமும் செய்யார் ஐயா
வெந்திறல்கூர் துணைவருக்கு விடமருத்தார்
நிறைகழுவில் வீழச் சொல்லார்
உந்துபுன லிடைப்புதையார் ஒரூரில்
இருப்பகற்ருர் உரையுந் தப்பார் "

" செழுந்தழல்வாழ் மனைக்கொளுவார் செய்ந்நன்றி
கொன்றறியார் தீங்கு பூணுர்
அழுந்துமனத் தழுக்குறுர் அச்சமுமற்
றருளின்றிப் பொய்ச்சூ தாடார்
கொழுந்தியரைத் துகிலுரியார் கொடுங்கானம்
அடைவித்துக் கொல்ல எண்ணுர்
எழுந்தமரின் முதுகிடார் இவையெல்லாம்
அடிகளுக்கே ஏற்ப என்ருன் "

இத்தகைய தீமையெல்லாம் அரக்கர்கள் செய்யார் என்ற புகழ்ச்சியால், துரியோதனன் இவையெல்லாம் செய்தவன் என்று இகழ்ந்தவாறு காண்க.

மற்றும், ஒருவரை இகழ்வதுபோல் மற்றொருவரை இகழ்தலும் உண்டு; இது வஞ்சப் பழிப்பணி எனப்படும். ஒருநாள் ஔவைப்பிராட்டிக்கு ஒரு மாது அன்புடன் உணவளிக்க, அவள் கணவன் அதனைப் பொறாது இகழ்ந்தானாக, அப்பொழுது அவர் கூறியது,

“அற்ற தலைபோக அறாததலை நான்கினையும்
பற்றித் திருகிப் பறியேனோ—வற்றல்
மரமனையா னுக்கிந்த மானை வகுத்த
பிரமனையான் காணப் பெறின்”

என்பது. இதில் பிரமனைப் பழிப்பதுபோல் ஓர் பண்புடைய மனைவிக்குப் பொருத்தமற்ற அன்பில்லாத கொடியனை இகழ்ந்தவாறு காண்க. குற்றமுடையவர்களை அறிஞர்கள் இகழ்ந்துரைக்கும் திறங்கள் மற்றும் பலவாகும். மாயூரம் வேதநாயகம் பிள்ளை அவர்கள் இயற்றிய நீதி நூலில் உலோபியை இழித்துக் கூறிய பாட்டு ஒன்று அறிந்து இன்புறற்பாலது.

“பொன்னைமா நிலத்தில்டான் புதைக்கும் எல்லையில்
அன்னையே மனையபார் அருளின் நோக்கிநற்
சொன்னம்என் வாயிடைச் சொரியும்உன் நன்வாய்க்கு
என்னையே இடுவனென்று இசைத்திட் டாளரோ”

இப்பாட்டினை, உலோபியானவன் தானே கூறுவதாக அமைத்து, (பொன்னைப் புதைத்துவைத்தவன் வாயில் மண் விழும்) என்ற கருத்தைச் சாதுரியமாகப் புலப்படுத்தியிருப்பது நகைச்சுவை விளைவிக்கின்றது.

“கத்துகடல் சூழ்நாகைக் காத்தான்றன் சத்திரத்தில்
அத்தமிக்கும் போதில் அரிசிவரும்—குத்தி
உலையிலிட ஊரடங்கும் ஓரகப்பை அன்னம்
இலையிலிட வெள்ளி எழும்”

என்ற காளமேகத்தின் செய்யுளும் நகையினைத் தோற்றுவிக்கும் வசையாக உள்ளது. காளமேகப் புலவர் வசைச் செய்யுள் இயற்றுவதில் வல்லுநர் என்னும் கருத்துப், பரவை வழக்காக இருந்து வருகிறது. ‘வெண்பாவிற் புகழேந்தி’ என்று தொடங்கும் செய்யுளில் ‘வசைபாடக் காளமேகம்’ எனப் பிற்காலப் புலவரொருவர் கூறியிருப்பதும் இதனை வலியுறுத்தும். ஆனால்

காளமேகம் பாடியவையாக அறியப்படும் செய்யுட்களிற் பெரும்பாலனவும் தெய்வங்களைக் குறித்துப் பழிப்பதுபோல் வழுத்தினவாகும்; உண்மையிற் பழிப்புரைகள் அல்ல; இதனையும் வஞ்சப் புகழ்ச்சி என்றே கூறுவர். கருட ஊர்தியில் திருமால் உலா வரும் காட்சியை,

"பெருமாள்
இருந்திடத்திற் சும்மா இராமையினால் ஐயோ
பருந்தெடுத்துப் போகிறது பார்."

என்றும், மூத்தபிள்ளையார் மூடிக வாகனத்தில் உலாவருதலை,

"வலிமிகுத்த மும்மதத்து வாரணத்தை ஐயோ
எலியிழுத்துப் போகின்ற தென்"

என்றும் கூறினர். அடியார்கள் இவ்வாறு இறைவனை இகழ்வதுபோல் நகைதோன்றப் பாடி இன்புறும் இயல்பு தேவாரம், திருவாசகம் முதலியவற்றிலும் காணப்படுகின்றது.

இதுவரை எடுத்துக் காட்டிய சுடுசொல்லின் வகை பல அண்மைக் காலத்து விளங்கிய கவியாகிய சுப்பிரமணிய பாரதியின் பாடல்களில் அமைந்துள்ளன; அவற்றுள் ஒன்றினை எடுத்துக் காட்டி இவ்வுரையை முடிப்போம்.

'முரசு' என்ற பகுதியில், பிறப்பால் உயர்வு தாழ்வு இல்லையென்பதை அவர் சமத்காரமாக வற்புறுத்துந் திறம் அறிந்து மகிழற்குரியது.

"வெள்ளை நிறத்தொரு பூனை—எங்கள்
வீட்டில் வளருது கண்டீர்;
பிள்ளைகள் பெற்றதப் பூனை—அவை
பேருக் கொருநிற மாகும்;
சாம்பல் நிறமொரு குட்டி—கருஞ்
சாந்து நிறமொரு குட்டி
பாம்பு நிறமொரு குட்டி—வெள்ளைப்
பாலி னிறமொரு குட்டி
எந்த நிறமிருந் தாலும்—அவை
யாவு மொரேதர மன்றோ?
இந்த நிறம்சிறி தென்றும்—இஃ்து
தேற்றமென் றுஞ்சொல்ல லாமோ?
வண்ணங்கள் வேற்றுமைப் பட்டால்—அதில்
மானுடர் வேற்றுமை இல்லை;
எண்ணங்கள் செய்கைக ளெல்லாம்—இங்கு
யாவர்க்கு மொன்றெனல் காணீர்."

குரலே சட்சம்

[வித்துவான் ஞா. தேவநேயன், B. O. L.]

இயற்றமிழுணர்ச்சி போன்றே இசைத்தமிழுணர்ச்சியும் மிக்குவரும் இக்காலத்தில், இசைத் தமிழைப் பலரும் பலவாற்ருல் தத்தமக் கிசைந்தவாறு ஆராய்வது தக்கதே. ஆனால், ஒரு படத்தைத் தலைகீழ்த் திருப்பிப் பார்ப்பதுபோல், முதனூலை, வழி நூலாகவும் வழிநூலை முதனூலாகவும் பிறழக்கொண்டு ஆராய்ச்சி நடாத்துவது ஒரு சிறிதும் தக்கதன்று. முத்தமிழில் எத்தமிழை ஆராயினும் முன்னதாக இன்றியமையாது அறியவேண்டிய உண்மைகள் மூன்றுள. அவை தமிழும் தமிழரும் தோன்றியது குமரிநா டென்பதும், ஆரியர் வருமுன்னரே தமிழர் பல துறையிலும் முழுநாகரிகமடைந்திருந்தன ரென்பதும், தமிழர் அல்லது திரவிடரிடத்தினின்றே ஆரியர் நாகரிகத்தை யடைந்தன ரென்பதுமாம். ஆரியர் வருமுன்னரே தமிழ் முத்தமிழாய் வழங்கியதாதலின், ஒருவர் எத்துணைக் கலைபயில் தெளிவும் ஆராய்ச்சி வன்மையும் வாய்ந்தவரெனினும், ஆரிய வேதங்களை இசை முதனூலாகக் கொண்டு ஆராயின், விளக்கின்றிப் புத்திருள் வழி போவார்போல் இடர்ப்படுவாராவர். தமிழ்க்கலைகளையும் நூல்களையும் வடமொழியில் பெயர்க்கும்போது, குறியீடு, பாகுபாடு, தொகையீடு முதலியவற்றை இயன்றவரை மாற்றி வழி நூலையே முதனூலாகக் காட்டுவது ஆரியர் வழக்கம்.

'தமிழ்ப் பொழில்' 17-ம் துணர் 4-ம் மலரிலிருந்து இசைத் தமிழைப்பற்றி விபுலானந்த அடிகள் எழுதிவந்த ஆராய்ச்சிப் பகுதிகளிற் சிலவற்றைப் படித்துப் பார்த்தேன். அவற்ருல், அவ்வாராய்ச்சி முதலிலேயே கோணியதாக என் சிற்றறிவிற் கெட்டிற்று. உடனே இசைத்தமிழ்த் தோற்றத்தை யானே ஆராயத் தொடங்கினேன். அதன் பலனுகக் குரலே சட்சம் எனத் தோன்றுகின்றது. ஆயினும், இதை அறிஞர் ஆராய்ந்து உண்மை காணுமாறு இங்கு வரையலானேன்.

குரலே சட்சம் என்பதற்குச் சான்றுகள்

1. தன்மத நிறுத்தல்.

(க) எழிசை வரிசையில் குரல் முதலிற் கூறப்படுதல்.

இதுகாறும், எத் தமிழ் நூலினும், குரல் துத்தம் கைக்கிளை உழை இளி விளரி தாரம் என்ற வரிசையிலேயே ஏழு சுரங்களும் கூறப்படுகின்றன.

(உ) மத்தளத்திற்கு வலக்கண் குரலென்றல்.
சிந்தாமணியில், 675-ம் செய்யுளுரையில்,

"இடக்கண் இளியாய் வலக்கண் குரலாய்
நடப்பது தோலியற் கருவி யாகும்."

என்பது மேற்கோள். தண்ணுமை, முழவு, மத்தளம், மிருதங்கம் எனப் பலவாறு சொல்லப்படும் ஓரினத் தோற் கருவிகளில், தொன்றுதொட்டு வலக்கண்ணே சட்சமாயிருந்து வருகின்றது.

(௩) குரலே முதற்றான மென்றல்.

11-ம் புறப்பாட்டில், 'குரல் புணர்சீர்' என்னுந் தொடருக்கு "முதற் றானமாகிய குரலிலே வந்து பொருந்தும் அளவையுடைய பாட்டை" என்பது பழையவுரை.

(ச) கேள்விச் சுரம் (சுருதி) இயல்பாய்ச் சட்சமாயிருத்தல்.

எவர் பாடினும் இயல்பாய்ப் பாடும்போது மத்திமமன்றிச் சட்சமே சுருதியாயிருத்தலின், அதனையே முதற் சுரமாக நம் முன்னோருங் கொண்டிருக்க வேண்டும்.

(ரு) குரல் என்னுஞ் சொல் தொண்டையையும் அதிற் பிறக்கும் ஓசையையுங் குறித்தல்.

குல் > குர் > குரல். குலவு=வளை L. **curvus**, E. **curve** குரவை=வட்டமாக நின்று ஆடுங் கூத்து. E.—L. **chorus**, Gr. **choros**, orig. a dance in a ring. குரல்=வளைந்த துளை, துளையுள்ள தொண்டை, தொண்டையிற் பிறக்கும் ஓசை. ஒ. நோ: வளை=குழி. தொண்டை=தொளையுள்ளது. (தொள்+தை).

Dan. **Kroe** E. **craw**, the throat of **fowls**. Dan. **Kroe**, Ger **Kragen**, Scot, **craig**, the neck, E. **crop**, the craw of a bird. A. S. **crop**, Dut. **crop**, a bird's crop.

எல்லா ஓசையுங் குரலெனப்படுமேனும், இயல்பான கேள்வியிசையே (சுருதி), குரலென்னுந் தொண்டைப் பெயராற் கூறப்படுதற் கேற்றல் காண்க.

(சு) குரலே சட்சமாக மாபெரும்புலவர் ஆபிரகாம் பண்டிதர் கொண்டமை.

இசைத் தமிழ்க் கடலைத் (சாகரத்தை) தனிப்படக் கடைந்து 'கருணாமிர்தம்' என்னும் அரிய அமுதையெடுத்து நாம் உண்ண வைத்த காலஞ் சென்ற இராவ்சாகிபு ஆபிரகாம் பண்டிதர் அவர்களின் இசையாராய்ச்சி நூலில், இரண்டொரு சிறு சருக்கல்களிருப்பதாகத் தெரியினும், குரலிசையைப் பற்றிய கொள்கை வலியுறுவதாகவே தோன்றுகின்றது.

2. பிறன்மத மறுத்தல் (விபுலானந்த அடிகள் குரல் மத்திமம் என்று கூறுவதை மறுப்பது.)

(க) கூற்று :

"ச ரி க ம ப த நி என்னும் ஏழு சுவரங்களுக்கும் பொருந்திய சுருதிகள் 4, 3, 2, 4, 4, 3, 2 ஆகும்.

'குரல்துத்தம் நான்கு கிளைமூன் றிரண்டாங்
குரையா உழைஇளி நான்கு—விரையா
விளரியெனின் மூன்றிரண்டு தாரமெனச் சொன்னார்
களரிசேர் கண்ணுற் றவர்.'

என்றமையின், குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்னும் ஏழும் இளிக் கிரமத்திலே, 4, 4, 3, 2, 4, 3, 2, என அலகு பெற்று நின்றன. இவைதமையே இளி முதலாக இளி, விளரி, தாரம், குரல், துத்தம், கைக்கிளை, உழையென நிறுத்துமிடத்து அலகுகள் 4, 3, 2, 4, 4, 3, 2 என நிரல் பெறுதல் காண்க.

மறுப்பு: முதலாவது, அலகுகளே இன்னும் இத்தனையென்று திட்டமாகவில்லை. அலகு மொத்தம் 24 என்றும் 22 என்றும் இருவேறு கொள்கைகள் இருந்து வருகின்றன. இரண்டாவது, பண்ணுக்கேற்றபடி அலகுப் பகுப்பு வேறுபடுவதாகத் தெரிவதால், ஒரு பண்ணுக்கு வகுத்த அலகு முறையைப் பொதுமைப்படுத்துவது பொருந்தாது. மூன்றாவது, இசைத்தமிழ் முத

னூல்கள் அழிந்தபின், ஆரிய வழிநூல்களைத் தழுவியும் தமிழிசை நூலும் நூற்பாவும் தோன்றியிருக்கலாமாதலின், தமிழிலுள்ள நூலெல்லாம் தனித் தமிழ்க் கொள்கைகளைக் கூறுபவையே யென்று கொள்வதற்கும் இடனின்று.

(2) கூற்று :

(வடநூல்)			(தமிழ் நூல்)			
	நாரத சிட்சை	சங்கீத ரத்நாகரம்	பிங்கலந்தை		திவாகரமும்	சூடாமணியும்
ச —	மயில்	மயில்	குரல்	ம	வண்டு	வண்டு
ரி —	பசு	சாதகம்	துத்தம்	ப	கிளி	கிளி
க —	ஆடு	ஆடு	கைக்கிளை	த	குதிரை	குதிரை
ம —	கொக்கு	கிரௌஞ்சம்	உழை	நி	யானை	யானை
ப —	குயில்	குயில்	இளி	ச	குயில்	தவளை
த —	குதிரை	குதிரை	விளரி	ரி	பசு	பசு
நி —	யானை	யானை	தாரம்	க	ஆடு	ஆடு

இருஷபம் (விளரி) பசு, காந்தாரம் (தாரம்) ஆடு, தைவதம் (கைக்கிளை) குதிரை, நிஷாதம் (உழை) யானை என்பன இரு மொழி மரபுக்கும் ஒத்துநின்றன.

மறுப்பு : முதன்முதல் யாழிற் பல நரம்புகளைக் கட்டி மீட்டியபோது, கீழ்க் குரலோடொத்த மேற் குரலையும் அவற்றுக்கிடையிலுள்ள பிற சுரங்களையுங் கண்டு ஏழிசைகளை யறிந்தார்களேயொழிய, மேற் கூறியவாறு மயில் பசு முதலிய பறவை விலங்குகளின் ஓசைகளை ஒருங்கேயோ தனித்தனியோ கேட்டறியவில்லை. ஏழிசைகளைப் புள்ளொடும் விலங்கொடும் இசைத்துக் கூறுவது, புள் நூலையும் குறி நூலையும் ஒட்டிய கற்பனைக் கொள்கையாகவும் இருக்கலாம். இவ்வாறே, பிற்காலத்தாரும், எழு தீவு, எழு முனிவர், எழுமரபு, ஏழாறு, எழுதேவதை, எழு நிறம் முதலியவாக ஏழென்னுந் தொகைபெற்ற பொருள்களோடெல்லாம் தத்தம் விருப்பிற்கும் உன்னத்திற்கும் ஏற்றவாறு ஏழிசையை இசைத்துக் கூறுவாராயினர். இக் கூற்றெல்லாம் இசை நூலோடு எள்ளளவும் தொடர்புற்றவல்ல.

குரலை மத்திமமாகக் கொண்டு, இருமொழி நூல்களிலும் கூறப்பட்டுள்ள புள் விலங்குகளை ஒப்பு நோக்குமிடத்தும் ரிகதநி என்னும் நாற்சுரங்கட்குரியவையே ஒத்திருக்கின்றன; ஏனை முச்சுரங்கட்கும் ஒவ்வவில்லை. குரலைச் சட்சமாகக் கொண்டு நோக்குமிடத்தும், இருமொழியினும் பஞ்சமத்திற்குக் கூறிய பறவை (குயில்) ஒத்திருக்கின்றது. இனி,

> " சங்கு குயில்மயில் யானை புரவி
> செங்கா லன்னம் காடையிவற் றோசை"

என்னுங் கல்லாட மேற்கோளில், வடநூல்களிற் கூறப்படாத மூன்றும் தமிழ் நூல்களிற் கூறப்படாத நான்குங் கூறப்பட்டுள்ளன. இதனால், புள் விலங்குக் குறிப்பைக் கொண்டு ஒரு கொள்கையை நிறுவ முடியாதென்பது போதரும்.

(௩) கூற்று:

> " குரலது மிடற்றிற் றுத்த நாவினிற்
> கைக்கிளை யண்ணத்திற் சிரத்தி னுழையே
> இளிநெற் றியினில் விளரி நெஞ்சினில்
> தார நாசியிவை தம்பிறப் பென்ப."

எனக் கூறியிருப்பதை வடமொழி நூல்கள் கூறும் பிறப்பிடங்களோடு ஒப்பவைத்து நோக்குமிடத்து, குரல் துத்தம் கைக்கிளை உழை இளி விளரி தாரம் என்னும் ஏழும் ம ப த நி ச ரி க வாம் என்பது தெளிவாகின்றது."

மறுப்பு: மேற்கூறிய நூற்பாவில், குரலுக்குக் கூறிய இடந் தவிரப் பிறவெல்லாம் உடல்நூற்கும் ஒலிநூற்கும் ஒவ்வாவென்பது, கண்ட அல்லது கேட்ட மட்டிலேயே தெள்ளத்தெளிவாம்.

இனி, முற்கால யாழெல்லாம் ஒரு தொகை நரம்பினவும் ஒரு திறத்தவுமல்ல. சிலவும் பலவுமான நரம்புகளைக் கொண்ட பல யாழ்களில், சில குரலிலும் சில உழையிலும் சில இளியிலும் சில தாரத்திலும் தொடங்கின. உழையில் (மத்திமத்தில்) தொடங்கிய கோவையைச்சில பண்ணுக்குக் குரன் முதலதாகக்கொண்டு வாசித்தனர். இதனால், ஒரே கோவை (மேளம்) இசை வகையால் ஒன்றும் இடவகையால் ஒன்றுமாக இருவேறுபட்டு, குர

லுக்குக் கூறியதை மத்திமத்திற்கும் மத்திமத்திற்குக் கூறியதைக் குரலுக்குமாக மயங்கக் கொண்டனர்.

பண்ணுக்கேற்றபடி எந்தச் சுரத்தையுங் குரலாகக்கொண்டு வாசித்ததை, 'குரல் குரலாயது' 'துத்தங் குரலாயது' 'கைக் கிளை குரலாயது' முதலிய தொடர்களானுணர்க.

(௪) கூற்று :

"இளி நரம்பிற்குப் 'பட்டடை' என ஒரு பெயருண்டு. 'வண்ணப் பட்டடை யாழ்மேல் வைத்தாங்கு' (அரங்கேற்று காதை, 63) என்பதற்கு அடியார்க்குநல்லார் கூறும் உரையினை நோக்குக. 'எல்லாப் பண்ணிற்கும் அடி மனையாதலின்' இளி இப் பெயர் பெற்றது. 'ஷட்ஜம்' என்னுஞ் சொல்லும் ஏனை ஆறு சுவரமும் பிறத்தற்கு இடமாகியது என்னும் பொருளினைத் தரும்.

மறுப்பு: ச-ப என்னும் சுரப்பிடிப்பே பண்களுக்கெல் லாம் அடிப்படையாதலின், பஞ்சமம் (இளி) 'பட்டடை' யென்றும், 'வண்ணப் பட்டடை' யென்றுங் கூறப்படுவதா யிற்று. பல பண்ணுச் சக்கரங்கள் ச-ப முறையில் இயங்கு வதை அடியார்க்குநல்லா ருரையிலும் கருணாமிர்த சாகரத்திலுங் கண்டுகொள்க.

"தாரத்துட் டோன்றும் உழைஉழை யுட்டோன்றும்
ஒருங் குரல்குரலி னுட்டோன்றிச்—சேரும் இளி......"

என்றதும் இம் முறை பற்றியே.

இனி, இதன் விரிவை, ஆபிரகாம் பண்டிதனார் மகனார் வரகுண பாண்டியனார் எழுதியுள்ள இசைத்தமிழ் விளக்கத்திற் கண்டு தெளிக.

"காய்த லுவத்த லகற்றி யொருபொருட்கண்
ஆய்தல் அறிவுடையார் கண்ணதே."

(இக் கட்டுரையிற் பெரும்பகுதி எனது 'இசைத்தமிழ்ச் சரித்திரம்' என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது.)

காலன் சென்ற வழி

[க. குஞ்சித மணி]

(ஒரு பஞ்சாப் நாட்டுச் சிறுகதை)

அகன்று செல்லும் நெடுஞ்சாலை. இருபுறங்களிலும் மரங்க ளடர்ந்து இருளோவென்றிருக்கும். அச் சாலையின் வழி எவரும் நடப்பதில்லை. அதன் வழியே செல்பவர்கள் பாம்பு கடித்தோ தேள் கொட்டியோ இறந்துவிடுவார்கள் என்று கூறுவர்; சென்றவர்கள் திரும்பியதில்லை என்பதுமட்டும் உறுதி.

ஒருவரும் செல்லா அந்தச் சாலையில், வயது சென்ற முதி யோன் ஒருவன் ஒருநாள் சென்றுகொண்டிருந்தான். வெயி லின் சூடு மிகுந்தது. அலுத்துக் களைத்துச், சாலை யோரத்தில் கிடந்த கல்லொன்றின்மேல் அவன் உட்கார்ந்தான். சிறிது பொழுது கழிந்தது. சட்டென்று அவன் முன் சிறிது தொலை வில் ஓர் உருவம் தென்பட்டது. தேளைப்போல் தோன்றிய அது, ஒரு சேவலவ்வளவு பருமனுடையதாக இருந்தது. அஞ் சத்தக்க அந்த உருவம் மெல்ல மெல்ல முன்னே செல்லத் தொடங்கிற்று. வியப்பு மிகுந்தவனாய், தன் களைப்பையும் மறந்து, முதியோன், அதன் பின்னே தொடர்ந்தான். ஆ! எங்கே அந் தப் பெரிய தேள்? தேள் சென்ற இடத்தில் ஒரு பாம்பு அன்றோ ஊர்ந்து செல்கிறது! கிழவனும் விடாது நிழலைப்போல் அதைப் பின்தொடர்ந்தான்.

அதோ தெரிவது என்ன கட்டிடம்? ஓ! ஒரு சாவடி போலும்! உச்சிப்பொழுது உணவு உண்டபின் பலர் சாவடித் திண்ணையில் படுத்து உறங்கினர். கொடிய அந்நாகம் மெல்லச் சுவரோரமாகத் திண்ணைமேலேறிற்று; படுத்திருந்தவர்களிற் சில ரைச் சினமுடன் தீண்டிவிட்டுக் கீழிறங்கிச் சென்றது. அந்தோ! தீண்டப்பட்டோர் துடிதுடித்து மாண்டனர். வருத்தம்! வருத்தம்!

கிழவன் விடவில்லை; நிழல்போல் பின்தொடர்ந்தான். பெரியதொரு நகரம்; அழகாக அமைந்த தெருக்கள்; வானை யெட்டும் மாடமாளிகைகள். நடுவே மிளிர்வது அரசன் அரண்

மனை! என்ன? பாம்பு அரண்மனைக்குள் அன்றோ செல்லுகிறது! பின்தொடர்ந்த முதியோன் அரண்மனையின் வெளிப்புறத்தில் நின்றுகொண்டான். சற்று நேரத்தில் அரண்மனையுள் பெருங் கூச்சல். அரண்மனை மக்கள் அல்லோல கல்லோலமாய் அங்கு மிங்கும் ஓடினர். அரசன் பாம்பு தீண்டி இறந்தானும்........தண் ணீர்க் குழாயைத் திறந்து அவனது சிறு பெண்ணும் குழாய் வழி வந்த ஒரு பாம்பினுல் கடியுண்டு இறந்தாளாம். திகைப்பு மேலிட்டவனுய்க், கிழவன் ஒன்றும் தோன்றுது நின்றுகொண் டிருந்தான். ஆ! அதோ பாம்பு முன்னே போகிறது. கிழவனும் விடாது நிழல்போல் அதைப் பின்தொடர்ந்தான்.

சாலை முடிந்து விட்டதா என்ன! குறுக்கே பெரியதோர் ஆறு ஓடுகின்றது. அதைக் கடக்கப் பாலமுமில்லை; படகும் இருப்பதாகக் காணவில்லை. இக்கரையில் ஐந்துபேர் ஆற்றைக் கடக்க வகைதெரியாது கலங்கி நிற்கின்றனர். அந்நிலையில் ஆற் ருேரம் வரையில் சென்ற பாம்பு சட்டென அழகியதோர் எருமை மாடாக மாறிற்று. எருமை பருத்துக் கொழுத்து மழ மழவென் றிருந்தது. அதைக் கண்ட ஐவரும், “ஓகோ! எருமை ஆற்றைக் கடக்கப்போகிறது. நாமும் அதன்மேல் ஏறிக்கொண் டால் எளிதிற் செலவில்லாமல் அக் கரை சேர்ந்துவிடலாம்” என்று பேசி முடிவுகட்டினர். அதன்படி, மூவர் எருமையின் மேல் ஏறிக்கொண்டர்; இருவர் அதன் வாலைப் பிடித்துக்கொண் டனர். எருமை சரசர என்று நீரில் இறங்கி நீந்திச் சென்றது. அதன் கண்களில் தன் காரியம் நிறைவேறியதைத் தோற்று விக்கும் வெற்றி ஒளி வீசிற்று. ஆற்றின் நடுவே வந்ததும் விசை யுடன் அது தன் கால்களை உதைத்துக்கொண்டது; தன் பருத்த உடலை நெளித்துச் சுளித்து அசைத்தது. பாவம்! ஐவரும் ஆற் ருேடு சென்றனர். அவர்கள் அலறிய அலறலும் நின்றது; மூழ்கி இறந்துவிட்டனர் போலும். வருத்தம்! வருத்தம்! ஒன் றையும் அறியாததுபோல் மாடு நீந்தி அக்கரை சென்றது. அச் சமயம் அங்கே வந்த படகொன்றில் கிழவன் ஏறி விரைந்து அக் கரை சேர்ந்தான்.

அக் கரை சேர்ந்த கிழவன் அங்கே எருமையைக் காண வில்லை; எருமை இருந்த இடத்தில் எருதொன்று மேய்ந்து

கொண்டிருக்கக் கண்டான். மதுரையில் அமணர் விடுத்த மாயப் பசுவை வதைக்கத் தோன்றிய தெய்வக் காளையின் அழகும் அமைப்பும் இதன் அழகையும் அமைப்பையும் விடச் சிறந்தன ஆகுமோ! ஆற்றல் மிகுந்த அந்த எருது மிக்க அமைதியுடைய தாகக் காணப்பட்டது. எனவே, அருகில் உழுது கொண்டிருந்த உழவனொருவன் 'கண்டேன், கண்டேன்' என்று அதை ஓட்டிக்கொண்டு சென்று தன் வீட்டின் பின்புறமுள்ள கொட்டகையிலிருந்த மாடுகளோடு மாடாகக் கட்டிவைத்தான். இரவுப் பொழுது வந்ததும், அழகிய புதுக்காளை மீண்டும் பாம்பாக மாறியது. மாறி, அங்கிருந்த மாடுகளை யெல்லாம் கடித்தது; பின் வீட்டினுட் சென்று உழவனையும், உழவன் குடும்பத்தாரையும் ஒருவர் விடாமல் தீண்டிவிட்டு, இருளில் விரைந்து வெளியில் சென்றது. விடவில்லை கிழவன்; இருளிலும் நிழல்போல் பின் தொடர்ந்தான்.

பொழுது விடிந்தது. வனப்பு மிகுந்த இளமரச்சோலை ஒன்று சாலை யோரத்தில் காணப்பட்டது. அச் சோலை நடுவே சிறு குளம் ஒன்று. அதன் கரையை அடைந்ததும் பாம்பு அழகிய இள மங்கையாக மாறிற்று. வகை வகையான அணிகள் அம் மங்கையின் உடலெல்லாம் பளிச்சிட்டன. கட்டியிருந்த சேலை கண்ணைக் கவர்ந்தது. அழகே உருவாய்த் திரண்டு அமைந்த அந்த இளமங்கை கீழே உட்கார்ந்து விம்மி விம்மி அழத்தொடங்கினள். அச்சமயம், அவ்வழியே உடன்பிறந்தார் இருவர் வந்துகொண்டிருந்தனர். அவர்கள் உடையும் நடையும் இருவரும் போர்வீரர் என்று தெரிவித்தன. எல்லையற்ற பெருவெளியின் நடுவே காணப்பட்டதோர் எழிற்சோலையில் இள மங்கை ஒருத்தி இருந்து அழுவதைக் கண்ட அவர்களுக்கு வியப்பு மேலிட்டது. மங்கையை அணுகினர் இருவரும்; "அழுவதேன்?" என்றான் மூத்தவன்.

"ஐயன்மீர். நீங்கள் கேட்டு என்ன செய்யப் போகின்றீர்கள்?"

"ஏன் எங்களால் ஆன உதவியைச் செய்வோம், அஞ்சாமற் சொல்!"

" என்ன சொல்வேன். என்னுடன் வந்த என் கணவர் அதோ தெரியும் ஆற்றில் நீராடுந்த இறங்கினர். முதலை பற்றிற்று; ஆற்றில் மூழ்கி இறந்தார். செய்வதறியேன். அலறினேன், அரற்றினேன். வழியொன்றும் காணேன். எனக்கு உறவினரோ, நட்பினரோ எவரும் இல்லை. இடமகன்ற இப் பெரிய உலகில் நான் ஒருத்தி ஆதரவு அற்றவள்........"

" அஞ்சாதே! சம்மதமானல் நான் உன்னை என் மனைவியாக ஏற்றுக்கொள்ளுகிறேன். கவலையொழி! என்ன சொல்கிருய்?"

"வேறு வழியில்லாத எனக்கு இதைவிட வேறு உதவியும் வேண்டுமோ? என்ருலும் ஒன்று நான் கூறவேண்டும். பிறந்த நாள் தொட்டு இதுகாறும் நான் எந்த வேலையும் செய்தறியேன். ஆகையால் வீட்டு வேலை செய்யும்படி என்னை வற்புறுத்தக் கூடாது. அன்றியும், நான் ஏதாவது ஒன்றை விரும்பிக் கேட்டால் இல்லை என்னமல் வாங்கித்தரவேண்டும்."

" இவ்வளவுதானே! ஒத்துக்கொள்கிறேன். சரி புறப்படு!"

" என்னைப் பசி வாட்டுகிறது. கனிகள் ஏதேனும் உடனே பறித்து வாருங்கள்!"

' அடித்தேன் பரிசு ' என்று மூத்தவன் கனிகொணர விரைந்து சென்ருன். அவன் சென்றதும் அம் மங்கை இளையவனைப் பார்த்து, "ஏன்? என்னை மணக்க உமக்கு விருப்பமில்லையா? அவரைவிட உன்னையே நான் பெரிதும் விரும்புகிறேன். உடனே நாம் இருவரும் புறப்பட்டு இக் குறுக்கு வழியே சென்றுவிடுவோம் வா" என்று அழைத்தாள்.

"சிவ, சிவா! இத்தகைய சொற்களை என் காதிற் போட வேண்டா. எப்பொழுது என் அண்ணன் உம்மை மனைவியாக ஏற்றுக்கொள்வதாகக் கூறினரோ அப்பொழுது முதல் உம்மை என் அண்ணியாராகவே கருதுகிறேன். ஆகையால் என் உயிர் போனாலும் நான் உம் விருப்பத்திற்கு இணங்கேன்" என்ருன் அறச்செல்வன்.

"கூ கூ; குய்யோ, முறையோ!" என்று அழத்தொடங்கினாள் அவ் வஞ்சகி. நொடிப்பொழுதில் மூத்தவன் திரும்பி ஓடோடி வந்தான்; "என்ன நடந்தது? ஏன் அழுகிறாய்?" என்று கேட்டான். "நான் சூது வாது அறியாதவள். இவரை உம் உடன்பிறந்தார் என்று நம்பி ஏமாற்றம் எய்தினேன். நீர் அப்புறம் சென்றதும், இப்புறம் இக் கசடர், "அவனென்ன உன்னை மணப்பது? நான் இளையவன்; அழகிலும் ஆண்மையிலும் அவனைவிடச் சிறந்தவன். உன் அடிமையிலும் அடிமையாக நடந்துகொள்வேன். நீ உன் சம்மதத்தைத் தெரிவித்தால், என் அண்ணனை ஒரே வெட்டில் வெட்டிப் போட்டுவிடுகிறேன். என்ன சொல்லுகிறாய்?' என்று அச்சுறுத்தினான். எங்கே உம்மைக் கொன்றுவிடுவானோ என்று அஞ்சி நான் மீண்டும் அழுதேன்" என்று கதை கட்டினாள்.

அவ்வளவுதான். "வஞ்சகா! என்னையோ நீ கொல்வாய்! எங்கே, எடு கத்தியை!" என்று மூத்தவன் தன் கத்தியை உருவினான்.

"பெண்பித்துப் பிடித்தலையும் பேதையே! உண்மை உணராது என்னைக் கடிவதா? எடு கத்தியை; பார்க்கலாம்!" என்றான் வீர இளைஞன்.

இருவருக்கும் வாட்போர் மூண்டது. மும்முரமாகச் சண்டை செய்தனர். இறுதியில் இருவரும் மாய்ந்து வீழ்ந்தனர்.

இளமங்கையைக் காணவில்லை. அவள் இருந்த இடத்தில் இருந்து தாடி நரைத்த கிழவன் ஒருவன் தடியை ஊன்றிக் கொண்டு எழுந்து நின்றான். இவ்வளவையும் பார்த்துக்கொண்டிருந்த நம் முதியோனுக்கு இப்பொழுது அச்சம் நீங்கிவிட்டது; வியப்பும் பறந்துவிட்டது நேரே மாயக் கிழவனிடம் சென்றான்; அவன் தாடியை வலுவாகப் பிடித்தசைத்து "நீர் யார்?" செல்லுமிடமெல்லாம் பிணக்காடாக்குகிறீரே? இன்றும் நேற்றும் இறந்த எண்ணற்ற மக்கள் உமக்கு என்ன தீங்கு இழைத்தனர்?" என்று துடிதுடிப்புடன் கேட்டான்.

"நானா? என்னைக் காலனென்பார்கள், கூற்றுவன் என்பார்கள். நான் சாவின் கடவுள். நீர் நேற்றும் இன்றும் பார்த்

தவர்களுக்கெல்லாம் காலம் முடிந்துவிட்டது. அவர்கள் உயிர்களைக் கவர்ந்தேன். என் வேலையைச் செய்தேன். அவ்வளவு தான்'' என்றான் மறலி.

"அப்படியானால் என் உயிரையும் கவர்ந்துகொள்ளும். நான் இவ்வுலகில் அல்லல் பட்டுப் பட்டு அலுத்துப்போனேன். சாவே இன்பம் பயக்கும் என்று நினைக்கிறேன்'' என்று வணக்கமுடன் கூறினான் நம் கிழவன்.'' அதுதான் முடியாது. உம் காலம் முடிய இன்னும் பத்து ஆண்டுகள் உள்ளன. அதற்கு முன் உம்மைக் கொண்டுசெல்லல் முடியாது. காலம் முடிந்தவர்களை இவ்வுலகில் ஒரு நொடிப்பொழுதும் தங்கவிடேன். காலம் முடியாதவர்களை ஒரு நொடிப்பொழுதிற்கு முன்கூடக் கொண்டு செல்ல ஒருப்படேன். காலம் தவறிக் காலன் ஒருநாளும் நடவான்'' என்று கூறிய இயமன் இமைப்பொழுதில் மறைந்தான். ஏமாற்றமுற்ற கிழவன் தன் வழியே சென்றான்.

இராசராச சோழன்

1. திருமுறை கண்ட சோழன் தமிழ்மறை வகுத்த போதன்
திருமிகு தமிழின் தொன்மை தரும்வரி வடிவம் மீண்டும்
தருவெனத் தமிழே வாழத் தாணியில் தமிழர் ஓங்க
மருவுடன் வாழ வைத்த மாட்சிமை ராச ராசன்.

2. அருண்மொழி காண்பான் நோக்கி அப்பெயர் முன்னே பூண்டான்
அரும்பெரும் போர்கள் செய்து ஆரியப் படையும் வென்று
கருங்கடல் கலங்கள் ஓட்டிக் கடாரமும் ஈழங் கொண்டு
பொருந்தவே புலிப்ப தாகை பொறித்தனன் இமய வெற்பில்.

3. பொறித்தபின் இமய மேபோல் பொற்புறு கோவில் கட்டிச்
சிரித்துமுப் புரமெ ரித்த சிவபிரான் லிங்கம் சூட்டிக்
குறித்ததன் கொள்கைக் கேற்பக் கோல்குடி கலையும் நாட்டி
மறித்திடாக் கங்கை கொண்ட மகனொடுந் தஞ்சை வாழ்ந்தான்.

—சேலம் முத்து. நமச்சிவாயம்.

கம்பி வாத்தியங்கள்

["ஆர். கே. விசுவநாதன், எம். ஏ."]

(திருச்சி வானொலியிற் பேசியது.)

இசைக் கருவிகளில் கம்பிவாத்தியங்களே முதன்மையானவை. இவை எல்லாத் தேசத்தார்களினாலும் நீண்டகாலமாகக் கையாளப்பட்டு வருகின்றன. வீணை, தம்பூர் போன்ற வாத்தியங்கள் எவ்வளவு பழமையானது என்பதைப் பண்டைக்காலத்தில் எழுதப்பட்ட நூல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம். முகலாயர்கள் ஆண்டுவந்த காலம் முதற்கொண்டு சிதார், சாரங்கி, சாரிந்தா போன்ற கம்பி வாத்தியங்கள் வழங்கி வரலாயின. வெள்ளையர்களின் ஆட்சி வந்தபிறகு அவர்களது பிடில் வாத்தியத்தையும் பயன்படுத்தி வருகின்றோம். கம்பி வாத்தியங்கள் எல்லாவற்றையும் அவற்றின் அமைப்புக்குத் தக்கவாறு மூன்று பிரிவுகளாக எடுத்துக் கொள்ளலாம். அதாவது வீணையைப் போல மீட்டி வாசிக்கப்படும் வாத்தியங்கள் என்றும், பிடிலைப் போல வில்லினால் வாசிக்கப்படும் வாத்தியங்கள் என்றும், பியானோவைப்போல உலோகத்துண்டின் உதவியால் தெறித்து வாசிக்கப்படும் வாத்தியங்கள் என்றும் அவற்றை வகைப்படுத்திக் கொள்ளலாம். ஒவ்வொரு வகையிலும் எத்தனையோ வாத்தியங்கள் இருக்கின்றன. இவை எல்லாம் கம்பிகளின் அசைவை ஆதாரமாகக் கொண்டிருப்பதால், கம்பிகளின் துடிப்புக்குண்டான விதிகளை முதலில் கவனிப்போம்.

இரண்டு நுனிகளிலும் நன்றாக இழுத்துக் கட்டப்பட்ட ஒரு கம்பியைத் தெறித்தவுடன், அது துடித்து, ஒரு வரையறுத்த சுருதியைக் கொண்ட ஒலியை எழுப்புகிறது. துடிப்பின் வீச்சுக் குறையக்குறைய இவ்வொலியின் முழக்கம் குறைவதைக் கவனிக்கலாம். ஆனால் சுருதிமட்டும் மாறாமல் ஒரே அளவாயிருக்கும். இறுதியில் ஒலியின் முழக்கம் குன்றி மறைந்துவிடும். ஒரு வினாடியிலேயே கம்பி இயற்றும் துடிப்புகளின் எண்ணிக்கையைத்தான் நாம் சுருதி என்று கொள்ளுகிறோம். இச் சுருதியைத் திட்டப்படுத்தும் ஏதுக்களை விஞ்ஞானிகள் உணர்ந்து அதற்குண்டான விதிகளைக் கண்டிருக்கின்றார்கள்.

கம்பியின் நீளம், அதன் பிகு, அதன் நிறை என்ற மூன்று இராசிகளும் கம்பியின் சுருதியைப் பாதிக்கின்றன என்று அறிந்தார்கள். ஒரு தந்தியின் பிகு மாருதிருந்தால் அதன் துடிப்பு எண் அல்லது சுருதி அதன் நீளத்திற்கு எதிர்விகிதமாய் இருக்கும் என்பதுதான் முதல் விதி. இதனுல் ஒரு கம்பியின் நீளத்தைச் சரிபாதி ஆக்கினுல் அதன் துடிப்பு எண் இரண்டுமடங்காய்விடும் என்று அறியலாம். மேலும் ஒரு கம்பியின் நீளம் மாருதிருந்தால் அதன் துடிப்பு எண், பிகுவின் வருக்கமூலத்திற்கு (Square Root) ஏற்ப இருக்கும் என்பது இரண்டாவது விதி. இவ்விதியை அறிய ஓர் எடுத்துக்காட்டைப் பார்ப்போம். ஒரு கம்பியின் பிகு ஒரு பவுண்டு எடை ஆற்றல் என்று கொள்வோம். இதன் துடிப்பு எண்ணை இரண்டு மடங்காகச் செய்ய வேண்டுமென்ருல் ஒரு பவுண்டு எடை ஆற்றலுக்கு ஈடாக நான்கு பவுண்டு எடை ஆற்றல் கம்பியில் தொழிற்படவேண்டுமென்று இவ் விதி எடுத்துக் கூறுகிறது. பின்னும் ஒரு விதியுண்டு இரண்டு தந்திகளின் நீளங்களும் பிகுக்களும் சமமானுல் அவற்றின் துடிப்பு எண்கள் அவற்றின் நிறைகளுக்கு வருக்கமூல எதிர்விகிதமாக இருக்கும் என்று இம் மூன்ருவது விதி எடுத்துரைக்கின்றது.

இதை இரண்டு தனித்தனி உறவுகளாகப் பிரித்துவிடலாம். ஒரே பிகு, ஒரே நீளம், ஆனுல் வெவ்வேறு ஆரம் கொண்ட இரண்டு எஃகு கம்பிகளில் ஆரம் குறைந்த கம்பி, மிக்க சுருதியுள்ள ஒலி எழுப்புவதை முதல் உறவு விளக்குகிறது. மற்ருென்று ஒரே பிகு, ஒரே நீளம், ஒரே ஆரம் கொண்ட எஃகு, பித்தளை என்ற இரண்டுவகைக் கம்பிகளில், திண்மை குறைந்த எஃகுக் கம்பியின் சுருதி திண்மை மிகுந்த பித்தளைக் கம்பியின் சுருதியைக் காட்டிலும் உயர்வாக இருப்பதை விளக்குகிறது. கம்பி வாத்தியங்கள் எல்லாவற்றிலும் மேள கர்த்தாக்களின்படி வெவ்வேறு சுருதி ஒலிகளை எழுப்புவதற்கு இம் மூன்று விதிகளும் பயன்படுகின்றன. கீழ்நிலையில் (கீழ் ஸ்தாயியில்) வாசிப்பதற்குத் திண்மை மிகுந்த மொத்தக் கம்பிகளையும், மேல் நிலையில் வாசிப்பதற்குத் திண்மை குறைந்த மெல்லிய கம்பிகளையும் பயன்படுத்துவது வழக்கம். துடிக்கும்போது கம்பியின் நீளத்தைத்

தக்கவாறு மாற்றிப் பல சுருதி ஒலிகளை எழுப்ப முடியும். மேலும், கம்பிகளின் பிருவை வேறுபடுத்தி ஆதாரச் சுருதியை மிகுதிப்படுத்தவோ, குறைக்கவோ முடியும். நிற்க,

கம்பிகளின் அசைவிற்குண்டான மற்றொரு விளைவைக் கவனிப்போம். நுனிகளில் இழுத்துக் கட்டப்பட்ட கம்பியின் துடிப்பைச் சற்று முன் கவனித்தபோது நாம் கம்பி முழுவதும் துடிப்பதாகக் கொண்டோம். இத் துடிப்பை முதன்மைத் துடிப்பு என்று கூறுவார்கள். கம்பி இம் முதன்மைத் துடிப்பை மட்டும் மேற்கொள்ளுமாறு செய்யமுடியாது. கம்பி பல கண்டங்களாகவும், துடிக்கும். ஆகையினால் முதன்மைத் துடிப்புடனே சில பரிவாரத் துடிப்புகள் (overtone vibrations) எப்பொழுதும் சேர்ந்தே காணப்படும். எனவே கம்பியிலிருந்து வெளிப்படும் ஒலியில் ஒரு முதன்மைச் சுருதியோடு பலவேறு பரிவாரச் சுருதிகள் கலந்தே வரும் என்று தெரிந்துகொள்ளலாம். முதன்மைச் சுருதியோடு கூடியுள்ள இப் பரிவாரச் சுருதிகளின் தன்மை, எண்ணிக்கை, உறைப்பு முதலியவற்றிற்குத் தகுந்தபடியே ஒலியின் பண்பு அமைகின்றது. வாத்தியங்களின் அமைப்பும் பண்பைப் பாதிக்கின்றது. முதன்மையாக ஒலிப்பெட்டி என்ற பாகம் இதில் மிகுதியான பங்கு எடுத்துக் கொள்ளுகின்றது. எனவே, வாத்தியங்களில் உள்ள ஒலிப் பெட்டியைப் பற்றிச் சிறிது ஆராய்வோம்.

கம்பிகளின் மேற்பரப்பு மிகக் குறைவாகையால் அவற்றினால் தாக்கப்பட்டுத் துடிக்கும் காற்றின் அளவு மிகவும் குறைவாகவே இருக்கும். எனவே, பெரு முழக்கத்தோடு ஒலி எழும்புவதற்கு ஒவ்வொரு வாத்தியத்திலும் காலியான பெட்டியின் மீது கம்பிகள் இழுத்துக் கட்டப்பட்டிருப்பதைக் கவனிக்கலாம். தந்திகள் துடிக்கும்போது ஒலிப்பெட்டியின் எல்லாப் பாகங்களிலும் துடிப்பு ஏற்படுகிறது. பெட்டியின் பரப்பு விரிவானதாகையால் அதனுள்ளும் புறமும் நிறைந்துள்ள காற்றின் பெரும்பகுதி தாக்கப்பட்டுத் துடிக்கின்றது. இதனால் பெரு முழக்கத்தோடு ஒலி பெட்டியிலிருந்து வெளி வருகிறது. கம்பித் துடிப்புகளை விரைவில் ஏற்றுக்கொண்டு பெட்டியின் எல்லாப் பாகங்களும் துடிப்பதற்குப் பெட்டி செய்யப்பட்ட பொருளில் ஒலியின்

வேகம் (Velocity of Sound) மிகுதியாக இருக்கவேண்டும். இதற்காகக் குறைந்த செறிவும், மிகுந்த நெகிழ்ச்சியும் (Blasticity) கொண்ட மரத்தில் ஒலிப்பெட்டி செய்வது வழக்கம். நிற்க,

பெட்டியின் முகங்களைக் குழிந்தோ அல்லது குவிந்தோ இருக்குமாறு அமைத்து நெகிழ்ச்சியைப் பின்னும் மிகுதிப்படுத்திக் கொள்ளலாம். கம்பித் துடிப்புக்களை ஏற்றுப் பெட்டியும் பெட்டிக்குள்ளிருக்கும் காற்றும் துடிப்பதனுல் வெளிவரும் ஒலியின் பண்பு எவ்வாறு மாறுதல் அடைகிறது என்பதை அறியுமுன் பிற வயமான துடிப்பு (Forced Vibrations) உடனியக்கம் (Resorance) என்ற நிகழ்ச்சிகளைப்பற்றிச் சிறிது ஆராய்வோம். முற்கூறிய கம்பித் துடிப்புகள் தம் வயமாக விடப்படுவதனுல் அதன் நெகிழ்ச்சி வன்மையால் மட்டும் துடிப்புகள் ஏற்படுகின்றன. ஒரு பொருள் தானுகத் துடிக்காமல் மற்ருெரு தூண்டுதலுக்கு உட்பட்டுத் துடிக்கலாம். இதற்குத் தூண்டும் ஆற்றலும் துடிப்பியல்பு (Periodicity) கொண்டிருத்தல் வேண்டும். அப்போது துடிக்கும் பொருள் தன்மீது தொழிற்படும் ஆற்றலின் பொழுதையே (Time of Vibration) தனது பொழுதாகக் கொள்ளும். பொருள் இப்போது பிற வயமாய்த் துடிப்பதாகக் கூறப்படும். துடிக்கும் இப் பொருளின் பொழுதும் அதன்மீது தொழிற்படும் ஆற்றலின் பொழுதும் சமமாகியதொரு சிறப்பான நிலேயிலேதான் உடனியக்கம் என்னும் நிகழ்ச்சி தோன்றும். வாத்தியங்களில் கம்பித் துடிப்புக்களை ஏற்று ஒலிப்பெட்டியும் அதனுள்ளிருக்கும் காற்றும் பிற வயமாகத் துடிக்கின்றன. எனவே கம்பி, ஒலிப்பெட்டியின்மீது உள்ள குதிரை, ஒலிப்பெட்டியின் முகங்கள், ஒலிப்பெட்டியினுள்ளிருக்கும் காற்று எல்லாம் சேர்ந்து துடித்து ஒலியை எழுப்புகின்றது என்று இப்பொழுது அறியலாம். இதனுல் வெளிவரும் ஒலியின் பண்பு, ஒவ்வொன்றின் துடிப்பினுலும் பாதிக்கப்படவேண்டுமென்று உணரலாம்.

இப்பொழுது ஒவ்வொரு வகைக்கும் எடுத்துக் காட்டாகச் சில வாத்தியங்களை எடுத்துக்கொண்டு அவற்றின் அமைப்பு, அவற்றின் ஒலிக்குண்டான பண்பு முதலியவற்றைச் சிறிது ஆராய்வோம். வீணை, தம்பூர் இரண்டும் பெரும்பாலும் அமைப்

யில் ஒன்ருய் இருப்பதைப் பார்க்கலாம். வீணையில் ஒலிப்பெட்டி குடவடிவம் கொண்டிருப்பதைக் கவனிக்கவும். இதைப் பலா மரத்திலோ அல்லது கருப்பு மரத்திலோ செய்வது வழக்கம். வட இந்தியாவில் வழங்கப்படும் வீணையில் மரக்குடத்திற்குப் பதிலாகச் சுரக்குடுக்கையைப் பயன்படுத்துகின்ருர்கள். குடத்தின் மேல் பலகையின் நடுவே குதிரை அமைக்கப்பட்டிருக்கின்றது. இதைச் சுற்றிக் குடத்தில் சிறு துவாரங்கள் இருக்கின்றன. இவற்றின் மூலமாக வெளியிலிருக்கும் காற்றுக்கும் குடத்துக்குள்ளிருக்கும் காற்றுக்கும் தொடர்பு ஏற்படுவதனல் ஒலி நன்கு பரவ முடிகின்றது. குடத்துடன் இணைக்கப்பட்டிருக்கிற தண்டி என்னும் பாகமும் இதே மரத்தில் செய்யப்படும். தண்டியின் கழுத்தில் ஒரு சுரக்குடுக்கை சேர்க்கப்பட்டிருக்கும். இவ் வாத்தியத்தில் கம்பியினல் உண்டாகும் ஒலியின் முழக்கத்தை மிகுதியாக்க, குடம், தண்டி, சுரக்குடுக்கை முதலிய பாகங்கள் பயன்படுகின்றன. வீணைநாதம் வன்மையற்று மிகுதியான முழக்கம் இல்லாமலிருப்பதற்குக் குடம், தண்டி முதலிய பாகங்களின் கனமே காரணமாகின்றது. மெல்லிய பலகையினல் குடம் முதலிய பாகங்கள் செய்யப்பட்டால், இதை ஒருவாறு நீக்கிக் கொள்ளலாம். வீணையின் குதிரையும் கனமாய் இருப்பது இதற்கு மற்ருெரு காரணமாகும்.

இப்பொழுது குதிரையின் அமைப்பைக் கவனிப்போம். குடத்தில் இதை வைக்குமுன் மரத்தில் பிறைவடிவமுள்ள துண்டு ஒன்று செய்துகொண்டு, அதன்மீது மற்ருெரு மரச்சட்டத்தைப் படிமானமாக வைத்து, ஒருவகைப் பிசினை ஊற்றி அவற்றின்மீது உலோகத் தகடு ஒன்றைப் பொருத்தி வைக்கிருர்கள். இத் தகட்டின் மீதுதான் வாசிக்கப்படும் நான்கு கம்பிகளும் செல்லுகின்றன. இக் குதிரையுடன் பக்கவாட்டத்தில் மற்ருெரு குதிரையும் சேர்க்கப்படுகிறது. இதன்மீது மூன்று தாளக் கம்பிகளும் செல்லுகின்றன. எனவே, குதிரையின் அமைப்புக் கனமாய்ப் போய்விடுகிறது. இதன் விளைவாகக் கம்பிகளின் துடிப்பு, குடத்திற்கும் மற்றுமுள்ள பாகத்திற்கும் குதிரையின் மூலமாகவே பரவவேண்டியிருப்பதால் ஒலிப்பெட்டியின் துடிப்பு அதிர்ச்சி குறைந்து விடுகிறது. ஆனல் இதில்

ஒரு நன்மை உண்டு. கனத்தின் விளைவாய், குதிரை, கம்பிகளின் அதிர்ச்சியைத் தாமதத்துடன் பெட்டிக்குப் பரவச் செய்வதால்தான் வீணை நாதத்திற்கு நாம் போற்றும் 'கார்வை' ஏற்பட்டது. நம் நாட்டின் சிறந்த இயற்கைப்பொருட் கலைஞரான ஸர். சி. வி. ராமன், வீணை, தம்பூர் இரண்டின் குதிரைகளைப்பற்றிச் சோதனைகள் நடத்தி இவற்றினது நாதத்தின் பெருமை பெரும்பாலும் இக் குதிரைகளின் அமைப்பினுலேயே ஏற்பட்டது என்று கருதுகின்ருர். வீணைக் குதிரையின் பரப்புச் சமதளமாய் இராமல் சற்றுக் குவிந்து இருப்பதனுலேயே நாதத்தில் பரிவாரச் சுருதிகள் நன்கு அமைந்து நாதம் கவர்ச்சியுள்ளதாய் இருக்கின்றது என்று கருதுகின்ருர். இதைப்போலவே தம்பூரின் நாதத்தில் 'ஜீவு' இருப்பதற்குக் கம்பிகளுக்கும் குதிரைக்கும் இடையே பட்டு நூல் துண்டுகள் புகுத்தும் வகையும், குதிரையின் அமைப்பும் காரணமாகிறது என்று கூறுகிருர்.

வீணை தண்டிப் பலகையின் விளிம்புகள் மீது குறுக்காக மெட்டுகள் அமைத்திருப்பதைக் கவனிக்கவும். மொத்தம் 24 மெட்டுகள் இருக்கும். மெட்டுகள் அமைப்பதைத்தான் மேளம் பண்ணுகிறது என்று சொல்லுவார்கள். ஒரு நிலைக்கு 12 மெட்டுகள் வைக்கப்படும். இதனுல் பியானே, ஆர்மோனியம் போன்ற மேனுட்டார் வாத்தியங்களில் கையாளப்படும் (Equal Temperament) என்ற கருத்தை நம் முன்னேர்களும் மேற்கொண்டிருப்பதை அறியலாம். (Equal Temperament) என்பது ஒரு நிலையை 12 சம இடை வெளிகளாகப் பிரிப்பதை மேற்கொண்டிருக்கிறது. இதனுல் ஆர்மோனியத்தைப்போலக் குரலிடங்களைத் (ஸ்வர ஸ்தானங்களை) திட்டமாகப் பிடிக்கமுடியாமல் போய்விடுமே என்ற ஐயம் எழலாம். மெட்டின் மீது கம்பியை அமுக்கும் வலுவை மாற்றுவதாலும், அத்துடன் தேய்த்து இழுப்பதாலும் வீணையில் குரலிடங்களைத் திட்டமாகப் பிடிக்க முடிகின்றது. மெட்டுகள் இருப்பதனுல்தான் பிடிலைப்போலில்லாமல் இவ் வாத்தியத்தில் விரைவில் தேர்ச்சி பெற முடிகிறது. மெட்டுகளின் உதவி இல்லாமல் வாசிக்கக் 'கோட்' என்னும் வாத்தியத்தை நம் முன்னேர்கள் இயற்றியிருக்கிருர்கள். நாதத்தில் இது தம்பூரை ஒத்திருக்கும். சிறு மரத்துண்டின் உதவி

யால் கம்பியின் நீளத்தைத் தக்கவாறு குறைத்து இவ் வாத்தியம் வாசிக்கப்படும்.

இப்பொழுது வில்லினல் வாசிக்கப்படும் வாத்தியங்களுக்குக் காட்டாகப் பிடில் வாத்தியத்தைக் கவனிப்போம். வீணையைப்போல இதன் நாதம் அவ்வளவு இனிமையாய் இல்லாவிட்டாலும் கம்பி வாத்தியங்களில் வாய்ப்பாட்டுக்கு நல்ல பக்கவாத்தியமாக அமைந்தது இதுதான். கர்நாடக சங்கீதத்திற்கென்றே இது ஏற்பட்டதோ என்று வியப்படையும்படி முதலில் இதை வாசித்துக்காட்டியபெருமை, காலஞ்சென்ற திருக்கோடிக்காவல் கிருஷ்ணய்யர், திருச்சி கோவிந்தசாமிப் பிள்ளை என்னும் இருவர்களுக்கும் உரித்தாகும். இவ் வாத்தியத்தின் பெருமை இதன் ஒலிப்பெட்டியினல் ஏற்பட்டதேயாகும். வில்லைக்கொண்டு நன்ருய் மீட்டி வாசிக்க இடைஞ்சல் இல்லாமலிருக்குமாறு இதன் ஒலிப்பெட்டியின் வடிவம் அமைந்திருக்கிறது. குறைந்த செறிவும், மிகுந்த நெகிழ்ச்சி வன்மையும் கொண்ட மரத்தில் இது செய்யப்படுகிறது. இதில் (F) போன்ற இரண்டு சந்துகள் குதிரையின் இருபுறங்களிலும் இருப்பதைக் கவனிக்கவும். இதன் குதிரை மரத்தினல் செய்யப்பட்டு உயரமாயும் மேல்முனை சற்றுக் கூராயும் இருப்பதைப் பார்க்கலாம். இதன் கால்களில் ஒன்று (Sound Post) என்று சொல்லப்படுவதும், பெட்டியின் மேல் பலகையையும் கீழ்ப்பலகையையும் சேர்க்கின்றதுமான ஒரு சிறு மரத்துண்டின்மீது பொருத்தி வைக்கப்படுகிறது. கம்பிகளின் நீளத்தை மாற்றுவதற்கு வசதியாக (Finger Board) என்னும் பாகம் ஒலிப் பெட்டியுடன் சேர்க்கப்பட்டிருப்பதைக் கவனிக்கவும். இதன்மீது இடக் கை விரல்கள் கொண்டு கம்பிகளை அழுக்குவதனல் கம்பிகளின் நீளத்தைக் குறைத்து, வேண்டுங் குரல்களை எழுப்பமுடிகிறது. வீணையில் இரண்டரை நிலையில் அடங்கியுள்ள குரல்களைத்தான் வாசிக்க முடியும். ஆனல் இதில் அவ்வாறு கட்டுப்பாடு இல்லை.

இப்பொழுது பிடில் கம்பியைத் துடிக்கச் செய்யும் வில்லின் போக்கைக் கவனிப்போம். வில்லை ஒரு புறத்திலிருந்து மற்ருெரு புறத்திற்கு இழுக்கும்போது முதலில் அதன் மயிர்கள் கம்பியைக் கவ்வுவதனல் கம்பி வில்லுடன் சிறிது தூரம் செல்லுகின்றது.

இதற்குள் கம்பியிலிருக்கும் பிகு கம்பியை முன்னிலைக்கு இழுக்கின்றது. எனவே, கம்பி மயிர்களிலிருந்து கக்கிக்கொண்டு வில்லுக்கு எதிராக வந்து நெகிழ்ச்சி வன்மையால் சமநிலையைத் தாண்டி ஓடிவிடுகிறது. மறுபடியும் மயிர்கள் கம்பியைக் கவ்வுவதனுல் கம்பி திரும்ப வில்லுடன் செல்லுகின்றது. இவ்வாறு சில சமயம் வில் செல்லும் திசையிலும் பிறகு அதற்கு எதிராகவும் சென்று கம்பி துடிக்கின்றது. வில்லை அழுத்தியோ அல்லது விசையுண்டாக்கியோ மீட்டினுல் கம்பியின் துடிப்பு விச்சு மிகுதியாகும். கம்பித்துடிப்பு குதிரையின் வழியாகப் பெட்டியின் மேல் பலகைக்கும் Sound post இன் மூலமாகக் கீழ்ப்பலகைக்கும் பரவிப் பெட்டியும், பெட்டிக்குள்ளிருக்கும் காற்றும் துடித்து வெளிக்காற்றில் ஒலி பரவுகிறது. முழக்கத்தை மிகுதிப் படுத்துவதுடன் ஒலிப்பெட்டி தன் துடிப்பினுல் ஒலியின் பரிவாரச் சுருதிகளில் சிலவற்றைப் பலப்படுத்திப் பண்பை மாற்றிவிடுகிறது. எம்மட்டும் ஒலிப்பெட்டியின் துடிப்பினுல் பண்பு மாறுகிறது என்பதை அறிய விஞ்ஞானிகள் ஒலிப்பெட்டியின் அசைவு, குதிரையின் அசைவு, பெட்டிக்குள்ளிருக்கும் காற்றின் அசைவு இவற்றுக்குண்டான துடிப்புவரைகளைத் (Vibration Curves) தனித்தனியே படம் பிடித்து ஆராய்ச்சிகள் நடத்தியிருக்கிருர்கள். பிடில் பெட்டி பழகப்பழகக் கம்பி, குதிரை, ஒலிப்பெட்டியின் மேற்பலகை, கீழ்ப்பலகை, உள்ளிருக்கும் காற்று இவை ஒவ்வொன்றும் மிகுந்த ஒற்றுமையுடன் உடனியங்கித் துடித்து ஒலியின் பண்பு நாளடைவில் பின்னும் இனிமை அடைவதை அறிந்தார்கள்.

இதில் (Wolf Note) என்று ஒரு தனியான ஒலி ஏற்படுவதைக் கண்டார்கள். இது ஏற்படும்போது பிடிலின் உடல் முழுதும் நன்ருக அதிர்வதைக் கவனித்தார்கள். நன்ருக மீட்டி வாசிக்க இடர்ப்படுவதைக் கண்டார்கள். இந்த ஒலி உடனியக்கத்தின் விளைவாக ஏற்பட்டதென்று முதலில் நினைத்தார்கள். இதற்குச் சரியான காரணத்தை ஸர். சி. வி. ராமன் அவர்களே கண்டுபிடித்தார். பிடில் வாத்தியத்தில் தேர்ச்சி பெற முதலில் வில் நன்ருகப் போடப் பழகவேண்டும். எப்படி நல்ல வாய்ப் பாட்டுக்குக் குரல் கட்டாயமோ அதுபோலப் பிடில் வாத்தியத்

தில் நல்ல பயிற்சியைப் பெற வில் போடும் முறைதான் முதன்மை யானது. இதற்கு வேண்டிய விசையும், அழுத்தமும், நாளடை வில் பழக்கத்தினுல்தான் ஏற்படும். வாசிப்பதற்கு இடது கை மணிக்கட்டு, விரல்கள் இவற்றை நன்கு பழக்கவேண்டும்.

இனி, மூன்ருவது வகைக்கு எடுத்துக்காட்டு ஒன்றைக் கவனிப்போம். இதற்கு வெள்ளைக்காரர்களால் கொண்டாடப் படும் பியானே வாத்தியத்தை எடுத்துக் கொள்வோம். இதில் பெரிதும் சிறிதுமாகப் பல மாதிரிகள் இருக்கின்றன. பெரிய பியானே வாத்தியங்களில் 220 கம்பிகள் வரை இருக்கின்றன. எழுகால் நிலையில் அடங்கியுள்ள எல்லா ஒலிகளையும் எழுப்ப இவற்றில் வசதி இருக்கிறது. இவ் வாத்தியங்களுக்கென்று தனியாக எஃகு கம்பிகள் உண்டாக்கப்படுகின்றன. கம்பிகளின் துடிப்புக்குண்டான விதிகளைப் பார்க்கும்போது எவ்வாறு கம்பியின் நீளம், மொத்தம், பிகு இவை கம்பியின் சுருதியைப் பாதிக்கின்றது என்று கண்டோம். அதை ஒட்டி (Equal Temperament) என்ற கணக்கின்படி கம்பிகளின் நீளம் மொத்தம் இவற்றைத் தக்கவாறு குறைத்து இவ் வாத்தியத்தில் கம்பிகளை அமைத்திருக்கிருர்கள். எஃகுக் கம்பிகளின் மீது செப்புக் கம்பிகளை உறையிட்டுக் குறைந்த சுருதிகளுக்கு அக் கம்பிகளைப் பயன்படுத்துகின்ருர்கள். கம்பிகளைத் துடிக்கச் செய்யச் சிறு உலோகத் துண்டுகள் பயன்படுத்தப்படுகின்றன. இதில் உள்ள இயந்திரக் கருவியின் உதவியால் இவ்வுலோகத் துண்டுகளைக் கொண்டு கம்பிகளைத் தெறித்து, அதனுல் ஏற்படும் துடிப்புக்களை ஒலிப்பலகை (Sound Board) என்னும் பாகம் ஏற்குமாறு செய்து, பெரு முழக்கத்துடன் ஒலி எழுப்பப்படுகிறது. உலோகத் துண்டுகளின் பரப்பு மெத்தென்று இருக்கும்பொருட்டு அவை பட்டுத்துணியில் தைக்கப்பட்ட உறைகளில் வைக்கப்படுகின்றன. ஒவ்வோர் உலோகத் துண்டும் வெவ்வேறு விசையுடன் சென்று கம்பியைத் தாக்குமாறு வசதி செய்யப்பட்டிருக்கிறது. மேனுட்டார் எல்லோரும் வாய்ப்பாட்டைக் காட்டிலும் இவ் வாத்தியத்தையே மிகுதியாக விரும்புகிருர்கள்.

கடைசியாக மூன்று வகை வாத்தியங்களின் ஒலிப்பண்புக் குண்டான சில செய்திகளைக் கவனிப்போம். ஓர் ஒலியின்

பண்பை அறிய முதலில் சில கருவிகளைக் கொண்டு அதன் துடிப்புப் படத்தைப் பெறவேண்டும். இப் படத்தில் அவ்வொலிக்குண்டான அலைத்தொடர் இருக்கும். இதைப் பரிசோதித்து இதில் அடங்கியுள்ள முதன்மைத் துடிப்பு, பரிவாரத் துடிப்புகள் இவற்றைப்பற்றி எல்லா விவரங்களையும் அறியலாம். இம்மாதிரிச் சோதனைகள் நடத்தி ஒவ்வொரு வாத்தியத்திலிருந்து வரும் ஒலியிலும் பல பரிவாரச் சுருதிகள் இருப்பதையும், அதன் பண்பு பரிவாரச் சுருதிகளின் எண்ணிக்கை, தன்மை, உறைப்பு இவற்றைப் பொறுத்திருப்பதையும் விஞ்ஞானிகள் அறிந்தார்கள். மேலும் இப் பரிவாரச் சுருதிகளின் எண்ணிக்கை பெரும்பாலும் கம்பித் துடிப்பை இயற்றும் கருவியின்மீது சார்ந்திருப்பதைக் கண்டார்கள். இதனால் மீட்டித் துடிக்கச் செய்யும்போது உண்டாகும் ஒலியின் பண்புக்கும், வில்லைக்கொண்டு துடிக்கச் செய்யும்போது ஏற்படும் ஒலியின் பண்புக்கும் உள்ள வேறுபாட்டை உணர்ந்தார்கள். மீட்டி எழுப்பப்பட்ட ஒலியில் உள்ள பரிவாரச் சுருதிகள் ஒலி அடங்குமுன் வரவரத் தென்பு குறைந்துவிடுவதைக் கண்டார்கள். இதனால்தான் வீணை நாதம் இனிமையாயும், மெல்லிதாயும் இருப்பதாகக் கொள்ளப்படுகிறது. வில்லினால் வாசிக்கும்பொழுது ஏற்படும் ஒலியில் உயர்ந்த பரிவாரச்சுருதிகள், மிக்க வலிவுடன் கலந்துவருவதைக் கண்டு இதனால்தான் பிடில்போன்ற வாத்தியங்களின் நாதம் விறுவிறுப்பாக இருக்கிறது என்று கூறுகிறார்கள். பியானோ போன்ற வாத்தியங்களின் நாதத்தில் இருக்கும் பரிவாரச் சுருதிகள் வீணை, பிடில் போன்ற வாத்தியங்களின் நாதத்தில் இருப்பதைப்போலில்லாமல் வேறாக அமைந்திருப்பதை உணர்ந்து காட்டினார்கள். பியானோ வாத்தியத்தில் உலோகத் துண்டும் கம்பியும் மோதிக்கொள்ளும் விசை, காலம் இவற்றை மாற்றுவதால் பரிவாரச் சுருதிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவோ அல்லது குறைக்கவோ முடிவதைக் கண்டார்கள். இதுபோலச் சோதனைகள் நடத்தி எல்லா வாத்தியங்களின் பண்பையும் அறியலாம்.



[புத்தனேரி ரா. சுப்பிரமணியன்]

௧௦. மலரைக் கசக்கினான்!

சோலையப்பனுக்கு வேண்டிய ஆறுதல் மொழிகளைக் கூறிக்கொண்டிருந்தபோது, வேடனின் பார்வை, மண்டபத்தின் ஒரு மூலையிலிருந்த கற்சிலை ஒன்றின்மீது சென்றது. சிலையின் முன்னால் சிற்சில பழைய ஏடுகள் அடுக்கப்பட்டிருந்தன. இவற்றைக் கண்டதும் வேடன் ஆவலோடு எழுந்து சிலையருகில் சென்று அதனை ஏற இறங்கப் பார்த்தான். அவனுக்குப் பின்னால் அன்னம் போன்று நின்றுகொண்டிருந்தாள் வல்லி. இவர்களிருவரும் சிலையிற் கண்டு மகிழ்ந்துகொண்டிருந்த காட்சி இதுதான் :—

சடைக்கற்றையாலான தலைப்பாகை; குண்டலமணிந்த செவிகள்; சுருண்டு நீண்ட தாடி; அருள்நிறைந்த அன்பறிவுக் கண்கள்; புன்னகை தவழும் முகம்; இடக்கையில் ஏடுகள்; வலக் கையோ உபதேசிக்கும் பாவனையில் உள்ளது; குட்டையான வடிவம்; இவ்வளவு அமைப்போடு விளங்கும் முனிவர் பெருமானின் அருகில் ஒரு கமண்டலம்; குன்றின்மீது அவர் அமர்ந்துள்ள காட்சி.

“வல்லி! இந்தச் சிலை யாரா யிருக்கலாம்?...சொல் பார்க்கலாம்;...” என்று வல்லியின் பக்கமாகத் திரும்பிக் கேட்டான் வேடன்.

“இது தெரியாதா?...இது ஒரு முனிவரின் சிலை!...” என்று புன்னகை ததும்பப் பதில் அளித்துவிட்டுத் தலையைக் குனிந்து கொண்டாள் வல்லி.

“முனிவர் என்பது தெரிகிறது!...எந்த முனிவர் என்பதுதான் என் கேள்வி!...”

“அதெல்லாம் எனக்கென்ன தெரியும்? நீங்கள்தான் சொல்லுங்களேன் பார்க்கலாம்!...”

“நான் நினைக்கிறேன்—இது அகத்திய முனிவரின் சிலையா யிருக்கலாமோ?...எதற்கும் சோலையப்பரைக் கேட்டுப் பார்ப்போம்;...” என்று சொல்லியவண்ணம் சோலையப்பனை நோக்கி,

“அன்பரே! இது அகத்திய முனிவரின் சிலையோ?...” என்று வினவினான்.

சோலையப்பன் :—"ஆமாம் !"

வேடன் :—" அவர் முன்னால் என்னென்ன ஏடுகள் உள்ளன?"

சோலை :—" என்ன வெல்லாமோ இருக்கின்றன !...அகத்தியம் !... தொல்காப்பியம் !...கழுதை !...குதிரை !...எல்லாந்தான் !"

வேடன் ;—(சிரித்துக்கொண்டே) கழுதை, குதிரைகூட இருக்கின்றனவோ?...சரிதான் ! தமிழ் நூல்களுக்கு நல்ல மதிப்புக் கொடுக்கிறீர்களே!..."

சோலை :—" தமிழ் நூல்களுக்கு என்னைவிட நீர் மதிப்புக் கொடுக்கிறவரோ ?...ஆமாம் ! ..என்னை யாரென்று எண்ணிக்கொண்டீர் ? யான் முத்தமிழ்ப் புலவர் மூன்றும் அகத்தியர் என்பது உமக்குத் தெரியாதா ?...

வேடன் :—"என்ன சொல்கிறீர்கள் ?...தாங்கள் தமிழ்ப் புலவரா ?... (நகைத்துக்கொண்டு) உம்மைப் பார்த்தால் அப்படித் தோன்றவில்லையே !..."

சோலை :—" என்ன சொன்னீர் ?...ஏது ? வரவரப் பேச்சு ஒரு மாதிரியாகப் போகிறதே!...என் பேச்சில் உமக்கு நம்பிக்கை யில்லையா?... நன்றிகெட்டவரே! உமக்கு இந்த மண்டபத்தில் தங்க இடம் கொடுத்ததே தவருயிற்று !......

வேடன் :—(இடைமறித்து) " அன்பரே ! கோபம் வேண்டாம் !... ஏதோ வேடிக்கையாகச் சொன்னதை வேற்றுமையாய் எண்ணிக் கொண்டீர்கள் !...மன்னித்துக் கொள்ளுங்கள் !..."

இவ்வாறு வேடனுக்கும் சோலையப்பனுக்கும் இடையே பேச்சு வளர்ந்துகொண்டு போகவே, வேடன் அவ்விடத்தைவிட்டுச் சிறிதுநேரம் விலகியிருக்க விரும்பினான். வீண்பேச்சு வளர்ப்பதில் பயனில்லை என்பதைக் கண்டான். எனவே, மண்டபத்திற்கு வெளியேயுள்ள பூந்தோட்டத்திற்குப்போய்ச்சற்று உலாவிவிட்டு வரலாமென்று புறப்பட்டான். மெல்லியல் வல்லியும் அவன் பின் தொடர்ந்தாள்.

அச்சமயம், படுக்கையிலிருந்த சோலையப்பனின் தொண்டை விக்கிக் கொண்டாற்போன்று ஓர் ஓசை எழுந்தது. உடனே வேடன் வல்லியை நோக்கி, " வல்லீ ! அவர் நாக்கு வறண்டிருப்பதுபோல் தோன்றுகிறது ! நீ ஒரு கிண்ணத்தில் தண்ணீர் கொண்டுவந்து அவரிடம் கொடுத்துவிட்டு வா !..." என்று கூறியவனைப் பூந்தோட்டத்திற்குள் நுழைந்தான். அந்த நேரத்தில் மண்ணக இருளைக் கண்டு உள் நகைப்பான் போன்று வெண்ணிலவோன் தண்கதிர் பரப்பி எழில் வண்ணத்தோடு விண்ணக வெளியில் உலாவிக்கொண்டிருந்தான்.

சோலையப்பனுக்குத் தண்ணீர் கொடுக்கும் பொருட்டு உள்ளே வந்த வல்லியை நோக்கி, அவன்,

“பெண்ணே! அதோ, அந்த அறைக்குள் ஒரு மண்பானையில் தண்ணீர் இருக்கிறது! கொண்டு வா!...” என்று கூறினான்.

வல்லி அந்த அறையை நோக்கிச் சென்றாள். அதன் கதவைத் திறந்து உள்ளே நுழைந்தாள். அறையில் குவிந்துகிடந்த வைரமணி மாணிக்கங்களும் பொன் நகைகளும் அவள் கண்களைப் பறித்தன. அவற்றின் பளபளப்பு ஒளியைக் கண்டு திகிலுற்ற வண்ணமாக, அறையின் ஒரு மூலையிலிருந்த தண்ணீர்ப் பானையை அணுகினாள். வைரமணிகளின் ஒளியினால் இருள் நேரத்திலும் அறை, சற்று வெளிச்சமாகவே இருந்தது. தண்ணீர்ப் பானையின் பக்கத்திலிருந்த ஒரு வெள்ளிக் கிண்ணத்தை எடுத்துத் தண்ணீரை முகந்துகொண்டிருக்கும் சமயம், “படீர்” என அறையின் கதவு சாத்தப்படும் ஓசை கேட்டது! திடுக்கிட்டுத் திரும்பினாள்!

ஓர் ஆடவனைக் கண்டாள்! அறைக் கதவைத் தாளிட்டுவிட்டு இவளை நோக்கி ஆவலாக வந்துகொண்டிருந்தான் அவன்! வல்லியின் உடல், நடுக்கத்தினால் துவண்டுபோயிற்று! கண்கள் கலங்கின! நெஞ்சு “படக், படக்” கென்று அடித்துக்கொண்டது! மனதிலோ ஏக்கம்! பயங்கரமான பெருமூச்சு! நிலைகலங்கிச் சுவரோரமாகப் பதுங்கி நின்றுகொண்டிருந்தாள் அவள்!

அந்த ஆண் உருவம் அவளை நோக்கி அடிமேல் அடிவைத்துப் பூனை போல் வந்துகொண்டிருந்தது! அதன் வலது கையில் புதிதாக மலர்ந்த பிச்சப் பூ வொன்று தென்பட்டது! அந்த உருவத்தின் வாயிலிருந்து, ‘ஹா!...ஹா!!...ஹா!!!” என்ற இடிமுழக்கம் போன்ற சிரிப்பு விண்ணதிர எழுந்தது!

அவ்வளவுதான்! வல்லி பயத்தினால் குறுகிப் போய், “ஆ .. நண்பா!...ஐயோ!...என்னைக் காப்பாற்று!......” என்று ‘கூவே கூ’ வென்று கதறினாள்! இன்னொரு முறை பலமாகச் சிரித்தான் அம் மனிதன்!

“பெண்ணே!...என் கதறுகிறாய்?...இதோ! என்னைப் பார்!... உனக்கேற்ற காதலன்!...பசுவுக்கேற்ற காளை!...ரதிக்கு ஏற்ற மன்மதன்!!......எங்கே!...என் பக்கம் திரும்பி உன் மலர் முகம் காட்டு!...’ என்று பிதற்றிக்கொண்டே அவன் நெருங்கினான்.

வல்லிக்கோ என்ன செய்வதென்று தோன்றவில்லை! “ஐயோ!... தெய்வமே!! நீதான் துணை!! ...” என்று இரக்கமாக இறைவனை நோக்கி இறைஞ்சினாள்! “தெய்வம்!...இதோ இருக்கிறேனே,...உன் கண்கண்ட தெய்வம்!!...” என்று நயமாகப் பேசினான் அவன்.

"அட பாவி !...சண்டாளா !...காம வெறிபிடித்த பேயே !...நன்றி கெட்ட நாயே !...மானங் கெட்ட மண்டூகமே !...போடா, தூர !..." என்றெல்லாம் கண்டபடி திட்டிக்கொண்டு கூக்குரலிட்டாள் வல்லி.

அவன் இன்னும் கொஞ்சம் நெருங்கிவந்தான். தன் வலக்கையிலுள்ள பிச்சி மலரையும், வல்லிப் பூங்கொடியாளையும் மாறிமாறிப் பார்த்தான். பின் குழைவான குரலில் பின்வருமாறு சொன்னான் :—"பெண்ணே ! இதோ பார் !...இந்த மலர் என் கையில் அகப்பட்டுள்ளது !...இதனை யான் என்ன செய்தாலும் என்னை ஏனென்று கேட்பார் யாருமில்லை !...வீணே பிடிவாதம் செய்யாதே !...உன் ஆசைக் காதலனை விரட்டாதே !—"

இதனைக் கேட்டதும் வல்லியின் மனம் புழுவாய்த் துடித்தது ! அந்தக் கொடியோனின் அகம்பாவத்தை எண்ணியதும் அவள் உயிரில் பாதி பிரிந்து திரும்பியது போன்றே இருந்தது !

அடுத்த நொடியில் அம் மெல்லியல் நங்கையின் மேனியைத் தொட்டிழுக்க முடிவுசெய்த அக் கொடியோன் தன் வலக்கையிலிருந்த பிச்சிப் பூவை அவளுக்கு நேராக நீட்டித் தன் உணர்ச்சி முழுவதையும் அதிற் செலுத்தி அம் மலரைக் கசக்கினான் ! அப்பா ; அவன் உள்ளத் திமிரை என்னென்று சொல்வது ! அன்றலர்ந்த புதுமலர் ! நறுமணம் செறிந்த நன்மலர் ! மெல்லிதழ் சேர்ந்த வெண்மலர் ! இதோ, நசுக்குண்டு விட்டது ! கல்நெஞ்சனுடைய இரும்புக் கையில் கசக்குண்டுவிட்டது ! 'கழுதைக்குத் தெரியுமா கர்ப்பூர வாசனை !' மலர்மாலையின் அழகை வானரம் கருதுமா ? பிச்சிப் பூவின் பெற்றிமையை இப் பேயன் எங்ஙனம் அறிவான் ? எப்படி நுகர்வான் ? மணமார் மலரின் கதியே இதுவானால், மலரினும் மெல்லிய வல்லி...இவன் கையில் அகப்பட்டால்...! ஐயோ !...கொடுமை கொடுமை !!...

அதோ, நீட்டிவிட்டான் கையை ! துவண்ட மேனியை அவ்வஞ்சகன் தொடப்போகிறான் ! அசைவற்றுச் சுவரில் சாய்ந்து நிற்கிறாள் அந்த ஆரணங்கு ! அவள் மேனியின் நடுக்கம் ! உள்ளத்தின் ஒடுக்கம் ! அமைதியில் அடக்கம் !...ஆ ! இவையெல்லாம் ஒப்பற்ற உயிரின் ஒடுக்கத்தில் தான் முடியுமோ ?...

அடக்கத்திற்கும் ஓர் எல்லையுண்டு ! மனத்துணிவினால் அந்த எல்லையைத் தாண்டினாள் வல்லி ! 'பசக்'கென்று தூக்கினாள் தண்ணீர்ப் பானையை ! 'படீர்' என்று வீசினாள் அப் பாதகன் மேலே ! "ஐயோ !"... நண்பா !" என்று தன் தொண்டையைக் கிழித்துக் கொள்வதுபோல் கதறினான் !

பூந்தோட்டத்தில் உலாவிக்கொண்டிருந்த வேடனின் செவியில் இப்போதுதான் வல்லியின் கூக்குரல் கேட்டது. திடுக்கிட்டான்! மண்டபத்தை நோக்கி ஓடோடியும் வந்தான்!

படுக்கையில் சோலையப்பனைக் காணவில்லை! வேடனின் மனம் துடி துடித்தது! கோபத் தீ கொழுந்துவிட்டெரிந்தது! முகம் சிவந்தது! வியர்வை நீர் அருவிபோன்று அவன் மேனியில் உதித்து வடிந்தது. என்ன செய்வதென்று தோன்றுமல் திகைத்துப்போய் நாலாபக்கமும் திரும்பிப் பார்த்தான். மீண்டும் ஒருமுறை வல்லியின் கதறல் ஒலி கேட்டது! அறைப்பக்கமிருந்து ஓசை வருவதறிந்து விரைந்து சென்றுன். அறைக்கதவைப் பலமாக மிதித்தான்! கதவு திறக்கவில்லை!

பரபரப்புடன் வெளியில் ஓடிப்போய்க் குதிரைமீதிருந்த ஈட்டிகளை எடுத்துவந்தான்; "படார், படா"ரென்று அறைக்கதவை ஈட்டிகளால் தாக்கினுன்! கதவு பிளந்து நொறுங்கிற்று! அவசர அவசரமாக உள்ளே நுழைந்தான்! கண்டான் சோலையப்பனை!

"அடே! சண்டாளா!...நயவஞ்சகா!...பேயே!......" என்று கோபப் பொறி பறக்கக் கூவிக்கொண்டு சோலையப்பனின் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளினுன்! அந்தச் சமயத்தில் சோலையப்பன், காட்டு மிருகங்களைப்போல், "ஏ வா!" என்று ஒரு பெரிய பயங்கரமான குரலைக் கிளப்பினுன்! அந்தப் பேரொலியானது மண்டபத்தில் எதிரொலி செய்த போது விண்ணிடிந்து விழுவதுபோன்றேயிருந்தது!

இதற்குள் வேடன் அறைக்குள் பதுங்கி நின்றுகொண்டிருந்த வல்லியைக் கைத்தாங்லாக அன்புடன் அழைத்துக்கொண்டு அறைக்கு வெளியே வந்து, தன் கையிலிருந்த ஈட்டி யொன்றுல் சோலையப்பனைக் குத்தப் போனுன்! அச்சமயம் அவ் வஞ்சகன் தப்பித்துக்கொண்டு மண்டபத்திற்கு வெளியே ஓடிவிட்டான்!

வல்லிக்கு நேர்ந்த மாபெரும் ஆபத்தை எண்ணி எண்ணி, மிகவும் நொந்த வேடன், எப்படியாவது மண்டபத்தைவிட்டுப் போய்விடவேண்டுமென்று முடிவுசெய்து அவளுடன் வெளியே வரும்போது,

"எய்! நில்!...எங்கே போகிறுய்" என்று ஆரவாரித்துக்கொண்டு ஏறக்குறைய முப்பது பேர் அடங்கிய ஒரு கொள்ளைக்கூட்டத்தார் மண்டப வாசலில் நின்று மறித்தனர்! அவர்களுக்கெல்லாம் தலைவன்போன்று நின்றுன் சோலையப்பன்!

நிலைமை மிகவும் நெருக்கடியாய் விடவே, வேடனும் வல்லியும் அனலிலிட்ட புழுப்போல் மனம் துடிதுடிக்க, செய்வதென்ன எனத் தெரியாமல் திகைத்துக்கொண்டு நின்றனர். (தொடரும்)

திரு. வி. கலியாணசுந்தரர்

"இளவழகனார்"

திரு. வி. க. அவர்கள் தம்மை அடிக்கடி 'யான் மனிதன்' என்று குறைகூறிக்கொள்வர். அதனால், மனிதக் குலத்தைக் குறித்து நினைவு செல்கின்றது. மற்று, எங்கும் என்றும் ஒரு தொண்டராகவே அவர் தோற்றுகின்றார். உயிரினங்கள் பல வற்றிலும் 'தொண்டக் குலம்' என்று ஒரு தனிக்குலம் இருப்ப தாகத் தோற்றுகின்றது. விரிவு, திரு. வி. க. அவர்கள் நன் கறிவர்.

'அறுபான் ஆண்டு நிறைவு விழா திரு. வி. க. அவர்கட்கு' என்று தெரிந்ததும் உள்ளம் வியப்பெய்தியது. பொதுவாக, மக்கள் அறுபது ஆண்டுகள் தமது குடும்பத்துக்கென வாழ்ந்து அலுத்துச் சலித்தபின், அன்பும் அறனும் உணர்ந்து, அறுபத்தோ ராவது ஆண்டு முதலேனும் உலகுக்குத் தொண்டு செய்யும் பொது நினைவு எழப்பெறுகின்றனர் என்னுங் காரணம், அந் நிறைவு விழா நிகழ்ச்சிக்கு உண்டு. இயல்பிலேயே 'தொண் டக் குல' முடையோராய், இளமையிலிருந்தே பொதுநிலை யுள் ளம் படைத்தோராய் உலகுக்குத் தொண்டு செய்து விளங்கி வரும் திரு. வி. க. அவர்கள் நிலையும் அந் நிலைதானா? 'தொண் டக் குலம்' என்னுந் தனிப் பிரிவுக்கு 'வெள்ளி விழா'வும் 'பொன் விழா'வுங் காணுங் கடமை நாட்டுக்கு உண்டு.

அங்ஙனமாயின், தக்கோர் பலர்க்கும் விழாக் காணும் பேறு நாட்டிற் கிடைத்துவர இடமுண்டு. இழக்க இடமில்லை என்பதுங் கருதுதற்குரியது.

'பொதுமை'யைப் பற்றித் திரு. வி. க. அவர்கள் பேச்சிலும் எழுத்திலும் நிரம்பக் குறிப்புண்டு. தமது இருபத்தைந்தாம் ஆண்டில் திரு. வி. க. அவர்கள் எவ்வளவு உணர்ச்சி மிக்க இளைஞராக இருந்திருப்பாரென்று உள்ளம் எத்தனையோ முறை எழுதிப்பார்க்க விழைந்திருக்கின்றது. அஞ்ஞான்று அக் கிளர்ச்சி மலரைக் கண்டும் அணிந்தும் மணநுகர்ந்தும் இன்புற்

றவர் திறத்தில் ஒரு பெருமையுங் கொள்வதுண்டு. "உணர்ச்சி தான் நட்பாங் கிழமை தரு" மாகலின், தொண்டுக்கு அது, இன்றியமையாதது. திருவள்ளுவர் குறிக்கின்ற இவ்வுணர்ச்சி, அன்பினும் அருளினும் அடங்குமாயினும், இந்த இடத்தில் அது, ஒரு தனிப் பண்பாகவே உருக்கொண்டு ஆற்றலுறுகின்றது. திரு வி. க. அவர்கட்கு அது தனி உடைமை. பொதுவுடைமையை இங்ஙனந் தமக்கெனத் தனியுடைமையாக ஆக்கிக்கொள்வோர், பொதுமையைப் பற்றிப் பேசுதலும் எழுதுதலுஞ் செய்வது எப்படி யிருக்கிறது!

தமிழிற் 'பத்திரிகை' யுலகுக்குத் திரு. வி. க. அவர்களே தனி 'மிட்டா'தார். அந்தத் துறையிற் பலர் மாணவர் அவர்களிடம் பழகித் தனித்தனி நிலக்கிழவர்களாக இருந்து விளங்கி வந்தனர்; வருகின்றனர். 'பத்திரிகை' யுலகில் தமிழின் இனிமையை வளரவிட்டுப் பெருவெற்றி கண்ட தனிப் பெருமை திரு. வி. க. அவர்கட்கு உரியது.

கருத்துக்களைத் தொகுத்து ஒரு கவர்ச்சியான தலைப்பு இடுதலும், அவற்றை வகை செய்து பல உள் தலைப்புக்கள் இடுதலும், ஒவ்வோர் உட் பிரிவையும் பின்பு விரித்து விரித்து விளக்குதலுமான அவர்களுடைய 'பத்திரிகை' யெழுத்துக்கள் நாட்டுக்கு உயர்ந்த நல்விருந்தாயின. சிறு சிறு சொற்றொடர்கள்; அலசி விளக்கும் நன்முறைகள்; தங்கிகாரற்ற மின்னுணர்ச்சிகள்! இந் நடையின் இடையிடையே பற்பல அருந்தமிழ்ச் சொற்களாகிய முழுமணிகள்! இங்ஙனம் அழகுற இணக்கித் தமிழ்ச் சொற்களின் இனிமையைப் பொதுமக்கள் எளிதாக இனிதுணர்ந்து மகிழுமாறு, தமிழை இயக்கி வளரவிட்ட அரிய சேவை அவர்களுடையது.

நூல்களும் விரிவுரைகளும் இம் முறைகளில் தொடர்புற்றன. தமிழ் நாட்டிற் பல்வேறு துறைகளில் உள்ளம் திரிவுண்டு போய்த், தமிழைத் திரும்பிப் பார்க்கவும் வாய்ப்பில்லாது கிடந்த மக்கள் பெரும்பாலோரும், தமிழ் முகந் திரும்பித் தமிழைச் சுவைபார்க்கத் தொடங்கியதற்கு உரிய காரணங்களுள், திரு. வி. க. அவர்கள் சேவையே பெருங்காரணமாகும்.

கருத்துக்கள் பலவும் சீர்திருத்தங் காண்பன. இளைஞர் களுடைய உள்ளங்கள் பெயராப் பிணிப்புடன் திரு. வி. க. அவர் களைச் சூழலிட்டு அவர்கட்கு மணமாலை நறுமலர்களாயின.

உணர்ச்சியையேயன்றி இங்ஙனம் ஒருவகை நடையினையும் தமக்குத் தனியுடைமையாக ஆக்கிக்கொள்ளும் திரு. வி. க. அவர்களின் பொதுமையை என்னென்பது!

நினைக்கக் காரணங்களும் உண்டு. திரு. வி. க. என்ன இனத் தைச் சேர்ந்தவர்? என்ன துறையைச் சேர்ந்தவர்? 'சொல் லொணாதது' என்று அளவையில் ஒரு முடிவு கூறுவதுண்டு. இங்கே, அது நினைவுக்கு வருகின்றது. அல்லது, வேறு முகமாகக் கூற விரும்பினல், 'எல்லாமானவர்' என்று கூறலாம்.

'சன்மார்க்க சங்கத்தவ'ராதலின், அந்தணர்; அரசியல் இயக்கமுடையராதலின், அரசியலார். அச்சுக்கூடமும் நூல்க ளும் உடையராதலின், வணிகர். தொழிலாளர் இயக்கத் தலைவ ராதலின், தொழிலாளர்! இவை மட்டுமோ? கலைத்துறையோ ராதலின், மாணவர்; விருந்தில்லங் கொண்டு உறவு பெருக்குவோ ராதலின், இல்வாழ்வினர்; இயற்கை அறம் விரிப்போராதலின், அறவோர்; மெய்யுணர்வு வளர்ப்போராதலின், துறவோர்.

எல்லாச் சமயங்களிலும் இருப்பர். எல்லாச் சமயங்களை யும் மறுப்பர். யார்க்கும் எட்டார்; இனமென்று தாவ ஒண்ணாதவர்! மற்று, எல்லார்க்கும் எளியர்.

தொண்டக் குலத்தவர், வேறு எங்ஙனம் விளங்குவர்? நேரமும், இடம் பொருள் ஏவல்களும் எவ் வகைத் தொண்டுக்குத் தம்மை ஈர்க்குமோ அதனை அவர், உணர்ச்சியோடு செய்யும் உரிமையர். ஆனல், எங்கிலையினும் தமிழ்ச் சுவையை மறவாத தென்முகப் பெரியார் திரு. வி. க.

இந்த 'ஆகஸ்டுத்' திங்கள் 25-ம் நாளில், அவர்களுக்கு அறுபதாம் ஆண்டு நிறைவு விழா. அனைவோரும் அப் பெரியோ ரைப் போற்றி, நன்றி நினைவும் வாழ்த்துணர்வும் ஒருங்கே கொண்டு, அவர்கள் நல்லாசியினைப் பெறுவம்.

செய்திகள் :

மேலைச் சிவபுரிச் சன்மார்க்க சபை: வழியனுப்புக் கூட்டம்

மேலைச் சிவபுரிச் சன்மார்க்க சபையின் ஸ்ரீகணேசர் செந்தமிழ்க் கல்லூரி முதல்வர் உயர்திரு P. R. மீனாட்சிசுந்தரம் பிள்ளை M.A. அவர்கள், திண்டுக்கல் உயர்நிலைப் பள்ளிக்குத் தலைமைத் தமிழாசிரியராய்ச் செல்லுதல் குறித்துக் கல்லூரி மாணவர்களால் சபைக்கூடத்தில் வழியனுப்புக் கூட்டம் நடத்தப்பெற்றது.

புகைப்படமெடுப்பும் தேனீர் விருந்தும் நடந்தன. தமிழுக்கே தன்னை யாக்கும் தன்மையையும், விரிவுரை நிகழ்த்தும் வித்தகச் சிறப்பையும், குற்றங் கண்டவிடத்து அஞ்சாதுரைக்கும் நெஞ்சநீர்மையையும், மாணவர் உளத்தில் பதியுமாறு உரையாசிரியர்கள் கருத்திற்கும் எட்டாத சீரிய கருத்துக்களைச் செவ்விதின் கற்பிக்கும் ஆசிரியப் பேராற்றலையும் பலரும் பாராட்டினர்.

சேலம், குகை, சமரச சன்மார்க்க சபை
47-வது ஆண்டு நிறைவு விழா.

இது, 6-7-43 துவங்கி 9-7-43 வரை தொடர்பாகவும் மிகவும் சிறப்பாகவும் நடந்தேறியது.

6-7-'43 உயர்திரு. ஸ்ரீ கண்டானந்த அடிகள் தலைமை தாங்கத், திரு. ஆசிரியர் அ. வரதநஞ்சைய பிள்ளை அவர்கள் "தாயுமானவர் தத்துவம்"; ஈரோடு, தமிழறிஞர் திரு. அ. இரத்தினசபாபதி அவர்கள் "மனத்துக்கண் மாசிலனாதல்" என்பது பொருளாகச் சொற்பொழி வாற்றினார்கள்.

7-7-43-ம் 8-7-43-ம் பெங்களூர் இராமகிருஷ்ண மடம் உயர்திரு. சாங்கியானந்த அடிகள் தலைமை தாங்கப், பெருஞ்சொல் விளக்கனார் திரு. அ. மு. சரவண முதலியாரவர்கள் "காரைக்கால் அம்மையார் மாட்சியும் கயிலாயநாதன் காட்சியும்" என்னும் பொருள்பற்றியும், சேலம் அரசியலார் உயர்நிலைப்பள்ளித் தலைமைத், தமிழாசிரியை, திருவாட்டி R. நவநீதம் அம்மையாரும், கிருஷ்ணகிரி, திருமதி கி. நா. தெய்வயானை அம்மையாரும் முறையே, "தமிழைக் காத்த தமிழரசி", "குசேல உபாக்கியானம்" என்னும் பொருள்கள்பற்றியும் பேசினர்.

9-7-43 திரு. அ. மு. சரவண முதலியார் அவர்கள் "சிலப்பதிகாரக் கோவலன்" என்பது பொருளாக உணர்ச்சி ததும்ப ஒரு நீண்ட விரிவுரை நிகழ்த்தினார்கள்.

10-7-'43 சேலம் கல்லூரியில், கல்லூரித் தலைவர் திரு. A. இராமசாமி கவுண்டர், M. A., L. T. அவர்கள் தலைமையில், திரு. அ. மு. சரவண முதலியார் அவர்கள் "இலக்கியத்தின் இலக்கியம்" என்பது பொருளாகவும், சேலம் மேட்டுத்தெரு, சிவன் கோயிலில் "சேக்கிழாரின் தெய்விகப் புலமை" என்பது பொருளாகவும் விரிவுரை நிகழ்த்தினார்கள். விரிவுரைகளை மக்கள் திரளாக வந்து கேட்டு இன்புற்றனர்.

—ரா. பெருமாள் பிள்ளை.



வித்துவான்
திரு. கோ. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள்,
எம்.ஏ., பி.எல்.,
தமிழ் விரிவுரையாளர்
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

ஓ

செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு-௨௦] சுபானு—ஆவணி (1943) [பரல்-௧௦

குறிப்புக்கள்

வாழ்த்து :

திருத் தருமையாதீனத்தின் இருபத்து நான்காம் பட்டத்து அருள்தலைவர் மறைத்திரு. சண்முக தேசிக பரமாசாரிய அடிகளார், ஆதீனத்தின் தலைமை ஏற்றுப் பத்து ஆண்டுகள் நிறைவுற்றமையின், இத் திங்கள் முதற்கிழமையில் அதன் நிறைவு விழா திருத்தருமபுரத்தில் அன்பர் பெருங்குழுவினரால் மிகச் சிறப்பாக நிறைவேறப் பெறுகின்றது.

சுருங்கிய காலமாகிய இப் பத்து ஆண்டுகட்குள், அடிகளார், தருமை ஆதீனத்தின் நிலையைப் பலவகையாலும் உயர்த்திப் பலராலும் புகழப்பெறும் நல் விளக்கத்துக்குக் கொண்டுவந்துள்ளனர். மாநாடு கூட்டுதல், இதழ் வெளியிடுதல், நூல் வெளியிடுதல், விரிவுரைகள் நிகழ்வித்தல், வகுப்பு நடப்பித்தல், பிற இயக்கங்கட்கும் உதவுதல் முதலிய கிளர்ச்சியான பணிகள் பலவும் இவர்கள் நடத்தி, நாட்டின் உள்ளத்தைப் பெரிதுங் கவர்ந்து விளங்குகின்றார்கள். அடிகளார் செயலாற்றல் மிக்கவர்கள். இவர்கள் காலத்தில் திருத் தருமையாதீனம் சிறந்த பல நற்றொண்டுகளை உருவாகச் செய்து முடிக்கும் என்று, தானே நம்பிக்கை அரும்புகின்றது.

நாட்டின் கல்வி, வாழ்க்கை, நாகரிகம் முதலியவற்றைச் சமய அருள் துறையின் வாயிலாகப் பல வகையாலும் உயர்த்

தங் கடமை திருமடங்கட்கு உண்டு. உண்மையிற், சமய வாழ்க்கை, தக்க கல்வியையும் வாழ்க்கையையும் நாகரிகத்தையும் மக்கட்கு உயர்ந்த முறையில் அளித்து மாட்சிமைப்படுத்துகின்றது. திருமடத்தின் அருட்டலைவர்களின் நேர்மையால் நாட்டின் நிலை எவ்வளவோ மேலோங்குதற்கு இடமுண்டு. திருமடங்களின் தலைமை மிகவும் பொறுப்பு வாய்ந்தது. ஆதினத்தைச் சேர்ந்த திருக்கோயில்கள் பலவும் தக்க அருள்நேய மன்றங்களாக விளங்குதலோடு, தக்க கல்வி நிலையங்களாகவும், வாழ்க்கை வழிகாட்டிகளாகவும், நாகரிக அரண்களாகவும் திகழ்ந்து நலம் பயப்பதற்குரியனவாகும். சமய வாழ்க்கையின் முதல் நோக்கமானது, இக் கல்வி முதலியவற்றின் அடிப்படையின்மேலேயே இனிது நிறைவேறுதற்குரியது. சமய அருள் வாழ்க்கையைத் தாங்கும் தூண்கள் இவை என்பது பொருந்தும். அடிகளார் ஆட்சியில் இந் நன்னிலைகள் பலவற்றையுங் காண நாடு மிக்க ஆவலுடையதாயிருக்கின்றது.

அன்றியும், திருத் தருமையாதீனத்தின் சார்பில், சித்தாந்தத்தையும் தமிழையும் மிகவும் உயர்ந்த செவ்வியில் காத்து வளர்க்கும் தனிப்பெருங் கல்லூரி ஒன்றைத் தக்க இடத்தில் நிறுவி அடிகளார் நடைபெறச் செய்யவேண்டுமெனவும் அன்பர்கள் உறுதியான கருத்தோடு பெரிதும் எதிர்பார்க்கின்றனர். அடிகளார் திருவுள்ளங் கொள்வார்களாக.

எல்லாம் வல்ல அம்மையப்பர் திருவருளால் இவர்கள் தக்க திருமேனி திருவுள்ள நலங்களுடன் இனிது பெருவாழ்வு பெற்று விளங்கித், தமது பொறுப்பிலுள்ள இத் தென்றமிழ்ச் சைவ நன்னாட்டைப் பெரிதும் உய்வித்தருள்கவென வேண்டுகின்றனம். வாழி அடிகளார் திருவடிமலர்கள்!

திரு. வி. க. மணிவிழாப் பாராட்டு:

இருபதாம் நூற்றாண்டு, தமிழ்க்கு மேன்மேலும் ஆக்கம் விளைக்கும் காலமாகவே உயர்ந்து வருகின்றது. தமிழறிஞர்கட்கு விழா அயர்தலில் தமிழகம் வரவர ஊக்கங் கொண்டு வருகின்றது. திரு. வி. க. மணிவிழா, சென்ற திங்கள் இறுதியில் சென்னையிலும் பிற இடங்களிலும் ஆர்வத்தோடு நடைபெற்றி

ருக்கின்றது. பெருமக்கள் பலரும் அவர்கள் மணிவிழாவிற் கலந்துகொண்டு தமிழ்க்குப் பெருமை அளித்திருக்கின்றனர். சென்னை நகராண்மைக் கழகமும் இம் மணி விழாவினைப் போற்றி, வாழ்த்து வழங்கியிருக்கின்றது. இதுகாறும் தமிழ் பெற்றிராத நலன் இது. திரு. வி. க. மணிவிழா, தமிழின் அணிவிழாவாகப், பலரையும் பிணித்த பெருவிழாவாக நிறைவேறி விளங்கினமை தமிழர் ஒவ்வொருவருக்கும் மகிழ்ச்சி தருவதொன்று.

திரு. வி. க. அவர்களின் தொண்டு இனிமேலேதான் இன்னுஞ் சிறப்பெய்துதல் வேண்டும். அறுபதாண்டு வரையிற் 'கலங்கல் நிலை' என்ப; அதற்குமேல் 'தெளிவு நிலை' என்ப.

இதுவரையில் திரு. வி. க. அவர்களின் வாழ்க்கையில், தமிழூக்கம் பலர்க்கும் ஊட்டினமை, உருவான நற்றொண்டாகும். கருத்துக்களை வெளிப்படுத்துங் கருவியே மொழி என்பது. அக் கருவியை வளம்படுத்துவதிலும் அவர்கள் சேவை செல்லாமலில்லை. ஆயினும், கருவியைப் பலவாகப் பெருக்கிப் பலரையுங் கையாள வைப்பதிலேயே அவர்கள் சேவை பெருகிச் சென்றிருக்கின்றது. கருத்துக்களிலும் இங்ஙனமே கொள்ளலாம்.

மொழியும் கருத்தும் வாழ்க்கையை மாட்சிமைப்படுத்துவதற்குச், 'செயல்' இன்றியமையாதது. மொழியின் பரவுதலும் கருத்தின் பன்னுதலுமே மக்களை மக்களாக உருவாக்கிவிட மாட்டா. மொழியைப் பலவாகப் பயன்படுத்துவதிலும் கருத்தை உணர்ச்சியாக அடுக்குவதிலும் மேலானது, செயலைத் துறைபோக, நெறி நின்று, கடைப்பிடிப்பது. செயலாலேதான் கருத்துக்கும் மொழிக்கும் புதுமையும் வளமும் பொங்கிப் பொலிதல் வேண்டும். திரு. வி. க. அவர்கள் செயல், 'பொதுமை' என்னும் பெயரால், ஒன்றிலும் உயர்வாகவும் உருவாகவும் நடைபெறுமல் இதுகாறும் கலங்கலாகவே உள்ளது. நாட்டையுங் கலக்கி வருகின்றது. இவர்கள், பலர்க்கும் பெருக்கிய மொழியூக்கமானது, அவரவராலும் இங்ஙனம் கலங்கலின் பெருக்கத்துக்கே பெரும்பாலும் பயன்பட்டு வருகின்றது. பொதுமை இதுவன்று. நாட்டு மக்களைச் செயலில் உரங்கொள்ளச் செய்தற்கு

ஒரு நெறியும் துறையும் கடைப்பிடிப்பும் கட்டாயமானவை. அந்நிலை நின்று ஏனையவற்றிலும் அன்புடைமையே 'பொதுமை' எனப்பெறும். முன்னோர் பலரும் இங்ஙனமே வாழ்ந்து விளங்கிப் பெரும்பயன் விளைத்தனர்.

திரு. வி. க. அவர்கட்குத் தொண்டுள்ளம் உள்ளது. அவர்கள் நீடினிது வாழ்வோங்குதல் வேண்டும். வழிவழிப் பழியின்றி விளங்குதல் வேண்டும். இனி அவர்கள் தொண்டுகள் மேன் மேலுந் தெளிவு நிலை எய்தி நாட்டுக்கு ஆக்கமான வகையில் நெறி கடைப்பிடித்து இயங்குதல் நன்று. திரு. வி. க. அவர்களின் பொதுமை எண்ணமும் மொழிவன்மையும், பொது நிலையினின் றும் ஓங்கிச் சிறப்பு நிலையில் உயர்க. வாழி திரு. வி. க.

திருத் தருமையாதீனத்தின் இருபத்து நான்காம் பட்டத்து மகாசந்நிதானம் அவர்களின் பத்தாம் ஆண்டு நிறைவு வாழ்த்து

இராகம், கல்யாணி; தாளம், ஆதி.

பல்லவி

தருமையாதினத் தலைவரின் ஆட்சியைப்
பெருமையுடன் புகழ்வோம் திருத் (தருமை)

துணைப் பல்லவி

ஒருமை மனத்துடன் உளத்தினில் நினைந்திடில்
இருமையிலும் நமக் கின்பமளித்திடும் (தருமை)

சரணம்

அருந்தமிழ் வாணர்க்கு அள்ளியே கொடுத்தும்
அறிவுக் கலைகளினை அமிழ்தென நினைத்தும்
வருந்தும் எளியோர்கள் வாழவே செய்யும்
வாலறிவன்றனை வாழ்த்தியே உய்யும் (தருமை)

தமிழரின் நன்மையைத் தமதென மதித்தே
தாய்மொழியாகிய தமிழினை வளர்த்தும்
அமைவுறும் அன்பினை அருளென நினைத்தே
ஆக்கமுடன் பல அறங்களைச் செய்யும் (தருமை)

—இசையரசு திரு. தண்டபாணி தேசிகர்.

நமது தாய்மொழி

[நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார்]

மக்கள் அறிவு வளர்ச்சிக்கு இன்றியமையாத சாதனமா யிருப்பது பாஷை அல்லது மொழி என்பதே. மொழியே மக்களை மாக்களினின்று வேறுபடுத்துவதாகும். இப்பொழுது உலக மக்களால் எண்ணிறந்த மொழிகள் பேசப்படுகின்றன. எம்மொழி எவ்வினத்தவரால் வழி வழியாகப் பேசப்படுகின்றதோ அம்மொழி அவ்வினத்தவர்க்குத் தாய்மொழி என்று சொல்லப்படும். 'காக்கைக்குத் தன் குஞ்சு பொன் குஞ்சு' என்பதுபோல் ஒவ்வொருவர்க்கும் அவரவர் தாய்மொழி மதிப்பிற்குரியதே. தாய்மொழியிடத்துப் பற்றில்லாதவரும் மக்கள் எனத்தகுவரோ? ஆயின் மொழிகள் யாவும் ஒரு தன்மையின என்றுவது, ஒரே தகுதியுடையன என்றுவது கூறவொண்ணுது. இன்னமும் எழுத்துருவம் பெருது பேச்சளவில் இருக்கும் மொழிகளும் உண்டு. எழுதப்பட்டும், பலவகைக் கருத்துக்களை வெளியிடுதற்கேற்ற சொற்கள் இல்லாதனவும், திருந்திய நிலை அடையாதனவும், போதிய இலக்கிய இலக்கணங்களைப் பெருதனவுமாகிய மொழிகளும் உள்ளன. ஒரு மொழியின் திருந்திய நிலை, அதன் சொற்பெருக்கம், இலக்கிய இலக்கணங்கள் என்பவற்றிலிருந்தே அதனைப் பேசும் மக்களின் நாகரிக நிலையை அறியலாகும். ஆரியம், எபிரேயம், இலத்தீன், கிரேக்கம், தமிழ் என்னும் இவை பல்வகைப் பெருமையும் தொன்மையும் வாய்ந்த மொழிகள் என்பர். அவற்றுள், நூல் வழக்கிலன்றி உலக வழக்கிலும் தளர்ச்சியின்றி நடைபெற்று வருவது தமிழே.

நம் தாய்மொழியாகிய தமிழ் இன்ன காலத்தில் தோன்றியதென்று வரையறுக்க முடியாத அத்துணைப் பழமை வாய்ந்ததாகும். ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளின் முற்பட்ட சங்க இலக்கியங்களையும், அவற்றினும் முந்தியதாகிய தொல்காப்பியத்தையும் வைத்து நோக்குமிடத்துப் பல்லாயிரம் ஆண்டுகளின் முன்பே தமிழ் உயரிய நிலையை அடைந்துள்ளமை புலனுகின்றது. தமிழ் மிக்க இனிமையுடைய மொழியென்றும், இலக்கண வரம்புடைய மொழியென்றும் தொன்றுதொட்டுப் பல

ராலும் பாராட்டப் பெற்று வருகிறது. பழைய புலவர்கள் தமிழ் மொழியைக் குறிக்குமிடத்தெல்லாம் அதன் பெயரை வாளா கூறுது, செந்தமிழ், பைந்தமிழ், வண்டமிழ், ஒண்டமிழ், மென் றமிழ், இன்றமிழ் என்று இவ்வாருக யாதேனும் ஓர் சிறந்த அடைமொழி கொடுத்து வழங்கி வந்திருக்கின்றனர். கவிச் சக் கரவர்த்தியாகிய கம்பநாடர், தமது இராமாயணத்தில் அயோத்தி நகரைக் குறிக்குமிடத்தே, 'செவ்விய மதுரஞ் சேர்ந்த நற்றமி ழிற் சிரிய கூரிய தீஞ்சொல், வவ்விய கவிஞ ரனைவரும் வடநூன் முனிவரும் புகழ்ந்தது' என்று பாடியுள்ளார். இதில் எவ்வளவு அடைமொழிகளால் தமிழ் சிறப்பிக்கப்பெற்றுள்ள தென்பதனைப் பாருங்கள்! குமரகுருபரர் என்னும் புலவர் பெருமான் தாமியற் றிய முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழில்,

"கலைப்பால் நிறைந்த முதிக்குறைவிற்
கல்விச் செல்வர் கேள்விநலம்
கனியக் கனிய அமுதூறும்
கடவுள் மறையும், முதற்சங்கத்
தலைப்பா வலர்தீஞ் சுவைக்கனியும்
தண்டேன் நறையும் வடித்தெடுத்த
சாரங் கனிந்தூற் றிருந்தபசுந்
தமிழும் நாற."

என்கிருர். தீஞ்சுவைக் கனியாம்! தண்டேன் நறையாம்! அவற்றை வடித்தெடுத்த சாரமாம்! அது கனிந்து ஊற்றிருந்த பசுந் தமிழாம்!! தமிழ் என்றவளவில் இன்ப வுணர்ச்சியானது அவருள்ளத்தே பொங்கித் ததும்பி வழிந்திருப்பதனை நோக்குங் கள். பழைய புலவர்கள் இருக்கட்டும்; நம்மனோர் கண்முன் விளங்கிய கவியாகிய சுப்பிரமணிய பாரதியார் 'யாமறிந்த மொழி களிலே தமிழ்மொழிபோல் இனிதாவ தெங்குங் காணோம்' என்று பல மொழிகளோடு ஒத்துநோக்கி யறிந்த உண்மையை உரைத் துளாரன்றோ? தமிழ் இங்ஙனம் இனிமையுடையதா யிருத்தலா லன்றோ தமிழ் என்ற சொல்லுக்கே இனிமையென்ற பொருளும் உளதாயிற்று!! ஆனல் தமிழ் இனியது என்று பிறர் கூறக் கேட் டதனுலேயே அதன் இனிமை புலப்படமாட்டாது. கற்கண்டு சுவைமிக்கதென்று கேட்டவளவில் அதன் சுவையை உணர முடி

யுமா? அதனை வாயிலிட்டுச் சுவைத்து உண்ணும் பொழுதன்றே அதன் இன்சுவை புலனாகும்! அதுவே போல், தமிழையும் பல காலும் கற்றும் கேட்டும் சிந்தித்தும் உரைத்தும் ஆராய்ந்தும் துய்க்கும் பொழுதே அதன் இனிமை மிகுதி புலனாவதாகும். தமிழ் தன் இனிமையால் கடவுளரையும் வயமாக்கும் இயல்பினை தாதல்பற்றியே பரம்பொருளாய இறைவனைப் பாடி அவனருளைப் பெறுதற்குத் திருஞானசம்பந்தர் முதலிய நாயன்மார்களும், சடகோபர் முதலிய ஆழ்வார்களும், மற்றும் பட்டினத்தார், தாயுமானவர், இராமலிங்க அடிகள் முதலியபெரியோர்களும் தமிழையே கருவியாகக் கொண்டு பாடியுள்ளார்கள். அவர்கள் பாடிய அத் திருப்பாடல்களை இசையோடும் பொருளுணர்வோடும் இன்று நாம் பாடினும் அவை நம்மை இன்ப வெள்ளத்திலே திளைக்கச் செய்கின்றன.

தமிழ் அவ்வாறு இனிதாதற்குக் காரணம் அதன் மென்மையும், எளிமையும், தெளிவும் முதலியனவாகும். தமிழ் மெய்யெழுத்துக்களில் வல்லெழுத்து என்ற ஒரு பிரிவு இருப்பினும், வேறு மொழிகளிலுள்ள சில எழுத்துக்களை நோக்கின் இவை மென்மையுடையனவே. அன்றியும் ஒற்றெழுத்துக்களும், டகரம் முதலிய உயிர் மெய்யெழுத்துக்களும் சொல்லின் முதலில் வாராதிருப்பதும், வல்லொற்றுக்களும் வேறு சில எழுத்துக்களும், இறுதியில் வாராதிருப்பதும், சொல்லின் இடையிலும் சில எழுத்துக்களுடன் சில எழுத்துக்கள் கூடாதிருப்பதும் முதலியவெல்லாம் சொற்கள் மென்மையும் எளிமையும் உடையனவாதற்குக் காரணமாகின்றன. தமிழுக்கே சிறப்பாகவுள்ள ழகர எழுத்தோசையானது மிக்க இனிமையுடைய தொன்று. இங்கே குறிப்பிட்ட முதல் நிலை, இறுதிநிலை, இடைநிலை என்பனவும், சொற்கள் ஒன்றோடொன்று கூடும் சந்தியிலக்கணங்களும் ஆகிய வரம்பு சிதையாமலே தமிழ் பல்லாயிரம் ஆண்டுகளாக வளர்ச்சியுற்று வருகிறது. அதனாலன்றே,

"கண்ணு தற்பெருங் கடவுளுங் கழகமோ டமர்ந்து
பண்ணு றத்தெரிந் தாய்ந்தவிப் பசுந்தமிழ் ஏனை
மண்ணி டைச்சில இலக்கண வரம்பிலா மொழிபோல்
எண்ணி டைப்படக் கிடந்ததா எண்ணவும் படுமோ!"

என்று திருவிளையாடற் புராண ஆசிரியர் இனிமையும் இலக்கண வரம்பும்பற்றி இம்மொழியைப் பாராட்டியுள்ளார்.

இனி, தமிழின் சிறப்பியல்பனைத்தையும் இங்கெடுத்துக் கூறுதல் நம் கருத்தன்று. இலக்கணத்தில் எழுத்துக்களுக்கு உயிர், மெய் என்று பெயரிட்டிருப்பதும், சொல்லையும் பொருளையும் உயர்திணை அஃறிணையென்று பாகுபடுத்தி யிருப்பதும் ஆகிய இவற்றிலிருந்தே தமிழ் மக்களின் பழைய நாகரிக நிலையையும் தத்துவ உணர்வையும் குறிப்பாக அறியக்கூடும். சங்க இலக்கியங்களாகிய எட்டுத் தொகை, பத்துப் பாட்டுக்களிலிருந்து அக்காலத்தில் கல்வி எவ்வளவு பரவியிருந்த தென்பதும், வேளாண்மை, வாணிகம், கைத்தொழில்கள் எங்ஙனம் ஓங்கியிருந்தன வென்பதும், அரசியல், சமய நிலை, ஒப்புர வொழுக்கம் என்பன எத்தகைய நன்முறையில் விளங்கின வென்பதும், மற்றும் தமிழர்களுடைய காதல், மானம், வீரம், வண்மை, நீதி, சான்றாண்மை முதலியனவும் நன்கு அறியப்படும். திருக்குறள் என்னும் தெய்வச் செழுந்தமிழ் மறையானது தமிழர் தனி நாகரிகத்தின் ஒப்பற்ற அடையாளம்; நாம் அறிய வேண்டும் பொருளனைத்தையும், எளிதில் அடையுமாறு திரட்டித் தந்து நமக்கு எய்ப்பினில் வைப்பாக விளங்குவது. சிலப்பதிகாரம், சிந்தாமணி, கம்பராமாயணம், பெரியபுராணம் முதலிய காப்பியங்களோ, ஒன்பான் சுவையும் பெய்துவைத்த சுவைப் பெட்டகங்கள். தமிழர் தம் தாய்மொழியிலுள்ள இவையனைத்தையும் கற்றுக் களிகூறுங் காலமே தமிழ்நாடு உயர்நிலை யடையுங் காலமாகும்.

நாம் இதுகாறும் நம் தாய்மொழியாகிய தமிழின் பழமை, இனிமை, இலக்கண வரம்புடைமை, அதிலுள்ள சிறந்த நூல்கள், அவற்றால் அறியலாகும் பொருள்கள் என்பனவற்றை ஒருவாறு கூறினோம். இனி, காலத்துக்குக் காலம் தமிழ் எங்ஙனம் வேற்றுமைகளையேற்றும் வளர்ச்சியுற்றும் வந்துள்ள தென்பதனையும், இனி நாம் கையாள வேண்டிய முறைகள் யாவை யென்பதனையும் சிறிது நோக்குவோம்.

உலகிலுள்ள யாதொரு மொழியும் தோன்றிய நாள்தொட்டு ஒரே தன்மையாய் இருந்து வருவதன்று. ஓர் குழவி பிறந்து

வளர்ந்து உயர்நிலையடைவது போன்றே மொழியும் தோன்றி வளரும் இயல்பினதாகும். அது வழக்காறற்ற நிலையை எய்தின் ஒருகால் அஃது ஒரே தன்மையை உடையதாகலாம். வழக்காறுடைய உயிருள்ள மொழிகள் யாவும் காலப் போக்கிற் கேற்ப வேறுபடுதல் இயல்பே. தமிழ் இவ்விதிக்கு விலக்கானதன்று.

தொல்காப்பியத்திலும், சங்க இலக்கியங்களிலும் கிறு, கின்று, ஆநின்று என்னும் இடைநிலை பெற்ற 'செய்கிறான், செய்கின்றான், செய்யாநின்றான்' என்பன போலும் நிகழ்கால வினைகள் வழங்கவில்லை; பிற்காலத்தே அவை பெருவழக்காயின. முன்பு வழங்கிய செய்ம்மன என்னும் வாய்ப்பாட்டுச் சொல் பின்பு வழங்காது போய்விட்டது. அளபெடைகளும், செய்பு என்னும் எச்சமும், செய்கு முதலிய தன்மை வினைகளும் சென்றீ முதலிய முன்னிலை வினைகளும் முற்காலத்துப் பெருவழக்காயிருந்து பிற்றை நாளில் அருகிவிட்டன. மற்றும், பண்டு வழங்கிய எத்தனையோ பல திரிசொற்களின் உருவைப் பிற்கால இலக்கியங்களிற் காண்டலரிது. நான் என்னும் ஒருமைப் பெயரும், நாங்கள், நீங்கள், தாங்கள், அவர்கள் என்னும் பன்மைப் பெயர்களும் பிற்கால வழக்கே.

மரபுச் சொற்களில் பிள்ளை, குழவி என்ற இளமைப் பெயர்கள் பன்றிப் பிள்ளை, புலிப் பிள்ளை, முயற் பிள்ளை, நரிப்பிள்ளை எனவும், யானைக் குழவி, ஆன் குழவி, எருமைக் குழவி எனவும் பண்டு வழங்குவதற்குரியவா யிருந்தன. மக்களின் இளமைப் பெயராகக் குழவி, மகவு என்பனவன்றி, பிள்ளை என்னும் பெயர் அப்பொழுது வழங்கியதில்லை; பிற்காலத்தில் பிள்ளை என்னும் பெயர் பெருவழக்காயினமையைப் பிள்ளைத் தமிழ் என்னும் பெயரே உணர்த்தும். அப்பர் என்னும் பெயர் ஆட்டின் ஆணினையும், பாட்டி என்னும் பெயர் பன்றி, நாய், நரி என்பவற்றின் பெண்ணினையும், பிணா என்னும் பெயர் மக்களுக்குள்ளே பெண்ணினையும் பண்டு குறிப்பனவாயிருந்தன.

செய்யுட்களுள்ளே பண்டு நிலவிய பரிபாடல் என்பது பிற்காலத்தே அருகியது. முன்னில்லாத தாழிசை, துறை, விருத்தங்களாகிய பாவினங்களும், சந்தப் பாக்களும், பிறவும் பின்னர்த்

தோன்றி வளர்ச்சியுற்றன. பரணி, உலா, அந்தாதி, பிள்ளைத் தமிழ், கலம்பகம், மாலை, தூது முதலிய எத்தனையோ பிரபந்த வகைகளும், தலபுராணங்களும் பிற்காலத்தே தோன்றி வளர்ந்தன. இரண்டடியுள்ள தாழிசை, கண்ணி என்பனவற்றாலும் கீர்த்தனை முதலியவற்றாலும் சிற்சில பிரபந்தங்கள் தோன்றலு மாயின.

சமணம், புத்தம், கிறித்துவம், முகமதியம் என்னும் மதங்களின் கொள்கைகளும் அவ்வக் காலந்தோறும் தமிழில் வந்தேறின. பிறமொழிச் சொற்களையும் பொருள்களையும் தமிழ் வெறுக்கவில்லை. ஆசிரியர் தொல்காப்பியனாரே வழிநூல் வகையுள் மொழி பெயர்த்தியற்றுதலைச் சேர்த்தும், இன்றியமையாத வடசொற்களை எடுத்துக் கொள்ளுதற்கு விதி வகுத்துமுள்ளார். அவ்வாறே எத்தனையோ மொழிபெயர்ப்பு நூல்கள் உண்டாயின; வட சொற்களும் புகுந்தன. இராவுத்தர், சலாம், சபாசு என்னும் பிறமொழிச் சொற்களும் இலக்கியத்தில் ஏறின. மற்றும், அரேபியம், இந்துத்தானி, பாரசிகம், போர்த்துகேசியம், ஆங்கிலம் முதலியவற்றிலிருந்து தமிழ் மக்களின் பேச்சு வழக்கில் ஏறியுள்ள சொற்கள் நூற்றுக்கணக்காக வுள்ளன. ஆனால், அவையெல்லாம் உரையாடல்களிலும், ஆவணம் முதலியவற்றிலுமன்றி இலக்கியங்களில் ஏறிற்றில. இவ்வாறாக ஈண்டுக் காட்டியனவும் காட்டாதனவுமாகிய எத்தனையோ வேறுபாடுகள் ஒவ்வொரு காலப் பகுதியிலும் தமிழின்கண் நிகழ்ந்திருக்கின்றன.

ஆனால் தமிழின் வழிமொழிகளாகிய கன்னடம், தெலுங்கு, துளுவம், மலையாளம் என்பன வடவெழுத்துக்களையும் வட சொற்களையும், வடமொழி விதிகளையும் வரம்பின்றி யேற்றுத் தம் பழைய வடிவினை இழந்து நிற்றல்போலத் தமிழ் தனது தூய வடிவினை இழந்திலது; அடிப்படையான தனது இலக்கணத்தினின்று பிறழ்ந்துமிலது. இங்ஙனம் தமிழ்நங்கை காலத்திற் கேற்ற புதிய பணிகளைப் புனைந்தும், தன் இயற்கை யெழிலும் பண்பும் சிதையாமல் நடந்து வருதலினாலேயே கன்னியெனப் படுகின்றாள். ஆசிரியர் சுந்தரம் பிள்ளையின் "உன் சீரிளமைத் திறம்வியந்து செயல் மறந்து வாழ்த்துதுமே" என்ற அருமைப் பாட்டை நோக்குங்கள்.

பிறமொழிச் சொற்களை எடுத்துக் கொள்வது குற்றமின்றாயி னும், அவற்றை வரம்பின்றிப் புகுத்துவதானது, தமிழின் தூய் மையையும் அழகையும் சிதைத்து, அதன் தொன்றுதொட்டயாண் பினைக் கெடுப்பதாகும் என்பதனைக் கருத்திலிருத்தல் வேண்டும். இக்காலத்துப் புதிய கலைகள் பலவும் எழுதுதற்குச் சொற்கள் பல வேண்டுமென்பது உண்மையாயினும், அதன் பொருட்டுத் தமிழினைத் துருவியாராய்ந்து வேண்டுஞ் சொற்களைக் காண்டலும், அவை போதாவிடத்துத் தமிழ்ப் பகுதியினின்று புதிய சொற்களை ஆக்கிக் கொள்ளுதலும், இன்றியமையாதவழிப் பிறமொழிச் சொற்களை ஏற்றுக்கொள்ளுதலுமே அறிவும் ஊக்கமும் முயற்சி யும் உடையார்க்கு அழகாவனவாம். அந்நெறியே, கலைப்பயிற் சியை எளிதாக்குவதுமாம்.

இனி, பிறமொழிச் சொற்களை இரவல் வாங்குமிடத்தும் அவற்றைத் தமிழியல்புக்கேற்ற ஓசையினவாகத் திரித்துக் கொள் ளுதல் ஆன்றோர் கைக்கொண்ட நெறியாகும். கல்வியிற் பெரிய வராகிய கம்பர் இலக்குவன் வீடணன் என்றிவ்வாறாக வட சொல்லுருவினைத் தமிழியல்புக் கேற்ப மாற்றியுள்ளமை காண்க.

கிறித்துவ வேத புத்தகத்தை மொழி பெயர்த்தோர் இயேசு, யோவான், யாக்கோபு என்றிங்ஙனம் தமிழியல்புக்கேற்பச் சொற்களைத் திரித்தமையால் அதன் பயிற்சிக்குக் குறைவுண்டா யிற்றில்லை. ஒவ்வொரு மொழியிலும் இவ்வியல்பு காணப்படும். ஆகவே, பிறமொழிகளிலுள்ளவாறே அச் சொற்களைத் தமிழில் வழங்கவேண்டு மென்பது நேர்மையாகாது.

இனி, கொச்சையாகவும் வழுப்படவும் பேசுவதனையே நல்ல நடையெனக் கொண்டாடி, அப்படியே எழுத வேண்டு மெனக் கூறுவார் சிலருமுளர்; அவ்வறிஞர்களே ஆங்கில மொழி யில் அவ்வாறு பேசுவதோ, எழுதுவதோ செய்தால் எவ்வகை மதிப்பினை யெய்தலாகும் என்பதனைச் சிந்தித்தல் வேண்டும். வாழைப் பழம் என்பது வானைப்பளம் எனவும், வாயப்பயம் எனவும், வாஷைப் பஷம் எனவும் ஒவ்வொரு பக்கத்தில் பேசப் படுகின்றது. இழுத்துக்கொண்டு என்பது இஸ்துக்கின்னு என்று

பேசப்படுகிறது. இவற்றையெல்லாம் இலக்கியத்தில் ஏற்றுக் கொள்ளுதல் எங்ஙனம்? சில விதிகளைத் தழுவி இயல்பாக மாறி வருகின்ற போலியும், மரூஉவும் முதலியன ஏற்றுக்கொள் ளத் தக்கவையே.

ஓர் ஆற்று வெள்ளத்தைக் குறுக்கே அணையிட்டுத் தடுத்து நிறுத்தல் கூடாதாயினும், அதன் போக்கிலேயே சென்று பாழாகாதபடி, கரைகோலி நேரிதிற் செலுத்தி, கணவாய்களின் வழியே நீரைப் பாய்ச்சிப் புலங்களை விளைவித்தல் அறிவுடைமை யாகும். அவ்வாறே மொழியினையும் சில வரம்புகளுக்குட்பட்டு வளரும்படி செய்து மக்கட்குப் பயன் விளைத்தல் வேண்டும்.

இராகம் - வகாளு] [தாளம் - ரூபகம்

பல்லவி

ஒருகாலில் நெடுநாளாய் நிற்கின்ற தேனையா
உரைகடந் தொளிர்செம்பொ னம்பலத்தே மெய்யா (ஒருகாலில்)

துணைப் பல்லவி

திருநாளைப் போவாருந் திருவாத வூரரும்போல்
சிறந்த தொண்டரைக் கண்டால் விழுங்கிக் கொளகினைந்தோ
(ஒருகாலில்)

சரணம்

அடியார்மேல் வருங்கூற்றை அலற உதைக்கவோ
அரியபாற் கடல் இன்னும் சிறுவருக் களிக்கவோ
குடியான குயவர்பால் ஒட்டை யொளிக்கவோ
குட்டைக் கெடுத்துமறை வெட்டவெளி யாக்கவோ
(ஒரு காலில்)

தில்லைக்காளிக் கின்னமும் சினந்தோன்று திருக்கவோ
திருமாலம்பல வாயில் அகலாது கிடக்கவோ
தொல்லையுயிர் களையுன் தொடக்கினிற் படுக்கவோ
தூயபே ரின்பவீட்டில் மேவென விடுக்கவோ (ஒருகாலில்)

வித்துவான் கோவை கு. நடேச கவுண்டர்.

திருக் கொடுங்குன்றமாகிய பிரான்மலை

[ஆதிநாத பிள்ளை]

(சென்னை இந்துமத அறநிலையப் பாதுகாப்பாளர் உயர்திரு. இராமச்சந்திரன் செட்டியாரவர்களுடன் சென்றது.)

26-6-1943 சனிக்கிழமை பிற்பகல் 4-மணிக்கு மேலைச் சிவபுரி சன்மார்க்க சபையின் 34-வது ஆண்டுவிழா உயர்திரு. இராமச்சந்திரன் செட்டியாரவர்கள் தலைமையில் தொடங்கி 8 மணிக்கு முடிவடைந்தது.

தலைமையுரையில், "பல கலைகளில், கல்வெட்டாராய்ச்சியும் வரலாற்று முறைகளும் சில. அவற்றையும் இக் கழகங்கள் வெளியிட முன்வரவேண்டும். கோயில்கள் தங்களிடமுள்ள கல்வெட்டையும், ஊர் வரலாற்றையும் வெளியிடுவதுடன் தமிழ்க் கல்லூரிகளை ஏற்படுத்த முன்வருமாயின் நாங்கள் ஏற்ற துணைபுரிவோம். தமிழ்நாட்டில் சென்னை, சிதம்பரம், அண்ணாமலைநகர், திருவையாறு, மேலைச்சிவபுரி, கரந்தைத் தமிழ்ச் சங்கம் முதலிய இடங்களிற்றான் தமிழ்க் கல்லூரிகளுள்ளன. ஆதீனங்களும் பெரும் வருவாயுள்ள கோயில்களும் முயன்றால் முடியாததன்று.

இவையேயன்றி விமானம் கோபுரம் அவற்றின் வேலைப்பாடுகள் உருவங்கள் அணிகள் கட்டிட வேலைகள் இவற்றையும் ஆராய்ந்து காலங்களை வெளியிடலாம். அவற்றிற்கேற்ற தமிழ்ச் சொற்களை வெளியிடலாம்" என்றார்கள். "வட்டமாகவுள்ள மாடம் தமிழ்நாட்டு வழக்கமெனவும், சதுரமாகவுள்ள மாடம் வடநாட்டதென்றும் கூறப்படும். தமிழ்நாட்டிலேயே இக் காலத்தில் எல்லா வகையான மாடங்களையும் காணலாம்" என்றார்கள்.

யானை முதுகு போன்ற மாடத்தைக் கஜப்பிரஷ்ட விமானமென்பர். அது பெண்ணாடத்திலுளது.

பெரிய புராணத்தில் சம்பந்தர் வரலாற்றைக் கூறும் கஅசஅ-ம் செய்யுள்,

" ஆங்கு நாதரைப் பணிந்துபெண்
ணாடக மினைத்தரு மறையோசை
யோங்கு தூங்கானை மாடத்து
ளமர்கின்ற வொருதனிப் பரஞ்சோதி
பாங்க ணைந்துமுன் வலங்கொண்டு
பணிவுற்றுப் பரவுசொற் றமிழ்மாலை
தீங்கு நீங்குவீர் தொழுமின்க
ளெனுமிசைப் பதிகமுந் தெரிவித்தார் "

என்று கூறுகிறது.

விழா முற்றுப் பெற்றதும் மகாமகோபாத்தியாய, பண்டித மணி உயர்திரு. மு. கதிரேசச் செட்டியார் அவர்கள் என்னை விழாத் தலைவரிடம் யாரென்றறிவுறுத்தினர்கள்.

முற்பகலிலேயே அவர்கள் இருவரும் பேசிக் கொண்டிருக்கும் பொழுது 'இவ்விடத்திலும் கல்வெட் டெழுத்துக்களை யாராய்ந்து வெளிப்படுத்த எங்களிடம் ஒருவருண்டு. அவருடைய ஆராய்ச்சியினல் மகிபாலன்பட்டிதான் கணியன் பூங்குன்றனருடைய கவினுடைப் பூங்குன்றம் என்றறிந்தோம். நாலடி நானூற்றில் இரண்டு செய்யுட்களில் பூங்குன்ற நாட என்று இயம்பப்படுவதும் மகிபாலன்பட்டியேயாகும். அங்குள்ள சமணன் திடரிலே முக்குடைக் கீழச்சுதர், முற்றத்துறந்த முனிவருருவங்களுள்ளன.'

'கலைமகளென்னுந் திங்களிதழில் கட்டுரை யெழுதிக் கணியன் பூங்குன்றரைக் காட்டியதைக் கண்டு பெரும்பேராசிரியர், டாக்டர். உ. வே. சாமிநாதைய ரவர்கள் பதித்த புறநானூறு மூன்றும் பதிப்பில் அக் கட்டுரையைக் குறிப்பிட்டுப் பூங்குன்றந் தான் மகிபாலன்பட்டி யென்று புலவர் வரலாற்றில் பொருத்த முற எழுதியிருக்கிருர்கள்' என்று சொல்லியிருந்தார்கள்.

அதற்கு விழாத் தலைவரவர்கள் 'அவருடைய ஆராய்ச்சிக் கட்டுரைகள் பலவற்றைப் பல ஆண்டுகளாகப் பார்த்திருக்கிறேன். அவர் வந்தால் கண்டு பேச வேண்டு'மென்று கூறியிருந்தார்கள்.

இரவு 11-மணிக்கு மகிபாலன்பட்டியைப்பற்றி எழுதி யிருந்த இரண்டு கட்டுரைகளையும் படித்தார்கள். அவர்களும் இத்துறையில் ஏற்றமான நல்லாராய்ச்சியுடையவர்களாகையால், 'யாதுமூரே' என்னும் பாட்டில்,

> கல்பொரு திரங்கு மல்லற் பேர்யாற்று
> நீர்வழிப் படூஉம் புணைபோ லாருயிர்

என்ற அடிகளின் விரிவுரையில் கணியன் பூங்குன்றனார் கல் பொருதிரங்கும் மல்லற் பேர்யாற்றை மகிபாலன்பட்டியில் கண் டிருக்க மாட்டார்; யாதுமூரே என்பதனால் எல்லாவிடங்களுக் கும் சென்றுவரும்பொழுது மலைநாடுகளில் கண்டிருக்கலாம் என்றெழுதியிருப்பதைப் பார்த்தவுடன், மல்லற் பேர்யாறு யாண் டுளது? மலையாளத்திலுண்டு. அதனருகில் பூங்குன்னம் என்ற ஓரூரும் உண்டு. அதை இப்பொழுது புஷ்பகிரி என்று மாற்றி யிருக்கிறார்கள். இப் பேர்யாறும் பூங்குன்றமும் அதுவா யிருக்க லாமா என்றார்கள்.

அடுத்தமுறை அங்குச் செல்லுங்காலத்தில் கல்வெட்டுண்டா, செப்பேடு இருக்கிறதா, அது ஒரு நாட்டின் பேரூரா, புன் குன்று என்ற பெயரிருக்கிறதா என்றெல்லாம் நன்றாய் ஆராய்ந்து தெரிவிக்கிறேன் என்றார்கள்.

பாண்டிய நாட்டிலுள்ள இவ்வூர், கல்வெட்டுண்மையாலும், சமணன் திடரிருப்பதனாலும், நாலடியில் 'பூங்குன்ற நாட' என்று பாடப்பெறும் இடமென்பதிலையமில்லை. பேர்யாற்றுப் பூங் குன்றம் ஒரு வேளை அதுவாயிருக்கலாமோ என்றையுற்றோம்.

தலைவரவர்கள் பிரான்மலை செல்லவேண்டுமென்ற பொழுது பெருஞ்சொல் விளக்கனார் சரவண முதலியாரவர்கள் எங்களிரு வரையும் சேர்ந்து செல்லச் சொன்னார்கள்.

27-6-1943 காலையில் சென்றோம். வழியில் வண்டி ஏறியிழி யும் கல் நிறைந்த இடங்களில் நடந்து சென்றோம். இயற்கைக் காட்சி இனிதாயிருந்தது. சம்பந்த மூர்த்திகளும் ஆயிரத்து முன் னூறு யாண்டுகளுக்கு முன்பு இவ் வழியாகத்தான் இவ்வூருக்குச்

சென்றூர். ஒருநாள் மாலையில் நான்காம் பிறை மறையும்பொழுது "கூனற் பிறைசேர் கொடுங்குன்றம்" காணப்பட்டதனுல் அவ் வாறு பாடுகிறுர். சம்பந்தர் புராணத்தில் 628, 629-ம் செய்யுட் கள்,

"போர்நாடுஞ் சிலைமறவர் புன்புல வைப்பிடைப் போகிச்,
சீர்நாடு தென்பாண்டி நன்னுடு சென்றணைவார்."

"கானவதர் கடந்தணைந்தார் கொன்றைநறுஞ் சடைமுடியார்
மகிழ்ந்ததிருக் கொடுங்குன்றம்."

இப் பாட்டுக்களிலிருந்து மறவர் நாட்டையும் காட்டுப்பா தையையும் கடந்து கொடுங்குன்றம் வந்தது விளங்கும்.

சிலப்பதிகாரத்தில் பிறைமுடிக் கண்ணிப் பெரியோன் சூடிய அறைவாய்ச் சூலத்து அருநெறி மூன்று கொடும்பை நெடுங்குளக் கோட்டகத்தினின்றும் பிரிகின்றன. அவற்று ளொன்று இவ்வழி. கோவலனும் கண்ணகியும் கவுந்தியடிகளும் உறையூரிலிருந்து மதுரை செல்லும்போது கொடும்பாளூர் நெடுங் குளத்தைக் கடந்து பிரான்மலையிருக்கும்இவ்வழியாகத்தான் வந்த னர். ஓர்நாள் இங்குள்ள ஒரு காளிகோயிலிற் றங்கியதாகவும் இளங்கோவடிகள் கூறுவர். இவ்வளவு தொன்மையான புக ழமைந்த வழியை யாமும் இப்பொழுது கடக்கிறோம் என்று பேசிக்கொண்டே இயற்கை யழகையும் மலைத் தோற்றத்தையும் மாண்புடன் பார்த்துச் சென்றோம்.

இன்னும் இது இராகவ ஐயங்காரவர்கள் கூறுகிறபடி பாண்டி மண்டலத்திலுள்ள பாரிச்சுவரமாயிருந்தால், தண்பறம்பு நன்னுட்டு முன்னூறு ஊர்களில் மேலைச்சிவபுரியும் ஒன்ருகும். கபி லர் "ஈண்டு நின்றோர்க்குந் தோன்றும் சிறுவரை சென்று நின் றோர்க்குந் தோன்றும்..........தேர்வீ சிருக்கை நெடியோன் குன்றே" என்றும், "அற்றைத் திங்க ளவ்வெண்ணிலவின் எந் தையுமுடையேம் எங்குன்றும் பிறர் கொள்ளார், இற்றைத் திங் கள் இவ்வெண் ணிலவின், வென்றெறி முரசின் வேந்தர் எம், குன்றுங்கொண்டார் யாம் எந்தையும் இலமே" என்று பாரி மகளிரும் பாடியது இம் மலையின் இத் தோற்றத்தைத்தான் என் றும் எண்ணினேம்.

வழியில் ஓர் குட்டையினருகில் 'அழகிய சொக்கன்' என்ற ஓர் இலிங்கத்தைக் கண்டோம். அது வலையர் வழிபாட்டை யுடையதென்று உடன்போந்த சாமிநாதபிள்ளையவர்கள் அறி வித்தார்கள். அப்பொழுது பிரான்மலையும் (திருக்கொடுங்குன்ற மும்) வலைஞராகிய வேட்டுவர் வழிபாட்டைப் பெற்றிருந்ததாக வும் அதனால் இன்றும் மலைமேல் உறையும் மங்கைபாகருக்கு உச்சிப்பொழுதில் தேனுந்தினைமாவும் படைக்கின்றன ரென்றும் வழங்குகிற ஓர் ஏட்டுச்சுவடியிலுள்ள செய்தியைக் கூறி னேன். அதைக் கோயிலுக்குச் சென்றதும் கேட்டுத், தேனும் தினைமாவும் படைப்பதை உறுதிசெய்து கொண்டார்கள்.

கோயிலுக்குச் சென்றதும், மேளதாளம் யானை பூமாலைகளு டன் கோயிலார் பார்க்க வந்தனர். அம்முறைகளெல்லாம் பெற நேரமில்லை. கோயிலைப் பார்த்துவிட்டுச் செல்கிறேமென்று உச்சி மலைக் கேகினோம். கல்லைக்குடைந்தாக்கிய குகைக் கோயிலுள், இறைவனும் இறைவியும் கைப்பற்றித் திருமணம் செய்த காட்சி யில் கல்லுருக்களைக் கவினுறப் புனைந்துள்ளனர். சம்பந்தர் வந்த பின்பு அல்லது வரும்பொழுது இவ் வேலை நடந்திருக்கும். கீழ்க் கோயில்தான் தொன்மையானது என்றுணர்ந்தோம். குடை வறை (குடைந்த அறை) யெல்லாம் ஏணிவைத்துச் சென்று நடு மலையில் குடைந்திருப்பர். பிற்காலத்தில் சிலவிடங்களில், அது வரை படிகள் அமைத்துக் கட்டிடமும் கட்டினர் சில கோயில் களில் என்றறிந்தோம்.

ஆதிரையி லெழுந்தருளும் கூத்தரையும், உத்திரத்தில் தேரூ ரும் மாரியம்மனையும், திருவாதிரைச் செடிலாட்ட இராட்டினங் களையும் பார்த்துவிட்டு வைரவர் கோயிலையும் காசி விஸ்வநாதர் விசாலாட்சியம்மையையும் கண்டோம். வைரவர் கோயில் வெளிப்புறக் கல்வெட்டொன்றில் துவராபதி வேளான் என் றொரு பெயர் காணப்படுகிறது. இத் துவராபதி அம்மன், ஊர் யாவும் அருகிலுள்ள சுந்தரச் சருப்பெதி மங்கலத்திலுள்ளன என்று தெரிந்துகொண்டோம். இராகவ ஐயங்காரவர்கள் இத் துவராபதியையும் குறிப்பிட்டுப் பிரான்மலை வேள்பாரிக்குரிய தென்று வலியுறுத்துவார்கள்.

தொன்மையான கீழ்க்கோயிலுக்கு வந்து உக்கிரகிரீஸ்வரர் தேனம்மை இருவரையும் கண்டோம். கொடுங்குன்றம் உயர்ந்த

குன்று என்பதை உக்கிரகிரி என்று வடமொழியில் கொடிய மலையாக்கி விட்டனர். சிலம்பாறு=ஒலிக்கும் யாறு; இம் மலை யாற்றை 'நூபுர கங்கை' என்று வடமொழியில், காலணியாறு ஆக்கிய நினைவு தோன்றியது. செட்டியாரவர்கள் ஆடுசாபட்டியை அம்மையப்ப பிள்ளை அஜேந்திர மோக்ஷபுரியாக்கியதைக் கூறினர்கள்.

தேனம்மையார் கோயிலுக்கேகும் பொழுது அருவியூர்ச் செட்டியாரொருவரையும் அவர்களுடைய ஆசிரிய ருருவையும் எதிரெதிரே கல்லில் தூணுடன் செய்து வைத்திருந்ததைப் பார்த்தோம். அம்மன் கோயிலுக்கெதிரே இடப்புறம் முருகன் கோட்டம் இருக்கிறது. அதன் எதிரே யானை வைத்திருக்கிறது. முருகனும் ஒரு கையில் மணிமாலையும் இடக்கையில் தாமரை மொட்டையும்பற்றி மயிலில்லாமல் நிற்கிறார். யானையைக் கண்டதும் இது முருகனூரும் பிணிமுகம் என்னும் யானை போலும், அலைவாய்க்குச் செல்லும் பொழுதும் அமருழக்கும் பொழுதும் முருகன் பிணிமுக மேறித்தான் செல்லுகிறார் என்று சொன்னதற்குப், பிணிமுகம் மயிலுக்குமாகும் என்று கூறினர்கள்.

சிலப்பதிகாரம், இந்திரவிழாவையும், காவிரிப்பூம் பட்டினத்தில் வெள்ளையானை, வச்சிராயுதம், கற்பக மரம் முதலியவைகளுக்குக் கோயில்களிருந்தன என்பதையும் கூறும். இங்கே ஐயனர் கோயில்களில் முன்புறம் யானையிருப்பதைக் காண்கிறோம். முருகனுக்கு யானை இருக்கிறது என்னவென்று வியந்தோம்.

1799-ல் கிழக்கிந்தியக் கம்பெனியார் பிரான்மலையைக் கைப்பற்றினர் என்று ஸ்காத்லந்துப் பத்திரிகையில் வெளியான செய்தியைப் புதுக்கோட்டை வரலாற்றில் குறித்திருப்பதை நினைவுறுத்தினேன்.

அவர்கள் பாண்டி பதினன்கு பாடல்பெற்ற ஊர்களில் இங்கேயும் திருப்பரங்குன்றிலேயும் குகைக்கோயில்களுள்ளன என்றார்கள். பாடலில் வாராத திருமெய்யத்தில் பெருமாள் கோயிலும் இறைவன் கோயிலும் அடுத்தடுத்துப் பாறையில் குடையப் பெற்றுள்ளன. திருக்குளக்குடி என்று கூறப்படும் மிதிலைப்பட்டிக்கருகிலுள்ள இடத்திலும் குகைக் கோயிலுளது என்றேன்.

திருவெள்ளறையிலுள்ள குகைக்கோயில் பாடலில் வருகிறது. 'வெள்ளறையில் கல்லறையுடன் நின்ருய்' என்று கூறுவர். அஃது இப்பொழுது காலியிடமாய்க் கிடக்கிறது. பாடல்பெற்றவிடத்தில் நாடி, வழிபாடு செய்யவில்லை என்ருர்கள்.

வனிவைத் தேறி ஓர் குகைக் கோயிலில் வழிபாடு நடப்பதைப் பார்த்ததாகவும் கூறினர்கள்.

இப்படிப் பலவாறு பேசிக்கொண்டு நண்பகலில் மீண்டும் மேலைச்சிவபுரிக்கு வந்து சேர்ந்தோம்.

பிரான்மலைத் தம்பிரான் அவர்கள் மடத்தில் ஒரு மதில் சுவரில் எடுத்துவைத்துக் கட்டியிருக்கிற துண்டுக்கல்லில் கல்லெழுத்துண்டு. அதில் திருமேலாழீஸ்வரமுடைய நாயனர் என்றெழுதப் பெற்றுளது. இத் திருமேலாழீஸ்வரம் எது என்று தெரியவில்லை.

முற்காலத்தில் கோயில்கள் ஊராட்சி புரிந்து அறங்கூறி மக்களுக்குக் கல்வி கற்பித்து உழவும் தொழிலும் ஒருங்குயரச் செய்யுமிடங்களாயிருந்தன.

இப்பொழுது ஆடம்பர வாழ்வும், மக்களுள் ஏற்றத் தாழ்வும், பரத்தையர் பிழைப்பும், தூய்மையற்று அழுக்கும் இருட்டும் மரம் வளர்ந்து வெடித்துவிழும் நிலைமையிலுள்ள கன்மதில்களையும் கொண்டுள் என்று பொதுவாகத் தமிழ்நாட்டுக் கோயில்கள் மடங்களின் நிலைகளை நினைந்து வருந்திஞேம்.

நாம் தெரிந்து செய்யும் பிழைகள் பலவற்றுள் வழக்கம் பற்றி வந்து நலிபவை சில. 'அவை' முற்காலத்தில் கணவனிறந்தும் மனைவியரை உயிருடன் வேகவைத்தது போன்று கைம்பெண்வாழ்க்கை, கோயிலுள் உயர்வு தாழ்வு, அதைப் பார்த்து மக்களுள்ளும் ஏற்றம் இழிவு, மடங்களில் நாம் வைத்துக்கொள்ளும் துறவிகள், மரியாதை பெற வழக்காடும் துறவிகள், செல்வர் வறிஞர் வாழ்வு, ஆள்பவர் ஆளப்படுபவர், கைக்கூலி பெறும் அதிகாரிகள் முதலிய முறைகள், என்று கூறியதற்கு யாவும் படிப்படியாக இனிய நட்பு முறையில் மாற்ற முயல்வோம். இல்லாவிட்டால், மக்களாட்சியில் ஏற்படும் சட்ட முறையால் திருவாங்கூரைப்போல் ஒரே நாளில் மாறும்படி நேரும் என்ருர்கள்.

இயற்கையிற் காதல்

[வித்துவான் ஜி. சுப்பிரமணிய பிள்ளை M.A., B.L.]

உலகம் தோன்றிய நாள்முதல் மனிதன் இயற்கையோடு சேர்த்துப் பிணைக்கப்பட்டே வளர்ந்துவருகிறான். அவன் இயற்கையினின்றும் வேறாகத் தன்னை எண்ணுதல் இயலாது. ஒருவனைச் சுற்றிலுமுள்ள நிலவமைதியும், கால வேறுபாடும், மரம் கொடி முதலியனவும், உயிர்வாழ்வனவும், எல்லாம் இயற்கை என்பதனுள் அடங்குவனவாகும். மனிதனால் அறிந்தோ அறியாமலோ, அவனைச் சுற்றிலுமுள்ள இயற்கைப் பொருள்கள் அவனுடைய வாழ்க்கையை மாற்றி யமைக்கின்றன. அவற்றிற் கேற்ற உணர்ச்சிகளும் எண்ணங்களும் அவன் உள்ளத்தில் ஊறி நிறைகின்றன. மலைவளத்தினிடையே பிறந்து வளர்ந்த ஒருவனுக்கும் சமவெளியில் சஞ்சரித்துவரும் ஒருவனுக்கும், பண்பு, பயிற்சி, அறிவு, பழக்கவழக்கங்கள், ஒழுக்கம் முதலியவை ஒத்தனவாதல் அரிது. இதற்குக் காரணம் அவர்களைச் சுற்றி யமைந்துள்ள இயற்கை வேறுபாடுகளே யாகும். இன்னும், வெளியே காணப்படும் மாறுபாடுகளுக்கேற்ப அகத்தினுள் எண்ணங்களும் உணர்ச்சிகளும் மாறிக்கொண்டே வரும். சுற்றிலும் சாவும் துயரமும் காணும் ஒருவனுக்கு, அவன் மனம் எவ்வாறு குதூகலிக்கமுடியும்? எங்கும் வளமும், செல்வமும், அழகும், இன்பமும் காணும் ஒருவன் மனம் மகிழ்ச்சியடைவது இயல்பே. அதே காட்சியை ஒரு மிடியன் தன்னைச் சுற்றிலும் கண்டு மனம் புழுங்கி ஏங்கவும் கூடும். இயற்கைக்கு மாறாகவும் மனிதன் நடந்துகொள்ள முடியாது. அவ்வியற்கையினிடமிருந்து மனிதன் அறிந்துகொள்ள வேண்டிய உண்மைகளோ எண்ணிறந்தன. நம் பண்டைப் புலவர்களின் பாக்கள் அனைத்தும் இயற்கைநலம் பொதுளி எழிலுற அமைந்து, மனிதனுக்கும் இயற்கைக்கும் உள்ள நெருங்கிய தொடர்பை விழுமிதினெடுத்து விளக்கமுறுத்தும். அவற்றுட் சிறப்பாகக் காதலை இங்கு எடுத்துக் காணலாம்.

மக்களிடையே காதல் நிகழ்வதுபோல், மக்களல்லாத பிற உயிர்களிடையும் காதல் விளைந்து கனிகின்றது. பறவைகளும்

விலங்குகளும், ஆணும் பெண்ணுமாய்ப் பேணி விழைந்து, மாசற்ற மனக்காதல் மகிழ்வூட்ட, இன்பம் பெருக்கி இனிது வாழ்கின்றன. ஒன்றினேடொன்று அன்பு காட்டி விளையாடுவதும், கூடிக் கூடிக் கசிந்துருகிக் களிப்பெய்துவதும், ஓவென்றெலிப்பதும், உர் என்று பாய்வதும், இருதலைப்புள்ளின் ஒருயிராவதும், ஆவென்றலறி அன்போடணைப்பதும், குலாவிப் பறந்து கூடமைப்பதும், முட்டையிட்டுக் குஞ்சு பொறிப்பதும், குட்டியைத் தழுவிக் கொஞ்சித் திளைப்பதும், ஆன் கனைப்புக் கேட்டு மழக்கன்று துள்ளுவதும், கன்றுமுட்டிக் காலி சுரப்பதும், கண்டோர் மனதைக் கவர்ந்துருக்கும் காட்சி யன்றே! இத்தகைய காட்சிகள் மக்களின் மனப்பான்மைக் கேற்றவாறு வெவ்வேறு உணர்ச்சிகளை ஊட்டவல்லன. முற்றத் துறந்த முழுஞானிகள் இவற்றினிடையே இறையொளி கண்டு விம்மித மெய்துவர். அப்பர் பெருமான் திருவையாற்றில், காதல் மடப்பிடியோடு களிறு வருவன கண்டும், இளமண நாகு தழுவி ஏறு வருவன கண்டும், திருக்கயிலாயக் காட்சி யெனவே போற்றிக் கைகுவித்து வாயார வழுத்தி நின்றார். ஆனல், இளங் காதலர்கள் எவ்வாறு கொள்வார்?

இளவேனிற் காலத்தில், சோலைகள் மலருடுத்து, சுந்தரப் புன்முறுவல் காட்டுகின்றன. பொழிலில் மரங்கள் பூத்துக் காய்த்துப் பொலிவூட்டுகின்றன. இவை பறவைகளுக்குத் தேக்கிடும் பெருவிருந்தளிக்கும். செங்கணிருங்குயில் சேவலும் பெடையுமாய் எதிர்கூவி மரக்கிளைகளில் இன்னிசை யெழுப்பி இன்பமுறுத்தும். ஆனல் தனியுற்ற மாதரார் தத்தளித்துத் தலை மயங்குவர்.

“ அடைகரை மாஅத் தல்குசினை யொலியத்
தளிர்கவின் எய்திய தண்ணறும் பொதும்பிற்
சேவலொடு கெழீஇய செங்க ணிருங்குயில்
புகன்றெதிர் ஆலும் பூமலி காலையும்
அகன்றோர் மன்றநம் மறந்திசி னோரென.” (நற்றிணை-118)

பனிக்காலத்தில், குரவமரங்கள் கொழுந்துவிட்டுப் போதரும்பிப் பொலிவெய்தும். கொஞ்சும் குயில்கள் கூடிமகிழ்ந்து

ஒன்றையொன்று ஏறட்டுக்கொண்டு மதுரகானம் பொழிந்து மனதை மயக்குறுத்தும். தனித்தியலும் பெண்ணியலார் கோலக் குயிலாலும் குரலினிமையிலும் ஒருபொருள் கண்டு உடல் நைந் தருகுவர். அக் குயில் கூவுவது, "கூடி மகிழ்ந்தோரே! எங் களைப்போல் இன்னும் கூடி இனிதுறைவீர்!" என்று கூறுவது போலத் தோன்றுமாம். இயற்கை முழங்கி இவ்வாறு ஆர்ப்பரித் தால் இல்லுறையும் மெல்லியலார் பிரிந்து சென்ற கணவரை யெண்ணிக் கருத்தழியாது மற்றென் செய்தல் கூடும்?

"அன்பினர் மன்னும் பெரியர் அதன்றலைப்
பின்பனி யமையம் வருமென முன்பனிக்
கொழுந்து முந்துறீஇக் குரவரும் பினவே
புணர்ந்தீர் புணர்மினோ வென்ன இணர்மிசைச்
செங்க ணிருங்குயில் எதிர்குரல் பயிற்றும்
இன்ப வேனிலும் வந்தன்று நம்வயிற்
பிரியல மென்று தெளித்தோர் தேஎத்து
இனியெவன் மொழிகோ யானே." (நற்றிணை-224)

காதலர்க்குக் குயில்கள் இப் பொருள் படக் கூவுதல் மன்மதனின் கட்டளையினாலேதான், என்று இளங்கோவடிகளும், "ஊடினீ ரெல்லா முருவிலான் றன்னாணை, கூடுமி னென்று குயில்சாற்ற" என்னும் பாடலில் இனிது விளக்கியுள்ளார்.

கார் காலத்தில், மடப்பிணையைத் தழுவி, பெரிய கழுத்தை யுடைய இரலைமான் வேலமரத்தின் தாழ்நிழலில் உடனுறையும் உளங்கவர் தோற்றம் கண்டு, பிரியக்கருதிய ஆடவரும் பிரிவை மறந்து மனைவியரோடு மனமகிழ்ந்துறைவர் என்பதை,

"கார்பெயல் செய்த காமர் காலை
மடப்பிணை தழீஇய மாவெருத் திரலை
காழ்கொள் வேலத் தாழ்சினை பயந்த
கண்கவர் வரிநிழல் வதியுந்
தண்படு கானமுந் தவிர்ந்தனஞ் செலவே." (நற்றிணை-256)

என்னும் அடிகளால் நன்கறியலாம்.

ஒரு காதலன் தன் காதலியைப் பிரிந்து, பொருளீட்டிவர வெண்ணி, வெம்மை புலர்ந்த வெஞ்சுரத்தின் வழியே சென்று

கொண்டிருந்தான். அவ்விடத்தில் மான் கூட்டங்கள் அங்கு மிங்கும் ஓடி, இரைதேடி அலைந்துகொண்டிருந்தன. அவற்றுள் ஒரு கலைமான் ஒரு நெல்லிமரத்தி னடியில் ஒதுங்கியது. அந்த ஆண்மானுக்குக் கொம்புகள் இரண்டும் அறுபட்டுத் தொலைந்த தால் அப்பொழுதுதான் மறுகொம்பு வளர்வதற்காகத் தலையில் இளங் குருத்துகள் முளை தோன்றியிருந்தன. அம் முளைகளை மெல்லிய தோல் மூடிக்கொண்டிருந்தது. அந்நிலையில் அவை அதிர்ச்சியுற்றால் அந்த மான் புண்ணுயலைந்து பெருவேதனை யுறும். அதனால் வாயைத்திறந்து அதிக ஓசையிடுதல் கூடாது. வாயைத் திறந்து கத்தினால் கொம்பின் முளைகள் அசைவுற்றுப் பெருந் துன்பம் விளைப்பது திண்ணம். இவ்வளவு துயரத்துக்கிடையே வருந்திக்கொண்டிருந்த அக் கலை தித்திப்பான திரண்ட நெல்லிக் கனிகள் அம் மரத்தினடியில் உதிர்ந்து கிடப்பதைக் கண்டது. அவற்றைத் தானேயருந்தி இனிது பசிதீர்க்கலாம். ஆனால் அது அவ்வாறு செய்யாமல், தன் பெண்மானை நினைத்துக்கொண்டது. வெயிலில் வதங்கி வருந்தி யுழலும் தன் பிணை, நெல்லிக் கனி யென்றால் வயிறார அருந்தி வெம்மைதீர்ந்து இன்புறுமே என்ற எண்ணம். பெண்மானோ நெடுந்தொலைவில் மேய்ந்துகொண்டு நின்றது. அதைத் தன் அருகில் அழைத்து நெல்லிக் கனிகளை அளிக்கக் கருதி, கொம்புகள் வலியெடுப்பதையும் பொருட்படுத் தாது, அத் தோல் பொதிந்த கோட்டின் முளைகள் அதிர்ச்சியுறும் படி கூவி யழைத்தது. இத்தகைய சிற்றுயிரிடத்தும், தன் துயர் காணாது, காதலாகிக் கசிந்தூறும் பேரன்பின் பெருமை இருந்த வாறென்னே? என்னே!! இதைக் கண்டான் அத் தலைவன். "ஆகா! இவ் விலங்குகளிடையும் இத்தன்மையான தூய அன்பு நிகழக் கண்ட யான், அவற்றைவிடச் சிறந்த அறிவு படைத்திருந் தும், என் துணைவியைத் துயருழக்க நீத்துத் தனியே இங்கு வந்தது என்ன பேதைமை?" என்று வருந்தினான். அப் பொழுது, மணம் நாறி மனங் குழைக்கும் மலர்க் கூந்தலுட னும், மெல்லிய திரண்ட தோள்களுடனும், அகமுருக்கும் அஞ் சனவிழி காட்டி, அவன் துணைவி அவன் மனக்கண்முன் தோன்றி நின்றாள். இங்ஙனம் இயற்கையின் நிகழ்ச்சியை எடுத்துக் கூறி மாந்தர்க்கு நல்லுரை நவிலும் பாட்டு வருமாறு:—

"சிறியிலை நெல்லித் தீஞ்சுவைத் திரள்காய்
உதிர்வன தாஅம் அத்தந் தவிர்வின்று
புள்ளி யம்பிணை யுணீஇய வுள்ளி
அறுமருப் பொழித்த தலைய தோல்பொதி
மறுமருப் பிளங்கோ டதிரக் கூஉஞ்
சுடர்தெற வருந்திய அருஞ்சுரம் இறந்தாங்கு
உள்ளினை வாழிய நெஞ்சே போதெனப்
புலங்கமழ் நாற்றத் திரும்பல் கூந்தல்
நல்லெழில் மழைக்கண்ணம் காதலி
மெல்லிறைப் பணைத்தோள் விளங்குமாண் கவினே."

(அகநானூறு-291)

இயற்கை யழகு

[இயற்கை]

மலையே யாறே வானமே
மதிக்கும் இனிய வெண்ணிலவே
உலையா உள்ளப் பறவைகளே
ஊக்கங் குறையா மாவினமே!
நிலையா விளங்கும் விண்மீனே
நீடும் நறிய மலர்வகையே
அலகில் பெருமைக் கடவுள்நிலை
அறிந்தீர் போலும் அருளீரே! (1)

[மனம்]

இயற்கை யழகுக் கொடிமீதே
இயலும் மனமாஞ் சிறுகுருவி
செயற்கை மறந்தே இனிதிருந்து
தெய்வக் கருணைத் திறம்பாடி
உயற்கை வேண்டித் தழுதழுத்த
உளமும் நிலையும் பரவசமாய்
உயிர்க்கும் அமுதத் தீங்குரல்கேட்
டன்பு பெருகார் யாரேயோ! (2)

[மலைவனம்]

ஓங்கி யுயர்ந்தே பசியநிற
உடலங் காட்டி வன்மைகொடு
பாங்கி னுயரும் வனவிலங்கும்
பறவை யினமுங் களித்துலவத்
தாங்கி யன்பா ற்ருழுக்கிமுகில்
தழுவப் பலநல் வளஞ்சுரந்தாய்
ஆங்கா மலையே இறைவனருட்
சொரூபப் பெருமை சொல்லாயே! (3)

—கிளிக்காட்டு - இறையோளியன்

செழுமைக்குரிய பண்டை இந்தியக் கடவுள்*

[வித்துவான் மா. இராசமாணிக்கம் பிள்ளை, B. O. L.]

சிந்துவெளியிற் கிடைத்த பண்டை இந்தியர்தம் சிறந்த கடவுளாகிய 'ஆன்' செழுமைக்குரிய கடவுளாகும். ஒரு கல்வெட்டில், 'பேரானது தேர், உயர் கதிரவன், பயிர் நிலங்கள்' என்னும் தொடர் காண்கிறது. தென்னாட்டில் 'பேராள், பேரான்' என்பது சிவனைக் குறிப்பது. தேரும் வயல்களும் முறையே போரையும் சமாதானத்தையும் குறிப்பன; அறிவையும் தோற்றத்தையும் குறிப்பன. 'ஆன்' என்னும் கடவுள் பெரும்பாலும் மரக்கிளைகளிற் காட்டப்படலே அதன் செழுமைக்குரிய பண்பை உணர்த்துகிறது.

'ஹரப்பாவில் கிடைத்த முத்திரை ஒன்று நீள் சதுரமானது. அதில் பல உருவங்கள் காண்கின்றன. அவற்றுள் ஒன்று பெண் உருவம். அஃது ஆடை அற்றது; தலைகீழாகக் கால்களை அகற்றிக்கொண்டு தொங்குகிறது. அதன் வயிற்றிலிருந்து ஒரு செடி வெளிப்படுகிறது. அதற்குப் பக்கத்தில் சில ஓவிய எழுத்துகள் இருக்கின்றன. அவற்றுக்கு அப்பால் இரண்டு நூதன விலங்குகள் நிற்கின்றன. முத்திரையின் பின்புறம் முன்சொன்ன எழுத்துகளோடு ஓர் ஆணும் பெண்ணும் நிற்பதாகக் காண்கின்றனர். ஆடவன் தன்கையில் கத்தி ஒன்றை வைத்துள்ளான். பெண் தரையில் உட்கார்ந்தபடி கைகளைக் குவித்து உயர்த்தியுள்ளாள். ஆடவன் அப் பெண்ணைத் தரைப் பெண்ணுக்குப் (நிலமகள்) பலியிடுபவன் போலும்! முதற் பக்கத்தில் தலைகீழாகத் தொங்கும் பெண் உருவம் தரைப்பெண் உருவம்; இரண்டு விலங்குகள் அத் தெய்வம் ஏறும் ஊர்திகள்போலும்!' என்று சர் ஜான் மார்ஷல் கூறியுள்ளது, பெண் தெய்வம் பொறுத்தமட்டில் பொருத்தமற்றதாகும். அஃது ஆன் உரு

---

* 'A Proto - Indian Representation of the fortility God என்று ஹீராஸ் பாதியார் ('Acharya Pushpanjali volumes'— in honour of Dr. D. R. Bhandarkar) எழுதிய கட்டுரையின் சம், (pp. 121—130)

வமே என்பது வேறு பல முத்திரைகளைக் கொண்டு அறியலாம். இத்தகைய பல முத்திரைகள் எகிப்து, பாபிலோனியா, மினேவா, சுமேரியா என்னும் இடங்களிற் கிடைத்துள்ளன.

இந்த ஆண் உருவத்தின் கால்கள் வில்லைப்போல் வளைந்திருக்கும்; குறி (membrum) முன்புறம் கால்களுக்கிடையே நீண்டிருக்கும்; ஆடையே இல்லை. முகம் சில இடங்களில் பக்கப் பார்வையில் இருக்கும்; பல இடங்களில் நேராக இருக்கும். இரண்டு தாமரைத் தண்டுகளை வளைத்து அவற்றை ஆசனமாக்கி உட்கார்ந்த கோலமும் உண்டு. இக் குறி 'இது செழுமைக் குரிய கடவுள்' என்பதற்குப் பின்னுமொரு சான்றாகும்.

வான் டேர் ஆஸ்டென் என்பவர் இதனைப் 'பேஸ் (Bes) என்னும் கடவுள்' என்பர். இது எகிப்தியக் கடவுள்; இசை வளர்க்கும் கடவுள், மகிழ்ச்சிக்கும் பிள்ளைப் பேற்றுக்கும் உரிய கடவுள். இக் கடவுள் எகிப்தில் இருமுறைகளில் காட்டப் படும்: ஒன்று, குறுகிய வண்டிக் கால்களைக் கொண்ட குள்ளமாகவும் தலையில் வரிசையான இறகுகளை உடையதாகவும் இருப்பது; மற்றொன்று இக் கடவுள் சிங்க வுருவத்தைப் பெற்றிருந்தமை - பல உருவங்களில் இக் கடவுளுக்குக் காதுகள், பிடரி மயிர், வால் இவை இணைக்கப்பட்டிருக்கும்—சிலவற்றில் அவ் விலங்கின் தோலைப் போர்த்தபடி இருக்கும். பழைய எகிப்திய முத்திரை ஒன்றில் இக்கடவுள் மொஹெஞ்சொதரோவில் காட்டப்பட்டபடியே இருக்கிறது. இதன் ஒவ்வொரு கையும் ஒரு பாம்பைப் பிடித்துள்ளது. அப் பாம்புகள் இதன் கால்களைச் சுற்றிக்கொண்டுள்ளன. இத்தகைய முத்திரைகள் மெஸபொடேமியா, கிரீட், சிந்துவெளி, எகிப்து இவற்றில் கிடைத்துள்ளன. இக் கடவுளின் கால்களுக்கிடையுள்ள நீண்ட குறியுடன் நாற்கால் மூட்டைப்பூச்சி போன்ற ஒன்று நீண்ட வாலுடன் இணைக்கப்பட்டுள்ளது. இப் பூச்சி பல முத்திரைகளில் காண்கின்றன. அதன் தலைப்புறத்தில் இரண்டு நீண்ட நரம்புகள் உள்ளன. இப் பூச்சியுள்ள முத்திரை 1930-ல் சுமேரியாவிலும் கிடைத்தது. இது பல விலங்குகட்கு இடையில் இருக்கிறது. இது சில முத்திரைகளில் சதுரமாக இருக்கிறது. இதன் குறிப்பு என்ன?

இது எகிப்திய வண்டைக் குறிப்பது. 'வண்டு மண் உருண்டையை உருட்டிக்கொண்டு செல்லும். அதுபோலக் கதிரவன்—ஆக்கத்திற்கும் செழுமைக்கும் உரிய முதற்பொருள் நாளும் விண்ணில் உருள்கிறது' என்பதைக் குறிப்பதாகும். காலைக் கதிரவன் இந்த வண்டாகவே பழைய எகிப்தில் காட்டப் பட்டது; பேசப்பட்டது. (எகிப்தில் கதிரவன் பெயர் ர)........ ....இங்ஙனம் எகிப்தில் வண்டு செழுமைக்குரிய குறியாக வும், மறு பிறப்பை உணர்த்தும் குறியாகவும் உணர்த்தப்பட் டது. இக் குறிப்பாற்றான் மேற்சொன்ன கடவுள் குறியிடத்தும் இது இணைக்கப்பட்டது.

பெஸ் என்னும் கடவுள் பாம்புகளைப்பற்றி இருப்பதன் கருத்து என்ன? திராவிடக் கடவுளான சிவன் பாம்புகளைப்பற் றிக்கொண்டு இருப்பவன். அழித்தற் கடவுளாகிய நிலையில் அவ னிடம் உள்ள பாம்பு அழிவைக் குறிக்கும் அடையாளம் ஆகும். பிற்காலச் சிவனைக் குறிக்கும் சிந்துவெளி 'ஆன்' கடவுளிடமும் பாம்பு இருக்கிறது என்பதை, 'மீன் எண் மூன்(று)கண் பவ்" (வணக்கத்திற்குரிய ஒளியுள்ள முக்கண்ணன் பாம்பு) என்னும் முத்திரை எழுத்துகள் உணர்த்துகின்றன. ('பண்டை இந்தியர் 'கடவுள் முக்கண்களை உடையவர்' என்று நம்புகின்றனர். சிவனும் முக்கண்ணனே.) அழிவுக்குப் பின் தோற்றம் என்பது முறையாதலின் பாம்பைக் கொண்டுள்ள 'ஆன் அல்லது பெஸ்' கடவுள் அழித்தற் கடவுள்; அழித்தற்குப் பின் தோற்றம்— செழுமை உண்டாக்கும் கடவுள் ஆகிறதன்றோ? இப் பண்டைப் பொருளிலிருந்தே 'இன்பநுகர்ச்சி, மகிழ்ச்சி, பிள்ளைப்பேறு' என்பன பின் தோன்றலாயின. பிற்கால எகிப்தர் வரலாற்றிலும் இக்கடவுள் இதே குணங்களைக் கொண்டுள்ளது. இதனாற்றான் இது மணப்பள்ளியின் கால்களை அலங்கரித்தது; எகிப்திய அரசி 'ஹட் செப்சட்' பிறந்த அறையில் இக்கடவுள் உருவம் வைக் கப்பட்டிருந்தது. எகிப்தியர் கோவில்களில் உள்ள பிறப்பறை களில் எல்லாம் இக்கடவுள் உருவம் இருந்தன; இராணிமார் அறைகளில் இருந்தன. **இக்கடவுள் எங்கிருந்து வந்தது?**

எகிப்தியர் கடவுளர் பெரும்பாலும் பக்கப்பார்வை யுடைய ராகவே வரையப்பட்டனர். இக்கடவுள் மட்டும் நேர்ப்பார்வை

உடையராகவே வரையப்பட்டது. மேலும், முற்சொன்னவை ஓரளவு ஆடை உடையனவாகவே இருக்கும். பிற்பட்டதோ யாண்டும் ஆடை அற்றதாகவே காண்கிறது. எனவே, கடவுளரை ஆடையற்றவராக வழிபடும் நாட்டிலிருந்தே இக்கடவுள் எகிப்துக்குச் சென்றதாதல் வேண்டும். அஃது எந்த நாடு?

பண்டை எகிப்திய உருவங்களில் இக் கடவுள் கூரிய தாடியும் பிடரி மயிரும் உடையதாக இருக்கிறது; சுமேரிய—பாபிலோனிய முத்திரைகளில் தட்டையான உருண்டைக் குல்லாயை அணிந்திருக்கிறது; ஓரிடத்தில் பூங்கொத்துடைய தட்டொன்றைத் தலைக்குமேல் பிடித்துள்ளது; பெரும்பாலும் இதன் கைகள் இரண்டும் ஒரே அளவில் வைக்கப்பட்டில்லை; முகம் பக்கப் பார்வை கொண்டது; உடல் நேரே உள்ளது.

இக்கடவுளின் பல திறப்பட்ட உருவங்களிற் பழைமையும் எளிதுமானது சிந்துவெளியிற் கிடைத்த பண்டை இந்திய உருவமே ஆகும். இதில் தாடி இல்லை; பிடரி மயிர் இல்லை. இந்தியப் பழங் கடவுளர் உருவங்கள் ஆடையற்ற நிலையிலேயே உள்ளன. இவை அனைத்தும், பெஸ்ஸின் பிறப்பகம் இந்தியா என்பதைத்தான் குறிக்கிறது. சிந்துவெளியிற் கிடைத்த 'ஆன்' கடவுள் காலடியிற் காணும் மூட்டைப்பூச்சியின் வளர்ச்சியே 'பெஸ்' கடவுளிடம் காணும் வண்டு என்பதும் இதனை உறுதிப் படுத்துதல் காண்க.

'பெஸ்' என்னும் விலங்கின் தோல் போர்த்துள்ளதால் இக் கடவுள் இப் பெயர் பெற்றனர் என்பர். அது தவறு, என்னை? தோல் போர்த்தது பிற்காலத்தில் ஆதலால் என்க. இதற்கு உண்மையான பொருள் காணவேண்டுமாயின் **திராவிட மொழிகளிற்றான் தேடவேண்டும்.**

பெஸ்—பகுதி

பெஸர்—பிறப்பு, உண்டாதல், பிள்ளைப்பேறு (கன்னடம்)

பேஸாய—பயிர்த்தொழில், விவசாயம் (துளுவம்)

பெஸி—பறவையின் முட்டை (சிங்களம்)

எனவே, பெஸ் என்பது 'உண்டாக்கல், படைத்தல்' முதலிய பொருள்களைக் குறித்த பகுதியாக முதலில் இருந்திருத்தல் வேண்டும். ஆதலின், ஏபஸ் என்பது உண்டாக்கும் கடவுளைக் குறித்தமை இயல்பே என்க.

எகிப்தில் வழக்கொழிந்த கடவுளர் பலருள் பெஸ் ஒன்ருகும். ஆனுல் சிந்துவெளியில் இது முழுமுதற் கடவுளாக இருந்தது. வேறு பெருங் கடவுள் இல்லை. இதுவே பழைய இந்தியர் கடவுள் ஆகும். இதன் பல்வேறு உருவங்கள் பிற்பட்டனவாகும். பெஸ் பன்டிலிருந்து எகிப்திற்கு வந்ததாக எகிப்தியர் கூறுவர் என்று வாலிஸ் பட்ஜ் கூறுகிருர். எகிப்தியர் பன்டில் பல ஆண்டுகள் இருந்தவராதலின் தம் பழைய நாட்டையே மறந்து விட்டனர். சிந்துவெளி முத்திரைகளை நன்கு ஆராயின், எகிப்தியரது பழைய இடம் இந்தியாவே என்பது விளங்கும். இங்கிருந்து போனபொழுது அவர்கள் தங்கள் கடவுளான பெஸ்ஸையும் உடன்கொண்டு சென்றனர்.

முன்சொன்ன பெண்பலித் தொடர்பான முத்திரையில் உள்ள ஓவிய எழுத்துகள், 'நிலாத்தோன்றிய எட்டாம் நாளில் கிராமவேந்தன் எடுபதி நீதி' என்பதைக் குறிக்கின்றன. முத்திரையில் உள்ள ஆடவன் கடவுள் அல்லது கடவுட் புரோகிதன் அல்லது கிராமத்தலைவனுக இருத்தல் வேண்டும். அட்டமி (எட்டாம்) நாள் நடைபெறும் செயல் இது. இங்குக் கோகுல அட்டமி கொண்டாட்ட நாள் என்பது நினைவுகூரற்பாலது. 'என்ம' என்பது துளுவில் இன்றும் எட்டைக் குறிக்கிறது. முத்திரையில் குறித்துள்ளது உயிர்ப்பலியாகும். ஆனுல் இது நீதி எனப் பட்டதேன்?

முத்திரையின் ஒரு பக்கத்தில் உள்ள பெஸ் எனும் ஆண் கடவுள் செழுமைக்குரியது. மறுபக்கமுள்ள பெண் செழுமையை வேண்டினுள்; பெற்றிலள். அவள், பண்டைக்கால எண்ணப்படி, வாழ உரிமை அற்றவளானுள்.

சங்ககாலத்துச் செந்தமிழ்ச் செல்வி

[வித்துவான் திரு. ஒளவை. சு. துரைசாமிப் பிள்ளை]

தன் செய்கையால் செல்வனுக்கும் செல்விக்கும் தன்பால் மிக்க வருத்த முண்டாயினும், அவர்தம், வெம்மையைத் தாங்கி அறத்தின் வழுவா தொழுகுவிக்கும் அறிவுத்திண்மை அவள் பால் நிரம்பவுண்டு. "உறுகண் ஓம்பல் தன் இயல்பாகலின், உரியதாகும் தோழிகண் உரனே" என ஆசிரியர் நன்கு வற் புறுத்துகின்ருர். மேலே, தான் அச் செல்வனேடு கூடியாடி யது போல்வனவும், அச் செல்வி கேட்டு நாணத் தகுவனவும் தோழி கூறியதெல்லாம், அச்,செல்வியின் ஒழுக்கமும் அறவாழ் வும் குறித்தேயாகும். "மெய்யினும் பொய்யினும் வழிநிலை பிழையாது, பல்வேறு கவர்பொருள் நாட்டத் தானும்" (தொல்) தோழி செல்வியை ஆராய்தற்குரியள் என்று ஆசிரியர் கூறினர். இதுவே யன்றி, செல்வன்பால் செல்விக்குரிய காதலை, அவளு டைய "நாற்றமும் தோற்றமும் ஒழுக்கமும் உண்டியும், செய் வினை மறைப்பினும் செலவினும் பயில்வினும்" தகுவன கண்டு தெளிகுவள் என்றும் கூறியருளினர்.

இவ்வகையாலெல்லாம் தோழி, அச் செல்வியின் காதன் மாண்பை உணர்ந்துகொண்டபோதினும், தான் அறிய அவள் தன் காதலனுடன் கூடி யொழுகப்பண்ணும் கடமை மேற்கொள் கின்ருள். செல்வியோ அச்சமும் மடனும் நாணும் மிகவுடை யள். இவற்றுட் சிறிது வழுவினும் உயிர்விடும் அத்துணை மான முடையள். தன் உயிர்த்தோழி யாயினும், அவள் தன் கள வினை யறிவளோ எனும் அச்சமும், அது காரணமாக நிற்கும் நாணமும் செல்விபால் சிறிது கெட்டாலன்றி, தோழி அவளைக் களவின்கண் இனிது ஒழுகுவிக்கும் அறத்தைச் செய்ய இயலாது. நிச்சமும் பெண்பாற் குரிய எனப்படும் அச் சத்தையும் நாணத்தையும் மிகச் சிறிதளவு கெடுக்க முய லும் தோழியின் ஒட்பம் மிக வியத்தற்குரியது. பயிற்சிக்கண் நீங்கும் அச்சத்தினும் நாணம் மகளிர்க்கு உயிரினும் சிறந்த தாகும். "உயிரிற் சிறந்தன்று நாணே" எனத் தொல்காப்பிய ருைம், "உயிரினும் சிறந்த தன் நாண் யாதும் இலளாகி நகு

தலும் நகூஉம்" (கலி. 147) என நல்லந்துவனாரும் கூறுதல் காண்க. இத்துறையில் பாட்டியற்றுவதில் புலவனது புலமைத் திறம் ஓரளவு கால்கொண்டு நிற்கிறதென்றுகூட உரைக்கலாம். ஏனெனின், நாணழிவு சுட்டிய குறிப்புக்களைக் கேட்போர் அருவராது நயக்குமாறு கூறல் வேண்டும்.

அச் செல்வனுக்குக் குறைநேர்ந்த தோழி தன்பால் வந்து அவன் குறையை நயக்குமாறு கூறவருகின்றாள் என்பதனை அத் தமிழ்ச் செல்வியும் தோழியின் குறிப்புக்களால் ஒருவாறு உணர்ந்து கொள்கின்றாள் என்றாலும் அதனைப் புறத்தே காட்டாது மறைத்தொழுகுகின்றாள். இந்நிலையில், தோழி அவளிடம் வந்து, " அன்னாய், ஒருநாள் வாரலன் இருநாள் வாரலன், பன்னாள் வந்து பணிமொழி பயிற்றி, என் நன்னர் நெஞ்சம் நெகிழ்ந்த பின்றை, வரை முதிர்தேனின் போகியோனே (குறுந். 176) என் நெஞ்சு கலுழ்கின்றது" என்கின்றாள். ஒரு முறைக்குப் பன்முறை அவன் குறையிரந்து நின்றது குறிப்பித்தல் காண்க. பிறிதொருகால் செல்வியை யண்மி, " அக் குன்ற நாடன், யாம் தற்படர்ந்தமை அறியான், தானும் வேனில் ஆனேறுபோலச் சாயினன் என்ப நம் மாண்நலம் படர்ந்தே" (குறுந். 74) என்கின்றாள். அவன் குறையை நயத்தற்குரிய படர்ச்சி அச் செல்விபால் உளதாகத் தானே உளப்படுத்திக் கொண்டு தோழி கூறும் திறம் காண்க. செல்வி நயவாளாயின், தோழி தன்னை யுளப்படுத்துக் கூறுதலை மறுப்பளென்பது கருத்து.

இவ்வாற்றால் செல்வி குறைநயக்கும் கருத்தினளாதலைக் குறிப்பாய் உணர்ந்து கொண்ட தோழி, மற்றொருகால் செவிலியை நோக்கி, " இதை நினைத்தால் நகைக்கு இடனாகின்றது, காண்" என்கிறாள். செவிலி, ஆர்வமுடன் "என்னையது?" என்றதனும்,

" நகையா கின்றே தோழி ; ' தகைய
அணிமலர் முண்டகத்து ஆய்பூங் கோதை
மணிமருள் ஐம்பால் வண்டுபடத் தைஇத்
துணிநீர்ப் பௌவம் துணையோ டாடி......
தெளிநீங் கிளவி ! யாரை யோஎன்

அரிதுபுணர் இன்னுயிர் வெளவிய நீ?'எனப்
பூண்மலி நெடுந்தேர்ப் புரவி தாங்கித்
தான்நம் அணங்குதல் அறியான், நம்மில்
தான்அணங் குற்றமை கூறிக் கானல்
சுரும்புஇமிர் சுடர்நுதல் நோக்கிப்
பெருங்கடல் சேர்ப்பன் தொழுதுநின் றதுவே" (நற். 245)

என்று சொல்லுகின்றாள். இதன்கண் அவன், என் இன்னுயிர் வெளவிய நீ யாரையோ? என்று வினவி, சுடர்நுதல் நோக்கித் தொழுது நின்றது நகையாக இருக்கின்றது என்பவள், அவன்பால் செல்விக்குரிய காதலை. "தான் நம் அணங்குதலறியான்" என்றும், அவளது ஆற்றாக் காதலை "நம்மில் தான் அணங் குற்றது கூறி....தொழுது நின்றது" என்றும் கூறும் திறம் காண்க.

பிறிதொருகால், வந்து தோழிபால் விடைபெற்று நீங்கும் அச் செல்வத் தமிழ் மகன் சிறிது சேய்மைக்கண் சென்று கொண்டிருக்கின்றான். அவனைத் தோழி நம் செந்தமிழ்ச் செல்விக்குக் காட்டி, "செல்லுமன்னோ மெல்லம் புலம்பன்" என்கின்றாள். உடனே, செல்வி ஒன்றும் அறியாள்போல், "யார் அவன்? என் செல்கின்றான்?" என்று வினவ, தோழி, அன்றைப்,

"கழிப்பூக் குற்றும் கானல் அல்கியும்
வண்டற் பாவை வரிமணல் அயர்ந்தும்
இன்புறப் புணர்ந்தும் இளிவரப் புணர்ந்தும்"

நம்மோடு விளையாட்டயர்ந்த செல்வமகனே அவன். அவன், இப்போது,

"தன்துயர் வெளிப்படத் தவறி, நம்துயர்
அறியா மையின் அயர்ந்த நெஞ்சமொடு
செல்லு மன்னோ, மெல்லம் புலம்பன்"

என்று உரைக்கின்றாள். "சென்றால் செல்லட்டுமே" என்பாள்போலச் செல்வி தோழியைப் பார்க்கின்றாள். உடனே, இவ்வறிவுடைத் தோழி,

"செல்வோன் பெயர்புறத்து இரங்கி முன்னின்று
தகைஇய சென்றஎன் நிறையில் நெஞ்சம்
எய்தின்று கொல்லோ தானே; எய்தியும்
காமம் செப்ப நாணின்று கொல்லோ ?"

என்று தன் நெஞ்சு கலுழ்ந்தது போலக் கூறி, மேலும்,

"உதுவ காண்அவர் ஊர்ந்த தேரே
குப்பை வெண்மணற் குவவுமிசை யானும்
எக்கர்த் தாழை மடல்வயி னானும்
ஆய்கொடிப் பாசடும்பு பரிய ஊர்புஇழிபு
சிறுகுடிப் பரதவர் பெருங்கடல் மடுத்த
கடுஞ்செலல் கொடுந்திமில் போல
நிவந்துபடு தோற்றமொடு இகந்துமா யும்மே" (அகம். 330)

என்று சொல்லி முடிக்கின்றாள். இது கேட்ட செல்வி, தன்னைப் போலவே தன் தோழியும் செல்வன்பால் மெய்யே அன்பு கொண்டொழுகுகின்றாள் எனத் தெளிந்து மகிழ்கின்றாள். இதனால், உயிரினும் சிறந்த அவளது நாணம் சிறிது நெகிழ்கின்றது.

பின்பொருகால், அத் தோழி, நம் செல்வியை நோக்கி, "அன்னாய், அச் செல்வநாடன், நெருநல் நம்மொடு கூடி நம் புனத்தே கிளிகடிந்து விளையாடினன் அன்றோ? அவன் என்பால் ஏதோ சொல்லுதற்கு முயன்றான்" என்கிறாள். "சொன்னானா?" என்று செல்வி வினவலும், தோழி,

"சொல்லி டம்பெறான் பெயர்ந்தனன், பெயர்ந்தது
அல்ல லன்று,அது காதலந் தோழி.
தாதுண் வேட்கையின் போதுதெரிந் தூதா
வண்டோ ரன்னஅவன் தண்டாக் காட்சி"

என்றதும், செல்வி, அவளைக் கூர்த்து நோக்குகின்றாள். தோழியோ,

"........................அவன் தண்டாக் காட்சி
கண்டும் கழல்தொடி வலித்தஎன்
பண்பில் செய்தி நினைப்பா கின்றே" (நற். 25)

என்று மொழிகின்றாள். இதன்கண், "வண்டோரன்ன அவன் தண்டாக் காட்சி" யென்று தோழி கூறியது, நின்பால் நலன்

நுகர்தற்கு என்பால் சொல்லாடமுயன்ருன்' என்றவாறு. ''கண்டும் கழல்தொடி வலித்த என் பண்பில் செய்தி'' என்றதஞல், செல்வி, தன் உயிர்க்காதலனை அச் செல்வனைப் பலகால் காணப்பெற்றும் கூடி மகிழப்பெருமையின் உடம்புநனி சுருங்கியதும், பாடறிந்து * குறைநயக்கும் குறி விளங்கக் காட்டாமையும் விளக்கப்படுகின்றன.

இவ்வாறு செல்வியின் உள்ளத்தை அச்செல்வன்பால் கூட்டுவித்தற்கேற்பத் தோழி பண்படுத்திக் கொண்டபின், அவளை நோக்கி,

"அறியாய் வாழி தோழி...............
மாமலை நாடனொடு மறுவின் ருகிய
காமம் கலந்த காதல் உண்டெனின்,
நன்று மன் ;அது நாடாய் கூறி ;
நாணும் நட்பும் இல்லோர்த் தேரின்
யானலது இல்லைஇவ் வுலகத் தானே ;
இன்றுயி ரன்ன நின்னொடும் சூழாது......
பெரும்பெயர் எந்தை அருங்கடி நீவிச்
செய்துபின் இரங்கா வினையொடும்
எய்யல பெரும்பழி எய்தி னேனே ;' (அகம். 268)

என்று கூறுகின்ருள். இதன்கண், நம் செல்வி, முன்பு அச் செல்வன்பால் தனித்துக் கூடிப்பெற்ற நட்பினைத் தோழிதான் உணர்ந்திருக்குமாற்றினையும் ஒருவாறு தெரிவித்துக் குறைநயப்பித்துக் கொண்ட திறம் காணலாம்.

மறுபடியும், அத் தோழியே, நம் செல்வியை நோக்கி,

"அம்மலை கிழவோன் நம்நயந்து என்றும்
வருந்தினன் என்பதோர் வாய்ச்சொல் தேருய் ;
நீயும் கண்டு நுமரொடும் எண்ணி
அறிவறிந் தளவல் வேண்டும் ; மறுத்தற்கு
அரிய வாழி தோழி ; பெரியோர்
நாடி நட்பின் அல்லது
நாட்டுநா டார்தம் ஒட்டியோர் திறத்தே'' (நற். 32)

---

* குறைநயத்தல்—சொல்லிக் கொள்ளும் குறையைப் போக்கி மகிழ்வித்தல்.

என அறிவுடைய நன்மொழி கூறி அவளைக் குறைநயப்பிக்கின்ருள். இனி இவ்வகையேயன்றி, வேறு வகையில், "செல்வன் போந்து,

அரும்பலைத் தியற்றிய சுரும்பார் கண்ணி
பின்னுப்புறந் தாழக் கொன்னே சூட்டி
நல்வரல் இளமுலை நோக்கி நெடிதுநினைந்து
நில்லாது பெயர்ந்தனன் ஒருவன்; அதற்கே......
படப்பை நின்ற முடத்தாள் புன்னைப்
பொன்னேர் நுண்தாது நோக்கி
என்னும் நோக்கும்இவ் வழுங்க லூரே" (அகம். 180)

என்றும்,

"கொண்கன் ஊர்ந்த கொடிஞ்சி நெடுந்தேர்
தெண்கடல் அடைகரைத் தேர்மணி யொலிப்பக்
காண வந்து நாணப் பெயரும்;
அளிதோ தானே காமம்
விளிவது மன்ற நோகோ யானே" (குறுங். 212)

என்றும் தோழி, நம் செல்வி குறைநயக்குமாறு சொல்வன பலவாகும். அவையெல்லாம் விரிப்பின் பெருகும். (கலி. 60,61)

இவ்வண்ணம் தோழி கூறியவாற்ருல், நம் செந்தமிழ்ச் செல்வி, அச்சம் நீங்கி, நாணும் ஒரு சிறிது நெகிழ்ந்து, தனக்கும் அச் செல்வனுக்கும் உளதாகிய தொடர்பினைக் குறிப்பாய் உரைக்கலுறுவள்.

"சுடர்த்தொடீஇ! கேளாய்: தெருவில்நாம் ஆடும்
மணற்சிற்றில் காலின் சிதையா, அடைச்சிய
கோதை பரிந்து, வரிப்பந்து கொண்டோடி
நோதக்க செய்யும் சிறுபட்டி (செல்வன்), மேலோர்நாள்,
அன்னையும் யானும் இருந்தேமா, 'இல்லிரே!
உண்ணுநீர் வேட்டேன்' எனவந்தாற்கு, அன்னை
'அடர்பொற் சிரகத்தால் வாக்கிச் சுடரிழாய்!
உண்ணுநீர் ஊட்டிவா' என்ருள்; என, யானும்
தன்னை யறியாது சென்றேன்; மற்றுஎன்னை,
வளைமுன்கை பற்றி நலியத், தெருமந்திட்டு,
'அன்னாய்! இவனொருவன் செய்ததுகாண்,' என்றேனா;

அன்னை அலறிப் படர்தரத், தன்னை, யான்,
'உண்ணுநீர் விக்கினான்' என்றேனா ; அன்னையும்
தன்னைப் புறம்பழித்து நீவ, மற்று, என்னைக்
கடைக்கண்ணால் கொல்வான்போல் நோக்கி நகைக்கூட்டம்
செய்தான்அக் கள்வன் மகன்" (கலி. 51)

என்று அச் செல்வி உரைக்கின்றாள். இதனைக் கேட்ட தோழி, "அன்னாய், இவ்வாறு முன்பே உறவுண்டாகவும், என்னை இதுகாறும் மறைத்தொழுகினீரன்றோ! மேலும், நீ கூறியவகையே நோக்கின். அவன் அத்துணை வழிபாடொன்றும் தங்கட்குச் செய்திலன்போல இருக்கிறதே; பட்டிமையுடையாரை நட்டல் கூடாதே" என்று சுடுவதுபோல உரைக்கின்றாள். அது பொறாத செல்வி, அவன் தன்னை வழிபட்ட நெறியும், தான் தன் பெருமை குன்றாது அதனை ஏற்ற நிலையும் கூறலுற்று,

"இன்னகை இலங்கெயிற்றுத் தேமொழித் துவர்ச்செவ்வாய்
நன்னுதால் நினக்கொன்று கூறுவாம் ; கேள் ; இனி :
நில்என நிறுத்தான், நிறுத்தே வந்து
நுதலும் முகமும் தோளும் கண்ணும்
இயலும் சொல்லும் நோக்குபு நினைஇ,
ஐதேய்ந் தன்று, பிறையு மன்று ;
மைதீர்ந் தன்று மதியு மன்று ;
வேயமன் றன்று மலையு மன்று ;
பூவமன் றன்று சுனையு மன்று ;
மெல்ல இயலும் மயிலு மன்று ;
சொல்லத் தளரும் கிளியு மன்று ;
எனவாங்கு,
அனையன பலபா ராட்டிப், பையென
வலைவர் போலச் சோர்பதன் ஒற்றிப்,
புலையர் போலப் புன்கண் நோக்கித்
தொழலும் தொழுதான், தொடலும் தொட்டான்,
காழ்வரை நில்லாக் கடுங்களிறு அன்னோன்
தொழூஉம் தொடூஉம் அவன்தன்மை
ஏழைத் தன்மையோ இல்லை தோழி" (கலி. 55)

என்று கூறி முடிக்கின்றாள். தோழி, மகிழ்ந்து, நம் செல்வியை 'வருக' எனத் தனியே அழைத்துச்சென்று, "நீ ஈங்கே இரு;

யான் சென்று பூக்கள் நல்லன கொணர்கின்றேன்'' என்று சொல்லி நீங்குகின்றாள். ஆங்கே சிறிது போதில், அச்செல்வன் போந்து நம் செல்வியைக் கண்டு கழியுவகை எய்துகின்றான். நம் செல்வியும் முதலில் பெரிதும் நாணி, தோழியின் செயல் நுட்பம் தெளிந்து, செல்வனது கூட்டத்தால் இன்பம் சிறக்கின்றாள்.

இவ்வாறு, நம் தமிழ்ச்செல்வியும் செல்வனும் கடிமணம் புணர்தற்கிடையே பலமுறை ஒருவரையொருவர் கண்டு கூடி மகிழ்வர்; ஆனால், இவர்கட்கிடையே மகப்பேற்றுக்குரிய மெய்யுறு புணர்ச்சி நிகழ்வது கிடையாது. பிற்காலக் கோவை நூல்களில் அஃது உளது போன்ற குறிப்புக்கள் காணப்படும். ஆயினும், அவை சங்க காலத்து ஒழுக்கமன்மையின் கொள்ளப் படா.

எனது பெயரால் எவனை நான் மூடிவைத்திருக்கின்றேனோ, அவனைச்சுற்றி இச் சிறையின் சுவரைக் கட்டி எழுப்புவதே என் வேலையாய் விட்டது. இச் சுவர் நாளுக்குநாள் வளர்ந்து வானை நோக்கிப் போகையில், அதன் இருண்ட நிழலிலே எனதுண்மை நிலையில் அறிவை யான் இழந்துவிடுகின்றேன்.

இந்தச் சுவரைப்பற்றி யான் பெருமை பாராட்டி, அதில் ஒரு சிறு துளையும் இல்லாதிருக்கத், தூசளும் மணலுங் கொண்டு மேற்பூச்சுப் போடுகின்றேன். இவ்வாறு என் கவலைகள் பெருகுவதால் எனது உண்மை நிலையைப்பற்றிய அறிவை இழந்துவிடுகின்றேன்.

—கவி இரவீந்திரர்.

மதிப்புரை

நெடுநல்வாடை (ஆராய்ச்சி):—[ஆசிரியர் : இராவ்சாகேப் K. கோதண்டபாணி பிள்ளை B. A. டெபுடி கலெக்டர், சென்னை. வெளியிட்டோர்: சென்னைத் தமிழ்ச் சங்கம். விலை ரூ. 1-4-0.

கடைச்சங்க காலத்தில் எழுந்த 'பத்துப் பாட்டு' என்னும் நூல் தொகுதியுள், 'நெடுநல் வாடை' என்பதும் ஒன்று. அது, ஆசிரியர் நக்கீரரின் எழுத்தோவியம். இனிய அகவற் பாட்டால் அமைந்தது. அதனை இப்போது திறன் ஆய்ந்து தெளிதலாக, அழகிய உரைநடையில், திரு. பிள்ளையவர்கள் ஆராய்ந்து எழுதி, திருவாளர் திரு. வி. க. மணி விழா அணிகலனாக வெளிவருமாறு உதவியிருக்கின்றார்கள்.

நூல், திரு. S. சோமசுந்தர பாரதியார் M. A., B. L. அவர்கள் முன்னுரையோடும், திரு. வித்துவான் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் M. A., B. L., M. O. L. அவர்கள் அணிந்துரையோடும் வெளிவந்துள்ளது. 1. பொதுச் சிறப்பு 2. மக்கள் தொகுதி - ஆடவர். 3. மக்கள் தொகுதி - மகளிர். 4. ஏனைய உயிர்த் தொகுதி. 5. தொகுத்து முடித்தல் என்னும் ஆழ்ந்தமைந்த உள்ளுறை பொருந்தியது. நூலின் இறுதியில் 'நெடுநல் வாடை' யின் செய்யுட்பகுதியும், அதற்கு நச்சினார்க்கினியர் கூறிய உரையும் தகுமுறையில் அமைத்துச் சேர்க்கப்பெற்றிருக்கின்றன.

திரு. பிள்ளையவர்கள் எதனையும் ஆழ்ந்து காணும் நுண்மதியினர். அந்நலன் இந்த ஆய்வு நூலில் நிறை தளும்பலாய்த் ததும்பி வழிகின்றது. நூலின் தலைப்பு நெடுநல்வாடை என்றிருந்தாலும் அதனை 'நக்கீரர் உள்ளம்' என்றே கூறிவிடலாம்படி அத்துணைக் கடைந்து ஆசிரியர் திரட்டியிருக்கின்றனர். தமிழும், நடையும் பேரமிழ்தமாய் உள்ளன. கருத்தின் தெள்ளிய அலைகளே இந்நூலின் தொடர்கள். எல்லாம் அழகிய சிறுசிறு சொற்றொடர்கள். உயர்ந்த தமிழும், நடையும், ஆராய்வும், வளனும் அமைந்த சிறுசிறு சொற்றொடர்களாலான உரைநடை நூலுக்கு இந்நூல், தலைசிறந்த இலக்கியம் எனலாம்.

ஆயினும், நூல் முற்றிலும் ஒரே வகையாய்ச் சிறு சிறு தொடர்களாலோ அல்லது பெரிய பெரிய தொடர்களாலோ அமைவது, இயல்பான நடையாகாது. கருத்துக்கும் இடத்துக்கும் எற்றபடி தொடர்களும் அமைந்தொழுகுதலே இயற்கை ஓவியமாதலோடு, கற்பார் அறிவுக்கும் முயற்சியற்ற எளிமையும், உள்ளம் அள்ளும் இனிமையும் நல்கும். வேண்டாக் கூறலால் ஆகும் விரிவும், சொல் பல்குதலும், கருத்து மயக்கமுங்கூட இதனால் குறைந்து நூல் தெளிவுறும்.

தமிழ்க்கு ஆசிரியர் சிறந்த விருந்தளித்திருக்கின்றனர். தமிழ் மாணவர் ஒவ்வொருவர் கையிலும் இந்நூல் இருத்தற்குரியது.

வையாபுரிப் பள்ளு : பழனித் திருக்கோயில் பொறுப்பாளர் திரு. ஜே. எம். சோமசுந்தரம் பிள்ளை பி. எ., பி. எல். அவர்களால் வெளியிடப்

பெற்றது. தளவாய்புரம் திரு. அ. அருணாசலம் பிள்ளையவர்கள் எழுதிய குறிப்புக்களுடன். விலை அணா 10.

திருவாவினன்குடி எனப்படும் பழனித் திருப்பதி அமைந்துள்ள நாடு 'வையாபுரி நாடு' எனவும் வழங்கப்பெறுமென்பது, இந்நூலின் முகவுரையினால் தெரிகின்றது. பழனியாண்டவராகிய முருகக் கடவுளைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு 'பள்ளு' என்னும் நாடகக் காப்பிய வகையில் இந்நூல் இயற்றப்பட்டிருக்கின்றது. ஏறக்குறைய முந்நூறு ஆண்டுகட்கு முன் இவ் வையாபுரி நாட்டின் குறுநிலமன்னராய் விளங்கிய 'வேலச் சின்னோவையன்' என்பவர் இந்நூலின் ஆசிரியர். ஆசிரியரின் தமிழ்ப்பற்றும் தெய்வ அன்பும் போற்றற்பாலன. இந்நூலைப் பற்றிய பலவகையான குறிப்புகளை இதன் முகவுரையினால் அறியலாம். இறுதியில் 'அருஞ் சொல் அகராதி' யும்; வழிபடுந் தெய்வங்கள், படித்தரம் பெற்ற கோயில்கள், நெல்களின் பெயர்கள் முதலியனவும் 'பழனித்துரை வண்ணம்' என்னுஞ் செய்யுட் பகுதியின் இணைப்பும் உள்ளன.

நாட்டில் வெளிவரும் இப் பள்ளுப் போன்ற பலவகையான இலக்கிய நூல்களால் நாட்டின் பற்பல பகுதிகளிலும் வழங்கும் சொல், குறியீடு, மரபு முதலிய வழக்குகள் பலவும் ஆராய்ந்தறியலாம். இத்தகைய நன் முயற்சிகளில் ஊக்கமெடுத்துவரும் திரு. ஜே. எம். சோமசுந்தரம் பிள்ளையவர்கள் தொண்டு பெரிதும் பாராட்டற்பாலன.

கோபாலகிருஷ்ண பாரதியார்: ஆசிரியர்: சுத்தானந்த பாரதியார். வெளியிட்டவர்; இராமச்சந்திரபுரம் அன்பு நிலயத்தார். விலை அணா 2½

சிறிய பையளவு நூல்; ௯௪ - பக்கங்கள். 'நந்தனார் சரித்திர கீர்த்தனங்கள்' இயற்றியும் இசைத்தும் புகழ்பெற்ற கோபாலகிருஷ்ண பாரதியாரவர்கள் வாழ்க்கை வரலாற்றையும் அறிவுரைகளையும் உரைநடையில் விளக்குவது.

எழுத்துமுறை நன்றாயிருக்கிறது. தமிழ்தான் இன்னுந் தமிழ்மணம் பெறவேண்டும். கருத்துக்களும் முறைகளுமே முதன்மையென்று கருதிக் கொண்டு, தூய தமிழின் இனிமையைச் சற்றும் பொருள் செய்யாது மிக எளிதாக எள்ளித் தள்ளிவிடும் இயல்பு, தமிழ்நாட்டுக்குப் பொதுமுறையிலன்றிச் சிறப்பு முறையில் ஆக்கந்தருவதாக ஆகாது. அது, 'மாந்தர் தம் உரம் சாச் செய்யும் உயர் தவத்தோடு (நற், ௨௨௯) ஒக்கும்.

செய்திகள்

திரு. வி. க. மணிவிழா

இம் மணிவிழா 25-8-43 முதல் தமிழ்த் திருநாட்டில் சென்னை கோவை, சர்க்கார் சாமக்குளம், மேலைச் சிவபுரி, வேகுப்பட்டி, நேமத்தான் பட்டி, பள்ளத்தூர், அரிமழம் முதலிய பல பகுதிகளில் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றிருக்கின்றன. சென்னையில், பல கழகத்தார் தனித்தனியாகவும்

சேர்ந்தும் விழாக்கள் நிகழ்த்தினர். சென்னையில் திவான்பகதூர் திரு. சி. எஸ். இரத்தினசபாபதி முதலியார், செட்டிநாட்டரசர், சி. இராஜகோபாலாச்சாரியார், திவான்பகதூர் டி. எம். நாராயணசாமி முதலியார், இராவ்பகதூர் சி. எம். இராமச்சந்திரன் செட்டியார், எஸ். முத்தையமுதலியார், கே. எம். பாலசுப்பிரமணியம், சென்னை மேயர் இராவ்பகதூர் சி. தாதலிங்க முதலியார், சுதேசமித்திரன் ஆசிரியர் சீனிவாசன், எஸ். சச்சிதானந்தம் பிள்ளை, கே. பாலசுப்பிரமணிய அய்யர் முதலியோர் விழாவிற் கலந்து கொண்டனர். திருவாவடுதுறை ஆதீனத்தின் சார்பில் திரு. வி. க. அவர்கட்குப் பொன்னுடை வழங்கப்பெற்றது.

இளையனூர் நல்லற மன்றம்

மன்றக் கொள்கைகளான மக்களின் அறியாமைப் பிணி ஒழித்தலையும், ஏழைகளின் பசிப்பிணி போக்கலையும் ஒருங்கே ஆற்றிவர, ஐந்தாம் ஆண்டிற்கென, அடியிற் காணும் தமிழன்பர்கள் நிருவாகக் குழுவினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இவர்கட்கு இறைவன் துணைபுரிவாராக!

தலைவர்—திரு. வித்துவான் S. பலராம நாயகர்; உதவித் தலைவர்—திரு. S. விசுவநாதம்; செயலாளர்—திரு. மு. தியாகராயன்; உதவிச் செயலாளர்—திரு. செ. ப. இராஜு; பொருட் காப்பாளர்—திரு. G. சண்முகம் பிள்ளை; காரிய நிருவாகத்தினர். (1) திரு. தி. வேங்கடேசன், (2) திரு. G. வேங்கடாசலபதி, (3) திரு. D. அரங்கநாதன், (4) திரு. T. சம்பந்தன், (5) திரு. தி. வே. கண்ணபிரான் முதலியார், (6) K. S. கோதண்டராமன்.

—தி. வேங்கடேசன்,
(உ) செயலாளர், 25-7-'43.

நக்கீரர் கழகம், சென்னை

நக்கீரர் தமிழ் இலக்கிய வகுப்பு

வகுப்பு 11

கம்பஇராமாயணம் :—தமிழகத்தின் தனித்தலைவர் திரு. வி. க. மணிவிழா நினைவாக மேற்படி இலக்கிய வகுப்பில் கம்ப இராமாயண வகுப்பு, 4-9-43 சனிக்கிழமை முதல் ஒவ்வொரு சனிக்கிழமை மாலை 6½-மணி முதல் 7½-மணிவரை மேற்படி கழகத் தமிழ்ப் புலவர் திரு. கு. பாலசுந்தர முதலியார் அவர்களால் பெத்துநாய்க்கன் பேட்டை, அம்மன் கோவில் தெருவில் உள்ள சமரச சுத்த சன்மார்க்க சங்க அருட்பெருஞ் சோதி நிலையத்தில் நடத்தப்படும்.

ஓம்

செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு-உ௦] சுபானு—புரட்டாசி (1943) [பரல்-கக

குறிப்புக்கள்

உமையாள்—இராமநாதன் திருமணம்:

செட்டிமார் நாட்டின் கொட்டையூர் வள்ளல் க. வீ. அழ. ராம. அழகப்ப செட்டியார் எம். ஏ; பார்-அட்-லா அவர்கள் தம் அருமைப்புதல்வியார் திருவளர்செல்வி உமையாள் என்பவர்க்கு ஆவணி 25-ம் நாள் (10-9-43) தம் இல்லத்தில் திருமணம் நிகழ்த்தினர்கள். அது சிறந்த வரலாற்று நிகழ்ச்சியாய் விளங்கித் தமிழ் நாட்டுக்கே ஒரு தனிப்பெருஞ் சிறப்பினை விளைத்திருக்கின்றது. நாட்டின் பெருமக்கள் திரள், பல்லாயிரவர் விருந்தினர், இடையருத இசைநாடக இயற்றமிழ்ப் பொழிவுகள், கண்டுங் கேட்டுமிராத மண்டப ஒப்பனைகள், வியக்கத்தக்க திறமையான ஏற்பாடுகள் முதலிய பெருமிதங்களோடு திருமணம் இணையற்று விளங்கியது! உமையம்மையின் திருமணம் மற்று எவ்வாறிருக்கும்?

திருமண நிகழ்ச்சிக்கு ஒரு முடிசூட்டு விழாவைப்போல் நிகழ்ந்த அருமைப்பாடு ஒன்றும், இங்கே கருதுதற்குரியது. மணமக்களையும் வள்ளல் அழகப்பரவர்களையும் வாழ்த்திக் கொட்டையூர் நகரத்தார் ஒரு பாராட்டுக் கூட்டம் நடத்தியதே அது. செட்டிநாட்டரசர் அண்ணாமலை வள்ளலவர்கள் தலைமையில் அது நிகழ்ந்தது. மகாமகோபாத்தியாய பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார் முதலிய பெருமக்கள் பலரும் ஒருங்கு குழுமியிருந்தனர். தலைமையுரையில் செட்டிநாட் டரசரவர்கள்,

'வள்ளல் அழகப்ப செட்டியாரவர்களைப் பாராட்டும் இக் கொண்டாட்டத்தில் நான் கலந்து கொள்வதைப் பெருமையாகக் கருதுகின்றேன். திருமண நிகழ்ச்சி ஒப்பற்றது; இவ்வளவு சிறப்பு வாய்ந்த ஒரு திருமணத்தை நாம் கண்டதுமில்லை! கேட்டதுமில்லை. இந்தத் திருமணம் தமிழிசை இயக்கத்திற்குப் போதரவாய் விளங்கியது. தெருவெல்லாம் தமிழ் முழக்கம். அழகப்ப செட்டியார் தாராள உள்ளம் வாய்ந்த வள்ளல். நாட்டு நன்மைகளுக்கான அறங்களை, நிலையாகப் பயன்தரும் வகைகளில், எண்ணிச் செய்துவருகிறார்கள். மக்களுக்குச் செல்வம் வருவதும் வறுமைநேர்வதும் இயற்கை. எது வரினும் உறுதியுடன், எடுத்த காரியத்தில் உழைப்பது சிறந்தபண்பு. அத்தகைய உழைப்பின் பயனாகக் கிடைத்த ஊதியத்தில் ஒரு பாகத்தை மனம் உவந்து ஈதல் அதனினும் சிறந்த பண்பாகும். 'அறம்' என்று கேட்குமுன்பே 'தந்தேன்' என்று வழங்குபவர் அழகப்ப செட்டியார். பல அறங்கள் செய்திருக்கின்றார்கள். இத்தகைய வள்ளலால் நம் இனத்தார்க்கும் பெருமை மிகுகின்றது; நாடு புகழடைகின்றது. இவர்களைப் பாராட்டுவது நமது கடமை. இவர்களும், மணமக்கள் உமையாளும் இராமநாதனும் எல்லா நலங்களும் மேன்மேலும் பெருகிப் பற்பல நற்காரியங்களைச் செய்துகொண்டு நீடூழி வாழ்ந்து விளங்கிவருமாறு இறைவனை வழுத்துகின்றேன்'

என்று அன்புடன் கூறி வாழ்த்தினார்கள். பின்பு மகாமகோபாத்தியாய முதுபெரும் புலவர் பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியாரவர்கள், காலத்துக்கும் இடத்துக்கும் தமது புலமைப் பாட்டுக்கும் ஏற்றபடி, உள்ளங் கவரும் அரிய சொற்பொழிவு ஒன்று நிகழ்த்தினார்கள்.

'இன்று, கொடைவள்ளல் கொட்டையூர் அழகப்ப செட்டியாரவர்களைப், பெருங்கொடை வள்ளலும் உலகம் புகழும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தை நிறுவியவர்களுமான செட்டிநாட்டரசாவர்களே தமது வாயால் 'வள்ளல், வள்ளல்' என்று பன்முறை வாழ்த்திய பிறகு நான் என்ன சொல்ல இருக்கிறது? எனது புலமைத் திறத்தால் எதாவது கூறலாமென்றாலும், 'வள்ளல்' என்ற சொல்லில் எல்லாம் அடங்கிவிட்டதே.

'சிறந்தோன் ஒருவன் உலகிற் பெறவேண்டிய பேறு ஒன்று உண்டாயின், அது புகழேயாகும். கடமையைச் செய்துகொண்டு போவாரைப் புகழ் தானே தேடிவந்து அடையும். அழியும் ஊனுடம்பைக் கொண்டு, அழியாத புகழுடம்பைப் பெறுதலே மாண்பு.

'தொல்காப்பியத்தில் கல்வி, தறுகண், இசைமை, கொடை எனச் சொல்லப்பட்ட பெருமிதம் நான்கு. இந் நான்கு பெருமிதங்கட்கும் இலக்

கியமாக விளங்குபவர் வள்ளல் அழகப்ப செட்டியாரவர்கள். நம் நகரத்தார் களிலேயே முதல் எம். ஏ. இவர்கள்தாம்; அஞ்சாநெஞ்சம் படைத்தவர் களாதலால் தறுகண்மையும் உள்ளவர்கள். செல்வத்திற்கு 'வெறுக்கை' என்று ஒரு பெயர் உண்டு. நல்லோருக்குச் செல்வம் வந்ததும் அவர்கள் அதை நோக்கிச், 'செல்வமே, நீ ஓரிடத்திலும் நிலைப்பதில்லை; நீயாகப் போய்விடுவதற்குள் நானே உன்னை நிலைத்துநிற்கும் நற்காரியங்களுக்குப் பயன்படுத்தி விடுகிறேன்' என்று தம் கையை விட்டுத் தள்ளிவிடுகிறார்கள். ஓர் 'விழாத் திருவுருவம் போல் சுற்றிக்கொண் டிருக்கும் செல்வத்தை அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் என்னுங் கருவறையில் அசையா திருக்கும்படி நிலைநிறுத்திவிட்டார்கள்.' ஈதல் இசைபட வாழ்த' லாதலால், இசைமைக்கும் அவர்கள் உரியவர்களானார்கள்.

'நம் இனத்தார்க்கு நாட்டுக்கோட்டை நகரத்தார் எனப்பெயர் வழங்கு கின்றது. காரணம் தெளிவாக விளங்கவில்லை. 'நாடு, கோட்டை, நகரம்' என்னும் மூன்றும் அரசர்க்கே உரியன; பிறர்க்கு இல்லை. ஆனால், செட்டி நாட்டரசரவர்களால் அந்தப் பெயர் நமக்கு உரிமையாயிற்று. அரசர்க்குரிய அம் மூன்றுள், நடுவாக உள்ளது கோட்டை. இப்போது கோட்டையூர், தக்கோரைப் பாராட்டும் சிறந்த நகரமாயிருக்கின்றது. சுற்றத்தாரால் ஒருவர் பாராட்டப் பெறுவது சிறந்த பெருமை. தேவர்கள் கூட ஒரு வரைத் தொழுவார்கள்; சுற்றத்தார் தொழுவது அருமை. இங்கே, சுற்றத் தார் ஒற்றுமையுடன் பாராட்டுதல் போற்றுதற்குரியது. ஒரு வள்ளலைப் பாராட்டுவதற்கு அவர்க்கு முன்பே வண்மையிற் பழகிய ஒருவர் தலைமை ஏற்பதும் மிகப் பொருத்தமாயிற்று.

'சிறந்த தந்தையைப் பெறுதல் ஓர் உயர்ந்த நற்பேறு. அத்தகைய பெரும் பேற்றைப் பெற்றிருக்கும் மணமக்களும், வள்ளல் அழகப்பரவர் களும், செட்டிநாட்டரசரவர்களும், கொட்டையூர் நகரத்தாரும் நீடினிது வாழ்கவெனத் திருவருளை இறைஞ்சுவன்.'

திரு. பண்டிதமணியவர்கள், இடையே தமிழிசை வளர்ச்சி களைப் பாராட்டி, மாறுபட்டோர் கருத்துக்களைக் கண்டித்து நன் முடிவுகளும் வழங்கினர்.

அடுத்துப் பல நிகழ்ச்சிகட்குப் பின், **வள்ளல் அழகப்ப செட் டியாரவர்கள்**, தம்மையும் மணமக்களையும் பாராட்டிய அரு மைக்கு நன்றியுரை பின்வருமாறு வழங்கினார்கள்.

'தமிழில் பேசுவதென்றாலே எனக்கு அச்சம்; அதிலும், பண்டித மணி முதலியோர் பேசிய பின்பு நானும் பேசவேண்டியிருத்தலை நினைத்

தால், இந்த இடத்தை விட்டு எங்கேயாவது ஓடிப்போய்விடலாமா என்று தோன்றுகின்றது. இதனோடு செட்டிநாட்டரசரவர்கள் என்னை 'வள்ளல்' எனப் பாராட்டிய அச்சமும் ஒன்றுசேர்ந்து விட்டது. பனிக்கட்டி தண்ணீரில் மிதக்கும்போது அதன், கால் பாகந்தான் வெளியில் தெரியும். அதைப்போல, செட்டிநாட்டரசரவர்கள் செய்துள்ள அண்ணாமலைப் பல்கலைக் கழகமாகிய பேரறம் வெளியே தெரிகின்றது. வெளியில் தெரியாமல் அவர்கள் செய்துள்ள அறங்கள் அதைப்போலப் பலமடங்கு மிகுதி. செட்டிநாட்டரசர் நம் நாட்டுக்கே ஒரு விளக்கு. அத்தகைய மாட்சியாளர் என்னை 'வள்ளல்' என்று மிகையாகக் கூறியிருப்பினும், அவர்கள் அளித்த அதனை ஒரு வாழ்த்தாக ஏற்று அவர்கட்கு நன்றி தெரிவித்துக்கொள்கின்றேன். நான் ஒரு குட்டி வள்ளல். அரசரவர்கள் இமயமலையைப் போன்ற வள்ளலாராவார்கள். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துக்கு இன்னும் வேண்டுமானாலும் தர எனக்கு விருப்பம். தமிழிசை வளர்ச்சிக்கு நம்மால் ஆவனவெல்லாம் செய்யவேண்டும். செட்டிநாட் டரசரவர்கள் தமிழுக்கும், தமிழிசைக்கும் அரும்பாடு பட்டு வருகிறார்கள். நான் மலையாள நாட்டில் தொழில் செய்பவனாதலால் அந் நாட்டிலுந் தமிழ் வளர்ச்சிக்கென ஒன்று உதவினேன். அந்தத் தொகையைப் பயன்படுத்துமிடத்துச், செட்டி நாட்டரசரவர்கள் பண்டிதமணியவர்கள் ஒத்தாசையையும் பெற்றுக்கொள்ளும்படி திருவனந்தபுரம் பல்கலைக் கழகத்திற்கு எழுத இருக்கிறேன். பண்டிதமணியவர்களைப் பற்றி நான் மிகுதியாகக் கேள்வியுற்றிருக்கிறேன். இன்று இவர்கள் சொற்களைக் கேட்ட பிறகுதான் தமிழில் இவ்வளவு கருத்துக்கள் இருப்பது எனக்குத் தெரிகிறது. பண்டிதமணியவர்களால் நம் இனத்துக்கே பெருமை. அவர்களைப் பேணி வருகின்ற நம் அரசரவர்களுக்கு நாம் நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். இந்தப் பாராட்டுக் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்த கொட்டையூர் நகரத்தார்க்கு என் சார்பாகவும் மணமக்கள் சார்பாகவும் நன்றியறிதலை அறிவித்துக் கொள்கின்றேன்.'

உமையாள்-இராமநாதன் திருமணம் இங்ஙனமெல்லாம் தமிழ் மொழி, தமிழிசை, தமிழ்ப் பெருமக்கள் பெருமையில் வந்து தாவி இனிது நிறைவேறியது. 'தமிழ் நாட்டுத் திருமணம்' என்னும் பெயர்க்கும் மிகப் பொருத்தமாயிற்று.

அறிஞர்க்குப் பட்டம் :—

திருத் . தருமையாதினத் தலைவர்ரவர்களின் பத்தாண்டு ஆட்சி நிறைவின் . சிறப்புவிழாக் காலத்தில், . மொழி நூலை

சமயம் முதலிய துறைகளில் தொண்டு செய்துவரும் அறிஞர் சிலர்க்குப் பட்டங்களும், பொற்பதக்கம் முதலியவைகளும் ஆதீனச் சார்பில் வழங்கப்பெற் றுள்ளன. ஆதீனத் தலைவரவர் களின் இந்த அருளிச்செயல் மிக்க மகிழ்ச்சி தருகின்றது.

தத்தங் கடமைகளைச் செய்துவரும் அறிஞர்களைப் போற்றிக் கொள்ளும் மேதகவு இதனாற் பெறப்படுகின்றது. ஊக்க மும் ஆக்கமும் நாட்டில் மேலுமேலுந் தழைத்து நலம் பல விளைதற்கு இஃது ஏதுவாகும். செய்வோர் தொண்டுகள், நாட் டில் நன்கு பரவுதற்கும் இது வாயில். பட்டம் பெற்றிருக்கும் அறிஞர்கள் தக்கோர்; அவர்கள் தத்தம் தொண்டுகளைச் சிறக்கச் செய்துகொண்டு, தருமைத் தலைவரவர்களின் தண்ணளி நினைந்து, மேன்மேலும் இத் தமிழ்ச் சைவ நன்னாட்டை உயர்த்தி வாழ் வித்துத் தாமும் விளங்கிவருகவென விரும்புகின்றோம்.

டாக்டர் இலட்சுமணசாமி முதலியார் :

சென்னைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராய்த் திகழும் திரு. முதலியாரவர்கள் சென்ற திங்கள் இறுதியில் சென்னை முத்தமிழ்ச் சங்கத்தின் திறப்புவிழா நிகழ்ச்சியில் தலைமை யேற்றுத், தமிழைப் பற்றிச் சில அரிய கருத்துக்களை அன்புடன் வெளியிட்டிருக்கிறார்கள். அவை வருமாறு :

'தமிழ்மொழி, காலத்துக்குக் காலம் வளர்ந்து வரும் புதிய கருத்துக்களையும் கலையுணர்வுகளையும் எளிதாகவும் விளக்கமாகவும் பேச்சிலும் எழுத்திலும் வெளிப்படுத்தத் தக்கபடி இயங்கி வர வேண்டும். தமிழ் இலக்கியங்கள் மக்களிடையே நன்கு பரவ வேண்டும்; பிற திராவிட மொழிகளில் மொழிபெயர்க்கப் பெறு தலும் வேண்டும்.

'நம் நாட்டு இளைஞர்களிடம் தக்க அறிவாற்றலும் ஊக்க மும் முயற்சியும் நிரம்ப உள்ளன. இந்தியாவில் சுற்றுப் பய ணஞ் செய்த 'பீவர்லி நிக்கோலசு' (Beverly Nichols) போன்ற வெளிநாட்டார், இந் நாட்டு இளைஞர்களிடம் இவ்வியல்புகள் குறைவாயிருக்கின்றன என்று கருதுவது பொருந்தாது. நெருங்கிப் பழகுவோர், இவ் வியல்புகள் அவர்களிடம் நிரம்ப உள்ளதைக் கண்டுகொள்வர். மறைந்து தோன்றும் ஆற்றல்கள்

செயலுறுதற்கேற்ற காலங்களை அவர்கட்கு வழங்கிப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

'தமிழ்மொழி மிகவும் பழமையானது. பிறவற்றின் உதவி வேண்டாமல் தானே இயங்கும் ஆற்றலுடையது. தமிழ், இளைஞர்களின் உள்ளத்தைக் கவரும்படி சுவையான எளிய வடிவத்தைப் பெற வேண்டும். கல்லூரி மாணவர்கள் பிற பாடங்களை விரும்பி ஏற்றுக் கொள்கின்றனர்; தமிழில் தயக்கங் காட்டுவது வழக்கமாயிருக்கின்றது. தமிழ் வகுப்பிற் கவர்ச்சியில்லை. மாணவர்கள் உள்ளத்தில் சுவையூட்டுதற் கேற்ற இலக்கியங்களைத் தமிழிற் கொண்டுவருவது அதற்குத் தீர்வு தரும். தமிழ் நூல்களை அவற்றின் உயர்ந்த பழைய நிலையிலேயே வைத்திருப்பதில் பயனில்லை. பல்கலைக் கழகத்தின் தமிழாராய்ச்சித் துறையிலும், ஆங்கில நூலாசிரியர்களின் வரலாறுகளைப் போலத் தமிழ் நூலாசிரியர்களின் வரலாறு முதலியவற்றைச் சுவையான முறையிற், கொண்டுவரும்படி கேட்டிருக்கின்றேன். இந்திய மொழிகளுக்குப், பிறமொழிகளுக்குள்ள தகுதிகள் பல்கலைக் கழகத்தில் அமைக்கப்பெற்றுள்ளன.

'மொழி ஏனை எல்லாவற்றையும் போல வளர்ச்சியும் விரிவும் அடையவேண்டும். பழைய நிலையிலேயே மொழியைத் தனிப்படுத்தி விடுதல் ஆகாது. மனிதன் பலவற்றின் தொடர்பினால் வளர்ச்சியும் முற்போக்கும் அடைதலைப் போலத், தவிர்க்க முடியாத நிலையில் அமையும் இயற்கைத் தொடர்புகளோடு, மொழி விரிவடைதல் வேண்டும். அவ்வக்காலத்திலும் அது பயனுள்ள மொழியாகக் கையாளப்பெற்று வருதல் வேண்டும்.

'தமிழைப் பயில்வதோடு பிற மொழிகளையும் ஊக்கமுடையோர் பயிலுதல் நல்லது. ஆனால், கட்டாயப்படுத்திப் பிறமொழிகளைப் பயிலச் செய்வது நன்றாகாது. நாட்டில் தாய்மொழிக்கு வேறான பொதுமொழியொன்று மக்களுள் ஒற்றுமையை உண்டுபண்ணும் என்னுங் கருத்தில் எனக்கு நம்பிக்கையில்லை. அக் கொள்கை உண்மையானால், வடநாடு ஒற்றுமையுடையதாய் இருக்கவேண்டும்; ஆனால் அப்படி இல்லை.

'புதிய முறையில் தமிழ்க்கு ஆக்கந் தேடும் வகையில், எல்லாரும் பண்பும் அமைதியுங்கொண்டு விளங்குதல் கட்டாயமாகும்.'

திரு. முதலியாரவர்கள், தமிழ் வளர்ச்சிக்குத் தக்க வழி வாயில்களை அறிவித்திருக்கின்றார்கள். அவை அத்தனையும் பொன்னுரைகளாயுள்ளன. இளைஞர்கள் இயல்பையும் இடையே குறித்துள்ளனர். தக்க நன் முயற்சிகள் பெருகியெழுந்து தமிழகம் முன்னணியில் திகழவும், சென்னை முத்தமிழ்ச் சங்கம் சிறந்தோங்கவும் திருவருள் உதவுக!

திரு. வி. க. மணி விழாவில் ஓர் அரிய நிகழ்ச்சி :

மணிவிழாக் கழகத்தினர் அமைத்த சில ஏற்பாடுகளுள், (Rt. Rev. M. Hollis, Lord Bishop of Madras.) சென்னைக் கிறித்தவத் தலைமைக் குரு ஆலிசு என்பாரைக் கொண்டு, 'கல்வியினும் வாழ்க்கையினுக் தாய்மொழி' என்னும் பொருள் மேல் ஓர் அரிய விரிவுரை நிகழ்வித்த அரிய நிகழ்ச்சி கருத்திருத்தற் பாலது. கவர்ச்சியும் பயனும் இது மிக விளைத்தது. மணிவிழாவில் நிகழ்ந்த இச் சொற்பொழிவு மணிப்பொழிவாய் விளங்கியது. சில கருத்துக்கள் வருமாறு :

' அயல் மொழிகளைக் கற்பதன் உண்மையான நோக்கம், எப்போதும் தம் தாய் மொழியைச் செழுமைப்படுத்துவதாகவே இருக்கவேண்டும். அயல்மொழிகளிற் பழகிய புதிய கருத்துக் களில் தேர்ந்து, தம் தாய் மொழிக்குப் பயன்படுகின்ற சிலர் வாயிலாகவே, நாட்டு மக்களின் கல்வி மேம்பாடடை கின்றது.

' கல்வி இருவகைப்படும். ஒன்று, எண்ணும் ஆற்றலைப் பெறுதல். இது முதன்மையாகவும் சிறப்பாகவும் கருதுவதற் குரியது. மற்றொன்று: அவ்வாற்றல் மேன்மேலும் வளர் வதற்கு அடிப்படையாகத் தேவையான, கருத்துக்களைத் தொகுத் துக் கொள்ளுதல்.

'கல்வியின் தொடக்கம், தாய்மொழியில் இருக்கவேண்டும். அதற்கு ஏற்றபடி தாய்மொழிக் கல்வி விரைந்து வளர்ச்சிபெற வேண்டும். இது, எண்ணும் ஆற்றலை மக்களுக்கு நன்றாக உதவும். இதனால், புதிய ஆய்வுகள் கண்டுபிடிக்கப்பெறும்.

' கல்லூரிகளினும் பள்ளிகளினும் மாணவர்கள், இன்னும் கருத்துக்களைத் தொகுக்கவே மிகுதியாக முயல்கின்றனர் ; புதிய

புதிய வகையாக-எண்ணும் ஆற்றலைப் பெறுதல் குறைவாகவே இருக்கின்றது. அதற்குக் காரணம், மிக இளமையிலிருந்தே ஏதாவதொரு மொழியை அரைகுறை யறிவாகப் பழகி, அம் மொழியிற் கற்கும் கருத்துக்களை, எண்ணும் ஆற்றலில் கையாளத் தெரியாமையேயாகும். அவர்களுக்குக் கற்பிக்கும் ஆசிரியர்களின் நிலையும் பெரும்பாலும் இங்ஙனமே உள்ளது. இந் நாட்டில் இப்போதுள்ள கல்விமுறையில் தேர்ந்த, பெருங்கல்வியாளர் இல்லாமலில்லை. ஆனால், பயன்படத்தக்க நிலையில் அவர் மிகச் சிலராவர்.

'இந் நாட்டில், படித்த மக்களுக்கு உண்மையான அடையாளம் ஆங்கிலத்திற் பேசுவதன்று. எல்லாவற்றிற்கும் முதலாக, அவர்கள் நல்ல தமிழிற் பேசுவதேயாகும். இப்படிச் சொல்வதனால், மக்கள் தம் தாய்மொழிக்கு வேறாக ஒரு மொழியையோ அல்லது பல மொழிகளையோ கற்றுக்கொள்வதற்கு மாறு கூறியதாக ஆகாது. அறிந்த அனைத்தையும் தமக்கு உரிமையான மொழியில் அழகாக வெளியிடத்தகுந்த திறமை இருக்கவேண்டுமென்பதே கருத்து. கற்று வல்லோரும் ஆராய்ச்சியாளரும் இந் நாட்டில் ஆங்கிலத்திலன்றித் தம் தாய்மொழியில் கருத்துக்களை வெளிப்படுத்திப் பழகாமையினால், அவர்களும் பிறரும் இயல்பாகக் கையாளும் அளவுக்குத் தாய் மொழியானது போதிய வளர்ச்சி பெறுமற் போகின்றது. கலைகளும் இலக்கியங்களும் இக் கேட்டினால் இடர்ப்படுகின்றன.

'நாட்டின் கல்வி முன்னேற்றத்திற்கு, நாட்டின் தாய்மொழிப் புலவர்களே திறவுகோல். ஆனால் இந்தியாவில் இக் காலக் கல்வி முறையில் அவர்கள் புறக்கணிக்கப்படுகின்றார்கள். அது கூடாது; அப் புலவர்களைப் புதிய அறிவு முறையிலும், பல்வேறு துறைகளில் அமைந்த புதிய ஆராய்ச்சிகளிலும் சிறக்குமாறு செய்து, நாடு தன்னை விளக்கிக்கொள்ளவேண்டும். நாடு அவர்களை வெறும் மொழிப் புலவர்களாக வைத்துச், சிறுவர்களின் பள்ளித் தேர்வுகளுக்குரிய பாட நூல்கள்போல்வன எழுதிக்கொண்டிருக்குமாறு விட்டுவிடுதல் நன்றாகாது. வளர்ச்சிக்குரிய எதிர்கால உலகத்திற்குத் தேவையானபடி, கருத்திலும் வாழ்க்கையிலும் மக்களுக்கு உதவும் வகையில் அவர்கள் விளங்கி

யிருக்கவேண்டும். ஆடவர்க்கும் மகளிர்க்கும் இன்றியமையாத எல்லாத் துறைகளிலும் தகுதி வாய்ந்த நூல்களைத் தம் தாய்மொழியில் எழுதியுதவுதற்கு அறிஞர்கள் தம்மைத் தகுதியுடையவர்களாகச் செய்துகொள்ளுதல் கட்டாயமாகும். கலைகளைத் தாய்மொழியிலன்றி ஆங்கிலத்திற் பயில்வதையும், எண்ணங்களைத் தாய்மொழியில் எண்ணுவதும் வெளிப்படுத்துவதும் இடராயிருக்கின்றன என்று கூறித் தப்பிக் கொள்வதையும் தமக்கு ஒரு சிறப்பாகக் கருதி வீண்பெருமை கொள்வதிலிருந்தும் அவர்கள் நீங்கிக்கொள்ள வேண்டும்.'

குரு ஆலிசு அளித்திருக்கின்ற இக் கருத்துக்களுக்கும், அவை கிடைக்குமாறு செய்த மணி விழாக் கழகத்தினர்க்கும் தமிழ் நாடு நன்றி மிக்கதாயிருக்கும். திரு. வி. க. அவர்கள் மணிவிழா நிகழ்ச்சியில் இச் சிறந்த சொற்பொழிவு, வரலாற்றுத் தொடர்புடையதாய் நிலைபெற்று மிளிரும் மாட்சியுடையது. தமிழன்னையின் திருவோலக்க நாள் அண்மையிலேயே உள்ளது.

தாய்மொழிக் கீர்த்தனை

இராகம், கரகரப்பிரியா] தாளம், ஆதி.

பல்லவி

ஒருவரையுங் குறை கூறாதே—உலகில்
உண்மை வழிநிலை மாறாதே நெஞ்சே (ஒருவ)

துணைப் பல்லவி

மருளும் மனத்தினில் மாசுதனை யகற்றி
திருவும்நல் வாய்மையும் திறமுட னேபெற (ஒருவ)

சரணம்

பொய்களை மெய்யெனப் புரட்டிப்பே சாதே
பொறுமையை யிழந்துநீ புலம்பிவா டாதே
உய்வகைக ளறியா உளம்நிலை யாதே
உயர்வுதாழ்வு பேசி உடல்வளர்க் காதே. (ஒருவ)

கண்டதே காட்சியாய்க் கருத்திற்கொள் ளாதே
காலநிலைக் கேற்பக் கோலங்கொள் ளாதே
கண்டவர் புகழ்வதில் காதல்கொள் ளாதே
கடமையை மறந்துநீ களிப்படை யாதே. (ஒருவ)

—இசையரசு. தண்டபாணி தேசிகர்.

சீவக சிந்தாமணி

[பண்டிதமணி]

ஒரு மொழியின் பெருமையை அறிந்துகொள்ளுதற்குக் கருவி அம் மொழிக்கண் அமைந்த சிறந்த இலக்கியங்களே ஆகும். இலக்கியங்கள் மதிநுட்பமும் மொழிப்பயிற்சியும் நிரம்பப் பெற்றுப் புலமை கைவரப்பெற்றோரால் புறவுலகத்தினும் அக வுலகத்தினும் நுனித்துணர்ந்து நுகர்ந்த பல பொருளுண்மைகளைச் சுவைமிக்க செய்யுட்களானும் உரை நடையானும் புலப்படுத்தி இயற்றப்படுவனவாம். செய்யுள்நடையில் அமையும் இலக்கியங்களையே நம் முன்னையோர் பெரிதும் கையாண்டனர். விரிந்த பொருள்களைச் சுருங்கிய சொற்களிலடக்கி, வெளிப்படையாகவும் குறிப்பாகவும் பொருள் புலப்படுத்தி, ஓசை நயத்துடன் கற்பார்க்கு இனிமை பயத்தலானும், கற்றவர் நினைவிலிருத்திக் கொள்ளுதற்கேற்ற இயல்புண்மையானும் செய்யுளிலக்கியங்கள் பெரும்பானும் தழுவப்பட்டன. செய்யுள்நடைபோல் பொருட் செறிவுள்ள இயல்நூலாகிய இறையனார் களவியல் போன்ற உரைநடையிலமைந்த இலக்கியங்கள் மிகச் சிலவே. தமிழிற் செய்யுள்நடையில் அகப்பொருளும் புறப்பொருளும் பற்றிச் சங்ககாலத் தெழுந்த நூல்கள் பலவுள. அவற்றுட் பெரும்பாலன தனிச் செய்யுட்களாகவே உள்ளன. அகப்பொருளின்பப் பகுதியாகிய ஆடவர் மகளிர் காதலைப்பற்றியும், புறப்பொருள்—அறமும் பொருளும் எனினும்—பெரும்பானும் பொருட்குக் காரணமாகிய வீரத்தைப் பற்றியும் கூறுவன. இவ்விருதிறத்துப் பொருள்களையும் ஒருங்கமைத்து நிகழ்ந்தனவும் நிகழாதனவும் இவ்விரண்டும் கலந்தனவுமாக ஒரு வரலாறு தழுவித் தொடர்நிலைச் செய்யுளாகப் பாடப்படுவது காப்பியமாகும்.

காப்பியத்தைத் தொடர்நிலைச் செய்யுளென்று தமிழறிஞர் கூறுவர். காப்பிய இலக்கணங்கள் முற்றும் நிரம்பப் பெற்று அழகிய இனிய சுவைமிக்க பல செய்யுட்களாற் பாடப்பட்ட தமிழ்ப் பெருங்காப்பியங்கள் ஐந்தென ஒருகாலத்து எண்ணப்

[மகாமகோபாத்தியாயர் முதுபெரும் புலவர் பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியாரவர்களால், 12-2-43-ல் திருச்சி வானொலியிற் சொற்பொழிவு செய்யப்பட்டது.]

பட்டன. அவை சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையா பதி, குண்டலகேசி என்பனவாம். இவற்றுள் முன்னையமூன்றும் அச்சின் வாயிலாக வெளிப்பட்டன. சிலப்பதிகாரமும் மணிமே கலையும் காலத்தான் முற்பட்டனவாயினும், இனிய ஓசைநயம் வாய்ந்த செய்யுட்களாக முதலிற் பாடப்பட்டதாதலின் சீவகசிந் தாமணி, எண்ணுமுறையில் முதலிடம் பெற்றது. இச் சிந்தா மணிப் பாடல்களைப் பாவினம் என்று கூறலாகாதென்றும் "கொச்சகம்" என்னும் கலிப்பாவாகவே கொள்ள வேண்டும் என்றும் நச்சினார்க்கினியர் கூறுவர்.

சீவகசிந்தாமணி என்னும் இப் பெருங்காப்பியம் பத்துப் பாட்டு எட்டுத் தொகை முதலிய முதிர்ந்த செய்யுள் நடையாலா கிய சங்கநூல்களுக்குப் பின்னரும், பெரியபுராணம் கம்பராமா யணம் முதலிய அழகிய காப்பியங்களுக்கு முன்னரும் ஆகிய இடைக் காலத்துத் தோன்றியது. இதனால் இச் சிந்தாமணி சொன்னடையாலும் பொருணயத்தாலும் சிறப்புற்று விளங்குவ தொன்று. இதனை இயற்றிய ஆசிரியர் திருத்தக்க தேவர் என் னும் பெயருடையார். இவர் சோழர் குலத்திற்றோன்றிச் சிறு பருவத்தே ஆருகத சமயத்தைத் தழுவிய துறவற நெறியுடையார் என்று கூறுவர். இன்பச் சுவையையே பெரும்பாலுந் தழுவிய இச் சிந்தாமணிப் பெருங்காப்பியத்தை இவர் பாடுதற்கு முன் னர் இவர் உள்ள நிலையை அறிதற்பொருட்டு இவருடைய ஆசி ரியர் எதிரே ஓடிய ஒரு நரியின் செயலைப் பற்றிப் பாடக் கட் டளையிட்டனரென்றும், அங்ஙனமே நரிவிருத்தம் என்னும் நூலை நிலையாமை முதலிய உயர்பொருள் தோன்றப் பாடிமுடித்தனர் என்றும், அதுகண்டு இன்பம் நுதலிய காப்பியம் பாடுதலால் இவர் ஒழுக்கம் மாறுபடாதென்று துணிந்து இந்நூலை இயற்றுவ தற்கு ஆசிரியர் உடன்பட்டு ஊக்கம் உறுத்தினர் என்றுங் கூறுவர். வடமொழியில் வான்மீகம் போலப் பெருங்காப்பி யங்களின் அமைப்பிற்கு இஃது எடுத்துக் காட்டாக விளங்குவ தாகும்.

இந்நூல் பதின்மூன்று இலம்பகங்களாக வகுக்கப்பட்டு மூவாயிரத்துக்கு மேற்பட்ட செய்யுட்களாலாயது. இக்காப்பியத்,

தலைவன் ஏமாங்கத நாட்டில் இராசமாபுரத்தில் செங்கோல் செலுத்திய சச்சந்தன் என்னும் அரசனுடைய புதல்வன் சீவகன் ஆவான். இவன் பிறத்தற்கு முன்னர் இவன் தந்தை சச்சந்தன் என்பான், தன் காதற் கிசைந்த கற்பரசியாகிய விசயை யென்பாளை மணந்து அவள் காதலின்பத்தில் ஈடுபட்டு அவ்வின்பத்தை ஒழிவின்றி நுகர்தற்கு அரசியல் தடையெனக் கண்டு அவ்வரசைக் கட்டியங்காரன் என்னும் அமைச்சன்பாற் கொடுத்து அரண்மனையில் ஒருபால் தேவியுடன் இன்பம் நுகர்ந்திருந்தான். ஓராண்டு கழிதற்கு முன்னரே கட்டியங்காரன் அரசியல் வேட்கையுற்றுப் படைவீரரைத் தன்வயப்படுத்தி அரசனைக் கொல்ல முற்பட்டான். இந்நிலையறிந்து "உரிமைமுன் போக்கியல்லால் ஒளிர்முடி மன்னர் போகார்" என்றதற்கேற்பக் கருவுற்றுத் திங்கணிறைந்த காதலியை மயிற் பொறியி லேற்றிப் புறம்போக்கி அமைச்சனோடு போர்செய்து இறந்தான்.

அரிதிற் பிரிந்து மயிற் பொறியிற் சென்ற விசயை நகர்ப்புறத்தையடைந்ததும் பகைவர் வெற்றிமுரசொலி கேட்டுச் சோர்ந்து பொறியியக்குங் கை நழுவ ஆங்குள்ள சுடலைக்கண் விழ்ந்தாள். விழ்ந்த அவ்விடத்தே அழகிய ஓர் ஆண்குழந்தையைப் பெற்றுப் பாதுகாக்க வகையின்றி வருந்திக்கொண்டிருக்குங்கால் அவள் உயிர்த் தோழி வடிவுகொண்டு வந்த ஒரு பெண் தெய்வம் தேற்ற ஆறுதல் எய்தி, அத்தெய்வம் சொல்லியபடி ஆங்குள்ள மரச்செறிவில் மறைந்துநின்றாள். அப்பொழுது அன்று பிறந்திறந்த தன் குழந்தையைப் புதைக்க ஆங்கு வந்த கந்துக்கடன் என்னும் பெரும்பொருள் வாணிகன் "ஒழுக்கியல் அருந்தவத்து உடம்பு நீங்கினர், அழிப்பரும் பொன்னுடம்பு அடைந்தது ஒப்ப" இறந்த தன் புதல்வன் உடலை ஆங்கிட்டு அருமருந்தன்ன விசயை புதல்வனைக் கொண்டு தன் மனை சென்று வருந்திய தன் இல்லாளை நோக்கி "நின்மகன் சாதலின்றும் தப்பினன்" என்று கொடுப்ப அவள் ஏற்று உவகை எய்தினள். அவ்வாணிகன் அக்குழந்தையைத் தொட்டெடுத்த போது அது தும்மிற்றாகத் தெய்வம் "சீவ" என்று வாழ்த்தியதால் அக்குழந்தைக்குச் "சீவகன்" என்று பெயரிட்டு வளர்த்து வருவாராயினர்.

இங்ஙனம் சீவகன் வசுதேவன் புதல்வனாகிய கண்ணன் நந்தகோன் மனையில் வளர்ந்ததுபோல வளர்ந்து வருவானாயி னன். பின்னர் அவன் எல்லாக் கலைகளிலும் வல்லனாய்க் காந் தருவதத்தை முதலிய பெண்கள் எண்மரை மணந்தும், தன் தந் தையின் பகைவனாகிய கட்டியங்காரனாற் சிறைப்படுத்தப்பட்டும், நண்பனாகிய தேவனொருவனால் விடுதிபெற்றும், பல அரிய துணை வர்களால் தன்னுடைய நற்றாயின் தவச்சாலையெய்தி அவள் அன் பிற்குப் பாத்திரமாகியும், மீண்டும் அப் பகைவனை அழித்துப் பழைய அரசியலைக் கைப்பற்றியும், நாட்டுவளம் பெருக்கி நங் கைமாரோடும் புதல்வரோடும் நல்வாழ்க்கையிற் றலைப்பட்டும், இறுதியில் நிலையாமை உணர்ந்து பற்றொழிந்து மூவுலகுச்சி யின் பக் கடலாகிய பரிநிர்வாணம் எய்தினன் என்ப. இஃது இக் கதா நாயகனாகிய சீவகன் வரலாற்றுச் சுருக்கமாகும்.

இனி இப்பெருங்காப்பியம் சீவகனைப் பற்றிய வரலாறு கூறு தலானும், சிந்தித்த பொருள் எல்லாவற்றையும் தரும் இயல்பின தாகலானும் 'சீவக சிந்தாமணி' என்னும் பெயருடையதாயிற் றென்ப. இன்னும் இதற்கு "மண நூல்" என்ற பெயரும் உண் டென்று கூறுவர்.

சீவகன் காந்தருவதத்தை முதலிய மகளிர் எண்மரை மணஞ் செய்துகொண்ட பகுதிகள் அவ்வப் பெண்கள் பெயரால் 'காந் தருவதத்தையார் இலம்பகம்' என்பது முதலியவாகக் கூறப்பட் டுள்ளன. அவை, 3. 4. 5. 6. 7. 8. 9. 12. பகுதிகளாகிய இலம்பகம் எட்டுமாம். ஏனைய ஐந்து இலம்பகங்களுள் முதலா வது நாமகளிலம்பகம் ஆகும். அப்பகுதியில் சீவகன் கலைகளிற் சிறந்த பயிற்சி பெற்றானென்பது முக்கியமான செய்தியாகும். அதனால் நாமகளை மணந்தான் எனக் கொண்டு அதுவும் ஒரு மணப் பகுதி யாகுமென்று நூலாசிரியர் குறிப்பிடுகின்றார்; "குழைமுக ஞானமென்னும் குமரியைப் புணர்க்கலுற்றார்" எனவும், "இருந்து பொன்னோலை செம்பொன் ஊசியில் எழுதி ஏற்பத், திருந்துபொற் கண்ணியாற்குச் செல்வியைச் சேர்த்தி னாரே" எனவும், "நாமகள் நலத்தை யெல்லாம் நயந்துடன் பருகி" எனவும் கூறிய செய்யுட் பகுதிகள் இதற்குச் சான் றாகும்.

இரண்டாவது இலம்பகத்தில் சீவகன் தன் தோழனான பதுமுகனுக்கு நந்தகோன்மகள் கோவிந்தையை மணஞ் செய்வித்தமையால் அதுவும் மணப்பகுதியாயிற்று. பத்தாம் இலம்பகத்தில் பகைவென்று அரசியலைக் கைப்பற்றிய செய்தி கூறப்படுதலின் 'மண்மகளை மணந்தான்' என்ப. இதனைப் "பணைமுகப் பைம்பொன் மாலைப் பாசிழைப் பூமிதேவி, இணைமுலை யேகமாக நுகரிய எய்தினனே" என்பதனாலறியலாம். பதினோராம் இலம்பகம் பூமகளிலம்பகம் ஆகும்; அதன்கண் அரசு கைப்பற்றி நிலவுலகத்தை ஆட்சி புரிந்த செய்தி கூறப்படுதலின் "பூமகளை மணந்தான்" என்ப. "குடையோங்கிப், பரவைமாநிலம் அளித்து களிக்கயன் மழைக்கட், பொருவில் பூமகட் புணர்ந்தனன்" என்பதனால் அறியலாம். இறுதி இலம்பகம் முத்திமகளிலம்பகமாகும். முத்தியென்னும் வடசொல் வடமொழியிற் பெண்பாற் சொல்லாதலின் "முத்தி மகள்" என்றார். சீவகன் பற்றறத் துறந்து விட்டுலகம் எய்திய செய்தியைக் கூறுதலின் முத்திமகளை மணந்தான் என்ப; இதனைக் "கேவலமடந்தை யென்னும் கேழ்கிளர் நெடிய வாட்கண் பூவலர்முல்லைக் கண்ணிப் பொன்னொரு பாகமாக....இன்பக்கடலினுள் மூழ்கினனே" என்பதனானும், "பிரிதலும் பிணியும் மூப்பும் சாதலும் பிறப்புமில்லா, அரிவையைப் புல்லி....உறையுமன்றே" என்பதனானும் அறியலாம். சீவகனுக்கு இறுதியில் வாய்த்த பெண்மகள் பிறப்பிறப்பும் பிணிமூப்பும் இல்லாதவளாயினளென்று கவிகூறிய செய்தி இன்புறத் தக்கதொன்று. இங்ஙனமெல்லாம் மணப்பகுதிகளாக அமைந்தமையின் இதனை 'மணநூல்' என்று வழங்குவாராயினர்.

இனி, இப் பெருங்காப்பியத்தில் உண்மைக் காதலின் இயல்பையும் வீரத்தின் இயல்பையும் விளங்கக் காணலாம். இன்பம் அவலம் முதலிய சுவைகளைத் தக்க இடத்திற் புலப்படுத்தியிருக்கும் அழகு பாராட்டத்தக்கது. அம்முறையே, பிற்காலக் கவிகளுக்கு வழிகாட்டியாக அமைந்ததெனலாம். அமைச்சரைப் பல்லாற்றானும் சோதித்துத் தெளிந்தபின்னரே நம்பவேண்டும் என்பது முதலிய அரசியலமைப்புக்களும், அன்பு, அருள், நன்றி மறவாமை முதலிய குணங்களால் விளையும் நன்மைகளும், பிறர்க்

கின்னு செய்தார் விரைந்து கெடுவர் என்பது முதலிய நீதிகளும் பிறவும் இதன்கண் தெளிவுற விளக்கப்பட்டுள்ளன. இக் காப்பியத் தலைவனாகிய சீவகன் உயர்ந்த குணஞ் செயல்களை உடையவனாக வருணிக்கப்பட்டுள்ளான்.

இவன்பாலமைந்த நற்குண நற்செயல்களைக் கவி பகைவன் நாவில் வைத்து, "அருள் வலி ஆண்மை கல்வி அழகு அறிவு இளமை ஊக்கம் திருமலி ஈகை போகம் திண்புகழ் நண்பு சுற்றம் ஒருவரிவ்வுலகில் யாரே சீவகன் ஒக்கு நீரார்" என்று பாராட்டியுள்ளார். அருண்முதற் சுற்றமுடைமையீருகப் பதின்மூன்று குணங்கள், நன்குணர்ந்த பகைவனாகிய கட்டியங்காரன் முகமாக வெளிப்பட்டுள்ளன வென்றால், இவன் தன்னிகரில்லாத் தலைமகன் என்பது புலனாகுமன்றோ? அருள் வலி என்னும் குணங்களுள், ஒன்று மிக்க விடத்தில் மற்றொன்று நிற்றலரிதாகும். சீவகன் அருணிறைந்த கொடைக்குணமும் அளவிகந்த உடல் வலியும் படைத்தவனென்று அவ்விரண்டு குணங்களின் பயன்களை நேரிற் கண்டோர் கூற்றாகக் கவி ஒரு சந்தர்ப்பத்தில் எடுத்துரைக்கின்றார். "கொடையுளும் ஒருவன் கொல்லும் கூற்றினும் கொடிய வாட்போர்ப் படையுளும் ஒருவனென்று பயங்கெழு பனுவனுண்ணூல் நடையுளார் சொல்லிற் றெல்லாம் நம்பி சீவகன்பாற் கண்டாம்" என்பது அப் பகுதியாகும். பாரதத்தை உணர்ந்தோர் கொடைக்குக் கன்னனையும் படைக்கு அருச்சுனனையும் எடுத்துக் காட்டுவர். இங்கே இவ்விரண்டும் நம்பி சீவகன்பாற் காணப்பட்டனவாம். தான் பிறந்த நகரத்துள்ள ஆயர்களின் பசுக்கூட்டங்களைப் பக்கத்துள்ள வேடர்கள் கவர்ந்து சென்றனராக அப்பொழுது அரசுவீற்றிருந்த கட்டியங்காரன் ஆனிரைகளை மீட்க வியலாத நிலையில் சீவக குமரன் சென்று அவ் வேடர்களை அச்சுறுத்தி ஓட்டி ஆனிரைகளை மீட்ட நிகழ்ச்சியை அறிந்தோர் இங்ஙனம் பாராட்டுவாராயினர். எளிதிற் கொல்லத்தக்க வேடர்களின் உயிரை அவர்களுக்கும் ஆனிரைகளை ஆயர்களுக்கும் வழங்கியதாலும் கொடிய அவ்வேடர்களை ஒறுத்தடக்கியதாலும் கொடைத்திறனும் படைத்திறனும் ஒருங்கு வாய்ந்தவனென்று பாராட்டப்பட்டான். இது கன்னிப் போராகும். இக்குணங்கள் மிக்கு வெளிப்பட்ட இடங்

கள் இன்னும் பலவுள ; அவை அவ்வப்பகுதியில் தெளிவுறுத்தப் படும்.

கவிச்சுவை ஒன்பதனுள் இன்பச் சுவையே சிறந்ததென்ப. திருக்குறளின் உரையிற் பரிமேலழகர் "இச் சிறப்புப் பற்றி வட நூலுட் போசராசனும் சுவை பலவென்று கூறுவார் கூறுக ; யாம் கூறுவது இன்பச் சுவை ஒன்றனையுமே என இதனையே மிகுத்துக் கூறினன்". என்பர். அச் சுவையையே பெரிதும் நுதலியது இப் பெருங்காப்பியம். இன்பம் உவகை சிருங்காரம் என்பன ஒரு பொருளனவாம். அது தோன்றுதற்குரிய நிலைக் களம் "செல்வம் புலனே புணர்வு விளையாட்டென்று அல்லல் நீத்த வுவகை நான்கே" என்ற விதிப்படி, செல்வ நுகர்ச்சியும் கல்வியறிவும் காதலின்பமும் நீர்விளையாட்டு முதலியனவும் ஆம். சீவக குமாரன் அரசகுமாரனுய்ச், சிறந்த பெரும்பொருளாள ஞகிய கந்துகன் மனையில் வளர்ந்ததனுலும், பகைவென்று அரசி யற் செல்வத்தை யடைந்து மனைவியர் மக்களுடன் வாழ்ந்ததனு லும் செல்வ நுகர்ச்சி புலனுகும். கல்விப் பயிற்சியிற் சிறந்தவ னென்பதை "நாமகள் நலத்தை யெல்லாம் நயந்துடன் பருகி" என்பதனுன் அறியலாம். சிறந்த இலக்கியங்களையும் படைக் கலத் தொழில் முதலிய கலைகளையும் இசைக் கலைகளையும் மறு மைக்குரிய தத்துவ நூல்களையும் நன்கு கற்றவன் என்பதும் யாழ்வாசிப்பதிற் சிறந்த நிபுணன் என்பதும் வரலாற்றுப் பகுதி களாலறியலாம். காந்தருவதத்தை யென்பாளோடு நடத்திய யாழ்ப் போரில் வெற்றியடைந்தது இங்கே கருதத் தக்கது. சமய நூலுணர்ச்சியும் பிறர்க்குத் தெளிவுறப் போதிக்கும் ஆற்ற லும் மிகப்படைத்தவன் என்பதற்குப் பற்பல சான்றுகள் உள் ளன. சீவகன் வழியெதிர்ப்பட்டான் ஒருவன் வினவிய வினுக் களுக்கு விடையிறுக்கு முகமாக "என் மனைவியரும் நால்வர் மக்கள் ஒவ்வாதார்தாமில்லை ஒப்பான் ஒரு மகனே நால்வர் ஒரு வயிற்றுப் பிறந்தான்" என விடை கூறினன். இவ்விடையில் நான்கு மனைவியரிடத்தினின்றும் ஒரு நன்மகன் பிறந்தான் என்று கூறக்கேட்ட அவ் வழிச் செல்வோன் நகைத்து "மனைவி யர் நால்வரிடத்தினின்றும் ஒரு மகன் பிறத்தல் எப்படிப் பொருந் தும்" என்று கேட்கச், சீவகன் கூறிய விடை பாராட்டத் தக்கது.

"நற்றானஞ் சீலம் நடுங்காத் தவமறிவர் சிறப்பிந் நான்கும்
மற்றாங்குச் சொன்ன மனைவியரிந் நால்வரவர் வயிற்றுட் டோன்றி
யுற்றான் ஒருமகனே மேற்கதிக்குக் கொண்டுபோ முரவோன் றன்னைப்
பெற்றார் மகப்பெற்றார் அல்லாதார் பிறர்மக்கள் பிறரே கண்டீர்."

இச் செய்யுளால் தானம் சீலம் தவம் இறைவர்பூசனை ஆகிய இந் நான்கும் மனைவியர் என்பதும் இந்நால்வர் வயிற்றினும் பிறந்து பயன்றருவான் நல்வினையாகிய மகன் ஒருவனே என்பதும், இப் புண்ணிய குமரனைப் பெற்றாரே நன்மகப் பேறுடையார் என்பதும் புலனும்.

இனிக் காதலின்பமும் நீர்விளையாட்டு முதலிய மகிழ்ச்சியும் இக் காப்பியத் தலைவன்பாற் பெருக்கமாகக் காணலாம். மகளிர் எண்மரை மணந்து அன்னாரோடு நுகர்ந்த இன்பங்களே இவ் வுவகை நிலைக்களங்களுக்குப் போதியனவாகும். கேமசரி என்னும் ஒரு பெண்மகள் இல்லத்திற்கு அவள் தந்தையால் அழைக்கப்பட்டுச் சென்ற சீவகன் அப் பெண்மணியின் காதலுணக்கம் தனக்குப் புலப்பட்ட முறையைக் கூறுமுகமாக எழுந்த செய்யுள் சுவைத்துணர்ந்து இன்புறத்தக்கது;

காதன்மை கண்ணுளே யடக்கிக் கண்ணெனும்
தூதினாற் றணிபொருள் உணர்த்தித் தான்றமர்க்கு
ஏதின்மை படக்கரந் திட்ட வாட்கணேக்
கோதையீ ரமுதமும் உலகும் விற்குமே.

என்பது அப் பாடலாகும்.

அந் நங்கையர் திலகம் சீவகனுடைய அழகுமிக்க தோற்றப் பொலிவில் ஈடுபட்டுத் தன்னுள்ளத் தெழுந்த காதற்பெருக்கை ஏனையோர், அறியாவாறும், சீவகன் மாத்திரம் அறிந்து கொள்ளவும் எங்ஙனம் புலப்படுத்தாள் என்பதை இச் செய்யுள் சுவைபடத் தெளிவுறுத்துகின்றது. அவள் தன் அளவிகந்த காதலையெல்லாம் தன் கண்ணுளே அடக்கினளாம்; உள்ளத்தே தோன்றி மிக்கதால் இடம் பெறாமல் வெளிப்படுதற்கு வாயிலாகிய கண்ணில் அடக்க நேர்ந்தது. பகைமையும் கேண்மையும் கண்ணுரைக்கும் ஆதலின் கண்ணிடனுதல் பொருத்தமே. இத் துணைக் காதல் நிறைவுடையேன், என்னை மணந்து கோடல்

வேண்டும் என்று தான் றுணிந்த பொருளை அக்கண்ணுகிய தூதினல் சீவகனுக்கு உணர்த்தினளாம். ஆகவே அவன்பாற் சென்ற கடைக்கண்ணேக்கம் அவள் உண்மைக் கருத்தைப் புலப் படுத்தி அவனைத் தன்வயப்படுத்திய தென்பது புலனும். இங்ஙனம் இருமுதுகுரவர் முதலிய உறவினர் சூழவிருந்த நிலையில் இவள் தன் காதற் பார்வையை அவன்பால் செலுத்தினளென்றல் அஃது அவர்க்குப் புலப்படாதோ எனின் அது குறித்தே "தான் தமர்க்கு எதின்மைபடக் கரந்திட்ட வாட்கணேக்கு" என்று கூறப்பட்டது. இவள் கட்பார்வை சுற்றத்தார் அயன்மை யென்று கருதும்படி சீவகன்பால் மறைவிற் செலுத்தப்பட்ட தாம். தனக்கு மாத்திரம் உண்மையைப் புலப்படுத்திப் பிறரறி யாவாறு மறைக்கப்பட்ட அவள் நோக்கின்திறமையை வியந்து சீவகன் இந்நோக்கம் பாற்கடலிற் றேன்றிய அமிழ்தத்தையும் உலகையும் தனக்கு விலையாக விற்கும் என்று கருதுவானுயினன். உவகைச் சுவையில் "விப்பிரலம்பம்" ஒன்று வடநூலிற் கூறப் படும் காதலர் பிரிவிரக்கம் இந்நூலிற் பலவிடங்களிற் சுவை நலந் தோன்றக் கூறப்பட்டுள்ளது. இஃது அவலச்சுவைபோற் காணப்படினும் முடிவில் இன்பத்தில் நிலையுறுதலின் உவகை யென்றே கொள்ளல் வேண்டும்; இதனையே உவகையிற் சிறந்த கூறுகக் கவிகள் மேற்கொண்டனர்.

இதுகாறும் கூறியவாற்றல் காப்பிய இலக்கணங்களெல்லாம் நிரம்பப் பெற்றுப் பயில்வார்க்குப் பல்வகைச் சுவைகளாலும் அறிவின்ப விருந்தளித்து மகிழ்வுறுத்துவது இச் சீவக சிந்தாமணி என்பது போதரும்.

இறைவன்

உவகை யாக்குங் கடவுளெவன்
ஊட்டுங் கடவு ளெவன்அருளால்
அலகில் விளையாட் டியற்றியெலாம்
அளிக்குங் கடவு ளெவன்நாளும்
இலகு கதிராய் மதியமாய்
இயங்கு நிலநீர் வளியாகித்
துலங்கு தீயாய் வெளியான
தூய ஒருவன் அவன்அன்றே! (1)

—கிளிக்காட்டு இறையோளியன்.

1. சடுகுடு

[வித்துவான் ஞா. தேவநேயன், B. O. L.]

[தமிழ்நாட்டு விளையாட்டுக்கள் (1) போர்வினைபற்றியனவும், (2) தொழின்முறைபற்றியனவும், (4) சிறப்பு நிகழ்ச்சிபற்றியனவும், (5) உடற்பயிற்சியொன்றே கருதினவுமாக ஐவகை. சடுகுடு போர்வினைபற்றியது. விளையாட்டுக்கள் பொதுவாய் ஆடுவார் பால்பற்றி ஆடவர் விளையாட்டு, பெண்டிர் விளையாட்டு, பொது விளையாட்டு என மூவகைப்படும். அவற்றுள் சடுகுடு ஆடவரது.]

சடுகுடு என்னும் விளையாட்டு சடுபுடு, பலி, சடுகுடு, பலி சடுகுடு, பலிச்சப்பிளான், குட்டடி எனத் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் வெவ்வேறு பெயரால் வழங்கிவருகின்றது. இப் பெயர்களில் பலி சடுகுடு என்னும் இருசொற்களும், சடுகுடு விளையாடுமுறையும், இவ் விளையாட்டைப் போர்வினை பற்றியதென்று துணிதற்கு இடந்தரும்.

பண்டைக்காலத்தில், சில தமிழரசர் தம் நாட்டை விரிவாக்கவும் தம் மறச்சிறப்பைக் காட்டவும் பிற அரசரோடு போர் செய்யக் கருதியபோது, காரணமின்றிப் போர் செய்யுங் குற்றத்தை மறைத்தற்பொருட்டுத் தாம் படையெடுத்துச் செல்லக் கருதிய நாட்டிலுள்ள ஆக்களைத் தம் மறவரை ஏவிக் கவர்ந்து கொண்டுவரச்செய்வதும், அவ்வாக்களை மீட்டற்கு அவற்றை இழந்த நாட்டரசன் தம் மறவரை விடுப்பதும், அவ்விருசார் மறவர்க்கும் போர் நிகழ்வதும் வழக்கம். ஆநிரை (பசுமந்தை)யைக் கவர்தலுக்கு வெட்சியென்றும் மீட்டலுக்குக் கரந்தையென்றும் பெயர். போர்த்தெய்வம் காளியாதலின், இருசார் மறவரும் போருக்குச் செல்லுமுன் தாம் வெற்றிபெறும் பொருட்டுக் காளிக்குச் சடுகுடு என்று ஒலிக்கும் துடியடித்துக்கொண்டு பலியிடுவதும் வழக்கம். கொற்றத்தைத் தருபவள் என்று கொள்ளப்பட்டதனால், காளிக்குக் கொற்றவை என்று பெயர். கொற்றம் = வெற்றி ; கொற்ற + அவ்வை = கொற்றவ்வை — கொற்றவை.

இவற்றைப்பற்றிய தொல்காப்பிய நூற்பாக்கள்,

"வேந்துவிடு முனைஞர் வேற்றுப்புலக் களவின்
ஆதந் தோம்பல் மேவற் றாகும்"

"படையியங் கரவம் பாக்கத்து விரிச்சி
புடைகெடப் போகிய செலவே புடைகெட
ஒற்றின் ஆகிய வேயே வேய்ப்புறம்
முற்றின் ஆகிய புறத்திறை முற்றிய
ஊர்கொலை ஆகோள் பூசல் மாற்றே
சோயின் றுய்த்தல் நவல்வழித் தோற்றம்
தந்துநிறை பாதி டுண்டாட்டுக் கொடையென
வந்த ஈரேழ் வகையிற் றாகும்."

"மறங்கடைக் கூட்டிய துடிநிலை சிறந்த
கொற்றவை நிலையும் அத்திணைப் புறனே."

விளையாட்டு முறை: சிறுவராயினும் பெரியோராயினும் பலர் சேர்ந்து முதலாவது இருதலைவரை ஏற்படுத்திப் பின்பு பிறரை உத்திகூட்டிவரச் சொல்லிச் சமதொகையாக இருகட்சி வகுத்துக்கொண்டு, விளையாடும் நிலத்தில் ஒரு கோடு கீறி, அக் கோட்டிற்கு அப்பாலும் இப்பாலும் நாற்பது அல்லது ஐம்பது அடித் தொலைவில் நின்றுகொள்வர். இருபக்கத்தாரும் மாறிமாறி ஒவ்வொருவராய்க் கோட்டைத் தாண்டி எதிர்க் கட்சியாரை அணுகி, பலி சடுகுடு குடுகுடு குடுகுடு குடுகுடு குடுகுடு என்றுவது, 'எட்டுத்திக்கும் வெற்றிபெற்ற என்னை வெல்பவன் யாரடா' என்பதுபோன்ற மறவுரையையாவது, 'மாமியாரின் மொத்து வாங்கும் மருமகளைக் கண்டையா?' என்பதுபோன்ற வேடிக்கையுரைகளையாவது மூச்சுவிடாமல் இடைவிடாது தெளிவாய்ச் சொல்லிக்கொண்டு ஒருவனுக்கும் பிடிகொடாமல் ஒருவனையேனும் பலரையேனும் தொட்டுவிட்டு மூச்சுவிடுமுன் கோட்டைத் தாண்டி வந்துவிடவேண்டும். ஒருவன் தன் எதிர்க் கட்சியாரின் இடத்தில் அவரால் பிடிக்கப்பட்டு மூச்சை விட்டுவிடினும், திரும்பக் கோட்டைத் தாண்டித் தன் எல்லையை அல்லது இடத்தை மிதிக்குமுன் மூச்சை விட்டுவிடினும் பட்டவனாவன். அவன் அந்த ஆட்டையில் திரும்ப விளையாட முடியாது. ஒருவன் எதிர்க்கட்சியாரின் எல்லையில் அவருள்

எத்தனைபேரைத் தொடுகிறானோ அத்தனை பேரும் பட்டவராவர். ஒருவன் எதிர்க்கட்சியாரால் பிடிபட்டும் அவரை இழுத்துக் கொண்டே வந்து கோட்டைத் தாண்டி அதன்பின் மூச்சை விட்டானானால், அவனைத் தொட்ட அத்தனைபேரும் பட்டுப்போவர். எந்தக் கட்சியில் எல்லாரும் முந்திப் பட்டுப் போவரோ அந்தக் கட்சி தோற்றதாகும். ஆட்ட வெற்றியைக் கெலிப்பு என்றும் தோல்வியைத் தோற்பு என்றுங் கூறுவர். தோற்ற கட்சியார் திரும்ப ஆடி வெற்றிபெற்றுத் தோல்வியை நீக்குவது கடன் கழித்தல் என்றும் ஆட்டை கழித்தல் என்றுங் கூறப் படும். ஆடுகிற ஒவ்வொரு தடவையும் ஆட்டை யெனப்படும். இவை ஏனை விளையாட்டுகட்கும் ஏற்கும். இரு பக்கத்தாருக் கும் இடையிலுள்ள கோட்டை எல்லைக் கோடென்றும் நடுக் கோடென்றும் உப்புக்கோடென்றும் வெவ்வேறிடத்தில் வெவ் வேறு சொல்லாற் கூறுவர். அதன் நீளம் வரையறுக்கப்பட்டு அதன் இருமுனையும் ஏதேனுமோர் அடையாளத்தாற் குறிக்கப் படும்.

விளையாட்டு விளக்கம்: சடுகுடு விளையாட்டு ஆநிரையைக் கவர்தலும் மீட்டலுமாகிய போர்வினைகளையே நடித்துக் காட்டு வதாகும். பலி என்னுஞ் சொல் கொற்றவைக்குப் பலியிடுதலை யும், சடுகுடு என்னுஞ் சொல் கொற்றவை மகிழுமாறு அவள் முன்பும் ஆநிரை காவலர் மருளுமாறு நள்ளிரவில் திடுமென அவர் முன்பும் துடி கொட்டுவதையுங் குறிக்கும். நடுக்கோடு போர் செய்யும் இருநாட்டிற்கும் இடைப்பட்ட எல்லைப்புறத் தைக் குறிக்கும். இருகட்சிகளுள் முதலாவது பாடிச்செல்வது வெட்சிமறவரையும் இரண்டாவது பாடிச்செல்வது கரந்தை மறவரையுங் குறிக்கும். ஒருவன் நடுக்கோட்டைத் தாண் டுவது வெட்சி கரந்தை மறவர் எல்லைப்புறத்தைக் கடப்பதையும், பட்டுப்போதல் என்னும் வழக்கு அவ்விருதிற மறவரும் போரில் வீழ்ந்திறத்தலையுங் குறிக்கும்.

விளையாட்டிற்கேற்றபடி சில வினைகளின் நடிப்புக்காரர் மாற்றப்பட்டுளர் என்பதை ஓர்ந்தறிக.

விளையாட்டின் பயன் :

(1) மோனை எதுகை யமைய மறவுரைகளையும் நகைச் சுவைக் கூற்றுக்களையும் ஒருவன் தானே புனைந்து யாப்புத்திறனை அடைதல் அல்லது மிகுத்தல்.

(2) நீர் மூழ்குதற்கும், யோகப் பயிற்சிக்கும், வாழ்நாள் நீட்சிக்கும் உதவுமாறு மூச்சை நெடுநேரம் அடக்குதல்.

(3) திருடனைப் பிடித்து நிறுத்துந் திறனை யடைதல்.

(4) பகைவர் பிடிப்பினின்று தன்னை, விடுவிக்கத் தெரிந்து கொள்ளல். பலரை இழுத்துச்செல்லும் வலிமை பெறுதல்.

(5) வேகமாய் ஓடப் பழகுதல்.

(6) உடல் உரமும் நலமும் பெறுதல்.

(இக் கட்டுரை 'தமிழ்நாட்டு விளையாட்டு' என்னும் சுவடியினின்றெடுக்கப்பட்டது. உரிமை ஆசிரியனது.)

தாய் மொழி

1. இனிய தமிழிருக்க
இன்னும் அதைப் போற்றாதவர்,
கனியொன் றிருந்திடவே—கிளியே
காய்கவர்வார் போல்வாரடி.

2. தாய்மொழி மோசமென்பர்
தள்ளி யொதுக்கிவிட்டால்,
தாய்அழகு குன்றினல்—கிளியே
தள்ளிவைக்கும் மைந்தனுண்டோ ?

3. கரும்பின் இனிக்கும் மொழி
கன்னித் தமிழ்மொழியை
விரும்பியே போற்றிடவே—கிளியே
விதியொன்று சொல்லாயோடி

—சின்னதம்பி, கோட்டாறு.

பாட்டின் இயல்

(ம. ரா. பாலகணபதி, B. A. L. T., திருத்தவத்துறை)

பாட்டு இன்னதுதான் என்று திட்டமாகச் சொல்லிவிட முடியாது. 'பாட்டு செய்யுளில்லை' என்று மட்டும் சுருக்கமாகப் பாட்டின் இலக்கணத்தைக் கூறலாம். செய்யப்பட்டது செய்யுள். செய்யுள் செயற்கையானது; பாட்டு இயற்கையானது. ஒருவர் உட்கார்ந்து 'கடல் மடை திறந்தாலன்ன' ஆயிரக்கணக்கான செய்யுள்களை வரையறையில்லாது ஒன்றன்பின் ஒன்றாக—(கடல் மடை திறக்கப்பட்டால் கத்தலும் கதக்கலும் கல்லும் மண்ணும் கலந்து வருவதுபோல)-தள்ளிக்கொண்டே யிருக்கலாம். செய்யுள் செய்பவர்களுக்கு யாப்பிலக்கண அறிவும், சொல்லடுக்குகளும், சொல்வதற்கு ஏதாவதொரு பொருளும் இருந்தால் போதும்; உணர்ச்சியே வேண்டியதில்லை. செய்யுள் ஒரு வார்த்தைக் கட்டிடமாகும். சீர்ச் செங்கல்களைத் தளைச் சாந்துகளால் பூசிச் சேர்த்து அணியழகுடன் செயற்கையாகக் காட்டும் கட்டிடந்தான் செயற்கைச் செய்யுள். பாட்டு அப்படிப்பட்டதன்று; காலச் சுழற்சியில் இயற்கையாக அழகுபொலியத் தோன்றும் மலை போன்றது பாட்டு.

செய்யுளை உண்டாக்க வேண்டும்; பாட்டு, தானே பொங்கி எழும். பாட்டு, யாப்பிலக்கண வரையறையில் அமைந்தாலும் அமையலாம்; அமையாமல் இருந்தாலும் இருக்கலாம். இலக்கியத்திலிருந்து இலக்கணம், என்ற முறையில் யாப்பிலக்கணத்திற்கு முதலிலக்கியம் உண்மைப் பாட்டாகும்; செய்யுளன்று. ஓரிடத்தில் உட்கார்ந்து ஒரு வாழ்த்துப்பாவை யாப்பிலக்கணத்திற்கிணங்க எழுதி முடிப்பதால் சொல்நயமும், சில சமயம் ஓசை நயமும் அமைந்து விளங்குதலும் உண்டு. ஆனல் இவையெல்லாம் பாட்டின் பரு இலக்கணங்களேயாம். இப் பரு இயல்புகளையே உண்மை யிலக்கணமாகக் கொண்டு அதன்படி செய்யப்படும் செய்யுள்கள் உயிரற்று உணர்ச்சியற்றுச் சப்பென்றிருக்கின்றன—கேட்போருக்கும் படிப்போருக்கும்-பாட்டுக்கு உண்மையாக வேண்டும் இயல்பு உணர்ச்சியாகும். உணர்ச்சியின்

சொல்வடிவ வெளிப்பாடே பாட்டாகும். எனவே பாட்டு இயற்கை; செயற்கையாகாது.

உணர்ச்சியென்பது சொற் பதங் கடந்த ஒரு நிலையாகும். அந்த நிலையில் நின்று உணர்ச்சி வெள்ளத்தில் திளைத்திருக்கும் ஒருவன், தான் துய்க்கும் இன்பத்தையோ துன்பத்தையோ கொட்டுகிறான். அப்படி வழிந்து விழும் உணர்ச்சி வெள்ளமே பாட்டுருவமாக நமக்குக்கிடைக்கிறது. எனவே, பாட்டென்பது இயற்கையருவி விழ்ச்சி; செயற்கைக் குழாய் நீர்ப் பீய்ச்சலன்று.

இயற்கையில் எல்லாப் பொருள்களும்—உயிருள்ளவையும் உயிரற்றவையுமாகிய எல்லாம்—ஓர் ஒழுங்கான முறையில் அமைந்திருக்கின்றன. இயற்கையின் முக்கிய இலக்கணமே இந்த 'ஒழுங்கு' ஆகும். இதே ஒழுங்கு முறைதான் பாட்டிலும் வருகிறது. இயற்கையாக உணர்ச்சியுலகில் திளைப்பவன் சொரிகின்ற மொழிகள் ஒலிநயத்துடனும் தாளநயத்துடனும் ஒழுங்காக விழுகின்றன.

இவ்வாறு பிறந்த பல பாட்டுக்களை வைத்தே யாப்பிலக்கணம் வகுத்தனர். பின்பு இந்த யாப்பிலக்கணத்தை வைத்துச் செய்யுள் செய்யத் தொடங்கினர் பலர். இவர்கள் யாத்த செய்யுள்கள் செயற்கையழகையே உடையன—மண்ணால் செய்யப்பட்ட மாம்பழங்கள் போல. கைபுனைந் தியற்றியதில் கவின் பெறு வனப்பு எங்ஙனம் அமைதல் கூடும்?

ஒருவன் அழுதால் அவன் கண்ணில் நீர் வருகிறது; முகம் ஒரு மாதிரி சுழிகிறது; தொண்டையிலிருந்து ஒருவகைக் குரல் ஒரு மாதிரியாக வெளியேறுகிறது............இதையெல்லாம் பார்த்த ஒருவன் அப்படியே செய்தாலும் அது நடிப்பே தவிர உண்மையான அழுகையாகுமா? இயற்கைச் சிரிப்பிலுள்ள மனவுணர்ச்சி நடிப்புச் சிரிப்பில் வருமோ? இயற்கைப் பூவிலுள்ள அழகு செயற்கைப் பூவில் வருமா?...........இரண்டு பூக்களிலும் நான்கு நான்கு இதழ்கள் ஒரே நிறத்திலிருக்கின்றன; பூவின் மற்றப் பாகங்களும் ஒத்திருக்கின்றன. எனினும் இரண்டு பூக்களும் வேறுபடுகின்றன. ஏன்? ஒன்று இயற்கைப் பூ; மற்றொன்று செயற்கைப் பூ. ஒருவருடைய சிலை அவரைப்போலவேயிருக்கிறது. என்றாலும் அவர் வேறுதான்; சிலை வேறுதான். ஒன்றுக்கு உயிர், உணர்ச்சி, அறிவு இவை உண்டு; மற்றொன்

றிற்கோ இவை இல்லவே இல்லை; பிற பரு இலக்கணங்களெல்லாம் சரியாக இருக்கின்றன.

பாட்டு என்றால் செய்யுளில்லை என்பதுவரை மட்டும் இதுகாறும் பார்த்தோம். இனி, பாட்டின் சிறப்பிலக்கணம் என்ன என்பதைப் பார்ப்போம்.

"பாடம் படி", "பாட்டுப் படி", "பாட்டுப் பாடு" என்பவை இப்போதும் வழங்கும் சொற்றொடர்கள். "சித்திரபுத்திர நாயனார் கதையை அவன் அவ்வளவு நன்றாகப் படிக்கவில்லையே" என்றால் குறிப்பிட்ட மனிதன் நன்றாக வாசிக்கவில்லை—எழுத்துப் பிழைகளில்லாமல் வாசிக்கவில்லை—என்பது அர்த்தமில்லை. அவன் ஒலியை நீட்டியோ, குறைத்தோ, கைகளை ஆட்டியோ, முகத்தைச் சந்தர்ப்பத்திற்குத் தகுந்தாற்போல் மாற்றியோ படிக்கவில்லை என்பதே பொருள். 'படித்த'லுக்கும் 'வாசித்த'லுக்கும் இவ்வளவு வேறுபாடு உண்டு. படித்தல் என்பது உணர்ச்சியுடன் ஒன்றுபடுவது. வாசித்தல் என்பது உணர்ச்சியோடு கலவாமல் எழுத்துப்பிழை முதலியன இல்லாமல் சும்மா ஒலித்தல்.

'பாட்டு' என்ற சொல் 'படு' என்ற பகுதியிலிருந்து வந்ததாகத் தோன்றுகிறது. 'படு' என்பது 'பாடு' என்றாகிப் பின் பாட்டாயிற்றோ என்று ஊகிப்பதற்கு இடமளிக்கிறது. ஒருவன் மனம் படும் பாடே பாட்டாக வழிந்து வருகிறது. அவன் மனம் உணர்ச்சி வெள்ளத்தில் மூழ்கி இன்பத்தின் எல்லையையோ துன்பத்தின் எல்லையையோ அடைந்து நிற்கும்போதுதான் இயற்கையாகப் பாட்டு வெளி வருகிறது. அதிலும் துன்பமே பாட்டிற்கு முக்கிய காரணமாயிருக்கிறது. துன்பத்தினால்தான் பாக்களின் தோற்றமிருக்கிறது என்றுகூடச் சொல்லிவிடலாம். துன்பத்தில் எளிதாக ஆழ்ந்து விடுவதுதான் மனித இயற்கை. துன்ப நுகர்வு போல இன்ப நுகர்வு எளிதில் கிடைக்காது. மனிதன் படுகின்ற துன்பத்தினால்தான் அவனுக்கு உணர்ச்சி பொங்குகிறதே தவிர, அவன் மிகுதியும் மகிழ்ச்சியாயிருக்கும்போது அவ்வுணர்ச்சி வெள்ளத்தின் ஆழத்தை அறிவதில்லை. துன்பத்தின் எல்லையி லிருந்துகொண்டு இன்பத்தின் எல்லையையும் மனக் கண்ணால் அவன் காணும்போது கூத்தாட ஆரம்பிப்பான். "கண்டேன்" என்பான்; 'வாழி' என்பான்...............இன்னும்

எவ்வாறெல்லாமோ பிதற்றுவான். ஆனல் இந்த வெளிப்பட்ட இன்பத்திற்கு அடிப்படையான காரணம் கீழேயிருக்கும் துன் பந்தான். ஆகவே பாட்டிற்கு முதன்மையான காரணம் ஒரு வன் படும் பாடுதான்.

ஒருவன் மனம் படும்பாடே பாட்டாக வெளிவருவதால் அப் பாட்டை மற்ருெருவர் பாடுவதானுல் சும்மா வாசித்து விட் டுப் போனுல் அதில் உயிரேயில்லை என்பதை இங்கே சொல்ல வேண்டியதில்லை. ஒருவன் அரும்பாடு பட்டுப் பாடியதை மற் ருெருவனும் பெரும்பாடு பட்டுத்தான் பாடவேண்டும். "பட முடியாதினித்துயரம்..........இந்த ஏழை படும் பாடுனக்குத் திரு வுளச் சம்மதமோ ....பட்டதெல்லாம் போதும்" என்று ஒரு வர் பாடியதை இன்னெருவர் குதித்துக்கொண்டு சிரித்த முகத் துடன் தமக்குத் தெரிந்த இராகங்களெல்லாம் வரும்படி இராக மாலிகையில் கையையும் தலையையும் ஆட்டி அசைத்துச் சொற் களை விருப்பப்படி பிரித்துப் 'பாடினுல்' அது பாட்டுப் பாடுத லாகுமா? ஆகவே ஆகாது. பாடியவருடைய மனம் பட்ட பாட்டைப் பாடுகின்ற மற்றவர்களுடைய மனங்களும் பட வேண்டும். இதைத்தான் 'மனங்கலந்து பாடுதல்' 'நுகர்ந்து பாடுதல்' என்றெல்லாம் சொல்லுகிருர்கள்.

ஆசிரியருடைய மனம் படும் பாட்டை வெளிப்படையாகக் காட்டும் பாக்களே உண்மையான பாட்டுக்களாகும். படிப் பவருடைய மனத்தை இழுக்கும் இயற்கை நல்ல பாட்டிற்கு உண்டு. அவ்வியற்கை இருந்தால்தான் பாட்டாகும். இத்தகைய பாட்டு புகழ்ப் பாடலாயிருக்கலாம்; சந்திரமதி அழுதலாயிருக் கலாம். கலியாண விருந்தில் உண்ட பேருவகையின் தோன்ற லாயிருக்கலாம், திருட்டுத் தொழிலின் வீரத்தைப் பற்றி யிருக்க லாம்.......எதைப்பற்றியும் இருக்கலாம். எப் பொருளைப்பற்றிச் சொன்னுலும் அதனிடம் நம் மனத்தை இழுக்கும் ஆற்றல் கட் டாயம் இருக்கவேண்டும். மனம்படுகின்ற பாட்டை அப் படியே படம் பிடித்தாற்போலக் காட்டுகின்ற பாடல்களில் கட்டாயம் இந்த ஈர்ப்பு ஆற்றல் இருந்தே தீரும். மனம் படுகின்ற பாடு அப்படியே சொல்வடிவில் வெளிவந்து மற்ற மனங்களையும் ஒன்றுபடச் செய்வதுதான் பாட்டின் இயல்.

குரல் மத்திமமே; சட்சமன்று

[வித்துவான் க. வெள்ளைவாரணனார்]

'குரலே சட்சம்' என்னுந் தலைப்புடன் வித்துவான் தேவ நேயப் பாவாணரவர்கள் செந்தமிழ்ச் செல்வி ௨௦-ஆம் சிலம்பு ௯-ஆம் பரலிதழில் எழுதிய கட்டுரையைப் படித்தேன். பழந் தமிழிசை மரபினை ஆராய்தலையே தமது வாழ்க்கை நோக்கமாகக் கொண்டுழைத்துவரும் அருட்டிரு விபுலாநந்த அடிகளார் குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் எனப் பழந்தமிழ் நூலிற் கண்ட ஏழிசையும் இக்காலத்து வழக்கில் முறையே மத்தி மம், பஞ்சமம், தைவதம், நிஷாதம், சட்சம், ரிஷபம், காந்தாரம் ஆகும் எனத் தமிழ்ப் பொழிலில் வெளியிட்ட ஆராய்ச்சி முடி பினை மறுக்கும் முறையில் இக்கட்டுரை எழுதப்பட்டுளது. முத னூல் வழிநூல்களைப் பிறழுவுணர்ந்தும், முதலி லறிய வேண்டிய வுண்மைகளை மறந்தும், ஆரிய வேதங்களை முதனூலாகக் கொண் டும் தமிழிசையை யாராயப் புகுந்தார் இடர்ப்படுவாராயினரென் றும், தமிழ்ப்பொழிலில் விபுலாநந்த அடிகள் எழுதிய இசையா ராய்ச்சியைப் படித்தபொழுது 'அவ்வாராய்ச்சி முதலிலேயே கோணியதாகத் தமது அறிவுக் கெட்டிற்று' என்றும் பாவா ணர் தம் கட்டுரையின் தொடக்கத்திற் குறிப்பிட்டுள்ளார்.

பழந்தமிழிசை மரபினை ஆராயப்புகுந்தாருள் இயல்நூற் பயிற்சி யொன்றே யுடையார் பழந்தமி ழிசைநூற் பொருட் கூறுகளை இக்கால இசைக்கலையுடன் ஒப்பு நோக்கி ஆராயும் வன்மை பெறுதும், இசைப்பயிற்சியொன்றே யுடையார் பழந் தமிழிசைக் குறியீடுகளும் இசையமைதியும் இவையென உண ருந் திட்பமின்றியும் கவல்வாராயினர். பண்டைத் தமிழிசை யினைப் பற்றிப் பிற்காலத்தார் பிறழுவுணர்ந்து வெளியிட்ட முடி புகளும் பழந்தமிழிசையைச் செய்கை முறையிற் கண்டு வளர்த் தற்குப் பயன்படா தொழிந்தன. இந்நிலையினை நன்குணர்ந்த விபுலாநந்த அடிகளார் இசைவளர்ச்சியினைக் குறிக்கொண்டு இதுபோது தென்னாட்டில் வழங்கும் இசைமரபினையும், இதற்கு அடிப்படையாக இடைக்காலத்துத் தென்னாடு வடநாடுகளில் வழங்கிய இசையமைதியினையும், சிலப்பதிகார காலத்துத் வேத

காலத்தும் அதற்கு மிக முன்னரும் தமிழ் மக்கள் கண்டு வழங்கிய இசைக்கலையின் நுட்பங்களையும் பன்னிரண்டாண்டுகளாக இடைவிடாதாராய்ந்து வரலாற்று முறையில் எழுதிவரும் இசை நுணுக்கங்களை யுணர்வோர் அடிகளாரது ஆராய்ச்சி பல்லாண்டுகளாக மறைந்து போன பிற கலைகளை ஆராய்வார்க்கும் ஆராய்ச்சி முறையிதுவென வுணர்த்தும் உரையாணியாக விளங்குதலை நன்கு தெளிவர்.

(க) "ஷட்ஜம் முதலாக உள்ள பெயர்கள் எழுந்ததற்பின் தென்னாட்டு இசைமரபு தோன்றியிருப்பின் அப்பெயர்கள் தமிழிலும் எற்கெனவே வந்திருக்கவேண்டும். அங்ஙனம் வாராமையாலே பழந்தமி ழிசை மரபு பரதம் நாரதசிக்ஷை யென்னுமிவற்றிற்கு முந்தியதென்பதற்குச் சான்றாகிறது"

(உ) "அகத்தியர் தென்னாட்டிற்கு வருவதற்கு முன்னே இசைமரபும் இசைக்கருவிகளும் தென்னாட்டிலிருந்தன"

(ங) "இற்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு மறைந்ததும் பழந்தமிழ் நாட்டு நாகரிகத்தொடு தொடர்புடையதுமாகிய மொகெஞ்சதரோ (Mohen-go-daro) நாகரிகத்திலே, மிதுனம் எனப் பிற்காலத்து வானநூலிலே வழங்கப்படும் விண்மீன் கூட்டம் 'யாழ்' என்னுந் தமிழ் மொழியினாலே வழங்கப்பட்டதெனவும், இணைமக்கள், இணையாழ்க்கருவிகள் என்னுமிவற்றினாலே குறியீடு செய்யப்பட்டதெனவும் வணக்கத்துக்குரிய ஹீராஸ் (Fr. Heras) என்னும் பேரறிஞர் எடுத்துக்காட்டினமையின் வேதகாலத்திற்கு மிக முந்தியே தமிழ் யாழ் இருந்ததென்பது முடிவாகின்றது."

இன்னோன்ன தொடர்களால் விபுலாநந்த அடிகளார் தாம் ஆராய எடுத்துக்கொண்ட தமிழிசைச் சூழல் மிகமிகத் தொன்மை வாய்ந்ததென்னு முண்மையை யெடுத்துக்காட்டி வற்புறுத்தியிருக்கவும் அதனை யொருசிறிதும் உணராத பாவாணர் 'ஒருவர் எத்துணைக் கலையில் தெளிவும் ஆராய்ச்சி வன்மையும் வாய்ந்தவரெனினும் ஆரிய வேதங்களை இசை முதனூலாகக் கொண்டு ஆராயின் விளக்கின்றிப் புத்திருள்வழிப் போவார் போல் இடர்ப்படுவாராவர்' என அடிகளார்மேற் பொருந்தா இடுவந்தி கூறுகின்றார்.

ஒரு பொருளை ஆராயும் முறையிற் பிறர் கொள்கையை மறுக்கப் புகுவோர் முதற்கண் தம்மால் மறுக்கப்படும் கொள்கையின் முழுவிரிவையுந் தெரிந்துகொள்வதுடன் அக்கொள்கையாளர் கருத்திது வென்பதனையும் தெளிந்துகொள்ளுங் கடமையினராவர். இம்முறையில் நண்பர் பாவாணர் தம் கடமையினை மறந்தன ரென்பதற்கு இவராற் கூறப்பட்ட குறைகளே சான்றுதல் காண்க.

அடிகளாரது ஆராய்ச்சியின் முடிபாகக் குரல் என்பது மத்திமமே என்னும் விரிவினையாராய விரும்புவோர் அண்மையில் கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடாக வரும் யாழ்நூலிற் கண்டு தெளியக் கடவர். இனி, பாவாணர் குரலே சட்சம் என்னும் தன் மதம் நிறுத்தற் பொருட்டுக் கூறிய காரணங்களை ஆராய்வாம்.

(க) கூற்று : "ஏழிசை வரிசையிற் குரல் முதலிற் கூறப்படுதல், இதுகாறும் எத்தமிழ் நூலினும், குரல் துத்தம் கைக்கிளை உழை இளி விளரி தாரம் என்ற வரிசையிலேயே ஏழு சுரங்களும் கூறப்படுகின்றன."

மறுப்பு : நமக்குக் கிடைத்த தமிழ் நூல்களுள் சேரமுனிவரருளிய சிலப்பதிகாரமொன்றே பழந்தமிழிசை விரிவினை ஒருவாறு விளக்கும் இசை முதனூலாக அமைந்துள்ளது. இளங்கோவடிகள் ஏழிசை நரம்புகளைக் கூறுமிடத்து 'உழைமுதற் கைக்கிளையிறுவாய்க் கட்டி' என உழைநரம்பினை முதலாகவும், தாரத்தாக்கங் கூறுமிடத்து 'இளிமுதலாகிய எதிர்படுகிழமை' என இளிநரம்பினை முதலாகவும், யாழுங்குழலுமாகிய கருவிகளையிசைப்போரைக் கூறுமிடத்துக் 'குரன்முதலேழும் வழுவின்றிசைத்து' எனக் குரல்நரம்பினை முதலாகவும், இன்னுமிவ்வாறே பிற நரம்புகளை முதலாகவுங் கொண்டு இசைநிலை வேறுபாடுபற்றி வரிசைப்படுத்திக் கூறுதலால் ஏழிசை வரிசையிற் குரலொன்றே முதலிற் கூறப்பட்டதெனல் பொருந்தாது.

(உ) கூற்று : மத்தளத்திற்கு வலக்கண் குரலென்றல். சிந்தாமணியில் 675-ம் செய்யுளுரையில்,

"இடக்கண் இளியாய் வலக்கண் குரலாய்
நடப்பது தோலியற் கருவி யாகும்"

என்பது மேற்கோள். தண்ணுமை, முழவு, மத்தளம், மிருதங்கம் எனப் பலவாறு சொல்லப்படும் ஓரினத் தோற் கருவிகளில், தொன்றுதொட்டு வலக்கண்ணே சட்சமாயிருந்து வருகின்றது."

மறுப்பு: இக் கூற்றின் உண்மையை இதுபோது அண்ணமலைப் பல்கலைக்கழக இசைப் பேராசிரியராக விளங்குந் திருவாளர் க. பொன்னையா பிள்ளையவர்களிடம் உசாவியறிந்தபோது மத்தளத்தின் வலக்கண்ணில் ஆதாரசட்சமும், அதன் இடக்கண்ணில் அவ்வாதார சட்சத்திற்கு ஒத்ததாய் மந்தரத் தானத்தினுள்ள கீழ்சட்சமும் தோன்றுமென அவர்கள் குறிப்பிட்டார்கள். இசைநுட்ப மறிந்த அப் பெரியார் குறித்த மரபின்படி 'இடக்கண் இளியாய்' எனத் தொடங்கும் நூற்பாவிற்குப் பொருள் காணுமிடத்துப் பாவாணர் கூறும் பொருள் இசை மரபுக்குப் பொருந்துவதாயில்லை. என்னை? குரல் என்னுஞ் சொல் பாவாணர் கருத்துப்படி சட்சத்தைக் குறிக்குமெனக் கொண்டால் அம்முறையே வைத்துப் பார்க்கக் குரலின் ஐந்தாஞ் சுரமாகிய இளி பஞ்சமமாதல் வேண்டும். எனவே "இடக்கண் இளியாய்" என்பதற்கு மத்தளத்தின் இடப்பக்கத்துக் கண்ணிலே பஞ்சம இசை தோற்றுமெனல் வேண்டும். ஆயின், இசை மரபின்படி மந்தரஷட்சமே தோற்றுவதாகத் தண்ணுமையாசிரியர் கூறுகின்றனர். அம் முறைப்படி இடக்கண்ணிற் றோன்றும் இளியைச் சட்சமாகவே கொள்ளவேண்டியுளது. அங்ஙனங் கொள்ளுங்கால் 'வலக்கண் குரலாய் என்பதிற் குரல் என்பதனைச் சட்சமாகக் கோடல் பொருந்தாதென்பதும் புலனாகும். வலக்கண் குரலாய் என்னுமிடத்து வந்த குரற் சொல்லுக்கு நும் கருத்துப்படி மத்திமம் எனப் பொருள்கோடலும் இவ்விடத்திற்குப் பொருந்தாதெனிற் கூறுதும். குரல் என்னுஞ் சொல் வந்தவிடமெல்லாம் அஃது எழிசையு ளொன்றினைக் குறித்ததெனக் கொள்ளலாகாது. என்னை? இளங்கோவடிகள் "குரல்குரலாகத் தற்கிழமை திரிந்தபின்" என்னும் அடியில் முதனின்ற குரலை எழிசையு ளொன்றாக்கியும் இரண்டாவது வந்த குரற்சொல்லைத் தொடங்குமிசை யென்ற பொருளினும் வழங்கியிருத்தலானும், இம்முறையைப் பின்பற்றியே அரும்பதவுரையாசிரியர் முதலியோரும் 'தாரங் குரலாக, விளரி குரலாக,

இளி குரலாக' என்றுங்குக் குரல் என்பதனைத் தொடங்குமிசை யென்ற பொருளிற் பல சுரங்களோடுந் தொடுத்து வழங்கினமை யானும் என்க. எனவே இவ்வுண்மை கருதி 'வலக்கண் குரலாய்' என்பதற்கு மத்தளத்தின் வலக்கண்ணில் இசைநூல் மரபுபடி ஆதாரஷட்ஜமாகிய தொடங்குமிசை தோற்றும் எனப் பொருளுரைத்தலே சிறந்ததாதல் இக்கால இசையாசிரியர்க்கும் உடன்பாடென்பது பெறப்படும்.

(ரு) கூற்று: குரலை முதற்றானமென்றல். 11-ம் புறப்பாட்டில், 'குரல் புணர் சீர்' என்னுந் தொடருக்கு "முதற்றானமாகிய குரலிலே வந்து பொருந்தும் அளவையுடைய பாட்டை' என்பது பழையவுரை"

மறுப்பு: இசைப்பாடல் பாடுவோர் பாடற்குரிய ஏழிசைகளையும் மந்தரம், மத்திமம், தாரம் என்னும் மூவகைத்தானங்களில் அமைத்துக்கொள்ளுதல் இக்கால இசைமரபிலும் வழங்கும் முறையாகும். இம் மூவகை நிலைகளையும் பண்டையிசையாசிரியர் முறையே மெலிவு சமன் வலிவு என வழங்கினர்களென்பதும் ஏழிசையினை இரண்டு நிரற்படுத்திய பதினான்கு சுரங்களையும்

மெலிவு	சமன்	வலிவு
ம ப த நி	ச ரி க ம ப த நி	ச ரி க

என நிலைப்படுத்தினர்களென்பதும் சிலப்பதிகாரத்தானும், அதன் உரைகளானும் நன்கு விளங்குவனவாம். இதனையே சேக்கிழார் நாயனாரும் "மந்தரத்தும் மத்திமத்துந் தாரத்தும் வரன்முறையால், தந்திரிகள் மெலிவித்தும் சமங்கொண்டும் வலிவித்தும்" என ஆனாய நாயனார் புராணத்து விளக்கிப்போந்தார்கள். இம் மூவகைத்தான நிலையிலமைத்துப் பாடுங்கால் முதற்றானமாகிய மெலிவுத் தானத்திலே முதற்கண் நின்ற குரலாகிய மத்திமத்திலே எடுத்த இசை மீண்டும் அதன்கண் வந்து முடியும் முறையிலமைந்த பாடலிசையினையே 'குரல்புணர் சீர்க் கொளை' எனப் பேய்மகள் இளவெயினியாரும், 'முதற்றானமாகிய குரலிலே வந்து பொருந்தும் அளவையுடைய பாட்டு' எனப் புறநானூற்றுரையாசிரியரும் குறித்தனராதல்வேண்டும். எடுத்த இசையில் முடித்தற்கு இக்கால இசைமரபிலும் பல எடுத்துக் காட்டுகள் கூறலாம்,

அன்றியும் பாவாணர் கருதுமாறு ஒரு சுரத்தை முதற்முன மென்றல் இசைநூல் வழக்கன்மையுமுணர்க. குரல்புணர்சீர்க் கோவலல் பாண்மகன் என்பதற்குப் 'பாடினி பாடலுக்கேற் பக் கோவலல் பாண்மகன் எனினும் அமையும்' என இத்தொ டர்க்கு உரையாசிரியர் வேறுமொரு பொருள் கூறுதலை நோக் குங்கால் பாடினியின் பாடலைக் குரல் எனப் புலவர் கூறினர் என்பதும் புலப்படும். இசைக்குச் சிறந்த மகளிரது மிடற்றோசை இயல்பாகவே மத்திமமாகிய குரல் என்னும் ஒசையுடன் ஒத்து நிற்பதாதலின் அதுபற்றிப் பாடினி பாடலைக் குரல் எனக் கூறி யதன் நுட்பமும் நன்கு பெறப்படுகின்றது. இதனானும் குரல் மத்திமமே என்பது தெளிவாதல் காண்க.

(ச) கூற்று: "கேள்விச் சுரம் இயல்பாய்ச் சட்சமாயிருத் தல். எவர் பாடினும் இயல்பாய்ப் பாடும்போது மத்திம மன்றிச் சட்சமமே சுருதியாயிருத்தலின், அதனையே முதற்சுர மாக நம் முன்னோருங் கொண்டிருக்க வேண்டும்."

மறுப்பு: இயல்பாய்க் கேட்கப்படும் சுருதி அல்லது கேள்வி யென்பது எவ்வகைச் சுரத்திற்கும் ஏற்குமாறமைந்த ஓசையையே குறிக்குமன்றிச் சட்சத்திற்குமட்டுமுரியதாய் அத னைக் குறிக்குமென்றல் இசை மரபுக்கு எட்டுணையும் பொருந்துவ தன்றாம்.

(ரு) கூற்று: குரல் என்னுஞ் சொல் தொண்டையையும் அதிற் பிறக்கும் ஓசையையுங் குறித்தல்.

மறுப்பு: பாவாணர் கூற்றுப்படி குரல் என்னுஞ் சொல் தொண்டையையும் பின்னர் அதிற் பிறக்கும் ஓசையையும் குறிக்குமென்பதனை யாமும் உடன்படுகின்றோம். ஆயினும் தொண்டையிற் பிறந்து குரற்பெயராற் குறிக்கப்படும் ஓசை எது வென்பதே நமது வினு ஆகும். ஏழிசையும் தொண்டை வழி யாக வெளிப்படுமாயினும் அவ்வோசை எழுந்து பரவித் தாக்கு மிடங்களையே இசைநூலார் ஏழிசைக்கும் பிறப்பிடங்களாகக் கொண்டனர். இவ்வுண்மையினை நோக்காது ஏழிசைப் பிறப் புணர்த்தும் பழைய சூத்திரப் பொருளை உடல்நூற்கும் ஒலி நூற்கும் ஒவ்வாவென மறுத்துப் போயினர் பாவாணர். இடத்

தாலும் முயற்சியாலும் பிறப்பு வேறுபட்டுத் தோன்றும் எழுத்துக்கள் யாவும் ஒவ்வொருகால் ஏழிசையுள் ஒவ்வொன் றின்பாற் பட்டு அடங்குதலால் அவ்வெழுத்துக்களின் நிலைக் களங்களையே ஏழிசையின் பிறப்பிடமெனக் கொள்ளலாகாது. எவ்வகை யெழுத்துக்களின் ஒலித்தொகுதியும் ஏழிசையினுள் ஒவ்வொன்ருய்க் கிளர்ந்து பரவிச் சென்று தாக்குமிடங்களையே ஏழிசையின் பிறப்பிடங்களாக நம் தமிழிசை நூலோர் துணிந்து கொண்டனராதல் வேண்டும்.

“ குரலது மிடற்றிற் றுத்த நாவினிற்
கைக்கிளை யண்ணத்திற் சிரத்தி னுழையே
இளிநெற் றியினில் விளரி நெஞ்சினில்
தார நாசியிவை தம்பிறப் பென்ப”

என அடிகளார் காட்டிய பழஞ் சூத்திரத்தின் ஏழிசைக்கும் கூறிய பிறப்பு முறையினைத் தமிழிசையோடு தொடர்புகொண்ட வடமொழி நூல்கள் கூறும் பிறப்பிடங்களோடு ஒப்பவைத்து நோக்குமிடத்து, குரல் முதலாக எண்ணப்பட்ட ஏழும் முறை யே இக்கால வழக்கில் மபதநிசரிக வாம் என அடிகளார் தெளிவுபடுத்தினமையான் அம்முறையே மிடற்றிற் ருேன்றும் மத்திமத்தை அது தோன்றுதற் கிடமாகிய குரல் என்ற பெய ராற் சொன்னல் வருங் குற்றம் யாது? இசைமரபின்படி நெற்றியிற் சென்று சாரும் ஓசையையுடைய சட்சத்தை மிடற் றிற் ருேன்று மென்று குரலெனக் கோடற்கு எவ்வகைத் தொடர்பு மில்லையே?

(சு) கூற்று: “குரலே சட்சமாக மாபெரும் புலவர் ஆபிரகாம் பண்டிதர் கொண்டமை”

மறுப்பு: மேற்கூறியவாறு பாவாணர் காட்டும் இறுதிக் காரணமே இத்தகைய மறுப்புரையினை இவர் எழுதியதற் குரிய முதற்காரண மாகுமெனக் கருதுகின்ருேம். பண்டைத் தமிழிசை வளர்ச்சியினைக் குறிக்கோளாகக் கொண்டு இயற்புல வரையும் இசைப் புலவரையும் உசாவி யறிந்து தமிழிசை வளர்ச் சிக்குப் பயன்படக்கூடிய வகையில் இசைநூற் கருத்துக்களைக் கருணமிருதசாகர மெனப் பெரியதோர் நூலாகத் திரட்டி யுதவிய செந்தமிழ்த் திருவாளர் ஆபிரகாம் பண்டிதர் அவர்கட்

குத் தமிழர்களாகிய யாம் எழுமையுங் கடப்பாடுடையோம். ஆயினும் அவர்கள் அந்நூலை எழுதிய காலத்து அதற்கு அடிப்படையாயிருந்த சிலப்பதிகாரவுரைப் பகுதியில் சிலவிடத்துப் பிற்கால இசைவழக்கு மாறுதலால் உண்மைப்பொருள் பிறழ்ச்சியடைந்தும் சில அரிய பாட வேறுபாடுகளால் மறைந்தும் காணப்பட்ட நிலையினை உண்மையுருவமாகக் கொள்ள நேர்ந்தமையினால் அவர்தம் நூலிற் சில விடங்களில் அடிப்படைக் கருத்துக்கள் பிறழ்ந்து காணப்படுகின்றன. இதனைப் 'பண்டிதரவர்களின் இசையாராய்ச்சி நூலில் இரண்டொரு சிறு சருக்கல்களிருப்பதாகத் தெரியினும்' என்னும் பாவாணர் கூற்றும் குறித்தல் காணலாம். அவர் கண்ட இரண்டொரு சிறு சருக்கல்களுடன் குரலைச் சட்சமெனப் பிறழவுணர்ந்ததனையும் ஒரு சருக்கலாகச் சேர்த்துக்கொள்ள வேண்டுகின்றோம்.

ஆராய்ச்சியின் முதலில் துணியப்பட்ட கருத்தொன்று ஆராய்ச்சி விரிவடைந்த காலத்துத் திருத்தம் பெறுத லியல்பாதலால் அதுபற்றிப் பண்டிதரவர்கள் தமிழ்த்தொண்டு நம் அடிகளாரால் மறுக்கப்படாமை பாவாணர் உளங் கொள்வாராக.

இதுகாறுங் கூறியவாற்றால் பாவாணர் தன்மதம் நிறுத்தற் பொருட்டுக் கூறிய காரணங்கள் யாவும் ஆராய்ச்சியுணர்வுக்குப் பொருந்தாமை கண்டாம். இனி அடிகளார் கொள்கையை அவர் மறுக்கும் முறையினை ஆராய்வாம்.

(க) 'குரல்துத்தம் நான்கு கிளைமூன் றிரண்டாம்
குரையா உழைஇளி நான்கு — விரையா
விளரியெனின் மூன்றிரண்டு தாரமெனச் சொன்னார்
களரிசேர் கண்ணுற் றவர்'

என ஏழிசைக்கும் அலகுநிலை (சுருதிக் கணக்கு) கூறிய பழைய வெண்பாவினைக் கொண்டு இளி முதலாக எண்ணிப் பார்த்தால் முறையே சரிகமபதநி என்னும் ஏழு சுரங்களுக்கும் பொருந்திய அலகுகளாகிய 4, 3, 2, 4, 4, 3, 2 என்பன பெறப்படுதலானும் இளியே சட்சம், குரல் மத்திமமே என்பதனை அடிகளார் தெளிவுபடுத்தியுள்ளார்கள்.

இதனை மறுக்கப் போந்த பாவாணர் 'முதலாவது, அலகுகளே இன்னும் இத்தனை யென்று திட்டமாகத் தெரியவில்லை

அலகு மொத்தம் 24 என்றும்; 22 என்றும் இருவேறு கொள் கைகள் இருந்துவருகின்றன.' எனத் தடை கூறுகின்றார். அலகுகள் இத்தனையென்று ஆராய்ந்து காண்பதே இசை யாராய்ச்சிக்கு அடிப்படையாகும். அதனைத் தெரிந்து துணிய உளங் கொள்ளாத பாவாணர் அதன் மேற்படியாகிய இசை யாராய்ச்சிபற்றி மறுக்கப் புகுவது பெரும் பிழையன்றே? ஒன்றனை ஆராய்வார் ஒரு வரம்புடைக் கொள்கையில் நின்றாராய் தற்குரியர் என்னும் வரம்பு கோலிய பாவாணரே அவ்வரம்பினை மீறுதல் தகுதியன்றும். திருவாளர் ஆபிரகாம் பண்டிதரவர்கள் நூலும் இவ்வடிப்படையான அலகுநிலை யாராய்ச்சியிற்றானே பிழைபட்டுள்ளது? அடிகளாரது நுண்புலமையினால் சிறந்த இசைநூ லடிப்படையாக வைத்து ஆராயப்படுவனவற்றுள் அலகுநிலையாகிய சுருதிக்கணக்கும் ஒன்றன்றோ? இன்னின்ன சுரங்கள் இத்தனை யித்தனை அலகுகள் பெறுமெனக் கூறும் மேற்காட்டிய பழம் பாடலைத் துணைக்கொண்டு நோக்குமிடத்து ஏழிசைக்கும் கொடுத்த மொத்த அலகினைக் கூட்டிப்பார்க்க 22 சுருதிகள் தானே பெறப்படுகின்றன. இருபத்து நான்கைக் காணேமே. சுருதி 24 என்ற கொள்கை எப்போது வந்தது? மேனாட்டாரால் அண்மைக்காலத்தே பொறிநூற் கருவிகளின் துணைகொண்டு வகுக்கப்பட்ட சமன்செய்த சுருதியினைப் பண்டைத் தமிழர் கொள்கை யென்றல் எங்ஙனம் பொருந்தும்?

(உ) ஏழிசைகள் இன்ன என்னும் ஆராய்ச்சியில் தென் மொழி வடமொழிகளில் அவற்றிற்கு ஒத்தனவாகக் கூறப் பட்ட பறவை முதலியவற்றின் ஓசை வரையறையினை அடிகள் குறிப்பிட்டது, அவ்வொப்புமை கொண்டு குரல் துத்தம் முதலிய வற்றை இக்கால வழக்கினுள்ள மத்திம முதலியனவாக இசை யறியாரும் ஒப்புநோக்கி வகைப்படுத்தற்பொருட்டேயாம். இதனால் ஏழிசைகளும் பறவை முதலியவற்றின் ஓசையினை வுணர்ந்தபின் எழுந்தன என்று அவர்கள் கருதுவதாகப் பிறழ வுணர்தல் தவறு. கல்லாடம் முதலிய நூல்கள் பிறவற்றின் ஓசையைக் குறிப்பினும் முன்னர் அடைவுபடுத்தினவற்றுடன் அவை ஒக்குமெனக் கோடலன்றிப் பிங்கல முதலியவற்றின் ஓசையொப்புமை பொருந்ாதெனக் கோடல் எங்ஙனம்? குரலை

மத்திமமாகக் கொண்டு பறவை முதலியவற்றின் ஓசையால் ஒப்புக்காணுமிடத்துப் பாவாணர் கருத்துப்படி நாற்சுரங்கட்கு உரியவையேனும் ஒத்துவருகின்றனவே. அங்ஙனம் ஒப்பக் கண்ட சுரங்களை நிலையாகக்கொண்டு முன்னும்பின்னுமுள்ள பிற மூன்று சுரங்களிவை யெனவும் ஆராய்ந்து கொள்ளலாமே. தம் கொள்கைக்கு ஆதாரமாகாதனவற்றைக் கருவியன்று எனத் தள்ளும் வெறுப்பு அன்பர்மாட்டுத் தோற்றுதற்குக் காரணமென்னையோ அறியோம்.

(௩) மூன்றாவதாக ஏழிசையின் பிறப்பு முறைபற்றி அடிகளார் கூறியனவற்றைப் பாவாணர் மறுத்தமை பொருந்தா தென முன்னர்க் காட்டினும்.

(௪) சிலப்பதிகாரத்து 'வண்ணப் பட்டடை' என்னுந் தொடரில் வந்த பட்டடை யென்பதனை எல்லாப் பண்ணிற்கும் அடிமணையாகிய இளிநரம்பெனக் கொண்டார் அடியார்க்கு நல்லார். ஷட்ஜம் என்னும் பெயரும் ஏனைய ஆறு சுரமும் பிறத்தற்கிடமாயது என்னும் பொருள்தருதலால் இளி சட்சமே எனக் கொண்டார் அடிகளார்.

இதனை மறுக்கப்போந்த பாவாணர் 'ச - ப என்னும் சுரப்பிடிப்பே பண்களுக்கெல்லாம் அடிப்படையாதலின் பஞ்சமம் (............) பட்டடையென்றும் வண்ணப் பட்டடை யென்றும் கூறப்படுவதாயிற்று' எனக் கூறுகின்றார். அவர் கருத்துப்படி ச - ப என்னும் இரண்டன் சுரப்பிடிப்பும் அடிப் படையாவனவென்றால் பஞ்சமம் ஒன்றினைமட்டும் பட்டடை யெனக் கொள்வதேன்? ஏனைய ஆறு சுரங்களுக்கும் அடிப் படையாய் முதலிலுள்ள ஷட்ஜமன்றோ பட்டடை யென்று சிறப்பித்தற் குரியது. ஆகவே தங்கொள்கை யன்றென்னும் ஒரு காரணம் பற்றியே பிறர் கூறுவன வனைத்தையும் மறுக்க வேண்டும் எண்ணத்துடன் பாவாணர் இம் மறுப்பினை எழுதி யதாக அறிகின்றோம். இவ்விசை நூல் நுட்பமனைத்தும் அண் மையில் வெளிவரும் அடிகளாரது யாழ்நூலகத்துக் கண்டு அன் பர்கள் ஐயந் தெளிவார்களாக.

இயற்கையிற் காதல்

வித்துவான் G. சுப்பிரமணிய பிள்ளை, M. A., B L.,

(௩-அச-ம் பக்கத் தொடர்ச்சி)

இன்னுமோர் இயற்கைக் காட்சியைக் காண்போம். செல்வம் கொண்டே ஒருவன் உலகில் வாழ்க்கையை இனிது நடத்த முடியும். இல்லை யென்போர்க்கு இல்லை யென்னாது ஈவதும், பகைவரை வென்று புகழ்மாலை சூடுவதும் உள்ளவர்க்கே கைகூடும் என்று நினைத்து, ஒருவன் தன் காதலியைப் பிரிந்து காய்ந்தெரியும் கானமொன்றைக் கடந்து சென்றான். வழியெங்கும் காலை வைக்கவும் முடியாதபடி வெப்பத் தீ வாட்டிக்கொண்டிருந்தது. அத் துன்பத்தினிடையும் பிரிவறியாத, களிறும் பிடியுமான இரண்டு யானைகள், தங்கள் கன்று பின்னால் வர, ஒரு நீர் நிலையை அடையக் கண்டான். வற்றியுலர்ந்த அக்குளத்தில் சிறிதளவு நீரே உண்டு. அதைக் கண்டதும் யானைக்கன்று துள்ளிப் பாய்ந்து தன் துடி போன்ற காலினால் கிண்டிக் கலக்கியது. அக் குட்டியின் விளையாட்டைக் கண்ணுற்று யானைகள் தம் நீர்வேட்கையையும் மறந்தனபோலும். பின், ஆண்யானை தன் பிடிக்கு அக் கலங்கிய நீரை முதலில் ஊட்டி அதன் வயிறு நிறைந்தது கண்டு, பின் எஞ்சியுள்ள நீரைத் தான் பருகி மனமகிழ்வதை அக் காதலன் கண்டான். கன்று கலக்கிய சிறிதளவு நீரேயாயினும் அதைத் தன் பெண்ணோடு பகுத்துண்டு பிரியாது ஒன்றி வாழும் அவ் விலங்குகளின் நற்பேறே பேறு, என்று நெட்டுயிர்த்தான். பசும்புல்லும் தலைகாட்டாத அப் பாழ்ஞ்சுரத்தில் வாழும் புறவுகளின் காதல் ஒருபால் நிகழக் கண்டான். பெடைகள் வெயிலின் கொடுமையால் வாடி வதங்குவதைக் கண்டு ஆண் புறவுகள் அன்புகூர்ந்து, தமது மெல்லிய சிறகுகளை விரித்து அந் நிழலாலே அப் பெடைகளின் வெம்மையைத் தணிக்கும் காட்சி கண்கொள்ளாக் காட்சிதான். ஆண்புறவு சிறகை விரிப்பதும், அதன் அடியிற் பெண்புறவு அடங்கி ஒடுங்குவதும், ஆண்புறவு இதஞ்சொல்லி ஆற்றுவது போலத் தன் கோலிய சிறகாற் புல்லி அன்பு செய்து ஆதரவளிப்பதும், சிறகினுள் இடுக்கிச் சிரமந் தீர்ப்பதும், படபடவென்று சிறகையடித்து விசிறிக்கொண்டு வெந்துயர் களைவதும் இயற்கையுண்மையின் 'இதிகாச'மேயாகும். கடத்தற்கரிய கனலுமிழும் அக் கொடுங்கானத்தில் வளர்ந்த மூங்கில்களும் பாறைகளின் வெம்மையால் கரிந்து போயின. நிழல் இல்லாத கொடுமையால் புல்வாய் இனங்கள் புலம்பித் தவித்தன. ஓர் ஆண்மான் வெயிலாற் சாம்பி வ்தங்கும்

தன் பிணையைக் கண்டு மனமிளகி, தான் அசையாமல் நின்று கொண்டு தன் நிழலிலே அப் பிணையைப் படுக்கச் செய்து பரிவு காட்டியது. இவ்வாறு அன்பாய்த் தன் பிணைக்கு ஆறுதல் அளிக்கும் நிலைநோக்கிப் பேருவப்பெய்தும் அக் கலைமான் பண்ணிய தவம்தான் என்கொல்! இவ் வன்புக் காட்சிகளை யெல்லாம் கண்ட அக் காதலன் மனம், என்ன, கல்லா? இவை அவனுக்குத் தன் ஆருயிர் மடக்கொடியை நினைப்பூட்டி, அவள்பால் அவனை இழுத்துச்செல்லும் அல்லவா? ஆகையால் அவன் விரைவில் மீண்டு விடுவருவான் என்றும், அதற்கியைந்த நிமித்தங்கள் மனையின்கண் காணப்படுகின்றன என்றும் தலைவி வாயிலாகக் கவிஞர் கூறும் பாடல் வருமாறு:—

" அரிதாய அறனெய்தி அருளியோர்க் களித்தலும்
பெரிதாய பகைவென்று பேணாரைத் தெறுதலும்
புரிவமர் காதலிற் புணர்ச்சியுந் தருமெனப்
பிரிவெண்ணிப் பொருள்வயிற் சென்றநங் காதலர்
வருவர்கொல் வயங்கிழாஅய் வலிப்பல்யான் கேளினி;
அடிதாங்கு மளவின்றி அழலன்ன வெம்மையாற்
கடியவே கனங்குழாஅய் காடென்றார் அக்காட்டுள்
துடியடிக் கயந்தலை கலக்கிய சின்னீரைப்
பிடியூட்டிப் பின்னுண்ணுங் களிறெனவு முரைத்தனரே;
இன்பத்தி னிகந்தொரீஇ இலைதீர்ந்த உலவையால்
துன்புறூஉந் தகையவே காடென்றார் அக்காட்டுள்
அன்புகொள் மடப்பெடை அசைஇய வருத்தத்தை
மென்சிறக ராலாற்றும் புறவெனவு முரைத்தனரே;
கல்மிசை வேய்வாடக் கனைகதிர் தெறுதலால்
துன்னரூஉந் தகையவே காடென்றார் அக்காட்டுள்
இன்னிழ லின்மையான் வருந்திய மடப்பிணைக்குத்
தன்னிழலைக் கொடுத்தளிக்குங் கலையெனவு முரைத்தனரே;
எனவாங்கு,
இனைநல முடைய கானஞ் சென்றோர்
புனைநலம் வாட்டுந ரல்லர் மனைவயிற்
பல்லியும் பாங்கொத் திசைத்தன
நல்லெழி லுண்கணும் ஆடுமா லிடனே" (கலித்தொகை—11)

ஒரு கணவன் தொழிலின் நிமித்தம் பிரிந்து செல்லக் கருதினான். அவன் மனைவியும் உடன்வருவதாகத் தெரிவித்தாள்.

கணவன்—"பெண்ணே! நான் செல்லவேண்டிய வழியோ காட்டுவழி. கதிரவனின் கடுஞ்சினத்தால் எங்கும் நெருப்பு வீசிக் கொண்டிருக்கும். இனிமொழியாய்! மழை யென்பதே அறியாத அக்காடு நின் மெல்லடியால் மேவுதற்கெளிதோ?"

மனைவி—" தலைவ! காற்றினும் நிலைநில்லாத வாழ்நாளை யுடைய யான் உம்மோடு உடனுறைவதையே வாழ்வாகக் கொண் டுள்ளேன். உம்மைப் பிரிந்து துயருற்று இறத்தல் நல மாகுமா ?"

கணவன்—"அமிழ்தூறும் அணிமுறுவலாய்! நீ அங்குவந்து தண்ணீர் கேட்டுத் தவித்தால் யான் என்செய்வது ?"

மனைவி—"தாங்கள் அறம் நோக்கித் தளர்வதை அறிந்தேன். ஆனல், ஆற்றில் நீர் சென்று கழிந்தாலொத்த நிலைத்திராத இள மையையுடைய யான் உமது நெஞ்சமே தஞ்செென வாழ்கின் றேன். யான் உம்மை நீத்து மனமுடைந்து மாண்டு முடிவது நலமாகுமா ?"

கணவன்—"வேய்வென்ற தோளி! மரமும் நிழலுமற்ற அக் காட்டில் நீ எங்ஙனம் வருதல் கூடும் ?"

மனைவி—"யான் வெயிலால் வருந்தினும் உமது தண்ணளி யைப் பெற்று மகிழ்வதே மேலானது. உமது அடிநிழலைப் பெறாது இவ்வில்லின் நிழலிலே தங்குவேனாயின், நீண்டநாள் வெயிலின்றி நிழலில் நின்ற தளிரானது வெளுத்து அழகு மாறுவதுபோல், வாடி இறந்துபடுவேன். இது முறையா ?"

கணவன்—"ஐயோ! அம்புகளும் நுழைய முடியாத கல் நிறைந்த அந்த வெய்ய சுரம் உன்னல் அடியிடவும் இயலாத கொடுமை யுடையதன்றோ !"

மனைவி—" அக் கொடிய கானகத்தும் பெரிய கழுத்தினையும் அழகையும் உடைய கலைமானின்பின் நீங்காது திரிந்து இன்புறும் பிணைமானைக் கண்டதில்லையோ? அவை என்றுவது பிரிந்த துண்டா? ஆதலால் யானும் உடன் வரல்வேண்டும்."

இவ்வாறு உரையாடி, மனைவி இயற்கையி னியன்ற ஒழுங்கை யெடுத்துக்கூட்டி, தான் கணவன்மீது கொண்டுள்ள காதலின் பெருக்கத்தை விளக்குவது படித்து மகிழ்தற்பாலதாம். அப் பொருள் பொதிந்த பாட்டு வருமாறு :—

" கிளிபுரை கிளவியாய் நின்னடிக் கெளியவோ
தளியுறு பறியாவே காடெனக் கூறுவீர்
வளியினும் வரைநில்லா வாழுநாள் நம்மாகத்
தளியென வுடையேன்யான் அவலங்கொண் டழிவலோ ;

ஊறுநீ ரமிழ்தேய்க்கு மெயிற்றாய்நீ யுணல்வேட்பின்
நாறுநீ ரிலவென அறனேக்கிக் கூறுவீர்
யாறுநீர் கழிந்தன்ன இளமைநு் நெஞ்சென்னுந்
தேறுநீர் உடையேன்யான் தெருமந்தீங் கொழிவலோ ;

மாணெழில் வேய்வென்ற தோளாய் நீ வரின்தாங்கும்
மாணிழ லிலவாண்டை மரமெனக் கூறுவீர்
நீணிழற் றளிர்போல நிறனூழ்த்த லறிவேனுந்
தாணிழல் கைவிட்டியான் தவிர்தலைச் சூழ்வலோ ;

எனவாங்கு,

அணையரும் வெம்மைய காடெனக் கூறுவீர்
கணைகழி கல்லாத கல்பிறங் காரிடைப்
பிணையெருத் தெழிலேற்றின் பின்னர்ப்
பிணையுங் காணிரோ பிரியுமோ அவையே.'' (கலித்தொகை—20)

இவ்வாறு சுரத்தில் வாழும் விலங்குகள், அங்குள்ள துன்பங்களையும் பொறுத்துக்கொண்டு, என்றும் பிரியாது ஒன்றிவாழ்ந்து இடையறா இன்பம் துய்க்க வல்லனவா யிருக்கின்றன. ஏதாவது அவற்றினிடையே பிரிவு நேர்வதுபோலத் தோற்றினும், பெண் விலங்கு அப் பிரிவைத் தடுத்து, உடனுறைவதையே விழையும். இறைப்பொழுதும் தனித்தியங்க லாற்றாவாய்த் தவிப்புறும். இதைக் காதலர் இருவர் ஒருநாள் காட்டில் நேரேகண்டு வியப்பெய்தியதுண்டு. அங்கு ஓர் ஓமைமரம் நின்றிருந்தது. அதன் அடியில் நிழல் என்றும் சொல்வதற்குப் பொருத்தமில்லாத வகையாய், பொட்டுப் பொட்டாய் நிழலும் படலை படலையாய் வெயிலும் எனப் பரந்திருந்தது. வழிநடந்து மெலிவெய்திய காதலர் இருவர் அம் மரத்தடியில் இளைப்பாறி யிருந்தனர். அவ்வேளையில் ஓர் ஆண்யானை ஓசைப்படாமல் மெல்லஊர்ந்துவந்து அவ்வோமை மரத்தின் கிளையொன்றை ஒடித்தது. பின் அதைத் தன் கையில் ஏந்திக்கொண்டு, தன் பெண்யானை இருக்கும் இடநோக்கிச் செல்லாமல், வேறொரு வழிநோக்கி அடியெடுத்து வைத்தது. இதைத் தூரத்தில் நின்றிருந்த பெண்யானை பார்த்துக்கொண்டது. அதன் மனத்திற் கோபமும் ஐயமும் குமுறிக்கிளம்பின. வேறொரு பிடியைநோக்கித் தன் கணவன் செல்வதாக மனத்திற்கொண்டு, அக் காடு முழுதும் ஏங்கி எதிரொலிக்கும்படி அரற்றத்தொடங்கிப் பெரும்பூசல் விட்டது. அந்நிலையில் அக்களிறு வேறு எங்குச் செல்ல முடியும்? உடனே திரும்பித் தன் பிடியை அடைந்தது என்பது சொல்லாமலே விளங்கும். இவ் விலங்குகளின் தன்மையைக் கண்ட காதலர் இருவரும் இறும்பூதெய்தி மகிழ்ந்தனர். பின்னொருநாள் அக்காதலர்களுள் தலைவன் தலைவியைப் பிரியக் கருதியபொழுது, இதனை அறிந்திருந்த அவள்தோழி, அந்த யானைகளை நினைப்பூட்டி, தலைவி வருந்துவள் எனக் கூறும் பாட்டு :—

" நினைக்கலும் நினைதிரோ ஐய அன்றுநாம்
பனைத்தாள் ஓமைப் படுசினை பயந்த
பொருந்தாப் புகர்நிழ லிருந்தன மாக
நடுக்கஞ் செய்யாது நண்ணுவழித் தோன்றி

யொடித்துமிசை கொண்ட வோங்குமருப் பியானை
பொறிபடு தடக்கை சுருக்கிப் பிறிதோர்
ஆறிடை யிட்ட வளவைக்கு வேறுணர்ந்
தென்றூழ் விடரகஞ் சிலம்பப்
புன்றலை மடப்பிடி புலம்பிய குரலே.''

(நற்றிணை—318)

காட்டுவழிச் சென்ற தன் கணவனை நினைந்து ஒரு பெண் வருந்திக் கொண்டிருந்தாள். அவளைத் தேற்றித் துயர் களையும் தோழி, "அம்மா, நீ வருந்தவேண்டாம். உன் கணவர் உன்மீது அன்புகாட்டி அருளோடு மீண்டுவருவர். அவர்செல்லும் வழியெல்லாம் அன்பின் மயமாகவே தோன்றும். ஆண்இனம் பெண்இனத்தை ஆதரித்துப் போற்றக் காண்பர். ஆண்யானைகள் மெல்லிய கிளைகளையுடைய யா மரத்தின் பட்டையை யுரித்து அதன் நீரைப் பிடிகளுக்கு ஊட்டிமகிழும் காட்சியைக் காண்பர். ஆதலால் உடனே திரும்பி விடு வருவர்'' என்று இயற்கையின் மூலம் உணர்ச்சிகள் எழுவதை நன்கு புலப்படுத்தும் பாட்டு வருமாறு :—

" நசைபெரி துடையர் நல்கலு நல்குவர்
பிடிபசி களைஇய பெருங்கை வேழம்
மென்சினை யாஅம் பொளிக்கும்
அன்பின தோழியவர் சென்ற வாறே.''

(குறுந்தொகை—37)

இச் சிறிய பாடலில் இயற்கையின் உயிர்நிலையே துடிப்பது போன்று விளங்கக் காணலாம்.

சிவஞானபோத விரிவுரை நிறைவு விழா

திரு. இளவழகனுர் அவர்கட்குப் பாராட்டும் பரிசளிப்பும்

சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தின் சார்பில் ஏ ¼ திங்களாகத் திரு. இளவழகனுரவர்களால் நடைபெற்று வந்த சிவஞானபோத விரிவுரைகள் பேரளவான அன்பர் திரளுடன் தொடர்ந்து செவிமடுக்கப்பெற்று இனிது நிறைவேறினமையின், அதன் நிறைவுவிழா, 24-10-43 ஞாயிறு மாலை 4-மணிக்குச் சென்னைத் தொண்டைமண்டலம் பள்ளி மண்டபத்தில் மகாமகோபாத்தியாய பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியாரவர்கள் சிரிய தலைமையில் நிகழும். அப்போது, செட்டிநாட்டு இளவரசர் சர். A. முத்தையசெட்டியாரவர்கள் பரிசளிப்புத் தலைவராயிருந்து விரிவுரையாளர்க்குப் பரிசு வழங்க அன்புடன் இசைந்திருக்கின்றனர். தக்கோர் பலர் விழாவிற் கலந்துகொள்வர்.



புத்தனேரி. ரா. சுப்பிரமணியன்

கக. இசைப் பேரொலி

சோலைக் கூட்டத்தாரிடையே அகப்பட்டுக்கொண்ட வேடனின் சிந்தைக் கடலில் சிந்தனை அலைகள் கொந்தளித்துக்கொண் டிருந்தன. இத்தகைய பேரிடரிலிருந்து எப்படித் தப்புவதென்று அவன் கலங்கி நின்றான். வல்லியோ கற்புத் தெய்வத்தை மனமாரத் துதித்தவண்ணம் துவண்ட கொடிபோன்று மயங்கி வதங்கினாள்.

கன்னியுங் காளையும் கதிகலங்கி நிற்கும் காட்சியைக் கண்டால் கல்லும் உருகும்! ஆனால் கல் நெஞ்சினனான சோலையப்பனோ கடுகளவும் உருகினானில்லை! தன்னுடைய ஆதிக்கத்தில் அவர்கள் அகப்பட்டுக் கொண்டனர் என்ற ஆணவத்தால் பயங்கரமான வெற்றிச் சிரிப்புடன் தன் கூட்டத்தார் புடைசூழ வல்லியிடம் நெருங்கினான் :

“பெண்ணே! இப்போது என்ன சொல்கிறாய்? ...” இந்தச் சோலையப்பனை இனிமேல் ஏமாற்ற முடியாது!..........என்று பிதற்றிய வண்ணம் “ஹீ...ஹீ......ஹீ...” என நகைத்துக் கொண்டு அவன் வல்லியை இழுப்பதற்காகத் தன் கையை நீட்டிய அதேசமயம், மின்னல் தாக்குதல் போன்று “பளீர்” என ஓர் அறை அவன் கன்னத்தில் தாக்கிற்று! வலி பொறுக்கமாட்டாமல் அவன் கண்கள் கோவைப் பழம் போன்று சிவந்தன. கோப வேகத்தில், “பிடியுங்கள்!... கட்டுங்கள் அவனை!...” என்று அவன் கூச்சலிட்டதைக் கேட்டும் கேளாமலுமாக முரடர்கள் அனைவரும் திடீரென வேடனைச் சூழ்ந்து கொண்டனர்.

தனியே அத்தனை முரடர்களையும் எதிர்த்து வெல்லுதல் முடியாத காரியம் எனக் கண்ட வேடன் ஓவியக் கலைநுட்பம் வாய்ந்த சிலைபோன்று அசைவற்று நின்றான். உடல் மட்டும் அசைவற்றிருந்ததே யொழிய உள்ளமோ உலை நீர் போன்று கொதித்துக்கொண்டுதா னிருந்தது.

இச் சமயத்தைக் கைவிடாமல் வஞ்சகனான சோலையப்பன் பல் அத்தனையும் காட்டிப் பயங்கரமாக நகைத்தபடியே வல்லியை அணுகி,

“ஆரணங்கே! இனி உங்கள் வீரமெல்லாம் என்னிடம் பலிக்காது. உங்கள் மனக் கோட்டையைத் தகர்த்து எறிந்து மண்ணோடு மண்ணாக்கி விடுவேன்!... வீண் பிடிவாதம் வேண்டாம்!... கண்ணே!... எங்கே உன் மலர்க்கையை அன்புடன் என்னிடம் கொடு!...” என்று நயவஞ்சகமாகப் பேசியவனாய் அவன் கையைப் பிடித்து இழுத்தான்!... இந்நிலையில்

உச்சிமீது வானிடிந்து வீழ்வது போன்ற உணர்ச்சியில் வல்லி ' ஓ 'வென்று அலறினாள் !

இக் கொடூரக் காட்சியைக் கண்ணுற்ற வேடன் தன்னைமறந்து, வெறி கொண்டவன்போல் கதறிக் கூத்தாடிக் கொண்டு முரடர்களின் ஊடே பாய்ந்தான் ! ஐயோ ! அவனால் மீள முடியவில்லை ! தம் கையில் சிக்கிய அவனை அப்படியே சேர்த்து அணைத்துத் தூக்கிக்கொண்டு முரடர்கள் மண்டபத்திற்கு வெளியே சென்றனர்.

பெண்மையின் எல்லை கடந்த பெருந்தீரத்தில் சோலையப்பனின் கைப் பிடியை உதறி எறிந்துவிட்டுத் தன் அன்பனைத் தூக்கிச் செல்லும் முரடர் களின் பின்னே முனைந்து பாய்ந்தாள் வல்லி ! தன் இரும்புக் கையையே உதறி எறிந்த ஏந்திழையின் இறுமாப்பை அடக்கவேண்டுமென்று மனம் குமுறிக் கொண்டு " கட்டுங்கள் அவளையும் !..." என்று சோலையப்பன் கதறினான் !

சற்று நேரத்தில் மண்டபத்திற்கு வெளியே, ஓர் அழகனும் அழகியும் தனித்தனியே ஒவ்வொரு மரத்தோடு சேர்த்துப் பிணிக்கப்பட்டிருந்த அரு வருப்பான காட்சி தென்பட்டது ! இந்தக் காட்சியைக் காண விருப்ப மில்லாமல் கண்ணை மூடி மூடி விழிப்பதுபோல் வெண்ணிலவோன் மேகங் களின் இடையே மறைந்து மறைந்து தோன்றினான் !

மானம் இழந்து வாழ்தலினும் மண்ணுலகை நீத்தல் மாண்புடைய தென்று வேடன் எண்ணினான். அவனுடைய மனதில் பழையநினைவுகள் படிப்படியாக வந்து குமுறின. இதுவரை அவன் இத்தகைய துன்பம் அடைந்ததில்லையாதலால் இத் துயரைப் பொறுக்க இயலவில்லை. தான் பாரிற் புகழ்மணம் பரப்பும் பாண்டிநாட் டிளவரசன் என்பதை எண்ணும் போது நாக்கைப் பிடுங்கிக்கொண்டு உயிர் துறக்கலாமா என்று அவனுக்குத் தோன்றும்! ஆருயிர் நண்பரான முறுவலாரை இடைவழியிற் பிரிந்து வந்ததை நினைத்தால் அவன் நெஞ்சு வெடித்துவிடும்போ லிருக்கும் ! கானில் கண்டு கூட்ட வந்த கன்னியைத் தான் காப்பாற்றவியலாம லிருப் பதைக் கருதுங்கால் கடமையில் தவறிய கயவனென்று தன்னையே இகழ்ந்து கொள்வான் ! தன் கடமைகளை நிறைவேற்றவாவது தான் கட்டாயம் உயிருடனிருந்துதான் தீர வேண்டுமென்று மனந் துணிவான் ! இவ்வாறு வேடனின் மனம் ஒரு நிலையிலில்லாமல் அலைந்தது:

" மயிர்நீப்ப வாழாக் கவரிமான் அன்னார்
உயிர்நீப்ப மானம் வரின் !"

என்ற வள்ளுவரின் வாய்மொழியை மெய்ப்பித்துவிடத் துணிந்தாள் வல்லி. ஆனால் தன்மீது தணியாத அன்பு கொண்டு பேணிவரும் ஆணழகனான வேடனுக்காகவாவது தான் உயிர்வைத்திருக்க வேண்டுமென அவள் மனம் வற்புறுத்தியது. எனவே கொடிய முரடர்களின் வஞ்சக் கயிற்றால் பிணிக் கப்பட்டிருந்த அம் மங்கையும் வேடனும் வாய்விட்டு ஒன்றும் பேசாமல் தம் கண்களின் வழியே உள்ளக் குமுறலைக் கண்ணீர் அருவியாகப் பொழிந்து கொண்டிருந்தனர்.

இவர்களைச் சுற்றிலும் நெருப்புப் பந்தங்களை விளக்குகளாகப் பிடித்துக்கொண்டு கொள்ளைக் கூட்டத்தார் குதூகலித்திருந்தனர். அவர்களுக்கு மத்தியில் கெம்பீரமான ஆணவப் பார்வையோடு சோலையப்பன் நின்றுகொண்டிருந்தான்! மேலும் என்னென்ன வகையில் வல்லிப் பெண் கொடியாளை மயக்கலாம் என்று அவன் சூழ்ச்சி முறைகளை ஆலோசனை பண்ணிக்கொண்டிருந்தான்.

அவனுடைய ஆலோசனையைக் கலைத்துக்கொண்டு "ஐயா!" என்று யாரோ கூப்பிடும் குரலைக் கேட்டுத் திரும்பியபோது, அழைத்தது கட்டுண்ட வேடன் எனக் கண்டு அவனிடம் சென்று,

"என்ன சொல்கிறாய் ?..." என்று அதட்டினான்.

மரியாதையின்றி அவன் ஒருமையில் பேசியதைக் கேட்ட வேடன், அக் கொடியவனுக்குச் சரியான சொற்சூடு கொடுக்கவிரும்பி, "மானிடப் பதரே! .." என்று விளித்து, "வீண் கர்வம் கொள்ளாதே!...... வேண்டுமானால் அதோ, அவர்கள் வைத்திருக்கும் தீப் பந்தங்களால் எங்களைச் சுட்டெரித்துவிடு!..." என்று மனங்கொதிக்கக் கூறினான்.

வேடனின் பேச்சைப் பொருட்படுத்தாமல் 'சரே'லென அவ்விடத்தைவிட்டு அகன்று மறுபடியும் ஆழ்ந்த யோசனையில் மூழ்கினான்.

இச்சமயம், என்றுங் கேட்டிராத புதியதோர் ஓசை திடீரென எழுந்து எல்லோரையுந் திடுக்கிடச் செய்தது. சற்றுநேரத்தில் அவ்வொலி தெளிவாகக் கேட்டது! இன்னிசை பரப்பும் பேரொலியாக இருந்தது! சிங்கிகள் 'கணீர், கணீர்' என்று ஒலித்தன. தாளவாத்தியங்கள் முழங்கின. பலதிறப்பட்ட மனிதக் குரல் கலந்த தமிழ் ஓசையும் விரவி வந்தது. பலர் கூட்டமாகக் கூடிப் பாட்டுப் பாடி வருகின்றார்கள் என்பதை ஊகிக்க முடிந்தது. மகிழ்ச்சி வெள்ளம் ஆவாரித்துக்கொண்டு தமிழ் இசை அலைகளுடன் பெருக்கெடுத்து வருவதுபோன்ற உணர்ச்சி எழுந்தது.

இந்த ஒலியைக் கேட்டதும் முரடர்களின் மனதில் சிறிது அச்சம் தோன்றியது.

எனவே சோலையப்பன் தன் கூட்டத்தாரில் இருவரை வேடன்-வல்லி இவர்களுக்குக் காவலாக வைத்துவிட்டு மற்றவர்களுடன் சோலையின் வாசற்பக்கம் போனான். புதிதாக வரும் இசைக்கூட்டத்தைச் சோலைக்கு வெளியிலேயே நிறுத்தி விடுவதற்கேற்ற தந்திரம் செய்வதென்னும் மன உறுதியுடன் அங்கு நின்றுகொண்டான்.

தமிழ் இன்னிசை பரப்பும் புதிய பேரொலியைக் கேட்டதும், கட்டுண்டிருந்த வேடனும் வல்லியும் புத்துணர்வு பெற்றனர். நேரம் செல்லச் செல்ல இசையின் ஓசை தெளிவாகக் கேட்டது. அந்த ஓசையுடன் "**நூண்டில்**" என்ற தமிழ்ச் சொல்லும் கலந்து வருவதைக் கேள்வியுற்ற வேடனின் உள்ளத்தில் ஒருவித பூரிப்பும் திகைப்பும் அவனறியாமலே ஏற்பட்டன. இசைக் கூட்டத்தார் வரும் திசையை நோக்கித் தங்கள் முகத்தைத் திருப்பிக்கொண்டு, வேடனும் வல்லியும் நடக்கப் போவதை மிக்க ஆவலுடன் எதிர்பார்த்திருந்தனர். (தொடரும்)

செய்திகள்

அணி மண்டபத் திறப்புவிழா

பழனியில், மலைக்கோயில் முன், மணி மண்டபத்தையொட்டித் தெற்கு நோக்கிய திருமதிலுக்கும் சிற்றுண்டிச்சாலைக்கும் இடையே உள்ள வெளியிடத்தில், 'உடுமலை, பழநி ஆண்டவர் மில்ஸ், லிமிடெட்' அவர்களால், கட்டுவிக்கப்பெற்றுள்ள அணிமண்டபம் (வித்தியாதா மண்டபம்) ஆவணி மாதம் 31-ம் தேதி (16-9-43) வியாழக்கிழமை அன்று காலை தாய்மைச் சடங்கு செய்வித்து, கோவைப்பெரியார் உயர்திரு. திவான்பகதூர் சி. எஸ் இரத்தினசபாபதி முதலியார் அவர்களால் திறந்துவைக்கப்பெற்றது. அக்காலை, சென்னை இந்துமத அறநிலையக் காப்புத் தலைவர் திரு டி. எம். நாராயணசாமி பிள்ளையவர்களும், அதன் ஆணையாளர், திரு. சி. எம். இராமச்சந்திரன் செட்டியார் அவர்களும், சர். பொன்னம்பலம் தியாகராஜன் அவர்களும், சென்னை டாக்டர் உயர்திரு எம். ஆர். குருசாமி முதலியார் அவர்களும் மற்றும் மில் ஏஜண்டுகளும், பெரியார்களும் வந்திருந்தனர். தலைவர் திரு. முதலியாரவர்களுக்கு இரண்டு வாழ்த்து இதழ் படித்துக் கொடுக்கப்பெற்றது. கோயில் அதிகாரிகள் ஆண்டவன் திருவுருவினை அணிசெய்து புறப்பாடு செய்வித்து மண்டபத்தில் எழுந்தருளுவிக்கத் தலைவர், யாவருடைய குதூகலத்திற்கிடையே மண்டபத்தைத் திறந்து வைத்தனர். இம் மண்டபத்தை எடுப்பதற்குப் பணி இயற்றிய உடுமலை, 'பழநி ஆண்டவர் மில்ஸ் மானேஜிங் ஏஜன்ட்ஸ்' உயர்திரு. ஆர். குருசாமி நாயுடு, ஜி. டி. கிருஷ்ணசாமி நாயுடு அவர்களைப் போற்றியும், நமது ஞானதண்டாயுதபாணியின் தண்ணருளானது தென்னிந்தியர் ஒவ்வொருவராலும் வடநாட்டினராலும் போற்றி வருவதொன்றாகுமென்றும், கடவுள் அன்பு குறைந்திருந்த ருஷியாபோன்ற நாடுகளும் இப்போது அதனையே கடைப்பிடித்து ஒழுகுவதாகவும், ஆதலின் மனித வாழ்க்கைக்குக் கடவுள் அன்பே இன்றியமையாத பெருந்துணை என்றும் இத்தகைய திருப்பணிகள் அன்பர்களுக்கு வசதியும், தமிழ்க்கலையும் பண்பும் விளக்குவதற்கு உற்ற பெரு நலனுமாகுமென்றுஞ் சொல்லிப் பாராட்டினர்கள். திருப்பணியாளர்களுக்காகத் திரு. ஆர். குருசாமி நாயுடு அவர்கள் நன்றியுரை கூறினர். பின்பு வந்திருந்தவர்களுக்கு விருந்துணவும், மாலையில் திரு. முசிரி சுப்பிரமணிய அய்யர் அவர்கள் இசையரங்கும் நடைபெற்றன.

சேலம் கல்லூரித் தமிழ்க் கலைக் கழகம்

திறப்பு விழா

மேற்படி கழகத்தின் திறப்பு விழா 14-9-43 மாலை வழக்குரைஞர் திரு. E. R. நரசிம்ம ஐயங்கார் அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. அவ்வமயம் ஆசிரியர் திரு. அ. வரதநஞ்சைய பிள்ளையவர்கள் "சங்கமும் நூற் புலவரும்" என்பதுபற்றி அரியதொரு விரிவுரை நிகழ்த்தி மாணவர்க்குத் தமிழுணர்ச்சியை ஊட்டினர்கள்.

17-9-43 மாலை 5-மணிக்குப் பெருமிலக் கிழார் திரு. நடேச பண்டாரம் அவர்கள் தலைமையில் உயர்திரு. சித்பவானந்த அடிகளார்

“அறத்தாறு” என்ற பொருள் பற்றி மிகவும் சுவைபட விரிவுரை ஆற்றினார்கள்.

இராமலிங்க அடிகள் பிறந்தநாள் விழா

1-10-43-ல் அடிகளின் 121-ம் பிறந்தநாள் விழா, சென்னை சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தாரால், சென்னைத் தொண்டைமண்டலம் பள்ளிக்கூட மண்டபத்தில் **கழகப் புலவர் இளவழகனாரவர்கள்** தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. பேரவை, மண்டபம் நிறைந்திருந்தது. அடிகள் வாழ்க்கை, அருட்பா, சீர்திருத்தங்கள் முதலியவற்றின்மேல் அரிய உரைகள் நிகழ்ந்தன.

தருமையாதீனத் தலைவரவர்களின் பத்தாண்டு ஆட்சிவிழா

5, 6, 7-9-43-ம் நாட்களில் இம் மாபெரும் விழா தருமையில் மிகச் சிறப்பாக நடைபெற்றபோது, ஆதீனச் சார்பில், திரு. க. வச்சிரவேல் முதலியார், பி. ஏ., பி. எல். வித்துவான் ஔவை சு. துரைசாமி பிள்ளை, வித்துவான் இராம. கோவிந்தசாமிப் பிள்ளை, வித்துவான் ச. தண்டபாணி தேசிகர், வித்துவான் முத்து. சு. மாணிக்கவாசக முதலியார், வித்துவான் வை. குஞ்சிதபாதம் பிள்ளை என்னும் எழுவர்க்கும் **தருமையாதீனத் தமிழ்ப் புலவர்** என்னும் பட்டமும், இசையரசு மு. தண்டபாணி தேசிகரவர்கட்குத் **‘தருமையாதீன இசைப் புலவர்’** என்னும் பட்டமும், சிவத்திரு ஈசான சிவாச்சாரியாரவர்கட்குச் **‘சைவசித்தாந்த சரபம்’** என்னும் பட்டமும், பாலகவி வே. இராமநாதன் செட்டியாரவர்கட்குத் **‘தருமையாதீன வித்துவான்’** என்னும் பட்டமும் வழங்கப்பெற்றன. பாலகவியவர்கட்கு இப் பட்டம் வழங்கியது குறித்துத் தேவகோட்டைச் சைவப் பிரகாச வித்தியாசாலை யாசிரியர்களால் 26-9-43-ல் ஒரு பாராட்டுக் கூட்டமும் நிகழ்ந்தது மகிழ்ச்சிக்குரியது.

தேநீர் விருந்து

திருவாளர் திருவொற்றியூர் T. சண்முகம் பிள்ளையவர்கள் செங்கற்பட்டு மாவட்டத்தின் நாட்டாண்மைக் கழகத் தலைவராக (President, District Board, Chingleput) அண்மையில் தேர்ந்தெடுக்கப்பெற்றமை குறித்துச் சென்னைப் பெத்துநாய்க்கன்பேட்டைத் தமிழன்பர்கள் மகிழ்ந்து 10-10-43-ல் ஒரு தேநீர் விருந்தும் பாராட்டுக் கூட்டமும் நடத்தினார்கள். திரு. T. சண்முகம் பிள்ளையவர்கட்குத் **‘தமிழ்ப் புரவலர்’** என்னும் பட்டம் ஒரே மனதாய் வழங்கப்பெற்றது.

பாலசுப்பிரமணிய பக்தசன சபை

சென்னை இராயப்பேட்டையிலுள்ள இச்சபையின் 31, 38, 39-ம் ஆண்டு விழாவும், திரு. வி. க. மணிவிழாவும் 15, 16, 17-10-43-ம் நாட்களில் முறையே இராவ்பகதூர் திரு. சி. எம். இராமச்சந்திரஞ் செட்டியாரவர்கள், திவான்பகதூர் திரு. டி. எம். நாராயணசாமிப் பிள்ளையவர்கள், பெருஞ்சொற்கொண்டல் பரிசை திரு. முருகேச முதலியாரவர்கள் தலைமையில் நடைபெறும். கடைசிநாளில் திரு. வி. க. படத்திறப்புவிழா

திரு. சி. என். முத்துரங்க முதலியாரவர்களால் நிகழப்பெறும். மூன்று நாட்களிலும் அறிஞர்களின் இனிய சொற்பொழிவுகள் நிகழும்.

மதுரை முத்தமிழ் மாநாடு

1-10-43-ல் இம் மாநாடு மகாமகோபாத்தியாய பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியாரவர்கள் அரிய தலைமையில் தொடங்கியது. சென்னை இந்து அறநிலையப் பாதுகாப்புக்கழக ஆணையாளர் இராவ்பகதூர் சி. எம். இராமச்சந்திரஞ் செட்டியாரவர்கள் முத்தமிழ்க் கொடி ஏற்றினர். சர். பி. டி. ராஜன் அவர்களால் மாநாடு திறந்து வைக்கப்பெற்றது.

மதிப்புரை

1. **திருநாரையூர்த் திருமுறை:** பதிப்பித்தவர்: ந. சொ. அரு. அருணாசலன், தியாகராயநகர், சென்னை; இலட்சுமிபுரம் சொக்கலிங்க வித்தியாசாலை வெளியீடு—5. முக்காலணா அஞ்சற்றலை அனுப்பி விலையின்றிப் பெறக்கூடியது.

தில்லைக்குக் காதம் தொலைவில் உள்ள திருநாரையூர் என்னும் திருப்பதியின்மேல் எழுந்துள்ள தேவாரப் பதிகங்களும், திரு. இரட்டைமணி மாலையும், அப்பர் சம்பந்தர் நிகழ்ச்சிகளைக் குறிக்கும் திருத்தொண்டர் புராணச் செய்யுட்களும், திருமுறை கண்ட புராணமும் ஒருங்கு தொகுக்கப்பட்டு இச் சிறு நூல் வெளிவந்துள்ளது. திருநாரையூர்த் திருமுறைப் பாடல்களை ஒருங்கே கண்டு பயில்வதற்கு ஏற்ற கருவியாக இது, உதவும். அச்சும், தாளும், அமைப்பும் அழகாக உள்ளன.

2. **திருப்புகலூர்த் தல வரலாறு:** ஆசிரியர்: G. கலியாணம் பிள்ளை, B.A., Dip. Econ. வெளியிட்டவர்: திருப்புகலூர்த் திருக்கோயிலார்.

சென்னை அறநிலையப் பாதுகாப்புக் கழகத்தார் ஏற்பாடு செய்துள்ளபடி திருக்கோயிலின் வரலாற்று விளக்கங்கள் கோயில்கள்தோறும் வெளியிடப்பட்டு வருதலால், அம்முறையில் இந்நூலும் நல்ல வகையில் வெளிவந்துள்ளது. முருக நாயனர் தோன்றியதும், அப்பர் பேரின்பப்பேறு அடைந்ததும் இத் திருப்பதியாகும். வரலாறு, திருக்கோயில் நடைமுறை, நூல்கள், கல்வெட்டுக்கள் முதலியன விளக்கப்பட்டுள்ளன. திருக்கோயில் விளக்கப்படமும், நிழற்படங்களும் சேர்க்கப்பட்டுள்ளன. இறுதியில் திருப்புகலூர்த் தேவாரங்களும், திருப்புகலூர் அந்தாதியும் இணைக்கப்பட்டுள்ளன. இத்தகைய நூல்கள் அனைவர்க்கும் பெரிதும் பயன்தருவனவாகும்.

3. **தணிகைநாயகன் மாலை:** ஆசிரியர்: தணிகைமணி ராவ் பகதூர் வ. சு. செங்கல்வராய பிள்ளை எம். ஏ. விலை அணா 4.


இது, செய்யுள்நூல். நூற்றுக்கு மேற்பட்ட திருவிருத்தங்களால் அமைந்த புதிய நூல். ஆசிரியர், தணிகை முருகன் திருவடித் திறத்தில் நாளும் தணியாக் காதலுற்றுத் தொண்டு செய்துவரும் செழுதகைமையால், தமது அறுபதாம் ஆண்டின் நிறைவுத் திருநாளில் (15-8-1943), இம் மாலை நூலை யாத்து, அப் பெருமானுக்கு, "அடியேன் உரைத்த புன்சொல் - அது மீது சித்தமுந் தன் - அருளே தழைத்துகந்து - வரவேணும்" என்று ஓர் இனிய வேண்டுகோளுடன் அடியுறையாக வழங்கியிருக்கின்றனர். அன்பு நிறைந்த இந்நூல், அனைவரும் உருகி ஓதுதற்குரிய இனிய எளிய செய்யுட்களால் அமைந்துள்ளது. அறிவுக்கு இன்பந் தருங் கற்பனைகளும் அணிகளும் செய்திகளும் அங்கங்கும் மிளிர்கின்றன. நூலுக்கு முன்னும் பின்னும் உரிய குறிப்புக்களும் உள்ளன. முருகன் அன்பர்க்கு இது சிறந்த விருந்து.

4 சுட்டு விளக்கம் அல்லது அடிப்படை வேர்ச்சொல் ஐந்து :

ஆசிரியர்: புலவர் ஞா. தேவநேயன் B. O. L. கிடைக்குமிடம்: சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை. விலை ரூ. 1-4-0.

இந்நூல், மொழிநூற் கலையாராய்ச்சியின் திறவுகோல் என்று சொல்லலாம். இந்நூலின் முகவுரை, இந்நூல் எழுதற்கு ஏற்ற திட்டமான அடிப்படையினை முன்னறிவாக நன்கு வகுத்துக் காட்டுகின்றது. நூலுள், முன்னுரை என்னும் பகுதி, மொழி தோன்றிய வகை, தமிழ் தனி இயற்கை மொழியாதல், தமிழ்ச் சொற்களின் காரணக் குறித்தன்மை, தமிழில் நெடில் முன்னர்த்தோன்றினமை முதலிய கருத்துக்களைத் தெளிவாக விளக்குகின்றது. அடுத்து, இரண்டாம் பகுதியில், சேய்மைச் சுட்டாகிய ஆ, அண்மைச் சுட்டாகிய ஈ, முன்மைச் சுட்டாகிய ஊ, எழுகைச் சுட்டாகிய எ, உயரச் சுட்டாகிய ஓ, என்னும் ஐஞ்சுட்டுக்களின் தோற்றம் நுவலப்படுகின்றது. மூன்றும் பகுதியில் இச் சுட்டெழுத்துக்களாகிய அடிப்படையிலிருந்து அவற்றினடியாகப் பிறந்த சொற்கள் பலப்பல, தக்க ஒப்பு நோக்குகள் முதலியவற்றுடன் தனித்தனியாக வகுத்தெடுத்து விரிவாக விளக்கப்படுகின்றன. இறுதியில் நான்காம் பகுதியாக மூவிடப் பெயர்களும் ஐந்தாம் பகுதியாக வினாப்பெயர்களும் பற்றிச் சிற்சில குறிப்புக்கள் வருகின்றன; சுத்தொலிகளும் ஒலியடிச்சொற்களும் என்பதும், குறிப்பொலிகளும் குறிப்புச் சொற்களும் என்பதும் பிறவும் பற்றிப் பின் இணைப்புக்களும் வேறே உள்ளன.

120 பக்கங்களில் அமைந்த இச் சிறுநூல் தமிழ்க்கும் தமிழ்மக்கள் மாட்சிமைக்கும் மிக இன்றியமையாததாய்ப், பெரிய ஒளி விளக்கம் உண்டு பண்ணுவதாய்ப், பெரிதும் பயன்படத் தக்கதாய் அமைந்துள்ளது. தமிழ் மாணவர், தமிழாசிரியர், தமிழாராய்ச்சியாளர் முதலியோர்க்கும், பொதுவாக மொழிநூற்கலை மேற்கொள்வோர்க்கும் இந்நூல் கட்டாயமானது. ஆசிரியர் உதவி பெரிதும் பாராட்டற்பாலது.



சிவஞானபோத விரிவுரை நிறைவுவிழாப் பேரவையின் ஒரு பகுதி.

24—10—1943.

ஓம்
செந்தமிழ்ச் செல்வி
திங்கள் வெளியீடு

சிலம்பு-உ௦] சுபானு—ஐப்பசி (1943) [பரல்-கஉ

குறிப்புக்கள்

சென்னையில், மெய்கண்ட நூல் விளக்கம் :

அறிவு முதிர முதிர அம் முதிர்ச்சியில் சமய வாழ்க்கை மலர்ந்து மணக்கின்றதென்பது சான்றோர் கருத்து. அனைவர்க்கும் பொதுமறையாகப் பாராட்டப் பெறுகின்ற ஆசிரியர் திருவள்ளுவர் தமிழும், 'கற்றதனாலாய பயன் வாலறிவன் நற்றாள் தொழுதலே' என்று இறுத்துக் கூறுதலால் இதற்கு வேறு சான்று ஒன்றுந் தேவையில்லை. தமிழ் நாடு அறிவு முதிர்ந்த நாடு என்பதற்குச் சிறந்த அடையாளம், உயர்ந்த அருள் வாழ்க்கையை நுவலும் மெய்கண்ட நூலை அது பெற்றிருப்பதேயாகும். தமிழ்நாட்டின் இணையற்ற நாகரிகத்துக்கு, பழக்க வழக்கத்துக்கு, நல்வாழ்க்கைக்கு வேறு அடையாளம் ஒன்றும் வேண்டுவதில்லை.

'சிவஞானபோதம்' என்னும் மெய்கண்ட நூலின் கருத்துக்களை விரித்து நோக்கினால், அறிவு மெய்யறிவாகி அதன் பல வேறு வகைப்பட்ட கிளைகளும் மலர்களும் கனிகளும் அதன்கண் குலுங்கிக் காட்சி யளித்தலைக் காணலாம். ஆனால், மெய்கண்ட நூல், அவையெல்லாவற்றையுந் தன்னுள் அடக்கிக்கொண்டு மிகச் சுருங்கிய வடிவில் ஒரு சிறிய வித்துப்போல விளங்குகின்றது. அதனை அறிவதும், ஆராய்வதும், விரித்து விளக்கி மொழிவதும், வாழ்க்கையிற் கையாள்வதுந்தவிர அறிவுக்கும் உணர்வுக்கும் வேறு இன்பப்பேறு இல்லை. உலகத்தின் அறிவறிந்த மெய்ம்முடிபுகளெல்லாம் அதனுள் அடங்கிக் கிடக்கின்றன,

சிவஞானபோதம் மிக நுண்ணிய மெய்யுணர்வு மறை. மேலும், அது மிகச் சுருக்கமாக அமைந்துள்ளது. அந்நூலை அறிவதற்குக் கருவியறிவாக முதலில் இலக்கியம், இலக்கணம், அளவை, கலைகள், மொழிகள் முதலியவற்றில் தெளிந்த பழக்கம் வேண்டும்; பின்பு, ஏனைச் சமய இலக்கண இலக்கிய புகழ்நூல் உண்மைகளையுந் தெளிந்திருக்க வேண்டும். இவை மட்டும் போதா; மெய்யுணர்வுப் பேறும் இறைவனருளும் முதன்மையாய்க் கலந்து கனிந்து விளங்குதல் வேண்டும். இவற்றோடு, பிறர்க்கு இந்நூலை எடுத்து விளக்கி மொழிவதானால் அதற்கு நுண்ணிய இயற்கையறிவும், பரந்த கல்வியும், சொல் வன்மையும், ஆன்ம ஆற்றலும், உணர்வியக்கப் பேறும், கற்பிக்கு முறையும், தவமும், இரக்கமும், பொதுமையுள்ளமும் வேண்டப்படும். இதனால், பெறலரிய இச் செம்பொருள் நூலைத் தக்கார் சிலரே கையாள்வது நாட்டில் வழக்கமாயிற்று; விளக்கி மொழிவது அதனினும் அருமையாயிற்று. துவங்கினாலும் கடைசி வரையில் நிகழ்ந்து நிறைவேறுவதும், மக்கள் நிலைத்துத் தொடர்ந்து விருப்பமாய்க் கேட்பதும் இவ் வெல்லாவற்றையும் விட மிகமிக அரியவாயின.

இந்நிலையில், 24-10-43 ஞாயிறன்று சென்னையில் சிவஞான போத விரிவுரை நிறைவு விழா நிகழ்ச்சி ஆயிரக் கணக்கிற் குழுமிய ஆடவர் மகளிராகிய அன்பர் திரளுடன் சிறப்பாக நிகழ்ந்து நிறைவேறியதென்பது, பெருவியப்பினை விளைத்தது. சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தின் சார்பில், கிழமைக்கு இருமுறையாக ஒவ்வொரு மணிநேரம் சிவஞானபோத விரிவுரை மொத்தம் 50 விரிவுரைகளாகத் திரு. இளவழகனாரவர்களால் விளக்கி நிகழ்த்தப் பெற்று வந்தது. கூட்டமும் வரவர உணர்ச்சியோடு பெருகி வந்தது.

"சிவஞானபோத விரிவுரையின் துவக்கத்தில் 60 அல்லது 70 பேர் கூட்டத்தில் இருந்தனர். நூல் கடுமையானதென்று கூறுதலால், வரவர இக் கூட்டம் எங்கே 50 ஆகி 20 ஆகி 10 ஆகி 4 ஆகி இடையே நின்று விடுமோ என்று ஒரு நினைவிருந்தது. ஆனால், திருவருட் போக்கு அவ்வாறில்லை. வரவரப் பெருகியது. கூட்டம் 100 ஆயிற்று, 200 ஆயிற்று, 400 ஆயிற்று, 500 ஆயிற்று, 600-ம் ஆயிற்று, மேலும் ஆயிற்று; இன்று திர

ளான அன்பர்களுடன் நிறைவு விழா நிறைவேறுகின்றது. தமிழ்நாட்டுக்கே இந்நிகழ்ச்சி ஒரு சுடர் விளக்கு. இன்று தலைவர்களாக அமைக்கப் பெற்றிருந்த செட்டி நாட்டு இளவரசரவர்களும், பண்டிதமணியவர்களும் இவ் வியத்தகு நிகழ்ச்சியில் இருந்து கலந்துகொள்ள முடியவில்லையே என்று எண்ணமுண்டாகின்றது: நாட்டில் மற்ற இடங்களிலும் இளவழகனார் விரிவுரைகள் நிகழவேண்டும் ; உலகுக்குப் பெருவாழ்வு கொடுக்கும்."

—திவான்பகதூர் T. M. நாராயணசாமி பிள்ளை M.A., B.L.

" இவ்வளவுக்கும் இளவழகனாரவர்களே காரணம் ; விரிவுரை கேட்டுப் பெரும்பயன் அடைந்தோம். தமிழ், ஆங்கிலம், வடமொழி முதலானவைகளையும் மற்றவைகளையும் ஆராய்ந்திருக்கிறார்கள் ; விரிவுரைக் காலங்களில் நெறிமுறைப்படி நோன்பிருந்து பேசினார்கள் ; வாழ்க்கைக்குத் தேவையானவைகளை விளக்கினர். பிறர்க்கு உரைப்பவை இவர்கள் நடவடிக்கையில் உள்ளன. சிவஞானபோதம் இங்ஙனம் அருள்வெள்ளமென நிகழுமென்று எதிர்பார்க்கவில்லை. இந்தக் காலத்தில் இது, அற்புதம் ; அற்புதம்."

—T. S. நடேச சாஸ்திரிகள் B.A., B.L.

" தட்சிணாமூர்த்திக்கே நால்வர் மாணவர் என்பர். சிவஞானபோத விரிவுரைக்கு இவ்வளவு திரளான அன்பர்கள் குழுமியிருப்பது காண இறும்பூதுண்டாகின்றது. இளவழகனார் விரிவுரையில் தெளிவு இருக்கின்றது."

—ம. பாலசுப்பிரமணிய முதலியார் B.A., B.L.
சைவசித்தாந்த மகாசமாச அமைச்சர்.

" இளவழகனார் தமிழும், கருத்து நுட்பங்களும், எளிமையும், உண்மையும், இலக்கணக் கல்வியும் மக்கட்கு இப்படி விருந்தாயிருக்கின்றன. கருத்துக்களை இவ்வளவு எளிமையாக இவர்கள் விளக்குகிறார்களே "

—C. M. இராமச்சந்திரஞ் செட்டியார் B.A., B.L.

" சென்னை நகரின் வரலாற்றிலேயே சிவஞானபோத விரிவுரை நிகழ்ச்சி இப்படி நிகழ்ந்ததில்லை ; நிறைவேறியதில்லை."

—இராமலிங்க ஆசாரியார்.

" சிவஞானபோத விரிவுரைகளைப் பற்றி 50 பேர்க்குமேல் அவ்வப்போதும் வந்து பாராட்டிச் சொன்னதுண்டு. ஒருவராவது குறை கூறியதில்லை. இது ஏதோ அருள் நிகழ்ச்சி. சைவர்களாகிய நாங்கள் இறுமாப்படைகின்றோம். அழகனார் சிந்தனைசெய்து உரைக்கின்றார். குருவின் மாட்டு அன்புடையவர் ; அதனாலேதான் இவ்வளவு ஆற்றல் பெருகியது."

—தமிழாசிரியர் மயிலை சிவ. முத்துக்குமாரசாமி முதலியார்.

"கூட்டத்தில் உணர்ச்சி மிகுதியாயிருக்கிறது; இளவழகனார் சிவஞானபோதத்தை நன்கு விளக்கி மொழிகின்றார் என்று கேள்வியுற்று நேரிற் காண வந்தேன். இப்போது விரிவுரை கேட்டு மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்; தொடர்ந்து இவர்களே சித்தியார் விரிவுரைகளும் நிகழ்த்தினால் நலமாயிருக்கும். என்னால் இயன்ற உதவியும் செய்வேன். திருவருளால் இளவழகனார் சித்தாந்த உண்மைகளை உலகெலாம் விரித்துரைத்துத் தமிழும் சைவமும் வளர்த்து வரவேண்டும்."

—தருமையாதீனம் மவுனம் சோமசுந்தரத் தம்பிரான்

"மெய்கண்ட நூல்களுள் 'திருவுந்தியார்' என்னும் நூலும் ஒன்று. அதை ஒருகால் திறந்து பார்த்தபோது அதில் "கிடந்த கிழவியைக் கிள்ளி எழுப்பி" என்னும் பாட்டுக் காணப்பட்டது. அஞ்சி அன்று வைத்த நூலை இன்றும் எடுக்கவேயில்லை. எளிய புகழ் நூல்களில் என்னுள்ளம் ஈடுபடுவதாயிற்று. என்போன்றார் பலரை மருட்டிய அத்தனை அரிய நூல் இம் மெய்கண்ட நூல். இளவழகனார் சிவஞானபோதத்தைத் தொடங்குகின்றாரே என்னுமோ என்று நினைத்தேன். அவர் எப்போதும் அரியதையே தொடுப்பது வழக்கம்; ஆன்ம ஆற்றல் வாய்ந்தவர்; சித்தாந்த நுண்மைகளை ஐயந் திரிபற உணர்ந்தவர். அரியதை எடுத்துத் தோல்வியுறுவதும் பாராட்டத்தக்கதே. ஆனால், அரியதை எடுத்து இவர் வெற்றியே பெற்றது வியத்தகு நிகழ்ச்சியாகும். உள்ளுருகி இவர்களைப்போல் உள்ளவர்கள் கூறக் கேட்கவேண்டும்."

—ராவ்பகதூர் வ. சு. செங்கல்வராய பிள்ளையவர்கள் M.A.

"சிவஞானபோத விரிவுரையின் நிறைவு விழாச் செய்தி யறிந்து மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். திரு. இளவழகனார் அவர்கள் அழுத்தமான கல்வியும், நுண்ணறிவும், உரைதெரிக்கும் ஆற்றலும், ஆராய்ச்சித் திறனுமுடையவர்; அளவற்ற தமிழார்வமும் உயர்ந்த நற்பண்புகளும் வாய்ந்தவர்; அவர்கள், ஒப்புயர்வற்ற சைவசித்தாந்தச் செம்பொருள் நூலாகிய சிவஞானபோதத்திற்கு உரைவிரித்துத் திரளான மக்கள் கேட்டுப் பயனடையுமாறு செய்துவந்தது மிகவும் பாராட்டற்குரியது."

—நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார்

"சிவஞானபோதம் படிப்போர் தொகை மிகவும் சிறுத்துடைய இந்நாளில் திரளான அன்பர்கள் ஒருங்குகூடி அதனை விரும்பிக் கேட்குமாறு ஒருவர் கற்பிக்கின்றார் என்னில், வேறொரு விவரமும் தெரியா நிலையிலும் அவர் திறமையை வியக்கவே வேண்டும். வெளியூரில் இருக்கும் காரணத்தால் திரு. இளவழகனார் நடத்திவந்துள்ள சிவஞானபோத வகுப்பினை

ஒரு முறையேனும் காணும் பேறுபெருது போயினேன். ஆயினும், அன்பர்கள் சொல்லக் கேட்டு இறும்பூதெய்தினேன்.

எம் முறைகளைப் பின்பற்றுவதால் இவ்வரிய நூல் பொதுமக்கள் மனத்தைக் கவரவல்லதாக ஆக்கப்பட்ட தென்பதைப் புலவர்களும் சைவச் சொற்பொழிவாளர்களும் ஆராய்ந்தறிதல் மிக்க நலம் பயக்கும். நம்முடைய பண்டைப் பெருநூல்களை யெல்லாம் தற்கால நிலைமை நோக்கி எளிமைப் படுத்தித் தருதல் நாட்டு முன்னேற்றத்திற்குச் செய்ய வேண்டிய பல கடமை களுள் ஒன்று. அதனைச் செந்தமிழ் வல்ல திரு. இளவழகனுர் இனிது செய்து காட்டுவது பாராட்டத்தக்கது.

இவ்வாறு வகுப்பு நடத்தினதோடு அமையாது தாம் கற்பித்த முறை யிலேயே விரிவாக நூல் எழுதியும் வெளியிடுவாராயின் அவர் பணியானது மிகப் பரந்த அளவில் பயன்தரும். அவர் அங்ஙனஞ் செய்யுமாறு சென்னை அன்பர்கள் அவர்களுக்கு ஊக்கமளிப்பார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.''

—ச. சச்சிதானந்தம் பிள்ளை B.A., L.T.

"சிவஞானத் தெளிவொளியை எங்கும் ஏற்றிவைக்கத் தெரிந்த வேதாந்த சித்தாந்த சமரச வித்தகச் சைவப் புலவரேறு இளவழகனுர்."

—Dr. S. M. நமசிவாயம் L.I.M.

"நிறைவு விழாவிற்கு வரவேண்டுமென்னும் அவா எனக்குப் பெரி தும் இருந்தது. ரயில் நிலையத்திற்குச் சென்றேன். மழை மிகுதியாகப் பெய்தபடியால் ஒதுக்கிடம் பெருமல், நனைந்து உடம்பில் குளிர் நடுக்கமும் தோன்றிவிட்டது. ரயிலேற முடியாமல் பெற்ற டிக்கட்டைத் திருப்பிக் கொடுத்துவிட்டு வீட்டிற்குத் திரும்பலானேன். திரு. இளவழகனுர் அன் பும் பெருமையும் திறமையும் யான் அறிவேன். அவர்கள்பால் எனக்கு மிக்க மதிப்பும் அன்பும் உண்டு. நெஞ்சாரப் பாராட்டி வாழ்த்த நினைந்த தற்கு இவ்வாறு நேர்ந்தது. அவர்கள் தகுதியைப் பற்றி ஒரு குறிப்பு அனுப்புவேன்."

—மகாமகோபாத்தியாய பண்டிதமணி மு. கதிரேச செட்டியார்

"சிவஞானபோத விரிவுரையில் வாதங்கள் உண்டாவது உண்டு. இள வழகனுர் விரிவுரைகளில் பொதுமையுள்ளத்தோடு பலவகையினருங் கலந்து ஈடுபடுகின்றனர். இவர்கள், சித்தாந்த உண்மைகளைத் தம் சிந்தனை யால் யாவரும் ஏற்குமாறு தெளிவுபடுத்தி வழங்குகின்றுர்கள். இவர்கள் கட்டுரைகளையும் நூல்களையும் பார்த்திருக்கிறேன். யாழ்ப்பாணத்தில் இவர்களுக்குப் பல அன்பர்களிடையில் மதிப்பு உண்டு."

சுவாமி உருத்திரகோடீசுரர்

"சிவஞானபோத விரிவுரைக்குத் தக்கார் அமைந்தது பாராட்டுதற்குரியது. திரு. இளவழகனாரவர்கட்கு என் அன்பார்ந்த வாழ்த்து."

—திரு. வி. கலியாணசுந்தர முதலியார்

"விரிவுரை நிகழ்த்தும் திரு. இளவழகனாரவர்கள் அப் பணிக்கு முற்றும் தகுதியுடையவர்கள் என்பது அவர்கள் நுண்மாண் நுழைபுலத்தினை நன்கறிந்தார்க்கெல்லாம் ஒப்பமுடிந்த தொன்றும்."

—வித்துவான் M. பெரியசாமி பிள்ளை
திருச்சி, சைவசித்தாந்த சபை.

"சிவஞானபோத விரிவுரையில், குறிப்பிட்ட நேரத்துக்கு முன்பே மக்கள் மண்டபத்தில் நிறைந்திருந்தனர். குறிப்பெடுப்பதற்குப் பலர் ஏடும் எழுதுகோலுமாயிருந்தனர். சமயக் கருத்துக்களைத் தமிழிற் கூறமுடியாதே என்று எண்ணியிருந்தேன். இளவழகனாரவர்கள் விரிவுரை கேட்ட பின்பு அந்த எண்ணம் மாறிவிட்டது. அழகனார் விரிவுரையைத் தனித்தமிழ் அழகுசெய்தது. விரிவுரையில் எல்லாரும் தோய்ந்திருந்தனர்; வாழ்ந்தோம் என்று வாயிறுள்ளேயே சொல்லிக்கொண்டேன். ஒரு பெரியார் எதனையும் தனித்தமிழில் எழுதமுடியும் என்று நிறுவினார்; அழகனார் சமயக் கருத்துக்களையும் தனித்தமிழில் எழுதவும் பேசவும் முடியும் என்று நிறுவினார். அழகனார் விரிவுரை கேட்கத்தக்க அருமைபெருமை யுடையது."

—வித்துவான் ம. இராசமாணிக்கனார்

"எத்திறத்தவர்க்கும் விளங்கும்படி இனிய சமயவிரிவுரைகள் ஆற்றுதலில் அண்மையில் ஞானியார் இணையற்று விளங்கினர். அவர்க்குப் பின் யார் அவ்வாறு விரிவுரைகள் நிகழ்த்துவரோ என நாட்டில் ஒரு குறையிருந்தது. இளவழகனாரவர்களால் அக் குறை நிறைவேறியது. தமிழ்நாடு தாழ்ந்ததுபோதும், உயரட்டும் என்று சிவம் திருவுளம் பற்றியது போலும்!"

—ராவ்சாகேப் K. கோதண்டபாணி பிள்ளை B.A.

"நிறைந்த அறிவுடையவர்களாக இருந்தால் மட்டுமே இம் மெய்கண்டநூல் அறிய முடியும். இளவழகனார் யாவர்க்கும் விளங்கத் தெளிவாக விரித்துரைத்தார்."

—வித்துவான் பாரிப்பாக்கம் கன்னப்ப முதலியார்

"சிவஞானபோத விரிவுரைகளில் கருத்துக்களை அழகனார் சாறுபோலப் பிழிந்து வழங்கியிருக்கிறார்கள்."

—N. V. அப்பாதுரை முதலியார்
அமைச்சர், சென்னைச் சிவனடியார் திருக்கூட்டம்.

"இளவழகனார் தவஞான வள்ளலார்; மெய்யுணர்வு நுட்பங்களை வாரிவாரி வழங்கினார்கள்."

— காஞ்சி மணிமொழியார்

"சைவ உலகின் நன்னாள் இந்நாள்; வழங்குதற்கும் விக்குதற்கும் தொடர்புண்டு; அழகனார் சிவஞானபோதம் வழங்குதலில், அனைவரும் விழுங்குதலைத் தவிர விக்குதல் இல்லை."

—ஆலாலசுந்தரஞ் செட்டியார் M.A.

"இவ் விழாவைப்போல் இதுகாறும் சென்னையில் நடந்ததில்லை. ஆசிரியர் மறைமலையடிகள் எதனையும் அளந்தே கூறுவது வழக்கம்; அழகனார் திறத்தில் அவர்கட்கு மகிழ்ச்சி; பல நேரங்களில் போற்றிப் புகழ்ந்திருக்கின்றார்கள். அழகனாருங் குருவின் திறத்தில் உருக்கமுடையவர். குரு திருவடிகளைப் பொன்னாற் செய்து வழிபாடு செய்பவர்."

—வித்துவான் வை. குஞ்சிதபாதம் பிள்ளை

"இளவழகனார் இக்கால மெய்கண்ட தேவர்; அவர்கள் திறத்தில் வர வர அச்சமாக இருக்கின்றது."

—வித்துவான் மறை. திருநாவுக்கரசனார்.

"திருந்திய பெரும்புலவர் இளவழகனார்; பாம்பின்கால் பாம்புக்குத் தெரியும் என்றபடி எங்கட்குத்தானே அவ்வுண்மை நன்கு தெரியும். சிவம் என்பது செம்மை அல்லது நேர்மை என்னுங் கருத்துடையது. சிவஞான போத விரிவுரையில் அந் நேர்மை விளங்குகின்றது. பேச்சு, தனித்தமிழில், எளிய இலக்கண நடையில், ஆராய்ச்சித் திறமும் திருந்திய கருத்தும் அமைந்து, விரைதலும் ஆரவாரமுமின்றிச், செவ்விதின் செல்லுகின்றது."

—புலவர் ஞா. தேவநேயனார் B.O.L.

"என்னிடம் பழகியவர்களில் இளவழகனார் வல்லுநர்; நுண்ணறிவாளர்; நன்கு விளங்கக்கூடியவர்; சிவஞானபோத விரிவுரைகள் இவ்வளவு சிறப்பாக நடைபெறுதற்கு அவர் எவ்வளவு நூல்களைப் பயின்று உழைத்திருக்கவேண்டும்! எனக்கன்றோ அந்த அருமை தெரியும்! பாராட்டுதலோடு, பரிசும் வழங்குமின்."

—ஆசிரியர் மறைமலையடிகள்

"பெண்களுக்கும், கல்லாதவர்கட்குங் கூட விளங்கும்படி சிவஞான போத விரிவுரை நிகழ்ந்தது. இளவழகனார் காலத்துக்கேற்ற முறையில் விளக்கினார்."

—டாக்டர் தருமாம்பாள் அம்மையார்

"சிவஞானபோத விரிவுரை கேட்டு நாங்கள் தூய்மை பெற்றோம். நாய்க் குணம் ஒழிந்துவிட்டது; ஊனுணவு உண்டவர் அதனை விட்டனர்; கடவுள் வழிபாட்டிலும் சமய வாழ்க்கையிலும் உறுதியுண்டாயிற்று. அவைக்களங்களில் செவியின்பம் பெறுதலில் ஆர்வம் உண்டாய்விட்டது."

—பார்வதி யம்மையார்

"சிவஞானபோத விரிவுரைகளைக் கேட்போர், உள்ளுருகித் தோய்ந்து கேட்கின்றனர்; விரிவுரை நிகழும் இடம் 'நைமிசாரண்ய வனம்' போல் நிகழ்கின்றது; கேட்போர் அவ் வனத்து முனிவர்களைப் போலத் தோற்று கின்றனர். இவ்வளவு மெய்புணர்வு விளக்கம் அவையில் நிகழ்வது வியக் கத் தக்கது."

—ஞாயிறு வடிவேல் முதலியார்

"விரிவுரைக்குத் திரளான அன்பர்கள் வருகின்றார்களெனக் கேள்வி யுற்று வந்தேன்; போதம் இச் சிறப்பினைப் பெறுதல் மகிழ்ச்சி தருகின்றது."

—பு. பா. இரத்தினசபாபதி நாயகர்

அறிஞர்களும் அன்பர்களும் சான்றோர்களும் இங்ஙனம் இக் காலத்தில் வியத்தகு நிகழ்ச்சியாக வியந்து உணர்ச்சிகொள் ளும்படி, மெய்கண்ட நூல் விளக்கம் நிகழ்ந்திருக்கின்றது. சிவ ஞானபோத விரிவுரைகள் முடிந்தபின் இளவழகனாரவர்கள் ஏனைச் சித்தியார் முதலான 13 மெய்கண்ட நூல்களையும் ஒவ்வொன்றாக எடுத்துப் பொதுவில் ஒவ்வோர் விரிவுரையாகப் பேசி, மெய்கண்டநூல் விளக்கங்களைத் திருவருளால் இனிது நிறைவேற்றினர்.

நிறைவு விழாவில் அவையினர், விரிவுரையாசிரியர்க்குச் 'சிவநெறிச் செஞ்சொற் கொண்டல்' என்னும் பட்டமும் (ரூ. 1001) ஆயிரந்து ஒரு ரூபா பரிசும் வழங்கி மகிழ்ந்ததும் பாராட்டுதற் குரியது. சிலர் ஆசிரியர்க்கு மாலைகள் அணிவித்துத் தம் மகிழ்ச் சியைத் தெரிவித்தனர். கையிற் சிற்சில பொருள்களும் வழங்கி னர். சென்னையிற் பெயர்போன தாசன் படமெடுப்பகம் (தாஸன் ஸ்டுடியோ) உரிமையாளர் அழகனாருருவைப் பெரிதாக எழுதி அன்பளிப்பாக வழங்கியது அவையில் பேருணர்ச்சி தந்தது.

சென்னையிற் சிறந்த வணிகச் செல்வராகிய திரு. பு.மு. இராமாஞ் சுலு செட்டியார் B.A., B.L. (Advocate) அவர்களே இச் சிவஞான போத விரிவுரை நிகழ்ச்சிக்கு முதற்காரணமா யிருந்தவர்கள். துவக்கவிழா நிகழ்த்தியவர்கள் திவான்பகதூர் T. M. நாராயண சாமிபிள்ளை M.A., B.L. அவர்கள். அவையோரும் ஆசிரியரும் அவ் விரு பெருமக்களையும், சிவனடியார் திருக்கூட்டத்து அமைச்சர் உறப்பினர் முதலானவர்களையும் பெரிதும் பாராட்டிக் கூறினர்.

இம் மெய்கண்டநூல் நிகழ்ச்சி மிக்க உணர்ச்சியை நாட்டில் விளைத்திருக்கின்றது. இதனைப் போற்றுகின்றோம். விழா மண்டபத்தில் மின்விளக்கு ஒப்பனை முதலியனவும், ஐந்து மணி நேரங்களுக்கு மேலும் அன்பர்களிற் பலர் நின்றது நின்றபடியே கலையாது நிகழ்ச்சிகளில் ஈடுபட்டிருந்ததும் அவையினர் உணர்ச்சியை இனிது புலப்படுத்தியது. வாழி மெய்கண்டநூல்

தமிழுணர்ச்சி மாநாடு :

சென்னையில் தங்கசாலைத் தெருவிலுள்ள தொண்டைமண்டலம் பள்ளி மண்டபத்தில் 31-10-43 ஞாயிறு மாலை திரளான மக்கட் கூட்டத்துடன் இம்மாநாடு சென்னைத் தமிழறிஞர் கழகத்தின் சார்பில் சிறப்பாக நடைபெற்றது. அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பேராசிரியர் மகாமகோபாத்தியாய பண்டிதமணி மு. கதிரேச செட்டியாரவர்கள் தலைவராயிருந்து விளங்கினர். அறிஞர் பலர் கலந்து கொண்டனர். உணர்ச்சிமாநாடு மக்கட்குத் தக்க உணர்ச்சியை விளைத்திருக்கின்றது. மாலை 4-மணிக்குத் துவங்கி இரவு 9-மணி வரையிலும் கிளர்ச்சியாக நடைபெற்றது. தமிழ் நாட்டில் தமிழுணர்ச்சிக்கென்று ஒரு மாநாடு கூட்டல் வேண்டி நேர்ந்தமையே அனைவர்க்கும் ஒரு புத்துணர்ச்சியினை எழுப்பிவிட்டது. அரிய தீர்மானங்கள் சிலவும் அவையில் நிறைவேற்றப்பட்டன.

தமிழ் நாட்டின் முன்னேற்றம் முற்றும், தமிழ் உணர்ச்சியையே அடிப்படையாகக் கொண்டிருக்கின்றது. அடிப்படையைக் கை நழுவவிட்டு மற்ற நலங்களை அவாவுவதனால் என்ன பயன் கிடைக்கக்கூடும்? இன்றியமையாத இவ்வுண்மையைத் தமிழ் மக்கட்கு நினைவூட்டி எழுப்பித், தமிழ் உணர்ச்சியைக் கையாளும் வழிவகைகளையும் எடுத்துக் காட்டுவதே இவ்வுணர்ச்சி மாநாட்டின் கருத்தா யிருக்கின்றது.

தமிழர்கள் தமது மொழியை நல்ல நிலைமையில் வைத்துக் கொண்டு அதன்முகமாகத் தம் வாழ்க்கை நலங்களை வழிவழியாகப் பெற்றுவருதல் வேண்டும். தமிழ் மொழி, தமிழ் மக்களனைவர்க்கும் பொதுவுடைமை. தமிழைப் போலப் பொதுவுடைமை தமிழ் மக்களுக்கு வேறில்லை. அவ்வுடைமைக்கு ஊறுநேர்ந்தால், தமிழ்மக்கள் வாழ்க்கையிலும் ஊறு நேர்கின்றது.

தமிழ்மொழிக்கு ஊறு, தமிழ் மக்களாலும் பிறமொழி மக்களாலும் நேர்கின்றது. தமிழ்மக்கள் பெருந்தூக்கம் தூங்குகின்றனர்; காரணங் கண்டு அக்கறை செலுத்தாமல், இயல்பாகவே நிலைகுலைகின்றனர். மேன்மேலும் வளர்ச்சி நெறிகளைக் கடைப்பிடித்து முயலாமல், இருக்கும் அளவும் இழந்துபோகும் வகையிற் சோம்பல் வாழ்வு வாழ்கின்றனர். இந் நிலைகுலைவையே அழகென்று கருதி மகிழ்வாரும் தமிழ்மக்களுள் உளர். தமிழ் மக்களே இவ்வாறு விழிப்பின்றி யிருந்தால், அயல்மொழி மக்கள் இத் தமிழ்மொழியின் வகையில் எப்படி யிருப்பர்? தமிழ் மொழியில் அவர்களுக்கு என்ன அக்கறை? அவர்கள் தமிழறியாதவர்களாதலால், அவர்கள் தமது மொழியோடு தமிழை வழங்கும்போது தாறுமாருக வழங்க நேர்ந்து, தமிழ் கெடுகின்றது. தமிழறிந்த தமிழர்களே இவ்வாறு செய்கின்றனரே அதற்கென்ன செய்வது? விழிப்பும் உணர்ச்சியும் தமிழ் மக்களுக்கு இல்லாமையன்றோ இவ்வளவுக்குங் காரணம்!

மாநாட்டில் உணர்ச்சிச் சொற்பொழிவுகளாற்றிய அறிஞர்கள் தமிழுணர்ச்சிக்கான நெறிமுறைகளையும் வழங்கினர். தலைவர் **பெரும்பேராசிரியப் பண்டிதமணியவர்கள்** தமிழ்மக்களுக்கு 'முத்தமிழுணர்ச்சியும் வேண்டும்' என்று வலியுறுத்தினர்கள். இக்காலத்தில் தோன்றியுள்ள தமிழிசையியக்கத்தின் உணர்ச்சிக்கும் இதுவே அடிப்படை.

திருமிகு K. கோதண்டபாணி பிள்ளை B. A. அவர்கள், 'நாட்டு மக்கட்கு மொழிப்பற்று இன்றியமையாதது; நாட்டுப்பற்றிலும் மொழிப்பற்று முதன்மையானது' என்றும்,

தமிழாசிரியர் மயிலை சிவ. முத்துக்குமாரசாமி முதலியாரவர்கள், 'இயன்றவரையில் தமிழ்மக்கள் பேசுதலும் எழுதுதலும் அயல்மொழிகள் கலவாத நிலையிலேயே இருக்கப் பழகிவந்து, பின்பு முற்றிலுந் தூய தமிழில் இருக்க முயலவேண்டும்' என்றும்,

புலவர் ஞா. தேவநேயனுர் B.O.L. அவர்கள், 'தமிழிற் பிறமொழி கலத்தலாற் கேடு உண்டாதலால், தமிழ்மக்கள் தமது மொழிக்கு அது ஊறு என்றே உறுதியாய்க் கருதி விழிப்பாயிருக்க வேண்டும்' என்றும்,

வித்துவான் மு. வரதராசனூர் B.O.L. அவர்கள், 'தமிழ்மக்கள் தமது தாய்மொழியை, வெறுங் கலவைக் கொச்சை மொழிகளாக ஆக்கிவிடாமல் நல்ல வடிவத்தில் பிழையின்றி வழங்கியும், அகப் புறத் தூய்மைகளோடு இருந்து வாழ்க்கையில் பல வேறு துறை களிலும் அன்போடு இயைத்தும் வளர்த்து வர வேண்டும்' என்றும்,

டாக்டர் தருமாம்பாள் அம்மையாரவர்கள், 'மக்கள் பெயர், ஊர்ப் பெயர், வீட்டுப்பெயர், பண்டங்களின் பெயர், நூல்கள் இதழ் களின் பெயர் முதலியவைகளையெல்லாம், பெயரமைக்கும்போதே தமிழ்ப் பெயராக அமைத்து வழங்கி வரவேண்டும்' என்றும்,

பண்டிதை நாராயணி யம்மையாரவர்கள், 'பதியிழந்தனம், பாலனை யிழந்தனம், நிதி யிழந்தனம்' என்பதைப் போல், தமிழ் மக்கள் தமக்கென்றே அமைந்த தம்முடைய பழந்தமிழ்ச் சொற் களையும், கொள்கைகளையும், அரசையும், நாட்டையும் இனிமேலா யினும் இழந்துவிடாமைக்கான முயற்சியும் உணர்ச்சியும் உடை யவர்களாக விளங்கவேண்டும்' என்றும்,

கழகப் புலவர் இளவழகனூரவர்கள் 'தமிழ்மக்கள் ஆடவரும் மகளிருமாகத் தமிழை நன்ருகக் கற்றுக்கொள்வதே முதலில் தமிழ்க்கு வளர்ச்சியை உண்டாக்கும்; பிறமொழிச் சொற்கள் வந்து கலக்கும்போது கட்டாயமாக நீக்கமுடியாத சொற்களி ருந்தால் இசைவான பெயர்ச்சொற்களைமட்டும் தமிழ்வடிவாக்கிக் கொண்டு, மற்று, பற்பல வகையான புதிய உணர்ச்சிகளுக்குத் தமிழ்மொழியிலேயே புதிய புதிய சொற்களை அமைத்து வழங் கிக் கொள்ளவேண்டும்; தமிழை மெய்யுணர்வினுல் வளர்க்க வேண்டும்: பொருட் சிறப்பும் உணர்ச்சிச் சிறப்பும் மொழி யமைப்பினும் நூல்களினும் இயைந்து, மொழிக்கு நிலைத்த உயிர்ப் பும் செல்வாக்கும் உண்டாக வேண்டும்: தமிழ்மக்கள் தமது நாட்டளவில் நில்லாமல், உலகமுயற்சி யுடையவர்களாய் விரிப் பரந்து தமிழை வளர்க்கவேண்டும்; இப்போதுள்ள அளவினும் தமிழ் நிலைப்பதற்கு இப் பரந்த முயற்சி தேவை.' என்றும் இங்ஙனம் பற்பல வகையாக எடுத்துக்காட்டினர்.

தமிழ் மக்கள் இம் மாநாட்டின் பேருணர்ச்சியைப் பய னுள்ளதாக்கி ஆவன செய்து தமிழ்மக்களாக விளங்குதலே அனைவரானும் விரும்பத்தக்கது.

திருவாளர் சேதுப்பிள்ளை யவர்கள் தமிழ்த் தொண்டு :

சென்னைக்கு ஒரு தவம் உண்டு. அது சென்னையும் சேதுவும் ஒருங்கு பொருந்தியிருப்பதுதான். சென்னைப் பல்கலைக் கழகத்தின் தலைமை விரிவுரையாளரான தமிழ்ப்பெருந் திருவினர் ரா. பி. சேதுப்பிள்ளை B.A., B.L. அவர்களால் சென்னையில் தமிழ் இலக்கிய நலம் பல ஆண்டுகளாகவே தக்கோர்பாற் பரவிச் செழுமையுற்று வருகின்றது.

ஒரு நாட்டிற்கு நிலையான இயற்கைப் பெருமை அந்நாட்டின் இலக்கிய நலமே என்பது அறிவறிந்த துணிபு. ஒரு நாடு எதனை இழந்தாலும் இலக்கியம் எஞ்ஞான்றும் அழியாத் திருவாக நிலை பெற்று நின்று உற்ற நேரத்தில் மறுமலர்ச்சி வழங்குவது இயல்பு. அண்மையிற் காலஞ்சென்ற சுப்பிரமணிய பாரதியார் தமிழ் நாட்டின் சிறந்த இலக்கியச் செல்வங்களாகத் திருக்குறள், சிலப்பதிகாரம், கம்பராமாயணம் என்னும் மூன்றையும் தேர்ந்து பாராட்டினர்.

திரு சேதுப் பிள்ளையவர்கள் அறிவுப் பசிக்கு இம் மூன்றும் நறுவிருந்தாயின. இம் மூன்றையும் பற்றுக்கோடாகக் கொண்டு தமிழ்த் தொண்டு செய்யத் திரு. பிள்ளையவர்கள் உள்ளம் அலை வெள்ளமென வீறுபெற்றெழுந்தது. தமிழ்நாட்டின் பேரவைகளும், கிழமை நாள் திங்களிதழ்களுப், இளைஞருள்ளங்களும் இவ்வுணர்ச்சியை ஏற்று மலர்ச்சி பெறலாயின. எழுத்தாயினும் பேச்சாயினும் திரு. பிள்ளையவர்கள் தொண்டு, செஞ்சொற் சோலையும் இலக்கியப் பெருமையும் அமைந்து வீறுடன் நிகழ்வது இயல்பு.

சொல்லின் செல்வராகிய இப் புலமைப் பெரியாரின் இதயத் தமிழ் மலர்ச்சிக்குச், சென்னையில் மூன்று நறுநீர்ப் பொய்கைகள் ஏற்ற இடங்களாக அமைந்து விளங்குகின்றன. இளைஞர் கிறித்தவ மன்றம் (Y. M. C. A.), இந்திய இளைஞர் மன்றம் (Y. M. I. A.), மதுவிலக்கு மன்றம் (Good Templars' League) என்பன அவை. இவற்றின் சார்பில் முறையே கம்பராமாயணம், சிலப்பதிகாரம், திருக்குறள் என்னும் மூன்று நூல்களின் தமிழ் வகுப்புகளைத் திரு சேதுப்பிள்ளை யவர்கள் இனிது நடத்திவருகின்முர்கள். வகுப்புக்கள் இளைஞர் கிறித்தவ மன்றக் கட்டிடம், கோகேல் மண்டபம், புரொக்ரசிவ் யூனியன்

பள்ளி என்னும் இடங்களில் முறையே கிழமைதோறும் நடை பெறுகின்றன. 'கம்பராமாயணம்' துவங்கி எட்டு ஆண்டுக ளாகின்றன ; நிறைவுவிழா அண்மையில் உள்ளது. திருக்குறள் துவங்கி இரண்டாண்டுகளாகின்றன ; சிலப்பதிகாரம் அண்மை யில் துவங்கப் பெற்றது. மாணவ மணிகளாகிய இன்னிசை வண்டுகளின் மொய்ப்புக்குக் குறைவேயில்லை. பொதுவாக ஒவ் வோரிடத்திலும் தொடர்ந்து 300-பேர்க்குமேல் வந்து முன்பே இடம் பற்றிக் கொள்கின்றனர். திரு. பிள்ளையவர்களின் இலக்கிய இதயம் நறுமணங் கமழும் பெருஞ் செந்தாமரையாய் மண்டபங்களின் நடுவில் மலர்ந்து விளங்குகின்றது. தமிழ்த் தேன் நிறம் விளங்கிப் பொழிகின்றது.

திருவாளர் பிள்ளையவர்களின் தொண்டு தமிழ்க்கு உரு வான நற்றொண்டாகும். நாளும் இந் நறு நூல்களால் தமிழ் பரப்பி வரும் இப் பெரியாரின் உழைப்பு, நம் தமிழ்த்தாயின் புது மலர்ச்சி வரலாற்றில், பொன்னெழுத்துக்களாற் பொறிக்கப் பெறும் பெருமை யமைந்தது. திருவாளர் பிள்ளையவர்கள் நீடு இனிது வாழ்க !

தமிழ்ப் பாட்டும் திரு. சி. ஆர். சீனிவாசனும் :

திருச்சி வழக்குரைஞர் திரு. T. P. வேதாசலம் பிள்ளை B.A., B.L. அவர்கள் 'தமிழ்ப் பாட்டும் திரு சி. ஆர். சீனிவாசனும்' என்னும் இத் தலைப்பில் ஒரு விடைமொழியும் வேண்டுகோளும் அச்சிட்டு இதழ்களுக்கு அனுப்பியுள்ளனர். அதில், அவர்கள் குறித்திருக்குங் கருத்துக்கள் வருமாறு :

"இசைக்கு மொழி கட்டாயந்தானா என்ற ஆராய்ச்சி தீர்ந்து பல திங் கள் ஆகிவிட்டன. திரு சி. ஆர். சீனிவாசன் இப்போது 21-9-43-ல் இன்சலைக் கழகத்தில், இசைக்கு மொழி கட்டாயமில்லை என்றும், கர் நாடக இசை கட்டாய மென்றும், தமிழ்ப் பாட்டுக்கு ஆதரவு கொடுத்தால் இசைக்குத் தீங்கு விளைந்துவிடும் என்றும் பேசியிருக்கிறார். அவருடைய வாதத்தில் புதிய காரணம் எதுவுமில்லை.

"தமிழிசை இயக்கத்தை அவர், பகைவர் படையெடுப்பென்று பேசு வது எக்காரணம் பற்றி? இயக்கத்தில் அவருக்குள்ள வெறுப்பே காரணமா யிருக்கலாம். தாம் தமிழில் தீவிர அன்புள்ளவர் என்றும் தமிழ் மொழி யின் பழம்பெருமையில் பேரார்வம் உள்ளவரென்றும் பெருமையாய்ச் சொல்

விக் கொள்கின்ருர். ஆனல், தமிழ் மொழியில் அவருக்குள்ள பற்று, 'சுதேச மித்திரன்' தமிழை வாசிப்போருக்கு நன்கு விளங்கும். தமிழ்ப் பாடல்களையும் பண்டைக்காலத்துத் தமிழ்ப் பாடல்களின் மேன்மையையும் புதுப்பித்துப் போற்றவேண்டுமென்று தமிழர் விரும்பினல், உண்மைத் தமிழன்பர்கள் அதை ஏன் தடை செய்யவேண்டும்? கர்நாடக இசைக்கு முன்பே தமிழ் நாட்டில் இசை இருந்ததென்பதை யாவரும் ஒப்புக்கொள்வர்.

"தமிழிசை இயக்கம் தமிழர்களின் உள்ளத்தைக் கவர்ந்துவிட்டது. தமிழ்மக்கள் யாவரும் அதில் ஈடுபட்டுவிட்டனர். அவர்கள் ஆதரவு நாளுக்கு நாள் மிகுந்துகொண்டே வருகின்றது. இவ்வியக்கம் தமிழ்நாட்டில் நன்ருகக் காலூன்றிக்கொண்டது. வெளிப்படையாகவோ சாவாகவோ தோன்றக் கூடிய எவ்வகை எதிர்ப்பும் இனி இதற்கு இடையூறு செய்ய இயலாது. தக்க வல்லுநரைக் கொண்டு நன்ருராய்ந்தெடுக்கும் சிறந்த தமிழ்ப் பாடல்கள் நாளுக்குநாள் பெருகிக்கொண்டு வருகின்றன. கர்நாடக இசையை இவைகளெல்லாம் வளம்பெறச் செய்யும் என்பதில் ஐயமில்லை. தமிழிசை இயக்கம் கர்நாடக இசையைப் புறக்கணிக்கும் நோக்கத்துடன் பிறக்கவில்லை. சென்னையிலுள்ள சில செய்தித்தாள்கள் இவ் வியக்கத்தின் வளர்ச்சி குறித்து எழுதுவதற்குப் போதிய இடம் அளிக்க மனமில்லாமல் இருப்பது மிகவும் வருந்தத் தக்கது.

"இசைத் துறையில் பொதுமக்களுக்கு அவர்களுக்குரிய பங்கை அளிக்கவும் இசையின் மேன்மையை நிலைநிறுத்தவும் ஒரே ஒரு வழிதான் உண்டு. இன்னிசைப் பாடல்களைப் பாடி எல்லாரையும் இன்புறச் செய்து இசையன்பர்களாக்குவதற்குத் தாய்மொழி ஒன்றே தகுந்த வழியாகும். இசையுணர்ச்சியும் ஈடுபாடும் தாய்மொழி வாயிலாகத்தான் எவரும் நன்ருகக் கொள்ளமுடியும்! பிறர்க்குங் கற்பிக்க முடியும். வேற்றுமொழிகள் வாயிலாக நன்கு இயலாது. முன்னணிப் புலவர்கள் தாய்மொழியிலுள்ள அருமையான பாடல்களைக் கருத்துடன் கற்றுத் தங்கள் வல்லமையால் நன்ருகப் பாடித் தமிழர்களை மகிழ்விப்பார்களானல், இப்போது தங்களுக்குப் பொருள் விளங்கியோ, விளங்காமலோ உள்ள பாடல்களைப் பாடிச் செய்துவரும் சேவையைவிடப் பதின்மடங்கு மிகுதியான தொண்டு புரிந்தவர்களாவார்கள்.

"நம்மில் ஒரு சிலர் இருக்கிருர்கள்; தமிழன்பர்போல் நடித்துத் தமிழின் பெருமையைச் சிதைக்க இயன்றதையெல்லாம் செய்வார்கள். அத்தகைய நண்பர்களிடமிருந்து எம்மைக் காப்பாற்றுக எனக் கடவுளை வேண்டுதும். தமிழ் மக்கள் இப்போது முன்போல் இல்லை; திரள் திரளாய்க் கூடித் தமிழ்ப் பாடல்களைக் கேட்க ஆவலுடன் முன்வருகின்ருர்கள்; ஏன் அதைத் தடுக்கவேண்டும்? தமிழிசை இயக்கத்துக்கு மாறுகொண்டு பேசுவதனல் ஒரு பயனு மில்லை; நாட்டில் மனக் கசப்பு உண்

டாவதும், தங்கள் தன்மையைப் புலப்படுத்திக்கொள்வதுந் தவிர வேறொன்றும் இல்லை."

தமிழ் நாட்டில் தமிழ்ப் பாட்டுக்களின் வாயிலாக இசையரங்குகள் நடைபெறவேண்டும் என்னுந் தமிழிசை யியக்கத்துக்கு எவ்வகை எதிர்ப்பும் இருத்தற்கு இடமே இல்லை. திரு. பிள்ளையவர்கள் தக்க விளக்கங்கள் தந்திருக்கின்றார்கள். தமிழ் மக்களின் ஒற்றுமையே எல்லா ஆக்கங்களுக்கும் ஏதுவாகும். அவ்வொற்றுமை தமிழிசை யியக்கத்திலும் திருவருளால் மேலு மேலுஞ் செழித்துவருகவென விரும்புகின்றோம்.

வித்துவான் முதற் பரிசு :

திருப்பனந்தாள் திருமடத்து முதல்வரவர்களால் நிறுவப் பெற்றுள்ள வித்துவான் தேர்வின் முதற் பரிசு ரூபா ஆயிரம் இவ்வாண்டில், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் ஆராய்ச்சி நிலையிலும் கல்லூரியிலும் ஆசிரியராக இருந்து விளங்கிவரும் **பண்டித வித்துவான் லெ. ப. கரு. இராமநாதன் செட்டியாரவர்கட்குக்** கிடைத்திருக்கின்றது. திரு. செட்டியார், மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் முறையே 'பிரவேசம், பாலபண்டிதம், பண்டிதம்' என்னுந் தேர்வுகளிற் பயின்று தேறி, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில், 'தமிழாசிரியர் பழக்கத் தேர்விலும்' தேறியவர். இப்போது சென்னைப் பல்கலைக் கழகத்தின் வித்துவான் தேர்வுகளில் 'பிரிலிமினரி, முடிபு' என்னும் இரண்டு தேர்வுகளும் ஒன்றாக எழுதி முதற் பரிசும் பெற்றிருக்கின்றார்கள். தமிழ் நாட்டில், சிறப்பாகச் செட்டியார் வகுப்பில், இத் தேர்வுகள் பலவும் பரிசும் ஒருங்கு அமையப்பெற்றோர் வேறொருவரும் இல்லையென்று தெரிகின்றது.

மேலும், இவ்வாசிரியர், யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம், மதுரைத் தமிழ்ச் சங்கம் முதலியவற்றில் தேர்வாசிரியராகவும் இருந்துவருதல் மகிழ்ச்சிக்குரியது. அண்மையிற் 'கட்டுரைக் கோவை' என்னும் ஓர் அரிய உரை நூலும் இவர் இயற்றி வெளியிட்டிருக்கின்றனர். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் அது மாணவர்கட்குப் பாடமாக உள்ளது. அன்றியும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழிசைக் கழகத்தின் மதியுரைஞர் குழுவின் அமைச்சராகவும் இவர் இருந்து தொண்டாற்றி வருதல் பாராட்டற்பாலதாகும். திரு. லெ.

ப. கரு. இராமநாதன் செட்டியாரவர்கள் இளமையிலேயே இந் நலங்கள் பலவும் பெற்று விளங்குதலோடு, திருவருளுதவியால் இனியும் மேன்மேல் நலம் பல எய்தித், தமிழ்த் தொண்டுகள் விளங்கச் செய்து, நீடு இனிது புகழோங்கி வாழ்ந்துவருக என விரும்புகின்றேம்.

தமிழர் இனியேனும் கண்விழிப்பரா?

தமிழ் நாட்டுக்கு முன்பு இமயமலை வடக்கெல்லையாக இருந்தது. தமிழ்மக்களின் ஒற்றுமைக் குறைவினாலும், சோம்பல் வாழ்வினாலும் தமிழ் நாட்டின் வடக்கெல்லை வரவரக் குறைந்துகொண்டே வந்தது. ஒரு காலத்தில் விந்தியமலை வடக்கெல்லையாக இருந்தது; பின்பு கிருட்டிண ஆறு வடக்கெல்லையாக இருந்தது. பின்பு திருவேங்கடமலை வடக்கெல்லையாற்று. திருவேங்கடத்துக்கு வடக்கே ஒரு பகுதி ஆந்திர நாடு எனப்பட்டது.

வடவேங்கடம் தென்குமரி என்னுந் தமிழ்நாட்டு எல்லையையாவது தமிழ் மக்கள் நிலையுறச் செய்துகொள்ள வேண்டாமா! ஆந்திரமக்கள் திருவேங்கடமலைக்குத் தெற்கிலும் அங்கங்கே வந்து தங்கிக்கொண்டு, இப்போது சென்னை நகரையே ஆந்திரமாகாணத்துக்குத் தலைநகரமாக ஆக்கிக்கொள்ள வேண்டுமென்று முயன்று வருகின்றனர். சென்னையில் 1938-ல் இங்ஙனம் நிறைவேற்றிய தீர்மானம் ஒன்றை, இப்போது சென்ற திங்கள் இறுதியில், பல்லாரியில் திரு. விஜயா தலைமையில் கூடிய ஆந்திரமகா சபைக் கூட்டத்தில் மீண்டும் உறுதிசெய்திருக்கின்றனர். அன்றியும், திருவேங்கடத்துக் கல்லூரியை ஆந்திர பல்கலைக் கழகத்தில் இணைத்துத் தரவேண்டுமென்றும் ஒரு தீர்மானம் செய்துள்ளனர்.

தமிழ்மக்கள் இனியேனுங் கண்விழித்துத் தமக்கு இப்போது உள்ள குறைந்த அளவான நாட்டையேனும் நிலைப்பித்துக்கொள்வது கட்டாயமாகும். தமிழ் நாட்டுத் தலைவர்களெல்லாரும் உடனே ஒன்று சேர்ந்து, 'வடவேங்கடம் தென்குமரி' என்னும் கடைசி எல்லைப்படியாவது கட்டாயம் வேங்கடம் வரையில் தமிழ் நாட்டின் எல்லை அமையுமாறு உறுதியோடு தொடர்ந்து முயலவேண்டும் என்று தெரிவித்துக்கொள்கின்றேம்.

குரல் சட்சமே; மத்திமமன்று

(புலவர் ஞா. தேவநேயனார், B. O. L.)

க. தம் மறுப்பில் விபுலாநந்த அடிகளைப்பற்றி முதலிற் குறிப்பிடும்போதே, "பழந்தமிழிசைமரபினை ஆராய்தலையே தமது வாழ்க்கை நோக்கமாகக் கொண்டுழைத்துவரும் அருட்டிரு விபுலாநந்த அடிகளார்" என்று கூறியிருக்கிறார் நண்பர் வெள்ளைவாரணர். அடிகளார் பல ஆண்டுகளாகத் தமிழிசையை ஆராய்ந்து வருவது தமிழுலகனைத்தும் அறிந்ததே. ஆனால், பிறர் தமிழிசையை ஆராயவில்லை என்பது இதனால் எங்ஙனம் பெறப்படும்? யான் இயற்றமிழில் இறங்கிய அளவு இசைத்தமிழில் இறங்காவிடினும், சென்ற பன்னீராண்டுகளாக என்னாலியன்ற வரை இசைத்தமிழையும் ஆராய்ந்து வருகிறேன் என்பதையும், நால்வகை இசைக் கருவிகளும் என்னிடமுள என்பதையும், ஒவ்வொரு வகையிலும் ஒன்றேனும் ஓரளவு இயக்குவேன் என்பதையும், அச்சில் முடிகல (கிரெளன்) அளவில் 200-பக்கம் வரும் **இசைத்தமிழ்ச் சரித்திரம்** என்னும் நூலையும் சென்ற ஆண்டிலேயே எழுதி முடித்தேன் என்பதையும் நம் நண்பர் அறியக்கடவர். ஆனால், இதுவரை சொற்பொழிவு வாயிலாகவோ கட்டுரை வாயிலாகவோ சிறிதும் ஆரவாரம் செய்திலேன். ஆயினும், என்னொடு நெருங்கிப் பழகிய சில நண்பருக்கு எனது சிற்றளவான இசையாராய்ச்சி தெரியாமலிருந்திருக்காது. மேலும், எத்துறை ஆராய்ச்சியாயினும், அது நெறிமுறையும் உண்மை முடிபும் பற்றிப் போற்றப்படுமே யன்றி அளவும் உழைப்பும் பற்றி மட்டும் போற்றப்படாது.

உ. நம் அடிகளுக்குமுன் இசைத்தமிழை ஆராய்ந்தவரெல்லாம் இயல்நூற் பயிற்சி இசைப் பயிற்சி இவ்விரண்டுள் ஒன்றேயுடையார் என்று குறித்துள்ளார் நம் நண்பர். காலஞ் சென்ற ஆபிரகாம் பண்டிதர் அவர்கள் இவ்விரண்டிலும் இணையறத் தேர்ந்தவர் என்பது வெள்ளிடையாதலின், அவரிடத்து இக்குறையை ஏற்றிக் கூறுதல் நன்றிக்கேடும் புறன்பழிப்புமேயன்றி வேறாகாது. மேலும், இவ்விரு பயிற்சியோடு சொல்லாராய்ச்சியும் இன்றியமையாதது என்பதை நம் நண்பர் அறிவாராக.

௩. அடிகள் தமிழிசை மிகத் தொன்மை வாய்ந்தது எனக் கூறியிருப்பது உண்மையே. ஆனால், துத்தம் என்னும் சுரப்பெயர் உதாத்தம் என்னும் வடசொல்லினின்று வந்திருக்கலாம் என்றும், யாழ் வேறு வீணை வேறு என்றும், சுரத்திற்கு ஒரு நரம்பாகக்கட்டி எழீஇப யாழ் தமிழரது என்றும், ஒரே நரம்பில் பல சுரம் எழும் வீணை ஆரியரது என்றும் கூறியிருப்பது, தமிழ் நாகரிகத்திற்கும் இசைத்தமிழுக்கும் உண்மைக்கும் மாறும். வீணையென்னும் பெயர் வேறுபாட்டானேயே யாழ் வேறென்று கொள்வது, விருத்தாசலத்தின் வேறு பழமலை (முதுகுன்றம்) என்று கொள்வதே யாகும்.

௪. கரந்தைத் தமிழ்க் கழகத்தினரால் அடிகளார் யாழ் நூல் அண்மையில் வெளியிடப்படும் என்று அறிவிக்கிறார் நண்பர். இது இக்காலத்தில் தமிழைப் போற்றி உண்மையையெழுதுபவர்க்கு வெளியீட்டு வசதியில்லை யென்பதைத் தவிர வேறொன்றையும் தெரிவிப்பதாய்த் தெரியவில்லை. யாமும் காலம் வாய்க்கும்போது எம் நூல்களை வெளியிடுவோம் என்று கூறுவதல்லது வேறென் சொல்லக்கடவேம்! நூல்களைக் கண்டு மயங்குவதோ தெளிவதோ படிப்பார்க்கே தெரிந்துவிடும்.

௫. ஏழிசை முறைக்கும் யாழ்நரம்பு முறைக்கும் வேறுபாடு தெரியாமல், முன்னதற்கு 'உழைமுதற் கைக்கிளை யிறுவாய்க் கட்டி' என்பதைச் சான்று கூறுகிறார் நம் நண்பர். எல்லா நூல்களிலும் எப்போதும் ஏழிசை குரல் முதலவாகவே கூறப்படுமென்றும், யாழின் நரப்பு முறை, மரபையும் வாசிப்பாரின் ஆற்றலோடு கூடிய விருப்பத்தையும் பொறுத்ததென்றும் நம் நண்பர்க்கு அறிவுறுத்துகின்றேன். அதோடு சிலப்பதிகாரத்தை மறுபடியும் ஒருமுறை படிக்கத் தூண்டுகின்றேன். இவர் மயக்கப்படியே யாழ் நரப்பு முறையை ஏழிசை முறையாகக் கொள்ளினும், ஏழிசைகள் இளிமுதல என்னும் இவர் கொள்கை யழிந்து ஒவ்வோரிசை (சுரம்) யும் ஏழிசைக்கு முதலாம் என்று பெறப்படுதல் காண்க.

"ஏழுவகை நிலையாவன:—ச ரி க ம ப த நி என்னுமெழுவகைப்பட்ட எழுத்தடியாகப் பிறக்கும் குரன்முதலாகிய ஏழும்"

என்று அடியார்க்கு நல்லார் (சிலப். கச: கடுஉ-ச) கூறியிருத்தலைக் கண்விழித்துக் காண்க.

சு. மத்தளத்திலும் அதன் குறுமையான மிருதங்கத்திலும் அதன் வேறுபாடான தபேலாவிலும் இன்னும் இடக்கண் இளி (மெலிவுப் பஞ்சமம்) யாகவும் வலக்கண் குர (சமன்சட்சம்) லாகவுமே இருந்துவருகின்றது. இதையறியாமல், இளியென்பது மந்தர ஷட்ஜம் என்று கூறுகிறார் நம் நண்பர். இவர் எந்த மத்தளத்தைப் பார்த்தா ரென்று தெரியவில்லை. மேலும், வலக்கண்ணாகிய குரலை இன்னதென்று திட்டமாய்க் கூறாமல் மழுப்பி விட்டிருக்கிறார்.

எ. நரப்புக் கருவிகளில், சுரம் எழும் அல்லது அமைந்த இடத்தை இன்னும் சுரத்தானம் (சுரஸ்தானம்) என்பர். இது வழக்கில் இல்லை என்கிறார் நம் நண்பர். வேற்றுமைகளை எழுவாய் வேற்றுமை செய்பொருள் வேற்றுமை என்று பொருள் பற்றியும், முதலாம் வேற்றுமை இரண்டாம் வேற்றுமை என முறைபற்றியும் இருமுறையாய்க் கூறுவதுபோல, சுரவிடங்களையும் குரல்தானம் துத்தத்தானம் என இசைபற்றியும் முதற்றானம் இரண்டாந்தானம் என முறைபற்றியும் இருமுறையாய்க் கூறுவதற் கேற்கும். ஏழிசைத் தொடரான ஒரு நிலைக்குத் தானம் என்னும் பெயரிருப்பினும், உரையாசிரியர் 'முதற்றானத்திற்குரிய குரல்' என்று வேற்றுமைத்தொடராகக் கூறாமல் 'முதற்றானமாகிய குரல்' என்று பண்புத்தொடராகக் கூறியிருத்தலால், தானம் என்னும் பெயர் இங்கு நிலையைக் குறிக்காமல் இசையைக் குறிக்குமென்று கொள்வதே பொருத்தமானதாம்.

அ. கேள்விச்சுரம் எந்தச் சுரமாகவு மிருக்கலாம் என்கிறார் நம் நண்பர். ஓர் இடத்தை அதைச் சூழ்ந்துள்ள பலபொருள் நோக்கி எத்திசையாகவுங் கூறலாம். ஆனால், பொதுவாக நம்மை நோக்கி ஓர் இடத்தை இன்ன திசை யென்று கூறுதலே மரபு. அதுபோல, எந்தச் சுரத்தையுங் கேள்வியாகக் கொள்வதற் கேற்குமேனும் ஒன்றைக் கேள்விச் சுரமாகக் கொண்ட பிறகு அதைக் குரலென்று கொள்வதே மரபாம்.

கூ. குரல் என்னும் சொல் இயற்றமிழில் ஏழிசைக்கும் பொதுவான ஓசையையே குறிக்குமேனும், இசைத்தமிழில் அவ்வப்போது தொண்டைக்கு இயல்பாயுள்ள கேள்விச்சுர மாகிய குரலோசையைக் குறிக்குமென்று கொள்வதல்லது, இயல்புக்குமாறாய் ஏற்றியும் இறக்கியும் ஒலிக்கும் பிற திரிபு (விகார) இசைகளைக் குறிக்குமென்று கொள்வது பொருந்தாது.

க0. கருணாமிர்த சாகரத்தில் இருப்பனவாக யான் கூறிய இரண்டொரு சிறு சருக்கல்கள் பெரும்பாலும் சரித்திரமும் சொற்பிறப்பியலும் பற்றியவை யாதலால், என் கூற்றைப் பிறழக் கொண்டு தமது தவற்றுக்கொள்கைக்குத் துணையளிப்பதாக நம் நண்பர் கருதி மகிழற்க.

கக. ஏழிசை அலகுகள் மொத்தம் 24 என்றே எனது இசையாசிரியர் காலஞ்சென்ற மன்னார்குடி யாழ்ப்புலவர் இராச கோபால ஐயரவர்கள் எடுத்துக் கூறினார்கள். இதை (அண்மை யில் 20-ஆண்டுகட்குமுன்) மேனாட்டார் கண்டுபிடிப்பும் வலி யுறுத்துகிறது. நம் முன்னோர் கருவியில்லாமல் தம் நுண்மாண் நுழைபுலத்தால் கண்டுபிடித்தவற்றையே மேனாட்டார் இன்று கருவியினால் கண்டுபிடித்துள்ளனர். இதற்கு வானூலும் சான்று பகரும். தமிழ்நூலை வடமொழியில் மொழிபெயர்க்கும்போது இயன்றவரை திரித்தெழுதுவது வடநூலார் வழக்கம். இதைப் பூர் விக சங்கீத உண்மை என்னும் நூலிற் கண்டு தெளிக. பிற்காலத் தமிழ் நூற்பாக்களிற் சில, வடமொழி வழூஉ நூற்பாக்களின் மொழிபெயர்ப்பாகவுமிருக்கலாம். ஆலாபன இசையை அல்லது பண்களை இந்தியாவில் முதன்முதல் பாடியவர் தமிழரேயென்ப தையும் அது பண்டைக்காலத்தில் எழுத்துச்சரிப்பை அணுவும் பிறழவிடாத ஆரியவேத மந்திரத்திற்கும் ஆரியப்பார்ப்பனருக்கும் விலக்கப்பட்டிருந்தது என்பதையும் அறிதல் வேண்டும். "குர லிற் பாதியும் தாரத்திலொன்றும் இரண்டின் அந்தரத்திலே கிளை யாக்கித் தாரத்திலே நின்ற ஓரலகை விளரியின்மே லேறட விளரி குரலாய்ப் படுமலைப் பாலையாம்" என்று அடியார்க்குநல்லார் (சிலப். அ-ஙடு) ஒரு நூற்பாவிற்கு உரை கூறுவதை நோக்கு மிடத்து, பண்ணுக்கேற்றபடி அலகு பகுத்துக் கொடுக்கப்படும் என்பதை அறியலாம்.

"குரல்துத்தம் நான்கு கிளைமூன் றிரண்டாங்
குரையா உழைஇளி நான்கு—விரையா
விளரியெனின் மூன்றிரண்டு தாரமெனச் சொன்னார்
களரிசேர் கண்ணுற் றவர்."

என்று கூறியது ஒரு பண்ணுக்குரிய அலகுப் பகுப்பே யன்றி மொத்த அலகுக் கணக்கன்று. முதலிலிருந்து இறுதிகாறும் இசையிலக்கணங்களையெல்லாம் தொடர்பாகக் கூறுகின்ற பண்டை இசைத்தமிழ் நூல்களுள் ஒன்றேனும் இன்று முழுமை யாகக் கிடையாமையால், ஆங்காங்கு தனித்துநிற்கும் ஓரொரு நூற்பாவை மட்டுங் கொண்டு இசைத்தமி ழியல்பு முழுவதையும் துணிந்துவிட முடியாது.

"ஆயத்துக் கீரா றறுநான்கு வட்டத்துக்
கேயுங்கோ ணத்துக் கிரட்டிப்புத்—தூயவிசை
நுண்மைக் கதிலிரட்டி நோனலகு மோர்நிலைக்கிங்
கெண்மூன்று கேள்விகொண் டெண்"

என்பது இசைமரபு. இதில் அலகு 24 எனத் தெளிவாகக் கூறி யிருத்தல் காண்க. இசை நுண்மை—நுண்பாலை—சதுரப்பாலை. அலகு 24 (சதுர்விம்சதி) என்று கணக்கிட்டுக் கூறும் வட மொழிச் சுவடியிரண்டும் தெலுங்குச் சுவடியொன்றும் இன்றும் தஞ்சைச் சரசுவதி மகாலில் உள.

கஉ. குரலை மத்திமமாகக் கொண்டு பறவையோசையால் ஒப்புக்காணுமிடத்து நாற்சுரங்களேனும் ஒத்துவருகின்றனவே என்கிறார் நம் நண்பர். கல்லாடமேற்கோளை நோக்குமிடத்து அந் நான்கும் இல்லாமற் பறந்துபோகின்றனவே! மேலும், தமிழ் நூற்கும் வடநூற்கும் பறவை விலங்குத் தொடுப்பிலுள்ள ஒப் புமைகூடத் தன்னேர்ச்சியே (accidental) யன்றி வேறன்று. இத்தகைய தன்னேர்ச்சிகள் பலதுறையிலும் காணலாம். (எ. டு:) உண்மை வாய்மை மெய்ம்மை. இவை முக்கரணம் பற்றி யவை என்பது பொதுக் கொள்கை. யானும் இதற்குடம்பட்டு எனது மொழிநூலிற் கூறினேன். ஆனால், இற்றையாராய்ச்சி யால் அது தன்னேர்ச்சி யென்று பட்டுவிட்டது. உள்ளது உண்மை; வாய்ப்பது வாய்மை; மெய் (உடம்பு) போன்றது மெய்ம்மை. ஒ. நோ: E. substance—substantial=true. முற்

காலத்தில் கட்புலனும் மெய்ப்புலனுமானதே உண்மையென்று கொள்ளப்பட்டது. இயேசு உயிர்த்தெழுந்த பின் தோமா என்னும் மாணவன் அவரைத் தொட்டுப்பார்த்துத்தான் நம்பினனென்று கிறித்தவ மறையிற் கூறப்பட்டுள்ளது.

௧௩. சட்சம் ஏனைய ஆறு சுரங்கட்கும் அடிப்படையாதலால் அதுவே வண்ணப்பட்டடை என்கிறார் நம் நண்பர். வண்ணம் அல்லது பண் சுரத்தாலமைவதெனினும், அச் சுரங்கள் ஆரோசை (ஆரோகணம்) யாகவும் அமரோசை (அவரோகணம்) யாகவும் நேராகவோ வளைந்தோ இயங்கிக் கலந்தொலித்தன்றித் தனித்தனி யிசைத்து வண்ணமாகாமையாலும், அங்ஙனங் கலத்தற்குக் குறைந்தது இரு சுரங்கள் வேண்டுமாதலாலும், சச, சரி, சக, சம, சப, சத, சநி என இவ்விரு சுரங்களாயிணைக்கும்போது சப என்ற இணையே சிறந்தொலித்தலாலும், "தாரத்துட் டோன்றும் உழை" என்னும் நூற்பாவால் சப முறையிலேயே நரம்பிசை யமைத்தார்கள் முன்னோர் என்று தெரிதலாலும், வண்ணத்திற்கு அடிப்படையாகிய இணையெனப்படும் 7-ம் நரம்பாகிய இளி (பஞ்சமம்)யையே வண்ணப்பட்டடை யென்றழைத்தனர் முன்னோர் என அறிக. ஐ ஔ என்னும் புணரொலிகளில் அகரக் கூறு மிருந்தாலும் அதைப் பொதுவென்று தள்ளிவிட்டுச் சிறப்பான இகரவுகரங்களையே முறையே அவற்றுக் கினக்குறிலாகக் கொண்டாற்போல, சப என்னும் இணையில் பொதுவான 'ச'வைத் தள்ளிவிட்டுச் சிறப்பான 'ப'வை வண்ணப்பட்டடை என்றனர். மேலும், சட்சம் மற்ற ஆறு சுரங்கட்கும் அடிப்படையாதல் பற்றிப் பட்டடையெனப்படின், சுரப்பட்டடையென்று கூறப்படுவதன்றி வண்ணப்பட்டடை என்று எங்ஙனங் கூறப்படும்?

௧௪. நம் நண்பர் குரல் என்னும் சொல் வந்தவிடமெல்லாம் அஃது எழிசை முதலைக் குறியாதென்றும், "குரல் குரலாகத் தற்கிழமை திரிந்தபின்" என்னும் அடியில் முந்தின குரல் ஓரிசையையும் பிந்தின குரல் தொடங்குமிசையையுங் குறிக்குமென்றும் என்னை மறுப்பதுபோல எண்ணிக்கொண்டே தம்மையறியாமல் என்னைத் தாங்கியுரைத்திருப்பது பற்றி மிக மகிழ்வதுடன் அவருக்கு நன்றியும் கூறுகின்றேன். குரல் என்னும் சொல்

முதலாவது ஏழிசையில் தொடங்குமிசையாகிய சட்சத்தைக் குறிக்கும்; இரண்டாவது எந்த இசையையும் குரலாக அல்லது தொடங்கு மிசையாகக் கொள்ளும்போது அதைக் குறிக்கும். எந்த இசையில் தொடங்கினாலும் அதுவே குரல் என்றும் குரல் என்பது முதலிசையாகிய சட்சத்தின் பெயராயிருத்தலாலேயே அது தொடங்குமிசையைக் குறித்ததென்றும் நம் நண்பர் அறியாதுபோயினர். 'குரல்குரலாக', 'துத்தம் குரலாக', 'கைக்கிளை குரலாக', 'உழை குரலாக', 'இளிகுரலாக', 'விளரிகுரலாக', 'தாரம் குரலாக' என்று நூல்களிற் கூறியிருப்பதெல்லாம், எமது கொள்கைக்கே சான்றாமென்பதை இனியேனும் நம் நண்பர் அறிவாராக. ஆர்மோனியம் என்னும் சுரப்பெட்டியில் ஒவ்வொரு கட்டையாய் ஏற்றியேற்றிக் கேள்வி (சுருதி)யாக வைத்துக் கொண்டுபோனால், ஒவ்வொரு கட்டைக்குரிய சுரமும், தான் கேள்வியாகும்போது குரல் (சட்சம்) அல்லது தொடங்கு மிசையாம் என்றும், இங்ஙனம் கேள்வியேற்றுவது பண்ணுப் பெயர்த்தல் உயர்த்திப் பாடவல்லார்க்கு ஏற்றித்தல் ஆகிய இருபயனேக்கி என்றும், இவ்விரு பயனையும் முறையே சங்கராபரண மேளமும் கலியாணி மேளமும் அமைந்த சுரப்பெட்டிகளினும் ஒன்றரைக்கட்டை இரண்டரைக்கட்டை நாலுகட்டை நாலரைக் கட்டை முதலியவாகப் பல்வேறு கட்டைக் கேள்வி (சுருதி) களுக்குப் பாடும் வழக்கத்திலும் காணலாமென்றும், இம்முறை பற்றியே யாழ்நரம்புகளும் ஏற்றி அல்லது மாற்றி யமைக்கப்படும் என்றும் நம் நண்பர்க்கு அறிவுறுத்துகின்றேன். "உழைகுரலாகிய கோடிப்பாலை நிற்க இடமுறை திரியுமிடத்துக் குரல்குரலாயது செம்பாலை........விளரி குரலாய்ப் படுமலைப் பாலையாம்........ துத்தம் குரலாயது செவ்வழிப் பாலையாம். இளிகுரலாயது அரும்பாலையாம். கைக்கிளை குரலாயது மேற் செம்பாலையாம். தாரம் குரலாயது விளரிப்பாலையாம்" என்று அடியார்க்கு நல்லார் (சிலப். அ—ருஅ) கூறியிருத்தலை நோக்குக. "இக் குரன் முத லேழினும் முற்றோன்றியது தாரம்; "தாரத்துட் டோன்று முழையுழை யுட்டோன்று, மோருங் குரல்குரலி னுட்டோன்றிச் - சேருமிளி, யுட்டோன்றுந் துத்தத்துட் டோன்றும் விளரியுட், கைக்கிளை தோன்றும் பிறப்பு" என்பதனால், தாரத்தில் முதற் பிறப்பதாகிய உழை குரலாய்க் கைக்கிளை தாரமாகிய

கோடிப்பாலை முதற் பிறக்கக் கட்டியென்க" (சிலப். அ: ௩௧-௨) என்று அடியார்க்கு நல்லார் கூறியிருத்தலை ஓர்ந்தறிந்து கூர்ந்துணர்க.

குரல் சட்சமன்றி இளியே சட்சமாயிருப்பின், ஏழிசையைக் குரல் துத்தம் கைக்கிளை உழை இளி விளரி தாரம் எனக்கூருது இளி விளரி தாரம் குரல் துத்தம் கைக்கிளை உழை என்றும், கேள்வி மாற்றிப் பண்ணுப் பெயர்க்கும்போது 'குரல்குரலாய்' 'துத்தம் குரலாய்' என்று கூறுவதற்குப் பதிலாக இளியிளியாய் விளரியிளியாய் என்றும் கூறியிருப்பர். இங்ஙனம் யாண்டும் கூருமையான் குரலே சட்சம் என்பது தெளியப்படும். "உழைமுதற் கைக்கிளை யிறுவாய்க் கட்டி" என்றும், "தாரத்துட்டோன்றும் உழை" என்றும் கூறியிருப்பது யாழ்களின் வெவ்வேறு நரப்படைவைக் குறிக்குமேயன்றி ஏழிசை முறையைக் குறியா. இக்காலத்தும் வீணை கின்னரி (பிடில்) முதலியவை ச ப ச ப என்னும் முறையிலும் சித்தார் தில்ரூபா முதலியவை ம ச ப ச என்னும் முறையிலும் நரப்படைவு பெற்றுள்ளன. நரப்படைவும் திவவென்னும் மெட்டுக் கட்டினின்று வேறுபட்டதென மற்றுமோர் வேறுபாடறிதல் வேண்டும். இவையெல்லாம் துலுக்க வாத்தியங்களெனப்படும் வடக்கத்து இசைக் கருவிகளை ஆராய்ந்தாலொழிய விளங்கா. பண்டைத் தமிழ்ப் பழக்கங்கள் சில தமிழ்நாட்டில் மதமயக்கினல் ஒழிக்கப்பட்டிருப்பினும் வடநாட்டில் இன்றும் தொடர்ந்து வழங்குகின்றன. தொகையராப் பாட்டென்னும் உரையிடை விட்ட பாட்டும், டக்காவென்னும் இடக்கையும், தரப்புத் தந்திகள் என்னும் ஆர்ப்பு நரம்புகளும் பண்டைத் தமிழ்நாட்டில் இருந்தனவே. இவற்றையெல்லாம் இங்கு விரிப்பிற்பெருகும்.

குரலே சட்சம் என்பதற்கு வேறு சில சான்றுகளும் உள. அவற்றைப் பின்னர்க் கூறுவேன். அடிகள் ஏழிசை பற்றி மட்டுமன்று பிற பகுதிகள் பற்றியும் தவருன கருத்துக்களைக் கொண்டுள்ளமை, யான் அடுத்துச் செல்வியில் வெளியிடும் 'ஆளத்தி', 'யாழே வீணை', 'ஏழிசைப் பெயர்கள்' என்னும்

கட்டுரைகளில் விளக்கப்படும். அறிஞர் நடுநிலைக் கண் கொண்டு ஆராய்வாராக.

குறிப்பு :—

(1)வித்துவான் வெள்ளைவாரணர் மத்தளத்தின் இருகட்சுரங்களையும் கூறியவிடத்தில் இசைப் பேராசிரியர் பொன்னையா பிள்ளை அவர்களின் பெயரைப் புகுத்தி யிருப்பது அவர்கட்குத் தெரியாதென்று நினைக்கிறேன். இசையறிவிற் சிறந்த அவர்கள் அங்ஙனங் கூறியிரார்கள் என்பது எனது கருத்து.

(2) வித்துவான் வெள்ளைவாரணர் யான் இத்துணை கூறிய பின்பும் 'நான் பிடித்த முயலுக்கு மூன்றே கால்' என்று வலிப்பாராயின், தமிழிசை யரசு தண்டபாணிப் பிள்ளையும் வேலூர்த் தேவார இசை வேந்தர் அப்பாதுரை ஆச்சாரியாரின் மகனார் சம்பந்தமூர்த்தி யாச்சாரியாரும் போன்ற அறிஞர்முன் மிடற்றினும் கருவியினும் தம் கொள்கையை மெய்ப்பித்து அவர்தம் உடம்பாட்டைப் பெற்றுவிடின், யான் என் தோல்வியை ஒப்புக்கொள்கிறேன்.

(3) பண்டைத்தமிழர் நம் போன்ற புல்லறிவுப் போலித் தமிழரல்லர். அவரது மதிநுட்பமும் நுழைநோக்கும் பல துறைப்பட்ட கலைத்திட்பமும் நாகரிகப் பண்பும் '**பழந்தமிழ் நாகரிகம்**' என்னும் எனது நூலிற் பரக்கக் காட்டுவேன்.

திருத்தம்

சென்ற கக-ம் பரலில் வெளிவந்துள்ள 'சடுகுடு' என்னுங் கட்டுரையில், கீழ்வருந் திருத்தங்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
சகக	௪	-	'3. பழக்கவழக்கம் பற்றியனவும்'
,,	௧0	பலி, சடுகுடு	பலிசடுகுடு
,,	௧0-௧	பலிசடுகுடு	பலீஞ்சடுகுடு
,,	௧௧	குட்டடி	குடட்டி
சஉ௧	௲௧-உ	நடிப்புக்காரர்	நடிப்புக்கள்
		மாற்றப்பட்டுளார்	மாற்றப்பட்டுள,

வில்லோமரத் தெய்வம்

[க. குஞ்சிதமணி]

(ஒரு ஜப்பான் நாட்டுச் சிறுகதை)

பண்டைக்காலத்தில் மக்களெல்லோரும் இயற்கையிலேயே கடவுளைக் கண்டு வழிபட்டு வந்தனர். படைக்கப்பட்ட ஒவ்வொரு பொருளிலும் கடவுள் அதற்குரிய தெய்வமாகவே உள்ளுறைந்து உடன் வாழ்வதாக நம்பினர். மலைக்கொரு தெய்வம், மரத்திற்கொரு தெய்வம், கலைக்கு ஒரு தெய்வம், கடலுக்கொரு தெய்வம், கல்லிலும் தெய்வம், கனலிலும் தெய்வம், தூணிலும் தெய்வம், துரும்பிலும் தெய்வம் என்று கொண்ட பழங்கொள்கை நம் நாட்டில்மட்டுமே யன்றிப் பிறநாட்டிலும் பரவியிருந்து வந்துள்ளது. கீழ்வரும் கதை அக்கொள்கை ஜப்பான் நாட்டிலும் பரவியிருந்து வந்துள்ளது என்பதற்கு ஓர் எடுத்துக் காட்டு ஆகும்.

ஜப்பான் நாட்டில் உள்ளது **கியோட்டோ** என்னும் நகரம். அதன் அருகே இருந்த சிற்றூர் ஒன்றில் பெரியதொரு வில்லோ மரம் வளர்ந்திருந்தது. வில்லோ என்பது நம் நாட்டில் அலரி என்றழைக்கப்படும் மரவகையைச் சேர்ந்ததாகும். அது தேக்கு, கடம்பு முதலிய மரங்களைப் போலப் பருத்து உயர்ந்து வளர்வதொன்று. கப்பும், கிளையுமாய் அது கிளைத்துப் பரந்து இலைகள் நிறைந்து பலர்க்கிருக்க நிழல்தருவதாகும். இத்தன்மை வாய்ந்த இந்த வில்லோமரத்தடிதான் அச்சிற்றூர்க் குழந்தைகளுக்கு விளையாட்டிடமாகும். மனம் போனபடி யெல்லாம் அவர்கள் அம் மரத்தின்மீது ஏறியும் தாவியும் ஆடி வருவார்கள். நடுப்பகல் வேளையில் பலர் அம் மரநிழலில் படுத்து அயர்ந்து உறங்குவதுண்டு. மாலை நேரங்களில் வேலை முடித்து வீடு திரும்பும் மக்கள் பலர் அம் மரத்தடியில் சிறிது பொழுது தங்கி இளைப்பாறிச் செல்வர். பொதுவாகக் கூறுமிடத்து அவ்வூரின் நல்வாழ்க்கைக்கு உதவிய பல வசதிகளுள்ளும் இம் மரம் தலைசிறந்ததாகவே இருந்துவந்தது.

இம் மரமிருந்த இடத்திற்கு அருகில் பெரியதொரு மாடி வீடிருந்தது. அது பணக்காரக் குடியானவர் ஒருவர் வீடாகும்.

ஹெய்த்தாரோ என்ற பெயருள்ள அழகிய சிறுவனொருவன் அவ் விட்டிலிருந்தான். காலையிலும், மாலையிலும் அவன் தன் பொழுதையெல்லாம் அம் மரத்தடியிலேயே கழிப்பது வழக்கம். அம் மரமே அவனுக்கு உயிர்.

ஹெய்த்தாரோவுக்கு ஆண்டுகள் இருபத்திரண்டு நிரம்பின. அவன் பெற்றோர் இறந்துவிட்டனர். தன் குடித்தனக் காரியங்களை அவனே நடத்தி வந்தான். அந்த நிலையில் அச் சிற்றூர் மக்கள் அவ்வூருக் கருகில் ஓடிய ஆற்றைக் கடக்கப் பாலமொன்று இடுவதென்று முடிவு செய்தனர்; அதற்கு இந்த வில்லோ மரத்தையே வெட்டிப் பயன்படுத்த வேண்டும் என்று பேசிக்கொண்டனர். இப் பேச்சு ஹெய்த்தாரோவின் காதுகளுக்கு எட்டிற்று. "ஆ! என் அருமை வில்லோ மரத்தையா?" என்று அவன் பெருமூச் செறிந்தான். அம் மரத்திற்கு வந்த தீங்கைத் தன் உயிர்க்கு வந்த தீங்காகவே கருதினன்; நெடுநேரம் கவலையில் ஆழ்ந்தான். மாறிமாறி என்னென்னவோ நினைத்தான். கடைசியில் அந்த மரத்தை வெட்ட விடுவதில்லை என்றும், அதற்கு மாருக, பாலம் கட்டி முடிப்பதற்கு வேண்டிய மரங்களை யெல்லாம் தனக்குச் சொந்தமான காட்டிலிருந்தே வெட்டி அளிப்பதென்றும் முடிவு செய்தான். அவ்வூர்ப் பெருமக்களிடம் அவன் தான் செய்துகொண்ட முடிவைத் தெரிவித்து, "இந்த வில்லோ மரத்தைமட்டும் அருள்கூர்ந்து எப்பொழுதும் வெட்டக் கருதவேண்டா" என்று கேட்டுக்கொண்டான். உள்ளூற அம்மரத்தை வெட்டுவதில் விருப்பமில்லாத அவ்வூர் மக்களும் உடனே அதற்கிணங்கினர். ஆற்றிற்குப் பாலமும் போடப்பட்டது. வில்லோ மரமும் வெட்டாமல் விடப்பட்டது. ஹெய்த்தாரோ அளவில்லா மகிழ்ச்சி அடைந்தான்.

சில நாட்கள் சென்றன. ஒரு நாள் மாலை கையெழுத்து மறையும் நேரம். ஹெய்த்தாரோ தன் வயல்களைச் சுற்றிப் பார்த்து விட்டு வீடு நோக்கி வந்துகொண்டிருந்தான்; வில்லோ மரத்திற்கருகே வந்து விட்டான். அன்றைக்கென்று அம் மரத்தடியில் மக்கள் நடமாட்டமே காணப்படவில்லை. "ஆ! அதோ நிற்பது பெண்ணு! அணங்கா? ஆண்டுகள் பதினறு அல்லது பதினேழு நிறைந்த தோற்றமுடையவளாய்க் காணப்படுகின்

ருளே! பெண்ணுனல் அந்நேரவேளையில் அவள் தனியாக அம் மரத்தடியில் நிற்பானேன்? இவ்வூரைச் சேர்ந்தவளாகவும் தோன்றவில்லையே!" என்று வியப்பும் ஐயமும் கொண்டவனுய் ஹெய்த்தாரோ மெல்ல அம் மரத்தடியை நெருங்கினுன். அழகே உருவாய்த் திரண்டிருந்த அந்நங்கை அவன் வருகையைக் கண்டு நாணினவள் போல், தலைகுனிந்து, தன் கடைக்கண்களால் அவனை மெல்ல நோக்கினுள். ஹெய்த்தாரோ அந்நாட்டு வழக்கப்படி அவளுக்கு வணக்கம் செலுத்தினுன்; அவளும் தன் வணக்கத்தைத் தெரிவித்தாள். ஒருவரையொருவர் அறியாமல், அவர்கள் இருவர் மனமும் உட்கலந்தன. சட்டென்று அவள் தான் போய்வருவதாகக் கூறிச் சென்றுவிட்டாள். வீடு சேர்ந்த ஹெய்த்தாரோவுக்கு அன்றிரவு முழுவதும் தூக்கம் பிடிக்கவில்லை. "அந்நங்கை யார்? அன்றுவரை பார்த்திராத அவள் இந்த மரத்தடியில் வந்திருப்பானேன்? மீண்டும் ஒரு முறை அவளை நான் காண்பேனு?" என்றெல்லாம் நினைத்து நினைத்து அவன் மனம் கலங்கினுன்.

மறு நாள் பொழுதுவிடிந்தது. அவளைப் பற்றிய நினைவுகளை அடியோடே மறந்துவிடுவது என்று நினைத்தவனுய், ஹெய்த்தாரோ விரைந்து தன் வேலைமேற் சென்ருன்; என்றுமில்லாத படி முனைந்து முனைந்து தன் வேலைகளைச் செய்தான். வேலைகள் முடிந்தன. வீடு நோக்கிப் புறப்பட்டான். மங்கையின் நினைவு முற்பட்டது! விரைந்து மரத்தடிக்கு வந்தான். பொழுது சாய்ந்து இருள்கவியும் நேரம் ஆய்விட்ட படியால், அன்றும் மரத்தடியில் ஒருவரும் தென்படவில்லை. ஆனுல், அம் மங்கை மட்டும் முதல் நாள் நின்ற இடத்திலேயே நின்றுகொண்டிருப்பதை அவன் கண்டான். "வரவேண்டும், நண்பரே! தங்கள் வரவைத்தான் எதிர்பார்த்து நிற்கின்றேன். வாருங்கள்! இம் மரத்தடியில் சற்று உட்காரலாம். உங்கள் களைப்பும் தீரட்டும்" என்று எதிர்பாராத வகையில் அம்மங்கை இவனை நோக்கி எதிர்வந்து கூறினுள். பழம் நழுவிப் பாலில் விழுந்தது. ஹெய்த்தாரோ தன்னுடைய உண்மையான தூய நற் காதலைத் தெரிவித்தான். அம்மங்கையும் அன்பு நிறைந்த புன்முறுவலுடன் தான் அதை ஏற்றுக்கொண்டதாகக் குறிப்புக் காட்டினுள். அன்று முதல்

ஒவ்வொரு நாளும் அவர்கள் இருவரும் அம் மரத்தடியில் வந்து பேசி மகிழ்ந்து வந்தார்கள்.

"இவ்வாறே எத்தனை நாள் கழிப்பது? ஏன் என்னை நீ மணம் புரிந்து கொள்ளக் கூடாது" என்றான் அழகன்.

"தடை யொன்று மில்லை. ஆனால், என் பெற்றோர்களைப் பற்றியோ, உற்றார் உறவினர்களைப் பற்றியோ தாங்கள் என்னை எக்காலத்திலும் எத்தகைய கேள்வியும் கேட்கக் கூடாது. தங்களை நான் மனமாரக் காதலிக்கிறேன். என் உடலையும் உயிரையும் தங்களுக்கே ஒப்படைக்கிறேன். எவ்வகையிலும் தங்களுக்கு ஏற்ற மாண்புடைய மனைவியாக இருந்து வருவேன். தாங்கள் இதனை ஏற்றுக் கொண்டால், ஹிகோ வென்று என்னை அழையுங்கள்" என்று கூறினாள் அழகி.

மறு நாள் ஹெய்த்தாரோவின் வீடு மணவீடாகத் திகழ்ந்தது. மகிழ்ச்சிக்கடலின் கரைகண்டவன் போல் ஹெய்த்தாரோ தன் வாழ்க்கையை நடத்தி வந்தான். ஓராண்டு முடிந்ததும் அவர்களுக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. சியோடோ என்று அக் குழந்தைக்குப் பெயரிட்டனர். மங்கலம் நிறைந்த மனைவியும் ஒப்பற்ற குழந்தையும் கடவுளருளால் வாய்க்கப்பெற்ற ஹெய்த்தாரோவின் வாழ்க்கை இணையற்ற இன்ப வாழ்க்கையாகவே நடந்துவந்தது.

அந்தோ! எத்தனை நாள் இவ்வாழ்க்கை? துன்பங்கலவாத இன்ப வாழ்க்கை என்பது உலகிலுண்டோ? ஹெய்த்தாரோவின் இன்ப வாழ்க்கைக்கும் பேரிடர் ஒன்று வந்துற்றது!

சியோடோவிற்கு ஆண்டுகள் ஐந்து நிரம்பின. அப்பொழுது கியோட்டோ நகர முடி மன்னனான டோபா அருள் அன்னைக்கு மாபெருங் கோயிலொன்று * கட்ட வேண்டு மென்றும் அதற்கு ஊரிலுள்ள பெரிய மரங்களை யெல்லாம் வெட்டிக் கொண்டு வர வேண்டுமென்றும் கட்டளை பிறப்பித்தான். ஐயோ! வில்லோ மரத்தின் முடிவுநாள் நெருங்கிவிட்டது. அரசன் ஆணைக்கு எதிர் ஆணை உண்டோ? எவ்வளவு முயன்றாலும் உயி

* "சன்-ஜு-சன்-ஜென்டோ" என்பது அக்கோயிலின் பெயர். அதனுள் அருள் அன்னைக்கு 33,333 தெய்வச் சிலைகள் உள்ளனவாம்.

ருக்கு உயிரான வில்லோ மரத்தை இந்தத் தடவை தான் காப்பாற்ற முடியாது என்று ஹெய்த்தாரோ கண்டு கொண்டான். அருள் அன்னையின் கோயிலுக்கு அம் மரமும் உதவுவதானுல் அதைவிடச் சிறந்ததொரு பேறும் கிடைக்குமோவென்று அவ்வூரார் கருதியிருக்கிருர்கள் என்பதும் அவனுக்குத் தெரியும். செயலற்றவனுய் ஹெய்த்தாரோ மனங்கலங்கி இருந்தான்.

மரத்தை வெட்டும் நாள் வந்துவிட்டது. அன்றிரவு அழகிற் சிறந்த தன் மனைவியுடனும் அருமந்த மகனுடனும் உறங்கிக் கொண்டிருந்த ஹெய்த்தாரோவின் காதுகளில் வில்லோமரம் வெட்டப்படும் கோடரி ஓசை விழுந்தது. திடுக்கிட்டு அவன் தன் கண்களை விழித்துப் பார்த்தான். உறங்கிக் கிடந்த தன் மனைவி எழுந்து உட்கார்ந்து கண்களில் நீர் பெருக அன்புடன் தன்னை நோக்கி விம்மி விம்மி அழுதுகொண் டிருக்கக்கண்டான்

"கண்ணே! என் என்ன?"

"என் அன்புக்கனியே, நான் சொல்வதை, அருள் கூர்ந்து கேளுங்கள், ஐயுற வேண்டா. கனவைப் போலத் தோற்றக் கூடிய இது கனவன்று: நனவே தான். தங்களை மணந்து கொண்ட காலத்தில் என் வரலாற்றைப் பற்றி ஒரு கேள்வியும் கேட்கக் கூடாதென்று நான் தங்களைக் கேட்டுக்கொண்டேனன்றே! அதன்படி தாங்களும் இதுவரை என்னைப்பற்றி ஒன்றுங் கேட்காமலே இருந்து வந்தீர்கள். இன்று நானுகவே என் வரலாற்றைத் தங்களுக்குக் கூறும் காலம் வந்துவிட்டது. தாங்கள் உயிருக்குயிராய் நேசித்து வந்த வில்லோமரத்தின் உள்ளுறை தெய்வமே நான். ஆறு ஆண்டுகட்கு முன் ஊரார் என்னை வெட்டி விடாதபடி தாங்கள் பரிந்து முன்வந்து என்னைக் காப்பாற்றினீர்கள். அந்தப் பேரன்புக்குக் கைம்மாருகவே நான் மனித உருவத்தில் தோன்றித் தங்களை மணந்து நல் வாழ்க்கை நடத்தி வந்தேன். தங்கள் ஆயுட்கால முழுதும் இவ்வாருகவே தங்களுக்கு இன்பமளிக்கலாம் என்று நான் நம்பியிருந்தேன். ஆனுல் எல்லாம்வல்ல இறைவன் திருவுளம் வேருக இருந்தது. அதோ! அவர்கள் வெட்டுகிற வெட்டு ஒவ்வொன்றும் என் இடுப்பில் விழுகின்றது. என் நரம்புகள் தளர்வுறுகின்றன. கண்ணனைய என் குழந்தை கியோடோவை நான் எவ்வாறு மறப்

பேன்? தாயற்ற குழந்தை தான் என்று தெரிந்ததும் அவன் அலறித் துடிப்பானே! ஆ! இறைவனே! அதை நான் எவ்வாறு பொறுப்பேன்? காதல! குழந்தையை அழாது பார்த்துக் கொள்ளுங்கள். வீணில் வருந்த வேண்டா; தாங்களும் நானும் கொடுத்து வைத்தது இவ்வளவுதான் என்று நினைத்துக்கொள்ளுங்கள். ஒப்பற்ற நம் காதற்கனியான சியோடோவை உங்களிடம் ஒப்படைத்துச் செல்லுகிறேன். என் உடலுருவம் மறைந்தாலும் என் ஆவி தங்களிடமே இருக்கும். இனி நான் இருக்க முடியாது. சென்று வருகிறேன். காதல!''

ஹெய்த்தாரோ குழந்தையை எழுப்பினன். குழந்தை எழுவதற்குள் ஹீகோ மறைந்தாள். தாயை நினைந்து நினைந்து சியோடோ அலறி அழுதான். துக்கம் நெஞ்சடைக்க ஹெய்த்தாரோவும் முதலில் வாய்விட்டலறினன்; பிறகு, சற்றுத் தேறினவனுய்க் குழந்தையை ஒயப்படுத்தினன்.

பொழுது விடிந்ததும் சியோடோவை அழைத்துக்கொண்டு ஹெய்த்தாரோ வில்லோமரத்தடிக்குச் சென்றான். மரமிருந்த இடம் வெறுமையாகஇருந்தது. மரம் வெட்டுண்டு, கிளைகளெல்லாம் கழிக்கப்பட்டுக் கீழே கிடந்தது. அதை நேரிற் கண்ட ஹெய்த்தாரோவின் மன நிலையைக் கூறவும் வேண்டுமா!

என்ன விந்தை! நூற்றுக்கணக்கான மக்கள் ஒன்று சேர்ந்து தள்ளியும், வெட்டுண்டு கிடந்த அம் மரம் ஒரு சிறிதும் நகரவில்லையே! அதைக் கியோட்டோவுக்குக் கொண்டு செல்லுவதெப்படி? ஹெய்த்தாரோவின் மனதில் சட்டென்று ஓர் எண்ணம் உதித்தது. "நண்பர்களே வெட்டுண்ட அம் மரம் என் மனைவியின் ஆவியாகும். என்னுடைய சிறுமகன், தங்களுக்கு உதவி செய்யத் தாங்கள் சம்மதித்தால் ஒரு வேளை அந்த மரம் நகரக் கூடும்'' என்று அவன் கூறினன். மரம் வெட்டியவரும் ஒத்துக்கொண்டார்கள். சிறுவன் சியோடோ தன் சிறு கையை மரத்தின்மேல் வைத்தான். அவ்வளவுதான். அம் மரம் விரைவாக ஆற்றை நோக்கி நகர்ந்து சென்றது! கண்டோர் திகைத்தனர். ஹெய்த்தாரோ நன்றியறிதலுடன் தன் மகனை அழைத்துக்கொண்டு வீடு சேர்ந்தான்.

———

இலக்கியமும் வாழ்க்கை முறையும்—அரசு*

[பூ. ஆலாலசுந்தரச் செட்டியார். M. A.]

ஒரு நாட்டு மக்களின் வாழ்க்கை முறையினை அடுத்தது காட்டும் பளிங்குபோல் எடுத்துக்காட்டுவது அந்நாட்டின் இலக்கியமே யாகும். தமிழ் இலக்கியத்தினின்று, தமிழர் நாகரிகம், தமிழ் மக்களின் வாழ்க்கை முறை, சமூகநிலை, அரசியல் நிலை முதலிய இன்னோரன்ன பிற பொருள்களைப் பற்றி நன்கு அறியலாமெனினும் ஈண்டுப் பேசப்படும் பொருள், தமிழ் இலக்கியத்தினின்று தமிழ் நாட்டின் அரசு எவ்வாறு விளங்கியது என்பதையும் அவ்வரசின் துணையால் மக்கள் வாழ்க்கை முறை எவ்வாறு பண்படுத்தப்பட்டது என்பதையும் ஆராய்வதாகும். இனி, சங்க இலக்கியமும் அதற்குப் பின்னர்த் தோன்றிய இலக்கியமும் அரசினைப் பற்றிக் கூறுவன யாவை என்பதைக் காண்போம்.

பழந்தமிழர், மன்னனைக் கடவுளோடு ஒப்பவைத்து எண்ணினர் என்பதற்குப் பல இலக்கியச் சான்றுகள் உள்ளன. தமிழ் மொழியில் இறைவன் என்ற சொல் கடவுளையும் அரசனையும் குறிக்கும்; அதுபோலவே கோயில் என்ற சொல் கடவுளர் உறையும் கோயிலையும் மன்னன் வதியும் அரண்மனையையும் குறிப்பதாகும். இறைவன் என்ற பெயர் அரசனுக்கு எம்முறையில் பொருத்தமுடைத்து என்பதை ஆராய்வோம். 'இறை மாட்சி' என்ற சொல்லுக்குப் பொருள் கூறப் போந்த பரிமேலழகர் 'இறைமாட்சியாவது அரசனுடைய நற்குண நற்செய்கைகள். உலக பால ருருவாய் நின்று (உலகத்தைக் காக்கும் காப்புக் கடவுள்போல் வீற்றிருந்து) உலகத்தைக் காத்தலால் இறை என்றார்' என்பர். "திருவுடை மன்னரைக் காணில் திருமாலைக் கண்டேனே" என்ற திருவாய் மொழி ஈண்டு நோக்கத்தக்கது. தலைவி தன் தோழிக்குக் கூறுவதாகவுள்ள பொருநாற்றுப் படையின் ஈற்றிலுள்ள ஒரு வெண்பாவை நோக்குவோம். "தோழி! அரியணையின் மீது வீற்றிருந்த திருமாவளவன் என்ற கரிகாலனை யான் கண்டேன். யான் அவனை எளிய மனிதனாகக் கருதவில்லை. இலக்குமி

---

*7-9-1943-ல் அனைத்திந்திய வானொலியின் சென்னை நிலையத்தில் பேசியது. நிலையத்தார் இசைவு பெற்றுப் பதிப்பிக்கப்பட்டது.

வீற்றிருக்கும் திருமார்பையுடைய திருமாலே அவன் எனக் கருதி அவனை வணங்கினேன்'' என்றாள் தலைவி.

அரிமா சுமந்த அமளிமே லானைத்
திருமால் வளவனெனத் தேறேன் திருமார்பின்
மானமா லென்றே தொழுதேன் தொழுதகைப்
போனவா பெய்த வளை.

மன்னர் புகழிற்கு மாயோன் புகழை உவமையாகக் கூறுதல், 'பூவைநிலை' என்ற புறத்துறையின்பாற் படும் என்பர் தொல் காப்பியர்.

"முறைசெய்து காப்பாற்று மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்"

என்பது பொய்யாமொழியன்றோ! மன்னன் மன்னுயிர்க்கு உயிர் போன்றவன் என்ற கருத்தில் மோசிகீரனார் என்ற சங்கப் புலவர்

"நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்" (புறம்—186)

என்றார். தேவரினும் மன்னர் சிறந்தவர் என்பர் திருத்தக்க தேவர். தேவர் ஒருவனுக்கு இப் பிறவியில் நன்மையோ தீமை யோ செய்ய எண்ணினால் அதனை உடனே செய்ய இயலாது. ஆனால் மன்னன் ஒருவனுக்கு நன்மையோ தீமையோ செய்ய நினைப்பின் அதனை உடனே செய்து முடிக்க வல்லவனாகின்றான்.

"அருளு மேலர சாக்குமன் காயுமேல்
வெருளச் சுட்டிடும் வேந்தெனு மாதெய்வம்
மருளி மற்றவை வாழ்த்தினும் வையினும்
அருளி யாக்க லழித்தலங் காபவோ ?" (சிந்தாமணி—218)

என்ற திருத்தக்கதேவரின் திருவாக்கிற்கு இலக்காக 'அரசன் அன்று சாதிக்கும் தெய்வம் நின்று சாதிக்கும்' என்பது பெறப்படுகின்றது.

அரசபதவி என்பது இத்துணைச் சிறப்புடையதேனும் மிகப் பொறுப்பு வாய்ந்ததாகும். இதனாலன்றோ அரசாட்சியானது அரசபாரம் என்றே வழங்கப்படுகின்றது. "Uneasy lies the head that wears the Crown" என்ற ஆங்கில அறவுரையினைத் தமிழ் மன்னர் நன்கு உணர்ந்தனர் என்பதற்கு இலக்கியச் சான்றுகள் பல உள்ளன. மழை பெய்யாதிருக்கும் போதும் உயிர்கள் துன்பம் அடையும்போதும் மன்னனுக்குக் கவலை உண்டாகும். எனவே அரச குடியிற் பிறந்து அரசாள்

வது துன்பமே ஒழிய அதில் சிறப்பில்லை என்ற கருத்தில் சேரன் செங்குட்டுவன் கூறுவதைக் காண்க.

" மழைவளங் கரப்பின் வான்பே ரச்சம்
பிழையுயி ரெய்திற் பெரும்பே ரச்சம்
குடிபுர வுண்டுங் கொடுங்கோ லஞ்சி
மன்பதை காக்கும் நன்குடிப் பிறத்தல்
துன்ப மல்லது தொழுதக வில்லென " (சிலப்பதிகாரம்)

கைகேயி இராமனைக் காட்டிற்குப் போகப் பணித்தபோது வண்டியில் பூட்டப்பட்ட ஓர் எருதினை அருட்குணமுடையான் ஒருவன் அவிழ்த்துவிட்டால் அந்த எருது எவ்வாறு மகிழ்ச்சி அடையுமோ அவ்வாறே இராமன் அரசபாரம் பெறுவதினின்றும் விலகியதற்கு மிகவும் மகிழ்ந்தான் என்பர் கம்பர். அரச பாரத்தின் பொறுப்பினை எடுத்துக் காட்ட வந்த சேக்கிழார்

" அருமந்த அரசாட்சி அரிதோ ? மற் றெளிதோதான் "

என்றார்.

தமிழ் நாட்டில் கோனாட்சியே (Monarchy) சிறப்பாக நடைபெற்று வந்தது. சேர சோழ பாண்டியர் என்ற வேந்தர் குடும்பங்கள் தமிழரிடையே மிகப் பழமையுடையனவாக விளங்கின. பழங்குடி என்பதற்குப் பொருள் கூற வந்த பரிமேலழகர், 'பழங்குடி என்பது தொன்றுதொட்டு வருகின்ற குடியின்கட் பிறந்தார். தொன்றுதொட்டு வருதலாவது சேர சோழ பாண்டியர் என்றாற் போலப் படைப்புக்காலந் தொடங்கி மேம்பட்டு வருதல்.' என்றார். தந்தையின் பின் மைந்தன் அரசாள்வது மரபாகும். வாட்போரில் வெற்றி பெற்ற அரசிளங் குமரனுக்கு அந்நாட்டில் உள்ளார் வேண்டிய சிறப்புகள் செய்து அவனைத் தம் அரசனாகத் தேர்ந்தெடுத்தார்கள் என்பது 'பிள்ளை யாட்டு' என்று தொல்காப்பியர் கூறும் புறத்துறையால் விளங்குகின்றது. எனவே அரசனைத் தேர்ந்தெடுக்கும் உரிமையைக் குடிமக்கள் அக்காலத்தில் பெற்றிருந்தனர் என்பது பெறப்படுகின்றது.

இனி அரசனது ஆட்சிமுறை எவ்வாறு விளங்கியது என்பதைக் காண்போம். அமைச்சு நாடு அரண் பொருள் படை நட்பு என இவைகள் அரசனுக்கு அங்கங்களாம். மன்னன் காட்சிக்கு எளியனும் கடுஞ்சொல் அற்றவனும் இருத்தல் வேண்டும். அக்காலத்தில் ஆட்சிபுரியும் அரசனுக்குத் துணையாக 'ஐம்பெருங்குழு' 'எண்பேராயம்' என்ற இரண்டு பேரவைகள் விளங்கின. அமைச்சர், புரோகிதர், சேனாபதியர், தூதுவர்,

சாரணர் என இவர்கள் கூடியது ஐம்பெருங் குழுவாம். கர ணத்தியலவர், கருமவிதிகள், கனகச் சுற்றம், கடைக்காப்பாளர், நகரமாந்தர், படைத்தலைவர், யானைவீரர், குதிரைவீரர் என்போர் அடங்கியது எண்பேராயமாகும். இவருள் கரணத்தியலவர் என்பார் அரசாட்சியின் வரவுசெலவாகிய கணக்குப் பார்ப்பவர். அரசனது ஆணையை நிறைவேற்றும் அதிகாரிகள் கருமவிதிகள் எனப்படுவர். கனகச்சுற்றம் என்பார் பொருட்காப்பாளர். கடைக்காப்பாளர் என்போர் அரண்மனைக் காவலர். நகரமாந்தர் என்போர் நகரத்திலுள்ள மூதறிஞர். எனவே நகரத்திலுள்ள ஒரு சில மூதறிஞரும் அரசன் அவையில் இடம் பெற்றனர் என்பது புலனாகின்றது. நீதி தவறாது அரசாட்சி செய்வதே மன்னனுக்கு வெற்றியாகும் என்பதைத் தமிழ்நாட்டு மன்னர் நன்கு உணர்ந்திருந்தனர். புலவர்கள் மன்னனுக்கு வெற்றி தருவது வேல் அல்ல செங்கோலே என்பதனைப் பல அரசர்க்கு அறிவுறுத்தினர்.

"அறநெறி முதற்றே அரசின் கொற்றம்" (புறம்—55)

என்றார் ஒரு புலவர். மன்னுயிரைத் தன் உயிர்போல் கருதி அரசாளும் வேந்தனைக் குடிகள் மிகவும் விரும்புவர். உதாரண மாக இராமபிரானுடைய முடிசூட்டு விழாவினைக் கேட்ட அயோத்தி மக்கள் மிகவும் மகிழச்சியடைந்து இராமன் அரசாள் வது குடிகளே அரசாள்வது போலாகும் என்ற கருத்தில்

"பாவமு மருந்துயரும் வேர்பறியு மென்பார்
பூவலய மின்றுதனி யன்றுபொது வென்பார்"

எனக் கம்பர் கூறியதைக் காண்க. 'மன்னன் எவ்வழி மன் னுயிர் அவ்வழி' என்பதற்கு ஏற்ப, அரசன் செங்கோலனாகின் அவன் நாட்டுமக்களும் நீதியினின்று வழுவார். குடிமக்க ளுக்கு நல்லொழுக்கத்தைப் புகட்டுபவன் வேந்தன் என்பது

"நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே" (புறம்—312)

என்ற புறப்பாட்டால் விளங்குகின்றது. மன்னனது முறை காவல் குறையின், நாட்டில் மாதவர் நோன்பும் பெண்களின் கற்பும் காண்பது அரிதாகும் என்பதை

"மாதவர் நோன்பும் மடவார் கற்பும்
காவலன் காவ லின்றெனி னின்றால்" (மணிமேகலை 22, 208—9)

என்று மணிமேகலை வற்புறுத்துகின்றது. இவ்வுண்மை யைத் தமிழ் மன்னர் உணர்ந்தனர் என்பதற்கு ஒரு சில சான்று கள் தருவேன். பசுவின்கன்று இறப்பதற்குக் காரணமாயி

ருந்த தன் மைந்தன் விதிவிடங்கனை மனுச்சோழன் என்பான் தேர்க்காலில் கிடத்தித் தேரினை அவன்மீது செலுத்தினன் என் பதைப் பெரியபுராணம் கூறும். கோவலன் கொலையுண்டதற் குத் தானே காரணம் என்பதை உணர்ந்த பாண்டியன் நெடுஞ் செழியன்

"பொன்செய் கொல்லன் றன்சொற் கேட்ட
யானோ வரசன் யானே கள்வன்
மன்பதை காக்குந் தென்புலங் காவ
லென்முதற் பிழைத்தது கெடுகவென் னாயுளென
மன்னவன் மயங்கிவீழ்ந் தனனே"

என இளங்கோவடிகள் கூறும் மாற்றம் தமிழ் நாட்டு மன்னர் செங்கோல் முறையினின்று தாம் தவறியது உணர்ந்த பின் உயிர்வாழார் என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றது.

இனி அரசனுக்குரிய தொழிகள் எவை என்பதை ஆராய் வோம். ஓதல், வேள்வி செய்தல், ஈதல், காத்தல், தண்டித்தல் என அரசருக்கு ஐவகைத் தொழில் உண்டு என்பர் தொல் காப்பியர். அரசன் நீதிநூல்களைக் கற்றவனும் யானையேற்றம், குதிரையேற்றம், படைக்கலம் பயிறல் முதலியவற்றில் பழக்க முள்ளவனும் இருத்தல் வேண்டும். அரசன் கல்வியின் பயனால் அறிவுடையவனாய் இருப்பின் அது தன்னுயிர்க்கே யன்றி மன்னுயிர்க்கும் பயன்படுவதால் அரசனுக்கும் கல்வி இன்றியமை யாததாகும். சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி, பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி என்ற அரசர்களின் பெயரிடைக் காணும் அடைமொழிகளால் பண் டைக்கால மன்னர் வேத வேள்விகள் இயற்றினர் என்பது பெறப்படுகின்றது. சேர சோழ பாண்டியராகிய முடிமன்னரும் பாரி, ஆய், அதியமான் முதலிய கடையெழு வள்ளல்களும் புலவர் பெருமக்களை ஆதரித்து வந்த வரலாற்றால் மன்னரின் கொடைச்சிறப்பு விளங்குகின்றது. எடுத்துக்காட்டாகப் பதிற் றுப்பத்தில் எட்டாம் பத்தினைப் பாடிய அரிசில்கிழார் என்ற புலவருக்கு அப் பாட்டுடைத் தலைவனாகிய பெருஞ்சேரல் இரும் பொறை என்ற அரசன் ஒன்பது நூறாயிரம் பொற்காசு பரிசில் கொடுத்ததன்றித் தனது அரச பதவியினையே புலவருக்கு அளித் தான். ஆனால் புலவர் அவ்வரச பதவியை அவனுக்கே மீட்டும் திருப்பிக்கொடுத்து அவனிடம் தான் அமைச்சராய் விளங்கினார். மன்னன் பிறருக்குப் பொருள் வழங்குவானேயன்றி, குடி மக்களிடத்திலிருந்து தான் பரிசு பெறமாட்டான் என்பது 'பிறரைத் தானிரப்பல் அறியலன் இரந்தோர்க்கு மறுப்பறிய

லன்' (புறம்—239) என்ற புறப்பட்டால் தெரியவருகின்றது.
இவ்வுலகத்தில் வாழும் மன்னன் தன் நாட்டில் வாழும் மக்களுக்கு, இடையூறு தன்னால், தன் பரிசனத்தால், பகைவரால், கள்வரால் ஏனை உயிர்களால் வரும் ஐந்து அச்சங்களையும் போக்கி ஆளுதல் வேண்டும் என்பர் சேக்கிழார். குற்றம் செய்யும் மக்களை அரசன் தண்டித்தல் வேண்டும். தீக் கொளுத்துபவர், நஞ்சிடுபவர், கொலை செய்வோர், திருடர், வழியில் கொள்ளையடிப்பவர், ஊரில் உள்ள பொருளைச் சூறையாடுபவர், பிறன் மனை விழைபவர் ஆகிய இவர்களை அரசன் கொன்று ஒழுக்கமுடைய பெரியோரைக் காப்பாற்றுதல் வேண்டும். இவ்வாறு அரசன் செய்தல் உழவன் ஒருவன் பயிர்க்குச் சேதம் விளைக்கும் களைகளைப் பிடுங்கிப் பயிரைக் காப்பதைப் போன்றதாகும் என்ற கருத்துடன் விளங்கும்

கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர்

என்ற திருக்குறள் ஈண்டு நோக்கத்தக்கது.

தமிழ் நாட்டில் அரசனுக்கு உரிய வருவாய் எவை என்பதை இனி ஆராய்வோம். மக்கள் தம் நிலத்தில் விளைந்த விளையுளில் ஆறில் ஒரு பகுதி மன்னனுக்குக் கொடுத்தனர். இல்லறத்தான் ஒருவன் தனக்குள்ள பொருளை, தென்புலத்தார், தேவர், விருந்தினர், சுற்றத்தார், தான், அரசன் என அறுவகையாகப் பிரித்துக் கொண்டான் என்பது 'தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங், கைம்புலத்தா றோம்பல் தலை' என்ற திருக்குறளின் விளக்கவுரையால் விளங்குகின்றது. தன் குடி மக்களுள் சிலர் வறுமையால் பீடிக்கப்பட்டு அரசனுக்கு வரி செலுத்த இயலாத நிலையில் இருந்தபோது அரசன் அவர்களிடத்து வரி வாங்கவில்லை என்பதற்கு இலக்கியச் சான்று உள்ளது.

வெள்ளைக்குடி நாகனார் என்பவர் தம் நிலங்களுக்குரிய வரிப்பணத்தைச் செலுத்த இயலாத தன் நிலையை, சோழன் கிள்ளி வளவனிடம் முறையிட அவ்வளவன் அந்நிலங்களை இறையிலியாகவே அப்புலவர்க்குக் கொடுத்துவிட்டான். மன்னர் கடல் வாணிபத்திற்குரிய ஏற்றுமதி இறக்குமதிப் பொருளுக்குச் சுங்கம் வாங்கினர் என்பது பட்டினப்பாலையில் வந்துள்ள கரிகால் வளவனின் சுங்கச்சாலையின் சிறப்பால் தெரிகின்றது. உள்நாட்டு வாணிபத்திலும் அரசனுக்குச் சுங்கம் கிடைத்தது என்பது 'சாத்தொடு வழங்கும், உல்குடைப் பெருவழி' என்ற பெரும்பாணாற்றுப் படையால் விளங்குகின்றது. சுங்கம்

என்பது அக்காலத்தில் உல்கு என்று வழங்கப்பட்டது. இவை களின்றிச் சிற்றரசர்களும் பிறரும் முடிமன்னருக்குத் திறை செலுத்தி வந்தனர். சிலர் தம் திறைகளைக் காசாகச் செலுத்தினர். சில குடிமக்கள் தம் நிலத்தில் விளையும் பண்டங்களை அரசனுக்குத் திறையாகச் செலுத்தினர் என்பதனைச் சிலப்பதிகாரத்தால் அறியலாம். இவ்வாறு குடிகளிடத்துப் பெற்ற பொருளினை மன்னன் நாட்டின் நலத்திற்கே செலவிட்டு வந்தான் கரிகால் சோழன் குடிகளின் பயிர்த்தொழிலுக்குப் பயன்படும் வண்ணம் காவேரி ஆற்றிற்கு அணைகட்டி நாட்டின் நீர் வளத்தைப் பெருக்கினான். தமிழ் மன்னர் பூஞ்சோலைகளையும், தெருக்களையும், சிறந்த முறையில் அமைத்தனர். அரசனது பிறந்த நாளினை 'பெருநாள்' 'பெருமங்கலம்' என வழங்கிக் குடிமக்கள் அந் நன்னாளினைச் சிறந்த முறையில் கொண்டாடினர்.

தமிழ் நாட்டில் பண்டைக் காலத்தில் விளங்கிய போர் அறப்போரன்றி மறப்போர் அல்ல. இத்துறையில் அரசர் சாம, பேத, தான, தண்டம் என்ற முறையினைக் கையாண்டனர். அரசன் போர் தொடங்குதற்கு முன்னர்க் குறிப்பிட்ட நன்னாளில் தனது வெற்றிவாளையும் கொற்றக் குடையினையும் யானை மேலேற்றிக் கோட்டைக்கு வெளியில் செலுத்துவதுண்டு. இதனை 'நாட் கோள்' என்பர் தொல்காப்பியர். பண்டை நாளில் அரசனுக்குத்தேர்ப்படை, யானைப்படை, குதிரைப்படை, காலாட்படை என நால்வகைச் சேனைகளுமிருந்தன. ஒரு சில அரசர்க்குக் கப்பற் படையும் உண்டு. வாள், வில், வேல், குந்தம், சக்கரம் முதலியன போர்க் கருவிகளாக விளங்கின. புலித்தோலாற் செய்த கவசத்தை வீரர்கள் அணிவதுண்டு. போருக்குப் புறப்படுவதற்கு முன் மன்னன் தன் படைகளுக்கு விருந்தளிப்பான். இதற்குப் 'பெருஞ் சோற்று நிலை' என்று பெயர். போர் நாட்டில் ஒரு குறிப்பிட்ட இடத்தே நிகழும். போர் துவங்குவதற்கு முன் ஓர் அரசன் தான் போர் துவங்கப் போவதாகவும் அவ்வூரிலுள்ள, பசு, பார்ப்பன மக்கள், பெண்டிர், பிணியுடையோர், மக்கட்பேறு அற்றோர் முதலியோர் அவரவர்க்குரிய பாதுகாப்பான இடத்திற்குப் போகலாம் என்றும் அறிவிப்பான். பகைவரின் பசுக்கூட்டத்தைக் கவர்தல் போரின் தொடக்கமாகும். இதனை 'வெட்சித் திணை' என்பர். போரில் தமது பல் வேறுபட்ட வீரச்செயல்களைப் பிறருக்கு எடுத்துகாட்ட வேண்டி மன்னனும் அவன்றன் வீரர்களும் வஞ்சி, உழிஞை, வாகை முதலிய பூக்களை அணிவர். போர் நடக்குங் காலத்தில் அஞ்சிப் புறங்காட்டிச் செல்லும் வீரர், நடுங்கும் உள்ளமுடை

யோர், தலைமயிர் குலைந்தோர், படையிழந்தோர் ஆகிய இவர் மீது வீரர் அம்பினைச் செலுத்தார். இதுவே பண்டைக்கால அறப்போருக்குச் சான்றாக விளங்குகின்றது. போரில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு மன்னன் பொன்னாலாகிய வாகைப்பூவினை அளிப்பதுண்டு. வீரத்துடன் சண்டைசெய்து போரில் இறந்தவர்க்கு வீரக்கல் என்ற நடுகல் நாட்டுவது பண்டைக்கால மரபாகும்.

அக்காலச் சமய நிலையை நோக்கும்போது மன்னன் குடிகளுக்குச் சமயத்துறையில் முழுஉரிமை அளித்ததாகத் தெரிகின்றது. அருகன் அறுமுகன் இந்திரன் காமன் சிவன் திருமால் பலதேவன் புத்தன் முதலிய கடவுளர்க்குத் தனிப்பட்ட கோயில்கள் தமிழ் நாட்டில் விளங்கின என்பதிலிருந்து மக்கள் அவரவர்க்கு உகந்த கடவுளரை வழிபட்டனர் என்பது பெறப்படுகின்றது. கி. பி. 7-ஆம் நூற்றாண்டிற்குப் பின்னரே நாட்டில் சைவ வைணவ சமண சமயத்தார்க்குள் பூசல் ஏற்பட்டது என்பது வரலாற்றால் அறியக்கிடக்கும் உண்மையாகும்.

இதுகாறும் கூறியவற்றால் பழந்தமிழர், மன்னரைக் கடவுளோடு ஒப்பவைத்து எண்ணினர் என்பதும், தமிழ் நாட்டில் முடியாட்சியாகிய கோனாட்சியே சிறந்த முறையில் நடைபெற்றது என்பதும், பண்டைக்காலப் போர் அறப்போராக விளங்கியது என்பதும், குடி மக்களுக்குச் சமயத்துறையில் உரிமை அளிக்கப்பட்டது என்பதும் ஒருவாறாகச் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளது. இதன் விரிவினைத் தமிழ் இலக்கியக் கடலுள் புகுந்து காண்மின்.

தமிழர் உரிமை தமிழ்மொழியில் உள்ளது

மக்களில் சிலரைத் தமிழ்மக்கள் என்று காட்டுவது தமிழ்மொழியே. ஆதலால், தமிழ்மொழியைத் தமிழ்மக்கள் தம் வாழ்க்கையில் எல்லாவகைகளிலும் விருப்பத்தோடு ஆண்டு நிலைப்பித்துக் கொள்ளுதல் வேண்டும். தமிழ்நாட்டு மக்கள், தம் குழந்தைகள் பெயரையும், வீட்டுப்பெயர் ஊர்ப்பெயர் பண்டங்கள் பெயர் முதலியவற்றையும் தமிழ்ப் பெயராக வைத்து வழங்குவது கட்டாயமாகும். அயல்மொழிப் பெயர்களாக வைத்தலாகாது; வைத்தால், அயல்மொழி எழுத்துக்களையுங் கையாளவேண்டி வரும்; அதனால், நாளடைவில் தமிழ்மொழி ஆட்சி குறைந்து தமிழர் உரிமைகளும் குறைகின்றன. இவ்வகையில் தமிழ் மக்கள் மிகவும் விழிப்பாக இருக்கவேண்டும்.

இளவழகனார்—நல்லாசிரியர்

[மகாமகோபாத்தியாய

பண்டிதமணி மு கதிரேசச் செட்டியார்]

புலவர் திரு. இளவழகனார் அவர்கள் சிவஞானபோத மெய்ப்பொருளைப்பற்றிச் சென்னை நகரிலுள்ள அன்பர் பலர் கேட்டு உளங்கொளும் வண்ணம் விரிவுரை நிகழ்த்தியது அறிந்து மகிழ்ச்சியடைகின்றேன்.

திரு. இளவழகனார் கூரிய அறிவும் தமிழ் இலக்கிய இலக்கணத் துறைகளில் சிறந்த பயிற்சியுமுடையார். உரைநடை எழுதுவதில் ஆற்றல் நனி படைத்தவர்; பொருளின்றி வெற்றுரையாக நீள எழுதும் ஆரவாரம் இவர்கள்பால் இன்று. கருதிய பொருளை நுனித்துணர்ந்து தெளிவுபடுத்தி எழுதும் திறம் இவர்கள்பால் நன்கமைந்துள்ளது.

சங்கத்துச் சான்றோர் செய்யுட்களை ஆராய்ந்து சுவை நலந் தோன்ற இவர்கள் எழுதிய 'சங்கநூல் இன்கவித்திரட்டு' 'சங்க நூற் கட்டுரைகள்' என்னும் நூல்கள் தமிழன்பர்களுக்கு நல் விருந்தாகத் திகழ்கின்றன.

அரிய பொருள்களைப்பற்றி வரையறுத்து இவர்கள் இயற்றும் சொற்பொழிவுகள் கேட்பவர் மனத்தில் நிலைநின்று பயன் செய்யும் இயல்புடையன.

சைவசித்தாந்த அறிவியல் நூல்களில் இவர்கள் பயிற்சி நேர்மை உடையதாகும்.

எத்துறையினும் இவர்கள் நுண்ணறிவு தெளிவு நிலைபெற்று விளங்குதல் அறிஞர்க்கு இன்பஞ் செய்வதொன்று.

கல்வியைப் போலவே, அடக்கமும் இனிய பல நற்குணங்களும் அறிவுடையார் விரும்பத்தக்க மதிப்பை மிகுவித்து, இவர்களுக்குப் பெருமை செய்வனவாம்.



புத்தனேரி. ரா. சுப்பிரமணியன்

கஉ. எதிர்பாராதது

இசைக்கூட்டத்தார் சோலைக்குச் சற்றுத் தொலைவில் கண்ணுக்கெட்டிய தூரத்தில் வந்து நின்றனர். அக்கூட்டத்திலிருந்து பிரிந்து ஒருவன் சோலையை நோக்கிப் புறப்பட்டான். நிலவு வெளிச்சத்தில் அவனுடைய கறுத்த மேனியும், பெருத்த வடலும் முறுக்கிய மீசையும் முறுக்கான தோற்றமளித்தன. முற்றுந் திருந்திய முரடன் என்பதை அவன் முகம் கண்ணாடி போல் காட்டிற்று. அவன் சோலையை நோக்கி விரைந்து சென்ற வேகத்திலிருந்து, ஏதோ ஒரு முக்கியமான புதுச்செய்தியை வெளிப்படுத்தப் போகிறான் என்பது தெரிந்தது.

திடமான சிந்தையுடன் அம் மனிதன் சோலையின் வாயிலை அணுகியதும், " யார் ?...சல்லியனா ?..." என்று உணர்ச்சியும் உவகையும் பொங்கும் குரலில் அவனிடம் சோலையப்பன் உறவாடிப் பேசிய தன்மையானது அவர்களிருவரும் முன்பே பழக்கமானவர்கள் என்பதை வெளிப்படுத்திற்று. ஆம்! உண்மையில் பழக்கமானவர்கள்தாம்! சல்லியனும் சோலையப்பன் தலைமையிலுள்ள கொள்ளைக் கூட்டத்தாரில் ஒருவனே! வாசகர்கள் ஊகிப்பதுபோல் இச் சல்லியனே கழனியூர்க் கிழவியின் மகன்! இவன் நல்வழியில் திரும்பிய உண்மையை உணராத சோலையப்பன், " நம் பழைய

(முன் பக்கத் தொடர்ச்சி)

எல்லா வகையானும் நல்லாசிரியர் இலக்கணம் வாய்ந்த இவர்கள், சைவ நுண்பொருள்களை மக்களுக்குத் தெளிவுறுத்தற்கு உரிய தகுதி யுடையா ரென்பது என் கருத்து.

இவர்கள் நூலறிவும் அநுபவவுணர்வும், மேன்மேலும் தமிழ் மக்களுக்குப் பயன் விளைவிக்கவும், இவர்கள் நல்லுடல் நலத்துடன் நீடுவாழவும் இறைவன் திருவருளை வேண்டுகின்றேன்.

சல்லியனே" என்ற எண்ணத்தினால் பெருமகிழ்ச்சி யுற்றான். களிப்பு மேலிட்டால் பின் கண்ட வார்த்தைகளைக் கக்கினான் :—" சல்லியா!...நமது யோகமே யோகம்!......நம் முயற்சிகள் நாளுக்குநாள் வெற்றியளித்து வருகின்றன!......இன்று ஓர் அழகி நம் கையில் சிக்கி யிருக்கிறாள்!......நம் பாடு வேட்டைதான்!......"

இவ்வாறு பெருமிதத்துடன் பேசிய சோலையப்பனது பேச்சின் சொற்கள் ஒவ்வொன்றும் கொடிய ஈட்டிபோன்று சல்லியனின் மனதைத் துளைத்தன! பொறுக்க முடியாமல், "ஐயோ! கடவுளே!......" என்று தன் இரு கைகளாலும் செவிகளைப் பொத்திக்கொண்டான்!

தன் கொள்ளை முயற்சிகளின் வெற்றிபற்றிப் பேசியதும் சல்லியனது முகத்தில் காணப்பட்ட வெறுப்பையும், வாயிலிருந்து வெளியான சொற்களையும், அவன் செவிகளைப் பொத்திக்கொண்டதையும் கண்ட சோலையப்பன் திடுக்கிட்டான்! "இவன் நம் சல்லியன்தானா?......" என்றுகூட ஐயுற்றான்! நன்றாகக் கண்களைத் துடைத்துக்கொண்டு பார்த்தான்! "சந்தேகமில்லை!......இவன் நம் சல்லியனே!" என்று துணிவுற்றவனாய் அவனை நோக்கிச் "சல்லியா! ஏன் இப்படிக் கெட்டுப் போய்விட்டாய்?......" என்று கேட்டான்.

சல்லியன் வியப்புடன் சிரித்தான். சோலையப்பனை நோக்கி, "அருமை நண்பா!......கெட்டுப்போய்விட்டது யார்?......நீயா?......நானா?...... நன்றாக எண்ணிப்பார்! நாட்டில் பகற்கொள்ளையடித்துப் பாவையரைக் கற்பழித்துப் பாதகச்செயல் புரிந்து படுகுழியில் வீழ்ந்தனர் நம் கொள்ளைக் கூட்டத்தார்!......அவர்களை அக் குழியினின்றும் எழுப்பி உண்மை மனிதர்களாக்குமாறே யான் இங்கு வந்திருக்கிறேன்!......நீதான் இப்பணியில் எனக்கு உதவி செய்யவேண்டும்!......" என்று ஆணித்தரமான சொற்களில் தெள்ளத்தெளியப் பேசினான்!

"ஹா!......ஹா!!......ஹா!!!......சல்லியா!......ஏது உனக்கு மூளைக் கோளாறு ஏற்பட்டுவிட்டதா?......பைத்தியம்போல் பிதற்றுகிறாயே!......இதெல்லாம் என்ன பேச்சு!......"

"நண்பா! யாருக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறது!......கொள்ளைப் பைத்தியம் பிடித்துக் கூத்தாடும் உனக்கு உலகமே பைத்தியமாகத்தான் தோன்றும்!......"

"ஆ!......என்ன சொன்னாய்! என்னையா பைத்தியம் என்கிறாய்!......" என்று ஆவேசங்கொண்டு சல்லியனது கன்னத்தில் ஓங்கி ஓர் அறை கொடுத்தான் சோலையப்பன்!

"அப்பா!......இன்னும் எத்தனை அடி வேண்டுமானாலும் கொடு! பொறுத்துக்கொள்கிறேன்!......ஆனால் உங்களைத் திருத்தி நல்வழிப் படுத்துவதே என் கொள்கை!.......அதனால் ஏற்படும் துன்பங்களைத் தாங்கிக்கொள்ளத் தயார்!......"

"திருத்தம்!.......நல்வழி!!.........இவனை இனி மிஞ்ச விடக் கூடாது!......இவன் காலை முறித்துக் காட்டில் போடுங்கள்!......" எனக் குமுறினான் சோலையப்பன்! சல்லியனை ஒழித்துவிட்டால் எந்தக் கூட்டத்தாரையும் அடக்கிவிடலாம் என்று அவன் மனக்கோட்டை கட்டினான்!

சற்றுநேரத்தில், அவன் அருகில் நின்ற முரடர்கள் சல்லியனைச் சூழ்ந்து பிடித்தனர். அவர்களுடைய பிடியிலிருந்து விடுபெற்றுக்கொள்ள எண்ணிய சல்லியன் மூச்சை அடக்கிக்கொண்டு, கைகளால் மாறிமாறி முரடர்களைக் குத்தியவண்ணம் 'கிறுகிறு' வென்று சுற்றினான்! அப்படியும் அவனால் மீள முடியவில்லை! பின்னர்த் தன் கூட்டத்தார் காதில் விழும்படி "ஐயோ!" என்று வாய்விட்டு உரக்கக் கதறினான்!

உடனே கடல்மடை திறந்தாற்போன்ற பேரிரைச்சலுடன் இசைக் கூட்டத்தார் ஓடோடியும் வந்தனர்! அவர்களைத் தொடர்ந்து ஓர் அழகிய குதிரையும் பாய்ந்து சென்றது. அதன்மீது அமர்ந்திருந்தார் அருந்தமிழ்ப் புலவரான முறுவலார். அவர் பார்வையில் அறிவொளி வீசியது.

திரளான மக்கள் தம்மை எதிர்த்து வருவதை அறிந்த முரடர்கள் திகைப்புற்றனர். இவ்வளவு பெரிய கூட்டத்தை அவர்கள் எதிர்பார்க்கவே இல்லை! எனவே தங்கள் மனஉறுதியை இழந்து மதிகலங்கி ஓடத் தலைப் பட்டனர்! சல்லியனை விட்டுவிட்டு, நில்லாமல், சோலைக்குள் பாய்ந்து மறைந்துகொள்ளப் புகுந்தனர்! சோலையப்பனே 'சரே'லெனச் சோலைக் குள் புகுந்து வேடனருகிலிருந்த முரடர்கள் கையிலுள்ள தீப்பந்தங்களைப் பிடுங்கிக்கொண்டு வந்து சல்லியனுடைய ஆட்கள்மீது வீசினான்! அவற் றைப்பொருட்படுத்தாமல் புதிய கூட்டத்தார் வெண்கலக் கடையில் மதயானை புகுந்தாற்போல் 'ஓ' வென்று குரல் கிளப்பிக்கொண்டு சோலை யுட் புகுந்தனர்! வலிமையற்ற முரடர்கள் சிலர் அடிபணிந்து எதிரி களுடன் சேர்ந்துகொண்டனர்!

நிலைமை மிகவும் நெருக்கடியாய்விடவே, தன் சூழ்ச்சிகளால் பயனின் றெனக் கண்ட சோலையப்பன் கையிலிருந்த தீப்பந்தம் ஒன்றினால் தன் உடையிலேயே நெருப்பை வைத்துக்கொண்டான்! கொழுந்துவிட்டெரிந் தது அவனுடைய ஆடை! இசைக் கூட்டத்தினர் இதைக்கண்டதும்

இரக்கமுற்று விரைந்து சென்று அவனைத் தீயிலிருந்து விடுவிக்கப் புகுந்தனர்! குதிரையினின்று குதித்து, மனக்கொதிப்புடன் முறுவலார் சோலையப்பன் தீவாய்ப்பட்டுக் கிடந்த இடத்திற்குச் சென்றார்! எரிந்து கொண்டிருந்த ஆடைமீது மணலைக் கொட்டி அவனை மாறிமாறிப் புரட்டினான் சல்லியன்! ஒருவாறு தீயணைக்கப்பட்டது; சோலையப்பனின் உடம்பு வெந்து புண்ணாகிவிட்டது! பெருமூச்சுவிட்டுக்கொண்டு அவன் கண்ணயர்ந்து படுத்திருந்தான்! அவனுக்கு உடம்பு 'திகு, திகு' வென்று எரிந்துகொண்டிருப்பதுபோலிருந்தது! அவன்மீது குளிர்ந்த காற்றுப் படும்படி கூட்டத்தை விலக்கினார் புலவர்; மேகங்களினுள்ளிருந்து எட்டிப் பார்த்த சந்திரன் புன்னகையுடன் தன் குளிர்ச்சி பொருந்திய வெண்கதிர்களைச் சோலையப்பனின் முகத்திற்கு நேரே பொழிந்து "முரடனே! நீ பிறர் மனம் கொதிக்கச் செய்தாய்! இன்று அக்கினி பகவான் உன்னைக் கொதிக்கச் செய்துவிட்டான்! இனிமேலாவது நல்வழிப்படுவாயா?" என்று எள்ளலாகக் கேட்பதுபோல் வானில் விளங்கினான்.

சிறிதுநேரம் சென்றதும் மெதுவாகக் கண் இமைகளை விலக்கிக் கொண்டு அரைக்கண் பார்வையில் சுற்றிலும் நோக்கினான் சோலையப்பன்! அவனுடைய கண்கள் அறிஞர் முறுவலாரின் அறிவுக் கண்களுடன் பேசுவதுபோல் இருந்தது! என்றும் கண்டிராத ஒரு புதிய ஒளி அவன் முகத்தில் ஏற்பட்டது. அவன் உதடுகள் புன்னகை பூத்தன. "பெரியோய்! என்னை மன்னிக்கவேண்டும்!......" என்று கேட்பதுபோ விருந்தது அவனுடைய இரக்கமான தோற்றம்!

"அன்பரே! வலி மிகுதியோ?" என்று அன்பு ததும்பக் கேட்டார் புலவர்.

அவனால் பேசமுடியவில்லை. கைச் சைகை காண்பித்துத் தன்னை அந்த இடத்திற்குக் கொண்டுபோகும்படி சொன்னான். அவனுடைய சைகையின் பொருளைச் சரியாக அறிந்துகொள்ள முடியவில்லை! அவனைச் சேர்ந்த முரடனொருவன் அவனது விருப்பத்தை ஊகித்தறிந்துகொண்டு, "ஐயா! அங்கு இரண்டுபேரை மரத்தோடு கட்டி வைத்திருக்கிறோம்!......அந்த இடத்திற்குத் தன்னைக் கொண்டுபோகச் சொல்வது போல் தெரிகிறது!......" என்று புலவரிடம் கூறினான்.

பிறகு, சோலையப்பனை மெதுவாகத் தூக்கிக்கொண்டு மண்டபத்தின் அருகே சென்றனர். மரத்தில் கட்டப்பட்டிருந்த மனிதனைக் கண்டதும் "ஆ!" வென்று மூர்ச்சையாகி விழுந்துவிட்டார் புலவர்! எதிர்பாராவிதமாகப் புலவர் பெருமானையும் அவருடைய கூட்டத்தாரையும் கண்ட வேடன் பூரிப்படைந்தான். அவன் கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் அருவி

போன்று விழுந்தது! இக்காட்சியெல்லாம் வல்லிக்கு ஒரே வியப்பாக இருந்தது!

பேசமுடியாமலிருந்த சோலையப்பன் பேராசையோடு "ஐயா!...... முதலில் அவர்களைக் கட்டவிழ்த்து விடுங்கள்......என்று திக்கிக்கொண்டே பேசினன்! அதற்கப்புறம் அவனுக்கு நாவெழவில்லை! புதுமாதிரியான ஒரு பெருமூச்சு வெளிப்பட்டது! தொண்டையிலிருந்து ஏக்கம் நிரம்பிய ஒரு குரல் எழுந்தது! இரண்டு மூன்று தடவை தரையில் புரண்டான்! முழுதும் வெந்து புண்ணான அவன் உடம்பு வாழைத்தண்டுபோல் குளிர்ந்து விட்டது! கண்களிற் கருவிழிகள் ஏறிச்செருகிவிட்டன! ஒருவாறு மூச்சும் அடங்கியது! கொள்ளைக் கூட்டத்தின் ஆதிக்கத் தலைவன் கூற்றுவன் ஆதிக்கத்தில் அடங்கிவிட்டான்!

எங்கும் அமைதி நிலவியது; வேடனும் வல்லியும் கட்டவிழ்த்து விடப் பட்டனர்; ஒவ்வொருவரையும் துக்கமென்னும் திரை மூடியிருந்தது! சோலையப்பனின் பிரிவுக்காக மாலைமாலையாகக் கண்ணீர் உகுத்தான் சல்லியன்! தன் நண்பன் எவ்வளவுதான் கொடியோனாக இருந்தபோதி லும், உயிர் நீத்தபின் அவனுக்காக உள்ளம் நைந்து உருகாத மானிட னுளனோ?

துக்கமாகிய இருளை நீக்கித் தூய்மையான அறிவொளி வீசுவதுபோல் மூர்ச்சை தெளிந்து எழுந்து நின்றார் புலவர்; "அன்பர்களே!" என்று தம் இனிய குரலால் அன்பொழுகப் பேசத் துவக்கினர்; எல்லோரும் அவருடைய முகத்தையே பார்த்திருந்தனர். முன்னர், பயந்து ஒளிந்து கொண்ட முரடர்கள்கூடப் புலவரின் இன்னோசை கேட்டு வயப்பட்டு எல்லோருடனும் கூடிவிட்டனர். வேடனும் வல்லியும் இமை கொட் டாமல் ஆவலோடு அவருடைய சொன்மாரியில் முழுக விரும்பினர். இச் சமயம் புலவர் பரிவோடு வேடனிருக்குமிடம் அணுகி உணர்ச்சி ததும்பிய நட்புள்ளத்தோடு அவனை மார்பொடு இறுகத் தழுவிக்கொண்டு, "அன்பர் களே! இவன் யாரென்பது உங்களுக்குத் தெரியாதென்றெண்ணு கிறேன்!......இவன் என் ஆருயிர் நண்பன்! பாண்டிநாட்டு இளவரசன்!! நம்பி நெடுஞ்செழியன்!!! இவ்விளவரசனைத் தேடியே யான் மிகவும் வாடினேன்!......இன்று உங்கள் முன்னிலையிவ் அழகும் ஆண்மையும் அறிவும் விளங்கும் உயரிய தோற்றத்தோடு நிற்கும் நம்பியே இனி உங்கள் தலைவன்! நாமெல்லோரும் அவனுடைய தலைமையில் பாண்டியன் புகழ் பரப்புவோமாக! கொள்ளைக்கூட்டத்தாரை நல்வழிப்படுத்தும் முறையில் நமக்குத் துணையாய் வந்த சல்லியனைத் திருத்தி நன்னெறிப்படுத்திய பெருமை நம் இளவரசன் நம்பி நெடுஞ்செழியனுக்கே உண்டு!......" என்று பூரிப்

போடு புகழ்ந்தார்! அவர் சொன்னவற்றையெல்லாம் ஆமோதிப்பவன் போல் தலையை ஆட்டிக்கொண்டு புன்னகையோடு அமர்ந்திருந்தான் சல்லியன். வேடன்போன்றிருந்த தன் துணைவன், பாண்டிநாட் டிளவரசன் என்பதைக் கேட்டபோது வல்லியின் உடம்பு உவகையினால் புளகாங்கித மடைந்தது!

சற்றுமுன்பு தனக்கு நேர்ந்திருந்த பேரிடரையும், நொடிக்குள் இடர் மாறி இன்பம் விளைந்ததையும் எண்ணி உவகையில் திளைத்தான் நம்பி. தன் துயர் துடைத்துத் தளராத ஊக்கமும் உவகையும் அளித்த தமிழ்த் தாயை மனமார வாழ்த்தினான்! தக்க சமயத்தில் தன்னைக் காப்பாற்றிய புலவர் பெருமானான நண்பர் முறுவலார்க்கும், அன்பனான சல்லியனுக்கும் உளமார்ந்த நன்றியை அறிவித்தான். "புலவர்பெரும! பெருமக்களே! நம் நாட்டில் கொள்ளைக்கூட்டத்தார் என்ற பெயரே இல்லாமல் வேரறுத் துவிட வேண்டுமென்பது என் ஆசை; அவர்களை நல்வழியில் திருப்புவதே நம் முதல் வேலை; அவ்வேலையைச் செவ்வையாகச் செய்யும் ஆற்றல் நம் புலவர் பெருமானுக்கே உண்டு! அவருடைய நல்ஆதரவுடன் நாம் "பாண்டித் தொண்டர் படை" என்ற திருப்பெயருடன் சீர்திருத்தப்பணி செய்வோமாக! ....." என ஆர்வத்தோடு தன் கருத்தை வெளியிட்டான் நம்பி! அவனுடைய நல்லாசையைக் கேட்டு வல்லியும் புலவரும் மகிழ்ந் திருந்தனர்.

பின், கானகத்தில் வல்லியைக் கண்டு கூட்டிவந்த வரலாற்றையெல் லாம் ஒன்றுவிடாமல் புலவரிடம் நம்பி வெளியிட்டான். புலவரும், காணமற்போன தம் குதிரை திரும்பிவந்த விதத்தையும், தம்முடைய தொண்டர் கூட்டத்தில் கழனியூர் மக்கள் களிப்போடு சேர்ந்துகொண்ட சிறப்பையும் விரிவாக நம்பிக்கு எடுத்துச்சொன்னார். இவ்வாறு ஒருவர்க் கொருவர் உரையாடிக்கொண் டிருக்கையில் சல்லியன் புலவரிடம் வந்து! "ஐயா! நாம் வந்த காரியத்தை மறந்துவிட்டோமே! மூடர்களை அடக்கியாய்விட்டது. இனி இம் மண்டபத்திற்கும் சோலைக்கும் உரியவரான முத்தமிழ்ப் புலவர் மூன்றும் அகத்தியரைத் தேடி அழைத்துவந்து அவரு டைய இடத்தில் அமர்த்தவேண்டுமே!" என்று பரிவோடு சொன்னான்.

"ஆம்! அந்தப் பொறுப்பெல்லாம் இனி நம்பியைச் சேர்ந்தது!... என்றார் புலவர் குறுநகையுடன்!

"ஏது? பெரிய பொறுப்பாளி ஆய்விட்டாற்போலிருக்கிறதே!...'! என்று வேடிக்கையாக நம்பியை நோக்கிக் கூறிக்கொண்டே குறும்பாகச் சிரித்தாள் வல்லி!

(தொடரும்)

இளவழகனார்

[தணிகைமணி
ராவ்பகதூர் வ. சு. செங்கல்வராய பிள்ளையவர்கள் M. A.]

இள அழகனார் என்னுந் தூய தமிழ்ப் பெயரைப் பூண்ட இவர் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் புலவர். 1904-ம் ஆண்டில், மதுராந்தகத்துக்கு அடுத்த மாம்பாக்கம் என்னும் ஊரிற் பிறந்தவர். எனவே, இவர் தொண்டை மண்டலத்துச் சான்றோராவர். சீர்கருணீக குலத்தினர். சைவர். இவர் ஆசிரியர் மறைமலையடிகள் எனப்படும் சுவாமி வேதாசலம் அவர் களிடத்துத் தமிழ் பயின்றவர்.

கற்றல், கேட்டல், சிந்தித்தலால் வந்த அறிவுடன் தமக் கென இறைவன் தந்த நுண்ணிய, ஆழ்ந்த, பரந்த, தெள்ளிய ஆராய்ச்சியால் தமது கல்விச் செல்வத்தை இவர் திறம்படப் பெரு கச்செய்து சீர்பெற்று விளங்குகின்றனர். சொல்வன்மை யுண் டேல் "பொன்மலர் நாற்ற முடைத்து" எனப் பெரியோர் கூறிய வாறு உய்த்துணர்வுடன் சொல்வன்மையும் இவர்க்கு வாய்ந்துள் ளது. இவருடைய சொற்பொழிவுகள், தடையின்றித் தாழுதல் வீழுதல் இன்றி, இழுமென இழிதரும் அருவிபோலச் செல்லுந் திறத்ததாய், செவிக்கு இன்பந் தருந் தகைமையதாய், செந் தமிழ்ச் சொற்களின் செறிவுள்ளதாய், செம்பொருள் நிரம்பிய தாய் விளங்குகின்றது.

இவர், சங்கநூல் ஆதிய நூல்களை ஆழ்ந்து கற்றவர். சைவ சித்தாந்த நூல்களின் நுண்மைகளை ஐயந் திரிபற உணர்ந்தவர். கற்றோர்க்கும் மற்றோர்க்கும் புலப்படும்படி பொருள்களை எடுத்து விளக்கும் ஆற்றல் அமைந்தவர். எப்பொருளினும் மெய்ப் பொருள் காண்பவர். சொல்லாராய்ச்சி, பொருளாராய்ச்சியில் வல்லுநர். செந்தமிழில் மிக்க ஆர்வங் கொண்டவர். தமிழின் ஆக் கத்தைப் பெருக்கும் நோக்கத்தைக் கொண்டவர். சிவத்யான சீலர். தேவார திருவாசகமாதிய பத்தி நூல்களைப் பருகும் ஆர்வத்தினர்.

கல்வியும் அறிவும் இவ்வாறிருக்க, இவர் குணமோ அவை தமக்கேற்பச் சீரிய நிலையது. 'குணமென்னுங் குன்றேறி' நிற்

பவர். இவர் அடக்கம், ஒழுக்கம், தூய்மை, வாய்மை, பத்தி ஆகிய நற்குணங்கள் நிறைந்த செல்வர்.

எக் காரணத்தாலோ இவருடைய திறமையும் புலமையும் இதுவரையும் "குடத்திலிட்ட விளக்குப்" போல வெளியிற் புலப்படாதிருந்தன. இவர், அண்மையில் நடத்திய **சிவஞான போத** விரிவுரையாலும் அவ் விரிவுரையின் **நிறைவு விழாவினாலும்** இவர் திறமை, குன்றிலிட்ட தீபம் போலவும், கலங்கரை விளக்கம் போலவும், கார்த்திகை அண்ணாமலையார் அகண்ட தீபம் போலவும் எங்கும் சோதி வீசுவதாய்ப் போற்றத்தக்கதாய்ச் சுடர் வீசி நிற்கின்றது! அகத்திருளை நீக்கும் இவ்விளக்கு, இனி இறைவன் திருவருட்டுணையால் என்றும் எங்கும் சுடர் வீசும்; பொலியும்; ஓங்கும்! செந்தமிழ் வாழ்க! இளவழகனார் வாழ்க!

மதிப்புரை

கருத்தும் எழுத்தும்: ஆசிரியர்: மா. பாலசுப்பிரமணிய முதலியார் எம். எ. விலை ரூ. 1-8-0.

இது சிறந்த கட்டுரை நூல். தமிழ் மொழியில், கற்பவர் அறிவைக் கூர்மையாக்கி நுண்ணிய கருத்துலகுகளில் இனிதாக உலவவைத்து இன்புறுத்தும் கட்டுரை நூல்கள் பலப்பல வெளிவர வேண்டும். தமிழ் மொழிக்கு அந்த ஆக்கத்தை இந் நூல் அளித்திருக்கின்றது. 'மாணவர்களுடைய அறிவுப் பரப்பில் பற்பல **கருத்துக்கள்** அடங்கவும், அவர்களுடைய **எழுத்துத் திறன்** சிறக்கவும் இந் நூல் ஆக்கப்பட்டிருத்தலின், இது 'கருத்தும் எழுத்தும்' என்னும் பெயர் பெறும்' என்று இதன் ஆசிரியர் தம் முகவுரையில் எழுதியிருப்பது இதற்கு முற்றும் பொருந்தும். மேனாட்டுப் புலவர்கள் எழுதிய சில கட்டுரைகளின் மொழிபெயர்ப்புச் சுருக்கங்களும், சில கதைப்பொருட் கட்டுரைகள் முதலியனவும் கள - சிறு சிறு கட்டுரைகளாக எழுதப்பெற் றிருக்கின்றன. தனிச் செந்தமிழில், நுண்ணிய கருத்துக்களூடு சென்று இயைவதற்குரிய தனி நடையில் இவ் வரிய நூல் இயன்றிருக்கின்றது. தமிழ்க்கு இதனை ஓர் எதிர்பாராத புதையல் என்றே கூறலாம். தமிழ்நாடு கட்டாயமாகப் பெறவேண்டிய நூல் வகைகளுள் இஃதொன்று. மாணவர்க்கு இந் நூல் பாடமாக அமையின், மிக்க நலம் பயக்கும். தமிழர் அனைவரும் இதனைக் கற்று இன்புறுதல் இன்றியமையாதது.